# தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்

(கருத்தரங்கக் கட்டுரைகள்)

பதிப்பாசிரியர்

முனைவர் செ. ஜீன் லாறன்ஸ்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

# தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்

(கருத்தரங்கக் கட்டுரைகள்)

பதிப்பாசிரியர்
முனைவர் செ. ஜீன் லாறன்ஸ்

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tolkāppiya Ilakkaṇa Moḻiyial Kōtpāṭukaḷ |
| Editor | : | Dr. S. Jean Lawrence<br>Professor, Dept. of Tamil Language and Linguistics<br>International Institute of Tamil Studies |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai - 600 113 |
| Publication No. | : | 403 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2001 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | x + 310 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.70/- (Rupees Seventy Only) |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004 |
| Subject | : | Grammar |

# பதிப்புரை

தொல்காப்பியம் தமிழில் மட்டுமல்ல, திராவிட மொழிகளிலும் கிடைத்துள்ள முதல் இலக்கணநூல்; முதல் அறிவியல் நூல். இதன் முதல் பதிப்பு 19ஆம் நூற்றாண்டில் வந்திருப்பினும் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்துதான் இது தமிழ்க் கல்வியில் உயர்ந்த இடத்தைப் பெறத் தொடங்கியது. அறுபதுகளில் மொழியியல் கல்வி அறிமுகமானபோது தொல்காப்பிய ஆய்வு உலகளாவிய மொழியியல் கோட்பாட்டோடு ஒப்புநோக்கப்பட்டு இதன் பெருமை உலக அளவில் அறியும் நிலை உண்டானது.

தமிழகப் பல்கலைக்கழகங்கள் தொல்காப்பிய மொழியியல் இலக்கணக் கோட்பாட்டை ஆராய்ந்து அறிவதற்குப் பல கருத்தரங்குகளை நடத்தியுள்ளன.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் முதன் முதலில் தொல்காப்பிய எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களுக்கும் உரைவளம் வெளியிட்டுத் தொல்காப்பியக் கல்வி பன்முகநோக்கில் வளர உதவியது. மேலும் தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகளை ஆராய்வதற்கு 1997இல் ஒரு கருத்தரங்கை நடத்தி அதை நூலாகவும் வெளியிட்டது. 1998இல் தொல்காப்பிய செய்யுளியலை மட்டும் ஆராயத் தொல்காப்பியப் பாவியல் கோட்பாடு என்ற ஒரு கருத்தரங்கை நடத்தி அதையும் நூலாக வெளிக்கொணர்ந்துள்ளது.

இந்நிலையில் தொல்காப்பிய எழுத்தும் சொல்லும் பற்றிய ஒரு கருத்தரங்கு நடத்தினால் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தொல்காப்பியம் முழுமைக்கும் கருத்தரங்கு நடத்திய பெருமைக்கு உரியது ஆகும் என்று பேரா. ச.அகத்தியலிங்கம் (தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்) அவர்களும் பேரா. செ.வை. சண்முகம் (அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய முன்னாள் இயக்குநர்) அவர்களும் கருத்துத் தெரிவித்ததோடு தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் என்ற பொருளில் கருத்தரங்கு நடத்துவதற்கான சில நெறிமுறைகளையும் வகுத்துத் தந்தார்கள். அதற்கு இணங்க 2000 ஆம் ஆண்டு மே திங்களில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அக்கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரைகள் தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் என்ற நூலாக உருப்பெற்று இப்பொழுது வெளிவருகிறது.

இதில் தொல்காப்பியரின் இலக்கண மொழியியல் கோட்பாடுகளோடு உரையாசிரியர்களின் இலக்கணக் கோட்பாடுகளை

விளக்கும் கட்டுரைகளும் வடமொழி இலக்கணத்தோடு ஒப்புநோக்கில் ஆராயப்பெற்ற ஒரு கட்டுரையும் இடம் பெற்றுள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் கடை ஆண்டான 2000த்தில் இந்தக் கருத்தரங்கு நடந்தது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பிய ஆய்வுக்கான பணிகளின் முத்தாய்ப்பாய் அமைகிறது. தமிழ் மரபிலக்கணத்தின் முதன்மை பற்றி, தமிழரின் பாவியல் அறிவுபற்றி, தமிழ் மொழிபற்றி, அக்கால சமூகச் சூழல் பற்றி இளைய தலைமுறையினர் தெரிந்துகொள்ளவும், புரிந்து கொண்டு மேன்மேலும் அத்துறையில் தங்கள் புலமையை வளர்த்து கொள்ளவும், விரும்பும் துறைகளில் ஆய்வு மேற்கொள்ளவும் நிறுவனத்தின் தொல்காப்பியம் தொடர்பான இந்த முழுமையான வெளியீடுகள் உதவும் என்ற நிலையிலும் இப்பணிகள் பெருமைக்குரியன.

இந்தக் கருத்தரங்கு நடத்த அடித்தளமாக அமைந்து அறிவுரைகளையும் வழங்கிய பேராசிரியர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கும், பேராசிரியர் முனைவர் செவை சண்முகம் அவர்களுக்கும் என் நன்றி. என்னிடம் இந்தக் கருத்தரங்கு நடத்துவதற்குரிய பொறுப்பை ஒப்படைத்து கருத்தரங்கு நடத்துவதற்கும், அக்கருத்தரங்கக் கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து நூலாக்கும் பணியையும் அளித்து இப்பணிகளுக்கு எல்லாம் உறுதுணையாகவும் நின்றவர் எங்கள் நிறுவன இயக்குநர் அவர்கள். அவருக்கும் என் நன்றி. இக்கருத்தரங்கு நடத்தவேண்டும் என்ற விழைவோடு, தொல்காப்பியத்தில் தோய்ந்த பேராசிரியர்களை அணுகியபோது அவர்களும் மனமுவந்து கருத்தரங்கில் கலந்து, கட்டுரைகளையும் செப்பமுறத் தந்தனர். அவர்களும் என் நன்றிக்குரியவர்கள்.

தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் என்ற கருத்தரங்கு நடத்தும்போதும் இக்கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக்கம் செய்யும்போதும் பல்லாற்றானும் உதவிய இணைப்பேராசிரியர் முனைவர் கு.பகவதி அவர்களுக்கு நன்றி.

இந்நிறுவன நிருவாக அலுவலர்களுக்கும், கருத்தரங்கக் கட்டுரைகளைச் செப்பமுற ஒளிக்கோர்வை செய்த திரு சு. கண்ணன் அவர்களுக்கும் நன்றி.

இந்நூலினைக் கவினுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கு நன்றி.

செ. ஜீன் லாறன்ஸ்

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

# அணிந்துரை

**ஓங்கல் இடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்திருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்**

தன்னேர் இலாத தமிழ் என்று சிறப்பிக்கப்படும் தமிழ் மொழியில் கிடைத்துள்ள முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். கிறித்துப் பிறப்புக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிறந்த தொல்காப்பியம் தமக்கு முன்னரே இருந்த, தமிழ் மொழி, அதன் அமைப்பு, தமிழ் இலக்கியங்கள், தமிழ்ப் புலமை வல்லார் பற்றியெல்லாம் பேசுவதில் நம் மூதாதையரின் மொழி, சமுதாயம் பற்றிய விளக்கம் கிடைக்கிறது. மேலும் தொல்காப்பியர் தம் கால, தம் முன்னைய காலச் செய்திகளை எல்லாம் தொகுத்து ஆராய்ந்து பனம்பாரனார் கூறுவது போன்று முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணி, அவற்றை எல்லாம் முப்பெரும் அதிகாரங்களாக வகைப்படுத்தி, ஆய்வுக் கண்ணோட்டத்தோடு ஒவ்வொரு இயல்களிலும் அவற்றை நுணுக்கமாக அளித்துள்ளார். ஆய்வுக் கோட்பாட்டினின்றும் எவ்விதத்திலும் குறைவு படாமல் இந்நூலை அமைத்துத் தந்துள்ள தன்மையில் தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமல்ல: சிறந்த ஆய்வு நூல் என்ற சிறப்பையும் பெறுகின்றது.

தொல்காப்பியக் கல்வி என்று நோக்கும்போது இளம்பூரணர் உரை இடைக்காலத்தது எனினும் இவருக்கு முன்னரேயே மரபாகத் தொல்காப்பியத்தைப் பயிலும் மரபு இருந்தது என்பதையே தொல்காப்பியத்திற்குரிய பிற உரைகளும் தெளிவுபடுத்துகின்றன. எனவே காலந்தோறும் இவ் இலக்கணத்தைப் புரிந்துகொள்ளவும், புரிய வைக்கவும் எடுத்துக்கொண்ட முயற்சிகளாகவே இவை நம் முன் காட்சியளிக்கின்றன. இந்த உரைகளின் காலகட்டத்தைத் தாண்டி இன்றைய கல்விமுறை மேலும் பல நோக்குகளில், அணுகுமுறைகளில் இதனை ஆராயும் நிலைக்கு உயர்ந்திருக்கிறது.

எனினும் நவில்தொறும் நூல் நயத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் கற்றனைத்தூறும் அறிவிற்கு ஒரு சான்றாகவும் இவ் இலக்கணம் அமையும் நிலையில் இதனை முழுமையாகப் புரியாத

நிலையே இன்னமும் நீடிக்கிறது. ஆயினும் இன்றும் பல தமிழ் அறிஞர்களும், மொழியியல் அறிஞர்களும், பிறதுறை அறிஞர்களும் இதனை முழுமையாகப்புரிந்து கொள்வதற்குரிய முயற்சிகளை செய்துகொண்டிருக்கின்றமை கண்கூடு. இத்தகைய நிலையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் மரபிலக்கணத்தில் வல்லமையும் மொழியியலில் ஆழ்ந்த தேர்ச்சியும் உடைய அறிஞர்களின் துணையுடன் தொல்காப்பிய ஆய்வினைச் செய்துவருகிறது. தொல்காப்பியம் சார்ந்த கருத்தரங்குகள் நடத்துதல் இம்முயற்சிகளுள் ஒன்று. இத்தொடர்ச்சியில் முனைவர் ச.அகத்தியலிங்கம் (தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்), முனைவர் செ.வை.சண்முகம் (அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறையின் முன்னாள் பேராசிரியர்) ஆகியோரின் சீரிய வழிகாட்டுதலுக்கு ஏற்ப தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் என்ற கருத்தரங்கு 2000இல் நிறுவனத்தில் நடைபெற்றது. தொல்காப்பியத்தின் எழுத்ததிகார, சொல்லதிகாரக் கோட்பாடுகள் அறிஞர் பெருமக்களால் விளக்கம் பெற்றன. அக் கட்டுரைகள் தொகுக்கப்பெற்று இப்போது நூலாக வெளிவருவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இக்கருத்தரங்கினை நன்முறையில் நடத்தி, இக்கட்டுரைகள் நூலாக்கம் பெறக் காரணமாக இருந்த முனைவர் செ.ஜீன் லாறன்ஸ், பேராசிரியர், தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம் அவர்களை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் நிறுவனத் தலைவர், மாண்புமிகு கல்வி அமைச்சர் முனைவர் மு. தம்பிதுரை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திரு. பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் கூடுதல் செயலர் திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்நூலினைக் கவினுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கு நன்றி.

**இயக்குநர்**

# கட்டுரையாளர்கள்

1. முனைவர் ச.அகத்தியலிங்கம்
(முன்னாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்)
155, மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்-608 002

2. முனைவர் இரா. திருமுருகன்
ஏழிசைச் சூழல்
62, மறைமலையடிகள் சாலை
புதுச்சேரி-605 009

3. முனைவர் க. நடனசபாபதி
பேராசிரியர், மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608 002

4. முனைவர் இரா.கோதண்டராமன்
தொல்காப்பிய அடிப்படை
ஆய்வு மையம்
88, தொல்காப்பியர் தெரு
அசோக்நகர்
பாண்டிச்சேரி-605 008

5. முனைவர் பெ. சுயம்பு
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்

6. முனைவர் பெ. இராசேந்திரன்
இதழியல் துறை
தொலைநிலைக் கல்வி இயக்ககம்
மதுரைக் காமராசர் பல்கலைக்
கழகம், மதுரை-625 021

7. முனைவர் வே.சா. அருள்ராஜ்
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 005

8. முனைவர் ச.வே.சுப்பிரமணியன்
மதிப்புறு இயக்குநர்
உலகத் தமிழ்க் கல்வி இயக்ககம்
தமிழூர், திருநெல்வேலி மாவட்டம்
அடைக்கலப்பட்டினம்-627 808

9. Dr.V.Gnana Sundaram
Profeesor-Cum-Dy.Director
Central Institute of Indian Languages
Manasagongthri
Mysore-570 006

10. முனைவர் செ.வை. சண்முகம்
பேராசிரியர் (ஓய்வு)
194, மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்-608 002

11. முனைவர் ஆ. தசரதன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113

12. முனைவர் கி. அரங்கன்
பேராசிரியர், மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 005

13. முனைவர் க.பாலசுப்பிரமணியன்
மொழியியல் பேராசிரியர் (ஓய்வு)
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்-608 002

14. திரு. சிவலிங்கனார்
30, முருகன் கோயில் தெரு
கதிர்காமம்
புதுச்சேரி-605 009

15. முனைவர் முருகரத்தனம்
பேராசிரியர் (ஓய்வு)
5, அறவாழி நகர்
மூன்றாவது தெற்குத் தெரு
பல்கலை நகர்
மதுரை-625 021

16. முனைவர் சோ.ந.கந்தசாமி
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
61, ஐந்தாம் தெரு
நடராசபுரம் (தெற்கு)
தஞ்சாவூர்-613 008

17. தி.வே.கோபாலையர்
தூய்மா தெரு
பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம்
புதுச்சேரி-605 001

18. முனைவர் இரா. சாரங்கபாணி
பேராசிரியர் (ஓய்வு)
குறள் இல்லம்
330, மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்-608 002

19. Dr. K. Meenakshi
B.Wing. B/6, First Floor
Ganga Park, Pingale Vasti
Mundhwa Road
Pune-411 036

# பொருளடக்கம்


1. தொல்காப்பியத்தின் தோற்றமும் ஏற்றமும்
   - ச. அகத்தியலிங்கம் 1

2. தொல்காப்பியரின் இலக்கண உருவாக்கக் கோட்பாடுகள்
   - இரா. திருமுருகன் 24

3. தற்கால ஒலியியல் நோக்கில் தொல்காப்பியரின் பிறப்பியல் கோட்பாடு - சு. நடனசபாபதி 35

4. அலையொலித் திரிபும் ஆய்தம் நிலையலும்
   - இரா. கோதண்டராமன் 49

5. தொல்காப்பியரின் புணர்ச்சி வருணனைக் கோட்பாடு
   - பெ. சுயம்பு 77

6. தொல்காப்பியரின் சொல்வகைக் கோட்பாடு
   - பெ. இராசேந்திரன் 87

7. தொல்காப்பியரின் வேற்றுமை இலக்கணக் கோட்பாடு
   - வே.சா. அருள்ராஜ் 110

8. தொல்காப்பியத்தில் பெயர் வகைப்பாடு
   - ச.வே. சுப்பிரமணியன் 124

9. தொல்காப்பியமும் கிளைமொழிக் கோட்பாடும்
   - வ. ஞானசுந்தரம் 131

10. எஞ்சுபொருட்கிளவி - செ.வை. சண்முகம் 137

11. உரிச்சொல்லியல் - ஆ. தசரதன் 165

12. மொழியியல் கோட்பாட்டுப் பின்னணியில் வழு
    - கி. அரங்கன் 173

13. தொல்காப்பியரின் பொருண்மையியல் கோட்பாடு
    - க. பாலசுப்பிரமணியன் 186

14. தொல்காப்பியமும் இளம்பூரணமும்
    - ஆ. சிவலிங்கனார் 200

15. சேனாவரையர் - தி. முருகரத்தினம் 216

16. தொல்காப்பியமும் தெய்வச்சிலையாரும்
- சோ.ந. கந்தசாமி 231

17. தொல்காப்பியமும் நச்சினார்க்கினியமும்
- எழுத்துப்படலம் - தி.வே.கோபாலையர் 254

18. இலக்கிய உருவாக்கத்தில் மொழி அமைப்பின் (எழுத்து, சொல்) பங்கு - தொல்காப்பியரின் கோட்பாடு
- இரா. சாரங்கபாணி 276

19. தொல்காப்பியம் எழுத்ததிகாரமும் வடமொழி இலக்கணங்களும் - கு. மீனாட்சி 295

# தொல்காப்பியத்தின் தோற்றமும் ஏற்றமும்

ச. அகத்தியலிங்கம்

---

## தொல்காப்பியம் ஓர் அளவீடு

தொல்காப்பியம் ஒரு சிறந்த தமிழ் இலக்கண நூல். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களைக் கொண்டது. எழுத்தும் சொல்லும் பொதுவாகத் தமிழ் மொழியின் இலக்கணம் கூறும் அதிகாரங்களாகவும் பொருளதிகாரம் அன்றையத் தமிழ் இலக்கியம் பற்றிக் கூறும் ஓர் இலக்கியவியல் அல்லது பாவியல் கூறும் அதிகாரமாகவும் கருதப்படுவன.

தொல்காப்பியர் இலக்கியத்தின் உள்ளடக்கம் உருவம் ஆகியவை பற்றி நன்குத் தெரிந்து கொள்ள மொழி இலக்கணமும் வேண்டும் என எண்ணிய நிலையிலும் ஆனால் அதே நேரத்தில் தமிழ்மொழியின் இலக்கணத்தையும் நன்குக் கூறிவிட வேண்டும் என எண்ணிய நிலையிலும் தான் வழக்கு மொழிக்கும் செய்யுள் மொழிக்கும் உரிய இலக்கணத்தையும் கூறிப் பின்னர் செய்யுளின் அல்லது பாவின் இலக்கணத்தையும் கூறி ஒருங்கிணைந்த ஒரு முழு இலக்கணத்தை வகுத்துச் சென்றார் எனக் கருதலாம் (அகத்தியலிங்கம் 1998).

## உருவாக்கத்தின் காரணங்கள்

இத்தகைய ஒரு சிறந்த இலக்கணத்தை உருவாக்கம் செய்து தமிழ் மக்களிடையே உலவவிடுவதற்குக் காரணம் என்ன? வேறு

வகையாகச் சொன்னால் தொல்காப்பியத்தின் தோற்றத்திற்குக் காரணம் அல்லது காரணங்கள்தான் என்னென்ன? என்பது பற்றி ஆராயின் பல்வேறு உண்மைகள் புலனாகிடும்.

'தொல்காப்பியத் தோற்றமும் ஏற்றமும்' என்ற தலைப்பில் இவ்வாசிரியர் எழுதிய கட்டுரை ஒன்று (1998) இது பற்றி எழுத்ததிகார நூற்பாக்களை அடிப்படையாக வைத்து ஆராய்ந்துள்ளது. எழுத்ததிகார முதல் சூத்திரம், அதன்பின்னர் வரும் சார்பு எழுத்துக்கள் பற்றிய சூத்திரங்களின் வைப்பு முறை, உயிரளபெடை பற்றிய சூத்திரங்கள், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகியவற்றைப் பற்றிய சூத்திரங்களின் எண்ணிக்கை போன்றவற்றையெல்லாம் உட்கொண்டு இப்பேரிலக்கணப் பெருநூல் சமஸ்கிருத மொழியிலிருந்து முற்றிலும் மாறுபட்ட மொழி தமிழ் மொழி என்பதையும் விளக்க வந்த நூல் என எண்ணுவதில் தவறு எதுவும் இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளது.

## சொல்லதிகாரம்

இது போன்றே சொல்லதிகாரத்தை அடிப்படையாக வைத்து ஆராயினும் இவ்வுண்மை வெளிப்படுவதைக் காண முடிகின்றது. தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் முதல் சூத்திரமே இக்கருத்துக்கு வலிவு ஊட்டுவதாக அமைந்துள்ளது.

> உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
> அஃறிணை யென்மனார் அவரல பிறவே
> ஆயிருதிணையி னிசைக்குமன சொல்லே

என்பது சொல்லதிகார முதல் சூத்திரம்.

## இளம்பூரணர்

இதற்கு உரை எழுதப் போந்த இளம்பூரணர் 'உயர்திணை என்று சொல்லுவர் ஆசிரியர் மக்கள் என்று சுட்டப்படும் பொருளை யென்றவாறு. அஃறிணை என்று சொல்லுவர் ஆசிரியர் மக்கள் அல்லாத பொருளை யென்றவாறு. அவ்விருதிணையையும் இசைக்குஞ்சொல்' என எழுதுவார். இதே கருத்தினைத்தான் பிற உரையாசிரியர்களும் கொண்டுள்ளனர்.

## சேனாவரையர்

இச்சூத்திரத்தின் அடிப்படையில் தொல்காப்பியர் சொல் உயர்திணையைக் குறிக்கும் சொல் என்றும் அஃறிணையைக் குறிக்கும்

சொல் என்றும் இருவகைப்படும் என்றும் உயர்திணைச் சொல், மக்களைக் குறிப்பன என்றும் அஃறிணைச் சொல் மக்கள் அல்லாதவற்றைக் குறிப்பன என்றும் பகுத்து நிற்பதாகக் கருதலாம். சேனாவரையர் 'உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் எனச் சொல் இரண்டு என்றவாறாம்' (ப.3) என்பார்.

இதனை அடுத்து வரும்

**ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்**
**பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி**
**அம்முப்பாற் சொல் உயர்திணை யவ்வே**

**ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்**
**றாயிரு பாற்சொ லஃறிணை யவ்வே**

என்ற இரு சூத்திரங்களாலும் தொல்காப்பியர் பெயர்ச் சொற்களில் காணப்படும் திணை எண் பால் பாகுபாடு கூறுவதாகக் கொள்ளலாம்.

## பெயர்ச்சொல்

இத்தகைய ஒரு வகைப்பாடு மிகச் சிறந்த முறையில் உருவாக்கப் பெற்றது. தமிழ்மொழியில் காணப்படும் பல்வேறு மொழியமைப்புக் கூறுகளைச் சிறந்த முறையில் விவரணம் செய்ய வேண்டுமானால் இத்தகைய ஒரு பகுப்பு முறை மிக மிக இன்றியமையாத ஒன்றாகும்.

தொல்காப்பியர் தம்முடைய நுண்மாண் நுழைபுலத்தினாலும் தனக்கே உரிய சிறந்த இலக்கண அறிவுக் கூர்மையினாலும் இலக்கண நுட்பத்தினாலும் மிகச் சிறந்த ஒரு பெயர் வகைப்பாட்டைச் செய்துள்ளமை இங்குக் கவனிக்கத்தக்கது.

## உரைகளில் கூறப்படுவனவற்றில் முக்கியமான ஒன்று

சொல்லதிகாரத்தின் முதல் சூத்திரமாகிய மேலே காட்டப் பட்ட சூத்திரத்திற்குப் பொருள் எழுதப் போந்த உரையாசிரியர்கள் பல செய்திகளைக் கூறுவர். அவற்றுள் ஒன்று மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது.

இளம்பூரணர் தொல்காப்பியச் சூத்திரத்தின் பொருளைக் கூறுவதற்கு முன் ஒரு தோற்றுவாயாக 'இவ்வதிகாரம் சொல்லிலக்கணம் உணர்த்தினமையின் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து' என அதிகாரப்

பெயர்க் காரணத்தைக் கூறிவிட்டு, 'சொல் என்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவிக்கும் ஓசை' (ப.1) எனக் கூறுவார்.

அதாவது சொல் என்றால் என்ன? எனக் கூற விரும்புகிறார். சொல்லாவது எழுத்தொடு புணர்ந்து பொருள் கொண்டுள்ள ஓசைகளால் ஆனது எனக் கூறுகிறார்.

தொல்காப்பியர் இச்சூத்திரத்தில் சொல்லாத ஒன்றைக் கூறி அதன்பின்னர் சூத்திரம் கூறும் செய்திக்குச் செல்லுகிறார். தொல்காப்பியர் சொல் என்றால் என்ன? எனக் கூறாமலே சொல்லின் வகைப்பாடு பற்றிக் கூறுகிறாரே என்ற எண்ணம் அவருக்கு.

இதே நிலையைத் தான் சேனாவரையரிடமும் காண்கிறோம். சேனாவரையரும், 'சொல்லாவது எழுத்தோடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது' (ப. 2) எனச் சொல் என்றால் என்ன என்பதற்கு விவரண விளக்கம் கூறுவார். அதாவது சொல்லாவது எழுத்தால் ஆக்கப்பட்டுப் பொருள் குறித்து வருவது என இளம்பூரணரைப் போலவே சொல் பற்றி, இச்சூத்திரம் கூறாத செய்தியைக் கூறுகிறார் (வேறுபல செய்திகள். ஒருபுடையான் ஒற்றுமை உடைத்தாய்... என்றெல்லாம் கூறினும் நம்முடைய பொருளுக்குத் தொடர்பு இல்லாத நிலையில் அவை பற்றிக் கூறவில்லை. இது பிறசெய்திகளுக்கும் பொருந்தும்).

மேலும் இவர் 'சொற்றான் இரண்டு வகைப்படும். தனிமொழியும் தொடர் மொழியும் என. அவற்றுள், தனி மொழியாவது சமய ஆற்றலால் பொருள் விளக்குவது. தொடர்மொழியாவது அவாய் நிலையானும் தகுதியானும் அண்மை நிலையானும் இயைந்து பொருள் விளக்குவது தனிமொழி ஈட்டம்' என்றும் கூறிவிட்டுப் பின்னர், 'பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லும் எனத் தனிமொழி நான்கு வகைப்படும்' (ப. 3) எனக் கூறி உதாரணங்கள் தருவார். எனவே இவர் கருத்துப்படி ஒரு விளக்கப் படம் இட்டால் அது கீழ்க்கண்ட வாறு அமையும்.



சொல் எழுத்தாலானது, பொருள் தருவது, எனக்கூறுகிறார். அது மேற்கொண்டவாறு வகைப்படுத்தப்படும்.

இதே கருத்தையே நச்சினார்க்கினியரும் கொண்டுள்ளார்.

'சொல் என்றது எழுத்தினால் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசையை' (ப.1) என்பார். இங்கு இவர் சொல் என்பது எழுத்தினால் ஆக்கப்படவேண்டும். பொருள் காட்டும் தன்மை (இருதிணையிலும்) இருத்தல் வேண்டும். அது பொருட்தன்மையை உணர்ந்து கொள்ளுவதற்குரிய ஒரு கருவி (கருவி என்பதில் கண்ணாக உள்ளார்) எனக் கூறுவார் (ப. 5).




இவரும் சொல் எழுத்தால் ஆனது. பொருள் தருவது என்பதை வற்புறுத்துகிறார். அது மேலே கண்டவாறு வகைப்படுத்தப்படும்.

தெய்வச்சிலையார் முதலில் சொல் பற்றிக் கூறும் போது 'இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ யெனின் மேற்சொல்லப்பட்ட எழுத்தினானியன்று பொருளறிவிக்கும் சொற்களைப் பாகுபடுத்துதலாற் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து' (ப.1) என்பார். பின்னர் அதிகார இயல்கள் பற்றிக் கூறி, தனிமொழி தொடர்மொழி பற்றியும் பேசி, தொடர் மொழியே பொருள் அறிவதற்குச் சிறப்புடையது என்பார்.



'சொல்லிலக்கணம் அறிந்ததனாற் பயன், தொடர் மொழியாகிய வாக்கியத்தினைப் பிரித்து, பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் உரிச்சொல்லென குறியிட வேண்டுதலிற் அதன் பின் கூறப்பட்டது' (ப.2) என்பார் இவர். இவர் தொடர் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் சொல் என்றால் என்ன என்பது பற்றி விளக்கியும் அச்சொல்லும் தமிழில் பெயர், வினை, இடை, உரி எனப் பாகுபடும் எனவும் கூறியே பின்னர் முதல் சூத்திரத்துக்கு உரை எழுதுவார்.

கல்லாடனாரும் பல்வேறு செய்திகளை விளக்கிவிட்டு, 'கிளவியெனினும் மாற்றமெனினும் மொழியெனினும் இவையெல்லாம் எழுத்தொடு புணர்ந்து பொருளறிவிக்கும் ஓசை மேல் நிற்கும்' (பக். 2-3) எனக் கூறுவார்.

சுப்பிரமணிய சாஸ்திரியாரும் (1930) 'இவ்வதிகாரத்திற் சொல்லைப் பற்றி ஆசிரியர் தொல்காப்பியனார் உணர்த்துதலான் இது சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. சொல்லின் இலக்கணம் யாது? தொல்காப்பியனார் பெயரியலில் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்றார். பொருள் குறித்தனவெல்லாம் சொல் என்பதாம்' எனக் கூறுவார் (ப. 1).

இவ்வாறு பல்வேறு உரையாசிரியர்களும் இச்சூத்திரத்திற்குப் பொருள் எழுதும்போது சொல் என்றால் என்ன என்பது பற்றியும் அச்சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும் என்றும் கூறிய பின்னரே இம்முதல் சூத்திரத்துக்குரிய பொருளை எழுதுகின்றனர். எனவே இம்முதல் சூத்திரத்திற்கு முன்னால் சொல் என்றால் என்ன என்றும் அது எத்தனை வகைப்படும் என்றும் கூறிய பின்னரே முதல் சூத்திரத்திற்குப் பொருள் கொள்ள முடியும் என்று கருதுகின்றனர்.

## இது பற்றிச் சூத்திரங்கள் வேண்டும்

எனவே தொல்காப்பியர் சொல்லதிகாரத்தின் முதல் சூத்திரமாக வேறு ஓரிரு சூத்திரங்களை ஆக்கியிருத்தல் அவசியம் எனக் கருதுகின்றனர். சுப்பிரமணிய சாஸ்திரியார் சொல் பற்றித் தொல்காப்பியம் பெயரியலில் கூறியுள்ள 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற சூத்திரத்தைச் சுட்டிக் காட்டி அதை அடிப்படையாக வைத்துப் பொருள் எழுத முற்படுகிறார்.

## வேறு இடங்களில்

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற சூத்திரத்தில் சொல் பற்றிய சிறந்த ஒரு விரைவு (இளம். 152) விளக்கத்தையும் அவற்றையடுத்து வரும்

**பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**
**சொல்லினாகும் என்மனார் புலவர்** (153)

**தெரிபு வேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்**
**இருபாற்றென்ப பொருண்மை நிலையே** (154)

என்ற சூத்திரங்களில் எவ்வெவ்வாறு சொற்கள் பொருள் உணர்த்துகின்றன என்பது பற்றியும்

சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண்டென்ப அறிந்திசி னோரே (155)

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்று வழி மருங்கின் தோன்று மென்ப (156)

எனச் சொல்பாகுபாடு பற்றியும் மிகத் தெளிவாகப் பெயரியலில் கூறியுள்ளமை காணத்தக்கது.

இவற்றில் கூறப்பட்ட கருத்துக்களையே உரையாசிரியர்கள் முதல் சூத்திரத்துக்குப் பொருள் எழுதும்போது கொண்டு வந்து எழுதுதல் காணத்தக்கது.

## பெயர்ச்சொல்லே

தொல்காப்பியர் இங்குச் சொல்லே என்று கூறினாலும் இங்குக் குறிக்கப்படுவது பெயர்ச்சொல்லே. உரையாசிரியர்கள் இதுபற்றி எதுவும் கூறவில்லை.

## தொல்காப்பியரின் உள்ளம்

இவ்வாறு சொற்கள் பற்றிய பொதுவான கருத்தைப் பெயரியலில் வைத்து அதன் தொடர்ச்சியாக வர வேண்டியதைச் சொல்லதிகார முதற்சூத்திரமாக ஆக்க வேண்டிய காரணம் என்ன என்பது பற்றிய சிந்தனையில்தான் தொல்காப்பியரின் உள்ளம் தெரியவரும். தொல்காப்பியப் பெருநூலின் தோற்றத்துக்குரிய ஒரு காரணமும் தெரியவரும்.

தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் எடுத்த எடுப்பிலேயே 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என இச்சூத்திரத்தை முதலில் வைக்கக் காரணம் என்ன? என்று எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

## எதற்கும் ஒரு காரணம்

தொல்காப்பியர் எந்தவொரு செயலைச் செய்யினும் அதற்குச் சிறந்த காரணம் ஒன்று இருத்தல் வேண்டும். எதனை முன்னே கூற வேண்டும், எதனைப் பின்னே கூறுதல் வேண்டும் என்பதை நன்கு அறிந்தவர். எனவே, ஏன் இச்சூத்திரத்தை முன் வைத்தார் என ஆராய்வது தொல்காப்பியரின் எண்ணத்தைப் புரிந்து கொள்ள உதவும்.

## மொழிப் பொதுமை

சொல் பொருள் மேலாமாறு பற்றி உணர்த்துவதும் இச்சூத்திரம் தானே? இந்நிலையில் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே எனக் கூறுவது போன்றது தானே இது எனவும் எண்ணிப் பார்க்கலாம்.

பொருண் மேலாமாறு பற்றிப் பொதுவாகக் கூறுவதற்கும் உயர்திணைச் சொற்களாவன மக்களைச் சுட்டுவன; அஃறிணைச் சொற்களாவன மக்கள் அல்லாத பிறவற்றைச் சுட்டுவன என்பதற்கும் இடையே வேறுபாடு மிக உண்டு.

உரையாசிரியர்கள் அனைவரும் இச்சூத்திரம் பற்றிக் கூறும்போது 'சொல்லும் பொருளும் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று' என்றும் (இளம்பூரணர்) 'இத்தலைச் சூத்திரம் சொல்லும் பொருளும் வரையறுத்து உணர்த்துகின்றது' என நச்சினார்க்கினியரும் "சொல்லிலக்கணமுணர்த்துதல் நுதலிற்று" எனத் தெய்வச்சிலையாரும் கூறுவர்.

## உயர்திணை, அஃறிணை

முதற்சூத்திரத்தில் சொல் பற்றிப் பொதுப்படக் கூறாமல் உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாட்டைக் கொண்டு வந்துள்ளது வேண்டும் என்றே அல்லது ஒரு காரணம் பற்றியே எனக் கருதலாம்.

## தமிழ்மொழி பகுப்பே

தமிழ் மொழியில் காணக்கிடக்கும் உயர்திணை அஃறிணைப் பகுப்பும் அவற்றையொட்டி வரும் ஒருமை பன்மைப் பகுப்பும் பின்னர் ஆண், பெண், பலர் என்ற பகுப்பும் ஒன்றன்பால், பலவின்

பால் பகுப்பும் தமிழ்மொழிக்கு உரியது. ஆனால் இப்பகுப்புகள் சமஸ்கிருத மொழியில் இல்லாதது.

ஆனால் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' போன்றவை எல்லா மொழிகளுக்கும் உரியன. சமஸ்கிருத மொழிக்கும் உரிய பொது விதிகள். இந்த நிலையில் தமிழ் மொழிக்கே உரிய திணைப்பகுப்பினை முதல் சூத்திரமாகக் கொண்டு வந்து தமிழ்மொழியின் அமைப்பு வேறு, சமஸ்கிருத மொழியின் அமைப்பு வேறு என்பதை மிக நுட்பமாகக் காட்டியுள்ளார் தொல்காப்பியர் எனக் கருதலாம்.

இத்தகைய எண்ணம் வேறு பல காரணங்களாலும் வலுப்பெறும்.

## வீரசோழியமும் பிறவும்

இங்கு இன்னொரு செய்தியையும் குறித்தாக வேண்டும். உயர்திணை, அஃறிணைப் பிரிவு தமிழ்மொழியில் காணக் கிடக்கும் இலக்கணக் கூறாகும். திராவிட மொழியில் உள்ள இப்பகுப்பு தமிழ் மொழியில் நன்கு உள்ளது. சமஸ்கிருத மொழியில் இல்லாதது.

தமிழில் உண்டான வீரசோழியம் இத்திணைப் பகுப்பை ஏற்றுக் கொள்ளுவதில்லை. இதே நிலையில் தான் பிரயோக விவேகமும் இலக்கணக் கொத்தும் உள்ளன.

வீரசோழியம் தன்னுடைய 29, 30 சூத்திரங்களில் உயர்திணை, அஃறிணைப் பகுப்பு கூறாமலே பால் பகுப்பு கூறும்.

> ஒருவனொருத்தி பலரொன் றோடு பலவுஞ் சிறப்பின்
> உருபுகள் மூன்று முடன்வைத்து

எனக் கூறுவது காணத்தக்கது. ஆண், பெண், பலர், ஒருமை, பன்மை, ஆண் உயர்வு ஒருமை, பெண் உயர்வு ஒருமை, ஒருமை உயர்வு என எட்டுப் பால் கூறுவது காணத்தக்கது.

இது சமஸ்கிருத மொழியை ஒட்டி, திணைப்பகுப்பை ஒத்துக் கொள்ளாத பண்பையே காட்டுகின்றது.

## கால்டுவெல் : ஒப்பியலாளர்கள்

திணைப் பகுப்பு பற்றிக் கால்டுவெல் கூறுவதும் ஒப்பு மொழியியலாளர்கள் திராவிடமொழிக்கு இதனைக் காட்டிக் கூறுவதும் காணத்தக்கன.

இப்பகுப்பைத் தொல்திராவிட மொழிக்கே ஏற்றி திற்பர் திராவிட ஒப்புமொழியியலாளர்கள்.

## எழுத்ததிகார முதல் நூற்பா

தொல்காப்பியத்தில் காணப்படும் மூன்று அதிகாரங்களின் முதல் சூத்திரங்கள் அனைத்தும் இத்தகைய நிலையைக் குறிப்பாகக் காட்டுவனவாகவே அமைந்துள்ளன என்பது கண்கூடு.

> **எழுத்தெனப்படுப**
> **அகர முத**
> **னகர விறுவாய் முப்பஃதென்ப**
> **சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடையே**

என்ற சூத்திரத்திலும் சார்பெழுத்துக்களைக் கூறி, சமஸ்கிருத மொழியில் இது இல்லாத நிலையைச் சுட்டிக் காட்டித் தமிழ்மொழி அமைப்பு வேறு என்பதைக் காட்டுவார் தொல்காப்பியர். சமஸ்கிருத மொழியில் குற்றியலுகரமோ, குற்றியலிகரமோ, ஆய்தமோ (அதிக அளவில்) இல்லை. சமஸ்கிருத மொழியில் ககர, பகரத்திற்கு முன்பே ஆய்தம் வரும்.

இந்நூற்பா பற்றிக் கூறும் நச்சினார்க்கினியர் பலபடக் கூறிவிட்டு 'அகரம் முதலாதல் ஆரியத்திற்கும் ஒக்குமேனும் ஈண்டுத் தமிழ் எழுத்தே கூறுகின்றாரென்பது உணர்தற்கு "னகர விறுவாய்" என்றார்' எனக் கூறுவதும் சிவஞானமுனிவரும் 'இனி எழுத்தெனப்படுப அகர முதனகரவிறுவாயென்றொழியாது முப்பஃ தென்னுந் தொகை கூறிய தெற்றுக் கெனின்' என்று கூறி, இறுதியில் 'இம்முப்பதுமேயன்றி வட மொழியிற் கூறுமேனையெழுத்துக்கள் ஈண்டுக் கொள்ளற் படாவென்றற்கு மென்க' எனக் கூறுவார் (1952, முதற்சூத்திரவிருத்தி, ப. 21).

மேலும் தொல்காப்பியர் இந்த முதல் சூத்திரத்தையடுத்து முக்கியமான அகர முதல் னகர விறுவாய் உள்ள எழுத்துக்களைப் பற்றிக் கூறாமல்

> அவைதாம்
> குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
> முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன

எனக் கூறுவதும் அவை பற்றி விளக்கமாகப் பேசுவதும் உயிரளபெடை போன்றவற்றைப் பற்றி அதிகமாகக் கூறுவதும் இங்கு நினைத்தற்குரியது (பார்க்க. அகத்தியலிங்கம் 1998, பக்.1-37).

## நூற்பாக்களின் எண்ணிக்கை

சார்பெழுத்துக்கள், உயிரளபெடை போன்றவற்றைக் குறிப்பிடும் நூற்பாக்களின் எண்ணிக்கையை மட்டும் வைத்துப் பார்த்தால் கூடத் தொல்காப்பியர் எத்தனையளவுக்கு இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் எனத் தெரியவரும்.

குற்றியலுகரப் புணரியல் என ஒரு இயலை வகுத்து 78 நூற்பாக்களில் (406-483) இதுபற்றிக் கூறுவார். உயிர் மயங்கியல் 93 நூற்பாக்களையும் புள்ளி மயங்கியல் 104 நூற்பாக்களையும் கொண்டிருக்க ஒரே ஒரு உயிர், குற்றியலுகரம் மட்டும் 78 நூற்பாக்களை உடைத்தாய் உள்ளமை காணத்தக்கது. இதன் புணர்ச்சி பற்றி உருபியலிலும் (196, 201, 203) வேறு பல பண்புகள் பற்றி நூன்மரபு, மொழிமரபு ஆகிய இயல்களிலும் கூறப்பட்டிருப்பவை காணத்தக்கன.

ஆய்தமும் பல நூற்பாக்களில் கூறப்படுவது; 15க்கும் அதிகமான இடங்களில் வருவது. நூன்மரபு, மொழி மரபு, மெய்யீற்றுப் புணரியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய இயல்களில் எல்லாம் இது கூறப்பட்டிருத்தல் கண்கூடு.

இதே நிலையைத் தான் உயிரளபெடை பற்றிய நூற்பாக்களிலும் காண்கிறோம். நூன்மரபு, மொழிமரபு ஆகிய இயல்களில் மட்டுமன்றி, உயிர்மயங்கியலிலும் பல நூற்பாக்கள் (214, 224, 227, 230, 31, 32, 62, 68, 72, 73, 74, 75, 85, 93, 95) புள்ளி மயங்கியல் 312 எனப் பல நூற்பாக்கள் உள்ளன.

## சமஸ்கிருத மொழியமைப்பு அவர் உள்ளத்தில்

தொல்காப்பியர் வடமொழி அமைப்பையும் இலக்கணத்தையும் தம்முடைய உள்ளத்திலே கொண்டுள்ளார் என்பது நன்கு வெளிப்படுகின்றது. தம்முடைய பிறப்பியல் இறுதிச் சூத்திரத்தின் புறனடையாகக் கூறும்

> எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
> சொல்லிய பள்ளி யெழுதரு வளியின்
> பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்
> தகத்தெழு வளியிசை யரில்தப நாடி
> அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே (107)

என்னும் சூத்திரமும் காட்டி நிற்கும்.

எல்லாவெழுத்துக்களையும் வெளிப்படுமாறு விதந்து சொல்லப்பட்ட இடங்களில் தோன்றுகின்ற வளியினாற் பிறக்கும் பிறப்போடு கூறும்போது அவற்றொடு மாறுபடுகின்ற தன்மையையுடைய அகத்தின்கண் (உந்தி, மார்பு, கழுத்து என்னும் இடங்களில்) தோன்றுகின்ற வளியாலுண்டாகும் இசையைக் குற்றமற ஆராய்ந்து அதன் தன்மையை அறிவித்தல் வேதத்தின் கண்ணே உள்ளது என்பது தான் இதன் பொருள்.

வெளிப்படத் தோன்றும் ஒலி பற்றியே இங்குக் கூறப்படுகின்றது. வேதபாராயணத்தின்போது மிகவும் சூட்சுமமாக உள்ள ஒலித்தன்மை பற்றி இங்கே கூறவில்லை என்பது தான் இதன்நோக்கம். இதைத்தான் அடுத்த சூத்திரத்தில்

அஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை யளபு நுவன்றிசினே (100)

எனக் கூறுகிறார்.

இதுபற்றி எழுதும் சுப்பிரமணிய சாஸ்திரி (1937, ப. 107) 'ஆசிரியர் வடமொழி தென்மொழி இரண்டனையும் நன்கு ஆய்ந்தவராதலின், ஆங்காங்குத் தமிழ் மொழியைப் பற்றிக் கூறுமிடத்து வடமொழியிற் கூறியவாறே கூறாமையின் குற்றமெனச் சிலர் கருதுவரென நினைத்து இருமொழியிலுள்ள மாறுபாட்டைக் கூறிச் சொல்லிச் செல்லுவர். ஆகலினன்றே 'மூவளபிசைத் லோரெழுத்தன்றே' என்ற சூத்திரத்தையும் கூறினர்' எனக் கூறுவார் (பக். 106-107).

இங்கு, சாஸ்திரி 'குற்றமெனச் சிலர் கருதுவார்' எனக் கூறுவது பொருந்தாது ஆயினும் தொல்காப்பியர் வடமொழியமைப்பையும் தமிழ் மொழியமைப்பையும் நன்குணர்ந்தவர் என்பதும் இவ்விரண்டும் வேறுபட்ட மொழிகள் என்பதை உள்ளத்தில் நிறுத்தியுள்ளார் என்பதும் அந்நிலையில் அதனை உலகுக்கு மிகவும் தெளிவாகக் காட்டும் நிலையில் தம்முடைய நூலை நன்கு யாத்துள்ளார் என்பதும் கருதத்தக்கன.

### பொருளதிகார முதல் நூற்பா

இதே நிலையைத்தான் பொருளதிகாரத்திலும் காண்கிறோம்.

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப

என்பது முதற் சூத்திரம்.

இங்கும் செய்யுளின் பாடுபொருள் பற்றியோ அல்லது தமிழ் மொழியின் செய்யுள் நிலைபற்றியோ எதுவும் கூறாமல் எடுத்த எடுப்பிலேயே திணை ஏழுவகைப்படும் எனக் கூறுகிறார். திணைப் பாகுபாடும் திணை அடிப்படையில் செய்யுள் ஆக்கமும் செய்யுள் பாடுபொருளும் தமிழுக்கே உரியது. சமஸ்கிருத மொழியில் இந்த நிலை இல்லாதது. இதனை வற்புறுத்திக் காட்டவே எடுத்த எடுப்பிலேயே அவர் எழுதிணைப் பாகுபாடு பற்றிக் கூறுகிறார் எனக் கருதலாம்.

எது கவிதை, எக்கவிதை அகப்பொருளுக்குச் சிறந்தது போன்ற செய்திகள் எல்லாம் பின்னே கூறப்படுவது இங்கு ஊன்றி உணரத்தக்கது.

சொல்லதிகாரத்தில் உயர்திணை, அஃறிணை என்ற இருதிணை, பொருளதிகார முதல் சூத்திரத்தில் கைக்கிளை முதலாப் பெருந்திணை ஈறாக உள்ள எழுதிணைகள், திணை என்ற சொல்லும் அவை தரும் பொருள்களும் தொல்காப்பியருக்குப் பிடித்தவை. தமிழ் மொழியமைப்பையும் தமிழ் இலக்கியத்தையும் இனம் காட்டுபவை.

## ஒரே காரணத்திற்காக அன்று

இவ்வாறு கூறுவதால் தொல்காப்பியர் சமஸ்கிருத மொழி வேறு தமிழ்மொழி வேறு என்ற உண்மையை நிலைநாட்ட வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகவே அவர்தம் நூலை ஆக்கினார் என்று கூறுவதாகக் கொள்ளுதல் கூடாது.

## இலக்கண உருவாக்கம்

இலக்கண உருவாக்கம் அல்லது இலக்கிய உருவாக்கம், ஏன் எந்த ஒருநூலும் உருவாக்கம் பெறுவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் அதனை உருவாக்கும் ஆசிரியனின் அறிவுத் திறனும் அதனால் அவன் உள்ளத்தில் ஏற்படும் முடிவும் தான். தொல்காப்பியரும் சிறந்த மொழியறிவும் தமிழ்மொழியின் அமைப்புப் பற்றிய சிறந்த பாண்டித்தியமும் அது நடைமுறையில் இயங்கும் நிலையையும் நன்கு அறிந்திருந்ததுடன் கூர்மையான பார்வையும் கொண்டிருந்ததால் தான் இத்தகைய சிறந்த ஒரு இலக்கண நூலை அவரால் ஆக்கமுடிந்தது.

சமஸ்கிருத மொழி பற்றிய அறிவும் அதற்கும் தமிழுக்கும் இடையே உள்ள வேற்றுமையையும் நன்கு உணர்ந்திருந்த நிலையில் இவை பற்றிய எண்ணமும் அவருடைய உள்ளத்தில்

குடிகொண்டிருந்திருக்கலாம். இதனால் தான் தமிழ்மொழியின் அமைப்பைக் கூறும்போது அதன் இலக்கண விவரணத்துக்கு எந்தவிதமான தொங்கலும் தொய்வும் ஏற்படாமல், பொருத்தமான இடங்களில் இவ்வேறுபாடுகளை மிக நுணுக்கமாகக் கொண்டு வந்து தம்முடைய நூலை யாத்துள்ளார் அவர். இதில்தான் இந்த இலக்கண இலக்கியவியல் பேராசானின் பெருமை வெளிப்படுகின்றது.

## கிளவியாக்க முதல் 12 நூற்பாக்கள்

கிளவியாக்கத்தில் காணப்படும் முதல் சூத்திரம் மட்டுமன்று; அதனை அடுத்துவரும் 11 சூத்திரங்களும் கூட இவருடைய நுட்பத்தின் நுண்மையைக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

கிளவியாக்கம் பற்றிக் கூறும் தெய்வச்சிலையார் மிக நுட்பமாகக் கிளவியாக்கம் தொடர்மொழி பற்றிக் கூறுகின்றது என்பார். அத் தொடர்மொழியையும் அல்வழித் தொடர், வேற்றுமைத் தொடரென இருவகைப்படுத்தி இவ்விருவகைத் தொடரிலும் அல்வழித் தொடர் பற்றிக் கிளவியாக்கம் கூறுவதாகக் கருதுவார். அதாவது எழுவாய் வேற்றுமை பற்றிக் கூறுவதாகக் கொள்ளலாம். 'அல்வழித் தொடர் கிளவியாக்கத்துள்ளும் வேற்றுமைத் தொடர் வேற்றுமை யோத்துள்ளும் வேற்றுமை மயங்கியல், விளி மரபென்பனவற்றுள்ளும் தனிமொழிப் பகுதியாகிய பெயரிலக்கணம்........' எனக் கூறுவது காணத்தக்கது.

## தொடரியல் : கருத்தாடல்

தொல்காப்பியக் கிளவியாக்கம் முழுக்க முழுக்கத் தொடரியல் பற்றியது என்பதை மொழியியலாளர்களும் நன்கு விளக்கியுள்ளனர் (Agesthialingom 1968, 1969).

## வேற்றுமை மொழி

தமிழ்மொழி வேற்றுமை அதிகம் நிறைந்த மொழி (Casal language). இதன்கண் காணப்படும் தொடர்மொழிகளில் மிக அதிகமாகப் பயன்படுவன வேற்றுமைக் கூறுகளே. அது எழுவாய் வேற்றுமையாக இருக்கலாம் அல்லது பிற வேற்றுமைகளாக இருக்கலாம். இந்த நிலையில் தான் தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் எழுவாய் வேற்றுமைக்கும் அது கொண்டு முடியும் வினைமுற்றுகளுக்குமிடையே காணப்படும் தொடரியைபைப் (concord) பற்றிக் கூறுகிறார். இதைத்தான் தெய்வச்சிலையார் அல்வழி என இளம்பூரணரையொட்டிக் கூறுகிறார் (புணரியல் 11).

## எழுவாய், பயனிலை

வாக்கியத்தில் வரும் பயனிலைக்கும் எழுவாய்க்கும் இடையே பெரும்பாலும் வேற்றுமைகளே வந்து பொருள் தொடர்புகளைக் காட்டுகின்றன. பொதுவாக எல்லா வாக்கியங்களிலும் எழுவாய் இருக்கும். எனவே எழுவாய் முக்கியம் வாய்ந்தது. மேலும் இதற்கும் பயனிலைக்கும் இடையே தொடரியையும் இருக்கும். இதனால் இதனை முதலில் கூறிப் பின்னர் வேற்றுமையியலில் (பிற) வேற்றுமைத் தொடர்புகளைக் கூறுவார் தொல்காப்பியர்.

கிளவியாக்கத்தில் காணப்படும் முதல் பன்னிரு சூத்திரங்கள் இது பற்றியே கூறுகின்றன. இங்கும் ஒரு நுட்பம் பொதிந்து கிடக்கக் காணலாம்.

தமிழ்மொழியும் சமஸ்கிருத மொழியும் இத்தகைய தொடரியைபுகளைக் கொண்டுள்ளவாயினும் இவை இரண்டிற்கும் இடையே வேற்றுமையும் உண்டு. இதுபற்றி, சாஸ்திரியார் 'வடமொழி வினையிலுள்ள விகுதி ஒருமை பன்மை இவற்றைக் காட்டுமேயன்றிப் பாலைக் குறியா. தமிழில் அவை இரண்டையும் குறிக்கும்' என்பார் (1930).

எனவே இயைபு நிலையிலும் இம்மொழிகளுக்கிடையே வேற்றுமை காணப்படுகின்றது. இந்நிலையில் தொல்காப்பியர் தம்முடைய நூலில் இதுபற்றிப் பரக்கப்பேசுவது காணத்தக்கது.

இயைபு பற்றிக் கூறும் தொல்காப்பியர் இங்கு (கிளவியாக்கத்தில்) வினையில் தோன்றும் பாலறி கிளவிகளாக வருவனவற்றைக் கூறும்போது

ணஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்

ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்

போன்று கூறுவது கவனிக்கத்தக்கது. ணஃகான் ஒற்று ஆடூஉ அறிசொல்லே என்றும் அது ஆடூஉவைக் குறிக்கும் சொல் என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறுவது அவை ஒருமையையும் இணைந்து குறிக்கும் எனக் கூறாது பாலுக்கு மட்டுமே உரியது போன்று கூறுவதும் உணரத்தக்கது.

வடமொழியில் விகுதி ஒருமை, பன்மையையே குறிக்கும்; பாலைக் காட்டாது. ஆனால் தமிழ்மொழியில் அது பாலைக் காட்டும்

என்று அடித்துக் கூறுவது சமஸ்கிருத மொழியமைப்பு வேறு தமிழ் மொழியமைப்பு இதிலும் வேறு என்பதைக் காட்டுவதற்காகவே என எண்ணலாம்.

ஆனால் இதே விகுதியை வினையியலில் கூறும் போது

அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே

எனக் கூறுவது காணத்தக்கது. இவ்வாறே பிற பால்களுக்கும் கூறிச் செல்லுவார் அவர்.

## தன்மை முன்னிலை கூறாதது

தொல்காப்பியரின் இன்னொரு செய்கையும் நம்முடைய எண்ணத்துக்கு அரண் காட்டி நிற்பதாகக் கருதலாம்.

தொடரியைபு கூற வந்த ஆசிரியர் படர்க்கையில் காணப்படும் தொடரியைபு பற்றி மட்டுமே கூறி மீதி உள்ள தன்மை, முன்னிலை ஆகியவற்றில் காணப்படும் தொடரியைபு கூறாமையும் சிந்திக்கற்பாலது.

இத்தகைய நிலைக்குக் காரணம் இரண்டு மொழிகளில் காணப்படும் தன்மை முன்னிலைகளில் பால்பிரிவு இல்லாதது தான் எனக்கருத இடம் உள்ளது. இவற்றுள் இரண்டு மொழியுமே ஒரே மாதிரியாக உள்ளமை கண் கூடு.

## ஒரு மொழி இலக்கணமும் பிறமொழிக் கூறுகளும்

ஒரு மொழி இலக்கணம் உருவாகும்போது இன்னொரு மொழியின் அமைப்புப் பற்றி இலைமறை காயாகவேனும் கூறுவது பொருந்துமா? என்ற வினா எழுவது இயற்கையே. எனவே தமிழ்மொழியின் இலக்கணத்தை அல்லது அதன் அமைப்பைக் கூறும்போது சமஸ்கிருத மொழியின் அமைப்பை உள்ளத்தில் கொண்டு இலக்கண விதிகளை உருவாக்குவது எவ்வாறு பொருந்தும்? என எண்ணுவதும் இன்றியமையாத ஒன்று தான்.

இத்தகைய வினாவுக்கு விடை, ஒரு இலக்கணி என்ன நோக்கத்துடன் தன் இலக்கணத்தை உருவாக்கம் செய்கிறான் என்பதைப் பொறுத்தே அமைந்திருக்கும்.

## பலவகை இலக்கணங்கள்

உலகில் பலவகை இலக்கணங்கள் உண்டு. அமைப்பு இலக்கணம், இருமொழி இலக்கணம், உறழ்நிலை இலக்கணம் போன்று பல இலக்கணங்கள் உள்ளன. இத்தகைய இலக்கண வகை நாற்பதுக்கும் மேலாக உள்ளன எனக் கருதப்படுகின்றது (K. Rangan and Chandrasekaran, 1994, பக்.81-83). இதில் சில இலக்கண வகைகள் சேர்க்கப்படவில்லை.

## இலக்கணம் எழுதுவதன் நோக்கம்

தான் எழுதும் இலக்கணம் எத்தகையது, எதற்காக, யாருக்காக, ஏன் எழுதப்படுகின்றது என்பதையெல்லாம் வைத்தே ஓர் இலக்கணத்தின் உருவாக்கம் அமையும். முன்னர்க் கூறியதுபடி இலக்கணியின் தகுதியும் அறிவும் ஆற்றலும் பெருவீச்சும் பெரும் பரிமாணமும் முதல் காரணமாயினும் பிற துணைக்காரணங்களும் இருக்கும். இலக்கணம் எழுகின்ற காலச் சூழமைவு, அவனுடைய உள்ளக்கிடக்கை, இலக்கணத்தை எழுதவேண்டும் என்ற உள்ளுணர்வை முதல் முதலில் தூண்டிய உட்காரணம் போன்றவை நிச்சயமாக எந்தவொரு படைப்பிலும் இடம்பெறும். சில நேரங்களில் சில சூழல்களில் அதை மறைக்க எண்ணினாலும் கூடத் தன்னையறியாமலே அக்காரணத்தால் ஏற்படும் எண்ணங்கள் அவன் படைப்பில் வெளிவந்துவிடக் காணமுடியும். இதனால் தான் ஒரு மனிதன் அல்லது ஆசிரியனின் படைப்பில் அவனை இனம் கண்டுகொள்ள முடியும் எனப் பலர் கருதுகின்றனர். சின்னஞ்சிறு படைப்புக்களில் மூடி மறைத்துவிட முடிந்தாலும் கூடப் பெரிய படைப்புக்களில் எங்காவது ஒரு சில இடங்களில் வெளிப்பட்டு விடும். கவிதைக் கலை பற்றிப் பேசும் எலியட் கவிஞன் தன்னை அழித்துக் கொள்ளுகிறான் என்று கூறினாலும் கூடப் பல நேரங்களில் அவன் தன்னைக் காட்டி விடுகிறான் எனக் கருதுவாரும் உளர்.

## தொல்காப்பியர் காலச் சூழல்

தொல்காப்பியர் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு எனக் கருதுவர் பலர் (சிலர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு என்றும் இன்னும் சிலர் மிகப் பிந்தியது என்றும் கருதுவர்).

தொல்காப்பியர் தன்னுடைய நூலை உருவாக்கும்போது சமஸ்கிருத மொழியின் தாக்கமும் சமஸ்கிருத எண்ணங்களும் அம்மொழி பேசும் மக்களின் பழக்க வழக்கங்களும் மணமுறைகள் போன்றின்னோரன்னவெல்லாம் தமிழ்நாட்டில் வேரூன்றிவிட்ட அல்லது விடுகிற காலம்.

வடமொழிச் சொற்களைக் கடனாகக் கொள்ளும்போது வடமொழி ஓசைகளாலேயே உச்சரிக்க முற்பட்டிருந்த காலம்; வடமொழி செல்வாக்குடன் வளருகிற காலம் என்று கூடக் கூறலாம்.

இதனால்தான்

வடசொற் கிளவி வடவெழுத்து ஓரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே (404)

என்ற சூத்திரத்தை யாத்தார். இங்கு 'ஓரீஇ' என அளபெடையிட்டுக் கூறுவது காணத்தக்கது.

## தமிழ்மொழியும் வடமொழியும் ஒரு குடும்ப மொழிகள்

பின்னர் பல நேரங்களில், காலங்களில் பல அறிஞர்களும் பிறரும் நினைத்ததைப் போன்று தமிழ்மொழி வடமொழியிலிருந்து பிறந்தது, தோன்றியது என்று கூடப் பலர் நினைத்திருக்கலாம், கூறியும் இருக்கலாம். கால்டுவெல் தன்னுடைய ஒப்பிலக்கணத்தை எழுதித் திராவிடமொழிகள் பற்றிய திண்ணிய முடிவைத் திட்டவட்டமாகக் கூறிவிட்ட பின்னரும்கூடப் பல அறிஞர்கள் தமிழ்மொழி ஓர் ஆரியமொழி என்று எண்ணினர்.

சேஷகிரி, ஞானப்பிரகாசர், போப் போன்ற சிறந்த தமிழறிஞர்கள்கூட இவ்வாறே எண்ணினர் (அகத்தியலிங்கம் 1935, பக்.4-67).

## தவறான எண்ணம்: தடுத்தாக வேண்டும்

இத்தகைய ஒரு நிலை தொல்காப்பியர் காலத்திலும் இருந்திருக்கலாம். இது ஒரு தவறான முடிவல்லவா? உண்மையில் மொழி என்ற நிலையில் இருமொழிகளுக்கும் பல்வேறு ஒற்றுமைகள் இருந்தாலும் சில பல முக்கியமான பண்புகளில் இவை இரண்டும் மாறுபட்டவை என்ற திண்ணமான எண்ணம் அவருக்கிருந்தது. இலக்கண நிலையில் மட்டுமன்றி இலக்கியத்தின் பாடுபொருள், இலக்கியத்தின் நோக்கம், அதன் உருவ ஆக்கம், யாப்பு முறை போன்ற நிலைகளில் இவை தம்முள் உள்ள வேற்றுமையையும் வேறுபாட்டையும் அவர் கண்டவர்.

## மொழி மரபுகள் : விளிமரபு

மட்டுமன்றி மொழி மரபுகளிலும் இலக்கிய மரபுகளிலும் இவை தம்முள் மாறுபட்டன என்பதையும் கண்டவர். எனவே தான்

இவற்றையும் உள்ளடக்கி மரபியல் என்ற ஓர் அருமையான இயலையும் உருவாக்கினார். இவ்வாறு பல்வேறு இயல்களின் பண்பினை விளக்க முடியும். இதுபோன்றே பலர் விளிமரபு என்ற இயல் முக்கியமானதன்று என எண்ணுகின்ற (சுந்தரமூர்த்தி, தெய்வச் சிலையார் விளக்கவுரை, ப. 235) நிலையில் இவ்விரு மொழிகளுக்குமிடையே இப்பண்பில் கண்ட வேறுபாடுகளையும் எண்ணிய நிலையில் தான் விளிமரபு என்ற தனி இயலையும் உருவாக்கினார் (இது பற்றித் தனியே ஆராயப்படும்). இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம்.

## நுட்பமான ஆக்கம்

இதனால் தான் தொல்காப்பியர் மிக நுட்பமாக, இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால் அறிஞர்கள் கூடத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் இவ்விருமொழிகளின் வேற்றுமையை ஆங்காங்கே மிக நுட்பமாகக் காட்டிச் செல்லுவார்.

## சிவஞானமுனிவர்

மாதவச் சிவஞான முனிவர் எழுத்ததிகார முதல் சூத்திரம் பற்றி எழுதியபோது 'அகர முதல் னகர விறுவாய் முப்பஃதென்ப' எனத் தொல்காப்பியர் கூறுவது 'இம்முப்பதுமேயன்றி வடமொழியிற் கூறும் ஏனையெழுத்துக்கள் ஈண்டு கொள்ளப்படாவென்றற்கு மெனக' (ப. 29) என எழுதியவர் அச்சூத்திரத்தையடுத்துச் சார்பெழுத்துக்கள் பற்றி உடனே அதிகமாகக் கூறுவதன் காரணத்தை விளக்கும் முகத்தான்,

'இனிச் சார்ந்துவரன் மரபின் மூன்றும் அகர முதலியன போலத் தனித்து நிற்றலாற்றாமையின் நெடுங்கணக்கினுட் பெறப்படாவாயினவாகலான் அவற்றை முன்னர் வகுத்தோதுப' (ப. 21) எனக் கூறுவது காணத்தக்கது. வடமொழியில் இல்லாத இவற்றை நன்குக் காட்டவே இவ்வாறு தொல்காப்பியர் சார்பு எழுத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பதை நினைத்துப் பார்க்கவில்லை.

## இன்றும் தொடருகின்றது

அன்று தொல்காப்பியர் சார்பெழுத்துக்களுக்குக் கொடுத்த முக்கியத்துவம் இருபது நூற்றாண்டுகளுக்குப் பிறகும் நீடிக்கின்றது. சார்பெழுத்து பற்றிப் பேசுவதும் எழுதுவதும் தேர்வுத்தாள்களில் முக்கிய இடம் பெறுவதும் உணரத்தக்கது. எதற்காகத் தொல்காப்பியர் முக்கியத்துவம் கொடுத்தார் என்ற காரணம் தெரியாமல் போயினும் அதன் முக்கியத்துவம் மட்டும் நீடிக்கின்றது.

இந்த நிலைக்குக் காரணம் தொல்காப்பியர் மிக நுட்பமான காரணத்தை உள்ளத்தே கொண்டு எழுதியமைதான். தான் எழுதுவது ஒரு சிறந்த அமைப்பியல் இலக்கணம் என்றும் அதுவே தம்முடைய பணி என்றும் எண்ணிய நிலையில் பிறமொழித் தன்மையை அபரிமிதமாகக் கூறுவதும் ஒரு செவ்வியல் இலக்கணத்துக்குப் (Classical grammar) பொருந்தாது என்பதை அவ்விலக்கணப் பேராசான் நன்கு அறிந்திருந்தார். செவ்வியல் இலக்கியங்களும் செவ்வியல் இலக்கணங்களும் அளவுக்கு மிஞ்சிய உணர்வுக்கோ அபரிமிதமான உணர்வுப் பிழம்புகளுக்கோ இடம் தராதவை. எனினும் சொல்ல வேண்டிய செய்திகளை, இலக்கணக்கூறுகளைக் கூற வேண்டியவையும் கூட! இந்த நிலையில் தான் தொல்காப்பியர் தன்னுடைய விதிகளையும் கொள்கைகளையும் வகுத்துச் சிறந்ததொரு இலக்கணத்தை ஆக்கியுள்ளார்.

## வேறு இலக்கணங்கள்

இவ்வாறு உள்ள நிலையில் எழுதப்பட்ட வேறு சில இலக்கண நூல்களை எண்ணிப் பார்த்தால் தொல்காப்பியத்தின் பண்பு நன்கு விளங்கும். மலையாளமொழியின் முதல் இலக்கண நூல் லீலாதிலகம். மலையாள மொழியை மட்டும் பற்றிக் குறிப்பிடாமல் தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் பற்றியும் பலபடக் கூறுவது. இது (சண்முகம், 1992, பக். 28-30; 42-115). மலையாள மொழியின் அமைப்பைக் கூறுவதைக் காட்டிலும் பிற மொழிகள் பற்றியே அதிகம் பேசுவது. அவ்விலக்கணத்தின் நோக்கம் மலையாள மொழி தனிமொழி என்பதைக் காட்டுவதேயாகும். தனிமொழி அந்தஸ்துக்காக ஏங்கும் ஒரு சமுதாய உணர்வைக் கொண்டது.

## மேலும் இதே நோக்கில் ஆய்வு

இதுபோன்றே கன்னட, தெலுங்கு மொழிகளின் இலக்கணங்களையும் ஆராய்ந்தால் இன்னும் பல்வேறு உண்மைகளும் இலக்கணங்களின் பல்வேறு பண்புகளும் தெரியவரும்.

## அமைப்பிலக்கணத்தை உருவாக்குவதே

தொல்காப்பியரின் நோக்கம் சிறந்த ஓர் அமைப்பிலக்கணத்தை உருவாக்குவது என இருந்தாலும் அக்காலச் சூழலில் நிலவி வந்த சமஸ்கிருத மொழிச் சொற்களைப் பயன்படுத்திய முறை, (ஒருவேளை

அம்மொழியும் தமிழ் மொழியும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை அல்லது ஒரே மாதிரியானவை அல்லது சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழ்மொழி தோன்றியது எனச் சிலர் எண்ணியிருக்கலாம்) போன்ற எண்ணங்களை உள்ளத்தில் கொண்டு இவ்விரண்டு மொழிகளும் அடிப்படையான அமைப்பில் வேறுபட்டவை என்பதைக் காட்டும் எண்ணமும் அவருக்கு இருந்தது என்று எண்ணலாம். அதனால் தான் ஆங்காங்கே சில வைப்பு முறைகள், சில ஒலிகளின் பண்பு, இலக்கணக் கூறுகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம், சிலவற்றை அழுத்தமாகக் கூறும் நிலை போன்ற பண்புகளை மட்டுமே கையாண்டு தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறார் இதன் ஆசிரியர். இதனால் தான் இது ஒரு சிறந்த அமைப்பியல் இலக்கணமாகப் பரிமாணித்துள்ளது.

தனி மொழி அந்தஸ்துக்காக ஏங்கி நிற்கும் நிலைக்கும் உயர்மொழி அந்தஸ்துக்காக எழுதப்படும் நிலைக்கும் சம அந்தஸ்துக்காக எழுதப்படும் நிலைக்கும் இடையே வேற்றுமை உண்டு. தொல்காப்பியம் சம நிலை அந்தஸ்தைக் காட்டும் ஒரு இலக்கணமாக உள்ளது. தன்னம்பிக்கையோடும் சிறந்த இலக்கணக் கோட்பாட்டுடனும் எழுதப்பட்ட ஒரு சிறந்த செவ்வியல் இலக்கண நூல். பொருளதிகாரம் ஒரு சிறந்த செவ்வியல் இலக்கிய ஆய்வு. செழித்து வளர்ந்திருந்த இலக்கிய ஆய்வு கொண்டிருந்த மொழி தமிழ் மொழி என்பதையும் செழித்து வளர்ந்திருந்த தமிழ் இலக்கிய மொழிக்கும் செம்மையாகக் கால் கொண்டிருந்த வழக்கு மொழிக்கும் எழுதப்பட்ட இலக்கண நூல் தொல்காப்பியம் என்பதையும் உணரவேண்டும். ஆனால் அதே நேரத்தில் செம்மையாக வளர்ந்திருந்த இன்னொரு மொழியின் உட்பிரிவோ அல்லது இன்னொரு இலக்கியத்தின் மறுபதிப்போ இல்லை தமிழ் இலக்கியம் என்பதையும் மிகமிக நுட்பமாகக் காட்டவிரும்பிய நூல். இவ்வாறு அதிநுட்பமாகத் தன் நூலை ஆக்கிய நிலையில் தான் தொல்காப்பியத்தின் இந்த அடிப்படையில் காணக் கிடக்கும் ஏற்றமும் தெரிய வருகின்றது. எத்தனையோ வேறு பல ஏற்றங்கள் இருந்தாலும் அதன் தோற்றத்திலும் ஒரு ஏற்றம் உள்ளது.

## பார்வை நூல்கள் & கட்டுரைகள்


1. அகத்தியலிங்கம், ச., 'தொல்காப்பியமும் தொடரியலும்', செந்தமிழ்ச் செல்வி, Vol. 42, சென்னை, 1968.

2. அகத்தியலிங்கம், ச. & இராமசுந்தரம், 'தொல்காப்பிய சொல்லதிகார முதல் சூத்திரம்', செந்தமிழ்ச் செல்வி, Vol. 65, மதுரை, 1969.

3. அகத்தியலிங்கம், ச., திராவிட மொழிகள், மணிவாசகர் பதிப்பு, சென்னை, 1975.

4. அகத்தியலிங்கம், ச, தொல்காப்பிய அதிகாரங்களின் முதல் சூத்திரங்களின் முறைவைப்பின் முக்கியத்துவம்', தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 19-11-1996 அன்று வழங்கிய பொழிவு.

5. அகத்தியலிங்கம், ச., 'தொல்காப்பியரின் ஒருங்கிணைந்த பாவியல் கோட்பாடு', தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.

6. அகத்தியலிங்கம், ச, தொல்காப்பியத் தோற்றமும் ஏற்றமும், இலக்கணச் சிந்தனைகள், இலக்கணத் துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1998.

7. இராசாராம், ச, வீரசோழிய இலக்கணக் கோட்பாடு, நாகர்கோவில், 1992.

8. சண்முகம், செவை, மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும், சங்ககாலம், சென்னை, 1989.

9. சண்முகம், செ.வை., மலையாள மொழியின் முதல் இலக்கணம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1992.

10. சண்முகம், செவை, இலக்கண உருவாக்கம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1994.

11. சண்முகம், செ.வை., 'சொல் விளக்கமும் பாகுபாடும் இலக்கண வரலாற்று நோக்கு', தமிழாய்வு, பாரதியார் பல்கலைக்கழகம், 1987.

12. சுப்பிரமணிய சாஸ்திரி, பி.எஸ்., தொல்காப்பியம் எழுத்ததிகாரம், குறிப்புரை, சென்னை 1937.

13. சுப்பிரமணிய சாஸ்திரி, பிஎஸ், சொல்லதிகாரக் குறிப்பு, சென்னை, 1930.

14. சுப்பிரமணியன், ச.வே., இலக்கணத் தொகை - சொல், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1971.

15. சிவஞான முனிவர், தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி, இலக்கணக் கொத்துடன் இணைக்கப்பட்டது, சிதம்பரம்.

16. இலக்கணக் கொத்து, மூலமும் உரையும், சிதம்பரம், 1952.

17. தொல்காப்பியம், எழுத்து, இளம்பூரணம், கழகம், சென்னை, 1979.

18. தொல்காப்பியம் சொல்லதிகாரம், இளம்பூரணம், சேனாவரையம், நச்சினார்க்கினியம், தெய்வச்சிலையார், கல்லாடர், கழகம், சென்னை, 1973, 1973, 1968, 1963.

19. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, கழகம், சென்னை, 1956.

20. நன்னூல் மூலமும் உரையும், சங்கர நமச்சிவாயப் புலவர் இயற்றிச் சிவஞான முனிவர் திருத்திய விருத்தியுரையும், கழகம், சென்னை, 1974.

21. வீரசோழியம், பதிப்பு கா. கோவிந்தராச முதலியார், கழகம், சென்னை, 1970.

22. நேமிநாதம், ரா. இராகவையங்கார் பரிசோதனையுடன், செந்தமிழ் பிரசுரம், மதுரை, 1927.

23. முத்துவீரியம், பதிப்பு கு. சுந்தரமூர்த்தி, கழகம், சென்னை, 1972.

24. சுவாமிநாதம், பதிப்பு செ.வை. சண்முகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1975.

# தொல்காப்பியரின் இலக்கண உருவாக்கக் கோட்பாடுகள்

இரா. திருமுருகன்

---

இலக்கணம் என்பது யாது? மொழியின் இயல்புகளைக் கூறுவது இலக்கணம். மொழியின் அமைப்பு இப்படி உள்ளது; இன்ன பொருள்கள் இன்ன சொற்களால் இன்னவாறு உணர்த்தப் படுகின்றன; இலக்கியங்கள் இன்னவாறு உள்ளன என்று கூறுவது இலக்கணம்.

இலக்கணத்தின் பயன்கள் யாவை? என்ற வினாவுக்கு, 'ஒரு மொழியைத்திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்க உதவுவது' என்று சிலரால் விடை சொல்லப்படுகிறது. திருத்தமாக எழுத என்பது சரி; திருத்தமாகப் பேச என்பது எந்த அளவுக்குச் சரி? இலக்கண அறிவு என்ன, எழுத்தறிவே இல்லாத மக்களின் பேச்சில் கூட இலக்கணம் இருக்கிறதே அது எப்படி? படிப்பில்லாத மக்களில் யாரும்,

'அவன் நேத்து மரமில் ஏறி பழமைப் பறிப்பாள்' என்று சொல்வதில்லை.

'அவன் நேத்து மரத்தில் ஏறி பழத்தைப் பறிச்சான்' என்று இலக்கணத்தோடுதான் பேசுகிறார்கள். பேச்சுவழக்கு என்ற காரணத்தால் சில சொற்கள் வடிவு திரிந்துள்ளன. அவன் என்ற எழுவாய்க்கும், நேற்று என்ற இறந்த காலப்பெயருக்கும் ஏற்றபடி 'பறிச்சான்' என்ற இறந்தகால ஆண்பால் வினைமுற்றையே பயனிலையாகச் சேர்க்கிறார்கள்.

மரம், பழம் ஆகிய மகர வீற்றுப் பெயர்களில் உரிய வேற்றுமை உருபுகளையும், அவற்றுக்கேற்ற அத்துச் சாரியையையும் இலக்கணப்படிச் சேர்க்கிறார்கள். இந்த இலக்கணங்களை அவர்கள் எங்கே கற்றார்கள்? தமிழ் மொழியில் இயல்பாக அமைந்து கிடக்கும் திணை, பால், கால இடைநிலைகள், ஏற்ற பயனிலை, வேற்றுமை உருபுகளைப் பெயர்களின் பின் சேர்த்தல், இடப்பொருளுக்கு இல் உருபையும், செயப்படுபொருளுக்கு ஐ உருபையும் பயன்படுத்துதல் ஆகிய மரபுகள் அவர்களின் பேச்சிலும் அமைந்துள்ளன. எனவே 'இலக்கணம் திருத்தமாகப் பேச உதவுகிறது' என்பதில் அவ்வளவு உண்மையில்லை. ஒவ்வொருவரும் தம் தாய்மொழியைப் பெரும்பாலும் சரியாகவே பேசிக் கருத்தை உணர்த்துகிறார்கள். இந்தத் திறன் அவர்களுக்குத் தாம் வாழும் சூழல் காரணமாக இயல்பாகவே ஏற்பட்டுவிடுகிறது. ஒரு வேளை தமிழ் இலக்கணக்கல்வியானது வேற்று மொழிக்காரர்கள் தமிழைப் பேசக் கற்கும்போது உதவலாம். ஆனால் இலக்கணம் மொழியைத் திருத்தமாக எழுதுவதற்கு உதவுகிறது என்பதே முழுவதும் உண்மையாகும். சரியாக எழுதுவதற்கு முதலில் எழுத்துகளை முறையாக எழுதக் கற்கவேண்டும்; கருதிய பொருள் தருமாறு சொற்றொடர்களை எப்படி அமைக்கவேண்டும் என்பதைக் கற்க வேண்டும். எனவே இலக்கணத்தின் பயன்களில் ஒன்று மொழியின் எழுத்து வடிவத்தின் இயல்புகளைக் கற்க உதவுவது என்று கூறலாம்.

இலக்கணத்தின் மற்றொரு பயன், மொழியின் மரபுகளை இன்னவை என அறிந்து அவற்றை அழியாமல் பாதுகாக்க உதவுவது என்பதாகும். இனிய ஒலியமைப்புகளும் சொற்களும், கருதிய பொருளைத் தெளிவாக உணர்த்தும் தொடரமைப்புகளும் கண்டபடி சிதைந்து போகாமல், ஒருதரப்படுத்தப்பட்டு வழங்கும் பொதுவான எழுத்து மொழியின் கட்டமைப்பைப் பாதுகாக்க இலக்கணம் பயன்படுகிறது. பொது எழுத்து மொழி என்பது, வட்டார வேறுபாடுகளை உடையவர்க்கும் தமிழ் கூறு நல்லுலகம் எங்கும் ஒருபடித்தாக விளங்கிக் கொள்ளக்கூடிய வழக்கே. 'பொது எழுத்து மொழியானது ஒரு பண்பாட்டின் பரப்பு முழுவதையும் ஒன்றுபடுத்தும் ஆற்றல் மிக்கது' என்பார் கிளீசன் என்னும் மொழியியல் அறிஞர்.[1]

இந்த எழுத்து வழக்கே இலக்கணம் எடுப்பதற்கும் பாதுகாப்பதற்கும் உரியது; பேச்சு வழக்கன்று. காரணங்கள்:

அ) பேச்சுவழக்கு வடிவங்கள் இலக்கணத்துக்கு ஏலாதவை. வர்ரியா? தர்ரேன், கிர்ரென்று என்றெல்லாம் வரும் தனிக்குறிலை அடுத்த ரகரவொற்றை இலக்கணம் விலக்குகிறது. ('அவற்றுள், ரகார

ழகாரம் குற்றொற்றாகா, மொழிமரபு 16) டக்கென்று, ரொம்ப, லொட்டு லொசுக்கு என்பன போன்ற மொழி முதல் வாரா எழுத்துள்ள சொற்களை இலக்கணம் ஏற்பதில்லை.

ஆ) வட்டாரப் பேச்சுவழக்கு வேறுபாடுகளுக்கு இலக்கணம் இடந்தருவதில்லை. வட்டாரந்தோறும் வழங்கப்படும் கிது, கீது, கீந்து, இருக்கு, இர்க்குது என்ற வழக்குகளுக்கு எழுத்து மொழி 'இருக்கிறது' என்ற ஒரே பொது வடிவத்தைத் தருகிறது. போச்சி, போயிருச்சி, பூட்டு, பூட்டுது, போயிட்டுது ஆகிய பேச்சு வடிவங்களுக்குப் பொதுவாக எழுத்துவடிவில் உள்ளது 'போய்விட்டது' என்பது.

இ) மொழித்திறன் இல்லாத எழுத்தாளர்களின் பிழை வழக்குகள் எழுத்து வழக்கில் இருந்தாலும் இலக்கணம் அவற்றை விலக்குகிறது. 'கிணறில் விழுந்தான்', 'பாலாறில் வெள்ளம்', 'காத்தாட லாத்த போனான்', 'பல்ப்பொடி', 'முள்ச்செடி' 'பலது இருக்கின்றன' என்பன போன்ற வழக்குகள், அவை எத்தனைபெயர் போன எழுத்தாளரால் எழுதப்பட்டாலும், எவ்வளவு மிகுதியாக எழுதப்பட்டாலும் இலக்கணத்தில் இடம் பெறுவதில்லை.

இலக்கணம், இலக்கியம் படைப்போர்க்கு வழிகாட்டியாக இருந்து உதவுகிறது என்பது அதன் இன்னொரு பயனாகும். ஒரு மொழியில் இலக்கியம் படைப்போர்க்கு அம்மொழியின் பழைய மரபுகளின் அறிவு இன்றியமையாதது. பேருந்து, மகிழுந்து முதலிய வண்டிகளில் உள்ள பின்புறங்காட்டும் சிறிய கண்ணாடியில் சாலையின் பின்புறத்தைப் பார்த்துக்கொண்டால் தான், முன்புறத்தில் சரியாக வண்டியைச் செலுத்த முடியும் என்ற கருத்தைக் கூறியிருக்கிறார் கார்க்கி. பழைய மரபுகளில் மாற்றம் செய்ய முயல்வோரும் அவற்றை அறிந்து கொள்வது இன்றியமையாதது.

இலக்கண உருவாக்கத்தின் தேவை: ஒரு மொழியின் இலக்கணத்தை உருவாக்க வேண்டும் என்ற தேவை எப்போது எழுகிறது?

> பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> அய்யர் யாத்தனர் கரணம் என்ப (தொல்.கற்.4)

என்பதுபோல், மொழியில் வரம்பழிவுகள் பெருகி, அதன் நல்லியல்புகள் சிதையும் நிலை நேரும்போது பொறுப்புள்ள அறிஞர்கள் மொழியின் மரபுகளை எடுத்துக்காட்டி அவற்றைப் பாதுகாக்க முயல்வார்கள். தொல்காப்பியம் தோன்றவும் இத்தகைய தொரு தேவை ஏற்பட்டிருக்க

வேண்டும். வானொலி, தொலைக் காட்சி, திரைப்படம், இதழ்கள் முதலியன உலகில் தமிழர்கள் வாழுமிடமெங்கும் நாள்தோறும் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு இன்றுபோல் இல்லாத அந்தக் காலத்தில் வட்டார வழக்குகளும் மொழிச் சிதைவுகளும் ஏற்படும் வாய்ப்பு மிகுதி. அவரவரும் ஆங்காங்குள்ள மக்களின் மொழிவழக்குகளை எழுத்து வழக்கில் பயன்படுத்தினால் ஒரு மொழி அனைவர்க்கும் பொருளைத் திரிபின்றி உணர்த்தும் இயல்பை இழந்துவிடும். இந்நிலை நேராமல் தடுக்கும் வகையில் பொது எழுத்து மொழியின் இயல்புகளைத் தொகுத்து நினைவூட்டவும், அவற்றை மீறுவதைக் கண்டிக்கவும் வேண்டிய தேவை எழுகிறது.

**இலக்கண உருவாக்கம் குறித்த முன்னோர் கருத்துகள் :** இலக்கண உருவாக்கத்திற்குரிய களமும், முறையும் குறித்து நம் முன்னோர்களின் கருத்துகளை அடியிற் காணலாம்:

1. **பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்**
   **வினையில் தோன்றும் பாலறி கிளவியும்**
   **மயங்கல் கூடா தம் மர பினவே** (தொல்.கிளவி. 11)

2. **உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்**
   **வழக்கு வழிப்படுதல் செய்யுட்குக் கடனே**
   (தொல்.பொருளி. 21)

3. மாற்றருஞ் சிறப்பின் மரபியல் ("மரபு. 1)

4. முடியவந்த அவ்வழக்குண்மையின்
   கடியலாகா கடனறிந் தோர்க்கே (" 69)

5. இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
   திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும் (" 90)

6. மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
   மரபுவழிப்பட்ட சொல்லி னான (" 91)

7. மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும் (" 92)

8. வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
   நிகழ்ச்சி அவர்கட் டாக லான (" 93)

9. மரபுநிலை திரியா மாட்சிய வாகி
   உரைபடு நூல் தாம் இருவகை இயல
   முதலும் வழியும் என நுதலிய நெறியின (" 94)

10. கீழ்மக்கள் வழக்குகள் இலக்கணப் படைப்புக்கு ஏற்றன அல்ல என்பதைப் பேராசிரியர், 'காலந்தோறும் வேறுபட வரும் அழி வழக்கும், இழிசினர் வழக்கும் முதலாயினவற்றுக் கெல்லாம் நூல் செய்யின் இலக்கணம் எல்லைப்படாது இகந்தோடும்' (தொல். மரபு 94 உரை) என்பார்.

11. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே (பிங்கலந்தை)

12. எள்ளினின் றெண்ணெய் எடுபடும் அதுபோல்
இலக்கியத்தினின் றெடுபடும் இலக்கணம்

(பேரகத்தியத்திரட்டு)

13. இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்

(நன்னூல் 141)

14. எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே (" 388)

15. 'இலக்கண நூலாவது உயர்ந்தோர் வழக்கத்தையும் செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி எழுதுதற்கும் பேசுதற்கும் கருவியாகிய நூலாம்' (ஆறுமுகநாவலர்)

16. 'உருபு புணர்ச்சியானது பொருட்புணர்ச்சியை ஒத்து வருதலும், அதின் வேறுபட்டு வருதலும் சான்றோர் ஆட்சியால் அறிந்து கொள்க'

(இலக்கணச் சுருக்கம், ஆறுமுகநாவலர் ப.74)

இலக்கண உருவாக்கம் குறித்த இக்கால அறிஞர் கருத்துகள்: இற்றைக்கு முப்பதாண்டுக்கு முன் வெளியிடப்பட்ட இக்கால ஆங்கில இலக்கணம் (A Grammar of Contemporary English) என்ற ஆங்கில நூலின் உருவாக்கம் குறித்து அதில் கூறப்பட்டுள்ள கருத்துகள் இங்கே நோக்கத்தக்கன.

> இவ்விலக்கணம் உலக முழுவதிலும் ஆங்கிலம் பேசும் நாடுகளில் உள்ள கற்றோர் பயன்படுத்தும் தரமான ஆங்கிலத்தை நிலைக்களமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. எழுத்துவழக்கு - பேச்சு வழக்குகள், மரபுசார்ந்த - மரபு சிதைந்த வழக்குகள், அமெரிக்க - இங்கிலாந்து வழக்குகள் ஆகியவற்றின் இயல்புகள் கவனத்துடன் ஆராயப்பெற்று அவற்றின் வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப் பெற்றன. ஏற்கெனவே இருக்கும் மரபிலக்கணங்கள், இக்கால

> மொழிநிலை குறித்த இந்நூலாசிரியர்களின் ஆய்வு முடிவுகள் ஆகியன அடிப்படைகளாகக் கொள்ளப்பெற்று இவ்விலக்கணம் உருவாக்கப்பெற்றது[2]

மேலும் 'இலக்கண முடிபுகள் ஆழமானவையாகவும், ஒரு மொழியின் கால அடைவிலான மாற்ற வளர்ச்சிகளை எடுத்துக் காட்டுவனவாகவும் இருக்கவேண்டும்; கற்றோர் வழக்குகளில் கடந்த 50 ஆண்டுகால மொழியியல்புகளையும் கருத்தில் கொண்டனவாகவும் இருத்தல்வேண்டும்' என்கிறது அவ்விலக்கணம்.

இலக்கண உருவாக்கம் குறித்து நம் முன்னோர் கூறியுள்ள கருத்துகளை, பிறமொழியினர் இலக்கண உருவாக்கம் குறித்து இன்று கூறும் மேற்கண்ட கருத்துகள் பெரிதும் ஒத்திருத்தல் காண்க.

**தொல்காப்பிய இலக்கண உருவாக்கம் :** தொல்காப்பியர் எவ்வாறு தொல்காப்பியத்தை உருவாக்கினார் என்பது குறித்து அந்நூலுக்குப் பனம்பாரனார் கூறும் பாயிரம் பின்வருமாறு கூறுகிறது:

> **வடவேங்கடம் தென்குமரி**
> **ஆயிடைத்**
> **தமிழ்கூறு நல்லுலகத்து**
> **வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்**
> **எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்**
> **செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு**
> **முந்துநூல்கண்டு முறைப்பட எண்ணிப்**
> **புலம்தொகுத் தோனே போக்கறு பனுவல்**
> **நிலம்தரு திருவின் பாண்டியன் அவையத்து**
> **அறம்கரை நாவின் நான்மறை முற்றிய**
> **அதங்கோட்டு ஆசாற்கு அரில்தபத்தெரிந்து**
> **மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி**
> **மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த**
> **தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப்**
> **பல்புகழ் நிறுத்த படிமை யோனே**
>
> (சிறப்புப் பாயிரம், பனம்பாரனார்)

இப்பாயிரத்தில் தெரியவரும் செய்திகள் வருமாறு:

அ) தமிழ் வழங்கும் நிலப்பரப்பில் காணப்படும் மொழியியல்புகளையெல்லாம் தொகுத்தார்.

ஆ) உலகவழக்கு செய்யுள் (இலக்கிய) வழக்கு ஆகிய இரண்டையும் ஆராய்ந்தார்.

இ) தமிழ் நிலத்தில் தோன்றி நிலவும் முந்து நூல்களை ஆராய்ந்தார்.

ஈ) அவற்றில் காணப்பட்ட எழுத்து, சொல், பொருள்களின் இயல்புகளை முறைப்படி எண்ணித் திரட்டினார்.

உ) எழுத்துமுறை குறித்துப் பிறர் நூல்களில் காணப்பட்ட மயக்கங்களைக் களைந்தார்.

ஊ) அப்போதிருந்த மொழியியற் பேரறிஞர் அதங்கோட்டாசான் முதலிய அறிஞர்கள் நிறைந்த நிலந்தரு திருவிற்பாண்டியன் அவைக்களத்தில் அரங்கேற்றி, அவர்களின் கருத்துகளின் அடிப்படையில் மேலும் நூலைச் செம்மை செய்து தொல்காப்பிய நூலை வெளியிட்டார்.

**இலக்கண உருவாக்கத்தில் தொல்காப்பியர் கடைப்பிடித்த அமைப்பு முறைகள் :** மேற்கண்டவை தொல்காப்பியம் எப்படி உருவாக்கப்பட்டது என்பதற்கான புறச்சான்றுகள். இனித் தொல்காப்பியரின் உருவாக்கக் கோட்பாடுகளுக்குக் கிடைக்கும் அகச்சான்றுகளைக் காண்போம்.

க. இலக்கண விதிகளைத் தாம் இடும் கட்டளைகளைப் போலத் தொல்காப்பியர் கூறவில்லை. அவை முன்னோர் கண்டு கூறிய முடிபுகளே என்பதுபோல் பல இடங்களில் கூறுகின்றார். அப்படிக்கூறும் நூற்பாக்கள் தொல்காப்பியத்தில் நான்கில் ஒரு பங்காக உள்ளன. முந்தைய புலவர்களை அவர், நல்லிசைப் புலவர், உயர் மொழிப்புலவர், தொன்மொழிப்புலவர், நூனவில் புலவர், வாய்மொழிப்புலவர், யாப்பறிபுலவர், நுனித்தகு புலவர், நுணங்கு மொழிப்புலவர் என்றெல்லாம் மிகவும் மதிப்புடன் சுட்டுகின்றார். அத்தகு புலவர்களை என்ப, மொழிப, கூறுப, என்மனார், மொழிமனார், யாத்தனர், சொல்லினர், எண்ணினர், நேர்ந்தனர், நேரார், வகுத்தனர், வரையார், உரைத்தனர், கிளப்ப, கிளவார் என்று குறிப்பிடுகின்றார். மேலும் அப்புலவர்களை அவர் வினையாலணையும் பெயராக, உணர்ந்திசினோர், உணருமோர், உணர்ந்தோர், அறிந்திசினோர், தெரியுமோர், தெளியுமோர், புலமையோர், புலனுணர்ந்தோர், சிறந்திசினோர், இயல்புணர்ந்தோர், குறியறிந்தோர், வயங்கியோர், வகுத்துரைத்தோர், வல்லோர் என்றும் சுட்டுகின்றார்.

உ. உலகவழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவழக்கிலும் காணப்பட்ட இயல்புகளில் தக்கனவற்றைத் தொகுத்துரைக்கின்றார். சான்றுகள்:

செய்யுள் இறுதிப் போலும் மொழிவயின்
னகார மகாரம் ஈரொற்றாகும் (தொல்.எழுத்து. 51)

நீட வருதல் செய்யுளுள் உரித்தே ( " 208)

முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே
(தொல்.சொல்.39)

ஆ ஓ ஆகும் பெயருமார் உளவே
ஆயிடன் அறிதல் செய்யுளுள்ளே ( " 192)

இவைபோல் தொல்.எழுத்து. நூற்பாக்கள் 214, 235, 238, 259, 262, 289, 306, 317, 357, 482, 484 தொல்.சொல்.நூற்பாக்கள் 18, 51, 104, 193, 208, 391, 456 ஆகியவற்றிலும் செய்யுள் வழக்குகள் கூறப்படுவதைக் காணலாம். உலகவழக்குகளுக்கு,

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய உயர்சொற் கிளவி (தொல்.சொல்.27)

ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கினுள்ளே ( " 22)

என்ற நூற்பாக்களையும் இவற்றைப்போல் எழுத்ததிகாரம் 481, 484 ஆகிய எண்ணுள்ள நூற்பாக்களையும் காட்டலாம். இவை உலக வழக்குப்பற்றியன. மேலும்

ஒல்வழியறிதல் வழக்கத்தான

வழக்கியன் மருங்கில் உணர்ந்தனர் ஒழுக்கல்

நெறிப்படவழங்கிய வழிமருங்கென்ப

வழக்கொடு சிவணிய வகைமையான

வழக்கென வழங்கலும் பழித்தன்றென்ப

என்று கூறும் இடங்களும் உண்டு. இங்கு வழக்கு என்பது இலக்கணம் இல்லதாயினும் சான்றோர் வழக்கிலும் புகுந்து அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை என்றறிதல் வேண்டும்.

**உ. இலக்கணங்களின் முறைவைப்பு :** 'எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமேயெனின் இவைபெற்றும் பெற்றிலேம்' என்று பாண்டியன் கவன்றதாக இறையனார் களவியலுரை கூறும். இது பொருளிலக்கணம் கற்பதற்காகவே எழுத்து, சொல்லிலக்கணங்கற்பது என்ற உண்மையைக்கூறுகிறது. தொல்காப்பியரும் அம்முறையிலேயே எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பொருளதிகாரம் என வைத்துள்ளார். தொல்காப்பியம் முழுவதும் பொருளிலக்கணம் கூறும் நோக்கத்தில் இயற்றி அமைக்கப்பட்டதே.

எழுத்ததிகாரப்பொருள்கள் : 'எழுத்தென்றது தன்னையே உணர்த்தியும் சொற்கு இயைந்தும் நிற்கு ஓசையை' என்பார் நச்சினார்க்கினியர். 'இதனைக் காற்றின் குணமே என்றல் இவ்வாசிரியர் கருத்து' என்றும் அதைத் தொல்காப்பியர் கருத்தாகவே கூறுவர்.[3] தொல்காப்பியர் 'ஒலிவடிவமாய் உள்ளதே மொழி' என்னும் கருத்தினராதல் வேண்டும். அதனால்தான் எழுத்து முப்பத்துமூன்று என்று கூறியவர் அவற்றின் ஒலி வடிவுபற்றியே முதலில் கூறுகின்றார்.

எழுத்ததிகாரத்தில் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் ஆகிய மூன்று இயல்களில் எழுத்துகளை அறிமுகப்படுத்திப் பின்வரும் ஆறு இயல்களிலும் புணர்ச்சிகளையே கூறுகின்றார். இதிலிருந்து எழுத்ததிகாரம் புணர்ச்சி கூற எழுந்ததே என்று கருதத் தோன்றுகிறது.

சொல்லதிகாரம் எழுத்துகள் பொருள் தரும் முறையில் சொற்களாகும் வகையைக் கூறுகிறது. அது தொடர்களில் இடம்பெறும் சொற்களின் வகைகளாகப் பெயர், வினை, இடை, உரிச்சொற்களையும், பெயர்கள் ஏற்கும் வேற்றுமைகளையும் விளக்கி எஞ்சிய பொருள்களை எச்சவியலில் கூறுகிறது.

ச. மொழிவழக்கில் புதிய வரவுகளுக்கு இடங்கொடுத்து இலக்கணங்கூறுதல் தொல்காப்பியர் போக்காக உள்ளது.

இடையியலில் புறனடையாக,

> கிளந்த அல்ல வேறு பிற தோன்றினும்
> கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே
>
> (இடை_48)

என்று கூறுவர்.

இதுபோல், உரியியலில் உரிச்சொற்களை உணர்த்தி இவற்றிற்கு இனிவேறு பொருள்கள் தோன்றினும் கொள்க என்கிறார்.

**கூறிய கிளவிப் பொருள் நிலை அல்ல**
**வேறுபிற தோன்றினும் அவற்றொடு கொளலே**
(உரி. 92)

எச்சவியலில்,

**கடி சொல் இல்லை காலத்துப் படினே** (எச்ச.56)

என்று கால அடைவில் தோன்றும் புதிய சொற்களுக்கெல்லாம் இடமளித்து நூற்பாச் செய்துள்ளார்.

நூலின் இறுதியில்,

**சொல்லிய அல்ல பிற அவண வரினும்**
**சொல்லிய வகையால் சுருங்க நாடி**
**மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு**
**இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்**
**நுனித்தகு புலவர் கூறிய நூலே** (மரபு. 111)

என்று கூறித் தமிழிலக்கணம் எப்போதும் சற்றும் நெகிழ்ந்து கொடுக்காமல் சட்டம்போல் இருந்ததில்லை என்பதற்குச் சான்றாக நிற்கின்றார்.

ரு. தமிழில் வந்துபுகும் பிறமொழிச்சொற்களால் தமிழின் ஒலிமரபு கெடாதவாறு போற்றி இலக்கணம் செய்தார்.

**வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ**
**எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே** (எச்ச. 5)

**சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்** ( " -6)

என்ற நூற்பாக்களால், பிறமொழிச் சொற்களைச் செய்யுட் சொல்லாக ஏற்கலாம்; ஆனால் பிறமொழி ஒலிகளை ஏற்க இயலாது. அவ்வொலிக்குரிய எழுத்துகள் தமிழ் ஒலி மரபின்படி மாறி வந்தால் ஏற்கலாம் என்கிறார்.

கூ. நெறிமுறைகூறும் இலக்கணமாயினும் அதனை அழகுணர்வோடு இலக்கியம் போல அமைத்துள்ளார்.

திருவள்ளுவர் அறங்களைக் கூறும் திருக்குறளில் அதிகாரத்துக்குப் பத்துக் குறட்பாக்களை அமைத்ததுபோலத் தொல்காப்பியரும் அதிகாரத்துக்கு ஒன்பது இயல்களாக நூலை அழகுற அமைத்துள்ளார். இலக்கண விதிகளாயினும் இலக்கியங்களில் காணும் பாடல்களைப்போல் தொடை நயம் சிறக்கப்பாடியுள்ளார். சான்று,

மகரத்தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன (மொழிமரபு 49)

இம்மூன்றடிகளும் ஒரே எதுகையைப் பெற்று ஒலிநயஞ் சிறந்து விளங்குவன காண்க. இதுபோன்ற அடியெதுகைகளையும்,

குற்றியலுகரமும் அற்றென மொழிப (புணரி 3)

என்பது போன்ற பொழிப்பெதுகைகளை உடைய அடிகளையும் தொல்காப்பியத்தில் நிரம்பக் காணலாம்.

முடிவு : இதுகாறும் கண்டவாற்றால், இன்றைய மேனாட்டு மொழியறிஞர்கள் அறிவியல் முன்னேற்ற அடிப்படையில் ஆய்ந்து கூறும் எழுத்துச் சொல்லிலக்கண உருவாக்கக் கோட்பாடுகளுடன், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியர் கொண்டிருந்த இலக்கண உருவாக்கக் கோட்பாடுகளை ஒப்பிடும்போது அவற்றிடையே பல வகையிலும் வியக்கத்தக்க ஒற்றுமைகள் இருப்பது புலனாகிறது. இன்றைய தமிழுக்கு இலக்கணம் உருவாக்குவோரும் பின்பற்றத்தக்கதாகத் தொல்காப்பியரின் இலக்கண உருவாக்கக் கோட்பாடுகள் அமைந்துள்ளன.

## குறிப்புகள்

1. 'A Common written language is a powerful unifying force in a cultural area' - H.A. Gleason, Jr. **An Introduction Descriptive Linguistics,** Sixth Indian Reprint 1979, p.429.

2. 'A Grammar of Contemporary English concentrates on the standard English used by educated people in all English speaking countries, with careful attention to the features distinguishing spoken and written, formal and colloquial, American and British usage. Jointly based on the accumulated, grammatical tradition and on the authors' own researches in contemporary English' - **A Grammar of Contermporary English,** by Randolph Quick, Sidney Greenbaum, Geoffrey Lcech and Jan Svartvik, Longman 18th Impression 1989 (First publication:1972).

3. தொல்காப்பியர், எழுத்ததிகாரம், சிறப்புப் பாயிரம், நச்சினார்க்கினியர் உரை, கணேசையர் பதிப்பு 1952, பக்கம் கூ

# தற்கால ஒலியியல் நோக்கில் தொல்காப்பியரின் பிறப்பியல் கோட்பாடு

சு. நடனசபாபதி

---

மொழியியலும், இலக்கணமும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய துறைகள். மேலை நாட்டு அறிஞர்களையும், கீழை நாட்டில், குறிப்பாக இந்திய நாட்டில் தொல்காப்பியரையும், பாணினியையும் கண்ட துறை இலக்கணத்துறை. இவ்வறிஞர்கள் கண்ட கொள்கைகளும் கோட்பாடுகளுமே இலக்கணத்துறையின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கருவாகவும் உருவாகவும் வேராகவும் விதையாகவும் நின்றன.

இலக்கணத்துறையில் மொழியியலின் தாக்கத்தைச் சிறந்த ஒரு திருப்புமையமாகக் கருதலாம். இத்துறை மொழி ஆராய்ச்சியில் ஒரு புதிய பாதையை வகுத்தது எனக் கருதலாம். இலக்கண உலகில் புதியதொரு பார்வையையும் அறிவியல் நோக்கத்தையும் புகுத்தி நிற்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஒலியியல், ஒலியனியல், சொல்லியல், தொடரியல், பொருளியல் எனப்பாகுபடுத்தி அக்குவேறு ஆணிவேறாக மொழிகளின் அமைப்பை ஆராய்தல் போன்ற பல்வேறு நிலைகளில் மொழியியல் செய்துவரும் பணிகள் பல.

இத்தகைய பணிகளுடன் மொழியியல் கோட்பாடுகளைப் பல்வேறு மரபு இலக்கணங்களில் கண்டு அவற்றின் நிறைகுறைகளை ஆராய்தலும் ஒரு பணியாகும். தங்கள் நுண்மாண் நுழைபுலத்தால் எத்தனையோ உண்மைகளைக் கூறிச் சென்ற மரபிலக்கண

ஆசிரியர்களின் எண்ணங்களை அறிவியல் அடிப்படையில் காரணகாரியங்களுடன் மொழியியல் கண்ணோட்டத்துடன் விளக்கிச் சொல்வது தலையாய பணியாகும். தமிழ்மொழி சிறந்ததொரு இலக்கணப் பாரம்பரியத்தை உடையது. அதில் பழமை மிக்க, தலைசிறந்த இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இக்கட்டுரையில் தொல்காப்பியரின் பிறப்பியல் கோட்பாட்டினைத் தற்கால ஒலியியல் நோக்கில் வெளிக்கொண்டுவர முயற்சி செய்யப்படுகிறது.

தொல்காப்பிய எழுத்திகாரம் நூன்மரபு மொழி மரபு பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப்புணரியல் என்று ஒன்பது இயல்களால் விவரிக்கப்பட்டுள்ளது. நூன்மரபு, மொழிமரபு என்ற முதல் இரண்டு இயல்களையும் எழுத்தியல் என்றும் பிறப்பியலைத் தனி இயலாகக் கொள்ளலாம் என்றும், மீதமுள்ள கடைசி ஆறு இயல்களையும் புணரியல் என்றும் மூன்று இயல்களாக எழுத்ததிகாரத்தைப் பிரிப்பது அவருடைய இலக்கணக்கோட்பாட்டை விளக்குவதாக அமையும் என்று செ.வை. சண்முகம் (30:1980) கருதுகிறார்.

## பொதுமை பிறப்பியல்

நம் உடலில் பாதிக்கும் மேற்பட்ட பகுதி பேச்சொலிகளை உண்டாக்க உதவுகின்றன. அதாவது தலையிலிருந்து வயிறு வரை அமைந்துள்ள உறுப்புகள் பேச்சொலிகளை எழுப்ப உதவுகின்றன. அவை ஒவ்வொன்றின் தொழிலுக்கும் ஏற்ப அவற்றை முறையே 1. உயிர்த்தலுக்கு உதவுவன 2. குரல் எழுப்ப உதவுவன 3. ஒலித்தலுக்கு உதவுவன என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவை முறையே நெஞ்சு, தொண்டை, தலை ஆகும். அதாவது முதல் வகையைச் சேர்ந்த உறுப்புகள் நெஞ்சில் உள்ளன. இவை மூச்சுக்காற்று உள்ளும், புறமும் செல்ல உதவுகின்றன. இந்தக் காற்றின் மூலந்தான் நாம் பேச்சொலிகளை உண்டாக்குவதற்கான சக்தியைப் பெறுகின்றோம். இரண்டாம் வகையைச் சேர்ந்த உறுப்புக்கள் தொண்டையில் அமைந்துள்ளன. இவை பெரும்பாலும் பேச்சொலிகளுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட அடிப்படை சக்தியைக் கொடுக்கின்றன. மூன்றாம் வகையைச் சேர்ந்த உறுப்புகள் தலையில் அமைந்துள்ளன. இவைதாம் பேச்சுக்குழலின் வழியே செல்லும் காற்றில் அங்கமைந்த பேச்சுறுப்புக்களினால் மாற்றங்களை விளைவித்துப் பல்வகையான ஒலிகளை உருப்பெறச் செய்கின்றன. இக்கருத்து தற்கால ஒலியியலாளரின் கொள்கைகளோடு ஒத்திருப்பது மிகவும் வியப்பளிக்கின்றது.

## பேச்சுறுப்புக்கள்

தொல்காப்பியர் பேச்சுறுப்புக்களாக எட்டு உறுப்புகளைக் கூறுகின்றார்.




மேலே கண்ட எட்டு உறுப்புக்களையும் தொல்காப்பியர் காற்றறைகள், ஒலியெழுப்பிகள் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றார். காற்றறைகள் மூச்சோட்ட இயக்க (air-stream)த்தை உண்டாக்குவதற்கோ தம்மிடம் உள்ள ஒலியுறுப்புக்களை இயக்கி ஒலிகளை உண்டாக்குதற்கோ பயன்படுகின்றன. நெஞ்சறை, தொண்டையறை, வாயறை, மூக்கறை ஆகியவை காற்றறைகளாகும்.

ஒலியெழுப்பிகள் (articulators) தலையில் அமைந்துள்ளன. தொல்காப்பியர் இவற்றை வரிசைப்படுத்தியுள்ள முறையை (தொல்.83) நோக்கும்போது அவர் ஒரு சிறந்த ஒலியியல் வல்லுநராகவும் உடற்கூற்றியல் அறிஞராகவும் விளங்குவதை அறியலாம். பல் என்று அவர் குறிப்பிடுவது மேற்பல்தான். ஏனெனில் மேற்பல்லும் கீழுதடும் சேர்ந்து வ் (தொல். 98) ஒலியை உண்டாக்குகின்றன. இதழ்கள் ப், ம், உ, ஒ. (தொல். 87,97) போன்ற ஒலிகளை உண்டாக்க உதவுகின்றன. ஒலி எழுப்பிகளிலேயே அதிகமான ஒலிகளை உண்டாக்க உதவுவது நா. இதனையடுத்துத் தொல்காப்பியர் மூக்கைக் குறிப்பிடுகின்றார். பிற காற்றறைகளிலிருந்து பெறும் சக்தியைக் கொண்டு வெவ்வேறு ஒலிகளை உண்டாக்க உதவுகின்றது. பல், இதழ், நா, அண்ணம் என்ற நான்கு ஒலியெழுப்பிகளினால் உண்டான ஒலிகளை வலிபெறச் செய்து காற்றறைபோல வாயறையின் உதவியாலேயே ஒலிகளை உண்டாக்குவதால் ஒலியெழுப்பி போலச் செயல்படும் ஒலியூக்கியாகிய மூக்கறையை ஒலியெழுப்பிகளோடு வைத்த நுண்மை பாராட்டத்தக்கது. இவ்வரிசையின் கடைசி உறுப்பு அண்ணமாகும்.

## பிறப்பாக்கம்

தற்கால ஒலியியலில் கண்டபடி, தொல்காப்பியரும் பேச்சொலிகளை உண்டாக்குவதற்கு இன்றியமையாது தேவைப்படும்

மூச்சோட்டம், ஒலியெழுப்பிகள், ஆக்கம் ஆகிய மூன்றினைப் பற்றியும் விளக்குகின்றார். ஒலிகள் பிறக்கும் இடமும் முயற்சியும் (தொல்.83) பற்றிப் பேசும் தொல்காப்பியர் ஒரே இடத்தில் பிறக்கும் ஒலிகள் அவற்றின் ஆக்கம் (தொல்.93) வேறுபடுவதற்கு ஏற்ப வேறுபட்ட ஒலிகளாகத் தோன்றுகின்றன என்று மேலும் விளக்குகின்றார்.

வாயறையில் உள்ள இயங்கு உறுப்புகள் அவற்றோடொத்த இயங்கா உறுப்புக்களோடு இணைய ஒலிகள் பிறப்பதற்கான முயற்சி (ஆக்கம்) வெவ்வேறாக அமைகிறது. இதன்மூலம் ஒலிகள் இயல்பாகப் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுகிறார். இவ்வாறு பலவொலிகளையும் பிறப்பிக்கும் இயங்குறுப்புகள் இயங்கா உறுப்புக்களை அணுகும் விதத்தைத்தான் தொல்காப்பியர் 'பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல' என்று துல்லியமாக இந்த நூற்பாவில் கூறுகின்றார்.

தொல்காப்பியரின் கருத்தின்படி பெரும்பாலும் அனைத்து ஒலிகளுமே வாயறையில்தான் பிறக்கின்றன (தொல்.85-98). குரலொலியும் (தொல்.84) மூக்கறை ஒலியும் (தொல்.100) தான் முறையே தொண்டை, மூக்கறை ஆகியவற்றில் பிறக்கின்றன. தொண்டையில் உண்டாகும் குரலொலி வாயறையின் அமைப்பிற்கேற்ப மாற்றமடைந்து பலவகை உயிரொலிகளாக உருவாகின்றன. குரல்வளை மடல்களின் நிலையான இசையே உயிரொலிகளைத் தோற்றுவிக்கின்றது. இது அனைத்து உயிரொலிகளுக்கும் பொதுவானது (தொல்.84).

பேச்சொலிகளை எழுப்ப உதவும் அடிப்படை சக்தி (source of energy) நுரையீரல் (நெஞ்சு) காற்றால் உண்டாகின்றது என்றும், இக்காற்று குரல்வளையின் வழியே செல்லும்போது குரல்வளை மடல்களால் குரல் உண்டாகின்றதென்றும், ஒலிகள் உண்டாவதும் ஊக்கப்படுவதும் வலிபெறுவதும் வாய், மூக்கறை (தலை)களால் நிகழ்கின்றன என்றும் அறிகின்றோம். இதனைத்தான் தொல்காப்பியர் 'உந்திமுதலா....... வேறுவேறியல' என்று கூறுகின்றார்.

**உயிரொலி**

உயிரொலிகள் பிறக்கும் முறை பற்றி விளக்குகின்ற தொல்காப்பியம் (தொல். 85,86,87) தற்கால ஒலியியல் அறிஞர்கள் உயிரொலிகளை வகைப்படுத்திக் கையாளும் நா எழுச்சி (Height of the tongue), நாவின் முந்துறு நிலை (Advancement of the tongue), இதழின் நிலை (Lip position) போன்ற அடிப்படைகளை ஒத்துள்ளது வியப்பை அளிக்கின்றது.

## மெய்யொலி

வாயறையில் உள்ள ஒலி எழுப்பிகள் இயங்கி மூச்சுக்காற்றின் போக்கில் தடையை விளைவிப்பதால் வல்லின, இடையின ஒலிகள் பிறக்கின்றன (தொல். 89-99) என்றும் வல்லொலியின் பிறப்பு முயற்சியோடு மூக்கறையில் விளையும் ஒலியூக்கமும் (resonance) சேர்ந்து, அதாவது வாயறையில் அடைபட்ட காற்று மூக்கின் வழியே வெளியேறும்போது மெல்லொலிகள் பிறக்கின்றன (தொல். 100) என்றும் தொல்காப்பியர் மெய்யொலிகளின் பிறப்பை விளக்குகின்றார். ஒலிப்புமுறை கலைச் சொற்களைத் தனித்தனியாக எடுத்துத் தொல்காப்பியர் வரையறுக்கவில்லையென்றாலும், அவர் வெவ்வேறு ஒலிகளின் பிறப்பாக்கம் பற்றிக் கூறும்போது, பயன்படுத்துகின்ற சொற்கள் அவருடைய கூர்மையான பார்வையைத் தெளிவாகக் காட்டுகிறது. அதனை விளக்க அவர் பயன்படுத்துகின்ற ஒலிப்புமுறைச் சொற்கள் கீழ்க்கண்டவாறு

| ஒலியியல் ஒலிப்புமுறைச் சொற்கள் | தொல்காப்பியத்தில் காணும் இணையான கலைச்சொற்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| மெய்யொலி | | |
| அடைப்பொலி (stop) | ஒற்ற, இயைந்து | க், ச், த், ட், ப், ற் |
| மூக்கின ஒலி (nasal) | மூக்குவளி | ங், ஞ், ந், ன் |
| உரசொலி (fricative) | இயைய | வ் |
| தொடரொலி | | |
| உயிர்ப்பொலி | கண்ணுற்றடைய, வருட | ய், ழ் |
| வருடொலி | ஒற்ற, வருட | ர் |
| மருங்கொலி | ஒற்ற, வருட | ல், ள் |
| உயிரொலி | | |
| நா எழுச்சி (height of the tongue) | அங்காப்பு | அ |
| நா முந்துறு நிலை (advancement of the tongue) | நுனிநா, இடைநா, முதல்நா | இ, எ |
| இதழ்நிலை (lip position) | இதழ்குவிவு | ஒ, உ |

க், ச், ட் ஆகியவற்றின் ஒலிப்புமுறை பற்றித் தொல்காப்பியர் நூற்பாக்களில் நேரடியாகக் காணக்கிடைக்கவில்லை என்றாலும் த், ப், ற் ஆகியவற்றிற்குக் கூறப்பட்டுள்ள முயற்சியைக் (தொல். 93, 94, 97) கொண்டு மறைமுகமாக அதனையொத்த வல்லொலிகள் அனைத்தும் தடையொலிகள் என்று கொள்ளலாம்.

தடையொலிகளை உண்டாக்கும்போது ஒலியெழுப்பிகள் கொள்ளும் அமைப்பைத் தொல்காப்பியர் முழுமையாகவும், தெளிவாகவும் விளக்கியுள்ளார். இந்த விளக்கம் தற்கால அறிவியல் வளர்ச்சியையும் பலநுண்கருவிகளின் துணையையும் கொண்டு ஆய்ந்து கூறும் எந்த ஒலியியல் அறிஞனின் விளக்கத்திற்கும் குறைந்ததில்லை. எடுத்துக்காட்டாக த் (தொல். 93) ற் (தொல். 94) ஆகிய இரண்டும் நாவின் நுனியைக் கொண்டு பிறப்பிக்கப்படுகின்றன. பரந்த நுனிநா (blade) (தொல். 93) அதாவது நுனிநா விரிந்து அமையும்போது தகரமெய்யும் அணரிய நுனிநா (apex) (தொல். 94), அதாவது நாநுனி கூராகி மேலெழுந்து அமையும்போது றகர மெய்யும் பிறக்கின்றன.

நுனிநா, நுனி அண்ணத்தைத் தொடும்போது ட், பிறக்கின்றது என்று தொல்காப்பியம் (தொல். 91) கூறுகின்றது. ஆனால் இதிலிருந்து, ட் ஒரு வளைநா ஒலி என்பது பெறப்படவில்லை. நாநுனி வளைந்து அமையும்போது உண்டாகும் ஒலியைத்தான் ஒலியியல் அறிஞர்கள் வளைநா ஒலி என்று கூறுவர்.

தொல்காப்பியர் (தொல். 100) மூக்கொலிகள் மூக்கில் பிறக்கின்றன என்று கூறுகின்றார். அவரின் விளக்கம் செம்மையாக உள்ளது. மெல்லொலிகள் அனைத்தும் பிறப்பாக்கத்தால் தம்மோடொத்த அடைப்பொலிகளைப் போன்றவையே. வாயறையில் தடுக்கப்படும் காற்று மூக்கறையின் வழியே செல்லும்போது வாயறையில் உண்டாகும் அடிப்படை ஒலி மூக்கறையில் வலிபெற்று மெல்லொலியாகின்றது. இது தொல்காப்பிய நூற்பாவிற்கு மிகவும் பொருத்தமான விளக்கமாகும்.

யகர ஒலி பற்றிய தொல்காப்பியரின் விளக்கம் (தொல். 99) மிகவும் தெளிவானது. நுரையீரலிலிருந்து வரும் காற்று மிடற்றில் குரலை எழுப்பி நுனிநா அண்ணத்தை நெருங்கி அமைவதால் அவ்வமைப்பிற்குப் பின்னிடத்தில் வந்து செறிந்து, நெருங்கி அமைந்துள்ள ஒலி எழுப்பிகளின் ஊடே உரசிக்கொண்டு வெளியேறுவதால் யகர ஒலி உண்டாகிறது என்று தொல்காப்பியரின் நூற்பாக்களுக்கு விளக்கம் தரலாம்.

ரகர, ழகர ஒலிகளின் பிறப்பு வேறுபாடுபற்றித் தொல்காப்பியரின் கருத்துத் தெளிவாக இல்லை. நுனிநாவின் கூரிய முனை மேலண்ணத்தை வருட இவ்வொலிகள் பிறக்கின்றன என, தொல்காப்பியர் (தொல். 95) கூறுகிறார். ர், ழ், ள் ஆகிய மூன்றையும் வருடொலி (flap) என்று தொல்காப்பியர் கூறுகிறார் (தொல். 95, 96). இயங்குறுப்பாகிய நாநுனி குறுகி மேலெழுந்து உள்நோக்கி வளைந்து இயங்கா உறுப்பில் வேகமாக மோதுவதால் எழும் ஒலியே வருடொலியாகும். வளம் போன்ற சொற்களில் ள் ஒலிக்கும் முறையைக் கொண்டு இதனை உணரலாம்.

ர், ழ் ஆகியவற்றையும் தொல்காப்பியர் வருடொலிகள் என்று கூறினும் தற்போது இவை அவ்வாறு உச்சரிக்கப் படுவதில்லை. கூர்நுனி அண்ணம் நுண்ணியபல்லை ஒருமுறைக்குமேல் அடித்தால் ர் பிறக்கும். ழ் ஒரு சிக்கலான ஒலி. கூர்நாநுனி இடையண்ணத்திற்கு நேராக மேலே எழுந்து உள்நோக்கி வளைவதோடு மற்ற இரு விளிம்பும் தடித்து உயர்ந்து கரண்டியைப்போல் உருப்பெற்று இயங்கா உறுப்போடு இணையாது இடம்விட்டு அமைந்து மூச்சுக்காற்றுத் தடையேதுமின்றி வாயின் நடு இடத்திலிருந்து சற்றுப் பக்கவாட்டில் தள்ளியமைந்த வழியின் மூலம் வெளியேறும்போது இது பிறக்கின்றது.

ல், ள் ஆகிய இரண்டும் மருங்கொலிகள். தொல்காப்பியர் (தொல். 96) நாவிளிம்பில் வீங்கி (தடித்து) அண்பல் முதலை உற்று நுனிநா அண்ணத்துடன் இயைந்து தொழிற்படுவதால் பேச்சுக்குழலில் நடு இடம் அடைபட்டு இருமருங்கிலும் இடைவெளி ஒதுங்குவதை உணரலாம் என்று கூறுகிறார். உள்ளிருந்து வரும் மூச்சுக்காற்று இரு ஓரங்களிலும் உள்ள இடைவெளி வழியாக வெளியேறி ல், ள் என்ற மருங்கொலிகள் பிறக்க வழி செய்கின்றது. ஒற்றவும் வருடவும் என்றதனால் ல் மென்மையான இயைபினால் பிறக்கின்றது என்பதும் ள் நுனிநா மேலெழுந்து உள்நோக்கி வளைந்து பிறகு விரைந்து அண்ணத்தைத் தட்டிக்கொண்டு விழும்போது உண்டாகும் ஒலி என்பதும் அறியக் கிடக்கின்றன. அவற்றின் பிறப்பாக்க வேறுபாட்டினை உணர்ந்து தொல்காப்பியர் 'ஒற்ற', 'வருட' என்ற வெவ்வேறு கலைச்சொற்களால் விளக்குகிறார்.

வகரம் ஒரு உரசொலியாகும். இவ்வொலி கீழ்இதழ் மேற்பல்லோடு மிகவும் நெருங்கி அமையும்போது ஏற்படும் சிறிய இடைவெளியின் வழியாக மூச்சுக்காற்று உரசிக்கொண்டு வெளியேறும்போது உண்டாகின்றது. தொல்காப்பியர் இயைய (தொல். 98) என்ற சொல்லை ஆள்வதன் மூலம் ஒலி எழுப்பிகளின் அமைப்பு

முறை, உரசொலிக்கான பிறப்பாக்கம் என்பதைத் தெரிவித்துள்ளார். இவர் இயைந்து (தொல். 87) என்ற சொல்லை முழுதும் ஒட்டி அமையும் தன்மைக்கும் இயைய என்ற சொல்லைச் சிறிதே இடம்விட்டுப் பொருந்துவதற்கும் குறிப்பிட்டுள்ளமை வியக்கத்தக்க ஒன்றாகும்.

## சார்பெழுத்து

தொல்காப்பியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பனவற்றைச் சார்பெழுத்துக்கள் என்று கொள்கின்றார். இவை தத்தம் முதலெழுத்துக்கள் பிறக்கும் இடத்திலேயே சிறுசிறு வேறுபாடுகளுடன் பிறக்கின்றன (தொல். 101) என்று கருதுகின்றார்.

தொல்காப்பியர் சார்ந்து வரல் மரபின் பிறப்பாக்கம் பற்றிப் பேசும்போது அவை தத்தமக்குச் சார்பாகிய எழுத்துக்களது பிறப்பிடத்தே பிறத்தலொடு பொருந்தி அவ்விடத்தே தமக்குரிய இயல்பில் நடக்கும் (தொல். 101) என்று கூறுகிறார். முனைவர் க. பாலசுப்பிரமணியம் (தொல்காப்பிய மொழியியல் பக். 66-67) ஆய்தத்தை மெய்யெழுத்தாகவும் அதனுடைய பிறப்பிடத்தை பற்றியும் விளக்குகிறார். மேலும் ஆய்தம் முயற்சிப் பிறப்பின் அடிப்படையில் ஒரு பொது ஒலிக் கூற்றினைக் கொண்டு அடுத்துவரும் வல்லெழுத்துக்களின் அடிப்படையில் வேறுபட்ட ஒலிக்கூறுகளைப்பெறும் ஒரு அடிநிலை எழுத்து அல்லது அடிநிலை ஒலியேயாகும் என அவர் (1972: பக்.67-68) கருதுகிறார்.

ஆய்தம் சங்ககாலத் தமிழில் ஒரு ஒலியன்தான் என்பதை மற்றொரு கட்டுரையில் அவர் (1976: பக். 577-578) எடுத்துக்காட்டு களுடன் கூறுகிறார்.

எ-டு :

| | | |
|---|---|---|
| அஃகு | 'bottom' | (புறநானூறு 319.4) |
| அட்டு | 'having killed' | (புறநானூறு 104.3) |
| அடு | 'killing' | (புறநானூறு 8.5) |

இதுபோலவே ஏனைய வல்லொலிகளுடன் வருவதையும் பட்டியலிட்டுள்ளார். இதைத்தவிர வல்லொலிகளுடன் அதனையொத்த மூக்கொலிகளும், யகர ஒலியும் வருவதைக் காணலாம்.

எ-டு:

அங்கு 'there'

அந்த 'that'

எய்து 'having thrown'

சாய்பு 'leaning'

மேலேகண்ட எடுத்துக்காட்டுக்களை ஆராயும்போது, வல்லெழுத்துக்களை வல்லெழுத்துக்களும், மூக்கொலிகளும், யகரவொலிகளும் புணர்ந்து வருதலான், தொல்காப்பியர் இவற்றுள் ஏதாவது ஒன்றிருந்திருந்தால் ஆய்தத்தின் பிறப்பாக்கத்தை எளிதில் விளக்கியிருப்பார். அடைப்பொலியோ, மூக்கொலியோ, யகரவொலியோ அல்லாத ஒலிதான் ஆய்தமாக இருந்திருக்க வேண்டும். தற்கால ஒலிப்புமுறையை வைத்துப்பார்க்கும்போது அது உரசொலியாக இருந்திருக்கலாம் எனக் கருதத் தோன்றுகின்றது.

மேலும், உயிரொலிகளைப் பற்றியும் மெய்யொலிகளைப் பற்றியும் பேசும்போது ஒலியனியல் அல்லது அடிநிலை எழுத்து அடிப்படையிலேயே ஆய்கின்றார் என்பது நூற்பாக்களைப் பார்க்கின்றபோது நமக்கு விளங்குகின்றது. எனவே, தமிழ் ஒலியன்களின் மாற்றொலிகளைப் பற்றி (சார்பெழுத்துக்களைத் தவிர) அவர் கூறாமையால், ஆய்தத்தின் உரசொலி பிறப்பாக்கம் பற்றி அவர் எண்ணியதாகக் கருதமுடியாது. மற்றும் தமிழ் ஒலியன்களைப் பற்றி அவர் கூறுகின்றபோது அடைப்பொலி, மூக்கொலி, ஆடொலி, மருங்கொலி, உயிர்ப்பொலி ஆகிய ஒலிகளைப் பற்றி மட்டுமே கூறுவதால் அவருக்கு உரசொலி பற்றிய எண்ணம் இல்லை என்பது தெரியவருகிறது. எனவே, உரசொலியாக இருக்கும் ஆய்தத்தைச் சார்பெழுத்தாகக் கருதுவதோடு, அதன் பிறப்பாக்கம் பற்றியும் தெளிவாகக் கூறவில்லை.

உரசொலியையும் பொது முயற்சிப் பிறப்பாகக் கருதுவது சிறப்புடையதாகத் தோன்றவில்லை. ஆய்தம் அது சார்ந்துவரும் வல்லெழுத்துக்களின் பிறப்பிடத்தைப் பொறுத்தது என்ற கூற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. தமிழ் மொழியில் கீழ்க்கண்ட எடுத்துக் காட்டுக்களைக் காணலாம்.

எ-டு :

அஃது

கஃசு

அஃடு

பஃறி

எஃகு

கஃபு

க, ச, த, ப வல்லெழுத்துக்களுக்கு இணையான உரசொலிகள் தமிழ் மொழியில் மாற்றொலியன்களாக வருவதை நாம் காண்கிறோம். ஆனால் ட, ற ஆகியவற்றிற்கிணையான உரசொலிகள் இல்லை என்பதை அறிவோம். எனவே ஒலியியல் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே ஆய்தம் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிறப்பாக்கத்தைக் கொண்ட உரசொலியாகத்தான் இருக்கவேண்டும். பின்னண்ண உரசொலியாக (velar fricative) ஆய்தம் ஏன் இருப்பதாகக் கருதக்கூடாது? மேலும் அடுத்து வரும் எல்லா வல்லொலிகளுடன் புணர்ந்து ஒலித்தலில் எந்தவிதத் தடங்கலுமின்றி எளிதாக ஒலிக்கலாம். எனவே தற்காலத்தில் ஒலிக்கின்ற பின்னண்ண உரசொலியையே ஆய்தமாகக் கருதலாம் என எண்ணத்தோன்றுகிறது. இந்தக்கூற்றை நாம் மேலும் உறுதிப்படுத்த வேண்டுமானால் பிற திராவிட மொழிகளிலேயும் தொல்காப்பியத்திலேயும், சங்ககாலத் தமிழிலேயும் கல்வெட்டுக்களிலேயும் காணப்படுகின்ற ஆய்தத்தைத் தாங்கிய சொற்கள் எவ்வாறு உள்ளன என்பதைப் பற்றிய ஆய்வொன்று செய்தால் ஆய்தத்தைப் பற்றிய பிறப்பாக்கம் மற்றும் பல கருத்துகள் நமக்கு எளிதில் புலப்பட வாய்ப்புள்ளது.

## ஒலிப்புமுறைக் கலைச்சொற்கள்

காற்றறைகள், ஒலியுறுப்புகள் பற்றித் தெளிவாகக் கூறியுள்ள தொல்காப்பியர் ஒலிப்புமுறைக் கலைச்சொற்களை வரையறை செய்யாமல் விட்டது தற்கால ஒலியியலில் ஒலிப்புமுறைச் சொற்களோடு ஒப்பிடும்போது புலனாகிறது. ஆயினும், அதற்கான தெளிவான நோக்கு இருந்தமைக்கு அவர் வெவ்வேறு ஒலிப்புமுறைக்கும் பயன்படுத்திய ஒற்ற, இயைய, இயைந்து, வருட, கண்ணுற்றடைய போன்ற சொற்களே சான்றாக அமைகின்றன. 'ஒற்ற' என்ற ஒலிப்புமுறைச் சொல்லையே அடைப்பொலிக்கு 'மெய்யுற ஒற்ற' என்று கூறி மற்ற இரண்டிலிருந்தும் வேறுபடுத்துகிறார். எனவே நாம் தற்கால ஒலியியல் அடிப்படையில் 'மெய்யுற ஒற்ற' என்பதனையும் 'ஒற்ற' என்பதனையும் வெவ்வேறு ஒலிப்புமுறைச் சொற்களாகவே கருதவேண்டும். 'மெய்யுற ஒற்ற' என்ற ஒலிப்பு முறையில் இரண்டு உறுப்புகளும் நனியுறப் பொருந்தி நீண்டகாலத்தை (long duration)யும், 'ஒற்ற' ஒலிப்புமுறையில்

சாதாரணமாகப் பொருந்தி குறுகிய காலத்தையும் எடுத்துக்கொள்கிறது என்பதை உணர்ந்தே தொல்காப்பியர் 'மெய்யுற ஒற்ற', 'ஒற்ற' ஆகிய இரண்டு கலைச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

'வருட' என்ற ஒலிப்புமுறைச் சொல்லை ழகரத்திற்கும், ளகரத்திற்கும் பயன்படுத்துவதைக் காணலாம். தற்கால ஒலியியல் ழகரத்தினை உயிர்போலி(approximant)யாகவும் ளகரத்தினை வளைநா மருங்கொலியாகவும் கருதுவார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும்போது இரண்டும் வெவ்வேறு ஒலிப்புமுறைகளைப் பெற்றிருக்கவேண்டும். ஆயினும் தொல்காப்பியர் ஏனோ அவையிரண்டிற்கும் 'வருட' என்ற ஒரே ஒலிப்புமுறைச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். ஆனால் ய் என்ற உயிர்போலிக்கு 'கண்ணுற்றடைய' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார். எனவே அவருக்கு உயிர்போலி பற்றிய கருத்துத் தெளிவாக இருந்திருக்கிறது. ஆயினும் அவர் என்ன காரணங்கருதியோ 'ழகரத்தினை' வருடொலியாகக் கருதியுள்ளார். இது ஆராய்ச்சிக்கு உரிய கருத்தாகும்.

## ஒலியன்-மாற்றொலி கோட்பாடு

தொல்காப்பியர் தம் காலத்து உச்சரிப்பு முறையில் இருந்து வந்த வேறுபாடுகளை நன்கு அறிந்திருக்க வேண்டும் என்று க. முருகையன் (1981:71) குறிப்பிடுகிறார். எனினும் எல்லா ஒலியன்களின் மாற்றொலிகளையும் (allophone) பற்றிக் குறிப்பிட்டுள்ளார் என்று சொல்வதற்கில்லை. சிலவற்றின் வேறுபாடுகளை மட்டுமே காட்டிச் சென்றுள்ளார்.

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற சார்பெழுத்துக்களோடு ஐகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் என்பனவற்றையும் தொல்காப்பியர் கூறியுள்ளார். இவை அனைத்திற்கும் இடவரையறை (distributional restriction) கூறியுள்ளார். எனவே இவற்றை மற்ற ஒலியன்களின் மாற்றொலியாகக் கொள்ளலாம்.

குற்றியலிகரம், குற்றியலுகரம் இவை இரண்டும் பெரும்பாலும் தத்தம் முதலெழுத்துப் போன்று பிறப்பாக்கம் பெற்று, மாத்திரையில் குறைந்தொலிக்கும். ஐகாரம், மகரம் ஆகிய இரண்டும் அளவு குறுகும் என்றதனால் அவைபிறப்பால் ஒருதன்மையன என்பதும் மாத்திரையால் மட்டுமே வேறுபடுவன என்பதும் பெறப்படுகின்றன. குற்றியலிகரம், குற்றிலுகரம், ஆய்தம், ஐகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் ஆகிய ஐந்தும் இடவரையறை யுடையன. ஆதலாலும், அவற்றுள் குற்றியலுகரமும் ஆய்தமும் முறையே உருபொலியனும் இணைப்பொலியனும் ஆதலானும்

அவை தவிர்ந்த குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் ஆகிய மூன்றும் மாற்றொலிகள் என்று சொல்லலாம் (தொல்காப்பிய மொழியியல் பக். 44, 45).

ஆய்தத்தைப்பற்றிக் கூறுகையில் இதற்குத் தனிமுதலெழுத்து இன்மையாலும், இதன் ஒலி இன்னதென்று உணர இயலாததாலும் இதனை எந்த ஒலிக்கும் மாற்றொலியாக அமைக்க இயலவில்லை. இது தடைஒலியனின் ஒலியை மாற்றியமைக்க உதவும் புதுச்சூழ்நிலையை உருவாக்கப் பயன் படுத்தப்படும் ஒரு குறி போன்று உள்ளது. எனவே இதனைத் தொல்காப்பியர், தற்கால மொழியியல் அறிஞர்கள் கூறும் இணைப்புக்குறி (Juncture) போன்று பயன்படுத்தி உள்ளார் என்று கருதவேண்டும் என்று க. முருகையன் கூறுகிறாரே ஒழிய, அவரும் அதற்குரிய பிறப்பாக்கம்பற்றி விளக்கத்தைக் கொடுக்கவில்லை.

## காலம் (Duration)

தொல்காப்பியர் தனது இலக்கணத்தில் காலத்தினை ஒரு முக்கியக் கூறாக (Feature) கருதுகிறார் என்பது தெளிவாகிறது. அவர் உயிர் எழுத்துக்களில் குறில், நெடில் மற்றும் ஐகாரம், ஔகாரம், அளபெடை, மெய்யெழுத்துக்களின் மாத்திரை, சார்பெழுத்துக்கு மாத்திரை, மகரக் குறுக்கம், இசை ஆகியவற்றிலும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு பேசுகிறார். மாத்திரைக்கு அளவுபற்றியும் கூறுகின்றார். எனவே, தொல்காப்பியருடைய காலக்கோட்பாடு பற்றிய ஒரு தனிஆய்வு மேற்கொள்ளுதல் நலம்.

## ஒலிக் கூறுகள்

தற்கால ஆக்க ஒலியனியலில் (Generative Phonology) பயன்படுகின்ற ஒலிக் கூட்டத்தின் பொதுமை ஒலிக்கூறுகள் (Phonetic feature of a group of Sounds) என்ற கருத்தும் அவருடைய நூற்பாக்கள் 85, 86, 87களில் காணக்கிடக்கின்றன.

## முடிவுரை

எல்லா மொழிகளுக்கும் பொதுவானதாக நாம் கருதுகின்ற ஒலியியல் கோட்பாடுகளை மனதிற்கொண்டு தமிழ் ஒலியியலுக்கு ஏற்ப விளக்கியுள்ளார். உள்ளே புதைந்துகிடக்கின்ற அவரின் ஒலியியல் கோட்பாடுகளை வெளிக்கொணர, உலகோருக்கு எடுத்துணர்த்த தற்கால ஒலியியல் அறிவு பெரிதும் உதவுகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. தொல்காப்பியருடைய பிறப்பியல் கோட்பாடுகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள ஆராய்ச்சியாளர்கள் ஒன்றை மனதிற்கொள்ள வேண்டும்.

அதுதொடர்பான அத்துணைக் கருத்துக்களையும் நூற்பாக்கள் வடிவில் சுருக்கமாகக் கொடுக்கின்ற போது, அவற்றை ஒன்றோடு ஒன்று இணைத்தும் பிரித்தும் சரியான விளக்கத்தைக் கொடுக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். இதற்கே அவர் உரையோ அல்லது விளக்கமோ எழுதியிருந்தால் இன்னும் பல உண்மைகள் நமக்கு கிடைத்திருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## பார்வை நூல்கள் & கட்டுரைகள்

1. கைபர், 'Two Problems of old Tamil phonology' in **Indo-Iranian Journal**, 191-207, 1958.

2. சிவலிங்கனார், ஆ., 'சார்பு எழுத்துக்கள்', தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1972.

3. சிவலிங்கனார், ஆ., தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் (உரைவளம்) பிறப்பியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-20, 1981.

4. பாலசுப்பிரமணியன், க, 'தொல்காப்பியரின் ஒலியனியல் கொள்கை', தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1972.

5. பாலசுப்பிரமணியன், க., 'Historical Development of Aytham', **Dravidian Linguistics - V,** Annamalai University, 1976.

6. முருகையன், க, 'ஒலியியல் பற்றித் தொல்காப்பியன்' மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1972.

7. முருகையன், க., 'தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை', தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1972.

8. முருகையன், க., 'Did Tolkappiyar Translate Pa:nini's Siksa' 599-606, 1973.

9. முருகையன், க, ஐந்தாவது கருத்தரங்க ஆய்வுக் கோவை 'Articulation as described by tamil Grammarians' in தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (உரைவளம்) (Ed.) ஆ. சிவலிங்கனார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1981.

10. முருகையன், க., 'Tolkappiyar's concept Of Phonetics' எழுத்ததிகாரம் (உரைவளம்) (Ed.) ஆ.சிவலிங்கனார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1981

11. சண்முகம், செ.வை., எழுத்திலக்கணக் கோட்பாடு, அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலைநகர், 1980.

12. நடனசபாபதி, க., தொல்காப்பிய ஒலிப்பு முறைக் கலைச் சொற்கள் - ஒரு மதிப்பீடு கருத்தரங்கு : மொழியியலும் தமிழ் இலக்கணமும், தமிழியல் துறை, அண்ணாமலைநகர், 1999.

# அலையொலித் திரியும் ஆய்தம் நிலையலும்

இரா. கோதண்டராமன்

## 1. ஆய்தம் ஒலியனன்று

1.1 எஃகு, வெஃகு, அஃகு, அஃது, பஃது, கஃசு, கஃபு, பஃறி முதலான தனிமொழிகளிலும் கஃறீது, அஃறிணை, முஃடீது முதலான புணர்மொழிகளிலும் நிகழும் ஆய்தம் பற்றித் தொல்காப்பியர் முதல் பத்ரிராஜூ கிருஷ்ணமூர்த்திவரை (Bh. Krishnamurthi 1997:145-165) எண்ணற்ற ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இது தொடர்பான பார்வைநூல்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளின் பட்டியலை K. Balasubramanian (1976), Bh. Krishnamurthi (1997) ஆகியோரில் காணலாம். இவற்றுள் தொல்காப்பியரின் ஆய்தக் கோட்பாடு மட்டுமே இன்றளவும் வலுவான அடித்தளத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது. காரணம் ஆய்தம் எப்படி ஒலிக்கப்பட்டது என்பதைக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் (?) ஆண்டுகளுக்கு முன் நேரில் அறிந்தும் உணர்ந்தும் அதன் ஒலியியற் பண்பினை விளக்குகிறார் தொல்காப்பியர் (தொல். எழுத்து. இளம். 101). தொல்காப்பியரின் கொள்கைப்படி ஆய்தமானது, தான் சார்ந்து வரும் வல்லொற்றின் ஒலியியற் பண்பினைக் கொண்ட சார்ந்தொலி / சார்பொலி (Allophone) ஆகும். இதனின்றும் தொல்காப்பியர் ஆய்தத்தை ஒலியனாகக் கொள்ளவில்லை என்பது புலனாகின்றது. இந்த அடிப்படை உண்மையை ஆய்தம் பற்றிய ஆய்வை மேற்கொள்ளும் யாரும் புறக்கணிக்கமுடியாது.[1] ஆயினும்

கிருஷ்ணமூர்த்தி (Bh. Krishnamurthi 1997:160) ஆய்தத்தைத் தொல்திராவிட ஒலியனாகக் கருதுவார்.

1.2. ஆய்தமானது வல்லொற்றின் சார்பொலியாகத் துணியப்படும் நிலையில் ஒலிப்பியல் (Phonetic Level) நிலையில் அதனை அலையொலி (Voiced Phone) எனக் கருதுவதா அல்லது நிலையொலி (Voiceless Phone) என்று துணிவதா என்பதற்கு நாம் விடை கண்டாக வேண்டும். நக்கு, நக்க, எட்டு, பத்து, பற்று, உப்பு முதலான தனிமொழிகளில் ஈற்று வல்லொற்றுகள் நிலையொலிப் பண்பினவாகும். எனவே இவற்றின் முன் நிகழும் வல்லொற்றுகளும் நிலையொலிப் பண்பினவாகவே கொள்ளத்தக்கனவாகின்றன. இதனின்றும் ஆய்த வல்லொற்றினை நிலையொலிப் பண்பினதாகத் துணிய வாய்ப்பில்லை என்ற உண்மை பெறப்படுகின்றது. இதனைப் பற்றி மேலும் சிந்திப்பதற்கு முன் பதப்புணர்ச்சியில் நிலைமொழியீற்று மெல்லொலிகளும் மருங்கொலிகளும், வருமொழிமுதல் வல்லொலிகளும் திரியுமாற்றினைச் சுருக்கமாக ஈண்டுக் குறிப்பிடுவது ஆய்தம் பற்றிய கூடுதல் ஆய்வுக்கு அடித்தளமாக அமையும்.

## 2. ஆய்தம் நிகழிடம்

2.1 தனிமொழியில் ஆய்த வல்லொற்று நிகழும் சூழலைத் தொல்காப்பியர் 'குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி, உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே' (தொல்.எழுத்து.இளம்.38) என்று தெளிவுபடுத்துகிறார். பதப்புணர்ச்சியில் ஆய்தத்தின் நிகழ்ச்சி 'ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும்' (தொல். எழுத்து. இளம். 39) என்ற நூற்பாவின் மூலம் குறிப்பிடப்படுகின்றது. இசைமை என்பது இந்நூற்பாவில் ஆய்தத்தைக் குறிக்கும். மருங்கொலிகளாகிய லகர, ளகரங்கள் அல்வழியில் திரிந்தும் திரியாமலும் அமையும் என்பதை 'அல்வழி யெல்லாம் உறழென மொழிப' (தொல்.எழுத்து.இளம்.369, 399) என்று உணர்த்தி, பின்னர் கஃறீது (< கல் + தீது), முஃடீது (< முள் + தீது) முதலான புணர்மொழிகளில் வருமொழி முதல் தகரம் றகர, டகரங்களாகவும் நிலைமொழியீற்று மருங்கொலிகள் ஆய்த வல்லொற்றுகளாகவும் திரிந்தமைவதைப் பின்வரும் நூற்பாக்களின் வாயிலாகப் புலப்படுத்துகிறார் தொல்காப்பியர்.

1. (அ) லள வென வருஉம் புள்ளி முன்னர்
 தந எனவரிற் றனவா கும்மே

(தொல்.எழுத்து.இளம்.150)

(ஆ) தகரம் வரும்வழி ஆய்தம் நிலையலும்
புகரின் றென்மனார் புலமை யோரே
(தொல்.எழுத்து.இளம்.370)

2. (அ) ணளவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்
(தொல்.எழுத்து.இளம்.151)

(ஆ) ஆய்தம் நிலையலும் வரைநிலை யின்றே
தகரம் வருஉம் காலையான
(தொல்.எழுத்து.இளம்.400)

இந்த நூற்பாக்கள் குறிப்பிடும் தொல்காப்பிய ஆய்வில் மருங்கொலிகள் ஆய்த வல்லொற்றுகளாகவும் ஆய்தம் அல்லாத வல்லொற்றுகளாகவும் திரியும் நிகழ்ச்சியை மட்டும் பின்வருமாறு விளக்கலாம்.

3. ல் + த் >*ற்த் > { ஃற் / ற்ற் }

எ-டு கல் + தீது >*கல்றீது > { கஃறீது / கற்றீது }

4. ள் + த் >*ட்த் > { ஃட் / ட்ட் }

எ-டு முள் + தீது >*முள்டீது > { முஃடீது / முட்டீது }

2.2 நிலைமொழியீற்று மருங்கொலிகள் மற்றும் அவற்றினை யடுத்து நிகழும் தகரமெய் ஆகியவற்றின் பல்வேறு திரிபுகளைப் பொறுத்தவரை தொல்காப்பிய ஆய்வில் நெருடல்களாகச் சில இடைவெளிகள் காணப்படுகின்றன. லகர ளகர மருங்கொலிகள் பதப்புணர்ச்சியில் ஆய்த வல்லொலியாகவும் நிலையொலிப் பண்பினதாகிய இன வல்லொலியாகவும் மாறுபட்டுத் திரிவதற்கான ஒலிப்பியற் காரணங்கள்

(Phonetic Factors) இந்த ஆய்வில் தெளிவுபடுத்தப்படவில்லை. மெல்லொற்றுகள் வல்லொற்றுகளின் முன் இன வல்லொற்றுகளாகவும் (எ-டு மண் + பானை > மட்பானை, பொன் + காலம் > பொற்காலம், மரம் + பட்டை > மரப்பட்டை), மெல்லொற்றுகளை அடுத்து நிகழும் வல்லொற்றுகள் அவை வல்லொற்றுகளாகவும் (Voiced Plosives) (எ-டு மனம் + தூய்மை > மனந்தூய்மை (குறள் 455), அறம் + காவல் > அறங்காவல், மான் + தோல் > மான்றோல், தண் + துளி > தண்டுளி) திரிவதற்கான ஒலிப்பியற் காரணங்களும் தொல்காப்பிய ஆய்வில் தெளிபுபடுத்தப்படவில்லை. புணர்ச்சியில் உறுப்புகளின் ஒலிப்பிடங்களைக் கருத்தில்கொண்ட அளவுக்குப் பேச்சொலிகளின் ஒலிப்பியற் பண்புகளை அழுத்தமாகத் தொல்காப்பியர் சிந்தித்ததாகத் தோன்றவில்லை. ஒருவேளை இதனை மிகை விளக்கமாகத் தொல்காப்பியர் கருதி விட்டிருக்கவும் கூடும். எனினும் மருங்கொலிகளும் அவற்றின்முன் நிகழும் தகர வல்லொற்றும் பலவகையாகத் திரிந்தமைவதற்கான ஒலிப்பியல் விளக்கங்கள் மூலம் தெளிவான திரிபுக் கோட்பாடுகளை வகுத்துக்கொண்டு, தொல்காப்பியர் குறிப்பாக உணர்த்த முயன்றவற்றை வெளிப்படையாகத் தெளியலாம். இதைப்பற்றிப் பேசுவதற்கு முன் கிருஷ்ணமூர்த்தியின் ஆய்தம் பற்றிய சிந்தனைப்போக்கைக் குறிப்பிட்டாக வேண்டும்.

## 3. கிருஷ்ணமூர்த்தியின் ஆய்தம்

3.1 கிருஷ்ணமூர்த்தியின் ஆய்தம் பற்றிய மதிப்பீடு மெய்யொலியும் அல்லாத உயிரொலியும் அல்லாத உரசொலி (Fricative) அல்லது அரையுயிர் (Semi Vowel) என்று கருதத் தக்க ஒரு தொல்திராவிடக் கற்பித மிடற்றொலியின் (Proto Dravidian Laryngeal H) மீது அமைந்ததாகும். இந்தோ ஐரோப்பிய ஒப்பியல் மொழியியலார் வகுத்துக் கொண்ட மிடற்றொலிக் கோட்பாட்டை அடியொற்றியதாகும் கிருஷ்ணமூர்த்தியின் ஆய்தச் சிந்தனை. இவரது ஆய்வில் நிகழும் *H என்னும் மிடற்றொலியைத் தமிழில் வசதிக்காகவேண்டி ஹ் என்ற கிரந்த எழுத்தின் மூலம் இங்கே நாம் குறிப்பிடலாம். இதன்படி கிருஷ்ணமூர்த்தியின் பார்வையில் பஃது, கஃசு, கஃபு, பஃறி முதலானவை முறையே பஹ்து, கஹ்சு, கஹ்பு, பஹ்றி என்று அமையும். ஆய்தத்தை விளக்குவதற்கு, தான் வகுத்துக்கொண்ட கோட்பாட்டில் நிகழும் மிடற்றொலியினது இயல்பைப்பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார் கிருஷ்ணமூர்த்தி (1997:145) 'A laryngeal is a *h* - type of sound (presumably a fricative or more likely a frictionless continuant), like the semi-vowels y and w which are characterized by the feature complex [-vocalic/-syllabic,

- consonantal].' இப்படி ஒரு விளக்கத்தின் மூலம் ஆய்தம் உணர்த்தும் ஒலியை ஒரு முழுமையான வல்லொற்றாகக் கொள்வதற்கான வாய்ப்பை மறுத்துவிடுகிறார் கிருஷ்ணமூர்த்தி. தமிழ் எழுத்தியலில் இடம் பெற்றுள்ள ஆய்தத்தை அவர் தொல்திராவிட மிடற்றொலியின் திரிபாகக் (reflex) கருதுவார்.[2]

3.2 புள்ளி என்பதை மெய்யொலியைக் குறிக்கும் கலைச் சொல்லாகக் கொள்வார் தொல்காப்பியர். கருதுக: 'டறலள வென்னும் புள்ளி முன்னர், கசப வென்னும் மூவெழுத் துரிய' (தொல்.எழுத்து.இளம்.23). ஆய்தத்தை ஆய்தப்புள்ளி (தொல்.எழுத்து. இளம்.38) எனக்குறிப்பிடுவதன் மூலம் அதனை மெய்யொலியாகவே கருதுவார் தொல்காப்பியர். ஆய்தப் புள்ளி என்பதை விளக்குகையில் 'புள்ளி என்றதனான் ஆய்தத்தை மெய்ப்பாற் படுத்துக் கொள்க' என்று இளம்பூரணரும், 'கஃறீது, முஃடீது என்பனவற்றை மெய் பிறிதாகிய புணர்ச்சி என்றதனானும், ஈண்டுப் புள்ளி என்றதனானும் ஆய்தமும் மெய்யாயிற்று' என்று நச்சினார்க்கினியரும் (தொல்.எழுத்து.இளம்/நச்சி.38 உரை) குறிப்பிடுவர். இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் ஒப்பியல் ஆய்வுக்கு வகுத்துக்கொள்ளப்பட்ட மிடற்றொலிக் கோட்பாட்டையும், வடமொழி விசர்க்கத்தையும் கருத்தில் கொண்டு அமைந்த கிருஷ்ணமூர்த்தியின் ஆய்தம் பற்றிய கொள்கை, தொல்காப்பியரின் ஆய்தக் கோட்பாட்டினின்றும் முற்றிலுமாக மாறுபட்டதாகும். தனிமொழிகளில் நிகழும் ஆய்தத்தை மட்டுமே உண்மையானதாகக் கருதும் கிருஷ்ணமூர்த்தி புணர் மொழிகளில் நிகழும் ஆய்தத்தைப்போலியாகத் துணிகிறார். தனிமொழிகளில் நிகழும் ஆய்தத்தை மட்டுமே தொல்திராவிட மிடற்றொலியின் தொடர்ச்சியாகக் கொள்ளமுடியும் என்றும் அஃறிணை, கஃறீது, முஃடீது முதலான புணர்மொழிகளில் நிகழும் ஆய்தம் நிலை வல்லொற்றின் (Voiceless Plosive) இன்னொரு வரிவடிவமே என்றும் (பழந்தமிழில் எடுத்துக்காட்டாக, முட்டீது என்பதை முஃடீது என்று ஒலிப்பு மாற்றமின்றி எழுதும் மரபும் இருந்திருக்க வேண்டும் என்றும்), ஆகவே பதப்புணர்ச்சியில் நிகழும் ஆய்தத்தைத் தனிமொழிகளில் நிகழும் ஆய்தத்துக்கு நிகராகக் கருத முடியாது என்றும் தன் போக்கில் குறிப்பிட்டுச் செல்கிறார் கிருஷ்ணமூர்த்தி.[3]

## 4. ஆய்தம் சார்ந்த வல்லொற்று நிலையொலியன்று

4.1 கஃறீது, முஃடீது ஆகியவற்றில் நிலைமொழியீற்று லகர ளகரங்கள் றகர டகரங்களின் முன் (அதாவது, [ல், ள்] > ஃ /- [ற், ட்])ஆய்தமாகத் திரிவதற்கு ஒலியனியல் அடிப்படையில் அமைதி

கூறமுடியாது என்றும் றகர, டகரங்களின் முன் றகர டகரங்கள் மட்டுமே (அதாவது, [ல், ள்] > [ற், ட்] /- [ற்,ட்]) திகழ முடியும் என்றும், எனவேதான் தொல்காப்பியரும் ஆய்தம் என்பது, தான் சார்ந்து வரும் வல்லொற்றுகளின் ஒலிப்பிடத்தையே நிலைக்களனாகக் கொண்டதாக அமையும் எனக் குறிப்பிடுகிறார் என்றும் கிருஷ்ணமூர்த்தி கருதுகிறார்.[4] கிருஷ்ணமூர்த்தியின் இக்கருத்து, தொல்காப்பியரை அவர் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை என்பதைக் காட்டுவதுடன், ஆய்தம் தொடர்பாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் மருங்கொலிகள் மற்றும் தகரமெய்த் திரிபுகளை அவருக்கு எதிராகத் திருப்பி அவரது ஆய்வின் முடிபுகளையே சிதைத்துவிடுகிறார் கிருஷ்ணமூர்த்தி. புணர் மொழிகளில் திகழும் ஆய்தம் தொடர்பாக அமைந்த கிருஷ்ணமூர்த்தியின் ஆய்வில் உள்ள குறைபாடுகளை நாம் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஆய்தத்தின் ஒலிப்பியற் பண்புகள் (Phonetic Properties) வல்லொற்றின் ஒலிப்பியற் பண்புகளினின்றும் மாறுபட்டது என்பதும், புணர்மொழிகளில் ஆய்தத்தை அடுத்து திகழும் தகர வல்லொற்று ஒலிப்பியல் நிலையில் நிலையொலித் தன்மையது என்பதும் கிருஷ்ணமூர்த்தியால் வலியுறுத்தப்படும் கருத்துகளாகும். இக் கருத்துகளுக்கு வெளிப்படையாகவோ குறிப்பாகவோ தொல்காப்பியத்தில் எந்தச் சான்றும் இல்லை. தொல்காப்பியர் எவ்விடத்திலும் ஆய்தத்தின் ஒலிப்பிடம் வல்லொற்றின் ஒலிப்பிடத்தினின்றும் மாறுபட்டதென்று குறிப்பிடவில்லை. மேலும், புணர் மொழிகளில் ஆய்தத்தை அடுத்து திகழும் தகர வல்லொற்றையும், பிற வல்லொற்றுகளாகிய க,ச,ப ஆகியவற்றையும் நிலை வல்லொற்றுகளாக (Voiceless Plosives) அவர் கருதவுமில்லை. இதில் தொல்காப்பியரின் மௌனத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார் கிருஷ்ணமூர்த்தி. வல்லொற்றுகள் எழுத்தியல் அல்லது ஒலியனியல் சூழலுக்கேற்ப நிலையொலிகளாகவும் (Voiceless Phones), அலையொலிகளாகவும் (Voiced Phones), உரசொலிகளாகவும் (Fricatives) தமிழில் திகழ்வதைத் தொல்காப்பியர் உணர்ந்திருக்கக் கூடும். ஆனால், இதுபற்றிய ஆய்வை அவர் வெளிப்படையாக மேற்கொள்ள வில்லை. இதுவும் கிருஷ்ணமூர்த்திக்குச் சாதகமாக அமைந்து விட்டது. இதனையே நாமும் நமக்குச் சாதகமாகக் கொண்டு தொல்காப்பியரின் ஆய்தக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதற்கு எத்தடையும் இல்லை.

4.2 குளம்+கரை என்பது குளக்கரை என்றும் குளங்கரை என்றும் திரிந்தமையவல்லது என்பதை உணர்த்தும் தொல்காப்பியர் (தொல்.எழுத்து.இளம்.311,313) நிலைமொழியீற்று மகரத்தின் திரிபை விளக்கும் போக்கு ஓர் உண்மையை வலியுறுத்துகிறது. தமிழில்

அலைவல்லொற்றுகளும் (Voiced Plosives), நிலைவல்லொற்றுகளும் (Voiceless Plosives) எதிர்நிலை வழக்கில் (Contrastive Distribution) நிகழாமல் வேற்றுநிலை வழக்கில் (Complementary Distribution) நிகழ்வதால் அலைவல்லொற்றுகள் நிலைவல்லொலியன்களின் (Voiceless Plosive Phonemes) சார்பொலிகளாகக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய நிலையில் குளம்+கரை என்பதில் வருமொழி முதல் ககரம் நிலையொலித் தன்மையதாக இருக்கையில் நிலைமொழியீற்று மகரம் இனமெல்லொற்றாக, அதாவது ஙகரமாகத் திரிந்து பின்னர் நிலையொலித் தன்மை கொண்ட இனவல்லொற்றாக, அதாவது ககரமாகத் திரிந்து குளக்கரை என்ற வடிவம் தோற்றங்கொள்கிறது. மாறாக, நிலைமொழியீற்று மகரத்தின் தாக்கத்தால் வருமொழி முதல் ககரமெய் அலையொலிப் பண்பினதாகத் திரியுமாயின், மகர மெல்லொற்று இனமெல்லொற்றாகத் திரிவதுடன் நின்றுவிடுகிறது. தொல்காப்பியர் இவ்வுண்மையை உணர்ந்திருந்தாலும் அவர் மேற்கொண்ட திரிபியற்கோட்பாடு (Theory of Assimilation) இத்தகைய விளக்கத்திற்கு இடங்கொடுக்கவில்லை. தொல்காப்பியரின் குளக்கரையையும், குளங்கரையையும் பின்வருமாறும் ஆராயமுடியும்.

5 (அ) ம் >ங் /-க் (குளம்+கரை >*குளங்-கரை)
(ஆ)ங் >க் /-க் (*குளங்-கரை > குளக்கரை)

இங்கே வருமொழிமுதல் வல்லொற்று நிலையொலித் தன்மையை இழக்கவில்லை.

6 (அ) ம் >ங் /-க் (குளம்+கரை >*குளங்-கரை)
(ஆ)க் >(க்) /ங்- (*குளங்-கரை > குளங்-(க)ரை)

இங்கே நிலைவல்லொற்றாகிய வருமொழிமுதல் ககரம் அலைவல்லொற்றாகத் திரிகிறது. இத்திரிபு (க்) என்று இந்த விதியில் குறிக்கப்படுகிறது. மெல்லொற்றினை அடுத்து நிகழும் வல்லொற்று, தமிழில் நிலையொலிப் பண்பையிழந்து அலையொலித் தன்மையதாக அமைவது ஓர் இயல்பான நிகழ்ச்சியாதலின் மேலே 6 -இல் உள்ள இரண்டாவது விதியைத் தவிர்த்து விடலாம். இதன்மூலம் குளங்கரை என்பதில் மெல்லொற்றை அடுத்து நிகழும் வல்லொற்று ஒலியன் நிலையில் (Phonemic Level) நிலைவல்லொலியனாகவும் ஒலிப்பியல் நிலையில் (Phonetic Level) அலைவல்லொலியாகவும் கொள்ளப்படும். ஆய்தம் தொடர்பான ஆய்வுக்கும் இவ்வுண்மை பொருந்தும் என்பதைத் தொல்காப்பியர் அறியாதவரல்ல.

**4.3** தமிழைப் பொறுத்தவரை அலைவல்லொற்றுகள் ஒலியன்களாக நிகழ்வதில்லை என்றாலும் ஒலிப்பியற் பண்புகளே (Phonetic Properties) புணர்ச்சியில் நிகழும் திரிபுகளின் போக்கினை முடிவுசெய்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. இந்தப் பின்னணியில் புணர்மொழிகளில் நிகழும் -ஃற்-, -ஃட்- ஆகிய வரிவடிவங்கள் முறையே -ற்ற்-, -ட்ட்- ஆகியவற்றின் ஒலிப்பியற் பண்புகளை உணர்த்தும் ஒரு மாற்று உத்தியே என்ற கிருஷ்ணமூர்த்தியின் கொள்கையினை நாம் ஏற்கவில்லை. கிருஷ்ணமூர்த்தியின் கொள்கை உண்மையானால் புணர்மொழிகளில் ஆய்தத்தின் நிகழ்ச்சியை ஒலியனியலடிப் படையில் கருதமுடியாமல் நெடுங்கணக்கியல் (Orthography) அடிப்படையில் கருதவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். 'மெய்யின் இயற்கைப் புள்ளியோடு நிலையல்' (தொல்.எழுத்து.இளம். 15), 'எகர ஒகரத் தியற்கையும் அற்றே' (தொல்.எழுத்து.இளம். 16), '(அவற்றுள்,) மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்' (தொல்.எழுத்து.இளம். 105), 'குற்றிய லுகரமும் அற்றென மொழிப' (தொல்.எழுத்து.இளம். 106) என்று எழுத்துக்களின் வரிவடிவங்களைத் தெளிவுபடுத்தும் தொல்காப்பியர் ஆய்தக் குறியீடு நிலைவல்லொற்று களாகிய றகர டகரங்களின் ஒரு மாற்று வரிவடிவமே என்று குறிப்பிட்டிருப்பார். ஆனால், அவர் அவ்வாறு கருதவில்லை. இதனின்றும் ஆய்தக் குறியீடு அலை வல்லொற்றுகளை உணர்த்தும் ஒரு வரிவடிவ ஏற்பாடு என்பதும் அதனையடுத்து நிகழும் வல்லொற்றுகளும் ஒலிப்பியல் நிலையில் அலைவல்லொற்றுகள் என்பதும் உய்த்துணரப் படுகின்றன. தமிழில் இரு அலைவல்லொற்றுகள் ஒலியனியல் நிலையில் மயங்க வாய்ப்பில்லையாதலால் தொன்மொழியில் நிகழ்ந்த புணர்ச்சித் திரிபின் எச்சங்களாக ஆய்தம் பயிலும் தனிமொழிகளும் புணர்மொழிகளும் இம்மொழியில் இடம் பெற்றுள்ளன என்பதே உண்மையாகும். இங்கே குறிக்கப்பட்டுள்ள தொன்மொழியைத் தொல் திராவிடமாகக் கொள்வதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில், தொல்திராவிட எழுத்தியலில் இரு அலைவல்லொற்றுகள் மயங்குவதற்கான சான்று ஏதுமில்லை. (இத்தகைய வல்லொற்று மயக்கம் தொல் தென்திராவிட (Proto South Dravidian) வழக்காகக் கொள்ளத் தகுந்ததாகத் தோன்றுகிறது).

## 5 ஆய்தம் அலைவல்லொற்றாகும்

**5.1** இனி, ஆய்தம் அலைவல்லொற்றை உணர்த்தும் குறியீடு என்பதைச் சற்று விரிவாக ஆராயலாம். புணர்மொழிகளில் பயிலும் ஆய்தத்தின் நிகழ்ச்சி பழந்தமிழில் பரவலாகக் காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் பெயர்த் தொடர்கள் உணர்த்தும்.

7. (1) அஃறிணை (தொல்.எழுத்து.இளம். 156) (< அல் + திணை)

(2) பஃறுகில் (பத்துப். 1. 296) (< பல் + துகில்)

(3) பஃறிணை (பத்துப். 2. 221) (< பல் + திணை)

(4) பஃறேர் (பத்துப். 2. 130) (< பல் + தேர்)

(5) கொஃறேர் (பத்துப். 6. 633) (< கொல் + தேர்)

(6) பஃறகைப்பு (பத்துப். 9. 143) (< பல் + தகைப்பு)

(7) பஃறோல் (பத்துப். 10. 377) (< பல் + தோல்)

(8) பஃறொடை (< பல் + தொடை)

(9) சிஃறாழிசை (< சில் + தாழிசை)

இந்த எடுத்துக்காட்டுகளில் நிலைமொழியீற்று மருங்கொலியாகிய லகரம் அலையொலியாகலின் வருமொழிமுதல் நிலைவல்லொற்றாகிய தகர மெய்யும் (ஒலிப்பியல் நிலையில்) அலைவல்லொற்றாகத் திரிகின்றது. இதனை ஒலிப்பியல் நிலையில் த் > (த்) /ல்- எனக் குறிப்பிடலாம். இந்தத் திரிபு ஒலிப்பிடத்தை ஆதாரமாகக் கொள்ளாமல் மருங்கொலியின் அலையொலிப்பண்பை ஆதாரமாகக் கொண்டதாகும். இதனைத் தொடர்ந்து அலைவல்லொற்றாகத் திரிந்த தகரம் லகரத்தின் இனவல்லொற்றாகிய றகரமாகத் திரிகிறது. இந்நிகழ்ச்சி மருங்கொலியின் ஒலிப்பிடத்தைக் கருத்தில் கொண்டதாகும். மூன்றாவதாக நிலைமொழியீற்று மருங்கொலி இனவல்லொற்றாக, அதாவது றகரமாகத் திரிகிறது. இந்தத் திரிபு றகரத்தின் வல்லொற்றுப் பண்பை ஆதாரமாகக் கொண்டதாகும். இம்மூவகைத் திரிபுகளையும் **அஃறிணை** (< அல் + திணை) என்ற தொடரை வருவிப்பதன் மூலம் தெளியலாம்.

8. (அ) த் > (த்) / ல் - (அல்+திணை > அல்-(தி)ணை)

(ஆ) (த்) > (ற்) / ல் - (அல்+(தி)ணை > அல்-(றி)ணை)

(இ) ல் > (ற்) / -(ற்) (அல்+(றி)ணை > அ(ற்)(றி)ணை)

இந்த ஆய்வில் இறுதி விதியின் மூலம் பெறப்பட்ட **அ(ற்)(றி)ணை** என்ற வடிவம் **அஃறிணை** என்பதன் இன்னொரு வரிவடிவமாகும்.[5] இதில் முதல் உறுப்பாக நிகழும் (ற்) என்னும் அலைவல்லொற்று ஃ என்ற குறியீட்டின் மூலம் பழந்தமிழில் குறிக்கப்படுகின்றது. தமிழில் அலைவல்லொற்றுகள் ஒலியன்களாக நிகழ வாய்ப்பில்லாத நிலையில்

ஆய்தக் குறியீட்டை ஒலியனியல் நிலையில் நிலைவல்லொலியனையும் ஒலிப்பியல் நிலையில் அலைவல்லொற்றையும் குறிக்கும் வகையில் நுண்ணொலியனாக (Archi Phoneme) அமைத்துக்கொள்கிறார் தொல்காப்பியர். இந்த நுண்ணொலியன் அதனையடுத்து நிகழும் வல்லொற்றின் ஒலிப்பிடத்தையும், ஒலிப்பியற்பண்புகளையும் முற்றிலுமாகப் பகிர்ந்துகொள்கின்றது. இதனைப் பின்வரும் விதியின் மூலம் விளக்கலாம்.

9 ஃ > [+மெய் / +வன்மை / +ஒலிப்பிடம் $_{\alpha}$ / −நிலை] / — [+மெய் / +வன்மை / +ஒலிப்பிடம் $_{\alpha}$ / −நிலை]

ஆய்தத்தின் எழுத்தியற் பண்புகளைப் புலப்படுத்தும் இவ்விதியில் [+ஒலிப்பிடம்] என்பது $\alpha$ என்ற குறியீடு உணர்த்தும் ஒலிப்பிடமாகும், [−நிலை] என்பது வல்லொற்று அலையொலித் தன்மையது என்பதை உணர்த்தும். தொல்காப்பியரின் ஆய்தக் கோட்பாடு மேலே குறிப்பிடப்பட்டுள்ள 8 மற்றும் 9 –ஆம்விதிகளின் செயல்பாட்டைக் கருத்தில் கொண்டதாகும்.

5.2 மெல்லொலிகளை அடுத்து மட்டுமல்ல, மருங்கொலிகளை அடுத்து நிகழும்போதும் வல்லொலிகள் நிலையொலித்தன்மையை இழந்து ஒலிப்பியல் நிலையில் அலைவல்லொற்றுகளாகத் திரியும் வாய்ப்புள்ளவையாகும். இவ்வாய்வில் இன்னொரு செய்தியையும் குறிப்பிட்டாக வேண்டும். புணர் மொழிகளில் னகர ணகர மெல்லொலிகள் மட்டுமல்ல, மருங்கொலிகளும் தகர மெய்யின் திரிபுகளாகிய றகர டகரங்களின் முன் சில குறிப்பிட்ட சூழல்களில் கெடுகின்றன. உயிர்நெடில் மொழிகளின் ஈற்றிலும் தொடர் மொழிகளின் ஈற்றிலும் நிகழும் மருங்கொலிகள் இத்தகைய பாதிப்புக்கு உள்ளாகின்றன. எ-டு **வேல்+தீது > வேறீது, கோள்+தீது > கோடீது, கடல்+ தூர்க்குவன் > கடறூர்க்குவன்** (பத்துப்.9.27), **நீள்+திரள்+தடக்கை > நீடிரடடக்கை** (பத்துப்.7.170). இந்த எடுத்துக் காட்டுகளில் வருமொழிமுதல் தகரமெய் நிலைவல்லொற்றாகவே நிகழுமாயின் நிலைமொழியீற்று மருங்கொலிகள் கெடுவதற்கு வாய்ப்பில்லை. மாறாக, இவை நிலையொலித் தன்மை கொண்ட இனவல்லொற்றுகளாகத் திரிகின்றன. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம். எ-டு **வேல்+தீது>வேற்றீது** (தொல். எழுத்து.இளம்.371), **தோள்+தீது > தோட்டீது** (தொல்.எழுத்து. இளம்.401), **கடல்+தானை > கடற்றானை** (பத்துப்.3.10), **மடல் + தாழை > மடற்றாழை** (பத்துப். 9.88), **சாரல் + தேன் > சாரற்றேன்** (பத்துப். 10.151, 152), **கோள் + தெங்கு > கோட்டெங்கு** (பத்துப்.2.208), **முள்+தாள்+தாமரை**

**> முட்டாட்டாமரை** (பத்துப்.8.80). இந்த எடுத்துக்காட்டுகளில் மருங்கொலிகள் கெட்டும், நிலையொலித்தன்மை பொருந்திய இனவல்லொற்றுகளாகத் திரிந்தும் அமைவதற்குக் காரணமென்ன? வருமொழிமுதல் தகரமெய் அலைவல்லொற்றாகத் திரிந்தும் திரியாமலும் அமையும் போக்கே நிலைமொழியீற்று மருங்கொலிகளின் வீழ்ச்சியையும், நிலையொலித்தன்மைகொண்ட இனவல்லொற்றுத்திரிபையும் முடிவு செய்கின்றது. மருங்கொலிகளின் வீழ்ச்சிக்குக் காரணம் அதனை அடுத்து நிகழும் தகரமெய் அலைவல்லொற்றாகத் திரிவதேயாகும். தனிக்குறில் மொழிகளைப் பொறுத்தவரையில் (எ-டு கல், முள்) ஈற்று மருங்கொலிகள் கெடுவதில்லை. மாறாக, அவை அலைத்தன்மையும், நிலைத்தன்மையும் கொண்ட இனவல்லொற்றுகளாகத் திரிகின்றன. எ-டு **கல்+தீது > க(ற்)(றீ)து (=கஃறீது) / கற்றீது, முள்+தீது > மு(ட்)(டீ)து (=முஃடீது) / முட்டீது.** வருமொழிமுதல் தகரம் அலைவல்லொற்றாகத் திரிந்த நிலையில் நிலைமொழியீற்று மருங்கொலிகள் அலையொலித்தன்மை கொண்ட இனவல்லொற்றுகளாகவும், அவ்வாறு திரியாத நிலையில் மருங்கொலிகள் நிலையொலித்தன்மை கொண்ட இனவல்லொற்றுகளாகவும், திரிந்தமைகின்றன. முதல்வகைத் திரிபு தமிழ்ப்புணரியல் மரபுக்கு மாறுபட்டதாகலின் ஆய்தம் என்ற நுண்ணொலியனை அமைத்துக் கொள்ளவேண்டிய நிலைக்குத் தொல்காப்பியர் தள்ளப்படுகிறார். இரண்டாம் வகைத்திரிபு (அதாவது, **கல்+தீது > கற்றீது, முள்+தீது > முட்டீது**) தமிழ்ப்புணரியல் மரபுக்கு இயல்பானது.[6] எனவே இங்கே ஆய்தத்தின் நிகழ்ச்சிக்கு வாய்ப்பில்லாமற் போகின்றது. கிருஷ்ணமூர்த்தியின் ஆய்தம் பற்றிய ஆய்வில் இந்த உண்மைகள் போற்றப்படவில்லை.

## 6 வகரம் ஆய்த வல்லொற்றாகத் திரியுமா?

புணர்மொழிகளில் ஆய்தத்துக்கு நிலைக்களனாக மருங்கொலிகள் அமைவதை மேலே நிகழ்த்திய ஆய்வில் கண்டோம். அவ்(=அவை) என்பதில் நிகழும் வகர மெய்யும் ஆய்தத்தின் நிலைக்களனாக அமையுமென்று குறிப்பிடுகிறார் தொல்காப்பியர் (தொல்.எழுத்து.இளம்.380). இதில் குறிப்பிடத்தக்க செய்தியாதெனில் **அவ்** என்பதனை அடுத்து நிகழும் நான்கு மொழிமுதல் வல்லொற்றுகளும் (அதாவது க,ச,த,ப) ஆய்த வல்லொற்றாகத் திரியும் வகரத்தின்முன் நிகழ்கின்றன. கருதுக: **அவ்+கடிய/சிறிய/தீய/பெரிய> அஃகடிய, அஃசிறிய, அஃதீய, அஃபெரிய.** வகரமெய் ஆய்த வல்லொற்றாகத் திரிந்து அமைவது நெருடலாகவே உள்ளது. ஆயினும், இது ஓர் அலையொலியன் என்பதும், அதன்முன் நிகழும்

வருமொழிமுதல் வல்லொற்றுகள் அலைவல்லொற்றுகளாக ஒலிப்பியல் நிலையில் திரிந்தமையும் என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகும். மருங்கொலிகளைப் போல் இனவல்லொற்றாகத் திரியும் வாய்ப்பு மகரமெய்க்கு உண்டு. எ-டு **மரம்+கிளை/சிலை/தூண்/பட்டை > மரக்கிளை, மரச்சிலை, மரத்தூண், மரப்பட்டை**. வகரமெய் எவ்வகை இனவல்லொற்றாகவும் திரிய தமிழில் வாய்ப்பில்லை.[7] எனவே **அஃகடிய, அஃசிறிய, அஃதீய, அஃபெரிய** ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள் மாறுபட்ட நிலைமொழியைக் கொண்டவை என்று கருதத் தோன்றுகின்றது. வண்ணனை ஆய்வில் ஆய்வு வசதிக்காகத் தொல்காப்பியர் அமைத்துக் கொண்ட அடிநிலை வடிவங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட மொழிவழக்கைப் பிரதிபலிப்பதாகக் கொள்ள முடியாது. இந்நிலையில் வகரமெய் ஆய்தவல்லொற்றாகத் திரிவதாகக் கருதும் தொல்காப்பியரின் ஆய்வைப்பற்றி நம்மால் கூடுதலாக எதையுஞ் சொல்லமுடியவில்லை. இது மேலும் ஆராயப் படவேண்டிய ஒன்றாகும்.

## 7 திராவிட வினைமுற்றுக்களில் ஆய்தம்

7.1 பதப்புணர்ச்சியில் மட்டுமின்றி வினைமுற்றுக்களிலும் ஆய்தத்தின் நிகழ்ச்சி பழந்தமிழில் அரிய வழக்காகக் காணப்படுகின்றது. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இவ்வகையில் கருத்தில் கொள்ளத்தக்கவையாகும்.

10 **யானே ஈண்டை யேனே யென்னலனே**
**ஆனா நோயொடு** ***கான லஃதே***
**துறைவன் றம்மூ ரானே**
**மறையல ராகி** ***மன்றத் தஃதே*** (குறுந்.97)

11 **ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்து***செய் வஃதே* **முறை** (குறள்.541)

12 **அன்னாய் வாழிவேண் டன்னை நம்மூர்ப்**
**பலர்மடி பொழுதி னலமிகச் சாஅய்**
**நள்ளென வந்த வியறேர்ச்**
**செல்வக் கொண்கன்** ***செல்வனஃ தூரே*** (ஐங்.104)

இந்த எடுத்துக்காட்டுகளில் நிகழும் **கானலஃது** (=கானலது), **மன்றத்தஃது** (=மன்றத்தது), பயனிலையாகவும் நிகழவல்ல **செல்வனஃது** (=செல்வனது) ஆகியவை ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்றுகளும், **செய்வஃது** (=செய்வது) என்பது நிகழ்வெதிர்வினதாகிய (Non-Past) பொதுவினைமுற்றும் (Impersonal Finite Verb) ஆகும். இவற்றில் ஈற்று விகுதியாக நிகழும் **-அஃது** என்பது **-அது** என்ற விகுதிக்கு நிகரானதாகும்.

7.2 தமிழ் வினைமுற்றுக்களில் காணப்படும் -அஃது என்னும் விகுதியானது ஹவ்யக மற்றும் ஹலக்கி கன்னடக் கிளைமொழிகளில் -அத்து என்றும் *addu* என்றும் வினைமுற்றுக்களில் வழங்குகின்றது. இவற்றுள் -அத்து என்னும் விகுதி ஹவ்யக கன்னடத்தில் படர்க்கை ஒருமை வினைமுற்றுக்களிலும்[8] உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்றுக்களிலும், *addu* என்னும் விகுதி ஹலக்கி கன்னடத்தில் பொதுவினைமுற்றுக்களிலும் (அதாவது, நான் செய்தது உண்மை என்ற எடுத்துக்காட்டில் நிகழும் செய்தது என்பது போன்ற பொதுவினை முற்றுக்களிலும்) நிகழ்கின்றன. இந்நிலையினைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம்.

## Havyaka Kannada (D.N.S. Bhat 1971:5)

| | Verbal Base | III Sing, Past Finite |
|---|---|---|
| 13 | (1) oḍe | oḍad-attu 'he/she/it broke (it)' |
| | (2) mare | marad-attu 'he/she/it forgot (it)' |
| | (3) kaḍi | kaḍud-attu 'he/she/it cut (it)' |
| | (4) bigi | bigud-attu 'he/she/it tightened (it) |
| | (5) muri | murud-attu 'he/she/it broke (it)' |
| | (6) hiḍi | hiḍud-attu 'he/she/it caught (it) |

## Havyaka Kannada (D.N.S Bhat 1971 : 38)

| | | |
|---|---|---|
| 14 | (1) agi | agud-attu 'he/she/chewed' |
| | (2) koṇi | koṇud-attu 'he/she danced' |
| | (3) baḍi | baḍud-attu 'he/she/ beat' (past) |
| | (4) mugi | mugud-attu 'he/she saluted' |
| 15 | (1) aḷe | aḷad-attu 'he/she measured' |
| | (2) era | erad-attu 'he/she poured' |
| | (3) kare | karad-attu 'he/she milked' |
| | (4) kore | korad-attu 'he/she cut' |
| 16 | (1) hari | harud-attu 'he/she tore (it)' |
| | (2) kaḍi | kaḍud-attu 'he/she cut (it)' |

17 (1) katte mēd-attu (D.N.S. Bhat 1971:52)
'The donkey grazed (int)'
(2) (adu) kaṇḍ-attu (D.N.S Bhat 1971:62)
'(She) saw'

## Havyaka Kannada (D.N.S. Bhat 1971:38)

| | | |
|---|---|---|
| 18 | (1) kuḍi | kuḍud-attu 'we (incl) drank' |
| | (2) nillu | nind-attu 'we (incl) stood' |
| | (3) uṇṇu | uṇḍ-attu 'we (incl) ate' |
| | (4) bare | barad-attu 'we (incl) came' |

## Halakki Kannada (A.S. Acharya 1967:50,51)

| | | |
|---|---|---|
| 19 | (1) koḍu | koṭṭ-addu 'gave' (impersonal finite verb) |
| | (2) bayyu | bayd-addu 'scolded' (- do -) |
| | (3) tili | tilid-addu 'knew' (- do -) |
| | (4) iru | idd-addu 'remained' (- do - ) |
| | (5) taru | tand-addu 'brought' ( - do - ) |
| | (6) baru | band-addu 'came' ( - do - ) |

**7.3** தமிழ் வினைமுற்றுக்களில் நிகழும் **-அஃது, -அது,** கன்னட வினைமுற்றுக்களில் நிகழும் **-அத்து, *-addu*** ஆகிய விகுதிகள் பிறப்பு நிலையில் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையாகும். இந்தத் தொடர்பை ஒருங்கிணைந்த ஆய்வின் மூலம் உணர்த்த வேண்டும். ஒரு குறிப்பிட்ட அடிநிலை வடிவத்தின் திரிபுகளாக இந்த விகுதிகளைக் கொள்வதன்மூலம் இவைகள் பிறப்புநிலையில் தொடர்புள்ளவை என்ற உண்மை பெறப்படும். இதேபோல் கன்னடக்கிளைமொழிகளின் ஒரு பிரிவு வினைப்பகுதிகளின் மீது அமைந்த இறந்தகால வினைமுற்றுக்களில் **-இத்து, *-iddu*** ஆகிய விகுதிகளின் நிகழ்ச்சியும் காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம்.

20 (1) dīpa keḷa biddu nand-ittu (D.N.S. Bhat 1971:65)
விளக்கு கீழே விழுந்து அணைந்தது.

(2) dāri tapp-ittu (D.N.S. Bhat 1971:58)
வழி தப்பியது.

(3) mudki nōḍ-ittu (D.N.S. Bhat 1971:66)
கிழவி பார்த்தாள்.

(4) adu hēl-ittu (D.N.S. Bhat 1971:66)
அவள் சொன்னாள்.

(5) adu band-ittu (A.S. Acharya. 1967:58)
அவள் வந்தாள்.

21 (1) hāl-iddu 'said' (IFV) (A.S.Acharya. 1967:50)
(2) cikk-iddu 'obtained' (IFV) (A.S. Acharya. 1967:50)
(3) māḍ-idd(-akke) 'for doing' (IFV Past) (A.S. Acharya.1967:49)

மேலே குறிப்பிட்ட கன்னட வினைமுற்றுக்களில் நிகழும் **-இத்து, *-iddu*** ஆகிய இறந்தகாலத் தொகுப்பு விகுதிகளும் தமிழ் வினைமுற்றுகளாகிய பாடின்று, பாடிற்று, பாடித்து (பார்ப்பன வழக்கு) ஆகியவற்றில் நிகழும் **-இன்று, -இற்று, -இத்து** ஆகிய இறந்தகாலத் தொகுப்பு முற்றுவிகுதிகளும் பிறப்பு நிலையில் ஒன்றோடொன்று தொடர்புள்ளவையாகும். எனவே, இந்த வடிவங்களும் ஒருங்கிணைந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகும். இங்கேயும் ஒரு குறிப்பிட்ட அடிநிலை வடிவத்தினின்றும் வருவிப்பதன்மூலம் இவ்வடிவங்களுக்கிடை யிலான பிறப்பியல் தொடர்பு புலப்படுத்தப்படும். இந்த ஆய்வினைத் தமிழில் ஆய்தம் நிகழும் தனிமொழிகளுக்கும் விரிவுபடுத்தலாம். இதைப்பற்றிச் சிந்திப்பதற்கு முன் தமிழ் மற்றும் கன்னடக் கிளைமொழி வினைமுற்றுக்களில் நிகழும் -அஃது, **-அது, -அத்து, - addu** -இன்று, -இற்று, -இத்து, ***- iddu*** ஆகியவற்றைப்பற்றிய அடிப்படை ஆய்வின் போக்கை ஈண்டுச் சுருக்கமாகக் குறிப்பிட்டாக வேண்டும்.

## 8 ஆய்த விகுதியும் அடிநிலை வடிவமும்

**8.1** கன்னட வினைமுற்றுக்களில் நிகழும் **-இத்து, *-iddu*** ஆகிய இரண்டு தொகுப்பு விகுதிகளைக் கருத்தில் கொள்கையில் அவற்றின் அடிநிலை வடிவம் ***-intu** என்றே இருக்கவேண்டும். இந்த வடிவத்தில் நிகழும் தகரமெய் நிலைவல்லொற்றாக இருப்பதால் அதன்முன் நிகழும் நகரமெய் நிலையொலித்தன்மை யுடைய இனவல்லொற்றாகத் திரிகிறது. இத்தகைய திரிபானது **-இத்து** என்ற வடிவத்தைத் தோற்றுவிக்கிறது. அடிநிலை வடிவத்தில் உள்ள நகர மெய்யின் தாக்கத்தால் அதனையடுத்து நிகழும் தகரமெய் அலைவல்லொற்றாகத் திரிவதற்கும் வாய்ப்புள்ளது. இவ்வாறு திரியும் தகர அலைவல்லொற்றின்முன் நிகழும் நகரமெய் அலையொலித்தன்மையதாகிய தகர மெய்யாகத் திரிகிறது. இதன் விளைவாக, ***-iddu*** என்ற வடிவம் தோற்றங் கொள்கிறது. கன்னடத்தைப் பொறுத்தவரை மேலே குறிப்பிட்ட அடிநிலை வடிவம் செம்மையாகவே செயல்படுகிறது. ஆனால், இந்த அடிநிலை வடிவத்திலிருந்து **-இன்று** (எ-டு. பாடின்று), **-இற்று** (எ-டு. பாடிற்று) ஆகிய வடிவங்களை வருவிக்கமுடியாது. இதனின்றும் கன்னட வடிவங்களுக்கு இனங்காணப்பட்ட அடிநிலை வடிவத்தை

இன்னொரு அடிநிலை வடிவத்தின் திரிபாகக் கொள்ளவேண்டியுள்ளது. இந்த முதன்மை அடிநிலை வடிவத்தை ***-intu*** எனக் கொண்டால் இதனின்றும் கன்னட விகுதிகளின் அடிநிலை வடிவமாகிய ***-intu*** என்பதை வருவிப்பதில் எந்தச் சிக்கலும் எழ வாய்ப்பில்லை. தமிழில் நிகழும் **-இன்று, -இற்று** ஆகிய தொகுப்புவிகுதி வடிவங்களை ***-ntu*** என்ற அடிநிலை வடிவத்திலிருந்து வருவிப்பதிலும் சிக்கலேதுமில்லை. இந்த அடிநிலை வடிவத்தில் றகர வல்லொற்று நிலையொலித் தன்மையதாக நிகழ்கையில் அதன்முன் நிகழும் னகரமெய்யும் நிலையொலித்தன்மையதாகிய இனவல்லொற்றாகத் திரிந்து **-இற்று** என்னும் வடிவத்தைத் தோற்றுவிக்கின்றது. மாறாக, மேற்படி வல்லொற்று னகரமெய்யின் தாக்கத்தால் அலைவல்லொற்றாகத் திரிகையில் **-இன்று** என்னும் வடிவம் தோற்றங் கொள்கிறது.

**8.2** மேலே **-இத்து, *-iddu*** ஆகிய தொகுப்பு விகுதிகளின் மீது அமைந்த ஆய்வு இன்னொரு பிரிவு கன்னட வினைமுற்றுக்களில் நிகழும் **-அத்து, *-addu*** ஆகிய விகுதிகளுக்கும் பொருந்தும். இவற்றின் அடிநிலை வடிவம் ***-antu*** என்று கொள்ளப்படும். இதில் நிகழும் தகரமெய் நிலைவல்லொற்றாக நிகழ்கையில் அதன்முன் நிகழும் நகரமும் தகரநிலைவல்லொற்றாகத் திரிந்து **-அத்து** என்ற வடிவத்தைத் தோற்றுவிக்கிறது. மேற்படி தகரமெய் நகரமெய்யின் தாக்கத்தால் அலைவல்லொற்றாகத் திரிகையில் அதன்முன் நிகழும் மெல்லொற்றும் தகர அலைவல்லொற்றாகத் திரிந்து ***-addu*** என்னும் வடிவத்தைத் தோற்றுவிக்கிறது.

**8.3** கன்னட வினைமுற்றுக்களில் நிகழும் ***-iddu, -addu*** ஆகிய விகுதிகள் தமிழில் முறையே **-இஃது, -அஃது** எனக்குறிக்கத் தக்கனவாகும். இதனைக் கருத்தில் கொண்டு ***cikk-iddu, māḍ-iddu, hēl-iddu*** ஆகிய கன்னட வினைமுற்றுக்களை முறையே **சிக்கிஃது, மாடிஃது, ஹேளிஃது** எனவும், ***kanḍ-addu, tand-addu*** ஆகிய கன்னட வினைமுற்றுக்களை முறையே **கண்டஃது, தந்தஃது** எனவும் தமிழில் குறிக்கலாம். கிருஷ்ணமூர்த்தியின் கொள்கைப்படி **சிக்கிஃது, கண்டஃது** ஆகியவற்றின் ஒலிப்புமுறை ***சிக்கித்து, *கண்டத்து** என்பனவற்றின் ஒலிப்புமுறையினின்றும் மாறுபட்டதல்ல. கிருஷ்ணமூர்த்தியின் புணர்மொழிகளில் ஆய்தம் பற்றிய கொள்கை ஒரு கற்பனையான சிந்தனைப் போக்கு என்பதால் நாம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. **-அஃது/ -அத்து, -இஃது/ -இத்து** ஆகிய இணைகளில் நிகழும் வடிவங்கள் மாறுபட்ட நிலையில் ஒலிக்கத் தக்கவையாகும். கன்னட வினைமுற்றுக்களில் நிகழும் **-இஃது, -அஃது**

ஆகியவை தொடர்பான ஆய்வு பழந்தமிழில் நிகழும் **கானலஃது, மன்றத்தஃது, செய்வஃது, செல்வனஃது** (காண்க-எடுத்துக்காட்டுகள் (10),(11),(12)) ஆகிய வினைமுற்றுக்களில் உள்ள **-அஃது** என்ற விகுதிக்கும் பொருந்தும்.

8.4 கன்னட வினைமுற்றுக்களில் நிகழும் -**இத்து**, -**இஃது** (*=iddu*) ஆகியவை ***-i<u>n</u>tu*** என்ற அடிநிலை வடிவத்தின் திரிபாகிய ***-intu*** என்ற வடிவத்தினின்றும் தோற்றங்கொண்டவை என்பது முன்னதாகக் கண்டறியப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு இன்னொரு பிரிவு கன்னட வினைமுற்றுக்களில் நிகழும் -**அத்து**, -**அஃது** (**=addu**) ஆகியவையும் **கானலஃது, செய்வஃது, செல்வனஃது** ஆகியவற்றில் நிகழும் **-அஃது** என்பதும் ***-a<u>n</u>tu*** என்ற அடிநிலை வடிவத்தின் திரிபாகிய ***-antu*** என்பதன் திரிபுகளாகக் கொள்ளத் தக்கவையாகின்றன. பழந்தமிழில் **செய்தன்று** வாய்பாட்டு வினைகள் ஒன்றன்பால் இறந்தகால வினைமுற்றுக்களாகவும், பொது வினைமுற்றுக்களாகவும் (எ-டு. **ஊரன், பெண்டென விரும்பின்று அவடன் பண்பே** (ஐங்.89.4,5) ***கண்டன்றும்*** **இலமே** (புறம்.61.17), **அறிந்தன்றும் இலரே** (நற்.27.6)) பயின்று வழங்குகின்றன. அரிதாக. **செய்தற்று** வாய்பாட்டுப் பொதுவினை முற்றுக்களின் நிகழ்ச்சியும் பழந்தமிழில் காணப்படுகின்றது. பின்வரும் எடுத்துக்காட்டைக் கருத்தில் கொள்க.

22 **தன்றொழில் வாய்த்த இன்குரல் எழிலி**
**தென்புல மருங்கிற் சென்றற் றாங்கு**
**நெஞ்சம் அவர்வயின் சென்றென.....** (நற்.153 4-6)

இந்த எடுத்துக்காட்டில் **சென்றற்றாங்கு** (=சென்றதுபோல) என்ற வினையடைத் தொடரில் நிகழும் **சென்றற்று** என்பது ஓர் இறந்தகாலப் பொது வினைமுற்றாகும். செய்தன்று, செய்தற்று ஆகிய வாய்பாட்டு வினைமுற்றுக்களில் நிகழும் -**அன்று**, -**அற்று** ஆகியவற்றின் அடிநிலை வடிவம் ***-a<u>n</u>tu*** எனக் கொள்ளத் தக்கதாகும்.[9] இந்த அடிநிலை வடிவத்தின் திரிபு வடிவங்களுள் ***-antu*** என்பதும் ஒன்றாகும். இந்த வடிவமே கன்னடத்தில் -**அத்து**, -**அஃது** எனத் திரிந்தமைகின்றது.

## 9 அதுவும் பதுவும்

9.1 கன்னடக் கிளைமொழிகளில் வழங்கும் **செய்தத்து, செய்தஃது** வாய்பாட்டு வினைகளுக்கு நிகராகத் தமிழில் பயின்று வழங்குவது **செய்தது** வாய்பாட்டு வினைகளாகும். ஒன்றன்பால் வினைமுற்றாகவும், பொது வினைமுற்றாகவும் தமிழில் நிகழும் இந்த வாய்பாட்டு வினைகள்

**-அது** என்னும் விகுதியை ஈறாகக் கொண்டவையாகும். **செய்வஃது** (குறள்.541) என்னும் பொது வினைமுற்று, **செய்வது** என்னும் வினைக்கு நிகரானதாகும். இதனின்றும் இந்த வினைகளில் நிகழும் **-அஃது, -அது** ஆகிய விகுதிகள் பிறப்பு நிலையில் தொடர்புடையவை என்பது புலனாகின்றது. இந்த உண்மை செய்தது வாய்பாட்டு வினைகளில் நிகழும் **-அது** என்னும் விகுதியையும் **-அஃது** என்பதனுடன் தொடர்புபடுத்த வகை செய்கிறது. இந்த ஆய்வில் ***-அந்து** என்பதன் திரிபாகிய **-அஃது** என்ற வடிவம் ஒடுங்கி **-அது** என்னும் வடிவமாகத் தோற்றங் கொண்டதாகத் துணியப்படுகிறது. வேறு எவ்வகையிலும் **-அஃது, -அது** ஆகிய இரண்டிற்குமுள்ள தொடர்பை விளக்கவோ புலப்படுத்தவோ வாய்ப்பில்லை.[10]

9.2 கன்னடக் கிளைமொழிகளிலும் தமிழிலும் நிகழும் வினைமுற்றுக்களில் காணப்படும் **-அத்து, -அஃது, -அது** ஆகிய விகுதிகளின் மீதான ஆய்வைக் கருத்தில் கொண்டு தனிமொழிகளாகிய **அஃது, பஃது, கஃசு, கஃபு, எஃகு, பஃறி** முதலானவற்றின் அடிநிலைவடிவங்களை இனங்காணமுடியும். தெலுங்கில் **அந்து-**வல்ல (=ஆதலால்), **அந்து-**கு (=அதற்கு) ஆகியவற்றில் நிகழும் ***அந்து*** என்பது **அது, அஃது** ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும். மலையாளத்தில் **பந்தீராண்டு** (=பன்னீராண்டு) என்ற தொடரில் அமைந்த **பந்து** என்னும் எண்ணுப் பெயர் **பத்து, பஃது, -பது** ஆகியவற்றின் கிளைச் சொல்லாகும். இந்த உண்மைகளைக் கருத்தில் கொண்டு **அஃது, பஃது** ஆகியவற்றின் அடிநிலை வடிவங்களை முறையே ***antu, *pantu*** எனக் கொள்ள முடியும். இந்த வடிவங்கள் தெலுங்கில் **அந்து** எனவும் மலையாளத்தில் **பந்து** எனவும் தமிழில் ***அத்து*** (கருதுக: **அத்துடன்**), **பத்து** எனவும் பலவாறாகத் திரியும். **அந்து, பந்து** ஆகியவற்றுள் உள்ள நகரமெய் அலையொலித்தன்மை கொண்ட தகரமெய்யாகத் திரிந்து **அஃது, பஃது** ஆகிய வடிவங்களின் தோற்றத்துக்கு வகை செய்கின்றது. **அஃது, பஃது** ஆகியவை குறுகி/ ஒடுங்கி **அது, -பது** (கருதுக **இரு-பது**) ஆகிய வடிவங்களைத் தோற்றுவிக்கின்றன. **பத்து** என்பதை, **பஃது** என்பதன் திரிபாகக் கருதும் கிருஷ்ணமூர்த்தி இங்கே ஆய்தம் கெட்டது என்று கொள்வதுடன், இந்தக் கேடு அலைமெய்யொலிகளின் முன் நிகழ்வதாக ஓர் ஆய்வையும், **பத்து** என்பதே **-பது** எனக் குறுகுவதாக இன்னொரு ஆய்வையும் முன்மொழிகிறார் (Bh. Krishnamurthy 1997:149,163). **பத்து** என்பதும் **-பது** என்பதும் மாறுபட்ட அடிநிலை வடிவங்களைக் கொண்டவை என்பது நமது துணிபாகும்.

9.3 எஃகு, கஃசு, பஃறி ஆகியவற்றைக் கோட்பாட்டு அடிப்படையில் முறையே *eṅku, *kañcu, *panti ஆகிய அடிநிலை வடிவங்களின் திரிபாகக் கருதமுடியும். ஆயினும், இத்தகைய அடிநிலை வடிவங்களை அமைப்பதற்குப் போதிய தடயங்கள் இப்போதைக்குத் தென்படவில்லை. ஆய்தம் பற்றிய தொல்காப்பியரின் கோட்பாடு இத்தகைய அடிநிலை வடிவங்களை அமைத்துக் கொள்வதற்குத் தடையாக இல்லை என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். அதேசமயத்தில் கிருஷ்ணமூர்த்தியின் மிடற்றொலிக் கோட்பாட்டின்படி **அஃது, பஃது** ஆகியவற்றைக்கூட ***antu, *pantu*** ஆகிய அடிநிலை வடிவங்களிலிருந்து வருவிக்க வாய்ப்பில்லை. அதுமட்டுமல்ல, இத்தகைய அடிநிலை வடிவங்களை அமைப்பதற்கான வாய்ப்புங் கூட அவரது மிடற்றொலிக்கோட்பாட்டில் இல்லை.

## 10 பதப்புணர்ச்சியில் ஆய்த நிகழ்ச்சியின் பரப்பு

அல்வழிப்புணர்ச்சியில் மட்டுமே ஆய்த வல்லொற்றின் நிகழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதும் வேற்றுமைப்புணர்ச்சியில் அது நிகழாமற்போவதும் மெய்ம்மயக்க விதிகளைக் கடுமையாக்கி விடுகின்றன. இந்தக்கடுமையைத் தளர்த்துவதற்கான வாய்ப்பை எண்ணிப்பார்க்கலாம். புணர்ச்சி விதிகள் பல்வேறு இலக்கணக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை என்பதை மறுப்பதற்கில்லை. தொல்காப்பியர் பல சந்திவிதிகளைச் சிறப்பு விதிகளாக வகுப்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும், ஒற்றுமெய் வல்லொற்றாகத்திரிதலும் (எ-டு **வேல்+தீது > வேறீது/வேற்றீது**) புணர்ச்சியில் நிகழும் திரிபுகள் பொதுவிதிக்கு உட்பட்டும் உட்படாமலும் அமையும் என்பதையே உணர்த்துகின்றன. இதேபோல் பதப்புணர்ச்சியில் தொடர்மொழியும், தனிக்குறில் மொழியும் அல்வழியில் புணர்ந்தாலும் வேற்றுமையில் புணர்ந்தாலும் மருங்கொலிகள் ஆய்தவல்லொற்றாகத் திரிவதற்கான வாய்ப்பை உருபொலியனியல் அமைப்பு முற்றிலுமாகக் கட்டுப் படுத்துகிறது என்பதை ஏற்றுக்கொள்வதிற்கில்லை. ஒரு மாறுபட்ட சிந்தனையாக, **கல்+தூண், மடல்+தாழை** ஆகியவை **கற்றூண், மடற்றாழை** என அமைவதுடன் ***கஃறூண், *மடஃறாழை** என்றும் திரிந்தமைவதற்கான கோட்பாட்டு வாய்ப்பையும் (Theoretical Possibility) எண்ணிப்பார்க்கலாம். இதேபோல், **கடல்+தூர்க்குவன்** என்பது வேற்றுமைப்புணர்ச்சியில் **கடறூர்க்குவன்** (பத்துப்.9.271) என அமைவதுடன் ***கடஃறூர்க்குவன்** என அமைவதற்கான கோட்பாட்டு வாய்ப்பையும் எண்ணிப்பார்க்கலாம். (***கடஃறூர்க்குவன்** என்பதன் ஒடுக்கமாகக் **கடறூர்க்குவன்** என்பதைக் கருதவும் வாய்ப்புண்டு).

ஆனால் இத்தகைய திரிபுகள் பழந்தமிழில் காணப்படவில்லை என்பதைக் கருதுகையில் ஆய்தம் பயிலும் புணர்மொழிகள் தொன்மொழியில் வழங்கிப் பழந்தமிழில் தொல்சந்தியின் எச்சங்களாக நிகழ்வதால் தமிழில் ஆய்தம் பற்றிய ஆய்வுக்களத்தை விரிவுபடுத்த முடியவில்லை.

## 11 ஆய்தம் நிகழாத விகுதிப்புணர்ச்சி

பழந்தமிழில் செல்லுதல், வெல்லுதல், கொல்லுதல், கொள்ளுதல் ஆகியவற்றின் நெடில்வடிவங்களாக முறையே சேறல் (அகம்.221.14), வேறல் (புறம்.45.6), கோறல் (சிலம்பு.20.64), கோடல் (குறுந்.62.1) ஆகியவற்றின் நிகழ்ச்சி காணப்படுகிறது. இதேபோல் பயிலுதல், முயலுதல், அகலுதல் ஆகியவற்றின் திரிபுவடிவங்களாக முறையே பயிறல் (தொல்.பொருள்.இளம்.99) முயறல் (குறுந்.244.2) அகறல் (அகம்.213.11) ஆகியவற்றின் நிகழ்ச்சியும் காணப்படுகிறது. விகுதிப் புணர்ச்சியின்பாற்பட்ட இவற்றுள் தனிக்குறில் மொழிகளாகிய செல், வெல், கொல், கொள் ஆகியவற்றின் அடியாகத்தோன்றி வழங்கும் சேறல், வேறல், கோறல், கோடல் ஆகியவற்றின் பகுதிகளில் நிகழும் மருங்கொலிகள் புணர்ச்சியில் ஆய்தமாகத் திரிந்து பின்னர்க் கெடுவதனால் பகுதிகளின் தனிக்குறில் நெடிலாகிறது எனக்குறிப்பிடுவார் குமாரசாமி ராஜா (1973:525-529). எ-டு. செல்+தல்> *செல்-றல் > *செஃ-றல் > *செ-றல் >சேறல். ஆனால் இந்த ஆய்வினை அவரால் பயிறல், முயறல், அகறல் ஆகியவற்றுக்கு விரிவுபடுத்தமுடியவில்லை. காரணம் இவற்றின் பகுதிகள் தொடர்மொழிகளாகும். எடுத்துக்காட்டாக பயிறல் என்பதன் தோற்றம் இவ்வாறு அமையும். பயில்+தல் >*பயில்-றல் > பயிறல். இங்கேயும் *பயிஃறல் என்பது *பயிரல்* என ஒடுங்கியதாகக் கருதலாம். ஆனால் பகுதியானது தொடர்மொழியாகலின் உயிர் நீட்சிக்கு வாய்ப்பில்லாமற் போகிறது. குமாரசாமி ராஜா ஆய்தத்தைக் கடையண்ண நிலைஉரசொலி (Velar Voiceless Fricative) எனக் கொள்வதாகத் தோன்றுவதால் அவரது ஆய்வை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆய்தம் அலைவல்லொற்றாக நமது ஆய்வில் கொள்ளப்படுவதால் சேறல் என்பதும் பயிறல் என்பதும் ஒருதன்மையவாக ஆராயப்படும். செல் என்பது தனிக்குறில் மொழியாகலின் மருங்கொலி இன அலைவல்லொற்றாகத் திரிந்து (அதாவது *செல்-றல் > *செஃ-றல்) பின்னர் கெட்டு அதன் இழப்பை ஈடு செய்யும் வகையில் குறில் நெடில் ஆகிறது. எ-டு. செல்+தல் >*செல்-றல் >*செஃ -றல் > *சே-றல் >சேறல். பயில் என்பது

தொடர்மொழியாகலின் **பயிறல்** தொடர்பான ஆய்வில் இந்தப் பிரச்சனைக்கு இடமில்லை. ஆனால் இந்த ஆய்வினைப் பதப்புணர்ச்சிக்கு விரிவுபடுத்தமுடியாது.

## 12 புதிய தடம் புதிய களம்

**12.1** ஓர் ஆய்வின் போக்கும் அதன் முடிவும் இன்னொரு ஆய்வுக்கான திறவுகோலாக அமையவேண்டும். ஆய்தம் பற்றிய ஆய்வில் அலைவல்லொற்றுகளின் மயக்கம் முக்கியமான அம்சமாகும். ஒரே ஒலிப்பிடத்தைக் கொண்ட இந்த அலைவல்லொற்றுக்களில் முதல் வல்லொற்று ஆய்தம் என்ற நுண்ணொலியன் மூலம் குறிக்கப்படுகிறது. தனிமொழிகளில் இந்த ஆய்த வல்லொற்று ஒடுங்கும் நிலையை, **பஃது > பது, அஃது > அது** ஆகியவற்றில் காணலாம். **பது, அது** ஆகியவை **பஃது, அஃது** ஆகியவற்றின் ஒடுங்கிய வடிவங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு குறிலிடைத்தனி வல்லொற்று அமைந்த சொற்களின் அடிநிலை வடிவங்களைக் கண்டறியமுடியும். இதனைப் பின்வரும் ஆய்வின் மூலம் உணர்த்தலாம்.

23 (1) (*நன்று) > *நஃறு > நறு (நறுமணம்)
(2) (*அன்று) > *அஃறு > அறு (அற்று-வினையெச்சம்)
(3) (*இன்று) > *இஃறு > இறு (இற்று-வினையெச்சம்)
(4) (*வன்று) > *வஃறு > வறு (கருதுக: வற்று, தெலு. வண்டு - சமைத்தல்)
(5) (*கன்று) > *கஃறு > கறு (கன்னட வழக்கு)
(6) (*உன்று) > *உஃறு > உறு-(தமிழ். உறி, தெலு. உட்டி)
(7) (*குன்று) > *குஃறு > குறு
(8) (*நின்று) > *நிஃறு > நிறு
(9) (*மண்டு) > *மஃடு > மடு (DED 3829)
(10) (*தண்டு) > *தஃடு > தடு (கருதுக.தள்ளாதோர், தட்டோர் / புறம்.18.29,30)
(11) (*சுண்டு) > *சுஃடு > சுடு (கருதுக.சுள்ளென்று, சுள்ளை(=சூளை)-குமரிமாவட்ட வழக்கு)
(12) (*பண்டு) > *பஃடு > படு (கருதுக. பள்ளிகொள்)
(13) (*பங்கு) > *பஃகு > பகு
(14) (*வங்கு) > *வஃகு > வகு
(15) (*மிங்கு) > *மிஃகு > மிகு
(16) (*பொங்கு) > *பொஃகு > பொகு (கருதுக. புகை, தெலு. பொய்யி 'அடுப்பு')

(17) (*மொங்கு) > *மொஃகு > மொகு (கருதுக. முகை, தெலு. மொஃகு)

(18) (*விந்து) > *விஃது > *விது (கருதுக. விதை, வித்து)

(19) (*பொந்து) > *பொஃது > *பொது (கருதுக. பொதி, . புதை, பொத்து)

(20)(*கம்பு) > *கஃபு > *கபு >*கவ் (கருதுக. கவ்வை, கவை, கப்பு)

(21) (*தொண்டு) > *தொஃடு > தொடு (கருதுக : தொளை)

12.2 இந்த ஆய்வில் முதலில் குறிக்கப்பெற்றுள்ள அடிநிலை வடிவங்களை நடப்பில் உள்ள வடிவங்களோடு ஒருசேரவைத்து எண்ணமுடியாது. மேலும் இந்த அடிநிலைவடிவங்களை முதன்மை அடிநிலைவடிவங்களாகவும் கருதமுடியாது. முதன்மை அடிநிலை வடிவங்களில் மெல்லொற்றை அடுத்து நிகழும் வல்லொற்று நிலையொலித் தன்மையதாக இருக்கும். மேலே (23)-இல் குறிக்கப் பெற்றுள்ள அடிநிலைவடிவங்களில் மெல்லொற்றை அடுத்து நிகழ்வது அலைவல்லொற்றாகும். இந்த அடிநிலைவடிவங்கள் முதன்மை அடிநிலைவடிவங்களின் திரிபுகளாகும். அடிநிலை வடிவங்களை அடுத்து நிகழும் வடிவங்கள் இன்றி மூன்றாவதாக நிகழும் வடிவங்களை வருவிக்கமுடியாது. குறிலையடுத்தும் வல்லொற்றுகளின் முன்னும் நிகழும் மெல்லொற்றுகளும், அலைவல்லொற்றுகளும் கெடுவதற்கு வாய்ப்பில்லை. ஆகவேதான், **வறு** என்பது ***வஃறு** என்பதன் ஒடுக்கமாகக் கருதப்படுகின்றது.[11] குறிலையடுத்தும் வல்லொற்றுகளின் முன்னும் நிகழும் மெல்லொற்றுகள் கெடுவதற்கு வாய்ப்பில்லையாகலின் (23)-இல் வருவிக்கப்பட்டுள்ள **நறு, அறு** முதலான வடிவங்களை அடிநிலைவடிவங்களிலிருந்து நேரடியாகப் பெறமுடியாது. எனவேதான் இடைநிலைவடிவங்களாக ஆய்த வல்லொற்றுகள் அமைந்த வடிவங்களை அமைத்து அவற்றினின்றும் **நறு, அறு** முதலான வடிவங்கள் வருவிக்கப்படுகின்றன.

## 13 ஆய்தம் – சில புறச்செய்திகள்

ஆய்தம் பற்றிய இந்த ஆய்வை முடிப்பதற்குமுன் மூன்று செய்திகளைக் குறிப்பிட்டாக வேண்டும். 1. ஆய்தம் நிகழும் தனிமொழிகளும், புணர்மொழிகளும் மிகக்குறைந்த எண்ணிக்கையில் பழந்தமிழில்மட்டுமே காணப்படுகின்றன. இதனின்றும் தமிழ்ப்புணரியலில் ஆய்தம் பற்றிய புணர்ச்சி விதிகளை உயிர்ப்புள்ள ஆக்கத்திறன் மிக்கவையாகக் கருத வாய்ப்பில்லை. எனவே ஆய்தந்தொடர்பான சந்திவிதிகளை நடப்பிலிருந்த தொல்காப்பியத் தமிழுக்குரியனவாகக்

கொள்ளாமல் தொல்சந்திக்கு (Proto Sandhi) உரியனவாகக் கருதவேண்டியுள்ளது. இதனால்தான் பழந்தமிழில் **நல்+தூண்** என்பது ***நஃறூண்** என்றும் **கல்+தூண்** என்பது ***கஃறூண்** என்றும் திரியவில்லை. ஆய்தத்திரிபு விதியானது தமிழிலும் தொடர்ந்து செயல்பட்டிருந்தால் ***நஃறூண், *கஃறூண்** போன்ற வடிவங்கள் இயல்பானவையாக ஏற்கப்பட்டிருக்கும். 2. ஆய்தம் தமிழ் தவிர தெலுங்கு, கன்னடம் ஆகிய திராவிட மொழிகளில் நிகழவாய்ப்பில்லை. ஏனெனில் இந்த மொழிகளில் அலைவல்லொற்றுகளும் நிலைவல்லொற்றுகளும் ஒலியன்களாக நிகழ்கின்றன. தமிழில் இத்தகைய நிலை இன்மையால் அலைவல்லொற்றுகளைக் குறிக்கும் நுண்ணொலியன்களாக ஆய்தக் குறியீடு அமைகிறது. 3. இக்காலத் தமிழில் ஆய்தம் அலைவல்லொற்றாக ஒலிக்கப்பெறாமல் **ஹ்** என்ற ஒலிப்பினதாகக் கொள்ளப்பட்டு அவ்வாறே ஒலிக்கவும்படுகிறது. இதன்காரணமாக **அஃது** என்பது **அ(த்)து** (அதாவது, ***addu***) என ஒலிக்கப்பெறாமல் **அஹ்து** என ஒலிக்கப்படுகிறது. இந்த ஒலிப்புமாற்றத்துக்கு என்ன காரணம்? ஆய்தம் பற்றிய பி.எஸ். சுப்ரமணிய சாஸ்திரியின் (P.S. Subrahmanya Sastri 1997 (Second Edition):69) சிந்தனைப்போக்கு இங்கே நினைவுகூரத்தக்கது. பழங்காலத்திலேயே ஆய்தமானது வடமொழி விசர்க்கமாக ஒலிக்கப்பெற்றது என்ற மு. இராகவய்யங்காரின் கருத்தை அடியொற்றி, கடையண்ண ஒலியின்முன் ஜிஹ்வாமூலியமாகவும், இதழொலியின் முன் உபத்மானீயமாகவும் ஒலிக்கப்படும் விசர்க்கம் வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பெற்றுத் தமிழில் அதன் பயன்பாடு எல்லா நிலைவல்லொற்றுகளின் முன்னும் விரிவுபடுத்தப்பட்டுவிட்டது என்று கருதுகிறார் சாஸ்திரி.[12] இந்தக் கருத்து நமக்கு உடன்பாடேயாயினும் ஆய்தத்தினை அடுத்து நிகழ்வது நிலைவல்லொற்று என்ற கூற்றுக்கு நாம் உடன்படவில்லை. இந்த வல்லொற்று ஒலியனியல் நிலையில் நிலைவல்லொற்றாகவும் ஒலிப்பியல் நிலையில் அலைவல்லொற்றாகவும் நிகழ்வதே உண்மையாகும். ஆய்தம் பற்றிய தொல்காப்பியரின் விளக்கத்தை ஏற்றுக்கொள்ளும் சுப்ரமணிய சாஸ்திரி ஆய்தத்தை 'a kind of arrested voiceless spirtant resembling in its sound the first part of the affricate reversed...' (p.67) என்று குறிப்பிடுவது நேரிதாகத் தோன்றவில்லை. ஏனெனில் ஆய்தம் என்பதை நிலையொலியாகக் கொள்வதற்கான வாய்ப்புச் சிறிதும் இல்லை. தமிழ் எழுத்தியலுக்குப் பொருந்தாத இன்றைய ஆய்தத்தின் ஒலிப்பியற்பண்பு எப்படி, எப்பொழுது மேற்கொள்ளப்பட்டது என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை என்று குறிப்பிடும் சாஸ்திரி மாறுபட்ட இந்து

ஒலிப்பியற்பண்பு கி.பி. 8 அல்லது 9ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழில் இடம் பெற்றிருக்கக்கூடும் என்று கருதுகிறார் (I cannot definitely find out how and when this unetymological pronunciation of ஃ came into existence. But I may say that it may have come after the 8th or 9th century A.D.... (p.68)). வடமொழி நெடுங்கணக்கில் உயிர் நெடுங்கணக்கின் ஈற்றில் விசர்க்கம் நிகழ்வதைப்போலவே தமிழிலும் உயிர்நெடுங்கணக்கின் ஈற்றில் ஆய்தம் வைக்கப்பட்டுள்ளது. இதனின்றும் தமிழ் நெடுங்கணக்கில் ஆய்தத்தின் ஒலிப்புமுறை மட்டுமல்ல அதன் வைப்பிடங்கூட வடமொழி நெடுங்கணக்கின் தாக்கத்துக்கு உள்ளாகியிருக்கும் உண்மை தெளிவாகின்றது.

## குறிப்புகள்

1. இதுதொடர்பாகக் கோதண்டராமனில் (1989) மேற்கொள்ளப் பட்ட ஆய்வு கருத்தில் கொள்ளத்தக்கதாகும். இந்த ஆய்வில் NP(=[NP]) என்பதன் திரிபுகளுள் ஒன்றாகிய NB என்ற மெய்யொலிகளின் மயக்கத்தைக் கொண்ட அடிநிலைவடிவங்கள் BB எனத் திரிகையில் முதலில் நிகழும் அலைவல்லொற்றுத் தமிழில் ஆய்த நுண்ணொலியன் மூலம் உணர்த்தப்படுகிறது என்றக் கருத்து வலியுறுத்தப்படுகிறது.

2. PD *H had a relic reflex in the peculiar sound called *āytam* [āydam] (Bh. Krishnamurthi; 1977:145). Further, referring to the phonetic nature of laryngeal *H, Krishnamurthi (1997:148) observes that 'it was not a stop or spirant but a kind of semi vowel, perhaps glottal in origin'.

3. Primary *ḥ* in Tamil is a reflex of PD *H, and secondary (sandhi derived) *ḥ* is a hyperstandard spelling, and is therefore, spurious (Bh. Krishnamurthi 1997:148).

4. In the case of forms resulting from external sandhi, *kaḥ-ṯītu* and *muḥ-ṭītu* there is no phonologcal justification for *l, ḷ* to become *ḥ* before an alveolar *ṯ* or a retroflex *ṭ;* also the fact that *ṯ* and *ṭ* occurred as second members presupposed the first members also to be the same *ṯ* and *ṭ* in assimilative sandhi. That was why *Tolkāppiyam* said that *ḥ* had the same point of articulation as the following voiceless stop. These are, therefore, a case of reverse or hyperstandard spellings of ṯṯ and *ṭṭ* to keep the morphological identity of the conjoined words (Bh. Krishnamurthi 1997:147).

5. அடைப்புக் குறிகளுக்குள் நிகழும் வல்லொற்றுகள் ஒலிப்பியல் நிலையில் அமைந்த அலைவல்லொற்றினவாகவும், ஒலியனியல் நிலையில் நிலைவல்லொலியன்களாகவும் கருதப்படும்.

6. நெற்கதிர் (<நெல்+கதிர்), புற்றரை (<புல்+தரை), முட்புதர் (<முள்+புதர்), புட்டேம்ப (<புள்+தேம்ப/பத்துப்.9.4) முதலானவை இரண்டாம் வகைப் புணரியல் மரபுக்கு இசைந்தவையாகும். இங்கே வருமொழிமுதல் வல்லொற்று நிலையொலித் தன்மையை இழக்காமையால் நிலைமொழியீற்று மருங்கொலிகள் நிலையொலித் தன்மை கொண்ட இனவல்லொற்றுகளாகத் திரிந்தமைகின்றன.

நெற்கதிர், முட்புதர் போன்ற புணர்மொழிகளை *நெல்க்கதிர், *முள்ப்புதர் போன்ற அடிநிலைவடிவங்களிலிருந்து வருவிப்பார் குமாரசாமிராஜா (N.Kumaraswamy Raja 1980:1-10) இந்த ஆய்வு நமக்கு ஒருகுறிப்பிட்ட நிலையில் உடன்பாடே (பார்க்க. கோதண்டராமன். இரா, **மருங்கொலிப்புணர்ச்சி** (வெளியாகவேண்டிய ஆய்வுக்கட்டுரை.)) ஆனால், இங்கே நாம் இதனைக்கருத்தில் கொள்ளவில்லை. இதனால் ஆய்தம்பற்றிய நமது ஆய்வு பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை.

7. பவணந்தியார் (12-13-ஆம் நூற்றாண்டினர்) தெவ் என்பதன் வகரம் இருவகைப்புணர்ச்சியிலும் மகரத்தின்முன் மகரமாகத்திரியும் என்று குறிப்பிடுகிறார் (நன்.236). எ-டு. தெவ்+மன்னர்/முனை தெம்மன்னர், தெம்முனை. இந்த ஆய்வு ஏற்புடையதாயின் அவ்+கடிய என்பதில் ககரம் அலைவல்லொற்றாகத்திரிந்து பின்னர் அதன் தாக்கத்தால் நிலைமொழி வகரம் ககர அலைவல்லொற்றாகத் திரிந்தது எனக்கொள்ளலாம். இதனைப்பின்வரும் விதிகளின் மூலம் உணர்த்தலாம்.

(1) $P_{\alpha}>[B_{\alpha}]$/v- Eg.av+kaṭiya>av-[g]aṭiya

(2) v>$[B_{\alpha}]$/- $B_{\alpha}$ Eg.av+(g)aṭiya)>a(g) - [g]aṭiya

இந்த ஆய்வில் P,B என்பவை முறையே நிலைவல்லொற்றையும் அலைவல்லொற்றையும் குறிக்கும். $\alpha$ என்பது வல்லொற்றின் ஒலிப்பிடத்தைக்குறிக்கும். இந்த ஆய்வின்மூலம் a[g]-[g]aṭiya என்பது தமிழில் அஃகடிய என்று குறிக்கப்படும்.

8. படர்க்கையில் ஆண், பெண் உயர்வு கருதிய நிலையில் ஆண்பால், பெண்பால் ஒருமை வினைமுற்றுகளும் உயர்வு கருதாத நிலையில் ஒன்றன்பால் வினைமுற்றுகளும் ஹவ்யக கன்னடத்தில் நிகழ்கின்றன. எடுத்துக்காட்டாக, **வந்தான், வந்தாள்** ஆகியவற்றுக்கு நிகரான ஹவ்யக வினைகள் அம்மொழியில் ஆண்பால், பெண்பால்

உயர்பொருமையை உணர்த்தும். **வந்தது** என்பதற்கு நிகரான வினை ஹவ்யக கன்னடத்தில் உயர்வு கருதாத ஆண்பால், பெண்பால் வினையாய் வழங்கும்.

9. குமாரசாமி ராஜா (Kumaraswami Raja, N. 1969) இரண்டு வகையான மீட்டுருவாக்கங்களை அதாவது *NP, *NPP ஆகியவற்றை வலியுறுத்துவார். இதன்படி **பாடின்று** என்பது ***pāti<u>n</u>tu*** எனவும் **பாடிற்று** என்பது ***pāti<u>n</u>ttu*** எனவும் மீட்டுருவாக்கம் செய்யப்படும். இதேபோல ***செய்தன்று*** என்பது ***ceyta<u>n</u>tu*** எனவும் **செய்தற்று** என்பது ***ceyta<u>n</u>ttu*** எனவும் மீட்டுருவாக்கம் செய்யப்படும். கன்னட வினைமுற்றுக்களைப் பொறுத்தவரை குமாரசாமி ராஜாவின் மீட்டுருவாக்கக் கோட்பாட்டின்படி **சிக்கிஃது தப்பித்து** ஆகியவற்றின் அடிநிலை வடிவங்களை ***cikkintu, *tappinttu*** எனவும் **தந்தஃது, கண்டத்து** ஆகியவற்றின் அடிநிலை வடிவங்களை ***tantantu, *kaṇṭanttu*** எனவும் அமைக்க வாய்ப்புள்ளது. இந்தக் கோட்பாட்டினை நாம் ஆய்தம் பற்றிய தற்போதைய ஆய்வில் கருத்தில் கொள்ளவில்லை. இதற்கான காரணங்களைக் குறிப்பிடவும் இங்கே வாய்ப்பில்லை.

10. ஒரு மாற்று ஆய்வுக்கான வாய்ப்பையும் நாம் இங்கே எண்ணிப்பார்க்கலாம். **செய்தன்று** வாய்பாட்டு வினைகளில் நிகழும் **–அன்–** சாரியையானது **-அம்–** என்பதன் திரிபாகக் கொள்ளத்தக்கதாயின் **செய்தன்று** வாய்பாட்டு வினைகளின் அடிநிலை வடிவங்களைச் ***செய்தந்து (<செய்தம்–து)** வாய்ப்பாட்டினவாக இனங்காணவேண்டும். இதனைக் கருத்தில்கொண்டு பாடின்று வினையின் அடிநிலை வடிவத்தையும் ***பாடிந்து** (**பாடிம்–து**) எனக் குறிப்பிடவேண்டும். இந்த அடிநிலைவடிவங்கள் உண்மை நிலையை உணர்த்துவதாயின் செய்தன்று வினைகள், **பாடின்று/பாடிற்று** வினை ஆகியவற்றின் வரலாற்றைவிட **–அத்து, –அஃது, –இத்து, –இஃது** ஆகிய ஈறுகளைக்கொண்ட கன்னட வினைமுற்றுக்களின் வரலாறு தொன்மையானதாகக் கருதப்படும். அம்மீற்று அஃறிணைப் பெயர்கள் அன் ஈற்றினவாகப் பழந்தமிழில் பயின்று வழங்குகின்றன. எ–டு. **மரம்** (பதி.15.3)/ **மரன்** (பத்துப். 6.12), **நிலம்** (அகம்.21.21)/ **நிலன்** (அகம்.12.2), **பொலம்** (குறுந்.67.4)/ **பொலன்** (பதி.11.19). இத்தகைய அஃறிணைப் பெயர்கள் தெலுங்கில் அன் ஈற்றினவாக நிகழும் நிலையும் காணப்படுகிறது. எ–டு. தமிழ். **மரம்**, தெலு. **ம்ரானு**, தமிழ். **குளம்**, தெலு. **கொலனு**. செய்யும் வாய்பாட்டுத் தமிழ் வினைகள் தெலுங்கில் னகர ஈற்றினவாக நிகழ்கின்றன. எ–டு. தமிழ். **பாடும்**, தெலு. **பாடுனு**. பழந்தமிழில் நிகழும் **செய்தமாறு, செய்தக்கால்**

வாய்பாட்டு வினைகள் *செய்தம் வாய்பாட்டு வினைகளின் மீது அமைந்தவை. ஆனால், இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு **செய்தந்து, பாடிந்து** வினைகளின் திரிபுகளாகச் **செய்தன்று, பாடின்று** வினைகளைக் கருதமுடியுமா என்பது மேலும் ஆய்வுக்குரியதாகும். இந்த நிலையில் *-**அந்து** >*-**அன்று**, *-**இந்து** > -**இன்று** ஆகிய மாற்றத்தை இப்போதைக்கு ஒரு கருதுகோளாகத்தான் கொள்ளமுடியும்.

11. ***வஃறு** (அதாவது, ***vaddu**) ஒரு தொல்வழக்காகும். இத்தகைய தொல்வழக்குகள் திராவிட மொழிகளின் வளர்ச்சிப் போக்கில் எந்தக்கட்டத்துக்கு உரியவை என்பது விரிவான ஆய்வுக்கு உரியதாகும். கிருஷ்ணமூர்த்தியின் மிடற்றொலிக் கோட்பாடு ஆய்தம் நிகழும் தனிமொழிகளின் அடிநிலை வடிவங்களை இனங்காணத் துணைபுரியவில்லை.

12. '.....it seems to me that the Visarga which is used before a guttural and a labial as *jihvāmūliya* and *upadhmānīya* was borrowed from Sanskrit and extended in its use before all the voiceless consonants' (P.S. Subrahmanya Sastri 1997:69)

### சுருக்க விளக்கம்

அகம்-அகநானூறு, இளம்-இளம்பூரணம், எழுத்து-எழுத்ததிகாரம், குறள்-திருக்குறள், குறுந்-குறுந்தொகை, சிலம்பு-சிலப்பதிகாரம், தெலு-தெலுங்கு, தொல்-தொல்காப்பியம், நச்-நச்சினார்க்கினியம், நற்-நற்றிணை, நன்-நன்னூல், பத்துப்-பத்துப்பாட்டு, பதி-பதிற்றுப் பத்து, புறம்-புறநானூறு, பொருள்-பொருளாதிகாரம்.

DED-Dravidian Etymoligical Dictionary, IFV-Impersonal Finite Verb

## பார்வை நூல்கள் & கட்டுரைகள்

1. கோதண்டராமன், இரா., 'ஆய்தம்-ஒரு தீர்வை நோக்கி', புதுவைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் 16-08-1989-இல் நடைபெற்ற இலக்கிய இலக்கணக்கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை.

2. Acharya, A.S., **Halakki Kannada,** Deccan College, Post Graduate and Research Institute, Poona, 1967.

3. Balasubramanian, K., *'Historical Development of A:ytam'.* **Dravidian Linguistics - V** (Proceedings of the Seminar on Dravidian Linguistics - V). S. Agesthialingom and P.S.Subhrahmanyam(Eds.), Annamalai University, Annamalai Nagar, 1976.

4. Bhat, D.N.S., **An Outline Grammar of Havyaka Kannada,** Deccan College, Post Graduate and Research Institute, Poona, 1971.

5. Krishnamurthi, Bh., *'Proto Dravidian Laryngeal *H Revisited',* **PILC** Journal of Dravidic Studies - 7:2, Pondicherry, 1997.

6. Kumaraswamy Raja, N., **Post Nasal Voiceless Plosives in Dravidian,** Annamalai University, Annamalai Nagar, 1969.

7. ______________, **Āytam and Vowel Length,** Āyvukkōvi-5, Madras, 1973.

8. ______________, **Three Consonant Clusters in Tamil,** In A Festschrift for Prof.M.Shanmugam Pillai, Israel, M., et. al(Eds), Madurai Kamaraj University, Madurai, 1980.

9. Subrahmanya Sastri, P.S., (First Edn.1934) **History of Grammatical Theories in Tamil,** The Kuppuswami Sastri Research Institute, Chennai, 1997.

# தொல்காப்பியரின் புணர்ச்சி வருணனைக் கோட்பாடு

பெ. சுயம்பு

## புணர்ச்சி

சொற்புணர்ச்சி பற்றிய மொழியியலார் அணுகுமுறை வேறு; தமிழியலார் அணுகுமுறை வேறு. முன்னது புறநிலையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது; பின்னது புறநிலையோடு பொருள் நிலையையும் அடிப்படையாகக் கொண்டது (ச.வே. சுப்பிரமணியன், 1967:106). ஒரு தொடரில் அடுத்தடுத்து அமைகிற இரு சொற்கள் ஓசை இடையீடின்றி இயைவது புணர்ச்சி என்பது பொதுவாக, மொழியியலார் தரும் விளக்கம் (கோ. விஜயவேணுகோபால், 1968:179). ஆனால் இலக்கணிகள்- குறிப்பாகத் தமிழ் இலக்கணிகள் ஓசை இயைபாகிய புறநிலையை மட்டுமன்றி, பொருள் தொடர்புடைமையாகிய அகநிலையினையும் புணர்ச்சிக்கு உரிய நோக்கமாகக் கொள்கின்றனர். தவிர, ஓசை இயைபும் பொருள் தொடர்புடைமையும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரித்தற்கியலாதவை என்றும் கருதுகின்றனர். இதனை,

> '...................அல்வழி வேற்றுமைப்
> பொருளின் பொருந்துழி நிலைவரு மொழிகள்
> இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே'

(நன்னூல், 151, இலக்கண விளக்கம், 53) என்பது போன்ற இலக்கண விதிகளும் 'பொருள் இயைபுடனும் இயைபின்றியும் வரும். ஓசை இடையறவுபடாமை வரும்' (இலக்கணவிளக்கவுரை,53) என்பது போன்ற உரைச்செய்திகளும் தெளிவுபடுத்துகின்றன.

## தொல்காப்பியரின் புணர்ச்சி நோக்கம்

தமிழ் இலக்கணிகளின் அணுகுமுறை மரபுவழி வந்ததாகும். தொல்காப்பியம் முதலாக இன்று கிடைக்கப்பெறுகிற இலக்கண நூல்களிலும் உரைகாரர்களின் கொள்கைகளிலும் 'ஓசையியையும் பொருளியையும் உருவாக்குவதே புணர்ச்சியின் நோக்கம்' என்ற அணுகுமுறையே காணப்படுகிறது. இந்நோக்கம் தொல்காப்பியத்தில் கூற்றுமுறையில் கிளக்கப்படவில்லை; ஆயினும் புணர்நிலைச் சுட்டு, புணர்மொழி, புணர்க்குங்கால், ஒட்டுதல் போன்ற சொல் தொடர்களாலும் பொருள்தெரிபுணர்ச்சி, புணரியல் நிலையிடைப் பொருள், வேற்றுமைப்பொருள் போன்ற தொடர்களாலும் முறையே ஓசையியையும் பொருளியையும் உணர்த்தப்பெற்றுள்ளன.

தமிழ் இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் ஏனைய நூல்களிலிருந்து வேறுபட்டுத் திகழ்கிறது. பிற நூல்களில் உருபனியலைக் குறியாகக் கொண்டு எழுத்து, சொல்லிலக்கணங்கள் விவரிக்கப்படுகின்றன. ஆனால் தொல்காப்பியத்தில் உருபனியலின் இடத்தைத் தொடரனியல் பெறுகிறது. தொல்காப்பிய எழுத்ததிகார, சொல்லதிகார இயல்களின் எண்ணிக்கையும் அமைப்பும் இதனை வெளிப்படையாகக் காட்டுகின்றன. சிறப்பாக, இந்தக் குறியினைப் புணர்ச்சி குறித்த இயல்களிலும் வருணனைக் கோட்பாடுகளிலும் பரவலாகக் காணமுடிகிறது.

மொழியின் நோக்கம் கருத்துப் புலப்பாடே. இந்தப் புலப்பாடு சொல்லளவிலன்றி, தொடரளவிலேயே முழுமையாகவும் செம்மையாகவும் நிறைவேறுகிறது. தொடரமைப்பில் ஓசை இடையீடு அமையுங்கால், கருத்துப்புலப்பாட்டிலும் இடையீடு உண்டாகும். எனவே புணர்ச்சி என்பது ஓசை இடையீட்டுத் தடுப்பையும் பொருள் புலப்பாட்டையும் நோக்கமாகக் கொண்டது எனலாம். வேறு வகையில் கூறுவதாயின், ஒலியனியற் கூறுகளையும் தொடரனியற் கூறுகளையும் உள்ளடக்கியதே புணர்ச்சி எனலாம். தொல்காப்பியரின் புணர்ச்சி குறித்த விளக்கமாக இதனைக் கொள்ளலாம். தொல்காப்பியப் புணரியலின் 5ஆம் நூற்பாவில் இக்கருத்து வெளிப்படையாக உளது. உயிர்+உயிர், உயிர்+மெய், மெய்+உயிர், மெய்+மெய் என்பன ஒலியனியற் செய்தி. நிறுத்த சொல், குறித்துவருகிளவி என்பன தொடரனியற் செய்தி.

ஒரு முற்றுத் தொடரின் கருத்துச் செறிவுள்ள அமைப்பு அத்தொடரிலுள்ள அண்மை உறுப்புகளும் அவற்றின் முறையான தொடர்ச்சியுமே ஆகும்(எச்.ஏ.கிலீசன், 1979:149). முறையான தொடர்ச்சி அண்மையுறுப்புகளின் ஒன்றையொன்று அவாவுகிற கருத்துத் (பொருள்) தகுதியினையும் ஓசையியைபினையும் ஒட்டி அமையும். இவை

இரண்டும் தொடரனியலுக்கு இன்றியமையாதனவாகும். எனவே கோ. விஜயவேணுகோபால் (1968:183) கூறுவது போன்று, புணர்ச்சி இலக்கணத்தைத் தொல்காப்பியர் தொடரனியலை மனத்திற் கொண்டே விவரிக்கிறார் என்பது தெளிவாகிறது.

எழுத்து(ஒலி), சொல், தொடர், பொருள் என்னும் மொழியின் அனைத்துக் கூறுகளையும் படிப்பவர் அல்லது பயனாளிகளின் முழுமையான புலப்பாட்டுத் திறனுக்கு ஏற்ப விவரிப்பதே சிறந்த இலக்கணநூலாகும். தொல்காப்பியம் எழுத்து முதலிய அனைத்துக் கூறுகளையும் விவரிக்கிறது; பயனாளிகள் எளிதில் புரிந்துகொள்கிற வகையில் செய்திகளை நிரலாகத் தெரிவிக்கிற வருணனைக் கோட்பாடுகளையும் பின்பற்றுகிறது. இதனால் மிகத் தொன்மைக் காலத்தே தோன்றிய முழுமையான, உலகின் சிறந்த இலக்கண நூல் என்ற பெருமையைத் தொல்காப்பியம் பெற்றுள்ளது.

பயனாளி எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய வகையிலான சிறந்த வருணனைக் கோட்பாடுகளைத் தொல்காப்பியர் கையாள்கிறார் என்பதற்கு, அவர் புணர்ச்சி இலக்கணத்தை விவரிக்கிற விதம் சிறந்த சான்றாகும். இவ்வருணனைக் கோட்பாடுகள் பயனாளிகள் புணர்ச்சி விதிகளை எளிதில் உணர்ந்து, மனத்தில் பதித்து மொழி வழக்கில் பேணுதற்கான உத்திகளாக அமைக்கப்பெற்றுள்ளன. புணர்ச்சி இலக்கண இயல்களின் எண்ணிக்கை, கலைச்சொற்களின் அமைப்பு, விவரிக்கப்படுகிற விதிகள், அவ்விதிகளைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் சொல்லுகிற விதம், அவ்விதிகளை முறைப்படுத்தி நெடுங்கணக்கு எழுத்துக்களின் அடிப்படையில் நிரல்படுத்துகிற முறை, மாற்றுருபுகளைத் தருகிற புணர்ச்சிச் செய்கைகளை விவரிப்பதற்காக அடிநிலைக் கிளவிகளைத் தெரிவு செய்கிற தன்மை போன்ற வருணனைக் கோட்பாடுகள் யாவும் பயனாளிகள் எய்துகிற பயனை மையமாகக் கொண்டவையே. செ.வை. சண்முகத்தின் (1994:25) இயல் அமைப்பு, இயல்களின் வரிசை ஆகியவைகளிலும் சமூக உணர்வு அடங்கியுள்ளது என்னும் கருத்தும் இங்குக் குறித்தற்குரியது.

## புணரியல்கள்

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் புணரியல் என்னும் பெயருக்கு உரியன இவ்வியலாகிய புணரியலும், பின்னர் உள்ள தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஐந்தும் ஆக ஆறு இயல்கள் ஆம். எனினும் புணரியல் என்னும் இவ்வியல் பொதுப் புணரியல் என்றும், மற்றையன சிறப்புப் புணரியல்கள் என்றும் கொள்ளலாம். எனவே இதனகத்துச்

சொல்லப்படும் செய்திகள் மற்றைய புணரியல்களுக்குரிய பொது இலக்கணங்களாகும் என்பது கொள்ளல் வேண்டும். அதனால் இவ்வியல் அடைமொழியின்றிப் பொதுவில் புணரியல் எனப்பட்டது (ஆ.சிவலிங்கனார், 1982:x).

புணரியலில் புணர்ச்சிக்கு உரிய கருவிகளாகிய நிறுத்த சொல், குறித்துவருகிளவிகளின் இயல்பு, புணர்ச்சியின்போது நிகழுகிற செய்கை, அச்செய்கையில் இடம்பெறுகிற எழுத்து, சாரியை ஆகியவற்றின் வடிவ மாற்றம் எனும் செய்திகள் வரையறுத்துச் சுட்டப்படுகின்றன. இவை யாவும் புணர்ச்சி என்பதற்குச் சுருக்கமான அறிமுகமாகக் காணப்படுகின்றன. இவை புணர்ச்சியின் வரைவிலக்கணமாகக் (definition) கருதத் தக்கவை. ஆதலால் தொல்காப்பியர் பயனாளிகளுக்குப் புணர்ச்சி வரைவிலக்கணத்தை அறிமுகம் செய்யுமாறு புணரியல் என்ற தனியியலை உருவாக்கினார் எனலாம்.

தொகைமரபு இன்றியமையாதனவும் பொதுவானவுமாகிய புணர்ச்சி விதிகள் சிலவற்றைத் தொகுத்துச் சுட்டுகிறது. இவ்வியலில் கூறப்பெறுகிற புணர்ச்சி விதிகள் யாவும் பின்னர் விவரிக்கப் பெறுகிற சிறப்பு விதிகளின் இயல்களான உருபியல் முதலியவற்றிற்குத் தொகையாக அமைந்துள்ளன.

பெயர்ச்சொல்லோடு வேற்றுமை உருபுகள் சேர்ந்து ஒரு சொல் நீர்மையாக அமைகிற புணர்ச்சி தனிச்சொற்கள் (free forms) இரண்டு சேர்ந்து அமைகிற புணர்ச்சியிலிருந்து வேறுபட்டது என்று தொல்காப்பியர் கருதுகிறார். உருபுப் புணர்ச்சி பெயர்ச்சொல்லாகிய தனிச்சொல்லோடு இடைச்சொல்லாகிய (உருபாகிய) சார்பு வடிவம் (bound morph) சேர்தலாகும். இதனால் இப்புணர்ச்சி அகப்புணர்ச்சி எனவும் ஏனையது புறப்புணர்ச்சி எனவும் பிரித்துரைக்கப்படுகின்றன. தொல்காப்பியரும் உருபுகளின் புணர்ச்சிக்கெனத் தனியியலை அமைத்துள்ளார்.

உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் மூன்றும் முறையே உயிர், மெய், குற்றியலுகர ஈற்றுச் சொற்களோடு பிற சொற்கள் சேர்தலை விவரிக்கின்றன. வருமொழி முதலில் உயிர், மெய் என வெவ்வேறு எழுத்துக்கள் வருதலால், சொல்லீற்றிலுள்ள எழுத்துக்களின் அடிப்படையில் விதிகள் தொகுக்கப்பெற்று இயல்களாக்கப்பெற்றுள்ளன.

தொல்காப்பியர் குற்றியலுகரம் ஏனைய இரு சார்பெழுத்துக் களினின்றும் வேறுபட்டதாகக் கருதுகிறார். தமிழ் ஆய்தம் தன்னை அடுத்து வரும் வல்லெழுத்தின் ஒலியை நலியச் செய்து - உள்ள

ஒலியை நுணுக்கி உரசொலியாக மாற்றும் ஓர் ஒலியூக்கியாகும் (பெ.சுயம்பு, 1987:166). குற்றியலிகரம் யகரத்தின் சார்பால் கட்டுண்டு தோன்றுகிற ஒரு மாற்றொலி. இவை இரண்டும் சொற்களின் இடையில் அமைவன. ஆனால் குற்றியலுகரமோ சொல்லின் இறுதியில் வருகிறது. முற்றியலுகரத்தோடு வேற்றுநிலை வழக்கில் அமைந்து பொருளை வேறுபடுத்தி ஒலியனாக அமைகிறது. ஒலியளவில் குற்றியலுகரம் உயிராக ஏற்கப்பெற்றாலும், புணர்ச்சிச் செய்கையினால் மெய்யெழுத்துக் களை ஒத்துள்ளது. இதனால் தொல்காப்பியர் குற்றியலுகரவீற்றுச் சொற்களின் புணர்ச்சிக்கு எனத் தனி இயலை வகுக்கவேண்டியதாயிற்று. எண்ணுப் பெயர்கள் வழக்கில் பேரளவில் திரிந்து பல மாற்றுருபுகளைப் பெறுகின்றன. எண்ணுப் பெயர்களின் பரவலான வழக்கும் அதற்குத் தனி இயலை அமைத்திடத் தூண்டியிருக்கலாம். குற்றியலுகரப் புணரியலில் மிகப் பெரும்பாலன எண்ணுப் பெயர் குறித்தவையே.

## கலைச்சொற்கள்

இலக்கணத்தைப் பொறுத்தவரையில் கலைச்சொல்லாக்கும் முறையும் இலக்கண ஆசிரியர்களின் இலக்கணக் கோட்பாட்டைப் புலப்படுத்த வல்லது (செ.வை. சண்முகம், 1994:25). தமிழ் இலக்கண ஆசிரியர்கள் படைத்துள்ள கலைச்சொற்கள் இலக்கண விதிகளின் செறிவாகத் திகழ்கின்றன. புணர்ச்சி இலக்கணத்தை விவரிக்கும் நோக்கில் தொல்காப்பியர் நிறுத்த சொல், குறித்துவருகிளவி, புணர்நிலைச் சுட்டு, மொழிபுணர் இயல்பு, மெய்பிறிதாதல், சாரியை மொழி, உடம்படுமெய் போன்ற கருத்துச் செறிவுள்ள கலைச்சொற்களை உருவாக்கியுள்ளார். இவற்றுள் மெய்பிறிதாதல், சாரியை மொழி, உடம்படுமெய் ஆகியன ஓசையியைபு பற்றிய சொற்களாகும்.

நிறுத்த சொல், குறித்து வருகிளவி, மொழி புணர் இயல்பு ஆகிய தொடர்கள் அடுத்தடுத்து வருகிற இரு சொற்களும் தொடரியல் உறவுடன் இணைகின்றன என்பதை உணர்த்துகின்றன (கோ. விஜய வேணுகோபால், 1968:180, செ.வை. சண்முகம், 1994:26).

இலக்கண விதிகளை விவரிக்கும்போது தொல்காப்பியர் சில நெறிகளைக் கையாள்கிறார். அவை:

1. பொதுவிதி கூறித் தொடர்ந்து சிறப்பு விதிகளை விவரித்தல்.
2. வழக்கிலுள்ள எல்லா வடிவங்களையும் ஒருங்கிணைத்து ஓர் அடிநிலைக்கிளவியின் வழி விதிகளைக் கூறுதல்
3. வழக்கிலுள்ள வடிவத்திற்கு ஏற்ப விதிகளை உருவாக்குதல்
4. அல்வழிப் புணர்ச்சியைக் கூறி, வேற்றுமைப் புணர்ச்சியை விவரித்தல்

5. நெடுங்கணக்கு முறைப்படி, பொது-சிறப்பு விதிகளை நிரல்படுத்துதல்
6. மாட்டேறு வாயிலாகச் சுருங்கச் சொல்லுதல்
7. உலக வழக்கும் அதிலிருந்து வேறுபடுகிற செய்யுள் வழக்கும் விவரிக்கப்படுதல்

## சிறப்பு விதிகள்

இந்நெறியின் வழித் தொல்காப்பியர் ஒரு குறிப்பிட்ட எழுத்தை ஈறாகக் கொண்ட சொற்கள் பலவற்றுக்குப் பொதுவான விதிகளைச் சுட்டுகிறார். தொடர்ந்து அந்தப் பொது விதிக்குள் அடங்காத சொற்கள் சிலவற்றுக்கு உரிய சிறப்பு விதிகளைத் தனித்தனியே சுட்டிச் செல்கிறார். சிறப்புச் சொற்களைச் சில வரன்முறைக்கு உட்பட்டுத் தொல்காப்பியர் தெரிவு செய்துள்ளார். வேணவா, விண்ணத்துக்கொட்கும், பொலம் போல்வன பேச்சு வழக்கிலிறந்து, செய்யுள் வழக்கில் நிலைத்தவை. நாடுரி, தேத்திறால், சாத்தந்தை, சாக்குத்தினான் போன்றவை பேச்சு வழக்கில் நிலைத்தவை. தொண்ணூறு, தொள்ளாயிரம் போல்வன எழுத்து, பேச்சு எனும் இருவகையிலும் வழங்கியவை. தொல்காப்பியர் வழக்கில் இருக்கிற சொல் அல்லது தொடரை நினைவிலிருத்தி, அவ்வடிவத்தை உருவாக்குகிற வகையில் புணர்ச்சி விதிகளை அமைத்து விவரிக்கிறார். அவ்வாறு விவரிக்குங்கால் ஒலிமாற்ற இயல்புக்கு உட்பட்டும் முரணாகவும் விதிகள் அமைந்துள்ளன. எனினும் தொல்காப்பியர் விதி ஒழுங்கு குறித்துக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. மொழியின் மரபினைப் பேணுவதிலேயே அவரது கவனம் சார்ந்துளது.

இலக்கணம் மொழியின் அமைப்பில் காணப்படும் ஒழுங்கைக் கண்டுபிடித்துக் கூறுவது மட்டுமல்ல; அந்த ஒழுங்கில் சில குறை இருந்தாலும், அதை நீக்கும் வழியில் உத்திகளைக் கையாண்டு ஒழுங்காக இருக்கிறது என்று காட்டுவது; அல்லது அந்த ஒழுங்கைப் பாதுகாக்கும்படி விதி விலக்குகளைச் சற்று மாறுபட்ட முறையில் வருணிப்பது (செ.வை. சண்முகம், 1980 : 266). இந்த அணுகுமுறை தொல்காப்பியரின் புணர்ச்சி வருணனையில் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளது.

## அடிநிலைக் கிளவி

தமிழ் இலக்கணிகள் சிறப்பு விதிகளை விவரிக்குமிடத்து, ஓர் வடிவத்தை (சொல்லோ-ஒரு சொல் நீர்மையான தொடரோ) அடிநிலைக் கிளவியாகக் கொண்டு, வழக்கிலுள்ள மாற்றுவடிவங்களை வருவிக்கும் வகையில் புணர்ச்சி விதிகளைக் கூறுகின்றனர். இந்த அடிநிலைக் கிளவிகள் வெவ்வேறு அடிப்படைகளில் தெரிவு செய்யப்பெறுகின்றன.

தொல்காப்பியர் புணர்ச்சி இலக்கணத்திற்கான அடிநிலைக் கிளவிகளைத் தெரிவு செய்யுங்கால், சில நெறிகளை அடித்தளமாகக் கொண்டுள்ளார். அவை :

1. அடிநிலைக் கிளவி தனிவடிவமாக (free form) இருத்தல்
2. எழுத்து வழக்கிலுள்ளதாக இருத்தல்
3. நடைமுறை வழக்கில் இருத்தல்

பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் உள்ள மாற்றுருபுகளை ஒருங்கிணைத்து, எழுத்து வழக்கிலுள்ள வடிவத்தை அடிநிலைக் கிளவியாகத் தொல்காப்பியர் கொள்கிறார். தவிர, ஒலி இயல்புக்கு மாறான வெவ்வேறு வடிவங்கள் காணப்படுங்கால், அவ்வடிவங்களை ஒத்துள்ள பிற சொற்களுக்கு ஏற்புடைய வடிவமும் தொல்காப்பியரால் அடிநிலைக் கிளவியாக ஏற்கப்பெற்றுள்ளது. அடிநிலைக் கிளவிகளைத் தெரிவு செய்யும் பாதையில் குறிப்பிட்ட சொல் அல்லது தொடரின் முந்தைய வடிவம் (Proto-form) பற்றிய ஆராய்ச்சியையோ ஒலிமாற்ற இயல்பு குறித்த அறிவு ஆராய்ச்சியையோ தொல்காப்பியர் தடைக் கற்களாகக் கருதவில்லை. இவ்விரண்டையும் அவர் புறக்கணித்துள்ளார்.

இலக்கணப் புலவன் அடிநிலைக் கிளவியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வடிவம் தனித்தியங்கும் தன்மை பெற்ற நிறைநிலைச் சொல்லாக இருக்கும் என்பதும் அந்த அடிநிலைக் கிளவி வரலாற்று நோக்கில் காலமுதன்மை பெற்றதாக இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பதும் இங்கே நன்கு நினைவில் கொள்ளத்தக்கன (பொன். கோதண்டராமன், 1989:23).

தொல்காப்பியர் தெரிவு செய்துள்ள சில சிறப்புச் சொற்களை இவண் குறிப்பிடலாம். சா, ஆந்தை, சாத்தந்தை போல்வன பேச்சு வழக்கிலுள்ள மரூஉ வடிவங்கள். இவ்வடிவங்களுக்குச் சாவ, ஆதன்+தந்தை, சாத்தன்+தந்தை என்ற தொல்வடிவங்களை அடிநிலையாக ஏற்று, ஓரசையையோ பல அசைகளையோ நீக்கித் தொல்காப்பியர் இலக்கணம் கூறுகிறார்.

எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் உள்ள மாற்றுருபுகளுள் எழுத்து வழக்கு உருபுகள் அடிநிலைக் கிளவிகளாகத் தெரிவு செய்யப்பெற்றுள்ளன. தொழிற்பெயர்களான புல், புல்லு, உரிஞ், உரினு, மண், மண்ணு, தேன், தேம், அழன்,* அழம், புழன், புழம் போல்வன

---

* இச்சொல்லின் தொல்வடிவம் சழன் தென்பாண்டிநாட்டில் பேச்சுவழக்கில் உளது (செ. சுயம்பு, 'சழன்', தமிழ்ப்பொழில், 1982:178).

இத்தகைய. இவற்றுள் புல், உரிஞ், மண், தேன், அழன், புழன் ஆகியன தொன்மையானதும் எழுத்து வழக்கிலுள்ளனவுமாகும்.

தொல்காப்பியர் காலத்திலேயே இக்காலத்தில் உள்ளவாறு மெய்யீறு மறைந்து, உயிரீறாகியுள்ளது. இதற்கு உகரவீற்றுத் தொழிற்பெயர்கள் சான்று. இவ்வுகரவீற்றுச் சொற்கள் பேச்சு வழக்கில் ஆதிக்கம் செலுத்தின. ஆயினும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்தில் ஏற்கத் தயங்கிய தொல்காப்பியர், அவற்றினிறுதி உறுப்பாகிய உகரத்தை மெய்யீற்றுச் சொற்கள் புணர்ச்சியில் ஏற்ற எழுத்தாகக் கொண்டு விவரிக்கிறார்.

தேன், தேம் முதலியவை வெவ்வேறு இறுதிகளைப் பெற்றமையால் வெவ்வேறு புணர்ச்சி விதிகளை ஏற்கத்தகுந்தவை. இவற்றுள் மகர ஈற்றுச்சொற்கள் -(அ)த்த(உ)- சாரியையும் னகர ஈற்றுச் சொற்கள் வேறு எழுத்து அல்லது சாரியைகளையும் புணர்ச்சியில் பெறுகின்றன. னகர ஈற்றுச் சொற்களே தொன்மையானவை, எழுத்து வழக்கில் ஏற்கப்பெற்றவை. எனவே அடிநிலைக் கிளவிகளாகும் தகுதியைப் பெற்றுள்ளன.

வேணவா, நாடுரி, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற ஒரு நீர்மைத்தான தொடர்கள் தொல்காப்பியர் காலத்து வழக்கில் பரவலாக இருந்தவை. எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு, வழக்கிலுள்ள இவ்வடிவங்களை வருவிக்கும் ஆர்வத்தோடு அவர் புணர்ச்சி விதிகளை வருணிக்கிறார். இம்முயற்சியில் அவர் ஒலிமாற்ற இயல்பு குறித்தோ தொல்வடிவம் குறித்தோ கவலைப் படவில்லை. வழக்கில் தனித்து வழங்கிய வேட்கை+அவா, நாழி+உரி, ஒன்பது ஆகியவற்றைக் கொண்டு புணர்ச்சி விதியைக் கூறுகிறார். உயிரெழுத்துக்கு முன் வருகிற மெய்யெழுத்து வேறொரு எழுத்தாகத் திரிவது ஒலிமாற்ற இயல்பு அன்று. ஆயினும் தொல்காப்பியர் வேட்கை என்பதிலுள்ள டகரம் ணகரமாகத் திரிவதையும் நாழியின் ழகரம் டகரமாதலையும் விதியாகச் சுட்டுகிறார். இங்கு இத்தொடர்களுக்கு உரிய உண்மையான வடிவத்தைத் தேடுவதில் அவர் ஈடுபடவில்லை. வேணவா என்பதில் வேள், நவா எனும் சொற்கள் இணைந்துள்ளன.

வேள், நவா எனும் இரு சொற்களும் மிகுந்த விருப்பத்தை உணர்த்துவனவாகும் (DED 2947, 4548). நவா (நவை) என்பது நவ்வுதல் (மிகுந்த விருப்பம்) என்ற சொல்லோடு தொடர்புடையது. இது நாளடைவில் அவா என்றானது. தொல்காப்பியத்திற்கு முந்தைய காலத்திலேயே நகர இழப்பு ஏற்பட்டிருக்கவேண்டும். எனினும் வேணவா எனும் தொடர் செய்யுட்களில் அருகிய வழக்கமாக இடம் பெற்றதால், தொல்காப்பியம் அதற்கு விதி கூறுகின்றது எனலாம்(பெ. சுயம்பு, 1995:6).

நாடுரி என்பது வேறு விதமானது. இத்தொடரில் நிறுத்த சொல் நாழி என்னும் தமிழ்ச்சொல் அன்று; அதன் திரிந்த வடமொழிச் சொல்லாகிய நாடி என்பதே. இச்சொல் வடமொழியைப் போற்றிய புலவர்களின் வழியே தமிழகத்திலும் வழங்கியதன் விளைவாக, நாடுரி எனும் தொடர் அமைந்தது. இத்தொடரையும் மக்களிடம் பயின்று வழங்கிய நாழி எனும் சொல்லையும் பொருள் ஒற்றுமை காரணமாகத் தொடர்புபடுத்திய தொல்காப்பியம், நாடுரி என்பதற்கு அடிப்படைச் சொல் நாழி என்று கொண்டு புணர்ச்சி விதியைக் கூறியிருக்க வேண்டும் (பெ. சுயம்பு, 1995:6).

தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற தொடர்கள் ஒலி, பொருள் எனும் இருவகையிலும் மாறானவை. பத்து நூறு ஆகிறது; நூறு ஆயிரம் என்று மாற்றப்படுகிறது. ஒன்பது தொண் அல்லது தொள் ஆகிறது. இங்குத் தொல்காப்பியர் வழக்கில் பயின்ற ஒன்பது என்ற எண்ணையும் தொண்ணூறு, தொள்ளாயிரம் ஆகிய தொடர்களையும் மட்டுமே கருத்தில் கொண்டுள்ளார். அருகிய வழக்காகி ஒதுக்கப்பெற்ற தொண்டு என்ற எண்ணுப் பெயரை அவர் அடிநிலைக் கிளவியாக ஏற்கவில்லை. இச்சொல் தொல்காப்பியச் செய்யுளியலில் ஓரிடத்தில் வருகிறது என்பது குறிக்கத் தகுந்தது.

நீயிர் என்பதற்கு நும் என்ற வேற்றுமை வடிவத்தினைத் தொல்காப்பியர் அடிநிலைக் கிளவியாக ஏற்றுள்ளார். இச்சொல் தனிவடிவம் அல்ல. எனினும் யாம், நாம், தாம் என்ற பிற மூவிடப் பெயர்கள் மகரவீறாக இருத்தலால், நும் என்பதே தொல்வடிவமாக இருத்தல் வேண்டும் என்று கருதியிருக்கிறார். இங்குப் பிற சொற்களை ஒத்துப்பார்த்ததால் அடிநிலைக் கிளவி தெரிவு ஆயிற்று.

## தொகுப்புரை

தொல்காப்பியர் ஓசையியைபு, பொருள் இயைபு ஆகியவற்றைப் புணர்ச்சியின் நோக்கமாகக் கொள்கிறார். அவரது புணர்ச்சி வருணனைக் கோட்பாட்டில் ஒலியனியற் கூறுகளும் தொடரனியற் கூறுகளும் உள்ளன. அவரது வருணனைத் திறம் பயனாளிகளை மையமாகக் கொண்டு அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளுமாறு அமைந்துள்ளது; எனவே சமூக நோக்கம் உடையது.

தொல்காப்பியர் புணர்ச்சி இலக்கணத்தை அடிநிலைக் கிளவிகளைத் தெரிவுசெய்து, அவற்றிலிருந்து வழக்கிலுள்ள சொல் அல்லது தொடரை வருவிக்குமாறு விதிகளை அமைத்துள்ளார்.

தொல்காப்பியர் புணர்ச்சி விதிகளைக் கூறுங்கால் மொழியியல் முறையிலான ஒலிமாற்ற விதிகளையோ தொல்வடிவத்தைக் காணுகிற

வரலாற்று முறையினையோ கருத்தில் கொள்ளவில்லை. தமிழ் மரபினைப் பேணுகிற நோக்கில் இருக்கிற வடிவத்திற்கு ஏற்ப இலக்கணம் கூறுகிறார். இவ் வகையில் தொல்காப்பியரின் புணரியல் கோட்பாடு ஒரு வருணனை இலக்கணமாகத் திகழ்கிறது.

## பார்வை நூல்கள் & கட்டுரைகள்


1. கோதண்டராமன், பொன்., **தமிழிலக்கணக் கோட்பாடுகள்,** ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1989.

2. சண்முகம், செ.வை., **எழுத்திலக்கணக் கோட்பாடு,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1980.

3. " **இலக்கண உருவாக்கம்,** மணிவாசகர், பதிப்பகம், சென்னை, 1994.

4. சிவலிங்கனார், ஆ., **தொல்காப்பியம்-உரைவளம், புணரியல்** (1982), **தொகைமரபு** (1982), **உருபியல்** (1982), **உயிர்மயங்கியல்** (1982), **புள்ளிமயங்கியல்** (1983), **குற்றியலுகரப் புணரியல்** (1983), உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

5. சுப்பிரமணியன், ச.வே., **இலக்கணத்தொகை-எழுத்து,** 1967.

6. சுயம்பு, பெ., **தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்,** முனைவர் பட்ட ஆய்வேடு, ம.கா.பல்கலைக்கழகம், மதுரை, 1985.

7. " 'சழன்', **தமிழ்ப்பொழில்,** 1982 (சூலை).

8. " 'தொல்காப்பிய இலக்கணமும் மொழியும்', **செந்தமிழ்,** உலகத் தமிழ் மாநாட்டு மலர், 1995.

9. " 'சொல்லிறுதிப் புள்ளிகள்', **ஆய்வுக் கோவை** 1995.

10. " 'புணர்ச்சி இலக்கணம்', **ஆய்வுக் கோவை** 1996.

11. Gleason, Jr, H.A., **An Introduction to Descriptive Linguistics,** Oxford & I BH Publishing Co., New Delhi, 1979.

12. Vijaya Venugopal, G., **A Modern Evaluation of Nannul** (Eluttatikaram), Annamalai University, 1968.

# தொல்காப்பியரின் சொல்வகைக் கோட்பாடு

பெ. இராசேந்திரன்

---

சொல் என்பதற்கு, பிளம்பீல்டு (1963:178)[1] தனித்தியங்கும் மிகக் குறுகிய வடிவம் என்பார். ஹாக்கெட் (1958:167)[2] ஒரு வாக்கியத்தில் இருபுறமும் இடைவெளி கொண்ட எந்த ஒரு பகுதியும் சொல் என்கிறார். பிளாக் மற்றும் டிராக்கர் (1972:54)[3] மிகச் சிறியதாகப் பிரிக்கமுடியாத எந்த ஒரு சிறிய தனிவடிவத்தையும் சொல் என்கின்றனர். உலக மொழியியல் கலைக்களஞ்சியம் (1972:342)[4] சொல் என்பது அருவ நிலையில் உருபன்கள் இணைந்தோ அல்லது தனிநிலை சிறும உருபனாகவோ உள்ள ஓர் இலக்கணக் கூறு என்கிறது.

தொல்காப்பியர்[5] சொல்லிற்குப்

> பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
> சொல்லி னாகும் என்மனார் புலவர் (தொல்.சொல்.152)

என்று இலக்கணம் வகுக்கிறார். ஆனால் இந்நூற்பா சொல் இலக்கணத்தினை முழுமையாக வரையறை செய்கின்றதா என்பது ஆய்வுக்குரிய ஒன்றாக உள்ளது.

தொல்காப்பியரின் சொல் பாகுபாட்டை இருநிலைகளில் அணுகலாம் (1) சொல்திரிபு அடிப்படையில் பிரிக்கப்படுபவை, (2) சொல்பயன்நிலை அடிப்படையில் பிரிக்கப்படுபவை.

## 1. சொல்திரிபு அடிப்படையில் பிரிக்கப்படுபவை

தொல்காப்பியர் இலக்கண அடிப்படையில் சொல்லை இரண்டு வகையாகப் பிரிக்கிறார்.

> சொல்லெனப் படுப பெயரே வினையென்
> றாயிரண் டென்ப அறிந்திசி னோரே (தொல்.சொல்.154).

அவர் இவ்விரண்டு வகைச்சொற்களுடன் அவற்றுவழி வருகின்ற இடைச்சொல்லையும் உரிச்சொல்லையும் மேலும் சேர்த்துக்கொள்கிறார்.

> இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
> அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப (தொல்.சொல்.155)

இலக்கண அடிப்படையில் ஒரு மொழியின் அடிச்சொற்கள் உருபன் நிலையிலும் (morphological level), தொடரன் நிலையில் அதன் பயன்வகையிலும் அல்லது இரு நிலையிலும் அவற்றில் காணும் ஒற்றுமை வேற்றுமை அடிப்படையில் பாகுபாடு செய்யப்படுகின்றன. இப்பாகுபாடு வடிவநோக்கில் அவை ஏற்கின்ற சொல்திரிபு உருபன்களின் (inflectional morphemes) அடிப்படையில் பகுக்கப்படுகிறது.

சொல் பாகுபாட்டிற்கு அடிச்சொற்களையும் (stems), ஒட்டுக்களையும் (affixes) வேறுபடுத்திக் காணல் வேண்டும். இதில் அடிச்சொல் வேர், பொருள் (basic carrier of meaning) உடையதாக இருக்கும்.

ஒட்டு அடிச்சொல்லுடன் இணைந்து பொருள் வேறுபடுத்தினும், அவை அடிச்சொற்களுடன் குறிப்பிட்ட வரன் முறையில்தான் இணையும். இந்த அடிப்படையில் தொல்காப்பியரின் சொல் பாகுபாடாகிய பெயர், வினை அமைகிறது. ஆனால் இடை, உரி இந்த வரையறைக்குள் வராததால் இவற்றைச் சொல்வகைகளாக கருதுவது ஆய்வுக்குரிய ஒன்றாக உள்ளது.

ஒரு மொழியைச் (மோ. இசரயேல், 1976:7) சொற்களைக் கொண்டு பாகுபாடு செய்யுங்கால் அப்பகுப்பு முறை 1. மொழியின் எல்லா அடிகளையும் (stems) வகைப்படுத்த உதவக்கூடியதாக இருக்க வேண்டும். 2. முரண்பாடற்று ஒரே நெறிப்பட்டதாக அமைதல் வேண்டும். 3. தேவையற்ற இடர்ப்பாடுகளுக்கு இடந்தருதல் கூடாது. 4. மொழியின் வாக்கியங்களின் அமைப்பை விளக்குவதற்கும் துணை புரிதல் வேண்டும் என்கிறார்.

ச. அகத்தியலிங்கம் (1979:67) அவர்கள் சொல்வகையைப் பெருவகை (major) என்றும், சிறுவகை (minor) என்றும் பிரிக்கிறார். பெயர், வினை, பெயரடை, வினையடை போன்றவை முதல் வகையையும், முன்னுருபு, இணைப்புச் சொற்கள் (conjunctions) போன்றவை சிறுவகையையும் சேர்ந்தது என்கிறார்.

இவற்றில் முதல் வகையில் தனித்தனிச் சொற்பொருளைக் காண முடியும். ஆனால் இரண்டாவது வகையில் இலக்கணப் பொருளையே பெரும்பாலும் காணமுடியும்.

இதனை அடிப்படையாக வைத்துச் சொற்பாகுபாட்டை (parts of speech) அடிநிலை இலக்கணக் கூறுகள் (primary grammatical categories) என்றும் திணை, பால், எண், இடம், வேற்றுமை போன்றவற்றைத் துணை நிலை இலக்கணக் கூறுகள் (secondary grammatical categories) என்றும் கொள்வர் (J. Lyons, 1968:264). இவை வாக்கியத்தில் வருவதை வைத்து எழுவாய், பயனிலை போன்றவற்றைச் செயல்நிலை இலக்கணக் கூறுகள் (ச.அகத்தியலிங்கம், 1979:68) என்றும் பிரிப்பர்.

நன்னூலார் சொல் என்பது என்ன என்பதை

**எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்**
**பதமா மதுபகாப் பதம் பகுபதமென**
**இருபா லாகி யியலு மென்ப** (நன்.128)

என்கிறார்.

தொல்காப்பியர் கூறும் முதன்மை சொற்களாகிய பெயர் வினையே திராவிடச் சொற்களின் அடிப்படைப் பாகுபாடு என்று கால்டுவெல் (1977:65) கூறுகிறார். அவர் தனிப்பட்ட திராவிடச் சொற்களின் வேர்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம் என்கிறார். 1. மிக அதிகமாய்க்காணும், பெயர்ச் சொற்களாகவும் பயனாகும் தகுதியுள்ள வினைச் சொற்களின் வேர்கள் 2. எந்த வினையுடனும் தொடர்பு படுத்திக் காண முடியாத பெயர்ச்சொற்கள். மேலும் அவர் (1977:65) திராவிடச் சொற்களின் வேர்கள் எவ்வித இணைப்பும் மாற்றமுமின்றி வினையாகவும் பெயர்ச்சொல்லாகவும் வழங்கும். அவை வழங்கும் இடத்தைப் பொறுத்து அவை பெயர் அல்லது வினைச்சொல்லின்பால் சேர்க்கப் பெறும் என்கிறார். அதற்கு அவர் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டாகக் கூறுகிறார்.

சொல் - முன்னிலை ஒருமை ஏவல் (வி.), வார்த்தை (பெ.)

தறி - வெட்டு(வி.), நெய்கின்ற இயந்திரம் (பெ.)

முறி - உடை (வி), பனை ஓலையில் எழுதப்பட்ட பத்திரம் (பெ.)

## சொல் வடிவம் அமைப்பு

தொல்காப்பியர் சொல்வடிவத்தை,

**ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி**
**இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி உளப்பட**
**மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே**
(தொல்.எழுத்து.45)

என்று கூறுகிறார். இதையே நன்னூலாரும்,

**ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்றா**
**இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்**
**மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்**
**வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே** (நன்.259)

என்று எடுத்துரைக்கின்றார். பின்னர் இப்பாகுபாடு தனிமொழி, தொடர்மொழி என்றும் ஓரெழுத்து மொழி, தொடர்மொழி என்றும் அமைந்தது (ச.வே. சுப்பிரமணியன், 1972:138) எனலாம்.

இதைத்தான் சேனாவரையர் (தொல்.சொல். 1959 : 2-3) 'சொல்லாவது எழுத்தோடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது' என்கிறார். அவர் சொற்றான் தனிமொழி, தொடர்மொழி என இருவகைப்படும் என்றும், தனிமொழி சமய ஆற்றலால் பொருள் விளக்குவது என்றும், தொடர்மொழி அவாய்[6] நிலை, தகுதி[7] நிலை, அண்மை[8] நிலை ஆகிய நிலைகளில் இயைந்து பொருள் விளக்கும் தனிமொழி ஈட்டம் என்கிறார். மேலும் அவர் தனிமொழி என்பது பெயர், வினை, இடை, உரி என்றும், தொடர்மொழி என்பது இருமொழித்தொடர்,[9] பன்மொழித் தொடர்[10] என்றும் பாகுபடுத்துகிறார்.

இளம்பூரணர் (தொல்.சொல்.1944:1) சொல் என்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை என்றும், அச்சொல் 'எனைத்து வகையான் உணர்த்தினானோவெனின் எட்டுவகைப் பட்ட[11] இலக்கணத்தான் உணர்த்தினான் என்க' என்றும் கூறுகிறார்.

இக்கருத்தினைத்தான் நச்சினார்க்கினியரும் (தொல்.சொல். 1962:1) 'சொல் என்றது எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப்[12] பொருட்டன்மையும்[13] ஒருவனுணர்தற்குக் கருவியாம்[14] ஓசையை[15]

உடையது' எனக் கூறுகிறார். மேலும் அவர் (மேலது, ப.3) 'அச் சொல்லை யெட்டு வகையானும் எட்டிறந்த பலவகையானு[16] முணர்த்துப' என்றும், மேலும் சொல்லைச் சேனாவரையர் போலவே தனிமொழி, தொடர்மொழி என்றும் பாகுபடுத்துகிறார். அவர் தனிமொழியை மரபியற் சூத்திரம்[17] மூலமும் தொடர் மொழியை இருமொழித்தொடர், பன்மொழித்தொடர் எனப் பிரித்தும் விளக்குகிறார்.

தெய்வச்சிலையார் (தொல்.சொல்.1979:1) 'சொற்களைப் பொருணிலைமை நோக்கித் தொடர்மொழி தனிமொழியென இருவகைப்படுத்து, அத்தொடர்மொழியை அல்வழித்தொடர், வேற்றுமைத் தொடரென இருவகைப்படுத்து அவ்விருவகைத் தொடரும் செப்பும் வினாவுமாக நிகழ்தலான்' என்கிறார்.

கல்லாடனார் (தொல்.சொல். 1964 : 2) 'சொல்லிற்கிலக்கணமாமாறு என்னையோவெனின் இன்முகத்தானும்[18] உண்மை முகத்தானும்[19] அமைந்த இலக்கணமா மென்றுணர்க' என்கிறார்.

இவ்வாறு சொல் பலவாறுவகைப்படுத்தப்பட்டாலும் தொல்காப்பியர் சொல்லை, 'சொல்லெனப்படுபெயரே வினையென்று ஆயிரண் டென்ப' என்றும், 'இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப' என்றும் இரு நிலைகளில் பாகுபடுத்துகிறார்.

## பெயர்ச்சொல்

தொல்காப்பியர் பெயர்ச்சொல்லின் இலக்கணத்தை,

பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே
(தொல்.சொல்.70)

என்று வரையறைச் செய்கிறார். ஆனால் நன்னூலார்,

இடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே (நன். 275)

என வரையறுக்கிறார்.

தொல்காப்பியர் பெயர்ச்சொற்களை உயர்திணைப் பெயர், அஃறிணைப்பெயர், விரவுப் பெயர் எனத் திணையின் அடிப்படையில் பாகுபடுத்துகிறார்.

**பெயரெனப் படுபவை தெரியுங் காலை**
**உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்கு மோரன்ன வுரிமையும்**
**அம்மூ வுருபின தோன்ற லாறே** (தொல்.சொல்.160)

பின்னர் திணைக்குரிய பெயர்ச் சொற்களைக் குறிப்பிட்டுத் தொகுத்துச் சுட்டுங்கால், 1. பாலறி வந்த உயர்திணை (தொல்.சொல். 162[20]) 2. பாலறி வந்த அஃறிணை (தொல்.சொல்.167[21]), 3. விரவுத் திணையில் பால் தெரிதல் (தொல்.சொல்.172[22]) எனப் புலப்படுத்துகிறார்.

எனவே தொல்காப்பியர் பெயரைத் திணைப்பாகுபாட்டின் அடிப்படையில் பிரித்து, பின் அதன் வழி, பால் பாகுபாட்டிற்கு அடிகோலியுள்ளார்.




தொடர்நிலையில் பெயர்ச்சொல் எழுவாயாக வரும் என்றும்

**எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே**
(தொல்.சொல்.65)

மேலும் அது உருபேற்காமல் நின்று எழுவாயாகவும் வரும் என்றும் சுட்டிச் செல்கின்றார்.

**பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்**
**வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்**
**பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்று**
**அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே**
(தொல்.சொல்.66)

பெயர்ச்சொல் பெயரெச்சத்தால் தழுவப்படும் என்பதை,

**பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே** (தொல்.சொல்.433)

என்று கூறுவார்.

இவற்றிலிருந்து பெயர்ச்சொல் வேற்றுமை உருபை ஏற்கும், தொடர்நிலையில் எழுவாயாக நின்று பயனிலை ஏற்கும், பெயரெச்சத்தால் தழுவப்படும் என்பது புலனாகிறது (தொல்.[23] சொல்.62, 63, 66, 433).

## மாற்றுப்பெயர்

தொல்காப்பியர் மாற்றுப்பெயர் பற்றித் தனியாகக் குறிப்பிடவில்லை; அவற்றைப் பெயருடன் இணைத்துக் கூறியுள்ளார். எ.டு. யான், நீயிர், அவன், யாவன்.

## எண்ணுப்பெயர்

தொல்காப்பியர் எண்ணுப்பெயர்களையும் பெயர் என்பதில் அடக்கியுள்ளார்.

**இன்றிவ ரென்னும் எண்ணியற் பெயரோடு** (தொல்.சொல்.165)

**இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்** (தொல்.சொல்.168)

## வினையாலணையும் பெயர்

இவை தொழிலையும் தொழில் செய்பவனையும் உணர்த்தும். காலம் ஏற்பினும் எழுவாயாகவும் வேற்றுமை உருபும் ஏற்று வரும். இவற்றைத் தொல்காப்பியர் தொழில் பெயர் என்பார்.

**தொழிலிற் கூறும் ஆனென் இறுதி**
**ஆயா கும்மே விளிவயி னான** (தொல்.சொல்.133)

**தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்**
**வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே** (தொல்.சொல்.139)

மேலும் இவற்றை அவர் தொழில் நிலை ஒட்டு என்றும் (தொல்.சொல்.70[24]), வினைப்பெயர் (தொல்.சொல்.165[25]) என்றும் குறிப்பிடுகிறார்.

## ஆக்கப்பெயர்கள் (Derived nouns)

இவ்வகைப் பெயர்கள் வினையடிகளுடன் பெயராக்க விகுதிகள் இணைவதால் அமைகின்றன. இவை பெயரெச்சத்தால் தழுவப்படும். ஆனால் தொழில் பெயர் வினையாலணையும் பெயர் போல வினையடையால் தழுவப்படுவதில்லை. இப்பெயர்கள் பற்றித் தொல்காப்பியர் தனியாக விளக்கம் எதுவும் கூறவில்லை.

எ.டு. வெகுளி (தொல்.சொல்.72)[26], புணர்ச்சி (தொல்.எழுத்து.142)[27]

## தொழில் பெயர் (Verbal noun)

தொல்காப்பியர் வினையாலணையும் பெயரைத்தான் தொழில் பெயர் என்கிறார். ஆனால் இப்பெயர்கள் வினையடியினின்று தோன்றும், வேற்றுமை உருபு ஏற்கும், தொடரன் நிலையில் எழுவாயாகச் செயலாற்றும் (மோ. இசரயேல்: 1976:73-75)

எ.டு. பகுதி தனித்து நின்று: துள், உரிஞ், பொருந்
விகுதியுடன் இணைந்து : உண்டல், கற்றல், செய்தல்
முதனிலைத் திரிந்து : கேடு, சூடு, ஈடு

## இடவேறுபாடு உணர்த்தும் பெயர்கள் (Pronominalized nouns)

இவை திணை-பால் விகுதி பெற்று, தன்மை முன்னிலை படர்க்கை வேறுபாடு உணர்த்தி, பயன்வகையில் பெயராகச் செயலாற்றுகின்றன. தொடர்நிலையில் பிற பெயர்களைப் போல பெயரெச்சத்தைத் தழுவி வருகின்றன. இவை பற்றித் தொல்காப்பியர் தனித்து எதுவும் குறிப்பிடவில்லை.

எ.டு. தேறினிர் (புறம். 109)

இவை தவிர பெயர்ச் சொற்களைத் தொல்காப்பியர் பொருள் அடிப்படையிலும் பாகுபடுத்தியுள்ளார். நிலப்பெயர், குடிப்பெயர், குழுவின் பெயர், வினைப்பெயர், உடைப்பெயர் (தொல்.சொல்.161), பண்புப் பெயர் (தொல்.சொல்.111-113,136,161), முறைப் பெயர் (தொல்.சொல்.161) சினைப்பெயர் (தொல்.சொல்.161), திணைப் பெயர் (தொல்.சொல்.161), எண்ணியல் பெயர் (தொல்.சொல்.161), மரப்பெயர் (தொல்.எழுத்து.181,217,313,386,415,416) போன்றனவாகும்.

### வினைச்சொல்

தொல்காப்பியர் வினைக்கும் அதன் அமைப்பின் அடிப்படையிலேயே இலக்கணம் கூறுகிறார்.

வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலைக் காலமொடு தோன்றும்
(தொல்.சொல்.192)

ஆனால் நன்னூலார்,

செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொரு ளாறும் தருவது வினையே (நன். 320)

என்பார். ஆனால் தொல்காப்பியர் வேற்றுமை மயங்கியலில் இதையே,

**வினையே செய்வது செயப்படு பொருளே**
**நிலனே காலம் கருவி யென்றா**
**இன்னதற் கிதுபயன் ஆக வென்னும்**
**அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ**
**ஆயெட் டென்ப தொழின்முதல் நிலையே**
(தொல்.சொல்.109)

என, தொழிலது முதனிலைகள் எட்டு ஆகும் என்றும் அவை வினையின் அடிப்படையில் அமையும் என்றும் கூறுகிறார்.

வினை, பெயரைப்போன்று எழுவாயாக வராது, பயனிலையாக மட்டுமே வரும். வினையில் முற்றுவினை தொடர்நிலையில் பயனிலையாகவும் எச்சவினை அடையாகவும் (attribute) வரும் முற்றுவினைகள் இடவேறுபாடு உணர்த்தியும் உணர்த்தாதும் வரும்.

இவைகளில் தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய மூவிட வேறுபாட்டைச் செயல்வினையும் (indicative) முன்னிலையில் வழங்கும் ஏவல் வினையும் உணர்த்தும்.

இடவேறுபாடு வியங்கோள் வினை (optative), 'செய்யும்' என்னும் வாய்பாட்டு செயல் வினைமுற்று, இன்மை, செப்பல், உண்டு போன்றன உணர்த்தாது.

எ.டு. வருக, வரும், இல்லை, இல், . உண்டு.

**வினை வகைகள்**

தொல்காப்பியர் வினைச்சொற்களை வினை, குறிப்பு என வேறுபடுத்துவதோடு உயர்திணைக்குரிமையும், அஃறிணைக் குரிமையும் ஆயிருதிணைக்கும் ஓரன்ன உரிமையும் ஆகிய மூவகையாகப் பாகுபடுத்தி அவற்றின் இயல்புகளைக் கூறிச் செல்கிறார்.

**குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்**
**காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்**
**உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்**
**அம்மூ வுருபின தோன்ற லாறே** (தொல்.சொல்.195)

அவர் தன்மை, படர்க்கை, ஆண்பால், பெண்பால், பலர்பால் வினைகளை உயர்திணைக்குரியனவாகவும், படர்க்கை ஒன்றன்பால்

பலவின்பால் வினைகளை அஃறிணைக்குரியனவாகவும் ஏனைய வினைகளை இரு திணைக்கும் பொதுமையுடையனவாகவும் கொள்கிறார். இருதிணைக்கும் பொதுவானவையாக,

> **முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி**
> **இன்மை செப்பல் வேறென் கிளவி**
> **செய்ம்மன செய்யும் செய்த என்னும்**
> **அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்**
> **பிரிபுவேறு படூஉம் செய்திய வாகி**
> **இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமைய**
> (தொல்.சொல்.216)

ஆகியவற்றைக் கூறுகிறார்.

### எச்சவினைகள்

இவை பெரும்பாலும் திணை, பால், எண் காட்டும் விகுதிகளை ஏற்று வராது. இவை பால் இடம் ஆகியவற்றிற்குப் பொதுவானவை. இவற்றில் பெயரைத் தழுவி வருபவை பெயரெச்சம் என்றும் வினையைத் தழுவி வருபவை வினையெச்சம் என்றும் அழைக்கப்படும்.

### பெயரெச்சம்

தொல்காப்பியர் செய்த, செய்யும் என இருவகை வாய்பாடுகளையே பெயரெச்சத்திற்குத்தந்துள்ளார்.

> **நிலனும் பொருளும் காலமுங் கருவியும்**
> **வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட**
> **அவ்வறு பொருட்கும் ஓரன்ன வுரிமைய**
> **செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே** (தொல்.சொல்.228)

> **அவற்றொடு வருவழிச் செய்யும் கிளவி**
> **முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே** (தொல்.சொல்.229)

### வினையெச்சம்

தொல்காப்பியர் வினையெச்சத்திற்கு ஒன்பது வகையான வாய்பாட்டைத் தந்துள்ளார்.

> **செய்து செய்யூச் செய்பு செய்தெனச்**
> **செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென**
> **அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி**
> (தொல்.சொல்.222)

மேலும் அவர் ஒன்பது வினையெச்ச (வினையடை) ஈறுகளையும் தந்துள்ளார்.

**பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்**
**அன்ன மரபிற் காலங் கண்ணிய**
**என்ன கிளவியும் அவற்றியல் பினவே** (தொல்.சொல்.223)

## குறிப்பு வினை

குறிப்பு வினையில் காலமும் தொழிலும் குறிப்பாக அமைந்து கிடக்கின்றன. இவற்றை இடவேறுபாடு உணர்த்தும் பெயர்கள் (pronominalised nouns) என அழைப்பர் (மோ.இசரயேல், 1976:84-85).

எ.டு. செய்யன், அல்லது, உள

குறிப்பு வினையெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என்ற சொல் வழக்குகள் பிற்காலத்தில் ஏற்பட்டவை. அவை தொல்காப்பியரால் எடுத்து ஆளப்பெறவில்லை.

குறைவினை அடிகளிலிருந்து குறைவினை எச்சங்கள் அமையும். எ.டு. அல்-அன்றி, அல்லா; இல்-இன்றி, இல்லா.

## இடைச்சொல்

தொல்காப்பியர் இடையியலில் இடைச்சொல்லின் இலக்கணத்தை,

**இடையெனப் படுவ பெயரோடும் வினையோடும்**
**நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே** (தொல்.சொல்.246)

என வரையறை செய்கிறார். எச்சவியலில்,

**இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே**
(தொல்.சொல்.445)

என்பார். இடைச்சொற்கள் தனித்து வரா. இடைச்சொற்கள் சொல் நிலையிலும், பொருள் நிலையிலும் பொருள் வேறுபாடு செய்வன. பெயர் வினையைச் சார்ந்து வரும். இவற்றையே நன்னூலார்,

**..................................றனித்திய லின்றிப்**
**பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்**
**தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்** (நன்.420)

என்பார். இதையே தொல்காப்பியரும்,

முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
(தொல்.சொல்.248)

என்கிறார். தொல்காப்பியர் இடைச்சொற்களை ஏழு வகையாகப் பாகுபடுத்துகிறார்.

அவை தாம்
புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி யாகி வருநவும்
இசைநிறைக் கிளவி யாகி வருநவும்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்(று)
அப்பண்பினவே நுவலுங்காலை (தொல்.சொல்.247)

இவற்றில் முதல் மூன்றுவகையானவை அடிச்சொற்கள் அல்ல, ஒட்டுக்கள் ஆகும். அடுத்த நான்கு வகையானவை ஒருவகை சொல்வகையாகவும் ஆனால் அவை சொல்திரிபு உருபன்களை ஏற்காத அடியாக அமையும்; தொடர்களில் பொருள் வேறுபாடு உணர்த்தும். எ.டு. சொல், மன், தில், உம், ஏ.

எனவே இடைச்சொற்கள் ஒரு நிலைச்சொற்கள் (particles), ஒட்டுக்கள் ஆகியவற்றின் தொகுப்பாகும் (மோ. இசரயேல் 1976 : 15).

உரிச்சொல்

தொல்காப்பியர் உரிச்சொல்லை,

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொற் பலபொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்
(தொல்.சொல்.293)

என்று அதற்கு இலக்கணம் வரையறைச் செய்கிறார்.

மேலும்,

**எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல் பின்றே**
(தொல்.சொல்.391)

என்கிறார். இச்சூத்திரத்தில் உரிச்சொற்களில் அவற்றின் உறுப்புகளாகிய எழுத்துக்கள் பிரிந்து நின்று தனிப்பொருள் தருதல் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். ஆனால் உரிச்சொற்கள் உறு,தவ,நனி,மழ,குழ தனிஉருபன்களாகும்.

தொல்காப்பியர் இதன் வடிவம்பற்றிக் கூறும்போது 'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' என்று கூறுகிறார். இதனை இளம்பூரணர் (1944:144), 'பெயர்க்கண்ணும் வினைக் கண்ணும் சென்று பொருள்களை விளக்கும் மெய் என்றும், தடுமாறுதல் என்பது பெயர்பற்றியும் வினைபற்றியும் வரும் வரவினை நோக்கி' என்கிறார். சேனாவரையர் (1959:154), 'பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் தம்முருபு தடுமாறி' என்கிறார். நச்சினார்க்கினியர் (1962:326), 'பெயர் வினைகள் போன்றும் அவற்றிற்கு முதனிலையாயும் தம்முரு தடுமாறித் தத்தமக்கு உரிய முறைமையாற் சென்று நிற்கும் நிலைக்களங்கள்' என்கிறார். தெய்வச்சிலையார் (1979:150), 'உரிச்சொல்லாகிய உருபு பெயரின் கண்ணும் வினையின் கண்ணும் தடுமாறி' என்று கூறி, 'அவை தடுமாறுங்கால் பெயர் வினைகளைச் சார்ந்தும் அவற்றிற்கு அங்கமாகியும் வரும்' என்று கூறி, 'உறுவளி என்பது பெயரைச் சார்ந்து வந்தது; உறங்கொண்டான் என்பது வினையைச் சார்ந்து வந்தது; உறுவன் என்ற வழிப் பெயர்க்கு அங்கமாயிற்று; உற்றன் என்ற வழி வினைக்கு அங்கமாயிற்று' என்று விளக்கம் தருகிறார்.

எனவே உரிச்சொல்லை உரையாசிரியர்களின் கூற்றோடு ஒப்பிடுகையில் அவைகளில் சில பெயரைப்போன்றும், பெயரைச் சார்ந்தும், பெயருக்கு உறுப்பாகியும், பல வினையைப் போன்றும் வினையைச் சார்ந்தும் வினைக்கு உறுப்பாகியும் அமைகின்றன.

தொல்காப்பியர் உரிச்சொல்லின் இயல்பை,

**உரிச்சொன் மருங்கினும் உரியவை உரிய**
(தொல்.சொல்.446)

என்பார். உரிச்சொற்கள் சொல்திரிபு உருபன்களை ஏற்காது, தொடர்நிலையிலும் ஒரே பயன்வகையை உடையவை அல்ல. இவைகளில் சில பெயர் வினை இரண்டிலும் கொள்ளாதது மாகவும் உள்ளன (எ.டு. உறு, புரை, நனி, தவ). இவைகளில் சில பண்புப் பெயராகவும், ஆக்கப்பெயராகவும் (எ.டு. செழுமை, ஒற்கம்) உள்ளன.

எனவே உரிச்சொற்களை ஒரு தனிவகைச்சொற்கள் என்றும் அல்லது பொருள் வெளிப்படையாக விளங்காத அருஞ்சொற்கள் (மோ. இசரயேல், 1976:123) என்றும் அல்லது அகராதியில் பொருள் கொடுக்கக்கூடிய சொற்கள் (செ.வை. சண்முகம், 1985:96) என்றும் கூறலாம்.

## பெயரடை (Adjective)

தொல்காப்பியர் பெயரடை பற்றிய பாகுபாடு செய்யவில்லை. தவ, நனி, உறு, மழ, குழ என்ற பெயரடைச் சொற்களை அவர் உரியியலில் கூறி இருப்பினும் அவர் அவற்றைத் தனியாகப் பகுக்கவில்லை. பழந்தமிழில் இச்சொற்கள் வேர் (root) வடிவில் பெயர்ச்சொற்களுடன் இணைந்து நின்று ஆட்சி பெற்றன (மோ. இசரயேல், 1976:13). எ.டு. நல்-நல்யானை, அரு-அருவிடர், செந்-செந்நெறி, வெள்-வெள்ளருவி. இக்காலத் தமிழில் பெயரடை அகரக்குறியீடு பெற்று விளங்குகிறது.

## வினையடை (Adverb)

இச்சொற்கள் வடிவ அமைப்பில் அடிச்சொற்களாக இருந்து வினையடைகளாகச் செயல்படுகின்றன. இவை சொல்திரிபு உருபன்களை ஏற்பதில்லை. தொல்காப்பியர் தரும் தவ, நனி பெயரடைகளாக மட்டுமின்றி வினையடைகளாகவும் செயல்படுகின்றன. எ.டு. தவச்சிறந்தது - தவப்பெரியன், நனிச்சிறந்தது - நனிப்பெரியன்.

## ஒருநிலைச் சொல் (Particles)

சொல் திரிபு உருபன்களை ஏற்காத அடிச்சொற்களை (uninflected stems) ஒரு நிலைச்சொல் என்பர். இவை தொடரன் நிலையில் பொருள் வேறுபாடு செய்வனவாக அமைகின்றன. தொல்காப்பியர் இடையியலில் கூறுகின்ற சாரியை, வேற்றுமை உருபுகள், கால இடைநிலைகள் முதலிய ஒட்டுகள் ஒழிந்த ஏனைய இடைச்சொற்கள் இதனுள் அடங்கும். எ.டு. கொன், மன், தில், கொல், அம்ம, ஏ, அன்ன. ஆனால் தொல்காப்பியர் இவற்றைத் தனியாகப் பாகுபாடு செய்யவில்லை

மோ. இசரயேல் (1976:14) இவற்றை ஒட்டிகள் (clitics) (எ.டு. வந்தான்-ஓ, வந்தான்-ஆ); இணைப்புச் சொற்கள் (connectors) (எ.டு. என, என்றா, என்று, என்றும், எனவும்); விளிச்சொற்கள் (vocatives) (எ.டு. அடே, ஏடீ, ஏய், ஓய்); வியப்பிடைச் சொற்கள்

(interjections) (எ.டு. ஒல்லென, அந்தோ, அரோ, அம்ம, ஏ, ஐயோ); உவம உருபுகள் (particles of comparison) (எ.டு. அன்ன, போல, புரைய, ஒப்ப) எனப் பாகுபாடு செய்கிறார்.

## 2. சொல் பயனிலை அடிப்படையில் பிரிக்கப்படுபவை

தொல்காப்பியர் எச்சவியலில் செய்யுளுக்குரிய சொற்கள் என சொற்களை இயற்சொல் (native words), திரிசொல் (free variants), திசைச்சொல் (regional dialects), வடசொல் (words borrowed from sanskrit) எனப்பிரிக்கிறார்.

**இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்**
**றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே** (தொல்.சொல்.393)

அவற்றுள்,

**இயற்சொல் தாமே**
**செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்**
**தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே**
(தொல்.சொல்.394)

என இயற்சொல்லிற்கு இலக்கணம் வகுக்கிறார். எ.டு. நிலம், நீர், சூழ், மக்கள்.

**ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்**
**வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியும்**
**இருபாற் றென்ப திரிசொற் கிளவி**
(தொல்.சொல்.395)

எனத் திரிசொல்லிற்கு இலக்கணம் வகுக்கிறார். எ.டு. மலை - வரை, குன்று; அரங்கம் - யாற்றிடைக் குறை, ஆடுமிடம், இல்லின்கண் ஒரு பக்கம்.

திசைச்சொல்லிற்கு,

**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்**
**தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி**
(தொல்.சொல்.396)

என்று இலக்கணம் வகுக்கிறார். எ.டு. அப்பாவை அச்சன் என்பதாகும்.

**வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ**
**எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே**
(தொல்.சொல்.397)

என வடசொல்லிற்கு இலக்கணம் வகுக்கிறார். எ.டு. மேரு, குங்குமம், கரணம்.

மேற்கூறியதுபோல தமிழில் சொல்வகை அமையப்பெறினும் அவை பலவாறாகப் பல்வேறு அறிஞர்களால் பகரப்பட்டுள்ளன.

நேமிநாதம் சொல்வகையை,

**பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்**
**இயற்சொல் முதன் நான்கும் எய்தும்-பெயர்ச்சொல்**
**உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் ஒன் விரவுற்று**
**இயலும் என உரைப்பர் இங்கு**

(நேமி.சொல்.29)

என எட்டுவகையாகப் பிரிக்கிறது. நன்னூலும், இலக்கண விளக்கமும் சொல்லைப் பத்து வகையாகப் பிரிக்கின்றன.

**இயற்சொல் திரிசொல் இயல்பில் பெயர்வினை**
**என இரண்டாகும் இடையுரி அடுத்து**
**நான்குமாம் திசை வட சொல்லணுகாவழி**

(நன்.270, இ.வி.171)

தொன்னூல் விளக்கம் சொல்லைப் பன்னிரண்டு வகையாகப் பிரிக்கிறது.

**எச்சொல்லும் பெயர்வினை இடைஉரி என நான்கு**
**இவற்றுட் பொதுவான இயற்சொல் திரிசொல்**
**ஒருமொழி தொடர்மொழி ஒரு விலாப் பொதுமொழி**
**பகாப்பதம் என்ற பகுபதம் என்ற**
**ஆகுபெயர் இருதிணை ஐம்பால் மூவிடம்**
**சாரியை எனப் பொது தகுதி ஈராறே**

(தொன்.வி.42)

ஆனால் முத்துவீரியம்

அதுதாம்
**பெயர் வினைஇடை உரி எனச் சொல் நான்கே**

(மு.வீ.பெ.3)

என்று கூறுகிறது.

சொற்கள் இயற்றமிழ்ச் சொல், செய்யுள் ஈட்டச் சொல், இசைத் தமிழ் சொல், கூத்துச் சொல், இலக்கியச் சொல் என

வகைப்படுத்தப்படுகின்றன (ச.வே. சுப்பிரமணியன், 1972:137). மேலும் சொற்களை உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொல் என்றும் பகுப்பர். உட்சொல் என்பதை நெஞ்சோடு கூறல் என்றும்; புறச்சொல் என்பதைக் கேட்போருக்கு உரைத்தல் என்றும்; ஆகாயச் சொல் என்பதனைத் தானே கூறல் என்றும் சொல்வர் (சிலம்பு 3:13, அடியார்க்கு நல்லார் உரை). இவைகளைக் கூத்துச் சொல் என்றும் கூறுவர் (ச.வே. சுப்பிரமணியன், 1972:137).

சொற்களை மேலும் சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் எனப்பிரிப்பர் (சிலம்பு 3:13, அடியார்க்கு நல்லார் உரை). இவைகளை இசைத் தமிழ் என்றும் கூறுவர் (ச.வே. சுப்பிரமணியன், 1972:137).

சொற்களைச் செஞ்சொல், இலக்கணச் சொல், குறிப்புச் சொல் என்றும் பிரிப்பர் (திருக்குறள் 711, பரிமேலழகர் உரை).

இவை தவிர சொற்களைப் புணரியல் (ச.வே. சுப்பிரமணியன், 1972:139) அடிப்படையிலும் பிரிப்பர் இவற்றை உயிரிறு சொல், மெய்யிறு சொல் என எழுத்தடிப்படையிலும்; நிறுத்த சொல், குறித்து வருகிளவி என இட அடிப்படையிலும்; பெயர்ச்சொல்லோடு பெயரும் வினைச்சொல்லோடு வினையும் தம்முள் ஒன்றுபட்டும் மாறியும் புணர்வதைச் சொல் அடிப்படையிலும் கொள்வர்.

சொல்லுக்குப் பொதுநிலையில் இலக்கணம் (ச.வே. சுப்பிரமணியன், 1971:18) கூறும்போது மரபுவழி நின்று, ஒழுக்க அடிப்படையில் தோன்றிய திணை பற்றித் திணைக்கண் தோன்றுவது சொல் எனப்பேசுகிறது தொல்காப்பியம். புறநிலை அடிப்படையில் வைத்து இலக்கணம் கூறும்போது சொல்லுக்கு நிலைக்களம் பொருண்மையும் சொன்மையும் எனக் குறிக்கின்றது (தொல்.சொல்.152). பொருண்மை தெரிபுவேறுநிலையல் குறிப்பில் தோன்றல் எனத் தெளிவுபடுத்துகின்றது (தொல்.சொல்.153). சொன்மை சொல்லின் புறவடிவை உணர்த்துகின்றது என்பது வெளிப்படை. திணை, பால், எண், காலம், வேற்றுமைகளைச் சொல் உணர்த்தும்; வழுக்காத்தலும் உரைக்கப்படுகின்றது. ஒரு மொழி, தொடர்மொழி, பொதுமொழி என்ற அமைப்பையும் நன்னூல் தருகின்றது.

இவற்றைச் சுருங்கமாகக் கூறின் தொல்காப்பியத்தில் சொல்பாகுபாடு (ச.வே.சுப்பிரமணியன், 1971:142) ஒழுக்க அடிப்படையிலும் அதன் காரணமாகத் திணை, பால், எண், இடம் என்ற நிலையிலும்; புறநிலை அடிப்படையில் புணர்ச்சிக்கு அமையும் சொற்பகுப்பிலும்,

சொல் பயன்நிலை அடிப்படையில் நான்காகவும், பொருள் அடிப்படையில் பலவாகவும் அமைகிறது.

மேற்கூறியவற்றை ஆய்ந்து நோக்குகையில் தொல்காப்பியரின் சொல்பாகுபாடு பொருள் நிலையில் அமையாது செயல்வகை (function) நிலையில் பாகுபடுத்தப்பட்டுள்ளது தெரிகிறது. அவர் சொல் அடி, வேற்றுமை உருபு ஏற்றால் பெயராகவும், கால உருபு ஏற்றால் வினையாகவும் கொள்கிறார். பெயரோடும் வினையோடும் இணைந்து வருவனவற்றை இடைச்சொல் என்றும் பெயராகவும் வினையாகவும் வராது தனிச்சொல்லாக உள்ளனவற்றை உரிச்சொல் என்றும் கூறுகிறார். மற்றபாகுபாடுகள் எல்லாம் பெயர் வினையின் அடிப்படையிலேயே அவரால் கொள்ளப்படுகின்றன. அவை பொருள்நிலையில் கூட அமையப் பெறலாம்.

## குறிப்புகள்

1. a word is a minimum free form.
2. A word is .............any segment of a sentence bounded by successive points at which pausing is possible.
3. A free form which cannot be divided entirely into smaller free forms is a minimum form or word.
4. At a more abstract level, it is a grammatical unit consisting of morphemes (minimally, one free morpheme) and functioning to form phrases, clauses, and sentences.
5. தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரையின் நூற்பா எண்கள் இக்கட்டுரைக்கு எடுத்தாளப்பட்டுள்ளன. ச.வே. சுப்பிரமணியன் தொல்காப்பியம் தெளிவுரை, நூற்பா எண்கள், எழுத்ததிகாரத்திற்குக் கொள்ளப்பட்டுள்ளன.
6. ஒரு சொல் தன் பொருளை விளக்க மற்றொரு சொல்லை அவாவி நிற்றல் அவாய் நிலையாகும்.
7. ஒரு சொல் மற்றொரு சொல்லோடு தழுவ தகுதியுடைத் தாதல் தகுதி நிலையாகும்.

8. சொற்களை இடையீடின்றிக் கூறல் அண்மை நிலையாகும். வடநூலார் அவாய், தகுதி, அண்மை என்பதனை முறையே ஆகாங்க்ஷா, யோக்யதா, சந்நிதி என்பர்.

9. 'சாத்தன் வந்தான்' என்பது இருமொழித் தொடர்.

10. அறம் வேண்டி அரசன் உலகம் புரந்தான் என்பது பன்மொழித் தொடர்.

11. அவையாவன: இரண்டு திணை வகுத்து, அத்திணைக் கண் ஐந்து பால்வகுத்து, எழுவகை வழு வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, அறுவகை ஒட்டு வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து, இரண்டு இடத்தான் ஆராய்தல் ஆகும்.

12. இருதிணைப் பொருளுமாவன, ஐம்பாற் பொருளின் பகுதியாகிய காட்சிப் பொருளுங் கருத்துப் பொருளும் அவற்றின் பகுதியாகிய இயங்கு திணையும், நிலைத் திணையுமாம். இவையெல்லாமைம்பாலாயடங்கின.

13. பொருட்டன்மையாவது மக்கட் டன்மையும் இயங்குதிணைத் தன்மையும், நிலைத்திணைத் தன்மையும் ஆம். இத்தன்மை யொருபொருட்குக் கேடு பிறந்தாலுந் தனக்குக் கேடின்றித் தானொன்றேயாய்ப் பல வகைப்பட்ட பொருடோறும் நிற்குமென் றுணர்க.

14. கருவியாவது அப்பொருட்டன்மையை யொருவனுணர்தற் கவ்வோசைக் கருவியாய் நிற்றல். இதனை ஐம்பொறிகள் ஒருவன் பொருள்களை யுணர்தற்குக் கருவியாய் நின்றாற் போலக் கருவியாய் நிற்குமென்றுணர்க.

15. ஓசை, அரவம், இசை என்பன போலன்றிக் கிளவிச் சொல், மொழி யென்பன வெழுத்தினான் ஆகிய வோசையை உணர்த்தும்.

16. எட்டிறந்த பலவகையான சொன்னான்கு வகையவென்றலும், அவற்றையே பலவாகப் பகுத்தலும் விகாரவகையும், பொருள்கோள் வகையும் செய்யுட்குரிய சொன்னான்கென்றலும் பிறவுமாம்.

17. நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க முலக மாதலின்

இருதிணை யைம்பா லியனெறி வாழா அமைத்
திரிவில் சொல்லொடு தழா அல் வேண்டும்.

18. இன்மை முகத்தான் அமைந்த இலக்கணமாவது
'வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது'
என்றாற்போல மறைவகையான் வருவன.

19. உண்மை முகத்தான் அமைந்தவாவன 'நினையுங்
காலைக் காலமொடு தோன்றும்' என்றாற்
போல விதிமுகத்தான் அமைந்தவை.

20. அவ்வழி
அவன் இவன் உவனென வரூஉம் பெயரும்
அவள் இவள் உவளென வரூஉம் பெயரும்
அவர் இவர் உவரென வரூஉம் பெயரும்
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவ ரென்றும்
ஆவயின் மூன்றொடு அப்பதினைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே.

21. அதுஇது உதுவென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்
அவை இவை உவையென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை யென்னும் பெயரும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த அஃறிணைப் பெயரே.

22. இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே.

23. வேற்றுமை தாமே ஏழென மொழிப (தொல்.சொல்.62)
விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே (தொல்.சொல்.63)

24. தொழில்நிலை யொட்டும் ஒன்றலங்கடையே.

25. வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே.

26. பெறலின் இழவின் காதலின் வெகுளியின்.

27. முன்னப் பொருள புணர்ச்சி வாயின்.

## பார்வை நூல்கள் & கட்டுரைகள்


1. அகத்தியலிங்கம், ச., **மொழியியல், சொல்லியல் - பெயரியல்**, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1979.

2. ” ‘தமிழில் வினை வகைப்பாடு’, **மொழியியல்**, தொகுதி 4, எண் 4, ஏப்ரல்-ஜூன் 1981, பக்.1-14.

3. ஆதித்தன், **இலக்கணக்கொள்கை**, சங்குமுத்து வெளியீடு, நாகர்கோவில், 1999.

4. இசரயேல், மோ., ‘தமிழில் சொல்வகை’, **இலக்கண ஆய்வு பெயர்ச்சொல்**, சிந்தாமணி வெளியீடு, மதுரை, 1976.

5. ” **இலக்கண ஆய்வு வினைச்சொல்**, சிந்தாமணி வெளியீடு, 1976 (ஆ).

6. ” **இடையும் உரியும்**, சிந்தாமணி வெளியீடு, எண் 3, 1977.

7. இளம்பூரணர், **தொல்காப்பியம் சொல்லதிகாரம்**, இளம்பூரணர் உரை, திருநெல்வேலித் தென்னிந்ததிய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1944.

8. கல்லாடனார், **தொல்காப்பியம் சொல்லதிகாரம்**, கல்லாடனார் உரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, 1964.

9. காமாட்சி, அ., **தொல்காப்பியத்தில் வினைக்குறிப்பு**, சுபா பதிப்பகம், நாகர்கோவில், 1989.

10. கால்டுவெல், **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்**, (பாகங்கள் 1,2,3,4), கா. கோவிந்தன், க. ரத்னம் (தமிழில்), குறள் நிலையம், சென்னை, 1977.

11. சண்முகம், செ.வை., ‘தொல்காப்பியரின் சொல்லியல் கோட்பாடு’, **மொழியியல்**, தொகுதி 2, எண்1, ஜூன்- ஆகஸ்ட் 1978, பக். 75-100.

12. ” ‘சொல் விளக்கமும் பாகுபாடும் இலக்கண வரலாற்று நோக்கு’, **தமிழாய்வு அணுகுமுறைகள்**, கருணாகரன் (பதிப்பர்), பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், 1987.

13. ” 'உரிச்சொல்', **மொழியியல்**, தொகுதி 12, எண் 3 & 4, ஜன - ஜுன் 1985, பக்.71-120.

14. ” 'வினைச்சொற்கள்', **மொழியியல்**, தொகுதி 8 எண் 3 & 4, ஜன - ஜுன் 1989, பக்.99-144.

15. சுபபிரமணியம், பி.எஸ்., 'திராவிட மொழிகளின் அமைப் பொற்றுமை', **மொழியியல்**, எண் 3 & 4, ஜன- ஜுன் 1978, பக்.13-45.

16. சுப்பிரமணியன், ச.வே., 'தொல்காப்பியரின் சொற்பாகுபாடு', **தொல்காப்பிய மொழியியல்**, ச. அகத்தியலிங்கம், க.முருகையன் (பதிப்பர்), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1972, பக்.135-142.

17. ” **மொழிக்கட்டுரைகள்**, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1974, பக்.36-46.

18. ” **இலக்கணத்தொகை-சொல்**, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1971.

19. ” **தொல்காப்பியம் தெளிவுரை**, மணிவாசகர் நூலகம், 1998.

20. சேனாவரையர், **தொல்காப்பியம் சொல்லதிகாரம்**, சேனாவரையருரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, மறுபதிப்பு, 1959.

21 தெய்வச்சிலையார், **தொல்காப்பியம் சொல்லதிகாரம்** தெய்வச்சிலையார் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1979.

22. நச்சினார்க்கினியர், **தொல்காப்பியம் சொல்லதிகாரம்**, நச்சினார்க்கினியம், தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு, எண்93, தஞ்சாவூர், 1962.

பவணந்தி, **நன்னூல்**, காண்டிகையுரை, 1963.

23. Bernard Bloch, George L. Trager, **Outlines of Linguistic Analysis,** Books Reprint corporation, 1972.

24. Bloomfiled, Leonard, **Language,** Motilal Banarsidass, Delhi, Reprint 1963.

25. Hockett, Charles F., **A course in Modern Linguistics,** The Macmillan company, 1958.

26. Krnst Pulgram, **Syllble, Word, Nexus, Curses,** Mouton, The Hague, 1970.

27. Louis, H. Gray, **Foundations of Language,** The Macmillan company, New York, 1958.

28. Lyons, J., **Introduction to theorical Linguistics,** Cambridge University Press, London, 1968.

29. Manickam, V.Sp., **A Study of Tamil Verbs,** Annamalai University. Annamalainagar, 1977.

30. Srinivasan, R., 'Col', **Heritage of the Tamils Language and Grammar,** S.V. Subramanian, K.M. Irulappan (Editors), International Institute of Tamil Studies, Chennai, 1980. pp.510-532.

31. William Bright (Editor-in-Chief), **International Encyclopaedia of Linguistics,** Oxford University Press, Vol.1-3, Oxford, 1972.

# தொல்காப்பியரின் வேற்றுமை இலக்கணக்கோட்பாடு

வே.சா. அருள்ராஜ்

---

## முன்னுரை

திராவிட மொழிகளில் வேற்றுமை என்பது பெயர்ச்சொல்லின் ஒரு பகுதியாகவே அமைந்திருப்பதைக் காணலாம். பொதுவாக, ஒரு பெயர்ச்சொல்லுக்கும் பயனிலையாக வரும் ஒரு வினைச் சொல்லுக்குமிடையேயுள்ள பொருள் தொடர்பு சில ஒட்டுக்களால் காட்டப்படும்போதுதான் அதனை வேற்றுமை என்கிறோம். பொருள் தொடர்பினை வேற்றுமையெனவும் ஒட்டுக்களை வேற்றுமை உருபு எனவும் அழைக்கிறோம். வேற்றுமையினைத் தமிழ் மொழியில் பெயரோடு இணைந்த ஒட்டுக்களும்(Suffixes) சொல்லுருபுகளும் (Post - Positions) சுட்டிக் காட்டுகின்றன. தொல்காப்பியம் சொல்லிலக்கணக்கத்தில் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு ஆகிய மூன்று இயல்களிலும் மற்றும் பல நூற்பாக்களிலும் வேற்றுமை குறித்து விரிவாக எடுத்துரைத்தும் வேற்றுமை என்றால் என்ன என்பதற்கான விளக்கம் குறித்து ஏதும் கூறாதது ஆச்சரியமாகவே உள்ளது. ஆனால், நன்னூலும் (நூ. 291) இலக்கண விளக்கமும் (நூ. 193) தொன்னூல் விளக்கம் (நூ.55) முறையே

பொருள் வேற்றுமை செய்வன......... வேற்றுமை

என்றும்,

பொருள் வேற்றுமை செய்வன . . . . . கடையே

என்றும்,

வேற்றுமைப் படுத்தலின் வேற்றுமையாம்

என்றும் வேற்றுமைக்கு விளக்கம் தருகின்றன.

இந்நூற்கள் வேற்றுமையைப் பெயரின் ஒரு பகுதியாக விளக்குவதால் இதைச் சொல்லிலக்கணமாகவே கருதுகின்றன எனலாம். ஆனால், தொல்காப்பியம் சொற்றொடரின் தன்மையைப் பேசுகின்ற தொடரியலை விளக்கி நிற்கும் கிளவியாக்கத்திற்கு அடுத்து வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு ஆகியவற்றை விளக்குவதால் வேற்றுமை தொடரிலக்கணத்தில் கருதப்படுவதை அறியலாம்.

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை என்று வேற்றுமைக்கு விளக்கம் கொள்வதும் பொருந்தாது எனப் பரமசிவம் (1991:137,138) கூறுகிறார். அவரது கருத்து சரியானதே. அதாவது வேற்றுமை உருபை ஏற்பதனால் ஒரு பெயர்ச்சொல்லின் சொற்பொருள் (Lexical Meaning) முற்றிலும் மாறிவிடாது. இராமன், இராமனை, இராமனால், இராமனோடு போன்ற சொற்களில் 'இராமன்' எனும் சொல் தனக்குரிய சொற்பொருளில் மாற்றமின்றிக் காணப்படுவதைக் காணலாம். ஆனால், அச்சொல்லின் இலக்கணப்பொருள் (Grammatical Meaning) முற்றிலும் மாறுபடுகிறது. இராமன் என்னும் பெயர்ச்சொல்-ஐ உருபை ஏற்கும்போது செயப்படுபொருளாகவும், -ஆல் உருபை ஏற்கும்போது காரணப்பொருளாகவும், -ஒடு உருபை ஏற்கும்போது உடனிகழ்ச்சிப் பொருளாகவும் வினைச்சொல்லோடு தொடர்பு கொண்டு மாற்றம் பெறுவதைக் காணலாம். எனவே, ஒரு தொடரில் ஒரு பெயர்ச்சொல் அத்தொடரில் காணப்படும் வினைச்சொல்லோடு கொண்டுள்ள உறவு முறையிலேயே வேற்றுமை அமைகிறது எனலாம். எழுவாய், செயப்படுபொருள், காரணப்பொருள், உடனிகழ்ச்சிப்பொருள் என வேற்றுமைப் பெயர்களெல்லாம் தொடரடிப்படையிலேயே அமைகின்றன. இவை இலக்கண மாற்றமேயன்றி சொல் நிலை மாற்றமல்ல.

திராவிட மொழிகளுக்கெல்லாம் இலக்கிய இலக்கண வளத்தில் முன் நிற்கும் தமிழ் மொழியின் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் வேற்றுமை இலக்கணக் கோட்பாடு எவ்வாறு அமைந்துள்ளது எனக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வேற்றுமை உருபுகள்

சொற்றொடர்களில் பொருள் மயக்கமின்றி நன்கு பொருள் விளங்குவதற்காகப் பெயர்களோடு சேர்க்கப்படும் உருபுகளுக்கு வேற்றுமை உருபுகள் என்று பெயர். இலக்கணக் கொத்து (நூ.16) மூன்று வகையான வேற்றுமை உருபுகளைக் கூறுகின்றது.

**உருபுவேறு உருபுசொல் உருபு என்ன**
**வேற்றுமை உருபு மூன்று என விளம்புவர்**

(எ.கா.)

வாளால் வெட்டினான் - உருபு (-ஆல்)
வாளின் வெட்டினான் - வேறு உருபு (-இன்)
வாள் கொண்டு வெட்டினான் - சொல்லுருபு (கொண்டு)

**வாளால் வெட்டினான்** என்பதில், மூன்றன் உருபாகிய -ஆல் தனக்குரிய கருவிப் பொருளிலே வந்துள்ளது. **வாளின் வெட்டினான்** என்பதில் ஐந்தன் உருபாகிய -இன் தனக்குரிய ஏதுப் பொருளால் மூன்றாவதன் கருவிப் பொருளைச் சுட்டி நிற்கிறது. இனி **வாள் கொண்டு வெட்டினான்** என்பதில் கொண்டு என்னும் சொல்லுருபு -ஆல் என்ற உருபின் பொருளில் வந்துள்ளது. இவை முறையே உருபு, வேறு உருபு, சொல்லுருபு என்பனவற்றிற்கு எடுத்துக்காட்டாயின.

தொல்காப்பியர் ஒரு வேற்றுமைக்கு ஓர் உருபு என்ற நெறியில்தான் இலக்கணம் கூறிச் செல்வதைக் கீழ்வரும் நூற்பா வெளிப்படுத்துகிறது.

**ஐ ஒடு கு இன் அது கண் என்னும்**
**அவ்வா றென்ப வேற்றுமை யுருபே**

(தொல்.நூ:113)

இலக்கணக் கொத்து ஆசிரியரும் நூற்பா 22-இல்,

**ஒருவேற் றுமைக்கு ஓர் உருபே வருதலும்**
**எனஇரு கூறாய் வரும் உரு புகளே;**
**ஐ – கு ஒன்றே; அல்லன பலவே**

எனக் கூறுகிறார். இரண்டாம் வேற்றுமை ஐ என்ற ஒரே உருபினையும் நான்காம் வேற்றுமை கு என்ற ஒரே உருபினையும் பெற்று வருமெனவும் ஏனைய வேற்றுமைகள் ஒன்றிற்கு மேற்பட்ட உருபுகளைப் பெற்று வரும் என்பதும் அவரது கருத்தாகும். பெயரும் விளியும்

தனித்தனியாக இல்லாமல் பெயர்ச்சொல் வடிவாகவே அமைவன. மற்றையன தனித்தனிச் சொற்கள். அதனால் வேற்றுமை உருபு ஆறு என்றார் தொல்காப்பியர். நிலைவரு மொழிகளாகச் சொற்கள் புணர்க்கப்படுவதற்குரிய வகையில் வேற்றுமையுருபுகள் ஆறெனப்பட்டன. தொடர் அமைப்பு முறையில் எட்டாகுமெனச் சிவலிங்கனார் (1983:9) கூறுகின்றார். உருபுகளின் அடிப்படையிலேயே தொல்காப்பியத்தில் வேற்றுமைகளின் பெயர் கொடுக்கப் பட்டுள்ளதைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் 548 ஆவது நூற்பாவின் மூலம் அறியலாம்.

அவைதாம்

**பெயர் ஐ ஒடு கு**

**இன்அது கண்விளி என்னும் ஈற்ற**

முதல் வேற்றுமைக்குத் தனியாக எந்தவொரு உருபும் கொடுக்கப்படவில்லை. ஒரு பெயர் வருமொழியுடன் தொடரும்போது தன் தனித்தன்மையினின்றும் அதாவது பெயர்ச்சொல் என்ற நிலையினின்றும் வினைமுதல் என்ற பொருளைப் பெறுகின்றது. இம்மாற்றமே முதல் வேற்றுமை எனப்பட்டது. 'எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே' எனத் தொல்காப்பியம் நூற்பா 549 கூறுகிறது.

இரண்டாம் வேற்றுமையுருபு –ஐ ஒன்றே. இவ்வுருபு எந்த மாற்றமும் பெறவில்லை. இதன் பொருள் செயப்படுபொருளாம். மூன்றாம் வேற்றுமை உருபாகத் தொல்காப்பியர், ஒடு என்ற ஒன்றையே குறிப்பிடுகின்றார். அது வினைமுதல் பொருளிலும் கருவிப் பொருளிலும் வரும் என்றார் (நூ.557). இன்று ஒடு உருபு உடனிகழ்ச்சி பொருளுக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது. தொல்காப்பியர் காலத்துக்கு முன்னர் ஒடு உருபு வழங்கியிருத்தல் வேண்டும். அவ்வழக்கு தொல்காப்பியர் காலத்தில் அருகி ஆன் உருபு பெருகியிருத்தல் வேண்டும். மூன்றாம் வேற்றுமைக்கு முன்னோர் வழக்கிய ஒடு உருபைக் கூறிய தொல்காப்பியர் உடம்பொடு புணர்த்தலால், நூற்பா 581-இல்

**ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்**

எனவும், நூற்பா 592-இல்

**கு ஐ ஆன் என வருஉம் இறுதி**

எனவும் ஆன் உருபைக் கூறுவதைக் காணலாம். இவ்வுருபு தொல்காப்பியருக்குப் பின்னர் ஆல் எனத் திரிந்திருக்க வேண்டும்.

ஆன் உருபு வழக்கொழிய ஆன் என்னும் சாரியை வந்ததேயாகும். நன்னூலார் (நூ.297) ஆல், ஆன், ஓடு, ஒடு ஆகிய உருபுகளை மூன்றாம் வேற்றுமைக்குக் கூறுவதைக் காணலாம்.

ஒடு என்பது உடன் என வரும் எனவும் உடன் என்றது உடு, அன் எனப்பிரிந்து, உடு என்பது ஒடு ஆகிய பின்னர் அன் என்பது ஆன் ஆகியிருக்க வேண்டும் எனவும் ஒடு பெரு வழக்காக ஆன் மறையும் நிலையில் இருந்த காலம் தொல்காப்பியர்க்கு முற்பட்ட காலம் எனவும் அதனால் ஒடு ஒன்றை மட்டும் மூன்றாம் வேற்றுமையுருபு என்று கூறியிருக்க வேண்டுமெனவும் தொல்காப்பியர் காலத்தில் ஆன் தனித்து வாளான் என்பது போல வழங்கினமையின் அதை உடம்பொடு புணர்த்தலில் சேர்த்தார் எனவும் சிவலிங்கனார் (1983: IX) கூறுகிறார். தற்காலத்தில் உடன் என்ற சொல் மூன்றாம் வேற்றுமையின் சொல்லுருபாகக் கருதப்படுவதைக் காணலாம். கொண்டு என்பதையும் மூன்றாம் வேற்றுமை சொல்லுருபாகக் கூறுவர்.

**வாள் கொண்டு வெட்டினான்**

என்னும் தொடரில் வாள் கொண்டு என்பதை வாளைக் கொண்டு என விரித்துக் கூறுவதால் கொண்டு என்பதை உருபாக ஏற்கவியலாது. உருபு மேலும் ஓர் உருபை விரிக்குமாறு அமையாது. அதனால் மூன்றாம் வேற்றுமைக்குக் கொண்டு என்பதைச் சொல்லுருபாகக் கொள்ளக் கூடாது.

நான்காம் வேற்றுமைக்கு கு உருபை மட்டும் தொல்காப்பியர் கூறுகிறார். ஐந்தாம் வேற்றுமையுருபாக இன் ஒன்றே கூறினார். நன்னூலார் இல் உருபையும் கூறினார். இரண்டும் செய்யுளில் மட்டுமே வரும். உலக வழக்கில் இல் வந்தாலும் இருந்து என்ற சொல்லை உடன் கொண்டே வருகின்றது. தொல்காப்பியர் இன் உருபையே ஐந்தாம் வேற்றுமைக்குக் கூற இல் உருபு எப்படி வந்தது எனக் கேட்கலாம். இன் என்பது சாரியையாக வாளினை, வாளினால், வாளினுக்கு, என எல்லா வேற்றுமை உருபுகளோடும் வருவதைக் காணலாம். இன் உருபின் மேல் இன் சாரியை வருவது கிடையாது. ஒருவேளை வந்தால் மலையின் வீழ் அருவி என்பதிலுள்ள இன் உருபு இன்றிவந்ததா அல்லது அதுவே உருபா என்ற ஐயம் எழுகிறது. அதனால் தான் தொல்காப்பியர் நூற்பா 131-இல்,

**இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்கு**
**இன்னென் சாரியை இன்மை வேண்டும்**

எனக் கூற வேண்டியதாயிற்று. **மலையின் வீழ் அருவி** என்பதனை **மலையினின் வீழ் அருவி** எனக் கூற முடியாது. தற்காலத்தில் **இன்** என்பதற்குப் பதில் **இல்** உருபே அமைந்தது. **ஆன்** உருபு **ஆல்** உருபானது போல்.

ஆறாம் வேற்றுமையுருபாகத் தொல்காப்பியர் **அது** ஒன்றையே கூறுகிறார். ஒருமை பன்மை பாகுபாடு பற்றி ஒன்றும் கூறவில்லை. இரண்டிற்கும் **அது** என்னும் ஒரே உருபு வருமெனக் கூறுகிறார். ஏழாம் வேற்றுமைக்குக் **கண்** என்னும் ஓர் உருபைத் தொல்காப்பியர் கூறுகிறார். இக்காலத்தில் அது **இல்** என வழங்கப்படுகிறது. எட்டாம் வேற்றுமைக்குத் தனி உருபு கூறப்படவில்லை. பெயரின் விகாரமே அதன் உருபாகும்.

## வேற்றுமைகளின் எண்ணிக்கை

வேற்றுமையை எட்டு வகையாக அமைத்துக் கொண்டனர் தமிழ் இலக்கண ஆசிரியர்கள். ஆனால், தொல்காப்பியர் நூற்பா 113-இல் ஆறு வேற்றுமைகளே உருபுகளை எடுத்து வருமெனவும் நூற்பா 546-இல்,

**வேற்றுமை தாமே ஏழெனமொழிப**

எனவும் நூற்பா 547-இல்

**விளி கொள்வதன்கண் விளியோடுஎட்டே**

எனவும் கூறுவதைக் காணலாம். இதனால் வெளிப்படையாகத் தனி வடிவம் உடைய வேற்றுமையுருபுகள் ஆறு என்றும்; விளியை நீக்கி எழுவாயுடன் ஏழு என்றும்; விளியுடன் எட்டு என்றும் தொல்காப்பியர் காலத்திலேயே வேற்றுமைகளின் எண்ணிக்கையில் வேறுபாடு இருந்து வந்துள்ளதை அறியலாம். இருப்பினும் தொல்காப்பியர் **விளியொடு எட்டே** எனக் கூறுவதால் அவர் கருத்து வேற்றுமை எட்டு என்பதையே உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

தொல்காப்பியர் எந்த அடிப்படையில் வேற்றுமைகளை எட்டு என வகுத்தார் என்று பார்க்கும்போது சிலர் உருபுகளின் அடிப்படையிலே வகுத்தார் என்பர். இது ஏற்றுக் கொள்வதற்கில்லை. காரணம் ஒரு வேற்றுமைக்கு ஒரு உருபு என்னும் நிலையோ ஒரு உருபுக்கு ஒரு வேற்றுமை என்னும் நிலையோ தொல்காப்பியத்தில் காணப்படவில்லை. அது மட்டுமல்ல, எழுவாய் வேற்றுமைக்கும் விளி வேற்றுமைக்கும் தொல்காப்பியத்தில் உருபுகள் கொடுக்கப்படவில்லை.

எனவே,

ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

போன்றவற்றினை வைத்துக் கொண்டு தொல்காப்பியர் உருபுகள் அடிப்படையிலேயே வேற்றுமைகளை வகுத்தார் எனக் கூறுவது பொருத்தமாய் இராது. அப்படியென்றால் பொருளடிப்படையில் வேற்றுமைகளை எட்டு எனத் தொல்காப்பியர் வகுத்தாரா என்றால் அதுவும் இல்லை என்றே கூற வேண்டும். ஏனெனில் ஒரு வேற்றுமைக்கு ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்கள் கூறப்பட்டிருப்பதைத் தொல்காப்பியத்தில் காணலாம். மூன்றாம் வேற்றுமை குறித்துக் கூறும்போது அது வினை முதற் பொருளிலும் கருவிப் பொருளிலும் வருமெனக் கூறப்பட்டிருப்பதைக் கீழ்வரும் நூற்பாவில் காணலாம்.

மூன்றாகுவதே
ஓடு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினை முதல் கருவி அனை முதற்றதுவே

(தொல். நூ. 557)

தொல்காப்பியர் தமிழில் எட்டு வேற்றுமைகளை உருபின் அடிப்படையிலேயே கொடுத்திருந்தாலும் முதலாம் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் நீங்கலாக மற்ற ஆறு வேற்றுமைகளும் அதனதன் உருபுகளைக் கொண்டு பெயரேற்றிருப்பதைத் தொல்காப்பிய நூற்பா 548-இல் கண்டு கொள்ள முடிகின்றது. முதல் வேற்றுமைக்கு உருபுகள் இல்லை; எழுவாயாகிய சொல்லின் வடிவமே முதல் வேற்றுமையாக வரும் என்பதை,

எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே

என்ற தொல்காப்பிய நூற்பா (549) வரையறுத்துக் கூறியிருப்பதைக் காணலாம். இவ்வாறு உருபுகள் அடிப்படையிலேயே வேற்றுமைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன என வைத்துக் கொண்டாலும் நூற்பா 590-இல் பொருளடிப்படையிலேயே வேற்றுமைகள் ஆராயப்பட வேண்டுமென்றும் கூறுகிறார்.

யாதன் உருபில் கூறிற் றாயினும்
பொருள் செல் மருங்கில் வேற்றுமை சாரும்

மேலே கூறப்பட்ட நூற்பாவில் யாதனுருபு என்பது என்ன பொருள் கொடுக்கிறது என்பதும் சிந்தித்தற்குரியது. தொல்காப்பிய உரையாசிரியர்கள் இச்சொல்லுக்கு இரண்டு விதமான பொருள்களைக்

கொடுக்கின்றார்கள். தெய்வச்சிலையார் **யாதனுருபு** என்பதற்கு வேற்றுமையல்லாத உருபு எனப் பொருள் கொடுக்கிறார். மற்றைய உரையாசிரியர்கள் **யாதனுருபு** என்பதற்கு ஒரு வேற்றுமைக்குரிய உருபு வேறு ஒரு வேற்றுமைக்கு ஆகி வருவது எனக் கூறுகிறார்கள். தெய்வச்சிலையார் கொடுத்திருக்கும் இரண்டு உதாரணங்களையும், மற்றைய உரையாசிரியர்கள் கொடுத்திருக்கும் எடுத்துக்காட்டுகளையும் பார்ப்போம்.

**வானின் றுலகம் வழங்கி வருதலாற்**
**றானமிழ்த மென்றுணரற் பாற்று** (குறள் 11)

**மருந்துண்டு நோய் தீர்ந்தது**

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் இரு எடுத்துக்காட்டுகளையும் தெய்வச்சிலையார் கூறியுள்ளார். உலகம் வழங்கி வருவதற்கு மழை ஏதுவாகலானும், நோய் தீர்தற்கு மருந்து ஏதுவாகலானும் இவற்றிற்குப் பொருள் உரைக்கும் போது மழை நிலை நிற்றலான் உலக நடை தப்பாது எனவும் மருந்துண்டதால் நோய் தீர்ந்தது எனவும் கூறும்போது உண்மையிலேயே இவை வேற்றுமை உருபாய் வராவிட்டாலும் பொருளடிப்படையில் வேற்றுமையைச் சாரும் என்று கூறுகிறார்.

**கிளையரி நாயற் கிழங்குமணற் கீன்ற**
**முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்**

**அரசர்க்கட் சார்ந்தான்**

ஆகிய எடுத்துக்காட்டுக்களைச் சேனாவரையரும் மற்ற உரையாசிரியர்களும் கொடுத்திருக்கிறார்கள். மேலே கூறப்பட்ட முதல் எடுத்துக்காட்டில் நான்காவதன் உருபாகிய கு ஏழாவதன் வேற்றுமைப் பொருளில் வந்திருப்பதைக் காணலாம். அடுத்த எடுத்துக்காட்டில் **கண்** என்ற ஏழாவதன் வேற்றுமையுருபு இரண்டாவதன் வேற்றுமைப் பொருளில் வந்திருப்பதைக் காணலாம் என்கிறார். தெய்வச்சிலையாரது கருத்து ஏற்றுக்கொள்வதற்கில்லை. எடுத்துக்காட்டாக,

1) பாம்பு கடித்தது
2) பாம்பைக் கடித்தது
3) பாம்பும் கடித்தது
4) பாம்பே கடித்தது
5) பாம்புதான் கடித்தது

ஆகிய தொடர்களில் தொடர் 1 இல் **பாம்பு** என்னும் பெயர்ச்சொல் எழுவாயையும் தொடர் 2 இல் -ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை

உருபு பாம்பு என்னும் பெயர்ச் சொல்லோடு இணைந்து செயப்படுபொருள் வேற்றுமையையும் தருவதைக் காணலாம். தொடர் 3 முதல் 5 வரை பார்க்கும்போது **–உம், –ஏ, –தான்** போன்ற உருபுகள் பெயர்ச்சொல் பாம்பு என்பதனுடன் இணைந்தும் பொருள் நிலையில் எந்த வேறுபாட்டையும் வேற்றுமை நிலையில் எடுக்காமல் இருப்பதைக் காண முடிகின்றது. தெய்வச் சிலையார் கூற்றுப்படி இம்மூன்று உருபுகளைப் பார்த்தால் அவை வேற்றுமையை எடுக்காத நிலையையே காண்கிறோம். எனவே, **யாதனுருபு** என்பது ஏதாவது ஒரு வேற்றுமை உருபேயாகுமென்பது தெளிவாகின்றது. மேலும் இடைச் சொற்கள் யாவும் தாம் சாரும் சொற்களின் பொருள்களை வேறுபடுத்துகின்றமையால்,

இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே

என்ற தொல்காப்பியரின் (நூற்பா 938) கூற்றும் பிழைபடுவதாயிற்று. தொல்காப்பியர் கூறுவது போன்று எல்லா இடைச்சொற்களும் பொருளை வேறுபடுத்தினாலும் இலக்கணப் பொருளை வேறுபடுத்தும் சொற்களையே வேற்றுமைச் சொற்கள் எனக் கொள்ள வேண்டும். –ஐ, –ஒடு போன்ற உருபிடைச் சொற்களே வேற்றுமை உருபுகள் எனப் பெயர் பெற்றன. பொருளடிப்படையிலே வேற்றுமைகள் ஆராயப்படவேண்டுமென்ற தொல்காப்பியரின் கருத்து, தடுமாறு தொழிற்பெயர் மயக்கத் தொடர்களின் குழப்பத்தைத் தீர்த்துவிடும்.

புலி கொல் யானை

என்னும் தொடரில் கொல்லுதல் தொழில் புலியினுடையதா யானையினுடையதா என்பது தடுமாற்றத்திற்குரியதாகும். அதனால் இதனைப்

புலியைக் கொன்ற யானை

என இரண்டாம் வேற்றுமையிலும்

புலியால் கொல்லப்பட்ட யானை

என மூன்றாம் வேற்றுமையிலும் கொள்ள முடியும்.

தொல்காப்பியர் எந்த அடிப்படையில் வேற்றுமைகள் எட்டு என வகுத்தார் என்பது தெளிவாய் தெரியவில்லை. வடமொழி இலக்கண நூல்களைப் பின்பற்றியே இவ்வாறு வகுத்தார் என்பது கால்டுவெல் கருத்தாகும் (கால்டுவெல் 1974:254). முதலாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என்பன போல எட்டு வேற்றுமைகளையும் எண்ணுப்

பெயர்களால் அழைப்பதும் வடமொழி நூல்களைப் பின்பற்றியதே ஆகுமென்பார் அவர். மேலும் அவர் கூறுகையில் வடமொழியில் எட்டு வேற்றுமைகளே உண்டென்றும் தமிழ் முதலிய திராவிட மொழிகளிலோ எட்டிற்கு மேற்பட்ட வேற்றுமைகள் காணப்படுகின்றன எனவும் கூறுகிறார். அவரது கருத்துக்கள் ஆராயப்படுவதற்குரியனவாகும்.

## வேற்றுமைகளின் அமைப்பு முறையும் பொருள் நிலையும்

தொல்காப்பியர் வேற்றுமை மரபுகளை எண் அடிப்படையிலும், உருபு அடிப்படையிலும் பொருள் அடிப்படையிலும் குறியீடு செய்து வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்று இயல்களால் தமது நூலில் விளங்க வைக்கிறார். ஆறாம் வேற்றுமையைத் தவிர மற்ற வேற்றுமைகள் வினையைச் சார்ந்து வரும். அதனால் முற்றுவினை இவ்வேற்றுமைப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு நிற்கும் என்பதனை நூற்பா 596-இல்,

**வினையே செய்வது செயப்படு பொருளே**
**நிலனே காலம் கருவி என்றா**
**இன்னதற்கு இதுபயன் ஆக என்னும்**
**அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ**
**ஆயெட் டென்ப தொழில் முதல் நிலையே**

எனத் தொல்காப்பியர் எடுத்துரைக்கின்றார்.

## முதல் வேற்றுமை

ஒரு பெயர் எழுவாயாகத் தோன்றும் நிலையே முதல் வேற்றுமை என்று தொல்காப்பியர் கூறுகின்றார். முதல் வேற்றுமையின் குறியீடு பெயர் என்பதாகும். எழுவாயாக நிற்கும் பொருள் விகாரமின்றி நிற்றலின் அதனை முதல் வேற்றுமை என்றார். முதலாம் வேற்றுமை என்பது எண்ணால் பெற்ற பெயராகும். பெயர் வேற்றுமை என்பது உருபால் பெற்ற பெயராகும். எழுவாய் வேற்றுமை என்பது பொருளால் பெற்ற பெயராகும். இது வினையையும் பெயரையும் பயனிலையாகக் கொண்டு முடியும். ஒரு தனிச் சொல்லோ, ஒரு தொகைச் சொல்லோ, ஒரு தொடரோ எழுவாயாக வரலாம். இந்த வேற்றுமையே மற்ற வேற்றுமைகளை வெளிப்படுத்தும். அப்போது அந்தந்த வேற்றுமை உருபுகளைப் பெற்று வரும். எழுவாய் கொண்டு முடியும் வகைகளாகத் தொல்காப்பியர் 6 வகைகளைத் தருகிறார். பெயர்ச்சொல் தனிப்பெயர்ச் சொல்லாக இருந்து எழுவாயாகிப் பயனிலை கொள்வது மட்டுமன்றி அறுவகைத் தொகைக் தொடர்மொழிகளாகவும் இருந்து பயனிலை கொள்ளும் என்கிறார். வெளிப்படையாக எழுவாய் வேற்றுமை பயனிலை

கொள்வதே சிறந்தது. சில தொடர்களில் எழுவாய் தோன்றாமல் பயனிலை கொள்வதையும் காணலாம். இதனைத் தோன்றா எழுவாய் என்பர். ஒரு தொடரில் எழுவாய் இது என உருபனியல், தொடரனியல், பொருளனியல், தருக்கவியல் ஆகிய எந்த ஒரு அடிப்படையிலும் வரையறை செய்ய முடியாத நிலையில் இன்றைய மொழியியலார் காணப்படுகின்றனர்.

## இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமை என்பது எண்ணால் பெற்ற பெயர். –ஐ வேற்றுமை என்பது உருபால் அமைந்த பெயர். செயப்படுபொருள் வேற்றுமை என்பது பொருளால் பெற்ற பெயர். ஒரு செயல் நிகழும்போது அதனால் ஒரு பொருள் தோன்றிவிடும். அப்பொருளே செயப்படுபொருள் எனப்படும். தொல்காப்பியர் அச்செயப்படு பொருள்களின் வகையாக, காப்பு முதலாகச் சிதைப்பு ஈறாக இருபத்தெட்டைக் குறிப்பிடுகின்றார்.

## மூன்றாம் வேற்றுமை

செயப்படுபொருளாதற்குக் கருவியாக வரும் நிலை மூன்றாம் வேற்றுமையாகும். மூன்றாம் வேற்றுமை என்பது எண்ணால் பெற்ற பெயர். ஒடு வேற்றுமை என்பது உருபால் பெற்ற பெயர். வினை முதல், கருவி வேற்றுமை என்பன பொருளால் பெற்ற பெயர். கருவி, காரணம், ஏது என்பவை ஒரு பொருட்கிளவிகள். எனினும் தம்முள் சிறிது வேறுபாடுடையவையாகும். அதனால் ஏதுபற்றி வரும் மூன்றாம் வேற்றுமை இன், **ஆன்** என்னும் உருபுகளை மாற்றுருபாகப் பெற்று வரும் என்கிறது தொல்காப்பியம். வினை முதலானது இயற்றும் வினை முதல் ஏவும் வினை முதல், என இருவகைப்படும்.

எ.கா. **நாயால் கடிக்கப்பட்டான்** - இயற்றும் வினைமுதல்

**அரசனால் தூக்கிலிடப் பட்டான்** - ஏவும் வினைமுதல்

இதுபோன்றே கருவியும் இருவகைப்படும் முதற்கருவி, துணைக்கருவியென.

எ.கா. **மண்ணான் இயன்ற குடம்** - முதற்கருவி

**வாளான் வெட்டினான்** - துணைக்கருவி

அதனின் இயறல் முதலாக இன் ஆன் ஏது என்பது ஈறாக உள்ள பத்து வகையிலும் பிற வகையிலுமாக மூன்றாம் வேற்றுமைப் பொருள் வருமெனத் தொல்காப்பியர் கூறுகிறார். **ஆன்** உருபு

வினைமுதல் கருவியாகியவற்றிற்குவர ஒடு உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்.

எ.கா. சாத்தனொடு கொற்றன் வந்தான்.

## நான்காம் வேற்றுமை

பிறிது பொருளைத் தன்பாற் கொள்ளும் நிலை நான்காம் வேற்றுமையாகும். நான்காம் வேற்றுமை என்பது எண் பற்றிய பெயர். கு வேற்றுமை என்பது பொருள் பற்றிய பெயர். கோடற்பொருள் வேற்றுமை என்பது பொருள் பற்றிய பெயர். இது அதன் பொருட்டாதல் முதலாகச் சிறப்பு என்படீறாகவுள்ள பொருள் வகையிலும் பிற வகைகளிலும் வருமெனத் தொல்காப்பியர் கூறுகிறார். இது பெரும்பான்மையும் வினையையும் சிறுபான்மை பெயரையும் கொண்டு முடியும்.

## ஐந்தாம் வேற்றுமை

தன்னை அளவையாக வைத்துப் பிறிதொரு பொருளை உறழ்ந்து கூறற்குரித்தாய் நிற்கும் நிலை ஐந்தாம் வேற்றுமையாகும். ஐந்தாம் வேற்றுமை என்பது எண்ணால் பெற்ற பெயர். இன் வேற்றுமை என்பது உருபால் பெற்ற பெயர். இதனை இடைக்காலத்தார் எல்லைப் பொருள் வேற்றுமை என்பர். இது பொருளால் பெற்ற பெயராகும். இது வண்ணம் முதலாகப் பற்று விடுதல் ஈறாக 28-உம் பிறவுமான வகைகளில் வருமெனத் தொல்காப்பியர் கூறுகிறார்.

## ஆறாம் வேற்றுமை

ஒரு பொருளுக்கு உரிமையாக நிற்கும் நிலை ஆறாம் வேற்றுமையாகும். ஆறாம் வேற்றுமை என்பது எண்ணால் பெற்ற பெயர். அது வேற்றுமை என்பது உருபால் பெற்ற பெயர். கிழமைப் பொருள் வேற்றுமை என்பது பொருளால் பெற்ற பெயர். இது பெயர் கொண்டு முடியும். கிழமைப் பொருள் வேற்றுமை தற்கிழமை, பிறிதின் கிழமை என இருவகைப்படும்.

எ.கா. **எனது கை** - தற்கிழமை

**எனது ஆடை** - பிறிதின் கிழமை

கிழமைப் பொருள் இயற்கை முதலாகத் திரிந்து வேறுபடுதல் ஈறாகவுள்ள 16-உம் பிறவுமாம் எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

## ஏழாம் வேற்றுமை

ஒரு செயல் நிகழ்தற்கு இடமாகக் குறிக்கப்படும் நிலை ஏழாம் வேற்றுமை எனப்படும். இது எண்ணால் பெற்ற பெயர். கண் வேற்றுமை என்பது உருபால் பெற்ற பெயர். இட வேற்றுமை என்பது பொருளால் பெற்ற பெயர். இது பெரும்பான்மையும் வினை கொண்டு முடியும். சிறுபான்மை பெயர் கொண்டு முடியும். இடம் என்பது தொழில் நிகழும் இடத்தைக் குறிக்கிறது. இடத்தில் காலமும் அடங்கும்.

## எட்டாம் வேற்றுமை

படர்க்கைப் பெயர்ப் பொருள் முன்னிலைப் பொருளாக மாறும் நிலை எட்டாம் வேற்றுமையாகும். இது எண்ணால் பெற்ற பெயர். இதற்குத் தனி உருபு இல்லை. பெயர்நிலைகளே உருபின் தன்மையைக் காட்டி நிற்கும். விளி வேற்றுமை என்பது பொருள் பற்றிய பெயர்.

## முடிவுரை

தொல்காப்பியர் வேற்றுமைக்கென மூன்று இயல்களில் விரிவாகச் செய்திகள் கூறியிருந்தாலும் வேற்றுமைக்கான விளக்கம் பற்றி எதுவும் கூறவில்லை. வேற்றுமையியலில் ஒருவேற்றுமைக்கு ஓர் உருபு என்ற நிலையிலே உருபுகளைக் கூறிச் செல்லும் தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமைக்கு **ஆன்** என்ற உருபைப் பிற நூற்பாக்களில் கூறுவதைக் காணலாம். வேற்றுமையியலில் வேற்றுமைகளுக்கு எண் அடிப்படையிலும் உருபு அடிப்படையிலும் பொருள் அடிப்படையிலும் பெயர் வழங்கி இருப்பதைக் காண முடிகின்றது. வினையையே அடிப்படையாக வைத்து வேற்றுமைகளின் பொருள் ஆராயப் படவேண்டும் என்றும் கூறுகிறார். வேற்றுமைகள் எந்த உருபுகள் அடிப்படையில் கூறப்பட்டாலும் பொருளின் அடிப்படையிலே அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறார். அவ்வாறு கூறும் அவர் மூன்றாம் வேற்றுமையில் வினைமுதல், கருவி ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்துக் கொடுத்திருப்பதன் காரணம் ஒருவேளை அவரது காலத்தில் **ஒடு** என்னும் உருபு இரண்டிற்கும் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். வினையையே அடிப்படையாக வைத்து வேற்றுமைகள் அமைய வேண்டுமென்று கூறும் அவர் ஆறாம் வேற்றுமையை எதன் அடிப்படையில் வேற்றுமையில் அடக்கினார் என்பதும் சிந்தித்தற்குரியது. வேற்றுமை மயங்கியலில் பொருளடிப்படையிலே வேற்றுமைகளை நோக்குகிறார் எனலாம்.

## பார்வை நூல்கள்

1. அருள்ராஜ், வே.சா. (ப.ஆ), ஆய்வு மலர்கள், நியூவிசன் வெளியீட்டகம் தஞ்சாவூர், 1999.

2. சிவலிங்கனார், ஆ., (ப.ஆ), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் : வேற்றுமையியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

3. பரமசிவம், கு., இக்காலத் தமிழ் மரபு, கழக வெளியீடு, சென்னை, 1991.

4. Agesthialingom, S., (Ed.), **Dravidian Case System,** Annamalai University, Annamalai Nagar, 1976.

5. Caldwell, R., **A Comparative Grammar of the Dravidian,** Munshiram Manoharlal Publishers Pvt. Ltd, New Delhi, 1974 .

# தொல்காப்பியத்தில் பெயர் வகைப்பாடு

ச.வே. சுப்பிரமணியன்

---

1. தொல்காப்பியம் தமிழில் இப்போது கிடைக்கின்ற நூல்களில் முதல்நூல், முதன்மையானநூல். கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பது பொதுக்கருத்து. தொல்காப்பிய காலத்திற்கு முன்பு ஏறத்தாழ ஐந்து ஆயிரம் ஆண்டுகளின் தமிழ் இலக்கியப் பரப்பின் தொகுப்புத் தொல்காப்பியம். தொல்காப்பியம் முன்னோர் கருத்துக்களைத் தொகுத்து எழுதப் பெற்ற நூல். என்ப, மொழிப, என்மனார் புலவர், அறிந்திசினோரே, உணர்ந்திசினோரே போன்ற சொற்களும் தொடர்களும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

2. தொல்காப்பியன் என்பது இயற்பெயரன்று; தொல்காப்பியம் எழுதுவதற்காக அமைத்துக்கொண்ட புனைபெயர். சிறப்புப் பாயிரம் இதைத் தெளிவுபடுத்துகிறது.

> தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றிப்
> பல்புகழ் நிறுத்த படிமை யோனே (சிறப்.14-15)

என்று பனம்பாரனார் கூறுகிறார்.

3. தொல்காப்பியம் என்ற சொல் முக்கூறுகளையுடையது. தொல் + காப்பு + இயம் எனப் பிரித்து, பழைமையைக் காத்து இயம்பும் நூல் என்று பொருள் கொள்ளவேண்டும்

**4.** தொல்காப்பியம் போன்ற இலக்கணநூல் உலக மொழிகளில் எதிலும் அது தோன்றிய காலத்தில் தோன்றியதாகத் தெரியவில்லை. அதனால் 'தொல்காப்பியமும் உலக இலக்கணங்களும்' என்று முதலில் தலைப்புக் கொடுத்தேன். இலத்தீன், கிரீக், சைனீஸ், ஜப்பானீஸ், ஸ்பெனிஷ், ஜெர்மன், பிரெஞ்சு, ரஷ்யன், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய பத்துமொழி இலக்கண நூல்களோடு தொல்காப்பியத்தை ஒத்திட்டுப் பார்க்க வேண்டும் என்பது என் விருப்பம். அதற்காக முடிந்த அளவு நெல்லை மாவட்டத்திலுள்ள கல்லூரிகள், பல்கலைக் கழகம், நூலகங்களுக்குச் சென்று முயன்றேன். நூல்கள் கிடைக்காததால் தலைப்பு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

**5.** தொல்காப்பியம் உலகப்பொது நூல். பெயர், வினை, இடை, உரி என்ற சொற்கள் எல்லா மொழிகளிலும் உள்ளன. இச்சொல் வகைகளை அணுகும் முறையில் ஒவ்வொரு மொழி இலக்கணமும் வேறுபடலாம்.

**6.** தொல்காப்பியம் பண்பாட்டின் அடிப்படையில் தோன்றிய நூல். தமிழ்ப்பண்பாட்டைத் தழுவி, உலகப் பண்பாட்டை உயர்த்த எழுந்த நூல்.

அவற்றுள்

**பெயர் எனப்படுபவை தெரியுங்காலை**
**உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்**
**அம்மூ உருவின தோன்றலாறே** (தொல்.645)

திணை என்ற சொல் ஒழுக்கம் என்ற பொருளையுடையது. உயர்ந்த ஒழுக்கமுடையது மனிதப்பிறவி. உயர்ந்த ஒழுக்கமல்லாதது மனிதப்பிறவி அல்லாதவை. அதனை உயர்வு-தாழ்வு என எதிர்மறையில் கூறாமல் அல்லாத ஒழுக்கமுடையது அல்திணை - அஃறிணை என்று கூறுவது தொல்காப்பியரின் பண்பாட்டை உணர்த்தும்.

**7.** உலகில் எல்லா மொழிகளிலும் பெயர்ச்சொற்களே மிகுதியாக அமையும். வினைச்சொற்கள், பெயர்ச்சொற்கள் அளவுக்கு மிகுதியாக இருப்பதில்லை.

பெயர்ச்சொற்கள் காலங்காட்டாது. வினைச்சொற்கள் காலங்காட்டும் இது அடிப்படைவேறுபாடு.

**8.** இலக்கணங்கள் பல வகைப்படும்.

விளக்க இயல் இலக்கணம் (Descriptive grammar)
வரலாற்றியல் இலக்கணம் (Historical grammar)

| | |
|---|---|
| ஒப்பியல் இலக்கணம் | (Comparative grammar) |
| உருவாக்க இலக்கணம் | (Generative grammar) |
| மரபியல் இலக்கணம் | (Traditional grammar) |

என இன்னும் பல நிலைகளில் பிரித்து, வகைப்படுத்திப் பார்க்கலாம். தொல்காப்பியம் அடிப்படையில் மரபியல் இலக்கணம். ஏனைய இலக்கணக் கோணங்களில் பார்ப்பதற்கும் அதில் இடமுண்டு. இப்பெயர்வகைப்பாடு மரபியல் இலக்கணக் கோணத்தில் பார்க்கப்பெற்றுள்ளது.

9. 1. உயர்திணைப்பெயர் - (117) கோவலன், கண்ணகி
2. அஃறிணைப்பெயர் - (117) மாடு, ஆடு
3. விரவுப்பெயர் - (155) சீசர்வந்தான்/வந்தது
4. இளமைப்பெயர் - (1500) குட்டி, குருளை, கன்று
5. மகப்பெயர் - (218) மகவு, மகன், மகள்
6. பிள்ளைப்பெயர் - (1501) புலிப்பிள்ளை, நரிப்பிள்ளை
6 (அ) குழவிப்பெயர் - (1518) யானைக் குழவி
7. ஆண்பால் பெயர் - (1510) களிறு, இரலை, கலை
8. ஆடூஉத் திணைப்பெயர் - (967) வேடர், இடையர்
9. திணைநிலைப்பெயர் - (968) ஊரன், உழவர்
10. பெண்பால் பெயர் - (1502) பெடை, பெட்டை, மந்தி
11. பெண்மை சுட்டிய பெயர் - (665) மாதவி, மணிமேகலை
12. இயற்பெயர் - (521) சொக்கலிங்கம்
13. சிறப்புப்பெயர் - (524) தமிழ்க்கடல்
14. துறைக்கிழமைப்பெயர் - (1573) பதிப்புச்செம்மல், செந்தமிழ்ச்செம்மல்
15. சுட்டுப்பெயர் - (520) அவன், இவன்
16. வினாவின் பெயர் - (622) யாவன், யார்
17. விளிகொள்பெயர் - (224) நண்பா
18. பண்புப்பெயர் - (619) நல்லன், கரியன், சிகப்பி, பெரியன்
19. குடிப்பெயர் - (650) சோழன், ஜாண்
20. உடைப்பெயர் - (650) செல்வன், கோடீஸ்வரன்

21. சினைப்பெயர் - (659) மூக்கையா

22. சினைமுதற்பெயர் - (659) பெருங்காதன் மணி

23. தன்மைப்பெயர் - யான், எனது

24. முன்னிலைப்பெயர் - (320) எல்லீரும், நீ, நின்

25. படர்க்கைப்பெயர் - (320) எல்லாரும்

26. முறைப்பெயர் - (664) தாய், தந்தை, எம்பி, எங்கை

27. கிளைப்பெயர் - (307) வளையல்செட்டி, இசை வேளாளர்

28. குழுவின்பெயர் - (650) திருக்குறள் பீடத்தான்

29. ஆண்மை திரிந்தபெயர் - (495) பேடி

30. தன்மை திரிபெயர் - (540) அலி

31. அளவுப்பெயர் - (168) மரக்கால், நாழி, லிட்டர்

32. நிறைப்பெயர் - (170) பலம், கிலோ, மஞ்சாடி

33. எண்ணுப்பெயர் - (419) ஒன்று முதல் ஒன்பது வரை

34. எண்ணியற்பெயர் - (650) ஒருவர், இருவர், முப்பத்தைவர்

35. ஆடியல் பெயர் - (650)பரதநாட்டியம், ஒட்டந்துள்ளல், குச்சுப்புடி

36. உணவுப்பெயர் - (308) எண், தேன், பழங்கள்

இங்கு எண் என் உணவுப்பெயர் என்று குறிப்பிடுவார் தொல்காப்பியர். எண்-எள்ளைக்குறிக்கும். எள் அடிச்சொல்லன்று- எண் அடிச்சொல். மெல்லொலிகளுக்குப் பின்புதான் இடையொலிகள் தோன்றின என்பது பேராசிரியர் தொ.பொ.மீ. அவர்கள் கருத்து

37. திசைப்பெயர் - (201) தெற்கு, வடக்கு

38. காயப்பெயர் - (305) விண்-ஐம்பூதங்களின் பெயர்கள்

39. நாள்பெயர்- (331) புதன், வியாழன், வெள்ளி

40. நிலப்பெயர் - (650) தமிழ்நாடு, சீனா, ஜப்பான்

41. பிண்டப்பெயர் - (574) தொகுதி, நெல்-Mass noun

42. இடக்கர்ப்பெயர் - (250) மலம்

| | | |
|---|---|---|
| 43. ஆகுபெயர் - ஏழுவகைப்படும் | | (598) திருநெல்வேலி (அல்வா) வாங்கினேன் |
| 44. மரப்பெயர் - | | (181) மா, வேம்பு, ஆல், அரசு |
| 45. தொழிற்பெயர் | - | (306) கற்றல், நிற்றல் |
| 46. தடுமாறு தொழிற்பெயர் | - | (579) கற்றல், வளர்தல் (புலிகொல் யானை) |
| 47. தெய்வஞ்சுட்டியபெயர் | - | (487) திருமகள், முருகன் |
| 48. வினைப்பெயர் | - | (650) தச்சன், கொல்லன். |

இவ்வாறு பெயர்கள் 48 வகைகள் உள்ளன. இவை அனைத்தும் மொழியியல் அடிப்படையில் ஒன்றினின்றும் ஒன்று வேறுபட்டவை (distinctive feature analysis) என்ற நிலையில் அமைந்தவை. இத்தனை வகைத் தேவையா? தேவையே. இவை புணர்ச்சி அடிப்படையிலும் பொருளியல் அடிப்படையிலும் அமைந்தவை. ஒரு சான்று

மா + கோடு - மான்கோடு - விலங்காயின்

மா + கோடு - மாங்கோடு - மரமாயின்

(தொல். 231)

இங்கு மற்றொன்றும் சிந்திக்கவேண்டும் ன் என்ற எழுத்து க என்பதன் இணையெழுத்தில்லை. ஆகுபெயர் ஏழுவகைப்படும். பிற பெயர்களோடு ஒட்டி இணைக்கும் போது இன்னும் பெயர் உட்பகுப்புக்கள் கூடும்.

10. இப்பெரும் பிரிவைப் பிற்கால இலக்கணங்கள் சுருக்கித் தந்தன.

**இடுகுறி, காரணம், மரபொடு, ஆக்கம்**
**தொடர்ந்து, தொழில் அல காலந்தோன்றா;**
**வேற்றுமைக் கிடனாய் திணைபால் இடத்தொன்று**
**ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே** (நன். 275)

இதனை இன்னும் எளிமையாகத் தெளிவாகத் தொன்னூல் விளக்கம் கூறும்.

**பெயரே வேற்றுமை பெற்று இடம்பால் திணை**
**காட்டித் தொழிலல காலங்காட்டா**
**மரபு காரணம் ஆக்கம் குறி என்று**
**அவை நால் தகுதியாகும் என்ப** (தொ.வி.53)

**11.** தொல்காப்பியம் விளக்கமாக (discriptive) படிப்படியாக (step by step) வளர்ச்சி நிலையைத் (progress) தெளிவுபடுத்தும் இலக்கணநூல், வெறும் மொழி இலக்கண நூல் அன்று, சமுதாய, வாழ்வியல் நூல். பின்தோன்றிய நன்னூல், தொன்னூல் விளக்கம் போன்றவை மொழி இலக்கண நூல்கள்.

**12.** தொல்காப்பியம் புணர்ச்சிக்காகச் சொல்லின் இறுதி எழுத்தைச் சுட்டிக்கூறும். இகர இறுபெயர் (154), அகர இறுபெயர் (174), ஔகார இறுதிப்பெயர் (295), இ, ஐ என்னும் ஈற்றுப் பெயர் (158), அளபெடைப்பெயர் (620) இவ்வாறு.

**13.** அப்பெயரைச் சுட்டிக்கூறும் மரபும் உண்டு. பூ என் ஒரு பெயர் (268), ஊ என் ஒருபெயர் (269), எல்லாம் எனும் பெயர் (322), நும் என்ஒரு பெயர் (325) போன்று.

**14.** பொதுநிலையில் தொல்காப்பியம் திணை அடிப்படையிலும், சமுதாயவியல், வாழ்வியல் அடிப்படையிலும், பொருளடிப் படையிலும், புணர்ச்சியடிப்படையிலும் பெயர்களை வகைப்படுத்தி யுள்ளதென அறிகிறோம்.

**15.** இவை போக, தொல்காப்பியம் பெயர்களைத் தோற்றுவித்து, கையாண்டது மற்றொருவகை. எழுத்துக்களை உயிர் எழுத்து, மெய்யெழுத்து எனப்பெயர் கொடுத்து வகைப்படுத்தியதை மிக ஆழமாகச் சிந்திக்கவேண்டும். பெயர், வினை, இடை, உரி எனப்பெயர் கொடுத்து வகைப்படுத்தியுள்ளமையும், முதல் கரு உரி என, பொருளை வகைப்படுத்திப் பெயர் கொடுத்துள்ளமையும் நினைக்கத்தக்கன.

**16.** பெயர் வகைப்பாடு பற்றிப்பேசும்போது அகத்தியலிங்கம் (1979, பக். 75,76,172) உயிருள்ளவை (animate) உயிரல்லாதவை (inanimate) எனப்பாகுபாடு செய்யும் நிலைபற்றிக் கூறி, ஸ்பானிஷ் மொழியில் புத்தகம், கம்பு போன்றவை ஆண்பாலாகவும், வீடு, மேசை போன்றவை பெண் பாலாகவும் குறிக்கப்பெறுவது உயர்திணை, அஃறிணைப்பிரிப்பின்மையைக் காட்டுகிறது என்பார்.

அதேபோன்று அமெரிக்காவில் பேசப்படும் ஹாஸா (Hasa) மொழியில் மூங்கில், ஞாயிறு, அரண்மனை போன்ற அஃறிணைப் பெயர்கள் பெண்பாலாகவும், கத்தி, சைக்கிள், இயந்திரம் போன்றவை ஆண்பாலாகவும் கருதப்பெறுகின்றன.

ஆங்கில மொழியில் பழைய ஆங்கிலத்தில் Wif(wife) என்ற சொல் அஃறிணை; Wifman (woman) என்ற சொல் ஆண்பால்;

mouse, crow போன்றவை பெண்பால், stone, moon போன்றவை ஆண்பால்; hand, sun போன்றவை பெண்பால். பிற்காலத்தில் wife, woman பெண்பாலாகவும், ஏனையவற்றை அஃறிணைச் சொற்களாகவும் கருதுகின்றனர்.

17. பொதுநிலையில் உலக மொழிகளின் இலக்கண அமைப்புக்களைப் பார்க்கும்போது தொல்காப்பியத்தின் வகைப்பாட்டு முறையின் செம்மையும், தெளிவும், பெருமையும் நமக்குப் புலனாகின்றன.

## பார்வை நூல்கள்

1. சுப்பிரமணியன், ச.வே., தொல்காப்பியம் - தெளிவுரை, மூன்றாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108, 1999.

2. சண்முகம், டாக்டர் செ.வை., சொல்லிலக்கணக் கோட்பாடு - முதல்பகுதி - தொல்காப்பியம், அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், 1984.

3. சுப்பிரமணியன், ச.வே., இலக்கணத்தொகை - எழுத்து, 1967.

4. சுப்பிரமணியன், ச.வே., இலக்கணத்தொகை - சொல், 1971.

5. அகத்தியலிங்கம், டாக்டர் ச., மொழியியல் - சொல்லியல் - பெயரியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகம், அண்ணாமலைநகர், 1979.

6. இன்னாசி, சூ., சொல்லியல், 1974.

7. சுப்பிரமணியன், ச.வே., மொழிக்கட்டுரைகள், தமிழ்ப்பதிப்பகம், 1978.

8. தொல்காப்பியம் - சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, சைவசித்தாந்தக் கழகம், 1966.

( ) பிறைக்கோடுகளுக்குள் கொடுக்கப்பெற்றிருக்கும் எண்கள் தொல்காப்பிய நூற்பா எண்கள்.

# தொல்காப்பியமும் கிளைமொழிக் கோட்பாடும்

வ. ஞானசுந்தரம்

'கிளைமொழி என்பது Dialect என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற தமிழ் வடிவமாகும். கிளைமொழி என்ற கலைச் சொல் ஒரு குறிப்பிட்ட பேச்சு மொழியின் வகையைக் குறிக்கும்.' (சீனிவாச வர்மா 1992 : 3) மொழியியல் வளர்ந்துள்ள இன்றைய நிலையில் கிளைமொழி வட்டாரக் கிளைமொழி, சமூகக் கிளைமொழி, சாதிக் கிளைமொழி என்று வகைப்படும்.

> இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்
> அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே

என்ற தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரம் எண் 397 மற்றும் அவற்றுள்,

> இயற்சொற்றாமே செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
> தம் பொருள் வழாமையிசைக்குஞ் சொல்லே
> (தொல். சொல். 398)

> செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
> தங்குறிப்பினவே திசைச் சொற்கிளவி (தொல்.சொல்.400)

மூலமாகப் பின்வரும் செய்திகள் தெளிவாகின்றன.

இயற்சொல் (செந்தமிழ் நிலத்து வழக்கில் உள்ள நிலைபேற்றுச் சொல்), திரி சொல் (ஒருபொருள் பன்மொழி, பல்பொருள் ஒருமொழி), திசைச்சொல் (செந்தமிழ் சேர்ந்த பன்னிரண்டு நிலத்தும் வழக்கில் உள்ள சொற்கள்), வடசொல் (சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம்) (மீனாட்சி சுந்தரன், 1973 : 271) என இந்த நான்கு வகைச் சொற்களும் செய்யுளில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கட்டுரையின் பொருளுக்கு ஏற்ப இங்குக் குறிப்பாகக் கவனிக்க வேண்டியவை வருமாறு:

ஒன்று - தொல்காப்பியர் திசைச்சொல் என்று குறிப்பிடுவது கிளைமொழியியல் நோக்கில் வட்டாரக் கிளைமொழியையேயாகும்.

இரண்டு - அவர் காலத்தில் (சங்க காலத்தில்) கிளைமொழிச் சொற்கள் இலக்கியத்தில் எடுத்தாளப்பட்டுள்ளன. அதாவது கிளைமொழிச் சொற்கள் இலக்கியத்தில் எடுத்தாளப்படும்போது திசைச் சொல் என்ற பெயரைப் பெறுவதோடு, திசைச் சொற்கள் இலக்கியத்தில், செய்யுளில் எடுத்தாளப்பட வீரசோழியம் அவற்றை இழிந்த வழக்குகள் என்றும் அதன் உரையாசிரியர் பெருந்தேவனார், அவை பின்வரும் மூன்று வட்டாரங்களில் - (i) கருமண் நிலப்பகுதி (கோவை, சேலம்), (ii) காவிரி பாயும் பகுதி (சோழநாடு) (iii) பாலாறு பாயும் பகுதி (பல்லவ நாடு) ஆகிய பகுதிகளில் பயன்பாட்டில் உள்ளன என்றும் குறிப்பிடுவதிலிருந்து வீரசோழியம் காலத்தில் கிளைமொழி தாழ்ந்த மதிப்பீட்டைப் பெற்றுள்ளது என்பது புலனாகின்றது. கிளைமொழி குறித்து, இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் உளப்பாங்கும் மதிப்பீடும் ஏறக்குறைய மேலே குறித்துள்ளது போலத்தான்.

ஆனால் தொல்காப்பியர் திசைச்சொற்களும் செய்யுளில் பயன்பாட்டில் உள்ளவை என்று குறிப்பிடுவது தொல்காப்பியரது காலத்துக் கிளைமொழிச் சொற்கள் பெற்றுள்ள உயரிய மதிப்பீட்டை உணர்த்துகிறது எனலாம்.

திசைச்சொல் கிளைமொழி என்றால் அது பேச்சுமொழிதானா என்ற வினா எழும்புகிறது. 'முற்காலத்தில் தமிழில் செய்யுள் வழக்குக்கும், உலக வழக்குக்கும் பேரளவு வேறுபாடு இருந்தது என்று உறுதியாகக் கூறச் சான்று இருப்பதாகத் தெரியவில்லை' (அண்ணாமலை, 1986) என்ற கூற்றை நோக்கும்போது, செய்யுளில் எடுத்தாளப்பட்டுள்ள திசைச் சொற்கள் எந்த அளவிற்கு இன்றைய தமிழில் காணப்படும் இருநிலை (Diglossia) (Ferguson,1959)யின் ஒரு கூறான பேச்சுமொழியாகவே இருந்திருக்கும்?....வேறுவிதமாகக் கூறுவதானால்

பேச்சு மொழியும் இலக்கிய மொழி என்ற இருநிலைப் பிளவு தொடங்கி முழுமையடைவதற்கு முன்னரே தொல்காப்பியரது காலத்தில் திசைச் சொற்கள் அமைந்திருக்கலாமா? இவ்வினாவிற்கு ஒப்புதலான விடை கிடைத்தால், தொல்காப்பியரது காலத்தில் பயன்பாட்டில் இருந்த திசைச் சொல் என்ற கலைச் சொல்லும் இன்றைய மொழியியலில் பயன்பாட்டில் உள்ள கிளைமொழி என்ற கலைச்சொல்லும் முழுக்க முழுக்க ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதமுடியாது.

தொல்காப்பிய உரைகாரர்கள் நச்சினார்க்கினியர், சேனாவரையர் மற்றும் நன்னூல் உரையாசிரியர் சங்கர நமச்சிவாயர் மூலமாகப் பின்வரும் கொடுந்தமிழ் நிலப்பகுதிகள் தெளிவாகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | அருவா வடதலை நாடு | : | தமிழகத்தின் வடக்கு |
| (ii) | மலாடு | : | தென்னார்க்காட்டில் உள்ள திருக்கோவிலூர் |
| (iii) | அருவா நாடு | : | வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு கடற்கரைப் பகுதிகள் |
| (iv) | புனல்நாடு | : | சோழநாடு |
| (v) | பாண்டிய நாடு | : | பாண்டிய நாடு |
| (vi) | தென்பாண்டி நாடு | : | திருநெல்வேலியின் தென்பகுதி |
| (vii) | வேணாடு | : | திருவாங்கூரின் தென்பகுதி |
| (viii) | குட்ட நாடு | : | கோட்டயம், கோழிக்கோடு மாவட்டங்கள் |
| (ix) | குடநாடு | : | வட மலபார் |
| (x) | கற்கா நாடு | : | கோயம்பத்தூரின் குன்றுப் பகுதிகள், மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப்பகுதி |
| (xi) | சீத நாடு | : | நீலகிரி |
| (xii) | பூழி நாடு | : | கன்னியாகுமரி மாவட்டம் |
| | செந்தமிழ் நிலம் | : | காவிரியாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாம். |

வட்டாரக் கிளைமொழிப் பாகுபாடு தொல்காப்பியர் காலத்தில் மொழியின் பல நிலைகளில் ஒரு நிலையான சொல் (Lexical level) அளவில் தான் நிகழ்ந்திருக்கிறது. மொழியியல் வளர்ந்துள்ள இன்றைய நிலையில் மொழியின் மற்ற நிலைகளான ஒலியன் நிலை (Phonological level), உருபன் நிலை (Morphological level), பொருண்மை நிலை (Semantic level) போன்றவைகளும் கிளைமொழி பாகுபாட்டிற்கு உதவுகின்றன என்பது நாம் அறிந்ததே. தொல்காப்பியர் காலத்து கிளைமொழியியலை, Word Geography எனலாம்.

நிலைபேறு அடைந்திருந்த செந்தமிழ் வழக்கும் நிலம் சார்ந்ததாகவே (Geographical area based) இருந்திருக்கிறது. (ஆனால் இன்றைய நிலைபேற்றுத் தமிழ் (Standard Tamil) எந்த நிலத்திற்கும் சாதிக்கும் உரியது அல்ல).

தொல்காப்பியத்தில் சாதிக் கிளைமொழி பற்றிய குறிப்பு உள்ளதா?

சண்முகம் (1989 : 259-60) அவர்களது பின்வரும் குறிப்புகள் மூலமாகத் தொல்காப்பியர் காலத்தில் இருந்த தமிழ்ச் சமுதாயத்தின் சமூகப் பிரிவுகளுக்கு (உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஒப்போர்) ஏற்ப சமூகக் கிளைமொழிச் சொற்கள் சிலவற்றைக் காண்கிறோம்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் உயர்ந்தோர் (சூ.977, 979, 1163), மேலோர் (சூ. 975), கீழோர் (சூ. 1090) என்று சமூக வேறுபாடுகளைக் குறிப்பிட்டுள்ளது. சொல்லதிகாரத்தில் ஓரிடத்தில் மட்டும் இழிந்தோன், ஒப்போன், உயர்ந்தோன் (சூ.927-30) என்று வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உறவு நிலையில், மூன்று வகை அமைவதாகக் கொள்ளலாம்.

| பேசுவோன் | கேட்போன் | கூற்று | சொல் |
|---|---|---|---|
| இழிந்தோன் | உயர்ந்தோன் | இழிந்தோன் | ஈ |
| இழிந்தோன் | இழிந்தோன் | ஒப்போன் | தா |
| உயர்ந்தோன் | உயர்ந்தோன் | ஒப்போன் | தா |
| உயர்ந்தோன் | இழிந்தோன் | உயர்ந்தோன் | கொடு |

உயர்ந்தோர், ஒப்போர், இழிந்தோர் என்ற வகையில் யார் யாரிடம் பேசும்போது என்ன வகைப்பயன்பாடு உள்ளது என்ற உரையாடல் ஊடாட்டத்தின் பயன்பாடுதான் தெரிவிக்கப்படுகிறதேயன்றி

ஒரு வட்டாரத்திற்கே உரிய வழக்குகள் என்பது போல, ஒரு குழு, சாதிக்கே உரிய வழக்குகள் இவை என்று எவையும் தெரிவிக்கப்படவில்லை. அப்படியானால், தொல்காப்பியரது காலத்தில் சாதிக்கிளைமொழி என்பது குறிப்பிடும் வண்ணம் கிளைக்கவில்லையா?

தொல்காப்பியரது காலத்தில் கிளைமொழியியல் என்பது பெரும்பாலும் வட்டாரக் கிளை மொழியியல் பற்றியதாகவே உள்ளது என்று கூறலாம் போலத் தோன்றுகின்றது. இன்றுகூட தமிழ்க் கிளைமொழியியலைப் பொறுத்தவரையில் சாதிக் கிளைமொழி என்பது சர்ச்சைக்கு உரிய ஒன்றாகவும், ஒவ்வொரு சாதிப்பிரிவுக்கு உரிய மொழிக் கூறுகளை (Linguistic Markers) இனங்கண்டு கொள்வது ஆய்வு நோக்கில் இயலாத ஒன்றாகவும் உள்ளன. பிராமணர், பிராமணர் அல்லாதோர் என்ற பிரிவுக்கு வேண்டுமானால் மொழிக்கூறுகளை இனங்கண்டு கொள்ள முடிகிறதேயன்றி மற்ற சாதியினர் பயன்படுத்துவதாக நம்பப்படுகின்ற மொழிக் கூறுகள் எவையும் இனங்கண்டு கொள்ளப்படவில்லை.

சாதிக் கிளைமொழி என்பது சாத்தியமா என்ற வினாவும் விவாதமும் பரந்துபட்ட அளவில் நிகழ்ந்திருக்கின்றது. இதன் ஒரு வெளிப்பாடாகவே தொல்காப்பியர் காலத்துக் கிளைமொழியியல் கோட்பாடும் உள்ளது போலத் தோன்றுகிறது.

மொழியியலில், கிளைமொழியியல் என்பது மொழி ஆய்வுக்குரிய மையப் பொருளாக இல்லாமல், புறத்தே (Peripheral) உள்ளதாகவே உள்ளது. தொல்காப்பியரது கிளைமொழியியல் திசைச்சொல் கோட்பாடு எச்சவியலில் இடம் பெற்றுள்ளது. பிறப்பியல், புணரியல், கிளவியாக்கம், பெயர், வினை, இடை, உரி எல்லாம் முடிந்தபிறகு எச்சவியலில் எஞ்சி நின்றவைகளில் ஒன்றாகக் கிளைமொழிக் கோட்பாடும் இடம்பெறுகிறது.

சமுதாய மொழியியலாளர்கள் மாத்திரம் மொழி வேறுபாடு (Variation) என்பது மொழி இலக்கணத்தில் ஒரு கூறே என்பர். மற்ற மொழியியல் பிரிவினர் எல்லாம் கிளைமொழியை - கிளைமொழி ஆய்வை மொழியியலின் கருவிற்கு, மையப் பகுதிக்கு (Core linguistics) எடுத்துச் செல்வதில்லை.

தொல்காப்பியரது இந்த வைப்பு முறையைக் காணும்போது அவரது கிளைமொழிக் கொள்கை மற்ற பிரிவு மொழியியல்- காரர்களின் கொள்கையோடு ஒத்துள்ளது எனலாம்.

## பார்வை நூல்கள் & கட்டுரைகள்

1. அண்ணாமலை, இ., ஆரோக்கியநாதன் எழுதிய மொழியியல்-இரட்டை வழக்கு, என்ற நூலுக்கு அளித்துள்ள முன்னுரை, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1986.

2. சண்முகம், டாக்டர் செவை, மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும் (சங்க காலம்), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1989.

3. சீனிவாச வர்மா, டாக்டர் கோ., கிளை மொழியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர், 1992.

4. தொல்காப்பியம் மூலம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1967.

5. மீனாட்சி சுந்தரன், தெபொமீ, தமிழ் மொழி வரலாறு, (தமிழாக்கம் : ச. செயப்பிரகாசம்) மதுரை மக்கள் நல்வாழ்வு மன்ற வெளியீடு, 1973.

6. Ferguson. Charles A., 'Diglossia' in **Language and Culture in Society** (Ed.) Dell Hymes, Newyork : Flarper and Row publishers, 1959.

# எஞ்சுபொருட் கிளவி

செ.வை. சண்முகம்

## முன்னுரை

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தின் இறுதி இயலான எச்சவியலில் **எஞ்சுபொருட்கிளவி** (34, 43). **எஞ்சு கிளவி** (36, 37), **எச்சம்** (35, 38, 39, 40, 42, 44) ஆகியவைகளை ஒரு பொருள் பன்மொழியாகவே கையாண்டு பிரிநிலை முதலிய பத்து எச்சங்களை 12 சூத்திரங்களில் (34முதல் 45வரை) விளக்கியுள்ளார். மேலும் அவைகளில் முன் ஏழும் ஒரு வகை; பின் மூன்றும் மற்றொரு வகை என்றும் (43) குறிப்பிட்டுள்ளார். இடையியலிலும் பொருளதிகாரத்திலும் எச்சம் பற்றிப் பேசியுள்ளார். எனவே இங்கு மூன்று முக்கிய கேள்விகள் எழுகின்றன: 1. ஒவ்வொரு எச்சத்தின் விளக்கம், 2. இரண்டாக வகைப்படுத்தியதன் காரணமும் விளக்கமும், 3. இடையியலிலும் பொருளதிகாரத்திலும் கூறிய காரணமும் வேறுபாடும் என்னென்ன?

பொதுவாக எச்சம் வாக்கியத்தைத் தாண்டிக் கருத்தாடல் நோக்கில் பொருள் உணர்த்துவது. எச்சம் ஒரு வகை பொருள்கோளே. அதாவது பொருள்கோளில் இருக்கிற சொற்களை - தொடர்களைச் செய்யுளுக்குள் முன்னும் பின்னும் மாற்றிப் பொருளைப் புரிந்து கொள்ளுதல்; எச்சம் சொன்ன சொற்களைத் தாண்டிய பொருளைப் புரிந்துகொள்ளுதல் என்று கொள்ளலாம்.

## எச்சச் சூத்திரங்களும் இயல் அமைப்பும்

எச்சவியல் சூத்திரங்கள் வினையியலிலும் இடையியலிலும் கூறிய கருத்துகளின் விரிவாக அமைந்துள்ளன என்பது இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியவர்களின் கருத்து. வினையியல், இடையியல் ஆகிய இரண்டு இயல்களில் கூறாத சில கருத்துகளைக் கூறுமுகமாக, புதிய கருத்துகளும் கூறப்பட்டிருக்கின்றன என்பது அவர்கள் கருத்து. சேனாவரையர் பெயர், வினை, இடை ஆகிய மூன்று இயல்களுக்குப் பொதுவான கருத்துகள் என்பதால் இங்குக் கூறப்பட்டதாகக் கருதுகிறார்.

மேல் **வினையியலுள்ளும், இடைச்சொல்லுள்ளும் முடிபு கூறப்படாத நின்ற எச்சங்கட்கு முடிபு உணர்த்தலான் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று** என்பது இளம்பூரணர் சூத்திரம் 34 உரை முன்னுரை. **வினையெச்சமும் பெயரெச்சமும் வினைச்சொல் ஒழிபு; ஏனைய இடைச்சொல் ஒழிபாம்** என்பது நச்சினார்க்கினியர் சூத்திரம் 34 உரை பின்னுரை. **எச்சமாவன ஒருசார் பெயரும், வினையும், இடைச்சொல்லும் ஆதலின் பெயரியல் முதலாயினவற்றுட் பத்தும் ஒருங்குணர்த்துதற்கு ஏலாமையறிக** என்பது சேனாவரையர் வாசகம். ஆனால் முன்னுள்ள இயல்களோடு தொடர்பு இல்லை என்று கருதியே தெய்வச்சிலையார் முற்றிலும் மாறுபட்ட உரை செய்துள்ளார். ஆனாலும் உம்மையெச்சம் பற்றிய சூத்திரத்தில் மட்டும் (40) இடையியலில் கூறப்பட்ட கருத்தையும் இங்குக் கூறப்படும் கருத்தையும் எடுத்துக்காட்டி இரண்டுக்கும் வேறுபாடு உண்டு என்று விளக்கியுள்ளார். உண்மையில் இது நூலாக்கத் திட்டம் பற்றிய கோட்பாடு. குறிப்பாக இயல் அமைப்புப் பற்றிய பிரச்சனை. ஒரு இயலில் கூறியவைகளை இன்னொரு இயலில் இன்னொரு நோக்கில் கூறலாம் என்பது இளம்பூரணர் முதலானோர் கருத்து. ஒரு பொருளைப் பற்றி ஒரு இடத்தில்தான் பேசவேண்டும்; முன்னுள்ள இயலில் கூறிய செய்தியோடு தொடர்பு உடையது போலக் காணப்பட்டாலும் அவைகளைப் புதிய செய்தியாகக் கொள்ளவேண்டும் என்பது தெய்வச்சிலையார் கருத்து. அதற்கு ஏற்பவே வினைமுற்று பற்றிக் கூறும் **இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச் சிறப்புடைய மரபின் அம்முக்காலமும்** என்ற சூத்திரத்தைத் தெய்வச்சிலையார் ஒழிந்த உரையாசிரியர்கள் எச்சவியலில் (31) வைக்கத் தெய்வச்சிலையார் வினையியலில் (52) வைத்துப் பொருள் எழுதியுள்ளார். அதாவது வினைமுற்று பற்றிய சூத்திரம் வினையியலில் இருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. அதாவது ஒரு பொருள் தொடர்பான செய்திகளை ஒரு இயலிலேயே கூறிவிடவேண்டும் என்பது நூலாக்கத் திட்டம் பற்றிய தெய்வச்சிலையார்

கருத்து. வினைமுற்றுச் சூத்திரங்களை இடப்பிறழ்ச்சி, இயல் பிறழ்ச்சி செய்வதற்கும் அதுவே காரணம் ஆகும். பிரிநிலை, ஒழியிசை, உம்மை முதலியவை பற்றி இடையியலில் கூறிவிட்டதால் இந்த வகை எச்சங்கள் வேறு பொருள் உணர்த்த வேண்டும் என்று கருதியே அவைகளுக்குப் புதிய பொருள் அவர் கொடுத்திருக்கவேண்டும்.

## எச்சமும் அதிகாரமும்

பொருளதிகாரத்தில் செய்யுளியலில் 34 செய்யுள் உறுப்புகளில் முதல் 26 வகைகளில் ஒரு உறுப்பாக எச்சம் 'என்பதைக் குறிப்பிட்டு இது சொல், குறிப்பு ஆகிய இரண்டு வகைப்படும் என்று மட்டும் ஒரு சூத்திரத்தில் (செய்.204) கூறியுள்ளார். இங்குக் கூறியுள்ள பத்து எச்சங்களில் அந்த இரண்டும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எனவே இரண்டு அதிகாரங்களில் கூறியதற்குக் காரணம், விளக்க வேறுபாடு என்ன என்ற கேள்விகள் எழுகின்றன. இதைத் தொல்காப்பியரின் நூலாக்கத் திட்டம் பற்றிய- அதிகார அமைப்பு பற்றிய கேள்வியாகவும் கருதலாம்.

உரையாசிரியர்களைப் பொறுத்தவரையில் இளம்பூரணர் உரையில் பாடல்கள் உதாரணங்களாகக் காட்டப்படவில்லை. எனவே அவர் சொல்லதிகாரத்தில் கூறியவை பேச்சு வழக்குக்கும் பொருளதிகாரத்தில் கூறியவை செய்யுள் வழக்குக்கும் உரியவை என்று கருத்து உடையவர் என்று கொள்ளலாம்.

சேனாவரையர் செய்யுள்களை உதாரணம் காட்டினாலும் பொருளதிகார எச்சங்களைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. அவர் பொருளதிகாரத்துக்கு உரை எழுதவில்லை என்ற சமாதானம் பொருந்தாது. அவரே வேறு சில இடங்களில் பொருளதிகாரத்திலிருந்து உதாரணங்களைக் காட்டியுள்ளார் (சுந்தரமூர்த்தி. 1981:29).

தெய்வச்சிலையார் முதல் சூத்திர உரையிலேயே (34) 'இவையெல்லாம் வழக்கிலும் செய்யுளிலும் வந்து பொருளை விளக்குதலின் எடுத்தோதினார்' என்று குறிப்பிட்டுள்ளார். அப்படியானால் சொல்லதிகார, பொருளதிகார எச்சங்களிடையே வேறுபாடு பற்றி இவர் கவலைப்படவில்லை என்று தோன்றுகிறது.

நச்சினார்க்கினியர்தான் வழக்கையும் செய்யுளையும் உதாரணம் காட்டினாலும் அவர் சொல்லெச்சம், குறிப்பெச்சம் ஆகிய இரண்டும் எச்சவியலிலும் செய்யுளியலிலும் வேறு வேறு பொருள்படும் என்று குறிப்பிட்டுள்ளார். எனவேதான் குறிப்பெச்சத்துக்குச் சேனாவரையர்

இளைதாக முள் மரம் களைக (779) என்ற குறளையும் இசையெச்சத்துக்கு அகர முதல (1) என்ற குறளையும் எடுத்துக்காட்டியது பொருந்தாது என்று வாதிட்டுள்ளார்.

'அவர் (சேனாவரையர்) காட்டின குறிப்பெச்சம் செய்யுள் இலக்கணம் கூறுகின்ற செய்யுளிற் சொல்லொடும் குறிப்பொடும் (செய். 206) என்னும் சூத்திரத்தால் பல சொல் தொடர்ந்ததோர் செய்யுள் முடிந்தக்கால் வரும் என்று கொண்ட குறிப்பெச்சமாகலின், அதனைச் சொல்லிலக்கணக்கத்தில் கூறுகின்ற குறிப்பெச்சத்திற்குக் காட்டினால் ஆண்டைக் குறிப்பெச்சம் வேறு பொருள் இன்றாம் ஆகலானும், அவர் இசையெச்சம் என்ற அகர முதல என்பதன்கண் அதுபோல என விரிந்த உவமச் சொல் துணியுமாறு விரியாது இரண்டற்கும் பொதுவாய் வேறுபட வந்த உவமத்தின்பாற்படுத்தல் அல்லது இசையால் பிறவாமையானும் அவை பொருந்தாமை உணர்க' என்று 44ஆம் சூத்திர உரையில் மறுத்துள்ளார். இங்கு இரண்டு செய்திகள் கவனத்துக்கு உரியவை: 1. செய்யுளுக்கு நச்சினார்க்கினியர் கொடுத்த விளக்கம்: 'பல சொல் தொடர்ந்ததோர் செய்யுள் முடிந்தக்கால் வரும்' என்பதால் செய்யுளியலில் எச்சம் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்களில் வருவது என்றும், எச்சவியலில் ஒரு வாக்கிய அளவில் வரும் என்றும் பொதுமைப்படுத்தலாம். 2. அவர் சொல்லெச்சம் பற்றிய அடுத்த சூத்திரத்தில் இரண்டுக்கும் வேறுபாடு காட்டியுள்ளதோடு வேறு பொருளும் கொண்டுள்ளார். அதாவது செய்யுளில் முன்னும், பின்னும் சொல்லும், கூற்றும் சொல்லெச்சமாய் நிற்கும் என்று விளக்கியுள்ளார்.

எச்சவியலில் செய்யுள் மொழி பற்றிப் பல கருத்துகளைத் தொல்காப்பியரே குறிப்பிட்டுள்ளது சுட்டிக்காட்டத்தகுந்தது. முதல் 7 சூத்திரங்கள் செய்யுள் ஈட்டச் சொல் என்று கூறப்பட்டாலும் அவை எழுத்து மொழியின் பல வேறு ஆக்கங்களை உள்ளடக்கியது என்பது தொல்காப்பிய அறிஞர்கள் அறிந்ததே. பொருள்கோள் பற்றிய அடுத்த 6 சூத்திரங்களும் செய்யுள் மொழி பற்றியவைதான். எனவே செய்யுள் மொழிக்கு என்று பொருளதிகாரம் இருக்கும்போது சொல்லதிகாரத்தில் அவைகளை விளக்குவானேன்? என்ற கேள்வி எழுகிறது.

தொல்காப்பியரின் நூலாக்கத்திட்டம் என்பது பற்றி இப்போது பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. 1. தனி எழுத்துகளின் இலக்கணம் கூறும் எழுத்ததிகார முதல் இயலுக்கு நூன்மரபு என்று பெயரிட்ட காரணம் புதிராக இருந்து வருகிறது. அதற்கு ஒரு

காரணம் தொல்காப்பியர் ஒவ்வொரு அதிகாரமாகத் தான் எழுதத் திட்டமிட்டதன் பிரதிபலிப்பாக இருக்கலாம் என்ற ஒரு கருத்து முன்மொழியப்பட்டது. இந்த முறையில் சொல்லதிகாரத்தில் பொருளதிகாரச் செய்திகள் கூறியது அதை ஒரு தனி நூலாகக் கருதினார் என்றே கொள்ள வேண்டியிருக்கிறது. பொருளதிகாரத்தில் சொல்லதிகாரத்தில் கூறிய செய்திகளை மாட்டேறாகக் குறிப்பிட்டாலும் இரண்டு அதிகாரங்களிலும் கலைச்சொற்களின் (திணை, உரி போன்றவை) பொருள் மாறுபடுவது அவை தனித்தனி அதிகாரங்களாகக் கருதி இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. எனவே எச்சம் பற்றி முழுமையான அளவில் சொல்லதிகாரத்தில் கூறினாலும் இலக்கியப் புரிதலுக்கு எச்சம் முக்கியமானது என்று கருதிப் பொருளதிகாரத்தில் மறுபடியும் கூறியிருக்கலாம். 2. ஒவ்வொரு அதிகாரத்தையும் ஒன்பது இயல்களாகக் கூறியதால்தான் எழுத்ததிகாரத்தை மிக விரிவாகவும் பிற அதிகாரங்களை ஓரளவு சுருக்கமாகவும் விளக்கியுள்ளார் என்ற கருத்தும் உண்டு.

## எச்சம் : பொது விளக்கம்

இளம்பூரணர் பொது விளக்கம் எதுவும் தரவில்லை. அ) எஞ்சு பொருட்கிளவி கொண்டல்லது எச்சம் ஆயினவும், ஆ) ஒரு தொடர்மொழிக்கண் எச்சம் ஆயினவும் என இரு வகைப்படும் என்ற சேனாவரையரின் வகைப்பாட்டுக்குள் விளக்கமும் அடங்கியுள்ளது. முதல் வகையைப் பொருண்மை நிலையில் எச்சம் எனவும் இரண்டாவது வகையைத் தொடரியல் நிலையில் எச்சம் எனவும் கொள்ளலாம். அவர் கருத்துப்படி முதல் ஏழு வகையும் பொருண்மை நிலையில் எச்சம், கடைசி மூன்றும் தொடரியல் நிலையில் எச்சம் ஆகும். முன்னது இடைச்சொல் பெற்று அவைகளுக்கு உரிய பொருள் நிலையில் எச்சமாக இருப்பவை என்றும், பின்னது கூடுதல் பொருள் கொள்ள இடம் இருப்பவை என்றும் கூறலாம். தொல்காப்பியரும் கடைசி மூன்றையும் மேல் வந்து முடிக்கும் எஞ்சு பொருட்கிளவி இல்லாதவை என்று (எச்சம். 43) கூறியுள்ளதால் பொருள் நிலையில் இல்லாமல் முற்றுப்பெற்றது போலத் தோன்றுபவை என்றும் கொள்ளலாம்.

தெய்வச்சிலையார் எஞ்சுபொருட் கிளவி, எச்சம் என்பவைகளை ஒரு பொருட் பன்மொழியாகக் கொள்ளவில்லை என்று அவருடைய விளக்கம் புலப்படுத்துகிறது. அவர் கருத்துப்படி எஞ்சுபொருட்கிளவி என்பது 'சொல்லாது ஒழிந்த பொருளை இனிது விளக்குஞ் சொல்'

அதாவது நாம் ஊகிக்கக்கூடியவை என்று கொள்ளலாம். எச்சம் பற்றிய முதல் சூத்திரத்தில் **நெறிப்படத் தோன்றுதல்,** என்பது 'வாக்கியமாகிய தொடர் மொழிக்கண் முன்னும் பின்னும் நின்ற சொல்லை நெறிப்படுத்தற்கு ஆண்டு தோன்றுதல்' என்று விளக்கி எச்சம் என்பது 'அது (சொல்) புலப்பட நில்லாமையின் எச்சம் ஆயிற்று' என்று விளக்கியுள்ளார். அதாவது வாக்கியத்தை நெறிப்படுத்துதற்கு வேண்டியவை புறநிலையில் மறைந்திருப்பதால் எச்சம் என்று பெயர் பெறுகிறது என்பது அவருடைய கருத்து. தொல்காப்பியரே எச்சங்களை இரண்டு வகையாகப் பிரித்திருப்பதால் தெய்வச்சிலையாரும் அந்தப் பாகுபாட்டை ஒத்துக்கொள்ளுகிறார். அவர் 43ஆம் சூத்திரஉரையில் 'இவை (முன் ஏழும்) வந்து முடிக்கும் சொற்களை உடைய என்பதூஉம், பின் மூன்றும் வந்து முடிக்கும் சொற்களை எஞ்சி நிற்றல் இல' என்றும் குறிப்பிட்டுள்ளார். இதன்படி முன்னவை எச்சப் பொருண்மை வகை என்று ஆகும். பின்னவை புறநிலையில் முற்றுப்பெற்றது போல உள்ளவை, ஆனாலும் கேட்போர் எஞ்சுபொருட்கிளவி உடையவையாகவும் கருதுவது என்று கொள்ளலாம்.

'எஞ்சியிருப்பதோர் பொருளை உடைய சொல் எனவே எச்சச் சொல் பெயராயிற்று' என்ற நச்சினார்க்கினியரின் விளக்கம் சில சொற்கள் நேர்ப்பொருளோடு வேறு சில பொருட்களைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறது என்று அர்த்தப்படுகிறது. அவரும், முதல் ஏழு வகையும் 'எச்சச்சொல் வந்து முடிதலை உடைய; ஏனைய அச்சொல் வந்து முடியா' என்றும் பாகுபடுத்தியுள்ளார்.

பொதுவாக இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் முதல் ஏழு வகையிலும் பெயரெச்சம், வினையெச்சம் நீங்கிய ஐந்தும், உரிய இடைச்சொற்களைப் பெற்று நின்று அவைகளுக்கு உரிய எஞ்சுபொருட்களை உடையவை; இடைச்சொற்கள் பேசுபவனின் மனப்பாங்கையும் காட்டவல்லவை என்ற கருத்து உடையவர்கள். தெய்வச்சிலையார் கருத்துப்படி இடைச்சொற்கள் பெறாத வாக்கியங்களே அந்தப் பொருளை உணர்த்தும் தொடர்களை எஞ்சுப்பொருள்களாக உடையவை. உண்மையில் வினை, பெயர், உம்மை என(வென் எச்சம்) ஆகிய நான்கும் சொல் அடிப்படையில் அமைந்தவை. எதிர்மறையும் ஒழியிசையும் இலக்கண நிலையில் எதிர்மறை, எதிர்ச்சொல் (இவர் கல்வியாற் குறைவிலர் என்பது ஒழுக்கத்தாற் / பொருளாற் குறைவுடையார் என்பது) என்ற முறையில் அமைந்தவை என்றும் பொதுமைப்படுத்தலாம். பிரிநிலை பொருள் அடிப்படையில் அமைந்தது. இன்னொரு வகையில் பிரிநிலை, உம்மை, என, எதிர்மறை,

ஒழியிசை ஆகிய ஐந்தும் அவைகளுக்கு உரிய இடைச்சொல் பெற்று வந்து குறிப்புப் பொருள் - பேசுபவனின் மனப்பாங்கை உணர்த்துபவை; வினை,பெயர் ஆகிய இரண்டும் வாக்கியத்தில்- கருத்தாடலில் அந்தச் சொற்கள் கெட்டு வருபவை என்று கொள்ளலாம்.

தொல்காப்பியர் எச்சங்களை விளக்கும்போது அந்தந்த சொற்களாலேயே விளக்கியுள்ளார்.

**பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின** (35)

**ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின** (38)

**எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின** (39)

ஏனைய எச்சங்கள் அவை கொண்டு முடியும் சொற்களைப் பற்றிய விளக்கமாக உள்ளன.

## எச்சவகைகள் :

### பிரிநிலை

பிரிநிலைப் பொருளை உணர்த்தும் ஏகார ஓகார இடைச்சொற்கள் பெற்ற வாக்கியங்கள் பொருள்நிலையில் எஞ்சுபொருள்களை உடையவை.

அவனே கொண்டான் என்ற உதாரணத்தைக் கொடுத்து 'அவன்தான் என்று பிரிக்கப்பட்டானைக் கொண்டு முடிதல்' என்பார் இளம்பூரணர். அதாவது அவனே என்பது பிரிநிலை எச்சம். ஆனால் ஏகாரம் கொண்டு 'அவன்' முடிந்திருக்கிறது.

அவனே கொண்டான் என்ற தொடரே 'பிறர் கொண்டிலர் என்னும் பிரிக்கப்பட்ட பொருளை உணர்த்தும் சொல்லால் முடிந்தவாறு கண்டு கொள்க' என்பார் சேனாவரையார். அதாவது 'பிறர் கொண்டிலர்' என்பதே பிரிநிலை எச்சம். இன்னொரு வகையில் அவன் பிறரிலிருந்தும், பிறர் அவனிலிருந்தும் பிரிக்கப்பட்டது என்று சேனாவரையர் கொள்கிறார். அவனே கொண்டான் என்பதன் எதிர்மறை பிறர் கொண்டிலர் என்பது. அது கருத்து அழுத்தத்துக்கு உதவுவது. இதைச் சொற்பொருண்மையியலார் வாக்கியங்களுள் உள்ள பொருள் உறவை விளக்கும் தொகுகருத்து (Entailment) ஆகும் ஏனென்றால் தொகுகருத்தில் இரண்டும் உண்மையாக இருக்க வேண்டும் என்பர் (Leech, 1974).

நச்சினார்க்கினியர் 'பிறர் கொண்டிலர் என்னும் பொருண்மை முடிபு தோன்றிற்று எனவே பொருத்தம் உடைத்து என்று கோடும்' என்பார்.

தெய்வச்சிலையார் 'பல பொருளில் ஒன்று பிரிந்தவழிப் பிரிக்கப்பட்ட பொருண்மை தோன்ற நிற்பது' என்று பொது விளக்கமும், 'பிரிநிலை எச்சம் அதன்கண் நின்றும் பிரிக்கப்பட்ட பொருளோடு தொடர்ந்து நின்று முடிவு பெறும்' என்று பொழிப்புரையும் கொடுத்துள்ளார். அதாவது எச்சமாக இருக்கிற பிரிக்கப்பட்ட பொருளும் சேர்ந்துள்ளது என்று நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். அந்தக் கருத்தை இரண்டு உதாரணங்களால் அவர் விளக்கியுள்ளார். இவன் கல்வி உடையன் என்றவழிச் சொல்லுவான் இவ்வையத்தாருள் எனக் கருதினன் ஆயின் இவ்வையத்தாருள் என்பது எஞ்சிநின்று பிரிநிலை எச்சமாயிற்று. இது உள்ளீட்டு நிலை (Inclusive); மாறாக அடுத்த உதாரணம் விலக்கீட்டு நிலையைத் (Exclusive) தெளிவுபடுத்துகிறது. 'இவட்குக் கண் அழகிது' என்ற வழி மற்றுள்ள உறுப்புகளில் என்பது எஞ்சிநின்றது, என்று விளக்கி 'இவை பிரிக்கப்பட்ட பொருளோடு தொடர்புபட்டு முற்றுப் பெற்றதெனக் கொள்க' என்பார். இது ஒரு வகையில் ஒப்புநோக்கே தவிர மறுப்பு அல்ல. அதாவது முன்னைய விளக்கத்தில் எதிர்மறை அடங்கியுள்ளது. எனவே தெய்வச்சிலையார் கருத்தை உட்கிடை உறவு (Implication) என்று கொள்ளலாம்.

## ஒழியிசை

ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின என்பார் தொல்காப்பியர் (38). எனவே தெய்வச்சிலையார் ஒழிந்த மூவரும் மன், தில், ஓ ஆகிய மூன்று இடைச்சொற்களைப் பெற்று, வாக்கியம் பொருள்நிலையில் முற்றுப்பெறுவது என்று விளக்கியுள்ளார்கள்.

'கூரியதோர் வாள்மன்' என்பது வாள் கோடிற்று இற்றது எனப் பின்னும் வாள்மேல் முடிபு சென்றது என்பார் இளம்பூரணர். இதே உதாரணத்தைத் தந்து 'வாள் திட்பம் இன்று ஒழியிசையான் முடிந்தவாறு' என்று சேனாவரையரும், 'பொருண்மையை உணர்த்தும் சொன்மை முடிபு கூறினார்' என்று நச்சினார்க்கினியரும் விளக்கியுள்ளார்கள். அதாவது வாள் கூராக இல்லை என்பது இந்த வாளை எப்படிக் கூரியது என்று நீ கருதுகிறாய் என்ற முறையில் சொல்லப்பட்டுள்ளது. இதைத் தொகுகருத்து என்று கொள்ளலாம். உண்மையில் இந்த உதாரணம் எதிர்மறைப் பொருளையும் வியப்பையும்

உணர்த்துகிறது என்பதே பொருத்தம். அப்படியானால் இது உட்கிடை உறவு உடையது என்று ஆகும்.

'வருகதில்மன் கொண்கன்' என்ற உதாரணத்தைத் தந்து இளம்பூரணர் 'வருக எனப்பட்டானும் அவனே; கொண்கன் எனப்பட்டானும் அவனே; அதனால் இதுவும் அப்பொருள் கொண்டு முடிந்தது' என்று விளக்கியுள்ளார். சேனாவரையர் வருகதில் எம்சேரி சேர என்ற அகநானூற்று அடியைக் (276.7) கொடுத்து 'வந்தால் இன்னது செய்வேன் என்று ஒழியிசையால் முடிந்தவாறு கொள்க' என்றும்; நச்சினார்க்கினியர் 'வருகதில்மன் கொண்கன்' என்ற உதாரணத்தைத் தந்து 'வந்தால் இன்னது செய்வேன் என்பதனோடு முடியும்' என்றும் விளக்கியுள்ளார்கள். அவைகளை உட்கிடையாகக் கருதவேண்டும்.

'இவர் கல்வியாற் குறைவிலர் என்றவழி ஒழுக்கத்தாற் குறையுடையர் என்றாதல் பொருளாற் குறையுடையர் என்றதால் ஒரு பொருளாற் குறித்தவழி பொருள்பட்டவாறும் அதனானே அச்சொல் முற்றுப்பெற்றவாறும் கண்டுகொள்' என்பார் தெய்வச்சிலையார். இதையும் உட்கிடையாகவே கருத வேண்டும்.

## எதிர்மறை எச்சம்

**எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின** என்பது சூத்திரம் (39). இங்கு உடன்பாட்டுச் சொற்கள் ஒலி அழுத்தத்தால் எதிர்மறைப் பொருள்படுவதையே எதிர்மறை எச்சம் என்று உரையாசிரியர்கள் கொண்டுள்ளார்கள்.

'யானோ கொண்டேன் என்பது, யானோவன்றே கொண்டேன் என்றாலும், அதனால் அப்பொருள் கொண்டு முடிந்தது எனப்படும். நீயே கொண்டாய் என்றாற்கு எதிர்மறுத்தவாறு யான் கொண்டிலன்' என்பது. இது இளம்பூரணரின் உதாரணமும் விளக்கமும். இங்கும் எதிர்மறுத்தலோடு வியப்பும் புதைந்துள்ளது கவனிக்கத்தகுந்தது. அது தொகுகருத்துதான்.

'யானே கொள்வேன் என்னும் எதிர்மறை எச்சம் கொள்ளேன் என்னும் எதிர்மறையால் முடிந்தவாறு' என்பார் சேனாவரையர். நச்சினார்க்கினியாரும் இதே உதாரணத்தையும் விளக்கத்தையும் கொடுத்துள்ளார்.

அப்படியே எதிர்மறைச் சொல் உடன்பாட்டுப்பொருளில் வருவதும் இங்குக் கொள்ளலாம். 'நானா கொள்ளவில்லை' என்றால்,

வியப்பு கலந்து நான் கொண்டேன் என்று பொருள். அதாவது நீ கொள்ளவில்லை என்று ஒருவர் கூறும் கருத்தை எதிர்மறுத்துக் (நான் கொண்டேன்) கூறுவது. அதாவது அவர் சொன்ன முறையிலேயே கூறி எதிர்மறைப்பொருள் கொள்ள வைப்பது என்று பொதுமைப்படுத்தலாம். அங்கு மறுப்போடு வியப்பும் கலந்துள்ளது. கேட்போன் கொள்ளாதபோது நீ கொண்டாய் என்று பேசுவோன் சொன்னால் அதை எதிர்மறுத்து நானா கொண்டேன் என்று கூறுவதுபோலக் கேட்போன் கொண்டபோது நீ கொள்ளவில்லை என்று பொருள் உணர்த்துவது. கேட்போன் கொண்டபோது பேசுவோன் நீ கொள்ளவில்லை என்று கூறினால் அதை மறுத்து நானா கொள்ளவில்லை என்றால் நான் கொண்டேன் என்று பொருள். இந்த நிலையில் வாள் கூர் இல்லாதபோது பேசுவோன் கூரிய வாள் என்று கூறினால், கூரியவாளா என்று (கூரிய வாள்மன்) எதிர்மறுத்துச் சொல்லாது கூரியவாள் இல்லை என்று தன் கருத்தைக் கூறுவதாகும். எனவே ஒழியிசை என்பது இலக்கண நிலையில் எதிர்மறையே ஆகும். எதிர்மறை எச்சத்தில் எதிர்மறை வினையும் ஒழியிசையில் உடன்பாட்டுவினையும் வந்துள்ளதே மாறுபாடு.

> **இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்**
> **கண்ணிறை நீர்கொண் டனள்**

என்ற குறளை (1313) எடுத்துக்காட்டி 'மறுபிறப்பு பிரிவேம் என நினைத்துக் கண்ணிறை நீர் கொண்டனள் எனப் பொருள் உரைக்க வேண்டுதலின் எதிர்மறைப் பொருளோடு முடிந்தவாறு கண்டுகொள்க' என்பார் தெய்வச்சிலையார். இங்குப் பிரியலம் என்ற எதிர்மறைச்சொல் உடன்பாட்டுப் பொருளிலும் இம்மை என்ற சொல் அதன் எதிர்ச்சொல்லான மறுமை என்று வந்துள்ளதும் கவனிக்கத்தகுந்தது. அதாவது இலக்கண நிலையில் மட்டும் அல்லாமல் சொற்களஞ்சிய நிலையில் எதிர்ச்சொற்களும் எதிர்மறையாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இது உட்கிடைப் பொருள்தான்.

**உம்மை எச்சம்**

> **உம்மை யெச்சம் இருவீற் றானும்**
> **தன்வினை யொன்றிய முடிபா கும்மே**

என்ற அடுத்த சூத்திரத்தில் (40), வெளிப்படைத் தொடரும் எச்சத்தொடரும் ஒரே வினையையே கொள்ளும் என்ற உண்மை விளக்கப்பட்டிருக்கிறது.

'சாத்தனும் வந்தான் என்றக்கால் பின்னைக் கொற்றனும் வந்தான் என்றானும் கொற்றனும் வரும் என்றானும் ஒன்றிய வினையே கொண்டு முடிக என்பது. கொற்றனும் வந்தான் என்றக்கால் கொற்றனும் போயினான் என்றுவிடின் அமையாது என்பதாம்' என்பது இளம்பூரணரின் உதாரணமும் விளக்கமும். இது பொருத்தமாகவே தோன்றுகிறது.

எஞ்சுபொருட் கிளவி செஞ்சொல் லாயின்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்

என்ற இடையியல் சூத்திரத்தை (36) ஒட்டிச் சேனாவரையர் 'உம்மை உடைத்தாயும் உம்மை இன்றியும் எஞ்சுபொருட்கிளவி உம்மை எச்சத்திற்கு முடிபாதல் எய்திற்று' என்று கொண்டு 'சாத்தனும் வந்தான், கொற்றனும் வந்தான் என இரண்டும் ஒரு வினை கொண்டவாறு கண்டு கொள்க' என்று விளக்கியுள்ளார். இங்கு எச்சம் இல்லை என்பதால் இதைச் சரியான உதாரணமாகக் கொள்ளமுடியாது. அதே சமயத்தில் ஒரு பாடலின் இரண்டு அடிகளை எடுத்துக்காட்டிப் பொருண்மையியல் கோட்பாட்டு நோக்கில் ஒரு புதிய கருத்தைச் சேனாவரையர் முன்வைத்துள்ளது மிகவும் சிறப்பானது.

'..........பைம்புதல்
வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே (அகம். 2.15-7)

என வினை வேறுபட்டுழியும் (இணர் விரிந்தன, ஊர் கொண்டன்று) தம்முள் இயைந்தனவால் எனின் இணர் விரிதலும் ஊர்கோடலும் இரண்டும் மணஞ்செய் காலம் இது என்று உணர்த்துதல் ஆகிய ஒரு பொருள் குறித்து நின்றமையான் அவை ஒருவினைப்பாற்படும்' என்பது அவரது விளக்க வாசகம். இது, இன்றைய சொற்பொருண்மையியலார் (Leech, 1974: 100-1) கூறும் மேனிலைச்சொல் (Super ordinate term), உட்சொற்கள் (Hyponyms), உட்கோடல்உறவு (Hyponymy) என்ற முறையில் அமைந்த விளக்கம் என்பது குறிப்பிடத்தகுந்தது. பொதுவாக மா, பலா என்பவை உட்சொற்கள் என்றும் மரம் என்பது மேனிலைச் சொல்லோடு மா, பலா என்பவை உட்கோடல் உறவு உடையவை என்றும் சொற்பொருண்மையியலார் விளக்குவார்கள். அவை ஒரு பொருட்களனைச் சார்ந்த சொற்கள். ஆனால் வேங்கை இணர் விரிந்தன; நிலா ஊர்கொண்டது (வளர் பிறை காலம் ஆரம்பித்து விட்டது) என்ற இரண்டும் பொருள் தொடர்பில்லாத வினைகளை மணஞ்செய் கால நிகழ்வுகளாகப் பொருள் கொள்வதால் அது ஒரு

மேனிலைச் சொல் என்று ஆகி, முன்னவை (வேங்கை இணர் விரிந்தன; நிலா ஊர்கொண்டது) அதன் உட்சொற்களாகவும் அமைந்து அவை உட்கோடல் உறவு பெற்றவையாக ஆகிவிடுகின்றன. அவருடைய 'ஒருவினை பாற்படுத'லை உட்சொற்கள் என்றும் 'ஒருபொருள் குறித்து நின்றது' என்பதை மேனிலைப் பொருள் என்றும் கொள்ளலாம். விரிந்தன, ஊர்கொண்டன என்ற இரண்டு வினைகளும் உட்சொற்கள் என்ற முறையிலேயே அவைகளுக்கு உரிய எழுவாய்கள் உம்மை (வேங்கையும் .....திங்களும்) பெற்றன. உண்மையில் ஒத்த வினைகளே உம்மை பெற வேண்டும் என்ற தொல்காப்பியர் கருத்து அடிப்படையில் விரிந்தன, ஊர்கொண்டன என்ற இரண்டு ஒவ்வாத வினைகளுக்கு உரிய எழுவாய்களும் உம்மை பெற்றிருப்பது அவை இரண்டும் ஒரு மேனிலைப் பொருள் உணர்த்துவதாகக் கொள்ளவேண்டும் என்ற சிந்தனையைச் சேனாவரையருக்குத் தோற்றுவித்திருக்க வேண்டும். புறநிலையில் பொருள் உறவு இல்லாத- ஒரு பொருட்புலனைச் சாராத சொற்களில் உயர்நிலையில் ஒற்றுமை கண்டதுதான் சேனாவரையரின் தனிச்சிறப்பு. அந்த நிலையைக் கவிதைகளில் நிறைய காணலாம். இப்படிப்பட்டவைகளைக் கருத்தாடல் நோக்கில் உட்சொற்கள் என்று பெயரிடலாம்.

'உம்மையாகிய எச்சம் இரண்டு வேறுபாட்டின்கண்ணும் தன்வினையோடு பொருந்திய முடிபாகும்' என்ற பொழிப்புரை எழுதிச் 'சாத்தனும் வந்தான், கொற்றனும் வந்தான் எனற்பாலன- சாத்தான் வந்தான், கொற்றன் வந்தான் என வரின் ஆண்டு உம்மை எஞ்சி நின்றது என்க' என்று தெய்வச்சிலையார் விளக்கியுள்ளார். இதைப் பொருத்தமான உதாரணமாகக் கொள்ளமுடியாது.

நச்சினார்க்கினியர் உரை சேனாவரையர் உரையைத் தழுவியது.

தொல்காப்பியர் அடுத்த சூத்திரத்தில் (41) உம்மை இல்லாத தொடர்கள் வரும்போது நிகழ்காலமும் எதிர்காலமும் இணைந்தும் இறந்தகாலமும் எதிர்காலமும் இணைந்தும் வரும் என்று விவரித்துள்ளார்.

கூழ் உண்ணாநின்றான் (கூழ் உணவு சாப்பிடுகிறான்) சோறும் உண்பன் என்ற உதாரணத்தை இளம்பூரணர் தந்து அ) 'கூழ் உண்ணாநின்றான் என்பது செஞ்சொல்; சோறும் உண்பன் என்னும் உம்மைச்சொல்லின்மேல் வந்தது. ஆ) உண்ணாநின்றான் என்னும் நிகழ்காலம், தன் நிகழ்காலமே கொள்ளாது சோறும் உண்பன் எனும் எதிர்காலம் கொண்டமையின் வழுவாயிற்று ஆயினும் அமைக என்பது' என்றும் விளக்கியுள்ளார். முதல் பகுதி (அ) வருணனை நிலை; இரண்டாம் பகுதி (ஆ) மதிப்பீட்டு நிலை. வழு அமைதி என்பது தொல்காப்பியர் இங்குக் கருதாதது. தாராள மனப்பான்மை

உடையவர் போல வெளியே காட்டிக்கொண்டு விதிமுறைத்தன்மையைச் - சட்டாம்பிள்ளைத்தனத்தை வற்புறுத்துவதே வழு அமைதி. வருணனை நிலை என்னும்போது சட்டாம்பிள்ளைத்தனம் எதுவும் இல்லை.

கூழ் உண்டான், சோறும் உண்பான் என்பது இறந்த காலமும் எதிர்காலமும் மயங்கியதற்கு இளம்பூரணர் கொடுத்த உதாரணம். மேலும் அவர் இறந்த காலமும் நிகழ்காலமும் இணைந்தும், (கூழ் உண்டான், சோறும் உண்ணா நிற்பான்) எதிர்காலமும் இறந்த காலமும் இணைந்தும் (சோறு உண்பான் கூழுமுண்டான்) வரும் என்று குறிப்பிட்டுள்ளார் (அடிகளாசிரியர் பதிப்பு-ப. 221- சிவலிங்கனார் உரைவளப்பதிப்பில் (285) கூழுண்டான் என்று இருப்பது பொருந்தாது).

சேனாவரையரும் கூடுதலாக இரண்டு வினைகளும் ஒரே காலத்தான் வரும் என்று குறிப்பிட்டுள்ளார். இளம்பூரணர் கூடுதலாகக் கூறிய இரண்டு வகையில் எதிர்காலமும் இறந்த காலமும் இணைந்து வரும் என்பதை நச்சினார்க்கினியர் ஏற்றுக்கொள்ளவில்லை. அது தருக்க ரீதியாகப் பொருந்தாது என்று அவர் கருதியிருக்கலாம்.

தெய்வச்சிலையார் இங்கும் உம்மை இல்லாத வாக்கியங்களையே உதாரணமாகக் கொடுத்துள்ளார். ஆனாலும் இரண்டாவது வாக்கியத்தில் போம் (போலும்) என்ற சொல்லைச் சேர்த்ததன் மூலம் முன்னவனைவிட மதிப்பு உடையவன் என்ற பொருளும், செயலில் நிச்சயமற்ற தன்மையும் எதிர்பார்ப்பும் அங்கு அடங்கியுள்ளன. ஓரளவு இரண்டாவது வாக்கியத்தில் உள்ள உம்மை அந்தப் பொருளை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

'சாத்தான் வாராநின்றான். கொற்றன் வருவன்போம்; சாத்தன் வந்தான், கொற்றன் வருவன்போம் என இவை உம்மை கொடாமற் பொருள்பட்டவாறும், காலமுந் தொழிலும் மயங்கியவாறும் கண்டுகொள்க. அற்றேல் சாத்தனும் வாராநின்றான், கொற்றனும் வருவன் என உம்மை கொடுத்தும் வழக்கு நிகழுமால் எனின் உம்மை கொடுக்கின்றது பொருள் வேற்றுமை உணர்தற்கு அன்றே? அது கொடாக்காலும் பொருள் இனிது விளங்குமாயின் கொடுத்தலாற் பயன் இன்று என்க. இவ்வாறு செய்யுளகத்து வரின் இசைநிறைத்தற் பொருட்டு வந்தது என்க' என்பது அவர் வாசகம். தன்மேற் செஞ்சொல் வரூஉங் காலை என்ற சூத்திரத்தின் (41) முதல் அடிக்குச் சேனாவரையர் 'உம்மை யெச்சத்தின் முன் எஞ்சுபொருட் கிளவி உம்மையில் சொல்லாய் (செஞ்சொல்) வருங்கால்' என்றும், தெய்வச்சிலையார் 'உம்மைப் பொருட்கண் உம்மை கொடாது செஞ்சொல்லாகி வரின்' என்றும் பொருள் கொண்டுள்ளார்கள். சாத்தன் வருகிறான், கொற்றனும் வருவான் என்பதும் சாத்தன் வருகிறான், கொற்றன் வருவான் என்பதும் ஒரே

பொருளா என்பதே கேள்வி. உம்மை வாக்கியத்தில் உள்ள பெயர் உயர்வு சிறப்பு உடையது. உம்மை இல்லாத இரண்டு வாக்கியமும் ஒரே நிலையை- உயர்வு தாழ்வு இல்லாத நிலையைக் குறிப்பவை.

இங்கு உம்மை இல்லாத வாக்கியம் என்பது ஒத்த நிலை உம்மைத் தொகை வாக்கியம் ஆகும். ஆனாலும் போம் என்ற இடைச்சொல்லை இறுதியில் சேர்த்ததன் மூலம் வெறும் உம்மைத் தொகை வாக்கியம் இல்லை என்ற முறையில் அமைத்துவிட்டார். அதே சமயத்தில் சூத்திரக் கருத்துக்கு மாறாக உதாரணம் அமைந்தது சிறப்பாகக் கொள்ளமுடியாது.

**என எச்சம்**

**எனவென் எச்சம் வினையொடு முடிமே** என்பது சூத்திரம் (42). இதற்கு இளம்பூரணர் 'எனவென நின்ற எச்சம் பெயர் கொண்டு முடியாது வினைகொண்டு முடியும்' என்று பொழிப்புரை எழுதிக் **கொள்ளெனக் கொண்டான்,** என வரும் என்று உதாரணம் கொடுத்துள்ளார். இது இடையியலுக்கு உரியது, எப்படி எச்சவியலுக்குப் பொருந்தும் என்ற கேள்வி எழுகிறது. சேனாவரையரும் கொள்ளெனக் கொடுத்தான், துண்ணென துடித்தது, நன்றென்று கொண்டான், தீது என்று இகழ்ந்தான் என்று கூடுதலாக உதாரணங்கள் கொடுத்து என்று என்பதும் வினை கொண்டு முடியும் என்று குறிப்பிட்டாரே தவிர அந்த உதாரணங்களில் எச்சம் எங்கே இருக்கிறது என்று கேள்வியை எழுப்பாமல் போய்விட்டார்.

நச்சினார்க்கினியர் 'என்று' வந்துள்ள எச்சத் தொடரில் (கொள்ளென்று கொண்டான்) மட்டும் சொல் எச்சம் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். **மலைவான் கொள்ளென்று உயர் கனி தூஉய்** என்ற புறப்பாட்டு அடியைக் (143) கொடுத்து 'மலைவான் கொள்ளவேண்டும் என்று சொல்லி' எனவும் பொருள் தருதலின் சொல் எச்சமாம் என்று விளக்கியுள்ளார். என, என்று ஆகிய இரண்டு இடைச்சொற்களும் கூறு, நினை, கருது போன்ற பிற வினைகளைத் தொக்கி நின்று வரும் (கோதண்டராமன்) என்பது சுட்டிக்காட்டத்தகுந்தது. நச்சினார்க்கினியரே கார் வருமெனக் கருதி நொந்தான் என்ற ஒரு உதாரணத்தைக் கொடுத்துள்ளார். அதையும் கார் வருமென நொந்தான் என்றும் கூறமுடியும். எனவே அங்குக் கருது என்ற வினை தொக்கிநிற்கிறது என்பது தெளிவாகிறது. எப்படியானாலும் எனவெச்சம் என்பதை எச்சமாகக் கருத முடியாது. நச்சினார்க்கினியர் கருத்துப்படி இது சொல் எச்சம் ஆகும். அதுவும் பொருத்தமாகத் தோன்றவில்லை. எனவே தெய்வச்சிலையார் வேறுவிதமான உதாரணத்தைக் கொடுத்து அங்கு என என்பது எஞ்சி நின்றது என்று காட்டியுள்ளார்.

'என என்று சொல்லப்பட்ட எச்சம் வினையொடு முடியும் என்றவாறு. உம்மையாற் பெயரொடும் முடியும் என்று கொள்க. முடிதலாவது அவற்றைச் சார்ந்து நின்று பொருளை உணர்த்துதல். முடிதல் எனினும் தொடர்தல் எனினும் ஒக்கும்' என்பது தெய்வச்சிலையாரின் பொழிப்புரை.

> **வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமால் இந்நின்ற**
> **வாடல் முதியாள் வயிற்றிடம் – கூடார்**
> **பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா**
> **இரும்புலி சேர்ந்து இடம்** (பு.வெ. மாலை. வஞ்சி.19)

என்பதனுள் '(வயிற்றிடம்) இரும்புலி சேர்ந்த இடம் (4ஆவது அடி) . . . . . என வியப்பாமால், எனப் பொருள் உரைக்க வேண்டுதலின் 'என' என்பது எஞ்சி நின்று, வியப்பு என்பதனோடு தொடர்ந்தது. இது வினை' என்பது அவரின் விளக்கவுரை. இந்த விளக்கம் சரிதான் என்றாலும் செய்யுளில் இணைப்புச் சொற்கள் கெடுவது, சில தொழில் முதனிலைகள் கெடுவது இயல்பு. அதனால் கெடுகிற சொற்கள் அடிப்படையில் எச்சங்கள் பெயரிடப்படுவதில்லை. உதாரணமாக, எடுத்துக்காட்டு உவமையணி என்பதில் உவமை உருபு மறைந்திருக்கும். அதை உவமை எச்சம் என்று அழைப்பதில்லை.

**பிரிநிலை வினையே** (எ.31) என்னுஞ் சூத்திரத்துள் குறிப்பே **இசையே ஆயீரைந்தும்** என்ற வழிக் குறிப்பே இசையே என அவ்வீரைந்தும் எனப் பொருள் உரைக்க வேண்டுதலின் என என்பது எஞ்சி நின்றது. ஈரைந்து என்னும் பெயரொடு முடிந்தது' என்பது தெய்வச்சிலையாரின் இரண்டாவது விளக்கம். இங்கு என என்பது எஞ்சி நிற்பதும் புறநிலையில் பெயரோடு முடிவதும் சரியே. ஆனால் என என்ற வினையெச்ச வடிவத்தைப் பெயர் கொண்டு முடியும் என்பது புறநிலையை ஒட்டிய கருத்தே. அதனால் வினையெச்சம் பெயரையும் கொண்டு முடியும் என்று கொள்ளக் கூடாது. ஆகவே **என** என்பதை 'என்று சொல்லப்பட்ட' என்று பொருள் கொண்டு என்று சொல்லப்பட்ட பெயரெச்சத்தோடு முடிந்து அந்தப் பெயரெச்சமே **அவ்வீரைந்து** என்ற பெயரோடு முடிந்தது என்று கொள்ள வேண்டும்.

## வினையெச்சம்

வினையெஞ்சுகிளவி தெரிநிலைவினையும் குறிப்புவினையும் கொண்டு முடியும். குறிப்புவினை ஆக்கச்சொல்வோடு வரும் என்பதே சூத்திரக் கருத்து (41).

தெய்வச்சிலையார் ஒழிந்த உரையாசிரியர்கள் வினையெச்சம் பற்றிப் பேசுகிறது என்று கொண்டே வினையியலில் கூறிய கருத்துக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு பற்றியும் மட்டுமே விளக்கியுள்ளார்கள்.

> உழுது வந்தான் - தெரிநிலைவினை கொண்டு முடிந்தது.
> மருந்து உண்டு நல்லன் ஆயினான் - குறிப்புவினை ஆக்கமொடு முடிந்தது.

மேலும் தொழிற்பெயர் (உழுது வருதல்), வினையாலணையும் பெயர் (உழுது வந்தவன்) கொண்டுமுடியும் என்று மூவருமே எடுத்துக்காட்டியுள்ளார்கள். சேனாவரையர் கூடுதலாகக் குறிப்புவினை சிறுபான்மை ஆக்கம் இன்றியும் வரும் என்று இரண்டு குறுந்தொகைச் செய்யுட்களை எடுத்துக்காட்டியுள்ளார். அது பின் பகுதியில் விரிவாக ஆராயப்படும். இவை சிறப்பான கருத்துகளாகக் கொள்ள முடியாது. உண்மையில் எச்சம் பொருண்மை பற்றியது; தொடரியல் பற்றியது அல்ல. எனவேதான் தெய்வச்சிலையார் வினை கெடுவது என்று பொருள் கொண்டு விளக்கியுள்ளார்.

தெய்வச்சிலையார் பொழிப்புரையில் மாறுபடவில்லை. ஆனால் 'வினையியலுட் கூறிய வினையெச்சம் ஆராய்தல் வேண்டாமையின் அஃதுஅன்று கொள்ளப்படும்' என்று விளக்கவுரையில் குறிப்பிட்டுப் பாடலில் வினைச்சொல் கெட்டு வருவதை உதாரணமாகக் காட்டியுள்ளார்.

> **அழுக்காறு உடையார்க் கதுசாலும் ஒன்னார்**
> **வழுக்கியுங் கேடீன் பது**

என்ற குறளை (165) எடுத்துக்காட்டி 'அதனுள் கேடு பயத்தற்குத் தானே அமையும், பகைவர் கேடு தருதல் தப்பியும் வரும் எனப் பொருள் உரைக்க வேண்டுதலின் 'வரும்' என்பது எஞ்சி நின்றது' என்று அவர் விளக்கியுள்ளார். குறளில் வினைச்சொற்கள் பல வகையாகக் கெட்டுவருதலைக் காணலாம். **அற்றார் அழி பசி தீர்த்தல்** என்ற குறளை எடுத்துக்காட்டித் (226) தெய்வச்சிலையார் 'பொருள் வைத்தற்கு இடம் பெற்றானாம் என்று உரைக்க வேண்டுதலின் 'ஆம் என்னும் வினைக்குறிப்பு எஞ்சி நின்றது' என்று விளக்கியுள்ளார். ஆக்கச்சொல் கெட்டு வருவதை வினைக்குறிப்பு கெட்டு வருகிறது என்று தெய்வச்சிலையார் கொண்டுள்ளார். ஆனால் பிற உரையாசிரியர்கள் வினையைக் கொண்டு முடிவது வினையெச்சம் என்று கொண்டுள்ளார்கள்.

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரே கல்லா தவர்**

என்ற குறளில் (395) கற்றார் என்ற எழுவாய் தலையர் என்ற வினைக்குறிப்பைக் கொண்டு முடியவேண்டும். குறளில் தலையர் என்ற சொல் இல்லாததை உரையாசிரியர்கள் வருவித்து உரை எழுதியுள்ளார்கள். எனவே இங்குத் தலையர் என்ற குறிப்புவினை எச்சமாக உள்ளது என்று கொள்ளலாம்.

பொதுவாக வினைச்சொற்கள் கெட்டது என்பது ஒருநிலை. இன்னொரு நிலையில் கருத்தாடலில் இடைப்பட்ட சில செயல்களை, வினைகளைக் கூறாமல் விட்டுவிடுவதும் வினையெஞ்சுகிளவியாகக் கொள்ளலாமா என்று நினைத்துப் பார்க்கலாம்.

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு**

என்ற குறளில் (788), 'கை' ஆடையைக் கட்டுவது (போல) என்ற வினை கெட்டுள்ளது. இனிய உளவாக இன்னாத கூறல் என்ற குறளில் (100) உவமை வாக்கியத்திலும் உவமான வாக்கியத்திலும் விரும்பத்தகாதது என்ற வினை இல்லை. அதாவது காய் இருப்பக் கனி கவர்தல் விரும்பத்தகாதது போல இனிய உளவாக இன்னாத கூறல் விரும்பத்தகாதது. அதைக் காய் இருப்பக் கனி கவர்தல் போல இனிய உளவாக இன்னாத கூறல் விரும்பத்தகாதது என்று கொண்டு 'விரும்பத்தகாதது' என்ற வினை கெட்டதாகக் கொள்ளலாம்.

கவிதையில் ஒரு வாக்கியத்துள் சொற்கள் கெட்டு வருவது இயல்பு. அப்படி இல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட வினைகளைச் சொல்லும் போது நடுவில் நடந்த வினைகளை விட்டுவிடுவதும் உண்டு. உதாரணமாக, எடுத்தது கண்டனர் இற்றது கேட்டனர் என்று கம்பர் (பாலகாண்டம்- கார்முகப்படலம். 24) கூறினாலும் அவரே,

**தடுத்து இமையாமல் இருந்தனர் தாளின்**
**மடுத்ததும் நாண் நுதி ஏற்றதும் நோக்கார்**
**கடுப்பினில் யாவும் அறிந்திலர் கையால்**
**எடுத்தது கண்டனர் இற்றது கேட்டனர்**

என்று கூறுவதால் அவர் கருத்துப்படியே இரண்டு செய்கைகளை-தாளின் மடுத்ததும், நாண் நுதி ஏற்றதும் ஆகிய இரண்டு நிகழ்வுகளைப் பொதுமக்கள் பார்க்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். இடைப்பட்ட

வினைகளைக் கெடுத்தது வினையெச்சமாகக் கொள்ளலாமா என்பது ஆராயத்தகுந்தது. வினைகளைக் கெடுத்தது அந்தச் செயல்கள் விரைவாக- கண் இமைப்பதற்குள் நடந்து விட்டன என்று குறிப்புப் பொருள் உணர்த்துவதாகவும் கருதப்படுகிறது. விரைவுப் பொருளைக் குறிப்பாக - எச்சமாக உணர்த்த வினைகளை- வினை நிகழ்வுகளைக் கெடுப்பது ஒரு இலக்கிய உத்தியே.

சங்க இலக்கியத்திலும் இப்படிப்பட்ட உதாரணங்கள் உண்டு.

**பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனென் என்றனள்**
**இனியறிந் தேனது துனியா குதலே**
**கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்**
**வேங்கையும் காந்தளும் நாறி**
**ஆம்பல் மலரினும் தான்தண் ணியளே**

என்ற குறுந்தொகைப் பாடலின் (85) கடைசி இரண்டு அடிகளைச் சேனாவரையர் எடுத்துக்காட்டி **தண்ணியள்** என்ற குறிப்பு வினை ஆக்கம் இல்லாமல் வந்துள்ளது (தண்ணியள் ஆவள் என்று இருக்க வேண்டியது தண்ணியள் என்று இருப்பது.) சிறுபான்மை என்று விளக்க, நச்சினார்க்கினியர் 'ஆக்கம் விரிந்து அல்லது பொருள் உணர்த்தாமை உணர்க' என்று விளக்கியுள்ளார். உண்மையில் இங்கு வினைகள்- வினை நிகழ்வுகள் கெடுக்கப்பட்டிருக்கின்றன.

இதன் நேர்பொருள்: மீண்டும் ஒரு முறை தழுவுங் காலத்து நான் வியர்வை அடைந்தேன் என்று கூறினாள். அவளுக்கு வெறுப்பு உண்டாகுதற்குரிய காரணத்தை இப்போது அறிந்து கொண்டேன். ஆய் என்ற அரசனின் பொதியின் மலையில் உள்ள வேங்கை, காந்தள் ஆகிய மலர்களின் மணத்தை வீசி, ஆம்பல் மலரைக் காட்டிலும் குளிர்ச்சி உடையவள்.

இதற்கு மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது என்ற துறைக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது. சாமிநாதையர் தலைவி தமரைப் பிரிந்து தலைவனுடன் சென்றாளாக, அதனை அறிந்த செவிலி கூறி இரங்கியது என்று மேலும் விளக்கியுள்ளார். ஆனால் பாட்டில் பெண் இருவர் பேசப்படுதலும் அவர்களில் ஒருவர் மூத்தவராகவும் இன்னொருவர் இளையவராகவும் இருக்க வேண்டும் என்று மட்டுமே உள்ளது. இலக்கிய மரபுப்படியே செவிலி, தலைவி என்றும் ஊகித்துக்கொள்ளப்படுகிறது.

**முயங்கப் பெயர்த்தனென்** என்று கூறும்போது செவிலி தலைவியை தழுவிக்கொண்டு படுக்கும் வழக்கம் உண்டு என்பதை உணர்த்துகிறது. ஆனால் இன்று தழுவ முற்படும்போது (முயங்கப் பெயர்த்தனென்), 'யான் வியர்த்தனென் என்றனள்' என்றது முன்னையத் தழுவுதலுக்கும் இன்று தழுவுதலுக்கும் இடையே சில செயல்கள் நடைபெற்றிருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். அதாவது தலைவி காதல் வயப்பட்டுவிட்டாள். எனவே இன்று தலைவன் தழுவுதலையே விரும்பிச் செவிலி தழுவுதலைத் தலைவி விரும்பவில்லை என்பதையே **வியர்த்தனென்** என்று வேறு காரணம் கூறினாள். எனவே வியர்த்தனென் என்பதில் காதல் வயப்பட்டது என்ற நிகழ்வு எச்சமாக உள்ளது. அதை வினையெஞ்சு எசசம் என்று கொள்ளலாமா?

அடுத்துத் **தண்ணியளே** என்பது தலைவியின் நிலையை வருணித்த செவிலியின் கூற்று. அங்கும் ஒரு காரண நிகழ்வு புதைந்துள்ளதைச் சாமிநாதையர் விளக்கம் புலப்படுத்துகிறது. 'தண்ணியளே: ஏகாரம் இரக்கக் குறிப்பு - இத்தகைய தண்மை உடையவள் வெப்பம் மிக்க பாலையில் செல்ல நேர்ந்ததே என்னும் இரக்கக் குறிப்பு' என்ற அவர் விளக்கத்தில் பாலை நிலத்தின் வழியே தலைவி தலைவனுடன் உடன்போக்கு போன நிகழ்வை மனதில் கொண்டு வழிநடைத் துன்பத்தை எப்படித் தாங்குவாள் என்று நினைத்தே **தண்ணியளே** என்று செவிலி கூறியுள்ளாள் என்பது புலனாகிவிடுகிறது. எனவே **தண்ணியளே** என்ற குறிப்புவினையில் உடன்போக்கு போனது; பாலை நிலத்தில் உண்டாகும் துன்பத்தை நினைத்தது ஆகிய வினைகள் எச்சமாக உள்ளன என்று கொள்ளலாம்.

புறப்பாடலிலும் (289-ஔவையார்) இடையில் பல நிகழ்வுகள் விடுபட்ட பாடல் உள்ளது.

> வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
> தன்னோ ரன்ன இளைஞர் இருப்பப்
> பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்
> கால்கழி கட்டிலிற் கிடப்பித்
> தூவெள் ளறுவை போர்ப்பித் திலதே.

இதன் நேர்ப்பொருள்: வெள்ளாட்டுக் கிடாய்களைப் போலத் தன்னை ஒத்த இளைஞர் பலர் இருக்கவும் அவர்களுக்கு மேலாக- அவர்களை விட்டு என் மகனுக்குத் தரப்பட்ட கள் அவனைப் பாடையில்

கிடத்தி வெள்ளைத் துணியால் மூட வைக்கவில்லை என்பது. அதாவது அவனுக்குச் சாகும் பேறு கிடைக்கவில்லை. அதன் மூலம் அரசனுக்காகப் போர் செய்யும் வாய்ப்பும் கிட்டவில்லை என்று தாய் வருந்துவது புலனாகிறது. அரசனுக்காகப் போர் செய்யும் வாய்ப்பும் கிட்டவில்லை என்பது மறைந்துள்ளதால் இதையும் வினையெஞ்சு கிளவி - வினை எஞ்சியிருப்பது எனலாமா?

## பெயரெச்சம்

பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே என்ற சூத்திரத்தில் (சூ. 37) உண்ணும் சாத்தன், உண்ட சாத்தன் என்ற உதாரணங்களையே இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் கொடுத்துள்ளார்கள். இளம்பூரணர் வினையியல் சூத்திரத்துக்கும் (35) இதற்கும் வேறுபாடு காட்ட முயன்றுள்ளார். மாறாகத் தெய்வச்சிலையார் செய்யுளில் பெயர்ச்சொல் கெட்டு வந்ததை உதாரணமாகக் காட்டியுள்ளார்.

> துறக்குவன் அல்லன் துறக்குவன் அல்லன்
> தொடர்வரை வெற்பன் துறக்குவன் அல்லன்
> தொடர்புள் இனையவை தோன்றின் (கலி.41)

என்றவழி அவன் தொடர்பு என வேண்டுதலின் அவன் என்னும் பெயர் எஞ்சி நின்றது என்பது தெய்வச்சிலையார் உதாரணமும் விளக்கமும். இங்குப் பெயர் கெடுத்தது யாப்புக்காக இருக்கலாமோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. மேலும் இரண்டு உதாரணங்களைக் கொடுத்து விளக்கியுள்ளார்.

'உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே' (கிளவி.1) என்மனார் ஆசிரியர் என வேண்டுதலின் ஆசிரியர் என்னும் பெயர் எஞ்சி நின்றது.

> மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
> அரும்பிய சுணங்கிற் அம்பகட் டிளமுலைப்
> பெருந்தோள் நுணுகிய நுசுப்பிற்
> கல்கெழு கானவன் நல்குறு மகளே (குறுந். 71)

இதனுள் 'எனக்கு' என வேண்டுதலின் வேற்றுமை ஏற்ற பெயர் எஞ்சி நின்றது.

இவை தெய்வச்சிலையார் கொடுத்த கூடுதல் உதாரணங்கள். இவை எல்லாம் தொடரியல் நோக்கில் ஊகிக்கக் கூடியவை. வெற்பன் துறக்குவன் அல்லன் என்று கூறிவிட்டு, தொடர்புள் என்ற பெயரின்

அடையாக- அவன் என்பது ஊகிக்கக்கூடியதே. இரண்டாவது உதாரணத்தில் என்மனார் என்ற வினைமுற்றுக்கு உரிய எழுவாய் இல்லை. இலக்கணம் ஆதலின் ஆசிரியர் என்ற பெயர்ச்சொல் எழுவாயாக வருவிக்கப்பட்டது. மூன்றாவது உதாரணத்தில் நல்குறு மகள்.. மருந்து, வைப்பு என்பதே வாக்கியம். எனவே இன்னதற்கு- இன்னாருக்கு என்ற தொழில் முதனிலை கெட்டுள்ளது. எனவே அதை எமக்கு என்ற சொல் வருவித்து ஈடுகட்டுகிறோம். இவைகளைத் தொடர் ஆற்றல் என்று கொள்ளலாம். குறுந்தொகைப் பாடலைப் பொறுத்தவரையில் எமக்கு மகள் மருந்து, வைப்பு என்று நாலாம் வேற்றுமை கெட்டிருப்பது உடைமை உணர்ச்சி (Possessive nature) இல்லாததைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம். செய்யுளில் கெடுக்கப்பட்டிருக்கிற சொற்களை வருவித்தலை எச்சம் என்று கொள்வது சிறப்பாகத் தோன்றவில்லை. அதைத் தொடராற்றல் என்று கொள்ளலாம்.

அதே சமயத்தில் பெயர்ச் சொற்களைக் கெடுப்பது மூலம் சில குறிப்புப் பொருள் உணர்த்தப்படுவது உண்மையே. ஆனால் தருக்க ரீதியான எழுவாய் இல்லாமல் இலக்கண எழுவாய்- அதுவும் அஃறிணைப் பெயர்கள் எழுவாயாக இருப்பதால் அந்த வினைகளுக்கு உரிய கருத்தா-வினைமுதல் யார் என்று குறிப்பிடாமல் இருப்பது பெயரெச்சம் பெயர் எஞ்சியிருப்பது என்று கொள்ளலாமா என்று நினைக்கத் தோன்றுகிறது.

**காலே பரிதப் பினவே கண்ணே**
**நோக்கி நோக்கி வாளிழந் தனவே**
**அகலிரு விசும்பின் மீனினும்**
**பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே**

என்ற குறுந்தொகைப் பாடலுக்குச் (44) செவிலித்தாய்க் கூற்று என்றும், தலைவி தலைவனுடன் போன பின்பு அவர்களைப் பாலை நிலத்தில் தேடிச் சென்ற செவிலி அவர்களைக் காணாமல் வருந்திக் கூறியது என்றும் விளக்கம் (சாமிநாதையார், 1955) தரப்படுகிறது. ஆனால் தேடிச் சென்றவர் யார், யாரைத் தேடிச் சென்றார், எங்கே தேடிச் சென்றார் என்பவை பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. மாறாக முலை முகம் செய்தன என்ற பாடலில் (அகம்.7) **பேதையங்குறுமகள்...... விடலையொடு சுரம் படர் தந்தோள்** என்று செவிலி கூறியுள்ளாள். ஆகவே குறுந்தொகைப் பாடலில் தேடிச் சென்றவர் யார், யாரைத் தேடிச் சென்றார் என்ற பெயர்கள் எச்சமாக உள்ளன என்று

கொள்ளத் தோன்றுகிறது. அதன் சிறப்பு என்ன? அகப்பாடலில் சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப்படாவிட்டாலும் ஆண், பெண், தலைவன், தலைவி, தோழி என்று சுட்டப்பட்டு உலகப் பொதுமையாக ஒரு குறிப்பிட்ட பாலாருக்கு, குறிப்பிட்ட சூழலுக்கு என்று வரையறுக்கப்படுவதைப் போல இங்கு (குறுந். 44) வரையறுக்கப்படாமல் பொதுமை மிகுந்து எல்லாப் பாலாரும் எல்லா நிலையிலும் மேற்கொள்ளும் தேடல் முயற்சி என்ற உண்மையை உணர்த்துவது என்பது வற்புறுத்தப் பட்டதாகக் கொள்ளலாம். எனவே கருத்தா-வினைமுதல் எஞ்சியுள்ளதாகக் கருதலாம்.

**ஏனைய எச்சங்கள்**

**எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கும்**
**எஞ்சு பொருட்கிளவி இலவென மொழிப**

என்ற சூத்திரத்தின் (43) கருத்து என்ன? இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் கருத்தாடலில் முதல் ஏழு வகையும் இடைச்சொற்கள் பெற்று ஊகிக்கக் கூடிய கருத்து என்ன என்பதை விளக்கியவை என்று கொண்டதால் மீதி உள்ள மூன்றிலும் இடைச்சொற்கள் இல்லாமலும் எஞ்சி இருக்கக் கூடிய கருத்து என்ன? என்று அறிய முடியாதவை என்று விளக்கியுள்ளார்கள். முன்னவைகளில் பேசுவோன் கருத்து எச்சத்தையும் உள்ளடக்கியது. ஆனாலும் அவர்களுக்குள் கருத்து ஒற்றுமை இல்லை. அது பின்னால் எடுத்துக்காட்டப்படும். காரணம் சூத்திரம் பூட்டகமாக இருப்பதுதான். தெய்வச்சிலையார் கருத்துப்படி முன்னுள்ள ஏழும், வந்து முடிக்கும் சொற்களை உடைய; இவை (பின்னவை) நின்றவாற்றாற் பொருள் வேறுபடூஉம் என்பது. அவரே அடுத்த சூத்திர உரையில் 'தத்தம் குறிப்பினான் எஞ்சிய பொருண்மையை உணர்த்தும்' என்று விளக்கினாலும் இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன என்பது தெளிவாக இல்லை.

**அவைதாம்**
**தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும்**

என்ற அடுத்த சூத்திரத்துக்குக் (44) குறிப்பு, இசை என்னும் இரண்டு எச்சங்களும் சுட்டப்படுவதாக இளம்பூரணர் கொண்டு விண்ணென விசைத்தது- குறிப்பெச்சம்; ஒல்லென ஒலித்தது - இசையெச்சம் என்று உதாரணம் காட்டியுள்ளார். இடையியலில் (சூ.10) என என்பது ஆறு பொருள்படும் என்று கூறியதில் இந்த இரண்டு வகையும்

குறிப்பிடப்பட்டிருப்பதை அவர் அறிந்து இங்கு இரண்டு வகை மட்டும் குறிப்பிட்டதற்கு ஏதோ ஒரு வகையில் சமாதானம் கூற முயன்றுள்ளார். எனவே இந்த கருத்தைச் சிறப்பானதாகக் கொள்ளமுடியாது. மேலும் சேனாவரையரும் இளம்பூரணர் உரையை மறுத்து வேறு உதாரணங்கள் கொடுத்திருப்பதும் இளம்பூரணர் கருத்துப் பொருத்தமாக இல்லை என்பதை வலியுறுத்துகிறது.

**பசப்பித்துச் சென்றா ருடையையோ அன்ன**
**நிறத்தையோ பீர மலர்**

என்ற அடிகளில் பசப்பித்துச் சென்றாரை யாம் உடையேம் என்ற தொடர் மொழி எச்சமாய் நின்று குறிப்புப்பொருளை உணர்த்துவது குறிப்பெச்சம் என்றும்,

**இளைதாக முள் மரம் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த விடத்து**

என்ற குறளில் (779) 'தீயாரைக் காலத்தாற் களைக' என்ற தொடர்மொழி எச்சமாய் நின்று குறிப்புப் பொருளை உணர்த்துவது குறிப்பெச்சம் என்றும் சேனாவரையர் விளக்கியுள்ளார்.

முன்னதில் தொடர்மொழி எச்சமாய் இருப்பதால் சொல்லெச்சம் என்று கொள்ளலாம். பொருளதிகாரத்தில் சொல் எச்சம் என்பது கூற்று எச்சம் என்று கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தகுந்தது. பின்னது ஒட்டணி வகையைச் சார்ந்தது; ஒரு வகையில் உவமானத்தைச் சொல்லி உவமேயத்தைக் கூறாதது எனலாம். அதைக் குறிப்பெச்சம் என்று கொள்ளலாம் என்று பின்னர் விளக்கப்படும்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு** (குறள்.1)

**அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளிந்தசொல்**
**தேறியார்க்கும் உண்டோ தவறு** (குறள்.1154)

என்றவழி முறையானே 'அதுபோல' எனவும் 'நீத்தார்க்கே தவறு' எனவும் எஞ்சிய இசைப்பொருள் உணர்த்துதலான் 'இசையெச்சம் ஆயின' என்பது சேனாவரையர் விளக்கம். முன்னது உவமை உருபு இல்லாதது; இதை எடுத்துக்காட்டு உவமை என குறள் உரையாசிரியர்கள் விளக்குவார்கள். அதை இசையெச்சம் என்பது பொருத்தமானதாகத் தோன்றவில்லை. ஆனால் இரண்டாவது உதாரணம் பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

தேறியார்க்கும் உண்டோ என்பதை உச்சரிப்பு முறையால்- இசையோட்டத்தால் தவறு தேறியாராகிய தனக்கு - தன்மீது அல்ல என்று பொருள்பட்டு தவறு நீத்தார்க்கே என்று ஆகும். இசை என்பது இசையோட்டத்தைக் (Intonation) குறிப்பதாகக் கொள்ளலாம். அதாவது இசையோட்டத்தால் எதிர்ப்பொருள் உணர்த்துகிறது. மேலே வழக்கில் எதிர்மறை எச்சம் இப்படிப் பொருள் உணர்த்துவது சுட்டப்பட்டது. இங்கு எதிர்மறை இல்லாமலும் இசையோட்டத்தால் எதிர்ப்பொருள் உணர்த்துவதாகக் கொள்ளலாம். உண்மையில் ஓகாரம் எதிர்மறைப் பொருளை உணர்த்துவதாகக் கொண்டால் ஒழியிசை என்று கொள்ள வேண்டி வரும். பேச்சு மொழியில் உண்டு என்ற சொல்லையே இசையோட்டத்தால் எதிர்மறைப் பொருளை உணர்த்துவதற்குக் கையாளமுடியும். அப்படியானால் இங்கு இசையோட்டத்தை உணர்த்துவதற்கு ஓகாரம் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கொள்ளலாம்.

நச்சினார்க்கினியர் வேறு உதாரணங்களைக் கொடுத்துள்ளார். 'கற் கறித்து நன்கு அட்டாய் என்றால் தீங்கு அட்டாய் என்னும் குறிப்பு, தோன்றிய எஞ்சு பொருளினைத் தானே கூறி நின்றது' என்பது குறிப்பெச்சத்துக்கு அவர் தரும் உதாரணம். அது பொருத்தமாகவே இருக்கிறது. அதே சமயத்தில், வயிறு மொடுமொடுத்தது என்றால் இசையிற் குறிப்பாகிய 'உண்ணவேண்டா' என்னும் எஞ்சு பொருளினைத் தானே கூறி நின்றது. இவ்விசையிற் குறிப்பு வயிற்றின் கண்ணும் கொள்க' என்று இசையெச்சத்துக்கு அவர் தரும் உதாரணம் பொருத்தமானதாகப் படவில்லை. வயிறு வலித்தது என்று கூறினாலும் அதே குறிப்புப் பொருள் உணர்த்தும். எனவே மொடுமொடுத்தது என்ற இசைக்குறிப்புச் சொல் வந்ததால் இசையெச்சம் என்பது சிறப்பானதாகக் கொள்ளமுடியாது. இசையெச்சத்துக்குச் சேனாவரையரின் இரண்டாவது உதாரணம் பொருத்தமாகவே தோன்றுகிறது. அதாவது இசையெச்சம் என்பது இசையோட்டத்தால் எச்சப் பொருளை உணர்த்துவது.

தெய்வச்சிலையார் இந்தச் சூத்திரம் முன் சூத்திரத்தின் கருத்தைத் தெளிவுபடுத்துவதாகவும் அடுத்த சூத்திரம் சொல்லெச்சத்தை உணர்த்துவதாகவும் கருதுவதால் தொல்காப்பியர் குறிப்பு, இசை ஆகிய இரண்டு எச்சத்தையும் குறிப்பிடவில்லை என்று குற்றம் ஏற்பட்டுவிடுகிறது. இன்னொரு நோக்கில் அவருடைய உரை குறை உடையது என்று நிரூபணம் ஆகிவிடுகிறது.

## சொல்லெச்சம்

சொல்லென் எச்சம் சொல்லளவு எஞ்சுதல் இல என்பதற்குச் சொல் அல்லது எஞ்சியிருக்காது என்று இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் கொள்ளத் தெய்வச்சிலையார் மற்றொரு சொல் எஞ்சிநிற்றல் இல்லை; அந்தச் சொல்லால் பிறிது பொருள் உய்த்துணர்ந்து கொள்வது என்று உரைகொண்டுள்ளார். ஆனாலும் அந்த மூவருக்குள்ளும் விளக்கத்தில் மாறுபாடு உள்ளது.

சொல் என்ற சொல்லே எஞ்சி நிற்பது என்று இளம்பூரணர் கொண்டு '(பசித்தேன் பழஞ்சோறு) தா என நின்றான்' என்பது தா எனச் சொல்லி நின்றான் என்று பொருள்படும் என்று விளக்கியுள்ளார். அங்குச் சொல்லி அல்லது சொல்ல என்று இரண்டு வகையானும் வரும் என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது இந்தச் சூத்திரத்தின் பொருள் வீச்சை மிகவும் கட்டுப்படுத்திவிட்டார்.

சேனாவரையர் ஏதாவது ஒரு சொல் எஞ்சியிருப்பது; தொடர் எஞ்சியிருப்பது அல்ல என்று கொண்டு 'உயர்திணை என்மனார்' என்ற தொல்காப்பிய சூத்திரத்திலேயே (கிளவி.1) ஆசிரியர் என்ற சொல் (இட) முன்னும் 'மருந்தெனின் மருந்தே' என்ற குறுந்தொகைப் பாடலில் (71.1) எமக்கே என்ற சொல் (இட) பின்னும் எஞ்சி நின்றவாறு கண்டுகொள்க' என்று விளக்கியுள்ளார். உண்மையில் இவைகளை எச்சம் என்று கூறியது பொருந்துமா என்று கேள்வி எழுகிறது. இவைகளைக் குறைவாக்கியம் (Elliptical sentence) என்று வேண்டுமானால் அழைக்கலாம். வாக்கியங்களில் சில தொழில்முதனிலைகளை விட்டுவிடுவது அவைகளுக்குக் கருத்தாடலில் முக்கியம் இல்லை என்பதையே காட்டுகிறது.

நச்சினார்க்கினியர் இருவர் கருத்தையும் தழுவி வழக்குக்கும் செய்யுளுக்கும் பொதுவான ஒரு கருத்தையும் செய்யுளுக்குச் சிறப்பான ஒரு கருத்தையும் உணர்த்துவதாகக் கொண்டு சூத்திரத்தைப் புதிய முறையில் அன்வயப்படுத்தி உரை செய்துள்ளார். 'என் எச்சம் சொல்லளவு அல்லது சொல் முன்னும் பின்னும் எஞ்சுதல் இல' என்று புதிய முறையில் அன்வயப்படுத்தி 'என் என்கின்ற எச்சமானது சொல் என்னும் முதல்நிலை மாத்திரை தன்னுள்ளே எஞ்சி நிற்றல் அல்லது செய்யுளிற் கூறும் சொல் எச்சம் போல ஒரு சொல் முன்னும் பின்னும் எஞ்சி நிற்றல் இல்லை' என்று முதல் பகுதியில் இளம்பூரணர் கருத்தைத் தழுவியும் பின் பகுதியில் சேனாவரையர் கருத்தைத் தழுவியும் உரை செய்துள்ளார்.

விளக்கமாக, 'என் என்னும் இடைச்சொற்கண்ணே 'சொல்' என்பது தோன்றுதலின் என் எச்சம் என்றார். 'என்' என்பது

சொல்லை ஒழிபாக நிற்றலின் முன்னர் சொல்லெச்சம் என்றார். **வினையெனப்படுவது** (வினை-1) என்றது வினையெனச் சொல்லப்படுவது என்ற பொருள் தந்த இடத்து 'என்' என்னும் எச்சம், தான் அவாவுதலின் இடையே நின்ற 'சொல்' என்னும் முதனிலைக்குத் தன் ஈற்றில் நின்ற செய என் எச்சத்தை உணர்த்தும் அகரத்தை ஏற்பித்து நின்றவாறு காண்க' என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். என என்பதில் என் என்ற சொல் + விகுதி அடங்கியிருக்கிறது என்ற இந்த விளக்கம் இன்றைய மாற்றிலக்கண மொழியியலார் கொடுக்கும் விளக்கத்தை போல உள்ளது (கோதண்டராமன்). ஆனால் சொல்லென் எச்சம் என்று தொல்காப்பியத் தொடரைச் சிதைத்து (என் எச்சம்...... சொல் (முன்னும்).....) பொருள் கொண்டது சரியா என்பது இங்கு முக்கியமான கேள்வி. அடுத்து நச்சினார்க்கினியர் காட்டும் உதாரணங்களின் பொருத்தம் பற்றியது.

சேனாவரையர் காட்டிய அதே குறுந்தொகை அடிகளைக் காட்டி அதைச் செய்யுளில் (கால) முன் வந்த எச்சம் என்பது பொருந்தாது என்பதற்கு மேலே குறிப்பிட்ட வாதத்தோடு நச்சினார்க்கினியரே சேனாவரையர் கருத்தை மறுப்பதற்குத் தந்த வாதத்தையும் காட்டலாம். 'உயர்திணை என்மனார்' என்ற சூத்திரத் தொடரில் ஆசிரியர் என்ற சொல்லெச்சம் என்ற சேனாவரையர் கருத்தை இரண்டு காரணங்களால் மறுத்துள்ளார். ஒன்று: அது சூத்திரத் தொடர். எனவே அதைச் செய்யுளாகக் கருத வேண்டும். இரண்டு: 'முற்றுச் சொற்குப் பெயர் தோன்றாமலும் நிற்கும்' அதாவது தொழில் முதனிலைகள் கெடுவதை எச்சமாகக் கருத முடியாது. ஆகையால் இது சொல்லெச்சம் இல்லை. நச்சினார்க்கினியர் கருத்துப்படிச் சொல்லதிகார எச்சம் ஒரு வாக்கியத்துக்குள் வருபவை என்றும் செய்யுளியல் எச்சம் கருத்தன்- ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியத்துக்குள் வருபவை என்றும் கொள்ளலாம்.

'குன்றம் குருதிப் பூவின் குலைக் காந்தட்டே என்ற குறுந்தொகை (1) அடிகளைக் காட்டி யாம் காந்தட் பூவால் குறைவிலம் எனப் பின்னும் கூற்று சொல்லெச்சமாய் நின்றவாறு காண்க' என்று நச்சினார்க்கினியர் காட்டியதோடு பொருளதிகார எச்சச் சூத்திரத்தையும் மேற்கோள் காட்டியுள்ளார். அதற்குக் காரணம் பொருளதிகாரத்தில் சொல்லெச்சம் என்பதைப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கூற்றெச்சம் என்று பொருள் கொண்டதுதான். எனவே சொல்லெச்சத்துக்கு அது பொருத்தமான உதாரணமாகக் கொள்ளத் தோன்றுகிறது.

தெய்வச்சிலையார் 'மற்றொரு சொல் எஞ்சி நிற்றல் இலது' என்று பொழிப்புரையும் 'எனவே அச் சொல்லினானே உய்த்துணர்ந்து கொள்ளப் பிறிதொரு பொருள் வரும்' என்று விளக்கி ஓட்டணியாக வரும் இரண்டு குறள்களை உதாரணம் காட்டியுள்ளார். சேனாவரையர் அப்படிப்பட்ட பாடல்களைக் குறிப்பெச்சம் என்று கூறியுள்ளார். ஒரு நிலையில் உவமானம் இருந்து உவமேயம் இல்லாத பாடல் என்று கொள்ளலாம். குறுந்தொகையில் **ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து** என்ற பாடல் (92) இந்த வகையைச் சார்ந்தது. எனவே இப்படிப்பட்ட பாடல்களைக் குறிப்பெச்சம் என்று கொள்ளலாமா என்று நினைக்கலாம். தொல்காப்பியர் அடிவரையறை இல்லாத ஆறில் (செய். 162) **கூற்றிடை வைத்த குறிப்பு** (செய்.163.6) என்று ஒன்றைக் குறிப்பிட்டு அதன் விளக்கமாக

**எழுத்தோடும் சொல்லோடும் புணராதாகி**
**பொருட் புறத்ததுவே குறிப்பு மொழியென்ப**

என்று (செய்.177) கூறுவதால் ஓட்டணியைக் குறிப்பெச்சமாகக் கொள்ளத் தூண்டுகிறது.

இங்குச் சொல்லெச்சம் என்பது, கூற்றெச்சம் என்றும் இசையெச்சம் என்பது இசையோட்டத்தால் மாறுபட்ட பொருளை எச்சமாக உணர்த்துவது என்றும் குறிப்பெச்சம் என்பது ஓட்டணியாக வருவது என்றும் கொள்ளலாம் என்று கருதப்பட்டுள்ளது.

## முடிவுரை

பிரிநிலை எச்சம், ஒழியிசை எச்சம், எதிர்மறை எச்சம், வினையெச்சம், பெயரெச்சம் ஆகிய ஐந்துக்கும் தெய்வச்சிலையாரின் கருத்துப் பொருத்தமானதாகத் தோன்றுகிறது. ஆனாலும் வினையெச்சம், பெயரெச்சம் ஆகிய இரண்டுக்கும் புதிய கருத்தும் முன் வைக்கப்பட்டுள்ளது. உம்மை எச்சத்திற்கு இளம்பூரணர் கருத்துப் பொருந்துகிறது. சொல்லெச்சம் என்பதற்கு நச்சினார்க்கினியரின் ஒரு கருத்தும், குறிப்பெச்சம் என்பதற்குச் சேனாவரையரின் ஒரு கருத்தும் பொருத்தமாகத் தோன்றுகிறது. எனவென் எச்சம் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துகள் பொருந்தும் விதம் விவாதிக்கப்பட்டுள்ளது. இசையெச்சம் என்பதற்குப் புதிய கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக எஞ்சுபொருட் கிளவி பொருண்மையியல் நோக்கு உடையது. ஆனால் தொல்காப்பியர் சிலவற்றைத் தொடரியல், சொல்லியல் நோக்கிலும் விவரித்துள்ளார். எனவே அது இன்னும் தீவிர ஆய்வுக்கும் விவாதத்துக்கும் உரியது.

## பார்வை நூல்கள் & கட்டுரைகள்


1. சண்முகம், செ,வை., **Naccinarkkiniyar's Conception of Phonology,** Annamalainagar, 1967.

2. சண்முகம், செ,வை., 'எச்சம் (பொருள்)' - (உருளச்சு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை, 1998.

3. சாமிநாதையர், உ.வே., (பதிப்பு) குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை, 1955.

4. சிவலிங்கனார், ஆ., (பதிப்பு) தொல்காப்பியம் உரைவளம்: சொல்லதிகாரம் - எச்சவியல், சென்னை, 1988.

5. சுந்தரமூர்த்தி, கு., (பதிப்பு) தொல்காப்பியம் சொல்லதிகாரம்: சேனாவரையம், அண்ணாமலைநகர், 1981.

6. Leech, G., **Semantics,** Harmondsworth, 1974.

# உரிச்சொல்லியல்

ஆ. தசரதன்

## முன்னுரை

'உரிச்சொற்கிளவி', 'உரிச்சொல்' எனத் தொல்காப்பியம் (உரி. 1, 2, 91)[1] கூறுவதை, அதன் உரைகளும் பிற்கால இலக்கணங்களும் தற்கால இலக்கண ஆய்வுகளும் 'உரியியல்', 'உரிச்சொல்', 'உரிச்சொல்லியல்', 'உரிச்சொற்கிளவி', 'தமிழ் நிகண்டு', 'உரிச்சொல் பனுவல்', 'உரிச்சொல் நிகண்டு' எனப் பலவாகக் குறிப்பிடுகின்றன.

தொல்காப்பியம், சொல்லதிகாரத்திலுள்ள ஒன்பது இயல்களில், எட்டாம் பகுதியாக உரியியல் உள்ளது. மிக அதிக நூற்பாக்கள் (98) பெற்றுள்ளது. ஏதோ முக்கியம் கருதியே அதிக நூற்பாக்களில் உரியியல் அமைகின்றது. முதல் நூற்பா எட்டு அடிகளாலானது. புறனடை நூற்பா ஏழு அடிகளில் அமைந்துள்ளது. ஐந்து, நான்கு, மூன்று அடிகளில் ஒரொரு நூற்பாவும் (85, 91, 3), ஈரடிகளில் ஏழுநூற்பாக்களும் (2, 19, 32, 51, 60, 67, 92), ஈரடிகளுக்குக் குறைந்து எஞ்சிய 87 நூற்பாக்களும் பெற்று இவ்வியல் அமைந்துள்ளது.

பெயரியல், வினையியல் எனும் இயல்கள் முழுச் சொற்களை ஆராய்கின்றன. இடையியலும், உரியியலும் முழுச் சொற்களல்லாத குறைச் சொற்களை ஆராய்கின்றன. இதிலிருந்து உரிச்சொற்களுக்கான

நான்காம் இடம் தெரிகின்றது. உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் போன்றிருப்பதாலும், பொருள் விளக்கத்திற்குரியதாக வருவதாலும், பிற்கால நிகண்டு நூல்களுக்கு முன்னோடியாக அமைவதாலும் அவற்றின் அமைப்பையும், அதன் மூலம் உருவாகும் இலக்கணக் கோட்பாட்டையும் மரபிலக்கணக் கொள்கைகளின் அடிப்படையிலும் மொழியியல் கொள்கைகளின் அடிப்படையிலும் கண்டறிவது இங்கு நோக்கமாகும்.

## உரிச்சொல் ஆய்வுகள்

மொழியில் பயின்ற உரிச்சொற்களை இனங்கண்டு, முதன்முதலில் **தொல்காப்பியம்** தனி இயலில் விளக்கியது. **தொல்காப்பியச் சொல்லதிகார** உரையாசிரியர்களான இளம்பூரணர்,[2] சேனாவரையர்,[3] தெய்வச்சிலையார்,[4] நச்சினார்க்கினியர்[5] ஆகியோரும் முதல் நூலைச் சார்ந்தே, தம் கருத்துக்களையும், பிறர் கருத்துக்களையும் கூறினர். **தொல்காப்பிய** வழிநூல்கள், சார்பு நூல்கள் போன்ற **நேமிநாதம்,**[6] **நன்னூல்,**[7] **பிரயோக விவேகம்,**[8] **இலக்கண விளக்கம்,**[9] **தொன்னூல் விளக்கம்,**[10] **முத்துவீரியம்**[11] என்பன உரிச்சொற்களை அவ்வவற்றின் காலகட்டத்துக்கேற்ப ஆராய்ந்தன. தற்காலத்தில், மரபிலக்கணங்களுக்கு உரை எழுதியவர்களும்,[12] மரபிலக்கணங்களை மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்தோரும்,[13] மொழிபெயர்ப்பாளர்களும்[14] உரிச்சொற்களைப் பற்றிக் கூறியுள்ளனர். இவ்வாறு, ஈராயிரம் ஆண்டுகளாக இருந்து வந்த உரிச் சொல்லாய்வுடன் இடைக்காலத்திலும், பிற்காலத்திலும் எழுந்த **நிகண்டுகள்,**[15] **அகராதிகள்**[16] போன்றனவும் சேர்ந்துகொண்டன. எனினும், தொல்காப்பியமே உரிச்சொல்லாய்வில் தலைசிறந்து விளங்கும் அளவுக்கு எட்டுக்குமதிகமான உரிச்சொற்களின் இலக்கண அமைப்பை ஆராய்வதோடு, வேறு பல இடங்களிலும் உரிச்சொற்களைப் பற்றி விளக்குகின்றது. இதனால் **தொல்காப்பியமும்** அதன் உரைகளுமே உரிச்சொற் கோட்பாடுகளை விளக்குவதில் விஞ்சி நிற்கின்றன எனக் கூறுவது தவறாகாது.

## தொல்காப்பியத்தில் உரிச்சொற்களின் இலக்கண அமைப்பு

**தொல்காப்பிய உரிச்சொல் நூற்பாக்கள்,**

1. பொது இலக்கணம் கூறுவன (1, 2)
2. சிறப்பிலக்கணம் கூறுவன (3 முதல் 90 வரை)
3. சொல்லும் பொருளுமாக வருவன (91 முதல் 97 வரை)
4. புறனடை நூற்பா (98)

எனும் நான்கு வகைகளில் பாகுபடுத்தப் பெற்றுள்ளன.[17] ஆனால், தொல்காப்பியம் உரிச்சொற்களின் பொது இலக்கணத்தை இங்கும், வேறு இயல்களிலும் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

> உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
> இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
> பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
> ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
> பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
> பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
> தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
> எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்[18]

என்றும்,

> வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
> வெளிப்பட வாரா உரிச்சொல் மேன[19]

என்றும் எட்டு நிலைகளில் உரிச்சொற்களின் பொது இலக்கணம் கூறப்படுகின்றது. தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில்

> உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
> குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
> நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்........[20]

என்ற நூற்பாவின் இரண்டாம் அடியும் உரியியல் முதல் நூற்பாவின் இரண்டாம் அடியும் ஒத்திருப்பதும், உரிச்சொல்லைக் 'குறைச் சொற்கிளவி' என்றும் அது 'நெறிப்பட வராது' என்றும் கூறியிருப்பதைக் காண்க. இவ்வாறு தொல்காப்பியம் கூறும் உரிச்சொல்லின் இலக்கணத்தை, உரையாசிரியர்கள் மேலும் விளக்கிக் கூறுவதிலிருந்து கீழ்க்காணும் வகைகளில் உரிச்சொல்லின் இலக்கண அமைப்பு உள்ளமையைக் காணலாம்.

1. குறைச்சொற்கள்
2. சொல்லுக்கு முதனிலையாக வருதல்
3. இசை, குறிப்பு, பண்புப் பொருள்களுக்கு உரித்தாய் வருதல்
4. ஓர் உரிச்சொல் ஒரு பொருள் உணர்த்துதல்
5. ஓர் உரிச்சொல் பலபொருள்களை உணர்த்துதல்
6. பல உரிச்சொற்கள் ஒரு பொருளை உணர்த்துதல்

7. பெயர்கள் போலவும் வினைகள் போலவும் வருதல்
8. பயின்று வராத சொற்களைத் தெரிந்த சொற்களால் விளக்குதல்
9. நெறிப்படவராது, அவ்வவற்றின் மரபிற்கேற்ப, வேறு சொற்களுடன் சேர்ந்து பொருள் உணர்த்துதல்
10. செய்யுளுக்குரியன (நன்னூல்)

தொல்காப்பியம் கூறும் 120 உரிச்சொற்களையும், நன்னூலும் பிற இலக்கண நூல்களும் அவ்வக்கால கட்டங்களில் உள்ளனவாகக் கூறும் உரிச்சொற்களையும் பார்க்கும்போது, அவற்றின்

1. வடிவம் (form)
2. பொருள் (meaning)
3. வருகை (distribution)

இவற்றைக் கூறுவதே தொல்காப்பியம் போன்றவற்றின் இயல்பாக இருக்கிறது எனக் கூறலாம். முத்துவீரியம், தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாள்வதும், பிற மரபிலக்கண நூல்கள் தொல்காப்பியக் கருத்துக்களை ஒட்டியே உரிச்சொல்லின் இலக்கணம் கூறுவதும் மேலே கூறியதற்கு அரணாகும்.

## தற்கால ஆய்வுகளில் உரிச்சொல்

"சொல்லின் கருவாக அமையும் அடிச்சொல்லையே உரிச்சொல் குறிக்கின்றது" எனத் தெ.பொ.மீ. குறிப்பிடுகிறார்.[21] அடிச்சொற்களாக அமைவன, சொற்களின் முதனிலையாக அமைவன எல்லாம் உரிச்சொற்களே எனும் உரையாசிரியர்கள் கருத்தின் அடிப்படையிலேயே தெ.பொ.மீ.யின் கருத்தும் அமைகின்றது. ஆயினும் ஓரிரு புறனடைகளையும் அவர் காட்டுகின்றார் (எ.டு. கறுப்பு). வடமொழியில் வழங்கும் 'தாது' எனும் வடிவங்களை ஒத்து உரிச்சொல் தமிழில் வழங்குகிறது என்பதும் அன்னார் கருத்துகளாக உள்ளன. தமிழிலக்கணத்தில் தனித்தன்மையுடன் காணப்படும் உரிச்சொற்கள் வடமொழி இலக்கண நூல்களிலும், வேறு மொழிகளிலும் ஒற்றுமையாக அமைந்துள்ளன என்று கூறலாம். கமில் சுவலபில் போன்றோர் வினை அடையாகவும் பெயரடையாகவும் உரிச்சொற்கள் வருகின்றன என்கின்றனர்.[22] இவ்வாறு, தொல்காப்பியம் உள்ளிட்ட மரபிலக்கணக் கருத்துக்களினின்று, சற்று விரிந்த நிலையில் மொழியியலார் மொழிப்

பொதுமை காண்பது குறிப்பிடத்தக்கது. உரிச்சொற்களின் அமைப்பை வைத்து அவை தொழிற் பெயர்களாகவும் (verbal nouns), பண்புப் பெயர்களாகவும் (abstract nouns), அவற்றின் முதனிலைகள் (base) ஆகவும் தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகின்றன என ஆண்டியப்பன் கூறுவது,[23] உரிச்சொற்களைப் பற்றி அறிந்து கொள்வோருக்கு எளிதாக உள்ளது. கீழ்வருமாறு உரிச்சொற்களைப் பாகுபடுத்தலாம்.

1. **பெயர்க் கொடையாக (Nominal attribute) வரும் உரிச்சொற்கள்**

   குரு - குரு மணி

   வய - வய மான்

   தட - தட மருப்பு

2. **வினைக் கொடையாக (verbal attribute) வருவன**

   நனி - நனி சாய

   மிக - மிக நாணி

3. **தொழிற்பெயர்களாக (verbal nouns) வருவன**

   ஆடி - அமர்தல்

   எடுத்து - ஆய்தல்

4. **இசை, குறிப்பு, பண்பு உணர்த்துவன**

   கம்பலை, சும்மை

   உறு, தவ

   பசப்பு, கெழு

5. **பெயர் போலவும் வினை போலவும் வருவன**

   அதிர்வு - அதிர

   பணை - பணைத்து

6. **ஒரு சொல் ஒரு பொருள்**

   மல்லல் - வளன்

   பயப்பு - பயன்

   உசா - சூழ்ச்சி

   வாள் - ஒளி

7. ஒரு சொல் பல்பொருள்

படர் - உள்ளல், செலவு

விழுமம் - சீர்மை, சிறப்பு, இடும்பை

8. பல சொல் ஒரு பொருள்

உறு, தவ, நனி - மிகுதி

குரு, கெழு - நிறன்

9. பயிலாத சொற்களைப் பயின்ற சொற்களால் விளக்குதல்

தட, கய, நளி - பெருமை

மாலை - இயல்பு

இவ்வாறு தொல்காப்பியம் உரிச்சொற்களைப் பாகுபடுத்தியிருப்பதற்குச் சான்றுகளைக் காட்டலாம். இங்குக் குறிப்பிட்ட பாகுபாடுகளில் பொருள் கூறும் அமைப்பே மிக்கோங்கி இருப்பதால் உரிச்சொல்லியல் பிற்கால நிகண்டு நூல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது எனப் பலர் கருதுகின்றனர்.

## உரிச்சொல்லியலும் நிகண்டு, அகராதி நூல்களும்

> சொற்களுக்குப் பொருள் கூறும் நிலை, உரியியலில் காணப்படுவதால், இவ்வுரியியலைத் 'தமிழ் நிகண்டு' எனலாம். தொல்காப்பியத்துள் வரும் உரியியல், காலப்பழமை சான்றமையால் இதனை முதல் தமிழ் நிகண்டு எனலாம். இதன்கண் அமைந்த சொற்கள் அகரவரிசையி லமைந்திருக்குமாயின் இதனையே முதற்றமிழ் அகராதி என்றும் கூறலாம். பிற்காலத்தில் நிகண்டுகள் தோன்றுவதற்கு இவ்வுரியியலே அடிப்படையாயிற்று. நிகண்டுகளுக்கு உரிச்சொல் என்ற பெயரே வழங்கப்பட்டதுண்டு. நிகண்டு நூல்களை 'உரிச்சொல் பனுவல்' என்றழைத்தனர். பின்னர் நிகண்டு நூல்களைத் துணையாகக் கொண்டு, அகரவரிசையில் பொருள் கூறும் அகராதிகள் தோன்றலாயின[24]

நிகண்டுகள், அகராதிகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டோர் பெரும்பாலோர் இக்கருத்தில் உடன்படுகின்றனர். ஜெயதேவன்[25] செ. வை. சண்முகம்,[26] மு. சண்முகம் பிள்ளை,[27] போன்றோர் அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர். இவ்வாறு தொல்காப்பிய உரிச்சொற்களை நிகண்டுகள் கண்ணோட்டத்திலும், அகராதிகள் கண்ணோட்டத்திலும் பார்க்கும் நிலையே மிக்கோங்கி இருப்பதால் 'உரிச்சொல்' என்றாலே,

நிகண்டு, அகராதி எனும் கொள்கை ஆய்வாளர்களிடையே நிலைத்து விட்டதைக் காணமுடிகின்றது. தொல்காப்பியம் முழுமையிலும் தமிழ் அகராதிக் கூறுகளைக் கண்டறிந்துள்ளார் ஜெயதேவன்.

## முடிவுரை

தொல்காப்பியம் உரிச்சொற்களின் இலக்கணத்தைத் தெளிவாக எட்டுக்கூறுகளில் கூறுவதை, உரையாசிரியர்கள் பலரும் தெளிவாக விளக்கம் கூறாது தடுமாறும் நிலைகளைப் பிற்கால ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. மொழியியல் ஆய்வுகள் கூட உரிச்சொற்களின் ஒன்றிரண்டு பண்புகளை ஆராய்கின்றன என்றே கருதவேண்டியதுள்ளது. ஆனால், நிகண்டுகள், அகராதி முயற்சிகள் மட்டும் தொல்காப்பிய உரிச்சொல்லியலை அடிப்படையாகக் கொண்டே எழுந்தவையாகத் தம்மை நிலை நிறுத்துகின்றன. பிங்கல நிகண்டு, திவாகர நிகண்டு என்பன இதற்குச் சான்றாம்.

## குறிப்புகள்


1. தொல்காப்பியம், கழகப் பதிப்பு, சென்னை, 1943.
2. தொல்காப்பிய உரைகள் - இளம்பூரணர் உரை (1973), தெய்வச்சிலையார் உரை (1979), நச்சினார்க்கினியர் உரை (1979), கழகப் பதிப்புகள், சென்னை.
3. சேனாவரையார் உரை (1966), திருப்பனந்தாள், இலக்கணத் தொகை - சொல். ச.வே. சுப்பிரமணியன் (பதிப்பு), 1972.
4. தொல்காப்பிய உரைகள் - இளம்பூரணர் உரை (1973), தெய்வச்சிலையார் உரை (1979), நச்சினார்க்கினியர் உரை (1979), கழகப் பதிப்புகள், சென்னை.
5. தொல்காப்பிய உரைகள் - இளம்பூரணர் உரை (1973), தெய்வச்சிலையார் உரை (1979), நச்சினார்க்கினியர் உரை (1979), கழகப் பதிப்புகள், சென்னை.
6. இலக்கணத் தொகை - சொல்., ச.வே. சுப்பிரமணியன் (பதிப்பு), 1972.
7. " "
8. " "
9. " "

10. " "

11. " "

12. வெள்ளைவாரணன் (1970), அ.கு. ஆதித்தர் (1971), ஆ. சிவலிங்கனார்.

13. கமில் சுவலபில், சுப்பிரமணிய சாஸ்திரி, இசரயேல், தெ.பொ. மீனாட்சி சுந்தரன், சாம்பசிவன், ஆண்டியப்பன் போன்றோர்.

14. ஆல்பர்ட் (1985).

15. செ. வை. சண்முகம் (1994), வ. ஜெயதேவன் (1977).

16. " "

17. **தொல்காப்பியம், கழகப்பதிப்பு.**

18. மேற்சுட்டிய நூல், உரி. 1.

19. மேற்சுட்டிய நூல், உரி. 2.

20. **தொல்காப்பியம், எழுத்ததிகாரம்,** குற்றியலுகரப் புணரியல் - 77.

21. தெ.பொ. மீனாட்சிசுந்தரன், 'உரிச்சொல்', **இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், (பதிப்பாசிரியர்கள் : ச. அகத்தியலிங்கம், க. பாலசுப்பிரமணியன்), 1974, பக். 121-138.

22. Kamil Zvelebil, 'The existence of adverb', **Tamil Culture,** Vol.8.

23. ஆண்டியப்பன், தே., **காப்பியர் நெறி,** சொல்லியல், முத்துப் பதிப்பகம், மதுரை, 1977.

24. ச. சாம்பசிவன், 'உரிச்சொல்', **இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1.**

25. வ. ஜெயதேவன், **தமிழ் அகராதியியல்,** சென்னை, 1977.

26. செ.வை. சண்முகம், **இலக்கண உருவாக்கம்,** மணிவாசகர் நூலகம், 1994.

27. மு. சண்முகம் பிள்ளை, **தமிழ்-தமிழ் அகராதி,** சென்னை.

# மொழியியல் கோட்பாட்டுப் பின்னணியில் வழூ

கி. அரங்கன்

---

தொல்காப்பியம் தமிழில் கிடைக்கின்ற நூல்களில் காலத்தால் முந்தையது.[1] இது மொழியின் அமைப்பை மட்டும் விளக்கும் நூல் அல்ல. மொழியின் பயன்பாடு பற்றியும் இது பேசுகிறது. மொழியின் அமைப்பு குறித்து மட்டும் கூறும் இலக்கண அறிவை விவரிக்க எழுந்த முயற்சி அன்று இது. மொழியை - குறிப்பாக, சொல்லை எவ்வாறு வாக்கியத்தில் பயன்படுத்துவது என்பது குறித்தும் வாக்கியங்களை எவ்வாறு உரைக்கோவையில் (Discourse) பயன்படுத்துவது என்பது குறித்தும் எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும் பேசுவது தொல்காப்பியத்தின் குறிக்கோள்களுள் ஒன்றாக அமைந்துள்ளது. மொழி அறிவை (Knowledge of Language) விவரிப்பது அல்லது விளக்குவது என்பது மட்டும் தொல்காப்பியத்தின் குறிக்கோளாக அமைந்திருக்க வாய்ப்பில்லை. மொழி பற்றிய விவர அல்லது விளக்க அறிவு இன்னொரு அல்லது பரந்த குறிக்கோளின் பகுதியாக அமைந்துள்ளது. மொழியைப் பயன்படுத்துவதற்கு மொழி பற்றிய, விவர அறிவு தேவைப்படுகிறது.

மொழி விவரிப்பில் பல்வேறு குறிக்கோள்கள் பின்னணியாக அமையலாம். இன்றைய மொழியியலில் தோன்றிய இலக்கணங்களின் கோட்பாட்டுப் பின்னணியைப் பார்க்கும்பொழுது இது நன்கு புலப்படும்.

பொதுவாக, மொழியின் இயல்பையும் அமைப்பையும் அறிந்து கொள்ள முயற்சி செய்வதுதான் மொழியியலின் குறிக்கோள் என்று மொழியியலார் கூறுவார்கள். மொழி சமூகத்தின் விளைபொருள் (Product of Society) என்று நினைப்பவர்கள் மொழியை விவரிப்பதற்கும் மொழி வரலாற்றின் விளைபொருள் (Product of History) என்று நினைப்பவர்கள் மொழியை விவரிப்பதற்கும் மொழி மனித இனத்தின் (Product of Human Mind) விளைபொருள் என்று எண்ணுபவர்கள் மொழியை விவரிப்பதற்கும் வேறுபாடு உண்டு.

நம்முடைய மரபிலக்கணங்கள் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக்கொண்டவர்களுக்காக எழுதப்பட்டிருக்கலாம். இங்கு இலக்கியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எள்ளினின்று எண்ணெய் பிழிபடுவது போல இலக்கியங்களின் வளத்தினின்று வெளிப்படுவது இலக்கணம். இது எல்லா நாடுகளுக்கும் பொருந்த வேண்டும் என்பது இல்லை. இந்தியாவிற்கு - குறிப்பாகத் தமிழுக்கும் சமஸ்கிருதத்திற்கும் இது பொருந்தி வரலாம். இந்து மதத்தின் பின்னணியில் இன்னொரு கருத்தோட்டமும் முக்கியமானது. புனிதம்/ மாசு அல்லது தூய்மையற்றது (Purity vs Pollution) என்ற கருத்தோட்டமும் முக்கியமானது. இது மதத்திலிருந்து மொழிக்கு வந்த கருத்தியல்.

வேதங்கள் புனிதமானவை; அவற்றின் புனிதம் உச்சரிப்பிலும் மொழியைப் பயன்படுத்துவதிலும் பாதுகாக்கப்படவேண்டும். ஆகையால் சமஸ்கிருத இலக்கணத்தில் உச்சரிப்பியலும் அதை விவரிக்கின்ற ஒலியியலும் முக்கியத்துவம் பெற்றன. எழுத்துகள் உருவாக்கப்பட்டு இலக்கியங்களும் இலக்கணங்களும் படைக்கப்பட்டாலும் தொழில்நுட்பம் அதிகமாகவும் பரவலாகவும் வளராத காலத்தில் இலக்கிய இலக்கணக் கல்வி வாய்மொழி நிலையில் பெரும்பான்மையாக அமைந்திருந்தது. இலக்கிய இலக்கணங்களில் பிரதிகள் மாற்றங்களுக்கு உட்படாமல் வாய்மொழி நிலையில் பரவ வேண்டிய சூழல் இருந்தது. ஆகையால் கேட்டலும் ஓதுதலும் கல்வியில் முக்கியத்துவம் பெற்றன.

மதத்தோடு தொடர்புகொண்ட வேதங்களுக்குச் சமஸ்கிருத இலக்கணம் முக்கியத்துவம் கொடுக்க இலக்கியங்களுக்குத் தமிழிலக்கணம் முக்கியத்துவம் கொடுத்தது. இலக்கியச் செய்யுள்களைப் பாடுதல் மட்டும் முக்கியம் அன்று. இலக்கியங்களைப் புரிந்துகொள்வதற்கும் அவற்றைப் படைப்பதற்குரிய ஆற்றலை உருவாக்குவதற்கும் இலக்கணம் உதவவேண்டும் என்பதும் குறிக்கோளாக அமைந்திருக்கலாம். இலக்கியப் புரிதலும் உருவாக்கலும் என்பது

இலக்கியங்களின் இயல்பையும் வகைகளையும் புரிந்து கொள்வதோடு அவற்றில் கையாளப்பட்டுள்ள மொழியின் அமைப்பையும் பயன்பாட்டையும் புரிந்து கொள்வது என்பதும் ஆகும்.

மேலே குறிப்பிட்டுள்ள மொழியியல் கோட்பாட்டுப் பின்னணியைப் பின்புலமாக வைத்துக் கொண்டு தொல்காப்பிய சொல்லதிகாரத்தின் கிளவியாக்கத்தை நாம் அணுகுவோம். அதிலும் குறிப்பாக **வழு** என்ற கருத்தை ஒட்டி உறவுடைய **வழுவற்க, வழுவமைதி** ஆகிய கருத்துக்களையும் விளங்கிக்கொள்ள இங்கு நாம் முயற்சி செய்வோம். இந்த அணுகுமுறை குறுகிய பார்வை உடையதாக அமைந்தாலும் முதல் கட்ட ஆய்வாக நாம் இதனைப் பார்க்க விரும்புகிறோம். **வழு** என்ற சொல்லை நாம் ஒரு கலைச்சொல்லாகப் பார்க்கவேண்டும். **தவறு** (Error) என்ற மொழியியல் கலைச்சொல்லோடு மட்டும் மேலெழுந்த வாரியாக ஒப்பிட்டுவிட முடியாது. பொதுவாக, தவறுகளையும் திரிபுகளையும் (Deviations) நீக்கி, செம்மையான வாக்கியங்களை உருவாக்க இந்த அதிகாரம் - கிளவியாக்கம் - உதவுகிறது என்று கூறுவார்கள். மேலும் இதைப் பற்றி விவரிப்பதற்கு முன் **வழு** என்ற சொல்லும் தொடர்புடைய பிற சொற்களும் தமிழ்ப் பேரகராதியில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்று நாம் முதலில் பார்ப்போம்.

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ப் பேரகராதி தொகுதி 6 (ப.3548) இச்சொற்களைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளது.

> வழு, n. வழுவு- 1. Error, mistake, failure, fault, lapse; தவறு. 2. Damage, loss; கேடு. 3. Sin; பாவம். 4. Scandal, ill-repute; பழிப்புரை. 5. (Gram.) Solecism, impropriety in language; deviation from rule திணை பால் முதலியன தத்தம் இலக்கண நெறி மயங்கி வருவதாகிய குற்றம்.

**வழு** என்ற பெயரிலிருந்து **வழுவமை** என்ற வினை வருவிக்கப் படுகிறது. **வழுவமை** என்ற சொல்லிலிருந்து **வழுவமைதி** என்ற பெயர்ச்சொல் வருவிக்கப்படுகிறது.

> வழுவமைதி, n.(Gram.) Sanctioned deviation from grammatical rules, as in tense, person, gender; recongised anomaly; இலக்கண வழுவாயினும் அமைக என்ற கொள்ளுகை (தொல். சொல். 41, சேனா)

வழு எழுவகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை திணை, பால், மரபு, செப்பு, வினா, இடம், காலம் என்பன.

பல்வேறு வழுக்களை ஆராயும் முன் வழு என்பது குறித்து முதலில் சிறிது ஆராய்வோம். வழு என்பதைத் திரிபு (Deviation) என்ற பொருளில் முதலில் பொருத்திப் பார்ப்போம். நியமம் (Norm) என்றால் என்ன பொருள் கொள்கிறோம்? இங்கு நியமம் என்பது மொழிசார் சூழலையும் (Linguistic context) மொழிசாரா சூழலையும் (Non-linguistic context) குறிக்கிறது. ஒவ்வொரு சமூகமும் தன்னைச் சுற்றியுள்ள உயிர்களையும் பொருள்களையும் தனக்குரிய காரணங்களின் அடிப்படையில் வகைப்படுத்துகிறது. தமிழ்ச் சமூகம் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை இருவகையாகப் பிரிக்கிறது. அவை உயர்திணை (மக்களைக் குறிப்பன்வ) என்றும் அஃறிணை (மக்களைத் தவிர்த்த பிற பொருள்கள்) என்றும் பிரிக்கப்படுகின்றன. தமிழில் வழங்கப்படுகிற சொற்கள் இவ்விரு திணைகளையும் சுட்டுகின்றன. உயர்திணை மேலும் ஆண்பால், பெண்பால், பலர்பால் என்றும் அஃறிணை ஒருமை, பன்மை என்றும் பிரிக்கப்படுகின்றன.

சூத்திரங்கள் 488-492 மேலே சுட்டியுள்ள வகைப்பாட்டைக் குறிப்பிடுகின்றன.[2] இவ்வகைப் பாடு பொருண்மையியல் (Semantics) அடிப்படையில் மட்டும் அல்ல இரு திணை ஐம்பால் வகைப்பாட்டைச் சுட்டக் கூடிய ஒட்டுகள் (affixes) வினையோடு வருகின்றன. எண்ணையும் (Number) பாலையும் (Gender) குறிக்கின்ற ஒட்டுகள் பெயரோடும் வினையோடும் வரும்.[3] அவை தம்முள் ஒத்திருக்கவேண்டும் என்பதைச் சூத்திரம் 495 கூறுகிறது. இவை ஒன்றோடு ஒன்று முரண்படக் கூடாது. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் வழு வாக்கியங்கள் என்று கருதப்படுகின்றன.

(1) * அவன் வந்தாள்

(2) * அவள் அம்மாவைப் பார்த்தான்

(3) * மரங்கள் விழுந்தது

இத்திரிபு வாக்கியங்களில் பொருண்மையியல் விதி மீறப்பட்டுள்ளதா அல்லது தொடரியல் விதி மீறப்பட்டுள்ளதா என்பது குறித்த சர்ச்சைக்குள் இப்பொழுது நாம் இறங்கவில்லை.[4] இவை திரிபு வாக்கியங்கள்; தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களால் இவை ஒத்துக்கொள்ளப்படுவதில்லை. இங்குக் கூறப்பட்ட விதி விலக்கின்றிப் பின்பற்றப்படவேண்டியது. இவ்விடங்களில் வழுவற்க

என்பது பொருத்தமாக அமையும். மேலே சுட்டிய வாக்கியங்களை (1-3) இலக்கணத் தவறான வாக்கியங்கள் என்று நாம் குறிப்பிடலாம். ஆக்க முறை இலக்கணம் (Generative Grammar) கூறும் வழு வாக்கியங்களுடன் (Ungrammatical sentences) இவற்றை ஒப்பிட்டுக் கூறலாம். இவ்வாக்கியங்களையும் நாம் திரிபு வாக்கியங்கள் (Deviant sentences) என்று தொடர்ந்து கூறுவோம்.

வழு என்பதைப் புரிந்துகொள்ள கருத்தியல் சூழல் (Ideal situation) பற்றிய தெளிவு நமக்குத் தேவைப்படுகிறது. பின்வரும் எடுத்துக்காட்டுகள் மூலம் நாம் இக்கருத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்வோம். சூத்திரம் 506, பெயர்கள் என்ன பால் என்று தெளிவு பெறாத பொழுது பன்மையில் கூறவேண்டும் என்று குறிப்பிடுகிறது.

(4) ஆண் மகனோ? பெண் மகனோ? அங்குத் தோன்றுவர்.

(5) ஒன்றோ பலவோ அங்குப் புகுந்தன.

வாக்கியங்கள் (4) இலும் (5) இலும் உள்ள வினைகளுடன் பலர் பாலைக் குறிக்கும் -அர் /- ஆர் என்ற ஒட்டும் அஃறிணைப் பன்மையைக் குறிக்கும் -அ என்ற ஒட்டும் வந்துள்ளன. வாக்கியம் (4) இல் முதல் சொல் ஆண் பால் ஒருமையாகவும் இரண்டாம் சொல் பெண்பால் ஒருமையாகவும் வருகின்றன. ஆர் என்ற ஒட்டு ஆண்பால் ஒருமையுடனும் வராது; பெண் பால் ஒருமையுடனும் வராது. வினையுடன் வரும் -ஆர் ஒட்டு வாக்கியத்தில் பயன்படுத்தப்படும் பெயர்ச் சொற்களின் வகையைச் சார்ந்து வரவில்லை. வழுவுக்கு அமைதி அளித்து இவ்வாக்கியத்தை ஏற்றுக்கொண்டாலும் அடிப்படையில் இவ்வாக்கியம் வழு வாக்கியம். வழு என்ற கருத்து இங்கு வாக்கிய அமைப்பில் நேர்ந்த பிழை என்ற கருத்தை வெளிப்படுத்தவில்லை. இன்றைய மொழியியல் பின்னணியில் வாக்கியங்கள் (4, 5) இலக்கணப் பிழையானவை என்று கருதப்படுவது இல்லை. இவை தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர் இலக்கண வாக்கியங்கள் என்று ஏற்றுக் கொள்பவை. இவ்வாக்கியங்கள் வழு எனக் குறிக்கப்படுவதற்கு மொழி அமைப்பு சார்ந்த காரணங்கள் இல்லை. கருத்தியல் சூழலுக்கு ஒத்த தர்க்க நிலையிலிருந்து இவ்வாக்கியங்கள் திரிபாக உள்ளன. இங்கு மொழி தாண்டிய தர்க்க நிலைத் திரிபு அடிப்படையாக உள்ளதுபோல் தோன்றுகிறது.

வழுக்களை இருவகைகளாகப் பிரிக்கலாம்; (i) வழுவற்க என்ற நிலையில் ஏற்றுக்கொள்ளப்படாத வழுக்கள்; (ii) வழுக்களாக இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒத்துக்கொள்ளப்பட்டவை.

இக்கருத்தை மாற்றிலக்கணத்தில் கூறப்படுகின்ற இலக்கண வழு வாக்கியங்கள் என்பதோடு முழுக்க முழுக்க ஒப்பிட முடியாது.

தற்காலத் தமிழில் செயல்படாவிட்டாலும் பழந்தமிழில் செயல்பட்ட விதிகளைக் குறிப்பிடும் சூத்திரங்களைப் பார்ப்போம். சூத்திரங்கள் 511-513 தா என்ற வினையின் சேருமிட உறவும் (Goal Relationship) வா என்ற வினையின் சேருமிட உறவும் தன்மையாகவும் முன்னிலையாகவும் அமையும். செல் என்ற வினையின் சேருமிட உறவும் கொடு என்ற வினையின் சேருமிட உறவும் படர்க்கையாக அமையும்.

(6) கண்ணன் எனக்கு/உனக்கு ஒரு பேனா தந்தான்

(7) *கண்ணன் அவனுக்கு ஒரு பேனா தந்தான்

(8) கண்ணன் அவனுக்கு ஒரு பேனா கொடுத்தான்

(9) *கண்ணன் உனக்கு/எனக்கு ஒரு பேனா கொடுத்தான்[5]

வாக்கியங்கள் (6)உம், (8)உம் மேலே கூறிய சூத்திரங்களை ஒட்டி அமைந்துள்ளன. ஆனால் வாக்கியங்கள் (7)உம், (9)உம் சூத்திரங்களில் கூறப்பட்டவைக்கு மாறாக அமைந்துள்ளன. இவை இலக்கண வழு வாக்கியங்கள் என்று கருதப்படவேண்டியவை. ஆனால் தற்காலத் தமிழில் மாற்றம் ஏற்பட்டு விட்டதால் கொடு என்ற வினையையும் தா என்ற வினையையும் மேலே கூறியபடி நாம் பயன்படுத்துவதில்லை. வாக்கியங்கள் (7)ஐயும் (9)ஐயும் இப்பொழுது இலக்கண வழு வாக்கியங்களாக நாம் கருதுவதில்லை. தா என்ற வினையை ஒப்பிடக் கொடு என்ற வினை அதிகமாகவும் பரவலாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இரண்டாவது வகை வழுவமைதி. இவை ஏற்றுக்கொள்ளப்பட்ட திரிபு வாக்கியங்களைக் குறிக்கும். முதலாவதாக வினா வழுவையும் செப்பு வழுவையும் நாம் பார்ப்போம். சூத்திரம் 496 வினாவும் செப்பும் முறை தவறாமல்- கருத்தியல்/தர்க்க நிலையில் மாறாமல் - அமைய வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. கருத்தியல் நிலையில் பேசுவோன் கேட்போனிடமிருந்து செய்தியை அறியவே வினா எழுப்புகிறான். கேட்போனிடமிருந்து பெறுகிற செய்தி உண்மையாகவே பேசுவோனுக்குத் தெரியாது என்பது கருத்தியல் நிலை. இங்குக் குறிப்பிடுகின்ற சூழல் கருத்தியல் நிலையைச் சார்ந்தது. இந்தச் சூழலில்தான் வினா எழுப்பப்படும் செயலும் செய்தியைச் செப்புகின்ற செயலும் நடைபெறுவதாகக் கருதுகிறோம். நடைமுறைச் சூழல்

வெவ்வேறாக இருக்க வாய்ப்புண்டு. சான்றாக, பேசுவோனுக்குச் செய்தி தெரிந்திருந்தாலும் தன்னுடைய சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள வினா எழுப்புதலும் உண்டு. பேசுவோன் பொதுவாகச் செய்தியைத் தெரிந்துவைத்திருந்தாலும் சிறப்பான செய்தியைப் பெறும் பொருட்டுச் சில சூழல்களில் வினா எழுப்புதலும் உண்டு. வினா பல்வேறு சூழல்களில் எழுப்பப்பட்டாலும் கருத்தியல் நிலை என்பது அறியா நிலையில் செய்தியைப் பெற வினாவை எழுப்புவதுதான். தர்க்க நிலையிலிருந்து பார்க்கும்பொழுது கருத்தியல் நிலைச்சூழல் என்று குறிப்பிட்டதைத் தவிர்த்து வேறு சூழல்களில் வினா பயன்படுத்தப்பட்டால் அது வழுவாகக் கருதப்படும். வேறு சூழல்களில் பயன்படுத்தப்படும் வினாக்கள் திரிபாகக் கருதி ஏற்றுக்கொள்ளப்படும்.

சூத்திரம் 515 **யாது, எவன்** ஆகிய இரு வினாச் சொற்களுக்குள் **யாது** என்ற சொல் புதிய செய்தியைப் பெறுவதற்கு மட்டுமன்றி, செய்தியின் சிறப்புத் தன்மையைப் பெறும் வகையில் ஐயம் தீரவும் பயன்படுத்தப்படும்.

(10) *இம் மரங்களில் கருங்காலி யாது?

(11) *இந்தப் புத்தகங்களில் சிறந்தது யாது?

இவ்வாக்கியங்கள் வழுவானவை என்று கூறப்பட்டாலும் வழுவமைதி என்பதன் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. மேலே குறிப்பிட்ட சூழலில் **யாது** என்ற வினாச்சொல்லைக் கொண்டுள்ள வாக்கியம் ஒத்துக்கொள்ளப்படுகிறது. இன்றைய மொழியியலில் குறிப்பிட்ட சில மொழியியலாளர்கள் வாக்கியங்கள் பயன்படுத்தப்படும் சூழல்களின் பொருத்தத்தை ஆராய்கிறார்கள். இன்னும் தெளிவாகச் சொன்னால். வாக்கியங்கள் பயன்படுத்தப்படும் சூழல்களில் உள்ள பொருத்தமுடைக் கட்டுப்பாடுகளை (Appropriateness Conditions) ஆராய்கிறார்கள். பொருத்தமுடைக் கட்டுப்பாடு என்பது எத்தகைய சூழல்களில் எத்தகைய வாக்கியங்களைத் தெரிவு செய்கிறார்கள் என்பதை விவரிப்பது. வாக்கியத் தெரிவுக்கும் அதைப் பயன்படுத்துகின்ற சூழலுக்கும் உறவு/கட்டுப்பாடு இருக்கிறது.

## வினா வழு

வினா வடிவத்தில் உள்ள ஒரு வாக்கியம் செப்பு வாக்கியமாகச் சில சூழல்களில் பயன்படுத்தப்படுகிறது. இது வழுவாகக் கருதப்படுகிறது. இங்குப் பேசப்படுகின்ற வாக்கியம் கேட்போனிடமிருந்து வினா வடிவத்தில் வருகிறது. அவ்வாறு வருகின்ற வினா வடிவ வாக்கியம்

வினாவாகச் செயல்படாமல் செப்பு வாக்கியமாகச் செயல்படலாம். சான்றாக வாக்கியங்கள் (12)ஐயும் (13)ஐயும் காண்போம்.

(12) கே : நீ சாப்பிட்டியா?

(13) ப : நான் என்ன விரதமா?

வாக்கியம் (12)ஐப் பயன்படுத்தும் பேசுவோனுக்குக் கேட்போனிடமிருந்து கருத்தியல் நிலையில்

(14) சாப்பிட்டேன்

(15) இல்லை; சாப்பிடவில்லை

ஆகியவற்றுள் ஒன்று பதிலாக அமையும். வினாவுக்கும் செப்புக்கும் இடையிலான கருத்தியல் உறவு இது. கருத்தியல் நிலையில் பேசுவோன் ஒரு புதிய செய்தியை அறிய விரும்பி வினா வடிவத்தில் வாக்கியத்தை உருவாக்கும் பொழுது கேட்போன் அதற்குரிய செய்தியைக் கூற்று வாக்கிய வடிவில் (Statement/ Declarative Sentence) வைப்பான் என்று எதிர்பார்க்கப்படும். ஆனால் வாக்கியங்கள் (12) உம் (13)உம் கருத்தியல் நிலையிலிருந்து மாறுபட்டிருக்கிறது. இங்குக் கூற்று வாக்கியத்திற்குப் பதிலாக வினா வாக்கியமே (14) பதிலாக வந்துள்ளது. கருத்தியல் நிலையிலிருந்து பார்க்கும்பொழுது திரிபான வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் முதல் நிலையில் இது வழு. ஆனால் இத்தகைய வாக்கியங்கள் இத்தகைய சூழல்களில் பயன்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்வதால் வழுவமைதியாகக் கருதப்படுகிறது. வினா வடிவில் வருகின்ற எல்லா வாக்கியங்களும் ஒத்துக்கொள்ளப்படுவதில்லை. சான்றாக, மேலே குறிப்பிட்ட சூழலில் வாக்கியம் (12)க்குப் பதிலாக வாக்கியம் (16) வந்தால் ஒத்துக்கொள்ளப்படுவதில்லை.

(16) *படித்தேனா?

வாக்கியம் (16) பதிலாகக் கூறப்பட்டாலும் வழுதான். ஆனால் இது பதிலாக ஒத்துக்கொள்ளப்படுவதில்லை. வினா வடிவ வாக்கியமாக இருந்தாலும் தெரிவு செய்யப்பட்ட வாக்கியமே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பொருத்தமுடைக் கட்டுப்பாடுகள் என்பது சூழலுக்கும் தெரிவு செய்யப்பட்ட வாக்கியத்திற்கும் இடையிலான உறவைத் தீர்மானிக்கிறது என்பது வெளிப்படுகிறது. ஆனால் தற்கால மொழியியல் (குறிப்பாக அமைப்பு மொழியியல் பின்னணியிலும் மாற்றிலக்கண மொழியியல் பின்னணியிலும்) பின்னணியில் வாக்கியம் (16) திரிபற்ற இலக்கண

வாக்கியம். மொழியியலில் கூறப்படும் பிழை அல்லது தவறு என்பதோடு மட்டும் வழு என்ற கருத்தை ஒப்பிட்டுவிட முடியாது.

## செப்பு வழு

செப்பு வழு வினாவோடு தொடர்புடையது. முன்பு குறிப்பிட்டதுபோல் வினா எழுப்பப்படும் பொழுது குறிப்பிட்ட செய்தியை அளிக்கும் கூற்று வாக்கியம் வருவதுதான் கருத்தியல் நிலை. அவ்வாறன்றி, சில சூழல்களில் நேரடியான செய்தியை அளிக்கும் செப்பு வாக்கியம் இல்லாமல் அதனை ஊகிக்கும் முறையில் வேறு வாக்கியத்தைப் படைப்பது திரிபு நிலையில் எழுந்த வழுதான்.

(17) கண்ணா, படித்தாயா?

(18) * தலை வலிக்கிறது

வாக்கியம் (18) கேட்கப்பட்ட வினா வாக்கியமான (17)க்கு உரிய விடை அல்ல. கேட்கப்பட்ட வினா வாக்கியம் (18)க்கு

(19) படித்தேன்

(20) படிக்கவில்லை

உரிய செப்பு வாக்கியங்கள். கருத்தியல் நிலையில் கூறப்படவேண்டிய வாக்கியம் (19) அல்லது (20). ஆனால் வாழ்வியல் சூழலில் வாக்கியம் (18) போன்றவை பதிலாகக் கொடுக்கப்படுகின்றன. இது திரிபு வாக்கியம் என்றாலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது; வழுவமைதி என்பதன்கீழ் அடக்கப்படுகிறது. உரிய விடை (18)இன் மூலம் ஊகிக்கப்படுகிறது.

விடை நேரடியாக அன்றி வேறு வகையிலும் அமையலாம் என்பதைத் தொல்காப்பியம் கூறுகிறது. அல்லது இல் என்று தொடரும் மூன்று சூழல்களில் வரலாம்.

(21) குறிஞ்சி மலர் நாவல் இருக்கிறதா?

என்ற கேள்விக்கு

(22) *கரித்துண்டு அல்லது இல்லை

என்ற வாக்கியத்தையும்

(23) * இந்த நாவல் அல்லது இல்லை

என்ற வாக்கியத்தையும்

(24) * இவை அல்லது இல்லை

என்ற வாக்கியத்தையும் விடையாகத் தரலாம். இவை அனைத்தும் கருத்தியல் நிலையிலிருந்து திரிபான வாக்கியங்கள். அன்றாட வாழ்க்கைச் சூழல்களில் ஒத்துக் கொள்ளப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுவதால் இவை வழுவமைதியாகக் கருதப்படுகின்றன.

**பால் வழு**

பால் என்பது எண்ணையும் (Number) ஆண்/பெண் (Gender) என்ற பிரிவையும் குறிக்கும். இதன் பொருள் பகுப்பு என்பதாகும். பால் வழு என்பதன் கீழ் ஆண்பால்/பெண் பால் ஆகிய பிரிவின் திரிபும் ஒருமை/பன்மை ஆகிய பிரிவின் திரிபும் பேசப்படும். சில சான்றுகளைக் கொண்டு இதை விளக்க முயற்சி செய்வோம்.

(25) யாம் வந்தோம்

(26) நீங்கள் வந்தீர்கள்

(27) அவர் வந்தார்

சூத்திரம் 510ஐக் கொண்டு விளக்குவோம். ஒருவரைச் சுட்டுவதற்குச் சில இடங்களில் பன்மையைச் சுட்டக் கூடிய சொல்லைப் பயன்படுத்துகிறோம். வாக்கியம் (25)இல் **யாம்** என்ற பன்மையைக் குறிக்கும் சொல் ஒருமையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இங்கு ஒருமையைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்லாகிய **நான்** என்பது வந்திருக்க வேண்டும். அதே போல் வாக்கியம் (26)இலும் வாக்கியம் (27)இலும் முறையே பன்மையைக் குறிக்கும் **நீங்கள்** என்ற சொல்லும் '**அவர்** என்ற சொல்லும் வந்துள்ளன. ஆனால் உண்மைச் சூழலில் இவை ஒருமையையே குறிக்கின்றன. இச்சொற்களால் சுட்டப்படுகின்றவர்கள் உயர்வானவர்களாகக் கருதப்படுகிறார்கள். கருத்தியல் நிலையில் ஒருமையைச் சுட்ட ஒருமைச்சொல்லும் பன்மையைச் சுட்ட பன்மைச்சொல்லும் பயன்படுத்தப்பட வேண்டும். வாழ்வியல் சூழலில் இவை பின்பற்றப்படாமல் பால் குறித்த சொற்கள் மாறிவருகின்றன. இவ்வாறு பயன்படுத்துவதும் வழுதான். ஆனால் இவை வழுவாக இருப்பினும் இச்சொற்களால் சுட்டப்படுபவர் உயர்ந்தவராக இருப்பதால் வழுவமைதி என்ற நிலையில் ஏற்றுக் கொள்ளப்படும். மேலும் இது வழக்கில் மட்டும் ஒத்துக்கொள்ளப்படும். எந்தச் சூழலில் இவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பது தெளிவுப்படுத்தப்படுகிறது. ஆனால் இவை இலக்கண மருங்கில் ஏற்புடையவை அல்ல.

## மரபு வழு

பெயரும் (Noun) பதிலிடு பெயரும் (Pronoun) வினையுடன் ஒரு வாக்கியத்தில் வரும்பொழுது பெயர் முன்னரும் அதனைத் தொடர்ந்து பதிலிடு பெயரும் வரும். பதிலிடு பெயர் பெயருக்கு முன்னால் வராது. இது மரபுவழி விதி. இம்மரபுவழி விதி சில இடங்களில் மீறப்பட்டுத் திரிபாகிறது. ஆனால் சில இடங்களில் - குறிப்பாகச் செய்யுள் சூழலில் இம்மரபு வழி விதி மீறப்படுவது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது செய்யுளுக்கு மட்டும் என்று கட்டுப்படுத்தப்படுகிறது. வழக்கில் இது இல்லை. இங்குச் சுட்டப்பட வேண்டியது கருத்தியல் நிலையோடு நெருக்கமாக வழக்கு அமைந்துள்ளது. ஆனால் செய்யுள் திரிபை ஏற்று வழுவமைதிக்குள் அடக்குகிறது.

இன்னொரு சான்றையும் பார்ப்போம். ஒரு தொடரில் பண்பையும் (Quality) பகுதியையும் (Part) முதலையும் (Whole) சுட்டுகின்ற சொற்கள் தொடர்ந்து வரும்பொழுது கீழே குறிப்பிட்ட முறையில் வருகின்றன.

பண்பு + பகுதி + முதல்

(28) செங் + கால் + நாரை

இது மரபுவழி விதி. ஆனால் இவ்வரிசை முறை செய்யுளில் மீறப்படுகிறது. இவ்விதி மீறிய திரிபு செய்யுளில் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வழக்கில் இத்திரிபு அனுமதிக்கப் படுவதில்லை. வழக்கும் கருத்தியல் நிலையும் ஒத்துள்ளன. வழுவமைதி செய்யுளுக்கு மட்டும்தான்.

## முடிவுரை

தொல்காப்பிய மொழி விவரிப்பின் கோட்பாட்டைப் புரிந்து கொள்ளத் தொல்காப்பியம் முழுவதையும் பார்க்க வேண்டும். தொல்காப்பிய மொழி விவரிப்பின் கோட்பாட்டை விளக்க அகத்தியலிங்கம், சண்முகம், பாலசுப்பிரமணியம், கோதண்டராமன் போன்ற அறிஞர்கள் பலர் முயற்சி செய்துள்ளார்கள். இதை மனதில் இருத்தி வழு, வழுவமைதி போன்ற கருத்துகளை ஆராய்கிறோம். தொல்காப்பியம் தமிழ் மொழியின் ஒலியனியல், உருபனியல், தொடரியல் ஆகியவற்றின் அமைப்பை விவரிப்பதோடு மொழியின் பயன்பாட்டையும் விவரிக்கிறது. வழு என்ற கருத்தை இலக்கண வழு வாக்கியம் என்ற

மொழியியல் கருத்தோடு மட்டும் பொருத்திவிட முடியாது. இதனைத் தாண்டி, கருத்தியல் நிலையிலிருந்து திரிபு வாக்கியங்களைப் பற்றியும் பேசுகிறது. வழுவமைதி ஏற்றுக் கொள்ளப்பட்ட திரிபு வாக்கியங்களையும் அவை பயன்படுத்தப்படும் வாழ்வியல் சூழல்களையும் விவரிக்கிறது. சூழல்களைக் குறிப்பிடுவதும் அச்சூழல்களில் பயன்படுத்தப்படும் தெரிவு வாக்கியங்களைக் குறிப்பிடுவதும் மொழிப் பயன்பாட்டின் பொருத்தமுடைக் கட்டுப்பாடுகளைச் சார்ந்ததாகும். ஆகையால் வழுவமைதி மொழிப் பயன்பாட்டுக் கோட்பாட்டுடன் தொடர்புடையது என நாம் கருதலாம்.

## குறிப்புகள்

1. தெ.பொ. மீனாட்சிசுந்தரன் (Meenakshisundaran 1965:51) தொல்காப்பியம் சங்க இலக்கியத்திற்கு முந்தியது என்று கருதுகிறார். தொல்காப்பியம் குறிப்பிடும் பல மொழிக்கூறுகள் சங்க இலக்கியங்களிலும் பின்னர் வந்த இலக்கியங்களிலும் காணப்படவில்லை என்ற காரணங்களினால் மேலே குறிப்பிட்டுள்ள முடிவுக்கு வருகிறார்.

2. சூத்திரங்களின் எண் சுப்பிரமணியன் (1998) எழுதிய தொல்காப்பியம் தெளிவுரை என்ற நூலை ஒட்டிக் கொடுக்கப் படுகின்றது.

3. இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றின் நின்றிசைக்கும் பதினோர் எழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே (சூத். 494)

வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடாதம் மரபினவே. (சூத். 495)

4. ஆங்கிலத்தில்

* I are tall

என்ற வாக்கியம் தொடரியல் அடிப்படையில் வழுவானது என்று லேக்காஃப் போன்றவர்களும் பொருண்மை அடிப்படையில் வழுவானது என்று சோம்ஸ்கி போன்றவர்களும் கருதினார்கள் (Lakoff:1974).

5. * என்ற குறியீடு மாற்றிலக்கணத்தில் இலக்கண வழு வாக்கியங்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. இங்கு நாம் திரிபு வாக்கியங்களைக் (Deviant Sentences) குறிப்பிடப் பயன்படுத்துகிறோம்

## பார்வை நூல்கள் & கட்டுரைகள்

1. சுப்பிரமணிய சாஸ்திரி, பி.எஸ்., தொல்காப்பியம் சொல்லதிகாரம் மொழிபெயர்ப்பு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், இரண்டாம் பதிப்பு (1979).

2. சுப்பிரமணியம், ச.வே., தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

3. தொல்காப்பியம் மர்ரே & கோ., சென்னை (1960).

4. தமிழ்ப் பேரகராதி, சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை, மறுபதிப்பு (1982).

5. தொல்காப்பியம் சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

6. Meenakshisundaram, T.P., **A History of Tamil Language** Deccan College, Pune, 1965.

7 Lakoff, G., 'Interview with Harman Parret' XI **Berkelay Studies in syntax and semantics** Vol.1. (eds.) Charles fillmore, Gerorge Lakoff, and Robin Lakoff, Univ.of California, 1974.

# தொல்காப்பியரின் பொருண்மையியல் கோட்பாடு

க. பாலசுப்பிரமணியன்

---

## 1. முன்னுரை

முந்தைய தொல்காப்பிய ஆய்வுகள் மொழிப் பொருண்மையியல் செய்திகள் சொல்லதிகாரத்தில் மட்டுமே பேசப்படுவதாக ஆராய்கின்றன (ஓ. நோ. இராமசாமி 1978, பாலசுப்பிரமணியன், 1985). தொல்காப்பியப் பொருளதிகாரம், அப்பெயர் பெற்றிருப்பினும் பொருண்மையியல் செய்திகளைப் பேசுவதாகக் கருதப்படவில்லை. தொடக்க நிலை ஆய்வாளர் அது தமிழர் தம் அக, புற வாழ்வியல் செய்திகளைப் பேசுவதாகக் கருதினர். மேனாட்டு இலக்கியவியல் தாக்கத்தின் அடிப்படையில் தமிழ் இலக்கிய ஆய்வு வளர்ச்சியடைந்தபின் பொருளதிகாரம் இலக்கியவியல் பேசும் நூலாகவே, மேனாட்டு, நம் நாட்டு அறிஞர்களால் (ஓ.நோ. துணைநூற்பட்டியல்) கருதி ஆராயப்பெற்றது. தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் பற்றித் தனிக்கருத்தரங்குகளும் நடத்தப் பெற்றன. அத்தகு கருத்தரங்கு ஒன்றின் ஆய்வு முடிவுகளை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் நூலாகவும் வெளியிட்டது (ஜீன் லாறன்ஸ், பகவதி 1998).

ஆயின், பெரும்பான்மையான ஆய்வாளர் கருத்திலிருந்து வேறுபட்ட கருத்தினை, மொழிப் பொருண்மையியல் நோக்கில் பொருளதிகாரத்தை ஆராய்ந்து, மொழியில் வடிவொழுங்கமைவு

(expression system), பொருளொழுங்கமைவு (content system) என்ற இரண்டினுள் வடிவொழுங்கமைவை எழுத்தும், சொல்லும் பேச, பொருளதிகாரம் ஆராய்வது பொருண்மை அமைவொழுங்கினையே என்ற எடுகோளை 'இலக்கணத்தில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இடம்' என்ற கட்டுரையில் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத் தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் என்ற கருத்தரங்கிலும் பின் வெளியிட்ட நூலிலும் கூறினேன். அக்கட்டுரையிலும் பின் 1999 டிசம்பர் திங்களில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை வெள்ளி விழா நினைவு அறக்கட்டளைச் சார்பில் நிகழ்த்திய **தொல்காப்பியப் பொருளதிகாரம் : மொழிப் பொருண்மையியல் நோக்கு** என்ற மூன்று சொற்பொழிவுகளிலும், நேர்முக, மறைமுகச் சான்றுகள் மூலம் தொல்காப்பியப் பொருளதிகாரம் பேசுவது பழந்தமிழ் மொழியின் பொருளமைப்பையே; இலக்கியவியல் செய்திகளைப் பேசுவது செய்யுளியல் மட்டுமே; அகமும் புறமுமாய்ப் பேசப்படும் செய்திகள் உலகவழக்கின் நிகழ் பொருளாயும் செய்யுளின் பாடு பொருளாயும் அமைவது வழக்கும், செய்யுளும் பழந்தமிழின் பயன்பாட்டுக் களங்கள் என்பதாலேயே; உவமை ஆராயப்படுவதும் இலக்கியத்தில் பயன்படும் அணியாய் அல்ல; பொருண்மையை விளக்கும் கருவியாகவே; அதனாலேயே உவமையின் இலக்கணம், வகைகள் முதலில் அகத்திணையியலிலேயே விளக்கப்பட்டு விடுகின்றன; மெய்ப்பாட்டியல் ஆராய்வது ரசக் கோட்பாடு அல்ல; நகை முதலிய எட்டும், அவை தவிர்த்த உடைமை, இன்புறல் போன்ற பலவுமாகப் பேசப்படுவன அகப் புறப் பொருண்மையியல் நிகழ்வுக் கூறுகளுக்குத் தொடர்புடைய மன உடலியல் கூறுகள்; மரபியல் பேசுவது பொருண்மையியல் அடிப்படையிலான சொற்சேர்க்கைக் கட்டுப்பாடுகள் என விளக்கினேன். இங்கு மொழிப் பொருண்மை என்பது சொற்பொருண்மை அல்ல; அது சொல்லதிகார உரியியலில் பேசப்பட்டுவிடுகிறது. பொருளதிகாரம் ஆராய்வது மொழிக்கு மொழி மாறுபட்டு அமைப்புக் கொள்ளும் மொழிப் பொருண்மையின் முற்றமைப்பே எனக் கூறினேன். இவ்விளக்கமே பொருளதிகார இயல்களின் அமைப்புத்தருக்க முறைக்கு (Oraganizational logic) பொருத்தமுடையதாகும் எனக் காட்டினேன்.

சென்னைப் பல்கலைக்கழக அறக்கட்டளைச் சொற்பொழிவில் தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்திகளை மொழிப் பொருண்மையியல் நோக்கில் மீண்டும் ஆராய்ந்து தொல்காப்பியம் மொழிப் பொருண்மை ஆய்விற்கு ஒரு புதிய விளக்க மாதிரிப்

படிவத்தை வழங்குகிறது என விளக்கினேன். இது இக்கட்டுரையில் மீண்டும் ஆராயப்பட்டு, தொல்காப்பியரின் பொருண்மையியல் கோட்பாடு என்ன என்று கண்டறியும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

## 2. உலகப் பொருண்மையும் மொழிப் பொருண்மையும்

மொழியியலார் மொழி இருவகையான ஒழுங்கமைவுகளை உடையது; ஒன்று வடிவொழுங்கமைவு (expression system), இன்னொன்று பொருள் ஒழுங்கமைவு (content system) என்றும், மொழியின் இலக்கணம் இவ்விரு ஒழுங்கமைவுகளுக்கும் உள்ள உறவை விளக்குவது என்றும் கூறுவர் (Gleason ; 1955 : 206). வடிவொழுங்கமைவு அல்லது வடிவமைப்பிற்கு உரிய செய்திகள் ஒலியின் அல்லது எழுத்தின் அமைப்பு (Phonology), உருபன் அல்லது சொல்லமைப்பு (morphology), தொடர் அல்லது வாக்கிய அமைப்பு (syntax) ஆகிய உட்பகுதிகளைக் கொண்டது. இவற்றுள் சொல்லமைப்பு தொடரமைப்பை வேறுபடுத்தியோ அல்லது ஒன்றாகவோ மொழியியலார் ஆராய்வர். தொல்காப்பியர் ஒலியமைப்பை எழுத்ததிகாரத்திலும் உருபன், தொடரமைப்பை இணைத்துத் தொடரியல் அடிப்படையில் ஒன்றாகச் சொல்லதிகாரத்திலும் விளக்கி விடுகிறார் (ஓ.நோ. பாலசுப்பிரமணியன் 1972, 1976). இனிப் பொருளமைப்புப் பற்றிப் பேசும் பகுதியை மொழியியலார் பொருண்மை இயலில் (Semantics) ஆய்வர். ஆனால், இப்பொருண்மை இயலில் ஆராயப்படும் செய்திகள் என்னென்ன? அதன் அமைப்பு என்ன என்பதில் மொழியியலாரிடையே கருத்து வேறுபாடு உள்ளது. அவற்றை ஆராயுமுன் மொழிப் பொருண்மை (linguisitc meaning) என்பது என்ன என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

மொழியின் வடிவமைப்புக் கூறுகள் அனைத்தும், எழுத்து, உருபன், சொல், தொடர் ஆகியவை, அடையாளக் குறியீடுகளே (symbols), அவை குறிப்பவை உலகப் பொருள்கள் (reality). இங்கே பொருள் என்பது பொருள்களை (things, objects) மட்டுமன்றிச் செயல்கள், உணர்வுகள், சமுதாய அமைப்பு, நம்பிக்கைகள், உறவுகள், கருத்துக்கள் போன்ற மொழி என்ற குறியீட்டு அமைப்பு (symbolic system) குறிப்பிடும் அனைத்தையும் குறிக்கும். மொழிகளின் எழுத்துக்கள், உருபன்கள், சொல்லமைப்பு, தொடரமைப்பு போன்றவை பெருமளவில் வேறுபடுபவை. உலகப் பொருள்களிலும் மணமுறைகள், இறைக்கோட்பாடு, தொன்மங்கள், கால இடச் சூழல் வேறுபாடு (சிற்சில விலங்குகள், பருவநிலைகள், தாவரங்கள்) இவற்றில்

குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருப்பினும் மற்ற அனைத்துப் பொருள்களும் மானிட இனத்திற்குப் பொதுவானவை ஆனால் ஒவ்வொரு மொழியும் உலகப் பொருண்மையை மொழிப் பொருண்மையாகக் காணும் பொழுது வெவ்வேறு அமைப்புடையதாகக் காண்கிறது. அடிப்படையான உடலுறுப்புகள், உறவு முறைகள், வண்ணங்கள் போன்றவை கூட மொழிக்கு மொழி மாறுபட்ட அமைவொழுங்குகளைப் பெற்றுள்ளன. லீச் (1981 : 28) மொழிகள் அனுபவங்களை வகைப்படுத்துவதில் வேறுபடுகின்றன என்று கூறி, அதற்கு எடுத்துக்காட்டாக வண்ணச் சொற்களின் பொருண்மை மொழிக்கு மொழி வேறுபடுவதைக் காட்டுவார். ஆங்கிலத்தில் 11 வண்ணச் சொற்களால் விளக்கப்படும் வண்ண அமைப்பு ஹனுனு என்ற பிலிப்பைன் மொழியில் நான்கே சொற்களால் விளக்கப்பட்டுவிடுகின்றது. மொழிக்கு மொழி மட்டுமன்றி ஒரே மொழியிலும் கூடப் பொருண்மை அமைப்பு காலத்திற்குக் காலம் வேறுபடுவதைத் தமிழ் வண்ணச் சொற்கள் மூலம் அறியலாம். பழந்தமிழில் வெண்மை, கருமை நீலம், செம்மை, பசுமை என்ற நான்கு சொற்களே வழங்கின. பசுமையின் பொருளில் மஞ்சள் அடங்கியிருந்தது என்பதைப் 'பைங்காற் பித்திகம்' (நெடுநல். 40) 'பசும்பொன்' (பெரும். 164) 'பைங்காற் கொக்கு' (நெடுநல். 15) ஆகிய தொடர்கள் காட்டும்.

கருப்பும், நீலமும் முற்றிலும் பிரிந்துணரப்படாமல் உறழ்ந்து வந்தன. 'நெறி மருப்பு எருமை நீல விரும் போத்து', 'இருங்கடல்' போன்றத் தொடர்கள் இதனைக் காட்டும். இன்றைய தமிழில் நீலம், மஞ்சள் ஆகியவை பிரிக்கப்பட்டு, தனி வண்ணச் சொற்களாகப் பயன்படுகின்றன. இவ்வாறே காதல் ஒழுக்கம் மிக உயர்வாகப் புலவரால் பாடப் பெற்ற பழந்தமிழ்காலத்திலும் அது களவாக, பெற்றோர்க்குத் தெரியாமல் மறைத்துச் செய்யப் படுவதாகவே இருந்தது. ஆனால், மேனாட்டில் வயது வந்த பெண்கள் ஆண்களுடன் வெளியில் செல்வது (dating) பெற்றோருக்குத் தெரிந்தே நிகழ்வதும் தன் பெண் ஆண்களுடன் பழகாமல் தனித்து இருந்தால் 'இவளுக்குத் திருமணம் எவ்வாறு நிகழுமோ?' எனத் தாய் கவலைப்படுவதும் மேனாட்டுப் பொருண்மை அமைப்பு. களவு, dating ஆகிய இரண்டும் ஒத்த நிகழ்வுகளாயினும் பொருண்மை நிலையில் வேறுபட்டவை. இவ்வாறு ஒவ்வொரு மொழியும் உலகப் பொருண்மையை வெவ்வேறு அமைவொழுங்கிற்கு உட்படுத்தி உருபன்கள், சொற்கள், தொடர்கள் மூலம் விளக்குவதே அம்மொழிகளின் பொருண்மை அமைப்பாகும்.

## 3. பொருண்மையியல் ஆய்வு வேறுபாடுகள்

பொருண்மையியல் மொழியின் வடிவமைப்பையும், அது குறிக்கும் பரந்துபட்ட பல்வேறு கூறுகளுடைய பேசுவோரின் மனம், சூழல், சமூகம் போன்ற பல்வேறு தாக்கங்களுக்கு உட்பட்ட உலகப் பொருண்மையையும் இணைக்கும் மொழி அமைப்பின் பகுதியாகும். அது கருத்துப் பரிமாற்றம் (communication), மனித மனத்தின் எண்ண ஓட்டம், உணர்வு, கருத்துருவாக்கம் இவற்றோடு தொடர்புடையது. ஒரு மொழி பேசுவோர் அம்மொழி மூலம் அவர் வாழும் உலகை வகைப்படுத்தி உணர்கின்றனர். மொழிப் பொருண்மையியலாரிடை அவர்கள் ஆயும் முறைகளிலும் ஆயும் கூறுகளிலும் வேறுபாடு உள்ளன. எனவேதான் லீச் (1981:IX, X) 'பொருண்மையியல் பெரும்பாலும் திணறடிப்பதாகத் (baffling) தோன்றியிருக்கிறது; ஏனெனில் அது பல அணுகுமுறைகளைக் கொண்டிருக்கிறது; இவ்வெவ்வேறு அணுகுமுறைகள் எவ்வாறு தொடர்புடையன என்பதும் பொருண்மை பற்றி எழுதும் நூலாசிரியர்க்கே தெளிவாக இல்லை . . . . . இந்தக் காரணங்களாலும், பொருண்மையியல் ஆர்வத்தைத் தூண்டும் இயல்புடையது என்பதாலும் இது பல நூல்கள் உருவாவதற்கு இடம் கொடுத்துள்ளது. பொருண்மையியல் (semantics) என்ற தலைப்பில் பல நூல்கள் வந்துள்ளன.......... ஒவ்வொரு புதிய புத்தகமும் அதன் ஆசிரியரின் புதிய விளக்கங்கள் கொடுக்க முயலும் ஒரு தனி முயற்சியாகும். இம்முயற்சிகள் இல்லாவிடில் பொருண்மையியல் அதன் தொடக்ககால இருட்டுக்கே போய் விடும் அபாயம் உள்ளது' என்று கூறுகிறார். இக்கருத்துப் பொருண்மையியலின் ஆழத்தையும், பரப்பையும் ஆய்வுச் சிக்கல்களையும் காட்டுவதுடன் இதுவரை மொழியியலாரால் ஆராய்ந்து கூறப்பட்டவை மட்டுமே பொருண்மைக் கூறுகள் அல்ல; இன்னும் ஆராயப்பட வேண்டிய கூறுகள் உள்ளன என்பதைக் காட்டுகிறது. மொழியியலில் பொருண்மையியல் வளர்ந்து வரும் துறையே; இன்னும் அதன் உச்சியை எட்டவில்லை என்னும் பின்புலத்தில் தொல்காப்பியம் கூறும் பொருண்மையியல் செய்திகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுத் தொல்காப்பியரின் பொருண்மையியல் கோட்பாடு கண்டறியப்படும்.

## 4. பொருண்மை அமைப்பின் வேறுபாடுகள்

உலகப் பொருண்மை மொழிப் பொருண்மையாக உருப்பெற்று மொழிக்கு மொழி வேறுபட்டு உருபன்கள் (morphemes), சொற்கள், தொடர் அமைப்புகள் போன்றவற்றால் குறிக்கப்படுவதைக்

கருத்துருவாக்கம் (conceptiualization) என லீச் (Leech 1981:25) குறிப்பிடுகின்றார். ஒன்று, பல என்ற வேறுபாடு (ஒருமை, பன்மை) அல்லது சில மொழிகளில் ஒன்று, இரண்டு, பல (ஒருமை, இருமை, பல) என்பன விகுதிகளின் சேர்க்கையால் அல்லது அவற்றின் இன்மையால் குறிக்கப்படுவன; ஆன், ஆள், ஆர், அது, அ போன்ற விகுதிகள் எண், பால்காட்டுவன, ஐ, ஆல், ஓடு போன்ற வேற்றுமை உருபுகளின் சேர்க்கையால் பெயர் சுட்டும் பொருள்கள் செயப்படுபொருள், கருவி உடனிகழ்ச்சி போன்ற செயற் பொருண்மைகளைத் (functional meanings) தருவதும், ஆங்கிலத்தில் வினைக்குமுன் வரும் பெயர் எழுவாயையும் வினையை அடுத்து வரும் பெயர் செயப்படுபொருளையும் குறிக்கும் (எ.டு The cat killed the rat) படிச்சட்டமும் (pattern) பொருண்மையே. இது இலக்கணப் பொருண்மை (grammatical meaning) எனப்படும் (ஒ.நோ Lyons 1968). மரம், செடி, கொடி, அன்பு, அறிவு, ஓடு, பாடு, நல்ல, கெட்ட போன்ற சொற்கள் பல்வகை உலகப் பொருள்கள், குணங்கள், செயல்கள், கருத்துக்கள் ஆகியவற்றைக் குறிப்பதும் பொருண்மையே. இச்சொற்களுக்கிடையே உள்ள ஒரு பொருண்மை (எ.டு. ஆனந்தம், மகிழ்ச்சி), பொருள் உட்கோடல் எ.டு., (மலர், தாமரை), பொருள் முரண் (எ.டு. நல்ல, கெட்ட), பொருள் ஒவ்வாமை (incombatibility) (எ.டு. சிகப்பு, பச்சை, மஞ்சள், நீலம், ஊதா, கருப்பு, வெள்ளை) போன்ற பொருள் உறவுகளும், பொருண்மைகளே. இவ்விரண்டும் சொற் பொருண்மை (lexical meaning) என்ற தலைப்பில் ஆராயப்படுகின்றன (Lyons, 1977, Cruse, 1986). சொற்கள் இணைந்து வழங்கும் வாக்கியங்களின் பொருண்மை (sentential meaning), வாக்கியங்களுக்கிடையே உள்ள பொருள் ஒற்றுமை (paraphrase), பொருள் உள்ளடக்கம் (entailment) முன் எதிர்பார்ப்பு (presupposition) போன்ற உறவுகளின் ஆய்வும் பொருண்மை அமைப்புக்குரியதே.

ஆனால், பொருண்மைக்கருத்துருவாக்கம் முழுவதும் இலக்கணப் பொருண்மை, சொற்பொருண்மை, வாக்கியப் பொருண்மை என்ற மூன்றனுள் அடங்கி விடவில்லை. மொழியியலாரின் மேற்கூறிய பொருண்மை வகைப்பாடு உருபு, சொல், தொடர் வாக்கியம் என்ற வடிவமைப்புக் கூறுகளின் (formal categories) அடிப்படையில் அமைந்தது. சொல், தொடர், வாக்கியம், வாக்கியக் கோவை போன்ற வடிவமைப்புக் கூறுகளைப் பயன்படுத்தி ஆனால் அவற்றில் கட்டுப்படாத மொழிக் கருத்துருவாக்க நிலை ஒன்றுள்ளது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகம், புறம், முல்லை, குறிஞ்சி, வெட்சி, வஞ்சி,

களவு, கற்பு, புணர்தல், பிரிதல் போன்ற தனிச்சொற்களாலும், அறத்தொடு நிற்றல், வரைவு கடாதல், படையியங்கு அரவம், பாக்கத்து விரிச்சி, (பொருண்மை) மெய் தொட்டுப் பயிறல் (தொ. பொ. 99.1) பொய் பாராட்டல் (99-1) போன்ற தொடர்களாலும், 'பின்வா என்றல்', 'மனையகம் பட்டுக் கலங்கிச் சிதைந்த வழித் தோழி நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தல்', 'வேலும் வாளும் துணையுற மொய்த்தலின் சென்ற உயிரின் நின்ற யாக்கை இரு நீலந் தீண்டா அருநிலை' போன்ற வாக்கிய அமைப்புகளாலும் விளக்கும் கருத்துருவாக்கம் அது. இக்கருத்துருவாக்கத்தின் அடிப்படையிலான மொழிப் பொருண்மை அமைப்பு இதுவரை மொழியியலாளரால் ஆராய்ந்து வரையறுக்கப்படவில்லை. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல் முதல் மெய்ப்பாட்டியல் வரையிலான ஆறு இயல்களில் ஆராய்வது இப்பொருண்மை அமைப்பையே; உவமையியல் பேசுவதும் அக்கருத்துருவாக்கத்திற்குப் பயன்படும் மொழிக்கருவியே. அதுவும் இப்பொருண்மை அமைப்பினைச் சேர்ந்ததே.

புதிதாக்கம் (creativity) மொழியின் சிறப்பியல்புகளில் ஒன்று. மொழியைப் பயன்படுத்துவது என்பது இதுவரை கேட்ட சொற்கள், தொடர் அமைப்புகளைக் கிளிப்பிள்ளை போல நினைவில் இருந்து திரும்பக் கொண்டுவந்து பயன்படுத்துவது அல்ல. இதுவரை எதிர்கொள்ளாத மொழிச் சூழல்களுக்கு ஏற்ப, தெரிந்த சொற்கள், இலக்கணக்கூறுகள், தொடர் அமைப்புகளைப் பயன்படுத்தி எண்ணற்ற புதிய தொடர்கள், வாக்கியங்களை உருவாக்குதல். இப் புதிதாக்கத்திற்கு வடிவமைப்பில் சில இலக்கணக் கூறுகள் பயன்படுகின்றன. உவமை மேற்காட்டப் பெற்ற பொருளமைப்பில் பயன்படும் புதிதாக்கக் கருவி.

எனவே, தொல்காப்பியம் பழந்தமிழின் வழக்கு, செய்யுள் ஆகிய இரு பயன்பாட்டுக்களங்களுக்கு உரிய பொருண்மையின் மேல் காட்டிய கருத்துருவாக்கப் படிவங்கள் அமைப்புகளையே பொருளதிகாரத்தில் ஆராய்கின்றது. இப் பல்வகைப் பொருண்மை அமைப்புகளை, இலக்கணப் பொருண்மை, சொற் பொருண்மை, இவற்றிலிருந்து வேறுபட்ட மொழிப் பொருண்மையையும் உட்கொண்ட தொல்காப்பியரின் பொருண்மைக் கோட்பாடு என்ன? அது அவர் இலக்கணக் கோட்பாட்டில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது என்பன அடுத்த பகுதியில் ஆராயப்படும்.

## 5. தொல்காப்பிய இலக்கண மாதிரிப் படிவமும் பொருண்மையியல் கோட்பாடும்

தொல்காப்பியரின் மொழி இலக்கண மாதிரிப் படிவம் (grammatical model) என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல், அதனுள் பொருண்மையியல் அமைப்பையும் அதன் மூலம் பொருண்மையியல் கோட்பாட்டையும் புரிந்து கொள்ள உதவும். மூன்று அதிகாரங்களுள் எழுத்ததிகாரம் எழுத்து அல்லது ஒலியன் தொகை (inventory of phonemes), அவற்றின் வருகை அல்லது மயக்கம் (distribution of phonemes), அவற்றின் பிறப்பு அல்லது ஒலிப்பு முறை (articulatory description), அவற்றின் புணர்ச்சி அல்லது அவை தொடரில் வரும் போது நிகழும் மாற்றங்கள் (phonological alternations) ஆகியவற்றை விளக்குகின்றது. இது வடிவமைப்பில் ஒரு பகுதி. சொல்லதிகாரம் ஒலியன்கள் இயைந்து உருபுகள், விகுதிகளாகவும், சொல்லாகவும், தொகைகளாகவும், தொடராகவும் வழங்கும் வடிவமைப்பை விளக்குகிறது. இது வடிவமைப்பின் இன்னொரு பகுதி. சொல்லதிகாரத்தில் இவ்வடிவமைப்பு விளக்கப்படும் பொழுதே இவ்வடிவமைப்புகளுக்குரிய பொருண்மை அமைப்பும் விளக்கப்பட்டு விடுகிறது.

**னஃகான்ஒற்றே ஆடூஉ அறிசொல்** (தொல்.சொல். 5)

**ளஃகான்ஒற்றே மகடூஉ அறிசொல்** (தொல்.சொல். 6)

**மூன்றாகுவதே ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**<br>**வினைமுதல் கருவி அனை முதற்றதுவே**

(தொல்.சொல். 73)

**வினையே செய்வது செயப்படு பொருளே**<br>**நிலனே காலம் கருவி என்றா**<br>**இன்னதற்கு இது பயன்ஆக என்னும்**<br>**அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ**<br>**ஆயெட்டென்ப தொழில் முதல் நிலையே**

(தொல்.சொல்.108)

என்ற சொல்லதிகார நூற்பாக்கள் விளக்குவது இலக்கணப் பொருண்மை. மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளுள் முதல் இரண்டு நூற்பாக்கள் பேசுவது விகுதிகளின் இலக்கணப் பொருண்மை. ஒடு எனும் மூன்றாம் வேற்றுமைப் பொருளும் 'வினையே, செய்வது' என்ற

நூற்பா கூறும் எட்டும் வினைப்பயனிலை வாக்கியத்தின் பகுதியாய் வரும் வேற்றுமைத் தொடர்களின் செயற்பொருண்மை. இடையியலில் வரும்,

**கழிவேஆக்கம் ஒழியிசைக் கிளவி என்று**
**அம்மூன்றென்ப மன்னைச் சொல்லே** (தொல்.சொல்.247)

**எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை**
**முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று**
**அப்பால் எட்டே உம்மைச் சொல்லே** (தொல்.சொல்.250)

போன்ற நூற்பாக்கள் இடைச்சொற்களின் செயற்பொருண்மையை விளக்குவன. இவையும் இலக்கணப் பொருண்மைக்கு உரியனவே. உரியியலில் வரும்,

**உறுதவநனி என வரூஉம் மூன்றும்**
**மிகுதி செய்யும் பொருள என்ப**
(தொல்.சொல்.294)

**உருஉட்கு ஆகும் புரை உயர்பாகும்** (தொல்.சொல்.295)

போன்றவை சொற்பொருண்மை விளக்குவன. தொல்காப்பியர் இவற்றையும் பொருண்மையாகவே கருதினார் என்பது,

**எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே**
(தொல்.சொல்.152)

என்ற நூற்பாவால் தெளிவாகும். சொல் என்பதை ன், ள் போன்ற விகுதிகளையும் மன், உம் போன்ற இடைச்சொற்களையும் பெயர், வினை ஆகிய முழுச்சொற்களையும் குறிக்கப் பயன்படுத்துகிறார் தொல்காப்பியர் (ஒ.நோ. தொல்.சொல். 155, 156). இச்சொற்களின் வடிவக் கூற்றையும் பொருண்மைக்கூற்றையும் வேறுபடுத்தி அறிந்திருந்தார் தொல்காப்பியர் என்பது,

**பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**
**சொல்லின் ஆகும் என்மனார் புலவர்** (தொல்.சொல்.153)

என்ற நூற்பாவால் புலனாகும். இவ்வனைத்தும் மொழியின் வடிவமைப்புக்கு உட்பட்ட, அதனால் கட்டுப்படுத்தப்பட்ட பொருண்மை அமைப்பு (semantic structure bound by formal structure). இது,

மேல்பகுதி (4)இல் கூறியபடி இன்றைய மொழியியலாரால் பொருண்மையியலின் பகுதியாய் ஆராயப்படுவது. அங்கு மூன்றாவதாக இலக்கணப் பொருள், சொற்பொருளிலிருந்து வேறுபட்டதாக விளக்கப்பட்டு, தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் செய்யுளியல், மரபியல் தவிர்த்த மற்ற இயல்களில் விளக்கப்பட்டு மொழியின் வடிவமைப்பிற்கு உட்படாத அதனால் கட்டுப்படுத்தப்படாத, ஆனால் அவ்வடிவமைப்புக் கூறுகளைப் பயன்படுத்திக் கருத்துருவாக்கம் பெற்ற பொருளமைப்பு (semantic structure not bound by formal structure) ஆகும். இது எனக்குத் தெரிந்தவரை மொழிப்பொருண்மையின் பகுதியாக மொழியியலாரால் இதுவரை ஆராயப்படாதது. எனினும், உலகப் பொருண்மை மொழிப் பொருண்மையாய்க் கருத்துருவாக்கம் பெறும் மிகப் பெரிய பகுதி. இப்பகுதிக்கான முற்றிலக்கணத்தின் மாதிரிப் படிவம் பின்வருமாறு அமையும்.

உலகப் பொருண்மை

↓

மொழிப் பொருண்மை அமைப்பு

| | |
|---|---|
| வடிவமைப்புக்கு உட்படாத பொருண்மை அமைப்பு | - பொருளதிகாரம் (செய்யுளியல் மரபியல் தவிர) |
| ↓ | |
| சொற்சேர்க்கைக் கட்டுப்பாடு | - பொருளதிகாரம்-மரபியல் |
| ↓ | |
| வடிவமைப்புக்கு உட்பட்ட பொருண்மை அமைப்பு | - சொல்லதிகாரம் |
| இலக்கணப் பொருண்மை | - உரியியல் தவிர்த்த மற்ற இயல்கள் |
| சொற்பொருண்மை | - உரியியல் |

↓

வடிவமைப்பு

| | |
|---|---|
| தொடர், சொல்லமைப்பு | - சொல்லதிகாரம் |
| ஒலியன் அமைப்பு | - எழுத்ததிகாரம் |

↓

ஒலிவடிவம் — எழுத்ததிகாரம் பிறப்பியல்

இதுவரை ஆராய்ந்தவற்றின் அடிப்படையில் தொல்காப்பியரின் பொருண்மையியல் கோட்பாட்டைப் பின்வருமாறு விளக்கலாம். மொழிப் பொருண்மை இருவகை அமைப்புகளை அல்லது அமைவொழுங்குகளை (systems) உடையது (1) மொழியின் வடிவமைப்பு அல்லது வடிவமைவொழுங்கின் (formal structure or expression system) கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது. அது இலக்கணப் பொருண்மை, சொற்பொருண்மை என்ற இரு பகுதிகளை உடையது. (2) மொழியின் வடிவமைப்பு அல்ல வடிவமைவொழுங்கின் விதிகளுக்கு உட்படாத, ஆனால் அவ்வமைப்பின் படிவங்களைப் பயன்படுத்திக் கருத்துருவாக்கம் பெறும் பொருள் அமைப்பு. இதுவே பொருளமைப்பின் மிகப் பெரிய கூறு ஆகும். இவ்விரு கூறுகளும் சேர்ந்ததே மொழியின் பொருளமைப்பு. இவற்றில் முதற்பகுதி பொருண்மை அமைப்பு வடிவமைப்பிற்கு உரிய உருபு, விகுதி, சொல், பெயர், வினை, இடை, உரி போன்ற அலகுகளின் மூலமே விளக்கப்படக் கூடியது. ஏனெனில், அவை பொருண்மைக்கு உரியனவல்லாத, பொருண்மையை வேறுபடுத்தும் செயற்பாடு உடைய ஒலியன் அல்லது எழுத்துக்களிலிருந்து வேறுபட்டு வடிவும் பொருளும் இணைந்த கூறுகள் (morpho - semantic categories) வடிவமைப்புக்குரிய அலகுகளில் பொருளுடைய அலகுகள் (meaningful units). ஆனால், இரண்டாவது வகைப் பொருண்மை அமைப்பு வடிவமைப்போடு நேரடித் தொடர்பில்லாதது. ஆகையால், அதற்கு வேறுவகை அலகுகள் வகுக்கப்பட வேண்டும். அவை முற்றிலும் மொழிப் பொருண்மை அமைப்பிற்கு மட்டும் உரிய அலகுகளாக அமையும். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் பேசும் அகம், புறம் என்ற பொருட்பாகுபாடு, அவற்றிற்குரிய குறிஞ்சி, முல்லை, வெட்சி, வஞ்சி போன்ற திணைப் பாகுபாடு, அவற்றுள் அகத்திணைப் பொருண்மைக் கூறுகளாக வகுக்கப்படும் முதல், கரு, உரி போன்ற கருத்துக்கள், களவு, கற்பு என்ற கை கோள்கள், புறப்பொருளுக்குரிய துறை என்ற பாகுபாடு ஆகியவை இப்பொருண்மை அமைப்பின் அலகுகள். பழந்தமிழ் மொழிப் பயன்பாட்டுக்களங்களான வழக்கு, செய்யுள் (இலக்கியம்) இவற்றின் செய்திகளைப் பகுப்பாய்வு செய்ததின் அடிப்படையில் வகுக்கப்பட்ட பொருண்மை கருத்துவகைகள் (conceptual categories) இவை. இவற்றுடன் பொருண்மை நிகழ்த்துவதற்குரிய தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி, கண்டோர் போன்ற மாந்தர் பொருண்மை நிகழ்வுக்குரிய சூழல் அல்லது சுற்றுச் சூழல் வகைகள், பொருண்மை நிகழ்வு வரையறைகள் (எ-டு முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை - தொல்.பொருள்.37) ஆகியன அடிப்படைக் கூறுகளாய்ப்

பயன்படுகின்றன. பகுப்பாய்வின் அடிப்படையிலான இவ் அலகுகளைக் கொண்டு களவியல், கற்பியல் ஆகிய இரு இயல்களில் அகப்பொருண்மையின் நிகழ்வுகளின் வரைவிலக்கணம், நிகழ்வரிசை, நிகழ்சூழல் (conditions), நிகழ்காலம் (இரவுக்குறி, பகற்குறி), நிகழ் இடம் (மனையகம், சிறைப்புறம்) மற்ற இவற்றுடன் தொடர்புடைய செய்திகளின் கருத்துக் கூறுகள் (conceptual units) வரிசைப்படுத்திக் கூறப்படுகின்றன. முன்னர்க் கூறியது போல இப்பொருண்மைக்குரிய மன உடலியல் கூறுகள் (psycho physical) மெய்ப்பாட்டியலில் விளக்கப்பட்டு இப்பொருண்மைக் கூறுகள் அனைத்தையும் விளக்கப் பயன்படும் கருவியாகிய உவமை, உவமவியலில் விளக்கப்படுகிறது.

இவ்வாறு, இலக்கணப் பொருண்மை, சொற் பொருண்மையிலிருந்து வேறுபட்ட மொழிப் பொருண்மை அமைப்பிற்கு ஒரு கட்டமைப்பினைத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் வகுத்துள்ளார். இவ்வமைப்பின் கூறுகள் இன்னும் விரிவாக ஆராயப் பெற்றால் அவ்வடிப்படையில் இன்றைய மொழியை ஆய்வதற்கும் பொருத்தமான ஒரு விளக்க மாதிரிப் படிவத்தை உருவாக்க முடியும். இது மொழிப் பொருண்மையியல் வளர்ச்சிக்கு, தொல்காப்பியத்தின், தமிழ் இலக்கண மரபின் கொடையாய் அமையும்.

## பார்வை நூல்கள் & கட்டுரைகள்


1. பாலகிருட்டிணனன், நா., தொல்காப்பியப் பொருளதிகார வழி நற்றிணை : ஓர் ஆய்வு, சென்னை, 1988.
2. பாலசுப்பிரமணியன், க., தொல்காப்பிய உரியியல் : ஓர் அகராதியியல் கண்ணோட்டம், அகராதிக் கலைக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985.
3. பாலசுப்பிரமணியன், க., 'இலக்கணத்தில் தொல்காப்பியப் பொருளதி காரத்தின் இடம்', தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998, பக்.102-129.
4. பெரியகருப்பன், இராம., சங்க இலக்கிய ஒப்பீடு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975.
5. பெரியகருப்பன், இராம, ஒப்பிலக்கிய அறிமுகம், சோலை நூலகம், மதுரை, 1979.

6. ஜீன் லாறன்ஸ், பகவதி, தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.

7. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, கழகம், சென்னை, 1963.

8. தொல்காப்பியம் சொல்லதிகாரம், இளம்பூரணர் உரை, கழகம், சென்னை.

9. Balasubramaniam, K., 'Concept of sentence structure in Tolkappiyam' in **Studies in Early Dravidian Grammers,** Annamalai Nagar, 1978.

10. Cruse, D.A., **Lexical Semantics,** Cambridge, 1986.

11. Gleason, H.A., **An Introduction to Descriptive Linguistics,** Newyork, 1955.

12. Leech, Geoffrey (1990) **Semantics,** Penguin, 1981.

13. Lyons, John, **Introduction to Theoretical Linguistics,** Cambridge, 1968.

14. Lyons, Hohn, **Semantics,** vol I & II, Cambridge, 1977

15. Meenakshisundran, T.P., 'Tolkappiyar's Literary Theory' in **Proceedings of First International Conference Seminar on Tamil Studies vol II.** Kualalmpur, 1969.

16. Ramaswamy, K., 'Tolkappiyar's treatment of Semantics' in S, Agesthialingam, N.Kumaraswamy Raja (ed.) **Studies in Early Dravidian Grammars,** Annamalai Nagar, 1978.

# தொல்காப்பியமும் இளம்பூரணமும்

ஆ. சிவலிங்கனார்

---

## முன்னுரை

பழம்பெருந்தமிழ் இலக்கண நூலாக இன்று நமக்குக் கிடைத்திருப்பது தொல்காப்பியம். அதன் பழையவுரை இளம்பூரணம். உரையெழுதியோர் பலர். அவருள் இளம்பூரணர் என்பார் காலத்தால் முற்பட்டவர். அவர் தொல்காப்பிய எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களுக்கும் உரையெழுதி உள்ளார். அவை கிடைக்கப்பெற்றது தமிழரின் நற்பேறு. சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடனார், பெயர் தெரியா ஒருவர் என்பவர் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரையெழுதி யுள்ளனர். நச்சினார்க்கினியர் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், செய்யுளியல் ஆகியவற்றுக்கெழுதிய உரைகள் கிடைத்துள்ளன. இக்காலத்தும் உரையெழுதி வருவோர் உளர். யாவர் உரையும் இளம்பூரணர் உரையை யடியொற்றியே அமைகின்றன. இன்றுள்ள உரைகட்கெல்லாம் மூலவுரையாக அமைகின்ற இளம்பூரணர் உரைகொண்டு அவரது கோட்பாடுகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம். இதற்கு எழுத்ததிகார உரையே கருவியாகக் கொள்ளப்பட்டது பெரும்பாலும்.

## இளம்பூரணர்

'இளம்பூரணன்' என்பது, இளமை முழுமையாக நிறைந்தவன் என்னும் பொருளது. முழுமையாக நிறைதலாவது என்றும் ஒரே படித்தாதல்; குறையாதிருத்தல். 'என்றும் இளையாய்' என முருகனைக் கூறுவது இதனை வலியுறுத்தும். இச்சொல்லை மக்கள் அக்காலத்தில் இயற்பெயராகக்கொண்டு வழங்கி வந்துள்ளனர். அவ்வாறு வழங்கப்பட்டு வந்த இளம்பூரணன் என்பார், தொல்காப்பிய உரையெழுதிச் சிறந்தமையால் இளம்பூரணர் என மதிக்கப்பட்டார்.

## இளம்பூரணர் ஊர்

இளம்பூரணர் பாண்டிநாட்டுக் கீழ்க்கடற்கரையிற் செல்லூரில் தோன்றியவர் என்றும், நான்மறையும் வல்ல அந்தணர் என்றும் கூறுவர்.

**குணகடற் செல்லூர் மணற்குடி புரியான்**
**தண்முல்லை முகையென வெண்ணூல் சூடி**
**அந்தணன் துறவோன் அருமறை உணர்ந்த**
**இளம்போதி பயந்த புனிதன்**
**இளம்பூ ரணன்உரை இனிது வாழ்க ஈங்கென்**

என்னும் பாடலும் காட்டுவர்.[1]

டிவி. சதாசிவ பண்டாரத்தாரும் இக்கருத்தினரே.[2] அக்கருத்தைச் செந்தமிழ் ஆசிரியர் டிகே. இராமனுச அய்யங்கார் மறுத்தார்.[3] மறுப்புக்கு மறுப்பாக, திரு. க. வெள்ளைவாரணனார் எழுதினார்.[4]

## இளம்பூரணர் துறவி

மயிலைநாதர் நன்னூல் 'பெயர் வினையும்மை' எனும் சூத்திரவுரையில்,

**இஃது ஒல்காப்புலமைத் தொல்காப்பியத்துள்**
**உளங்கூர் கேள்வி இளம்பூரணர் எனும் ஏதம்இல்**
**மாதவர் ஓதிய உரையென்றுணர்க**

என்றெழுதியதைக் காட்டி இளம்பூரணர் துறவொழுக்கத்தினர் என்பர். இதில் உள்ள 'மாதவர்' என்பது துறவியைக் குறிக்கும் என்பது அவர் கருத்து.

> **இஃது ஒல்காப்புலமைத் தொல்காப்பியத்துள்**
> **உளங்கூர் கேள்வி இளம்பூரணர் உரையெனத்,**
> **தேறிய கவிஞர் கூறுபட அறிமின்**

என்றும் ஒரு பாடம் உண்டாதலின் மேலது வலியுறாது.[5]

அன்றியும்,

> **இனி இளம்பூரணவாசிரியர் வேங்கைப்பூ என்பதை முன்னிடத்துக்கும் அடைகடல் என்பதனைப் பின்னிடத்துக்கும் காட்டுவர்**

என 'முன்மொழி பின்மொழி' எனும் நன்னூல் சூத்திரத்தில்[6] எழுதியுள்ளதில் துறவுக்குரிய சொல் இல்லாமையும் நாம் காணுதல் வேண்டும்.

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரவுரையில் 'உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள்' எனக்கூறியதையும்[7] பிறிதோர் இடத்தில், 'அடிகள்' என்றது துறத்தலான் எனக்கூறியதையும்[8] சான்றுகாட்டி இளம்பூரணர் துறவி என்பர். அடிகள் என்ற சொல் துறவிக்கே வழங்கப்பட்டது என்பது பொருந்தாது. அது துறவறத்தார்க்கும் இல்லறத்தார்க்கும் பெருமைப்படுத்த வழங்கப்பட்ட சொல்லாகவே முன்னோரால் கையாளப்பட்டது. 'சாவக நோன்பிகள் அடிகள்' எனவும்,[9] 'அமுதம் உண்கவடிகள்' எனவும்[10] கோவலன் அச்சொல்லால் குறிக்கப்படுதல் காணலாம். அடியார்க்கு நல்லார், தாம் உரையெழுதிய சிலப்பதிகாரத்தில் உள்ள ஆட்சியை மறந்தார் என்பதற்கில்லை. அவர், 'அடிகள் என்றது துறத்தலான்' என்றெழுதியது, அவர் இளங்கோவை மதிப்பது அவர் துறவுகண்டு என்பதைத் தெரிவிக்கவே எனலாம். எனவே அடிகள் என வருவது கொண்டு துறவி எனல் பொருந்தாது. மேலும் சான்றுகள் தேவை.

## இளம்பூரணர் சமயம்

இளம்பூரணர் சமயம் சைனம் என்பதற்குத் தொல்காப்பிய முதற்சூத்திரத்தில் 'னகரம் வீடுபேற்றுக்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான் பின் வைக்கப்பட்டது' என்று அவர் எழுதியதைச் சான்றாகக் காட்டுவர். சைவம் வைணவம் போலும் சமயங்கள், ஆண் பெண் இருவருமே வீடு பேறு அடையலாம் எனக்கூறச், சைன சமயம் ஆண் மட்டுமே வீடு பேறடையலாம் என்றது. ஓர் உயிர், பெண் உடம்பெடுத்தபோது, தான் வீடுபேறடைதற்குரிய செயலை மேற்கொண்டு

ஒழுகினும், பெண் உடலைவிட்டு அடுத்தபிறவியில் ஆண் உடலை எடுத்தே வீடுபேறடையலாம் என்பது சைன சமய விதி. அதற்கேற்பவே இளம்பூரணர் வீடுபேற்றுக்குரிய ஆண்பால் என்றார். அதனால் அவர் சைன சமயத்தார் என்பர்.

வீடுபேற்றுக்குரிய ஆண்பால் என்றதனால் வீடு பேற்றுக்குப் பெண்பால் உரியதன்று என்பதில்லை. னகர எழுத்தை இறுதியில் அமைத்ததற்கு அமைதி கூற வந்தவர், 'னகரம் ஆண்பாலையுணர்த்தும்; அவ்வாண்பால் வீடுபேறடைதற்குரியது. எனவே னகரத்துக்கு வீடுபேறடையும் ஆண்பாலை உணர்த்துகின்ற சிறப்பு உண்டு. அதனால் அது பின் (இறுதியில்) வைக்கப்பட்டது' என்று விளக்கம் கொள்ளும்படி எழுதினாரேயன்றிப், பெண்பால் வீடுபேறடையாது என்ற கொள்கையில் எழுதினாரில்லை.

தம்சமயக் கோட்பாடுகளை ஆங்காங்கே குறிப்பது இளம்பூரணர் கோட்பாடாயின், வாய்ப்பு நேரும் போதெல்லாம் குறிப்பிட்டுச் சென்றிருப்பார். அவ்வாறு குறிப்பிடவில்லை.

'உயிரீறாகிய உயர்திணைப் பெயரும்' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில்,[11] குமர கோட்டம், குமரக்கோட்டம், பிரம கோட்டம், பிரமக் கோட்டம் என உதாரணங்காட்டியவர், அருக கோட்டம், அருகக் கோட்டம் எனக் காட்டவில்லை.

**நிலம் நீர் தீவளி விசும்போ டைந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்**

என்னும் சூத்திரத்தில்[12] விசும்பு என்பது ஒரு பொருளன்று என்று சுட்டிச் சென்றிருக்கலாம். விசும்பை ஒரு பொருளாகச் சைனர் கொள்ளார்.

## இளம்பூரணர் சைவரா?

இனி இளம்பூரணர் சைவர் என்பார் தரும் சான்றுகள் வருமாறு :-

1. தொல்காப்பியப் பொருளதிகாரப் பொருளியல் முதற் சூத்திரத்தில்,

**யாழ்கெழு மணிமிடற் றந்தணன்**
**சிவாநு பூதியில் பேருலகம் தங்கிற்று**

என்றெழுதியதும்,

2. செய்யுளியல், 'அடிநிமிர்கிளவி' (175) என்னும் சூத்திரவுரையில், சைவசமய மூத்தநாயனார் திருவிரட்டைமணி மாலையிலிருந்து 'நல்லார் பழிப்பில்' என்னும் பாடலையும், 'கனிய நினைவொடு' என்னும் பாடலையும் காட்டியிருப்பதும், பிறவும் இளம்பூரணர் சைவர் என்பதையுணர்த்தும் என்பர். உதாரணம் காட்டுவதில் சமய நூலிலிருந்தே காட்டவேண்டும் என்ற கோட்பாடுடையவர் அல்லர் இளம்பூரணர். தமக்கு உரையெழுதும்போது கிடைத்தவற்றை உதாரணங்களாகக் காட்டினார்; அவ்வளவே.

இளம்பூரணர் பற்றிய பிற வரலாறுகள் ஆய்வு முறையில் தனி நூலாக வெளிவரும்.

## இளம்பூரணர் கோட்பாடுகள்

**(அ) உதாரணம் தேடல்:** தாம் பயின்ற இலக்கியங்கள், உலக வழக்குகள் ஆகியவற்றிலிருந்து உதாரணங்கள் தருவர். ஆனால் இரண்டிலும் தமக்குக் கிடைக்கவில்லையென்றால் தாமே முயன்று கண்டு கூறுவர்.

வேற்றுமைப் புணர்ச்சியில் யகர மெய்யீற்றுமுன் வல்லெழுத்து வந்தால் வந்த வல்லெழுத்து மிகும் என்பது தொல்காப்பிய விதி. நாய்க்கால் என்பது உதாரணம். இது அஃறிணைக்குக் கூறப்பட்ட விதி. விரவுத்திணையாகிய 'தாய்' என்பது வேற்றுமையில் எவ்வாறு வரும் எனக் கூற வந்த தொல்காப்பியர், 'தாய் என் கிளவி இயற்கையாகும்' என்றார்.[13] உதாரணம், தாய் கை. இத்துடன் அமையாது, தொல்காப்பியர்,

'மகன் வினை கிளப்பின் முதல்நிலை யியற்றே'[14] என்ற சூத்திரம் அமைத்தார். 'தாய்' என்பதன் முன், மகன் தொழில் உணர்த்தும் வல்லெழுத்து முதல் மொழியாக எதைக் கொள்வது என்பது விளக்கமாக இல்லை. மகன் வினை என்பதைக் 'கலாம்' என்று கொண்டால் தாய்+கலாம்-தாய்க்கலாம் என யகரவீற்றுப் பொதுப் புணர்ச்சிப்படி வல்லெழுத்து மிகும். அதனால் 'மகன் வினை கிளப்பின்' என்னும் சூத்திரம் தேவையில்லை. சூத்திரம் இருப்பதால் ஏதேனும் அமைதி கூறியாக வேண்டும். அதனால் 'தாய்' என்ற சொல் 'மகன்' என்ற அடையடுத்து வந்தால் எவ்வாறு ஆம் என்பதற்காக இச்சூத்திரம் அமைத்தார் தொல்காப்பியர் எனக் கருதினார். அதனால் 'மகன்தாய்' என்பதை நிலைமொழியாக வைத்துக் 'கலாம்' என்பதை வருமொழியாக வைத்து 'மகன்தாய்க் கலாம்' என உதாரணம் காட்டினார். இவ்வாறு

இவர் கூறவில்லை என்றால் சூத்திரப் பொருள் விளங்காது. இஃது இவரின் தேடற் கோட்பாட்டை யுணர்த்தும்.

**(ஆ)அளபெடை எழுத்து :** உயிர் நெட்டெழுத்தே அளபெடுக்கும் என்பது அனைவரும் கொண்ட கொள்கை. தொல்காப்பியர், ஓரளபு இசைக்கும் குற்றெழுத்து, ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்று கூறியவர், 'மூவளபு இசைத்தல் ஓரெழுத்து இன்று' என்றார். அவரே,

**நீட்டம் வேண்டின் அவ்வள புடைய**
**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்**

என்றார்.[15] மூன்றும் மேற்பட்டும் மாத்திரை தேவைப்படின் தேவைப்பட்ட அளவில் எழுத்தை நீட்டி ஒலித்துக் கொள்க என்றார். அது நெட்டெழுத்தையே நீட்டல் வேண்டும் என்பதாம்.

இளம்பூரணர் 'நீட்டம்' என்பதை ஆகுபெயராகக் கொண்டு அதற்கு, 'நீண்ட மாத்திரையுடைய அளபெடை எழுத்து' எனப்பொருள் கொண்டார். அவரது கோட்பாடு மூவளபிசைப்பது 'அளபெடை எழுத்து' என்பதாகும். அதனால் அவர் குற்றெழுத்து, நெட்டெழுத்து, அளபெடை எழுத்து என மூவகை எழுத்துண்டு என்று கொண்டார். அளபெடை எழுத்தைத் தனியெழுத்தாகவே கொண்டார் என்பதற்கு அவர் ஆட்சியே சான்றாம்.

புள்ளியில்லா எல்லா மெய்யும் (நூல் மரபு 17) என்னும் சூத்திரத்தின் கீழ் 'தன்னின முடித்தல் என்பதனால் அளபெடை உயிரோடும் சார்பில் தோற்றத்து உயிரோடும் கூடும் உயிர்மெய் எழுத்தும் கொள்க' என்றும்[16]

**குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்**
**நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே**
(மொழிமரபு 8)

என்னும் சூத்திரத்தில்,

**அளபெடை யோசையாகச் சொல்லாதொழியில் குன்றுவ தான ஓசையையுடைய அவ்வளபெடை எழுத்தானாய மொழிக்கண்ணே நின்று அவ்வோசையை நிறைக்கும். அவை யாவை யெனின், நெட்டெழுத்துகளின் பின்னர் அவற்றிற்குப் பிறப்பானும் புணர்ச்சியானும் ஓசையானும் இனம் ஒத்த குற்றெழுத்துகள்**

என்றும் எழுதினார். மொழி என்பதற்கு 'அளபெடை எழுத்தான் ஆய மொழி' என எழுதியதும் காணலாம். உதாரணங்களாக ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ என ஓரெழுத்தொரு மொழிகளைக் காட்டினார். அன்றியும், 'ஈண்டு மொழி என்றது அவ்வளபெடை எழுத்து ஒரு பொருள் உணர்த்தி ஓரெழுத்தொருமொழியாய் நிற்கும் நிலைமையினை' எனவும் எழுதினார்.

இவ்வளபெடை எழுத்துகள் தனி எழுத்துகளாக வருதல் இன்றி மொழியில் வருதலின் சார்பெழுத்துகள் எனப்படுமோ என்ற ஐயம் எழுப்பி, அதற்கு எனப்படா என்பதற்குக் காரணமும் காட்டினார்.

> **இவையும் மொழிமேற்காணப்படுதலின் சார்பிற்றோற்றத்து எழுத்தெனப்படுமால் எனின், பெரும்பான்மையும் அம்மொழிதானே அவ்வெழுத்தாய் வருதலானும், அம் மொழிநிலைமை யொழிய வேறெழுத்தாகவும் சொல்லப்படுதலானும் அவ்வாறாகா தென்பது[17]**

என்பது அவர் கூற்று. 'ஆஅ' என்பது பசு எனும் பொருள்படும் மொழியாம். மொழியாயினும் அளபெடை எழுத்தானாய மொழியாம். எனவே மொழியே எழுத்தாக வந்தது. மொழி நிலைமையொழிய வேறெழுத்தாகச் சொல்லப்படுதலாவது, 'ஆஅ' என்பது பசு எனும் பொருள்தரும் நிலைமை நீங்குமானால் அளபெடை எழுத்தாக இல்லாமல் 'ஆ' எனத் தனிநெடில் எழுத்தாகச் சொல்லப்படும் என்பதாம்.

**(இ) பூட்டுச்சாவிக் கோட்பாடு :** ஒரு பொருளை உள்வைத்துப் பூட்டுவோர் சாவியை வேறிடத்தில் வைப்பர். அந்த வகையில் இளம்பூரணர், தாம் ஓர் கருத்தை முன் கூறி, அவ்விடத்திலேயே அதற்கு அமைதி கூறாமல், வேறிடத்தில் கூறியும் செல்வது அவர் கோட்பாடெனலாம்.

> **எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே**
> **உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்[18]**

என்னும் சூத்திரத்துக்கு,

> **ஒருமொழி இருமொழி தொடர்மொழியாகிய மூவகைப் பட்ட மொழிக்கும் உயிர்முதல்மொழி வருமிடத்து இடை உடம்படுமெய் வடிவு கோடலை நீக்கார்**

எனப்பொருளெழுதி,

> உரையிற்கோடல் என்பதனால் உடம்படுமெய்யான யகரமும் வகரமும் எனக்கொள்க; இகரவீறும் ஈகாரவீறும் யகர உடம்படுமெய் கொள்வன; அல்லனவெல்லாம் வகரமெய் கொள்வன

எனவும் எழுதினார். ஆகாரவீறு வகரஉடம்படுமெய் பெறும் என்றவர், விகாரப்பட்ட உயிர்பற்றிக் கூறும்போது, யகரவுடம்படு மெய்பெற்ற 'ஆயிருதிணை' என்பதை உதாரணமாக்க் காட்டினார். இது தவறுதான். இஃது ஓர் பூட்டுப்போல்வது. இதைத்திறக்கச் சாவி வேண்டும்.

> உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது

எனும் சூத்திரம், சுட்டெழுத்தின் முன்னர் உயிர்முதல் மொழிவரினும் வகரமெய் பெறும் என்கிறது. அ+ஆடை-அவ்வாடை என வரும். இச்சூத்திரவுரைக்கீழ்,

> திரியாது என்றதனால் மேல்சுட்டு நீண்டவழி யகரத்தோடு கொள்க

என்றும் எழுதினார். அ+இருதிணை- ஆயிருதிணை எனவரும். அகரவீறு உயிர்முதல்மொழி வரும்போது வகரவுடம்படுமெய் பெறும் என்றதற்கு மாறாக, அகரச்சுட்டு நீண்டு அச்சுட்டுப் பொருளிலேயே ஆகாரமாக நீண்டுவரின் அங்கு யகரவுடம்படுமெய் பெறும் என்று கூறியது சாவிபோன்றதாகும். அ+இயல் - ஆயியல் எனச்சூத்திரத்தில் வந்ததும் அகச்சான்றாகும். தொல்காப்பியர் ஆட்சிகொண்டே அவர் சூத்திரங்களுக்கு இலக்கணம் கூறுவது என்ற கோட்பாடும் உடையவர் இளம்பூரணர் என்பதற்கும் இது சான்றாம்.

(உ) குற்றியலுகரக் கோட்பாடு ஒன்று: ஈற்றுக்குற்றியலுகரம் வருமொழி முதலில் உயிர்வரின் எவ்வாறு ஆம் எனத் தொல்காப்பியர் விளக்கம் கூறவில்லை. நன்னூலாரே 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்றார்.[19] நாகு+அரிது - நாகரிது எனக் காண்க. தொல்காப்பியர் 'குற்றியலுகரமும் அற்றெனமொழிப' என்றொரு சூத்திரம் கூறினார்.[20] இச்சூத்திரத்துக்கு இளம்பூரணர்,

> ஈற்றுக்குற்றியலுகரமும் புள்ளியீறுபோல உயிர்ஏற இடம்கொடுக்கும் அத்தன்மைத்து என்று சொல்லுவர்

எனவுரையெழுதி,

இம்மாட்டேறு ஒருபுடைச் சேறல்

என்றும் எழுதினார். ஒருபுடைச்சேறல் என்பது இருபக்கத்துள் ஒருபக்கம் செல்லுதல் என்பதாம்.

அவற்றுள்

மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்

என்னும் சூத்திரத்தில்,[21]

> **மொழிமுதல்மெய் புள்ளியொடு நில்லாது என்னாது, ஈறெல்லாம் புள்ளியொடு நிலையல் என ஈற்றின்மேல் வைத்துக் கூறியவதனால், அவ்வீற்றின்மெய் உயிர் முதல்மொழி வந்தவிடத்து அஃது ஏற இடம் கொடுக்கும் என்பது பெறப்பட்டது**

என்றெழுதினார். 'அவற்றுள் மெய்யீறெல்லாம்' என்னும் சூத்திரத்தால், மெய்யீற்றுச் சொல்லின் ஈற்றுமெய் புள்ளிபெறும் என்றும், அவை உயிர் ஏற இடம் கொடுக்கும் என்றும் இரண்டு கருத்துகள் பெறப்படும். 'குற்றியலுகரமும் அற்று என மொழிப' என்னும் சூத்திரம் மேற்கூறிய இரண்டு கருத்துகளுள் உயிர்ஏற இடம் கொடுத்தலாகிய கருத்தோடு மட்டும் மாட்டேற்றப்படுகிறது என்று கொண்டதால், 'இம்மாட்டேறு ஒருபுடைச்சேறல்' என்று எழுதினார்.

ககரமெய் அகரவுயிர் வரும்போது க்+அ- க என அவ்வுயிர் ஏற இடம் கொடுத்துத் தானும் நிற்றல்போலக் குற்றியலுகரமும் உயிர்வரும்போது அவ்வுயிர் ஏற இடம் கொடுத்துத் தானும் கெடாது அதனுடன் இயைந்து நிற்கும் என்பது இளம்பூரணர் கொள்கை. நாகு+அரிது - நாகரிது என்பதில் உள்ள ககர மெய்யில் உகரஒலியும் அகர ஒலியும் சேர்ந்துள்ளன என்பது அவர் கருத்து. இதற்கு மேலும் ஒரு சான்று அவர் உரைமூலம் காணலாம்.

யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது[22]

என்னும் சூத்திரத்துக்கு,

> **யகர முதல்மொழி வருமிடத்து நிலைமொழி உகரம்முற்றத் தோன்றாது; ஆண்டு ஓர் இகரம் வந்து குறுகும்**

எனவுரையெழுதி, நாகியாது, வரகியாது, தெள்கியாது, எஃகியாது, கொக்கியாது, குரங்கியாது என உதாரணங்களும் எழுதிப் பின்னர்,

> இதனானே ஆகாரவீறு அகரம் பெற்றாற்போல ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் இகரம்பெற்று யகர முதல்மொழியோடு புணருமாறு கூறினாராயிற்று

என்றும் எழுதினார். பலாஅக்கோடு என்பதில், லாவில் உள்ள ஆகாரமும் பக்கத்துள்ள அகரமும் ஒலிப்பிரிவின்றிச் சேர்ந்து ஒலிப்பதுபோல 'நாகியாது' என்பதில் 'கி' என்னும் எழுத்தில் குற்றுகரவொலியும் இகரவொலியும் சேர்ந்தே ஒலிக்கும் என்பது அவர் கருத்தாம்.

எனவே ஈற்றுக் குற்றியலுகரம் வருமொழி உயிருடன் சேரும்போதும், யகரம் வர இகரமாகத் திரியும் போதும் தான் கெடாது நின்று வருமொழி உயிருடனும் வந்த இகரத்துடனும் அதாவது குற்றியலிகரத்துடனும் சேர்ந்தே ஒலிக்கும் என்பது இளம்பூரணர் கோட்பாடு என அறியலாம்.

**(ஊ) வடசொல் என்பது தமிழ்ச்சொல்லே:** செய்யுளில் பயிலும் சொற்களாக இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு கூறப்பட்டன. அவற்றுள் இயற்சொல்லும் திரிசொல்லும் தமிழ்ச்சொற்கள். திசைச்சொல் என்பது தமிழகத்தைச் சார்ந்த திசைகளில் வழங்கும் சொல். வடசொல் என்பதும் தமிழ்ச்சொல்; அது வடமொழியிலும் தமிழ்மொழியிலும் எழுத்தாலும் பொருளாலும் வேறுபாடின்றித் தமிழில் வழங்கும் சொல்லாகும். அதனால் வடசொல் என்பதும் தமிழ்ச்சொல்லே. அதனால் இளம்பூரணர் 'வடசொல் என்பது ஆரியச் சொற்போலும் சொல்'[23] என்று கூறி, உதாரணமாக உலகம், குங்குமம் என்பன கூறினார். சேனாவரையர் 'வடசொல்லாவது வடசொல்லோடொக்கும் தமிழ்ச்சொல் என்றாரால் உரையாசிரியர் எனின்' என்று தொடங்கி மறுப்புரை கூறினார்.

வடசொல் இருவகையில் அமைந்தது. வடமொழி எழுத்தும் தமிழ் எழுத்தும் வேறுபாடின்றி ஒலிக்க அமைந்த சொல் ஒருவகை; குங்குமம் என்பது தமிழிலும் வடமொழியிலும் உள்ள எழுத்துகள் ஒலி வேறுபாடின்றி அமைந்தது. மற்றொருவகை தமிழில் உள்ள எழுத்து வடமொழியில் திரிந்து அம்மொழிக்குரிய சிறப்பெழுத்தாக அமைய வழங்கும் சொல். உதாரணம் தசம் (தஸம்) என்பது. 'ச' என்னும் தமிழ் எழுத்து 'ஸ' எனத்திரிந்து வடமொழியில் வழங்குவது. இது வடமொழிச் சிறப்பெழுத்துடன் வருதலின் தமிழில் வழங்கும்போது அச்சிறப்பெழுத்துச் சிதைந்து தமிழ் எழுத்தாக அமைந்து வழங்கும்.

அப்படிச் சிதைந்து வரும் என்பதைத் தொல்காப்பியர் 'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' என்றார்.[24] இதன் பொருளாக,

> இருசார் எழுத்திற்கும் ஒத்த வழக்கினான் வாராது சிதைந்து வந்தனவாயினும் பொருந்தி வந்தன வாயினும் வரையப்படா வடசொல்லாதற்கு என்பது

என்றெழுதி, உதாரணமாக 'தசநான்கு' (நெடுநல்வாடை 115) என்பதைக் காட்டினார். தசம்-பத்து. தசம் என்பதில் உள்ள 'ச' என்பது வடமொழியில் 'ஸ' எனத் திரிந்து அது தமிழில் வழங்கும்போது 'ச' என்றே மாறி வழங்கும் என்பது இளம்பூரணர் கொள்கை. வடசொல் என்பதும் தமிழ்ச் சொல்லே என அவர் கொண்டதற்கு வடமொழிச்சொல் திசைச்சொல்லில் அடங்கும் எனக் கொண்டதாகலாம்.

## உரைக்கோட்பாடு

(அ) தொல்காப்பியர் ஒரு பொதுவிதி கூறினார் என்றால் அதனை முதன்மையாக வைத்துப் பின்னர் மற்றைய சிறப்பு விதிகளைக் கைக்கொள்வர் இளம்பூரணர். அதாவது சிறப்பு விதி கூறிய இடங்களிலும் முதலில் பொதுவிதியைக் கொண்டு வந்து பொருத்திப் பின்னர்ச் சிறப்பு விதியைப் பொருத்துதல் அவர் கொள்கை. அவ்வாறு பொருத்துமிடத்துப் பொதுவிதி பயன்படுமாயின் பொருத்தியும், பயன்படாதாயின் பொருத்திப் பின் விலக்கியும் சிறப்பு விதியினைப் பொருத்துவர்.

அகரவீற்றுச் சொற்கள் வருமொழி முதல் வல்லெழுத்துடன் சேரும்போது எவ்வாறு சேரும் எனக்கூற வந்த தொல்காப்பியர், வேற்றுமைப் புணர்ச்சியாயின் வல்லெழுத்துமிகும் என்று விதித்தார். உதாரணம் இருவிளக்கொற்றன் (இருவிளம் ஓர்ஊர்; அது மகரம் கெட்டு இருவிள என நின்று அகர உயிர் ஈறாயது).[25]

குழந்தை எனப் பொருள்படும் 'மக' என்பது வல்லெழுத்துடன் சேரும்போது இடையில் 'இன்' சாரியை பெறும் என்பர் தொல்காப்பியர்.[26] உதாரணம் 'மகவின்கை' என்பது. இங்கே ஓர் ஐயம் எழுகிறது. அகரவீற்றின் வேற்றுமைப் புணர்ச்சி பற்றிய முதற்சூத்திரத்தில் வருமொழி வல்லெழுத்து மிகும் என்று கூறப்பட்டது. அதன்படி மக+கை- மகக்கை என்று வரவேண்டும். 'இன்' சாரியை இடைவரின் வல்லெழுத்து மிகுதி என்னவாகும் என்பது வினா. இதற்கு விடையாக 'அத்தவண் வரினும் வரைநிலை யின்றே' என்னும் சூத்திரத்தில், 'மகத்துக்கை' என உதாரணம் எழுதி, மக, கை

என்பனவற்றின் இடையில் 'அத்து' எனும் சாரியை வந்த போதும் வருமொழி வல்லெழுத்து மிக்கிருத்தல் போல, 'மகவின்கை' என்பதிலும் வல்லெழுத்து மிக்கிருத்தல் வேண்டும், மிகவில்லை. அதனால், 'அவண்' என்றதால் 'மகவின்கை' என மேல்இன் சாரியை பெற்ற வழி இயைபு வல்லெழுத்து வீழ்வும்' என்றெழுதினார்.[27] இது பொதுவிதி பயன்படாமையின் விலக்கியவாறு.

(ஆ) ஆசிரியர் கூறாதவற்றைச் சூத்திரத்தின் மிகைச் சொற்களில் அடக்கிக்காட்டுதல் உரையாசிரியர் யாவரும் கைக்கொள்ளும் வழக்கம். அவற்றைச் சூத்திரத்திலேயே இடமிருக்குமானால் கண்டு பொருத்தி உரைகூறிச் செல்லுதல் இளம்பூரணர் வழக்கம்.

'பரணி' எனும் நாட்பெயர் வருமொழியுடன் சேரும்போது 'ஆன்' சாரியை பெற்றுவரும். உதாரணம் 'பரணியாற் கொண்டான்' என்பது. அதுபோல 'மகம்' எனும் நாட்பெயர் வருமொழியுடன் சேரும்போது 'ஆன்' சாரியையோடு அதற்கு முன் 'அத்து'ச் சாரியையும் பெற்று மகரம் கெட்டு முடியும் என்று விதித்தார் தொல்காப்பியர்.

**நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன**
**அத்தும் ஆன்மிசை வரைநிலை யின்றே**
**ஒற்றுமெய் கெடுதல் என்மனார் புலவர்**

என்பது அவர் சூத்திரம். உதாரணம் 'மகத்தாற் கொண்டான்' என்பது. இதில் 'ஆன்' சாரியைக்குமேல் 'அத்து'ச் சாரியை வந்தது. 'மகத்து ஞான்று கொண்டான்' என்னும் வழக்கும் இருப்பதைக் கண்ட இளம்பூரணர் 'ஞான்று' எனும் சாரியைக்குமேல் 'அத்து'ச் சாரியை வந்ததற்கு விதிகூற எண்ணினார். மிகையால் கூறாமல் சூத்திரத்திலேயே இடம் உண்டா என்று பார்த்து 'அத்தும் ஆன்மிசை வரைநிலையின்று' என்பதை, 'ஆன்மிசையும் அத்து வரைநிலையின்று' என உம்மையை மாற்றியமைத்து, அதனால் 'ஞான்று' எனும் சாரியைமேல் 'அத்து' வந்து 'மகத்துஞான்று கொண்டான்' என வந்தது என்று கூறினார்.[28]

(இ) சிறுபான்மை வழக்கும் கொள்ளுதல்: பெரும்பான்மை வழக்குகளை மட்டும் அன்றிச் சிறுபான்மை வழக்குகளையும் உரிய இடத்தில் பொருத்திக் காட்டுவர். 'தேன்ஞெரி' என்பது 'தேஞெரி' எனவும் வரும். 'தேன்' என்பதன் இறுதி எழுத்து னகரம் கெடாதும், கெட்டும் வருவதை உறழ்ச்சி என்பர் இலக்கண நூலார். அதுபோலவே வருமொழி முதல் எழுத்து மிகுதலும் மிகாமையும் உடைய இரண்டு நிலையையும் உறழ்ச்சி என்பர். தேன்+ஞெரி என்பன னகரவீறு

கெட்டுத் தேஞெரி எனவும், வருமொழி முதல் ஞகரம் மிகுந்து தேஞ்ஞெரி எனவும் வரும். அதனால் முன்னையது நிலைமொழியீறு பற்றிய உறழ்ச்சி எனவும் பின்னையது வருமொழி முதல் பற்றிய உறழ்ச்சி எனவும் கொள்ளலாம். தேன் என்பதற்கு முன் மெல்லெழுத்துவரின் எவ்வாறாம் எனக் கூறவந்த தொல்காப்பியர் இறுதியோடு உறழும் என்றார். 'மெல்லெழுத்தியையின் இறுதியோடுறழும்'[29] என்பது சூத்திரம். இச்சூத்திரம் நிலைமொழியீற்று உறழ்ச்சியும் வருமொழி முதல் உறழ்ச்சியும் கொள்ளுமாறு அமைந்துள்ளது. இவற்றுள் நிலைமொழியீறு பற்றிய உறழ்ச்சியையே கொண்டார் இளம்பூரணர். ஏனெனில் தேஞ்ஞெரி என்பது சிறுபான்மை வழக்காதலின்.

அதனால் அச்சூத்திரத்தில்,

> இறுதியோடுறழும் என்ற ஈறுகெட்டு வருமொழி மெல்லெழுத்து மிக்கும் மிகாதும் உறழ்தற்கும், அவ்வருமொழி மிகாது இறுதிகெட்டும் கெடாதும் உறழ்தற்கும் அவ்விரண்டற்கும் உரித்தாய்ச் சென்றதனை விலக்கி வருமொழி மிகாதே நிற்ப அவ்வீறே கெட்டும் கெடாதும் நின்று உறழும் என்பது கொள்ளப்பட்டது

என எழுதிப் பின்னர்,

> சிறுபான்மை ஈறுகெட்டுத் தேஞ்ஞெரி, நுனி, முரி என மெல்லெழுத்து மிகுதலும் கொள்க

என்றும் எழுதினார்.

இதனால் சிறுபான்மை வழக்கையும் முடிந்தால் பொருத்திக் காட்டுவர் என்பது புலப்படும்.

(ஈ) நூலாய்வுத் திறன் : தொல்காப்பிய அதிகாரப் பொருள்களைச் சுருக்கமாக வகைப்படுத்திக் கூறுவதில் இளம்பூரணர் சிறப்புறுகின்றார். எழுத்ததிகாரம் பற்றி, 'எழுத்து எனைத்து வகையான் உணர்த்தினாரோவெனின், எட்டுவகையானும் எட்டிறந்த பலவகையானும் உணர்த்தினார் என்பது' என்றெழுதி, எட்டு வகையும் எட்டிறந்த பலவகையும் யாவை என எழுதியதோடு பின்வரும் கருத்துகளையும் எழுதியது அவரது நூல் ஆய்வுத் திறனை வெளிப்படுத்தும்.

எழுத்திலக்கணம் கூறுவது எழுத்ததிகாரம். அது ஒன்பது இயல்களைக் கொண்டது. எழுத்ததிகாரம் கூறப்பட்டதன் நோக்கம், சொற்கள் நிலைவருமொழிகளாகத் தொடரும் போது நிகழும் எழுத்து

மாற்றம் பற்றிக் கூறுவதே என்பதை உணர்ந்த நிலையில் எழுத்ததிகாரம் புணரியல் தொடர்பானது என்பதைக் கண்டறிந்தார். புணரியல் நிலை வருமொழிகள் பற்றிய செய்கை கூறுவது. அதனால் அச்செய்கைக்கு வேண்டிய கருவியும் கூறியாக வேண்டும். எனவே புணரியலுக்கு வேண்டிய கருவியும் செய்கையும் எழுத்ததிகாரத்தில் கூறப்பட்டன. அவை புறப்புறக் கருவி புறக்கருவி அகப்புறக்கருவி அகக்கருவி எனவும், புறப்புறச் செய்கை புறச்செய்கை அகப்புறச் செய்கை அகச்செய்கை எனவும், வகைப்படுமாறறிந்தனர். நிலைமொழியிறுதி எழுத்துப் பற்றியது அகம் எனவும் வருமொழி முதல் பற்றியதும் பிறவும் புறம் எனவும் கொண்டார்.

நூல்மரபும் பிறப்பியலும் புணர்ச்சி பற்றியனவல்ல. அதனால் அவை புறப்புறக் கருவி.

மொழிமரபு புணர்ச்சிக்குரிய மொழிகள் பற்றியது ஆதலின் புறக்கருவி.

புணரியல் என்பது நிலை வருமொழிகளின் பொதுப்புணர்ச்சி பற்றியதாதலின் அகப்புறக்கருவி. புணரியலில் கூறப்படும் செய்திகள் முழுமைப்படாதன; ஆனால் தேவையானவை. தேவைப்படலால் அகமும் முழுமைபெறாமையால் புறமும் ஆயிற்று.

**எகரஒகரம் பெயர்க்குஈறாகா**[30]

என்பது போல் வருவன விதியாதலின் அகக்கருவி.

புறப்புறச் செய்கை என்பது நிலைவருமொழிகளின் இறுதி முதல் பற்றியின்றி அவற்றின் இடையில் வரும் உடம்படுமெய் விதிகூறல் போல்வது.

புறச்செய்கை என்பது வருமொழி முதல்எழுத்து பற்றிக் கூறுவது.

அகப்புறச் செய்கை என்பது நிலைமொழியீறும் வருமொழி முதலும் பற்றி அமையக்கூறுவது. உரிஞ் என்பது யானா, அனந்தா என வருமொழி வரின் இயல்பாம். அதாவது ஈறும் முதலும் இயல்பாகும் என்பது போல்வது (தொகைமரபு 21).

அகச்செய்கை என்பது நிலைமொழியிறுதி பற்றி மட்டும் அமைவது. தொகைமரபு, உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பன அவை.

இப்படி ஆய்ந்து கூறியது இளம்பூரணரின் ஆய்வுத் திறனைக்காட்டும். பிற அதிகாரங்களுக்கும் இப்படியேயாம்.

## முடிவுரை

இளம்பூரணரின் உரைக்கோட்பாடுகளுள் சிலவே கூறப்பட்டன. இளம்பூரணரும் உரையாசிரியரும் ஒருவரே என்பதும், இருவரும் வேறு வேறானவரே என்பதும் ஆக இருவேறு கருத்துகள் உள. உரையாசிரியர் மறுப்பாகச் சேனாவரையர் கூறுவனவற்றில் சில இளம்பூரணர் உரையில் காணப்படுவதும், சில காணப்படாமையுமே அதற்குக் காரணம். அவை பற்றி நுணுகி ஆய்தல் வேண்டும். அவர் உரையின் சிறப்பும் உரைமூலம் அவரது மாண்புகளும் ஆய்தல் வேண்டும். ஆய்வுடன் ஒரு நூல் வெளிவருதல் நல்லது.

## குறிப்புகள்

1. ஞானப்பிரகாசதேசிகர், அணிந்துரை, இளம்பூரணர் எழுத்துரை, (1967).

2,3. செந்தமிழ், தொகுதி 42, பகுதி 10-12.

4. செந்தமிழ், தொகுதி 42, பக்கம் 80.

5. நன்னூல் 359 மயிலைநாதர் உரை. உ.வே.சா.பதிப்பு, 1946.

6. நன்னூல் 369, ஷை.

7. சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், வேனிற்காதை, 1,2 உரை.

8. சிலப்பதிகாரம், பதிக உரைத்தொடக்கம்.

9. " , மதுரைக்காண்டம், கொலைக்களக்காதை 18.

10. " , மதுரைக்காண்டம், கொலைக்களக்காதை 43.

11. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், தொகைமரபு 11.

12. தொல்-பொருளதிகாரம், மரபியல் 90.

13. தொல். எழுத். புள்ளிமயங்கியல் 63.

14. " " " 64.

15. " " நூல்மரபு 3, 4, 5.

16. " " " 17.

17. " " மொழிமரபு 8.

18. " " புணரியல் 38.

19. நன்னூல், உயிரீற்றுப் புணரியல் 14.

20. தொல். எழுத்து, புணரியல் 3.

21. " " " 2.

22. " " குற்றியலுகரப்புணரியல் 5.

23. " சொல்லதிகாரம், எச்சவியல் 1.

24. " " " 5.

25. " எழுத்து, உயிர்மயங்கியல் 1, 14.

26. " " " 16.

27. " " " 17.

28. " " " 17.

29. " " புள்ளிமயங்கியல், 47.

30. " " உயிர்மயங்கியல், 70.

# சேனாவரையர்

தி. முருகரத்தனம்

## 1. தொல்காப்பிய உரையாசிரியர்கள்

தொல்காப்பியத்திற்கு உரையாசிரியர்கள் பண்டு ஏழு அல்லது எட்டுப் பேர் இருந்திருக்கலாம். ஆனால் எல்லாரும் தொல்காப்பியம் முழுவதற்கும் உரை எழுதவில்லை. எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் சொல்லதிகாரத்திற்கு இவர்களுடன் சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகியோரும் பொருளதிகாரத்திற்கு இளம்பூரணர் நச்சினார்க்கினியரோடு பேராசிரியர் என்பாரும் உரையெழுதியுள்ளனர். சொல்லதிகாரத்திற்கு மேலும் பெயர் அறியப்படாத ஒருவரும் ஒருசில இயல்களுக்கு உரை வகுத்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகிறது (பி.சா.சு. முகவுரை).

## 2. சொல்லதிகாரத்திற்கே பல உரைகள் ஏன்?

சொல்லதிகாரத்திற்கு மட்டும் மிகப் பலர் உரையெழுதியிருப்பதற் கான காரணம் ஆழ்ந்து எண்ணுவதற்குரியது. 'பொதுவாகப் பலரும் ஏறக்குறைய மாறாது இருக்கும் இலக்கண அமைப்பை விளக்கும் சொல்லதிகாரத்தையே படித்து வந்திருக்கிறார்கள். பலரும் பல உரைகள் எழுதியுள்ளார்கள், என ஒரு காரணம் சுட்டுகிறார் மொழிநூற் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் (ப.61). 'அவர் சொல்லதிகாரம்

போலப் பெரும் பயன்படாமை கருதி எழுத்ததிகாரத்திற்கு உரை செய்யாது ஒழிந்தமையின்......' எனச் சிவஞான முனிவர் ஒரு காரணம் கூறுகிறார் (முவை. அரவிந்தன் ப.112). வேறு ஒரு காரணமும் இருக்கலாம். வியாகரணம் என்பது வடமொழியாளரிடையே ஒரு தனிக் கல்வியாகப் பயிலப்பட்டும் போற்றப்பட்டும் வந்துள்ளது. அது மொழிபற்றிய பெருங்கல்வி. வடமொழியில் எழுத்துக்களைப் பற்றிய கல்வி பெரும்பாலும் எழுதாமறையாகிய வேதங்களை ஓதுதற்குத் தேவையானதாகக் கருதப்பட்டது. பெரும் பழமைக்குரியதாகி மறைந்து வந்த வேதத்தின் மொழியைச் சரியாக உச்சரிக்கும் தேவை ஏற்பட்டது. இந்தப் பணியைச் செய்யவே வடமொழியில் எழுத்தியல் பயன்பட்டது. சொல்லியல் தனியாக வளர்ந்தது. அதுவே வியாகரணம் எனப்பட்டது. வடமொழி மரபில் இலக்கணம் என்பது சொல்லிலக்கணமாகிய வியாகரணத்தையே குறிக்கும்.[1] வருணாசிர தருமம் சார்ந்த இந்து சமூகத்தில் சமஸ்கிருதம் எனப்படும் வடமொழிக்கு மேன்மையும் செல்வாக்கும் இருந்தது. கல்வியாளர் என்பதற்கு அடையாளமே வடமொழி அறிவுதான் என்பது அந்தக்கால நம்பிக்கை.[2] இதனால் வடமொழி தென்மொழிப் புலவரிடையே வியாகரணமாகிய சொல்லிலக்கணமே போற்றப்பட்டது. தொல்காப்பியரின் சொல்லிலக்கணத்துக்குப் பலர் உரையெழுதினர்.

## 3. சேனாவரையர் வாழ்க்கை

சேனாவரையர் என்னும் சொல்லும் ஆராய்ச்சிக்குரியதாக உள்ளது. சேனா+அரையர் எனப் பிரித்துப் பொருள் கொள்ளப்படுகிறது. அரையர் என்னும் சொல் ராஜா என்னும் வடசொல்லின் திரிபாகிய அரசர் என்னும் தமிழ்த் திரிபுச் சொல்லின் திரிபாகும். இடைக்காலத்துக் கல்வெட்டு ஆவணங்களில் 'படைத்தலைவர்' என்னும் பொருளில் சேனாவரையர் என்னும் சொல் பல இடங்களில் சிறப்புப் (பட்டப்) பெயராகவும் இயற்பெயராகவும் ஆளப்பட்டுள்ளது. தொல், சொல்லதிகார உரையாசிரியராகிய சேனாவரையர் தம் பெயரை இயற்பெயராகவே பூண்டவராகலாம் என்றும் தென்பாண்டி நாட்டு மொழி வழக்குகளைச் சிறப்பாகத் தம் உரையில் எடுத்தாண்டுள்ளமையால் அவர் தென்பாண்டி நாட்டவராகலாம் என்றும் குறிப்பாகத் தென்பாண்டி நாட்டு மாறோக்கத்தைச் சுட்டிப் பேசுவதால் அவர் மாறோக்கத்தைத் தம் நாட்டுப் பகுதியாகக் கொண்டிருக்கலாம் என்றும் 'ஆற்றூர்ச் சேனாவரையர்' என்பார் ஒருவர் தாமிரவருணி ஆற்றங்கரையில் அமைந்திருந்த ஆற்றூரின் சிவன்கோவில் சோமநாதக் கடவுளுக்குத் தம் முன்னோரின் நிலம் மனை ஆகியவற்றை வழங்கினார் என்றும்

ஆதலால் அவர் சைவ சமயத்தார் என்றும் அவரே இங்குப் பேசப்படும் சேனாவரையர் என்றும் அக்கல்வெட்டு மாறவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி. 1268-1310) காலத்ததாதலால் சேனாவரையர் கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவராக வேண்டும் என்றும் அவர் படைத் தலைவராக இருந்து ஓய்வு பெற்றவரோ அவர் முன்னோர் படைத்தலைவராக இருந்தவரோ ஆகலாம் என்றும் உரையாசிரியர் சேனாவரையர் மாணாக்கர்க்குப் பாடம் கற்பித்து வந்த ஆசிரியராகலாம் என்றும் அறிஞர்கள் மு. இராகவையங்கார், மு.வை. அரவிந்தன் (ப.114), மு. அருணாசலம் (ப.219), சதாசிவ பண்டாரத்தார் ஆகியோர் கருத்துரைத்துள்ளனர்.

இந்தக் கருத்துக்கள் எல்லாமே சொல்ஒற்றுமை, வழக்கொற்றுமை கருதி உய்த்து உணரப்பட்ட முடிவுகளே. இவை வலிவானவையாகவும் இல்லை; தெளிவானவையாகவும் இல்லை. சேனாவரையர் பற்றி இந்த வரலாறு உண்மையாகவும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். சேனாவரையர் என்னும் பெயர் 'சென்னவீரையர்' என்னும் தொடரின் திரிபு எனவும் ஒரு கருத்துக் கேட்கப்பட்டது.[3] இது உண்மையானால் முந்திய வரலாறு அனைத்தும் பொய்யாகிவிடும். எது உண்மையோ!

சேனாவரையர் காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டோ எதுவோ ஆயினும் அவர் இடைக்காலத்துப் பிற்பகுதி சார்ந்தவர் என்பது உறுதி. சொல்லதிகார உரையாசிரியர் இளம்பூரணர்க்குப்பின் வந்தவர் சேனாவரையர் என்பதும் உறுதி. இளம்பூரணர் கி.பி.11ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என மு. அருணாசலம் குறிப்பிடுகிறார். சேனாவரையர் இளம்பூரணர் கருத்துக்களை ஆங்காங்கே உடன்பட்டும் மறுத்தும் உரை சொல்லிச் செல்லுவதால் இக்கருத்துக்கள் உறுதிபெறுகின்றன.

## 4. சேனாவரையரின் வடநூற் புலமை

சேனாவரையருக்கு வேறொரு தகுதியுண்டு; அதனால் பெருமையும் உண்டு. அவர் தமிழோடு வடமொழிப் புலமையும் பெற்றவர் என்பதே அது. இந்த நூற்றாண்டு வரையிலான இடைக்காலத்துப் புலவர்க்குத் தென்மொழி வடமொழிப் புலமை ஒரு தகுதியாகக் கருதப்பட்டது. 'வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்' என வடநூற் புலமை பெற்ற சிவஞான முனிவர் சேனாவரையரைப் போற்றுகின்றார் என்பர் (மு.வை.அ. ப..124). வடவர் பண்பாடு சார்ந்த வருணாசிரம தருமச் சமூகத்தில் சமஸ்கிருதம் படித்தால்தான் பெருமை என்று கருதப்படுவது இயல்புதான்.

'வடநூல்துறையும் தென்திசைத் தமிழும் விதிமுறை பயின்ற நெறியறிபுலவன்' எனப் பரிமேலழகர் பாராட்டப்படுவதும் இப்பண்பாடு பற்றியதே. (பரிமேலழகர் உரைச் சிறப்புப் பாயிரம் மு.வை.அ. ப.319). நச்சினார்க்கினியர் போன்றோரும் வடமொழிப் புலமை பெற்றவராகலாம். ஆனால் சேனாவரையர் அதில் 'நிலை கண்டுணர்ந்தவர்' ஆவர். சேனாவரையரின் வடமொழி நூல், இலக்கணப் புலமைக்கு அவர்தம் உரையில் பல சான்றுகள் உண்டு. பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியாரைப் பின்பற்றி மு.வை. அரவிந்தன் (ப.க்125) இவ்வாறு எடுத்துக்காட்டுகிறார். 'அதிகாரம் (1), ஞாபகம், அநுவாதம் (10), யோகவிபாகம் (11), உத்தரம் (13), நேயம் (55), காரகம் (112), கரும கருத்தன் (246), தாது (246) ஆகிய வடமொழிச் சொற்களைத் தக்க இடங்களில் எடுத்தாண்டு விளக்கியுள்ளார்'.

'பிரயோக விவேக நூலாசிரியர் 'வாக்கிய பதீயம், அரி பீடிகை, ஏலாராசயம் முதலாயின வழங்குங் காலத்து அவ்வுரை நோக்கிச் சேனாவரையர் முதலாயினார் தொல்காப்பியத்திற்கு உரை எழுதினார் என்க' என்று கூறுகிறார்' (திங்ங.16).

தம் வடமொழிப் புலமையால் வடநூற் கருத்துக்கள் பலவற்றைத் தந்து சேனாவரையர் உரை வகுத்திருக்கிறார் எனப் பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் எடுத்துக்காட்டுகிறார். 'முயற்சியும் தெய்வமும் ஆகிய காரணங்களுள் தெய்வம் சிறந்தமையான்' (சொல். 242) என்பதால் அவர்தம் வேதாந்த அறிவு புலப்படுகிறது எனவும் 'பண்பொடு இவற்றிடை வேற்றுமை என்னை எனின் இன்மை பொருட்கு மறுதலை ஆதலின் பொருளின்கட்கிடக்கும் பண்பு எனப்படாது. அண்மையும் உண்மையும் பண்பிற்கும் ஒத்தலின் பண்பு எனப்படா; என்ன? குணத்திற்குக் குணம் இன்மையின்' (சொல்.214) என்பதால் தருக்க நூலறிவு புலப்படுகிறது எனவும் 'இவ்வாறு ஒரு பொருள் நுதலிற்றாக உரையாக்கால் சூத்திரம் ஒன்றுமாறு இல்லை' (சொல்.1) என்பன போன்ற இடங்களில் வாக்கியபேதம், நியமவிதி ஆகிய கருத்துக்களைத் தந்துரைப்பதால் பூர்வமீமாம்சக் கருத்துக்கள் புலப்படுகின்றன எனவும் தாது (சொல்.115) விசேடித்தல் (சொல்.82) ஆகிய இலக்கணக் கலைச்சொற்களைப் பயன்படுத்தலால் வியாகரண நூலறிவு புலப்படுகிறது எனவும் பி.சா.சு. எடுத்துக்காட்டுகிறார் (முகவுரை).

சேனாவரையர் வாழ்ந்த இடைக்காலத்தில் வடநூற்கருத்துக்கள் தமிழில் வந்து வழங்குதல் அரிதான வழக்கமல்ல. அப்போது வடமொழியும் தென்மொழியும் கொள்வினை கொடுவினையில் மிக

நெருங்கி வந்துள்ளன. நச்சினார்க்கினியரும் பிறரும் வடமொழி கற்றவராக இருந்திருக்கலாம். ஆனால் வட நூற் கருத்துக்களைப் பெரிதும் பயன்படுத்தித் தொல்காப்பியத்துக்கு உரை விளக்கம் செய்தவர் சேனாவரையர் என்பது ஒரு தெளிவான உண்மை.

சேனாவரையர் தரும் வடமொழி வழியிலான விளக்கங்கள் உண்மையிலேயே தொல்காப்பியத்துக்கு விளக்கம் தந்தனவா அல்லது தமிழ் இலக்கணத்துக்கு வளம் தந்தனவா என்பது ஐயமே. அவர் தரும் விளக்கங்கள் பெரும்பாலும் இருமொழிகளிலும் உள்ள ஒப்புமைகளைச் சுட்டுவனவாகவே உள்ளன. வடமொழியாளர் தமிழ் இலக்கணம் கற்க அவை உதவியாக இருக்கலாம். ஆனால் சேனாவரையர் போன்ற இடைக்காலத்து அறிவாளர்கள் வடமொழி கற்பது அந்த மொழிக்கு அந்தக் காலத்தில் கொடுக்கப்பட்ட உயர்வான சமூக மதிப்பும் தெய்வாம்சமும் காரணமாகவே. இந்த நிலை வருணாசிரம தருமத்தின் மொழி பற்றிய கோட்பாடே ஆகும். வருணாசிரம தருமச் சமூகத்தில் பிராமணர், பிரா்மணர் மொழி, அவர்தம் வேதங்கள், சாத்திரங்கள் தெய்வாம்சம் பெற்றவை; ஆகவே உயர்வானவை. தாழ்ந்த சூத்திரர் மொழி, இலக்கியங்கள் தாழ்ந்தவை. இத்தகைய சிந்தனை காரணமாகத்தான் 'உலக மொழிகளுக்கெல்லாம் வடமொழியே தாயாக நடக்கின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாம் இங்கும் பெறும்' எனச் சேனாவரையர் போன்றோர் பேசினர். 'தமிழ்ச் சொல் வடபாடைக்கண் செல்லாமையானும் வடசொல் எல்லாத்தேயத்திற்கும் பொதுவாகலானும்...' என ஒரு கோட்பாட்டினைச் சேனாவரையர் கொண்டுள்ளார் (நூ. 401). ஆகவே 'நீர்' என்பது ஆரியச் சிதைவு' (நூ.398) என அவர் கருத்துரைக்கிறார். நீர் என்பது ஆரியம் ஏறிய பல சொற்களுள் ஒன்றே என இன்றைய உலக அறிஞர் உடன்படுகின்றனர் (டி.பரோ. காணலாம்). சேனாவரையரின் இத்தகைய கொள்கைகள் எல்லாம் தமிழ் இலக்கணத்துக்கு ஊறு செய்வன என்பது இன்றைய மொழியியலார் கருத்து. மொழிகளுக்குத் தெய்வாம்சம் இல்லை; இருத்தலும் இயலாது என்பது மொழிநூல் உண்மையல்லவா!

நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்று சேனாவரையரும் பிராமணராக இருந்திருக்கலாம். ஆகவே அவருக்கு இக்கொள்கைகள் இயல்பானவை. வேளாண்மை பற்றிச் சில கருத்துக்களைச் சேனாவரையர் தம் உரையில் விளக்கியுரைப்பதால் அவர் வேளாளராகலாம் என அரவிந்தனும் அருணாசலமும் கருதுகின்றனர். அது வெறும் யூகமே.

தமிழ் மொழிபற்றியும் தமிழ் இலக்கணம் பற்றியும் இத்தகைய பொய்யான, புரட்டான, சுரண்டலான சிந்தனைகளின் விளைவே 'ஐந்தெழுத்தால் ஒருபாடை என அறையவும் நாணுவர் அறிவுடையோரே' என்பது பின் வந்த இலக்கணக்கொத்தின் ஆசிரியர் கூற்றுமாகும். இக்கூற்றில் அமைந்த செருக்கினை உணர்ந்து தமிழர் புழுங்கலாம் (மு.வ. மொழி வரலாறு).

இத்தகைய மொழிச் சிந்தனையோடு உறவுடையதுதான் அகத்தியர் தமிழுக்கு இலக்கணம் வகுத்தார் என்னும் கருத்துமாகும். இந்தக் கருத்து, தமிழ் மொழி வரலாற்றுக்கு ஒத்ததாகவும் இல்லை; உண்மையாகவும் இல்லை. அகத்தியர் தமிழ் தந்தார் என்பது போன்ற ஒரு கருத்து சேனாவரையர் உரையின் தொடக்கத்தில் காணப்படுகிறது. சேனா. உரையின் தொடக்கத்தில் காணப்படும்[4] பாக்கள் அங்கு அமைந்திருத்தலால் சேனாவரையரே பாடியிருக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுதல் இயல்பு.

1. **தன்தோள் நான்கின் ஒன்றுகை மிகூஉம்**
   **களிறுவளர் பெருங்கா டாயினும்**
   **ஒளிபெரிது சிறந்தன்று அளியஎன் நெஞ்சே**

2. **ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க்கு உணர்த்திய**
   **மாதொரு பாகனை வழுத்துதும்**
   **போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே**

3. **தவளத் தாமரைத் தாதார் கோயில்**
   **அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே**

4. **சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்**
   **பரமா சரியன் பதங்கள்**
   **சிரமேற் கொள்ளுதும் திகழ்தரற் பொருட்டே**

மாதொரு பாகனாகிய சிவபெருமானே தமிழைத் தோற்றுவித்து அகத்தியர்க்கு உணர்த்தினார் என இரண்டாம் பாட்டுக் கூறுகிறது. நான்காம் பாட்டு அதனை மேலும் வற்புறுத்துகிறது. எல்லாவற்றையும் கடவுளே படைத்தார், மொழியையும் கடவுளே படைத்தார், இந்திய மரபுச் சிந்தனையின் எதிரொலியே இக்கூற்றுகள். மொழியைப் பிரமன் படைத்தார் என்பர் பிராமணர்; விஷ்ணு படைத்தார் என்பர் வைணவர்; சிவன் படைத்தார் என்பர் சைவர். இவை சமயப் பூசல். 'வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணைய தென்மொழியைக் குடமுனிக்கு வகுத்தளித்தார் கொல்லேற்றுப்பாகர்' என்பது சைவர் திருவிளையாடற்

புராணம். தமிழைச் சூத்திரமொழி என்று ஏற்றுக்கொள்ளாத தன்மானம் மிக்க சைவத் தமிழர் கொடுத்த சாதிப்பூசலே இந்தப் பாட்டின் கருத்து. எவ்வாறாயினும் உலகியற் பொருளான மொழியின் உண்மை வரலாற்றையும் குறை நிறைகளையும் மாந்தர் முயற்சியையும் வரைந்து காட்டுதலை இந்தத் தெய்வாம்சக் கருத்துத் தடுத்துவிடுகிறது! இந்தத் தெய்வாம்சக் கருத்தினைச் சேனாவரையர் உரையில் வெளிப்படக் காணமுடியவில்லை. மேற்கண்ட நான்கு பாக்களையும் சேனாவரையர் பாடியிருப்பாரா என்பது ஐயமே. முதலில் விநாயகரை வழுத்திவிட்டுப் பின் அவர் தந்தை மாதொருபாகனை வழுத்துவது முறையாகுமா? இவ்வாறு சைவத் தெய்வங்களை வழுத்தியவர் பின் வைணவத் தெய்வமாகிய திருமகளை வழுத்துவரா? யார் யாரோ பாடியதைச் சேனாவரையர் பொறுப்பாக்க வேண்டியதில்லை.

## 5. சேனாவரையர் உரைத்திறம்

மொழிபற்றிய சிந்தனை, மொழிகளின் இலக்கணம் பற்றிய சிந்தனை உலகின் வேறு எந்த இனப்பண்பாட்டினைக் காட்டிலும் இந்தியப் பண்பாட்டில் மிகுதியாகவே கண்டுகொள்ளப்பட்டுள்ளது. இப்பெருமையில் பாணினிக்குப் பங்குண்டு. தொல்காப்பியர் பங்கு அவ்வாறு அறியப்படாமல் போனாலும் அவர் பங்களிப்பும் பெருமிதப்படத்தக்க அளவில் உண்டு எனலாம். அவ்வாறே பல்வேறு இலக்கண உரையாசிரியர்கள் பங்களிப்பும் உண்டு எனல் வேண்டும். இத்தகைய உரையாசிரியர் வரிசையில் சேனாவரையருக்கும் இடம் உண்டு என்பதில் ஐயம் இல்லை. இருப்பினும் உரையாசிரியர்களிடையே பொதுவான சில குறைகள் உண்டு. இவை பொதுவாகவே இந்தியச் சிந்தனையாளர்களிடையே காணப்படும் குறைகள்தாம். நாகரிகத்தின் தோற்றம், மொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும் மாற்றமும், போதிய தரவுகள் ஒருங்கு கிடைக்காமை, சமய சாதி இனப்பூசல் ஆகியவையே இந்தக் குறைகள். சேனாவரையரிடமும் இத்தகைய நிறைகளும் குறைகளும் உண்டு.

சேனாவரையர் சொல்லதிகாரத்தின் முதல்நூற்பாவிற்கு வரைந்த உரையின் பாங்கினைச் சிறிது ஆராய்ந்து பார்க்கலாம். இந்த உரை அவரது ஆராய்ச்சித் திறத்துக்குச் சிறந்த சான்று எனக் கருதப்படுகிறது (பி.சா.சு. சொல். குறிப்பு). இந்நூற்பா உரையில் பொதுவான மொழிச் சிந்தனைக் கருத்துக்கள் சில உண்டு.

5.1 'சொல்லாவது எழுத்தோடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத்தாய்; பொருள் குறித்து வருவது' என்பது சேனாவரையர் உரை. இதனில்,

சொல் எழுத்துக்களால் ஆவது என்னும் கருத்தும் அது பொருள் குறித்து வருவது என்னும் கருத்தும் ஆகச் சொல்லின் இலக்கணம் இரண்டு கூறப்படுகின்றன. இவை மேற்கோள், தடை, விடைகளால் நிறுவப்படுகின்றன. மேற்கோளாக முன்னை உரையாசிரியர் 'எழுத்தோடு புணர்ந்து' எனக் குறிப்பிட்டதைச் சேனா. சுட்டுகிறார். இங்கு ஒரு புடை ஒன்றுமை என்னும் உத்தி பயன்படுத்தப் படுகிறது. எழுத்தோடு புணர்தலாவது எழுத்துக்கள் தொடர்ந்து வரல். அதாவது 'எழுத்தாதல் தன்மை'யொடு வரல். இதனால் ஓரெழுத்து ஒரு மொழிகள் தழுவப்படுகின்றன. அசைச்சொற்கள் பொருள் குறிக்குமோ என்னும் தடையினை எழுப்பி அவர் வழங்கும் விடையில் முன்னிலை, இடப்பொருள், வியங்கோட்குறிப்பு, மூவிடப் பொதுமை, கட்டுரைச் சுவை ஆகியவை மொழியியல் குறிப்புக் கொண்டவை (Linguistic Significance) என்னும் கருத்து அறிவிக்கப்படுகிறது. இதனால்தான் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்னும் தொல்காப்பியர் கூற்றை (சொல். 155) அவர் மெய்ம்மைப்படுத்துகிறார்.

5.2 சொற்கள் பொருள் குறிக்கும் பாங்கை அடுத்து விளக்குகிறார் சேனாவரையர். சொற்கள் இரண்டு வகைப்படும், தனிமொழியும் தொடர்மொழியும் என. அவற்றுள் தனிமொழியாவது சமவாய ஆற்றலாம் பொருள் விளக்குவது. தொடர்மொழியாவது அவாய் நிலையானும் தகுதியானும் அண்மை நிலையானும் இயைந்து பொருள் விளக்கும் தனிமொழி ஈட்டம். சமவாய ஆற்றல் (இதனைச் சில பதிப்புக்கள் சமய ஆற்றல் எனக் குறிக்கின்றன) குணத்துக்கும் குணிக்கும் கருத்தாவுக்கும் கருமத்துக்கும் இடையில் அமைந்துள்ள பிரிக்க முடியா உறவு. சொல் இயல்பாகவே பொருள் குறிக்கும் தன்மைபெற்றது என்பது இதன் பொருள். சமய ஆற்றல் என்னும் பாடம் கொள்வார் சொல்லும் பொருளும் கொண்ட உறவு இறைவன் விருப்பம் என்பார். அவாய் நிலை, எழுவாய் பயனிலை உறவு போன்றவை; தகுதி, நீருக்கும் நனைதலுக்கும் இடையே அமைந்த உறவு போன்றவை. அண்மைநிலை இன்றை மொழிநூலார் கூறும் Immediate Constituency என்பதாகும்.

5.3 தொடரை இருமொழித்தொடர் பன்மொழித்தொடர் எனச் சேனாவரையர் இரு வகையாகக் காணுகிறார். இப்பாகுபாடு Simple and Complex Syntactic structures பற்றி விளக்குவதாகக் கொள்ளலாம்.

5.4 'அதிகாரம் என்றது ஒரு பொருள் நுதலிவரும் பல ஓத்தினது தொகுதியை' என அதிகாரத்திற்கும், 'சொற்கள் பொருள்கள் மேல்

ஆம் ஆறு உணர்த்தினமையால் கிளவியாக்கம் ஆயிற்று' எனக் கிளவியாக்கத்திற்கும் சேனாவரையர் விளக்கம் தருவது பொருள் பொதிந்தது.

5.5 'மக்கள் என்றது மக்கள் என்னும் உணர்வை'. 'எனவே மக்களே ஆயினும் மக்கள் என்று சுட்டாது பொருள் என்று சுட்டிய வழி உயர்திணை எனப்படாது' எனச் சேனாவரையர் தரும் விளக்கம் தமிழ் மொழியின் அடிப்படை இலக்கண விதி ஒன்றினை எடுத்துக்காட்டுகிறது. 'திருவள்ளுவரிடத்துக் கண்டேன்; திருவள்ளுவரில் பயணம் செய்தேன்' என்னும் தொடர்களுள் முன்னது முப்பால் செய்தாரைச் சுட்டுகிறது - உயர்திணை; பின்னது பேருந்தாகிய பொருளைச் சுட்டுகிறது - அஃறிணை. ஏழாம் வேற்றுமை உருபு ஏற்றலிலேயே இந்த வேறுபாடு புலப்படுகிறது.

5.6 'மக்கள்; அவர் அல பிற' எனத் தொல். நூற்பா செல்கிறது. 'மக்கள், பிற' என்றாலே போதும் அல்லவா என்ற தடைக்குச் சேனாவரையர் ஆற்றல் என்னும் பொருள்கோள் விதி ஒன்றினைச் சுட்டி மறுத்தல் குறிக்கத்தக்கது. 'அவர் அல' என்னும் சொற்கள் பெய்யப்பட்டதால் சொற்கள் ஆற்றலால் பொருள் புலப்படுக்கும் என்னும் விதி தேவையில்லாததாகி விடுகிறது என்பது கருத்தாகும்.

5.7 'ஆயிரு திணையின் கண் இசைக்கும்' எனச் சேனாவரையர் ஏழாம் வேற்றுமை உருபு விரிக்கிறார். 'ஆயிரு திணையினை இசைக்கும்' என இரண்டாம் வேற்றுமை உருபு விரிக்கிறார் இளம்பூரணர். இளம்பூரணர் உரையைப் போலியுரை என மறுத்துத் தன் கருத்தை நிலைநாட்டும் ஒரு கருத்தும் இவ்வுரையில் காணக் கிடைக்கிறது.

5.8 மொழியில் விகார வகையால் தொகுதல் உண்டு என ஓர் உத்தியினையும் சேனா. சுட்டிக்காட்டுகிறார்.

5.9 சேனாவரையர் உரையால் உயர்திணை அஃறிணை ஆகிய சொற்கள் தொல்லாசிரியர் குறிப்பாக - இலக்கணக் கலைச் சொற்களாக - வழங்குதலும் அறியப்படும். இவ்வாறு வழக்குச் சொற்களை ஆளாது கலைச் சொற்களை ஆண்டே அமைப்பதுதான் சூத்திரம் என்பதும் இவர் கருத்து.

5.10 'இசைக்குமன்' என வேறு ஒருபாடமும் உண்டு எனச் சேனாவரையர் காட்டுவது அவர்தம் உரை வகுக்கும் பொறுப்புணர்ச்சியையும் காட்டுகிறது.

இவ்வாறெல்லாம் ஆழமாகவும் விரிவாகவும் சேனாவரையர் உரை வகுக்கும் பாங்கினை அவர் முதல் நூற்பா உரையாலேயே தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகிறது. சேனாவரையர் உரைத்திறம் இவ்வாறு பாராட்டத்தக்கவாறு அமைந்திருப்பினும் ஓர் இரு குறைகள் அவர் உரையில் காணப்படுவதைச் சுட்டாமல் செல்லமுடியாது.

5.11 என்மனார், இசைக்குமன என்னும் சொற்கள் முதல் நூற்பாவில் ஆளப்பட்டுள்ளன. இந்தச் சொற்களே அரிய ஆட்சியாகவும் புதிராகவும் தோற்றம் தருகின்றன. இச் சொற்களுக்கு முன்னை உரையாசிரியர் தரும் விளக்கம்: 'என்ப என்னும் முற்றுச் சொல்லினது பகரம் குறைத்து மன்னும் ஆகும் என இரண்டு இடைச்சொற் பெய்து விரித்தார்'. சேனாவரையர் விளக்கம்: 'என்மனார் என்பது செய்யுள் முடிபு எய்தி நின்றதோர் ஆர் ஈற்று எதிர்கால முற்றுச்சொல். என்றிசினோர் கண்டிசினோர் என்பன முதலாயின அவ்வாறு வந்த இறந்த கால முற்றுச்சொல்' . . . . 'இசைக்கும் என்பது செய்யும் என்னும் முற்றுச் சொல். மன் என்னும் இடைச்சொல் மன எனத் திரிந்தது. மன் என்று பாடம் ஓதுவாரும் உளர்'.

என்மனார் என்னும் சொல்லுக்கு ஓர் இலக்கணமும் இசைக்குமன என்னும் சொல்லுக்கு வேறு ஓர் இலக்கணமும் சேனாவரையர் தருகிறார். என்மனார் என்னும் சொல்லில் எதிர்காலக் கிளவி எது எனச் சேனா. பிரித்துக்காட்டவில்லை. இசைக்கும் + மன என அந்தச் சொல்லை அவர் பிரிக்கிறார். என்மனார் என்னும் சொல்லில் மகரம் காலக்கிளவியாக வேண்டும். இசைக்கும் என்பதில் உம் காலக் கிளவியாதல் வேண்டும். 'மன' என்பதை அசையாகக் கழிக்கிறார் சேனா. இங்கு வேறு பல சொற்களையும் ஒருங்கு வைத்து எண்ண வேண்டும். சங்கத் தமிழில் தன்மை ஒருமை பன்மை, முன்னிலை ஒருமை பன்மை, படர்க்கை ஐம்பால் ஆகிய அனைத்து இறந்தகால முற்றுச் சொற்களும் காலக் கிளவியொடு 'அன்' சாரியை அல்லது திரிபாகிய னகரச் சாரியை பெற்றும் குறில் பாலறிகிளவிகள் பெற்றும் வருகின்றன. எ.கா. வந்தனன்; ஓடினன். 'அன்', சாரியையா வேறெதுவா என்பது தெளிவாகவில்லை. எதிர்காலத்து முற்று வினைச் சொற்களிலும் இந்த 'அன்' எதிர்பார்க்கலாம். அவையே 'என்மனார்' என்னும் பலர்பாற்சொல்; 'இசைக்குமன' என்னும் பலவின்பாற் சொல். பிற இடங்களுக்கும் பிற பால்களுக்கும் இத்தகைய 'அன்' பெற்ற முற்றுச் சொற்கள் இருந்திருக்க வேண்டும். இன்றைக்குப் போலச் சங்க இலக்கியச் சொல்லடைவுகள் கைவசம் இல்லாமையே உரையாசிரியர்கள் குழப்பம் கொள்வதற்குக் காரணமாகிவிட்டது.

5.12 போதிய தரவுகளை முழுமையாகப் பார்வையிடாமையால் நேர்ந்த மற்றொரு குழப்பமும் உள்ளது. அது சுட்டெழுத்துக்கள் பற்றியது. 'செய்யுளாகலான் ஆயிருதிணை எனச் சுட்டு நீண்டது' என்பர் சேனா. ஆனால் சங்க காலம் தொட்டே தமிழ் வரலாற்றில் சுட்டுக்களும் வினாவெழுத்தும் நீண்டே வழங்கின. அவை குறிலாகியது சங்ககாலத்திற்குப் பின்னரே ஆகும். இந்த வரலாற்றுண்மையை முன் பின்னாகக் கொள்கின்றனர் உரையாசிரியர்கள் (காண்க:முருகரத்தனம் - சுட்டு நீண்டதோ? மொழி ஆய்வுக் கட்டுரைகள், 1978).

5.13 மேலும் சேனா., 'என்றிசினோர், கண்டிசினோர் என்பன முதலாயின...... இறந்த கால முற்றுச் சொல்' என்கின்றார். 'அயர்ந்திசின், உற்றிசின்' எனப் பாலறிகிளவிகள் இல்லாமலே தன்மை ஒருமை வினைமுற்றுக்களாகவும் 'ஆன்றிசின், கண்டிசின்' என ஏவல் வினைக் கிளவிகள் இல்லாமல் ஏவல்களாகவும் அகநானூற்றில் அவை வழங்குகின்றன. 'இசின்' என்னும் கிளவியின் ஆட்சி பற்றி முடிந்த முடிபாக இப்போது எதனையும் கூற இயலவில்லை. சேனா. கருத்துக்கள் குன்றக் கூறலாக அமைகின்றன.

இவ்வாறு முதல் நூற்பாவிற்குச் சேனா. வரைந்த உரையே அவர் புலமைத் திறத்தை எடுத்துப் பேசுவதாக உள்ளது. சேனா. வேறுசில நூற்பாக்களுக்கு வரைந்த உரைக்கருத்துக்களும் ஆராய்ச்சிக்கு உரியனவாக உள்ளன.

5.14 தொல். வினையியல் முதல் நூற்பா (சொல். 200) 'இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா அம்முக்காலமும்' எனக் காலங்கள் மூன்று எனக் குறிப்பிடுகிறது. முக்காலங்களுக்கும் எடுத்துக் காட்டுகளாகச் சேனா. 'உண்டான், உண்ணாநின்றான், உண்பான்' என்பனவற்றைத் தருகிறார் (பிற உரையாசிரியர்களும் இவ்வாறே தருகின்றனர்). ஆனால் தமிழ் மொழி வரலாற்றில் சங்க காலத் தொகை நூல்களில் இறந்த காலம் வினைச் சொற்களில் தெளிவாக அமைந்துள்ளது போன்று நிகழ்காலம் அமைந்திருக்கவில்லை; எதிர்காலம் தெளிவாக அமைந்துள்ளது. எதிர்காலமும் நிகழ்காலமும் இணைந்தமைந்திருப்பதாகத் தெரிகிறது. 'ஆநின்று' என்னும் நிகழ்கால வழக்கும் சங்க காலத்தில் இல்லை. செய்யா என்னும் உடன்பாட்டு வினையெச்சத் தொடராக இதனைக் கொள்ள வேண்டும் போலும்.

5.15 சங்கத்தொகை நூல்களில் - தும், இதன் மாற்று வடிவங்களான -டும், -றும் ஆகியவை நிகழ்காலத்துக்குரிய தன்மைப் பன்மை

வினை முற்றுகளாக வழங்குகின்றன. இவ்வாறே -கும் என்பதும் வழங்குகிறது. எ.கா. உறுதும், சேறும், கண்டிகும் (ஆனால் இவற்றுக்கு நேரான தன்மை ஒருமைச் சொற்கள் இல்லாதது புதிராக உள்ளது!).

முன்னிலையில் -தி, -திர் என்பவை நிகழ்காலத்தில் ஒருமை, பன்மையில் வழங்குகின்றன. ஆனால் இவற்றைச் சேனா. எதிர்காலத்துக்குரியனவாகச் சுட்டுகிறார். உரைத்தி, உண்டி (<உண்ணுதி) முதலான முன்னிலை ஒருமை வினைமுற்றுக்களை எடுத்துக்காட்டியவர் 'உரைத்திர், உண்டிர்' முதலான பன்மை வினைகளை இனங்காணத் தவறிவிட்டார். அனைத்துத் தரவுகளையும் கொண்டு ஆராய வேண்டிய சிக்கலே இது. சேனா. காலத்தில் இவ்வாய்வு அரிதே.

5.16 தொல்காப்பியத்தில்,

> கடதற, என்னும்
> அந்நான்கு ஊர்ந்த குன்றியல் உகரமொடு
> என்ஏன் அல்என வரூஉம் ஏழும்
> தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே

என்னும் நூற்பா வினையியலில் காணப்படுகிறது. சேனா. எடுத்துக்காட்டுக்களாக 'உண்கு, உண்டு, வருது, சேறு, உரிஞுகு, திருமுக.....' என்பவற்றைத் தருகிறார். சங்கத் தொகை நூல்களில் குறிப்பாக அகநானூற்றில் - குகரஇறுதிக்குச் சான்று கிடைக்கிறது. ஆனால் டுகர துகர றுகர இறுதிகளுக்குச் சான்றில்லை. இது ஒரு புதிர் போன்றுள்ளது. ஒருமை பன்மை இறுதிக் கிளவிகளின் பட்டியல் (Paradigm) முழுமையாக வேண்டும் என்பதற்காக இவை கற்பிக்கப்பட்டனவா என்பதும் புலப்படவில்லை. தொல்காப்பியத்திலேயே இந்தச் சிக்கல் அடங்கியுள்ளது. இவை பிற்கால வழக்கா என்பதும் ஆராயப்படவேண்டியது.

5.17 தொல்காப்பியர் பாலறி கிளவிகளைத் தொகுத்து விளக்குகிறார். அவை சங்க காலத்திற்கும் சங்க காலத்தை அடுத்த பதினெண்கீழ்க்கணக்கின் காலத்திற்கும் அதாவது இடைக்காலத் தமிழின் தொடக்க காலத்திற்கும் பொருந்துவனவாக - தழுவியனவாக உள்ளன. அவற்றைக் காலத்தை ஒட்டிப் பிரித்துப் பார்ப்பதே தமிழ்மொழி வரலாறு. அம், ஆம், எம், ஏம், என், ஏன், அன், அல் என்னும் தன்மைப் பாலறிகிளவிகளைத் தொல். தருகிறது. இவற்றுக்குச் சூழலும் உண்டு; காலமும் உண்டு. எடுத்துக்காட்டாக 'எம்' என்னும் பன்மை விகுதி சங்கத் தமிழில்-குறிப்பாக அகநானூற்றில் காணோம். 'யான்'

'என்', என ஆனது; ஆனால் 'யாம்' 'அம்' என ஆனது போலும். இத்தகைய வரலாற்றறிவினை இடைக்காலத்து உரையாசிரிடத்துக் காண இயலவில்லை.

5.18 சேனாவரையரின் ஒரு கண்டுபிடிப்பு பாராட்டுதற்குரியது. மூவிடத்து ஒருமை பன்மைப் பாலறி கிளவிகளைத் தொல்காப்பியர் வகுக்கிற போது சேனா. தம் உரையில் 'அன்' என்னும் சாரியை வழக்குப் பற்றிக் குறிப்பிடுகிறார். "முன்னின்ற நான்கீறும் இறந்த காலம் பற்றி வருங்கால் 'அம்மும் எம்மும் கடதற' என்னும் நான்கன்முன் 'அன்' பெற்று வரும் 'ஏம்' 'அன்' பெற்றும் பெறாதும் வரும். 'ஆம்' 'அம்' பெறாது வரும்."

இவ்வாறு சேனா. பலவான பாலறிகிளவிகளுக்குச் சூழல் காணும் முயற்சி மேற்கொண்டுள்ளார். சங்க காலச் சூழல் இவ்வாறு அமைந்துள்ளது: 'அன்சாரியை' சங்கத் தமிழில் இறந்த கால எதிர்கால வினை முற்றுக்களில் தவறாது இடம்பெற்றிருந்தது. அவை இடம்பெற்றபோது பாலறி கிளவியின் உயிர் குறிலாகத்தான் இருக்கும். காலம் செல்லச் செல்லப் பாலறி கிளவியின் உயிர் நீட்சி பெறத் தொடங்கியது. அப்போது 'அன்சாரியை' மறைந்தது. சங்க காலத்தை அடுத்துப் பாலறி கிளவிகள் நீட்சிபெற்று நிலைத்து விட்டன.

இந்த வரலாற்றைச் சேனா. முதலான உரையாசிரியர்கள் அறியவில்லை; வாய்ப்பும் இல்லை.

## 6. முடிவுரை

'சேனா. உரை இருப்புக்கடலை என்போர் உளர்...... ஆளா இயல்பிற் சேனாவரையர் என்பர் தேசிகர்...... இவருடைய நடை எளிய நடை அன்று. இவருடைய இருமொழிப் புலமையையும் ஆராய்ச்சித் திறத்தையும் கருத்துத் தெளிவையும் பண்பாட்டையும் உரையுட் பரக்கக் காணலாம்...... சூத்திரத்தின் தேவையையும் கட்டுரைச் சுவை செய்யுள் இன்பம் ஆகியவற்றையும் ஆங்காங்கே உணர்த்திச் செல்வார்...... தொல்காப்பியரைப் போற்றியே எங்கும் உரை எழுதுவார். அவர் வடநூற் கருத்தையே தழுவியே நூல் செய்தார் என்பது இவர் கருத்து. சில சமயம் இவர் அவர் கருத்திலிருந்து மாறுபடுவதும் உண்டு...... இவர் தருக்கம் வல்லவர். அதுபற்றித் தம் உரையைத் தருக்க முறையிலேயே எழுதிக் கொண்டு போவார்.....பல இடங்களில் தாம் மேற்கோள் காட்டுகின்ற இலக்கியப் பகுதிகளிலுள்ள பொருத்தமான இலக்கணப் பகுதியையும் நன்கு விளக்கி எழுதுகிறார். அளவில்லாத செய்திகளையும் உணர்த்துபவராவார்.'

'இவர் உரையுள் பத்துப்பாட்டு முழுமையும் மேற்கோளாக வருகிறது. எட்டுத்தொகை..... எடுத்தாளுகிறார். சிலப்பதிகாரம் இறந்து போன..... இந்திரகாளியமும் காக்கைபாடினியமும்..... தமிழ் நெறி விளக்கமும் ஆகிய இலக்கண நூல்கள்......' என நீளமாகச் சேனாவரையரை மு. அருணாசலம் பாராட்டுகிறார். இவை முற்றிலும் பொருத்தமே.

தொல்காப்பியர், நன்னூலார் முதலான இலக்கண ஆசிரியர்தம் தமிழ்க்கொடை அளப்பரிது. அவர்களுக்கு அடுத்துச் சிறப்புடையவர்கள் இலக்கண உரையாசிரியர்களே. அவர்களுள் சேனா. தலைமை சான்றவர் என்பதில் ஐயம் இல்லை.

## குறிப்புகள்

1. P. Thirugnanasambandan in his **Sanskrit Tamil Contact,** says:

   'While laying down rules specifying the permissible consonant sounds that occur as finals in words he (Tolkaappiyar, seems to have felt the need to have such rules as the Vedic Praatishaakyas have for the Vedic language, though Paanini does not lay down such rules for classical Sanskrit. It may be that Paanini did not consider such an excercise a part of grammar.' p.43.

   'It may be noted that the Praatishaakyas are concerned only with the phonetic aspect of Vedic language whereas Paanini is concerned with the phonetic morphological and syntactical aspects of both the classical and Vedic language'. p.45.

2. இருபதாம் நூற்றாண்டில் ஆங்கிலமும் தமிழும் அறிந்தோர் போற்றப்படுவதும் அத்தகையோர் ஆங்கில நூல்களையும் மரபுகளையும் மேற்கோள்காட்டிப் பேசுவதும் தமிழிடையே ஆங்கிலம் கலந்து பேசுவதும் எழுதுவதும் இடைக்காலத்துப் பண்பாட்டு மயக்கம் போன்றதே. ஒருகால் இப்பண்பாடு தேவையும் ஒருகால் போலியும் ஆகலாம்.

3. எனக்குப் பாடம் கற்பித்த பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் நடேச நாயக்கர் அவர்கள் இந்தக் கருத்தைக் கூறினார்கள். சேனாவரையரைத் 'தென்னூற்கடலும் வடநூற்கடலும் நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்' என்றே அவர்கள் அறிமுகம் செய்தார்.

4. 'இந்நான்கு பாடல்களும் தாமோதரம்பிள்ளை பதிப்பில் காணப்படுகின்றன. இராஜகோபாலப்பிள்ளை பதிப்பில் இல்லை. இவர் கொடிய வைணவரானமையால், இப்பாடல்களை நீக்கிப் பதிப்பித்தார் என நாம் கருதுகிறோம்' - மு. அருணாசலம், த.இ.வ.13ஆம் நூற்றாண்டு, ப.223.

## பார்வை நூல்கள்


1. அரவிந்தன், மு.வை., உரையாசிரியர்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1968.
2. அருணாசலம், மு., **தமிழ் இலக்கிய வரலாறு**, காந்திவித்தியாலயம், மாயூரம், 1970.
3. சுப்பிரமணிய சாஸ்திரி, பி.சா., **தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு**, திருச்சிராப்பள்ளி, 1930.
4. மீனாட்சி சுந்தரனார், தெ.பொ., **தொல்காப்பியம் - சொல்லதிகாரம் கல்லாடனார் விருத்தி**, தமிழ்நாடு அரசு, 1971.
5. முருகரத்தனம், தி., **மொழி ஆய்வுக் கட்டுரைகள்**, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1978.
6. வரதராசன், மு., **மொழி வரலாறு**, தி.தெ.சை.சி. நூற்பதிப்புக் கழகம், சென்னை.
7. **தொல்காப்பியம் சொல்லதிகாரம்**, சேனாவரையர் உரை, தி.தெ.சை.சி. நூற்பதிப்புக்கழகம், 1952.
8. Thirugnana sambandan, P., **Sanskrit Tamil Contact,** International School of Dravidian Linguistics, Thiruvananthapuram, 1992.

# தொல்காப்பியமும் தெய்வச்சிலையாரும்

சோ.ந. கந்தசாமி

## அறிமுகம்

தமிழ்மொழியின் அமைப்பினையும் வாழ்வியலோடு பொருந்திய தமிழ் இலக்கியத்தின் கட்டுக்கோப்பினையும் வியத்தகு வகையில் விளக்கிக்கூறும் செவ்வியல் இலக்கணம் தொல்காப்பியம் ஆகும். இப்பெரும் பனுவலை யாத்தற்கு முன்னர், ஆசிரியர் தொல்காப்பியர் தம் காலத்து அறிஞர்கள் எழுதிய பல்துறை சார்ந்த படைப்புக்களையும், தமக்கு முற்பட்ட புலவர் பெருமக்கள் படைத்திருந்த இலக்கியங்களையும், மக்கள் வழக்காக விளங்கிய பிசி, அங்கதம், முதுசொல், பண்ணத்தி முதலிய இலக்கிய வகைகளையும், அன்றாடப் பேச்சில் அவர்கள் புலப்படுத்திய வழக்காறுகள் பலவற்றையும் பயின்று தோய்ந்து ஆய்ந்து போதிய தரவுகளைத் தொகுத்தார். இதனால், புலம்தொகுத்தோன் என்று இவரைப் பாயிரம் பாராட்டுகிறது. நாட்டு வழக்கிலும் ஏட்டு வழக்கிலும் பயிலப் பெற்ற தமிழ் மொழியின் அடிப்படை அமைப்பினை விளக்கும் வகையில் உயிர், மெய், சார்பு என்ற எழுத்துக்களின் நெடுங்கணக்கு வரிசை, அவை மொழியில் தோன்றும் பாங்கு, மொழி ஒலியைப் பேச்சுறுப்புக்கள் வெளிப்படுத்தும் முறை ஆகிய இலக்கணக் கூறுகளை எழுத்ததிகாரத்தின் அறிமுகப்பகுதி ஆகிய நூல்மரபு, மொழி மரபு, பிறப்பியல் ஆகிய மூன்றியல்களில் தோன்றக்

கூறினார். பிழை நீக்கிப் பேசுதலும் எழுதுதலும்தான் மொழியின் செவ்வியல் தன்மையினைப் பேணிக்காக்கும் என்ற பெருநோக்கில், புணரியல் முதலாகக் குற்றியலுகரப் புணரியல் முடிய ஆறு இயல்களில் புணர்ச்சி இலக்கண விதிகளைத் தொகுத்தும் வகுத்தும் இலக்கணம் கூறியுள்ளார்.[1] இலக்கணம் என்பது இயல்பு, தன்மை, அழகு என்ற பொருள் பயத்தலின், தமிழ் மொழியின் இயல்பினையும் தன்மையினையும் அழகினையும் தக்க வகையில் புலப்படுத்திய ஆற்றலும் தெளிவும் தொல்காப்பியரிடம் காணலாம்.

ஒலிக்கூறுகளால் உருவாக்கப்படும் சொல்லின் வகைகளையும், அவை தொடர் மொழியில் வழங்குதற்குரிய வழி முறையினையும் விளக்கமாகவும், விரிவாகவும் கூறும் நோக்கில் சொல்லதிகாரத்தினை யாத்துள்ளார். தனிமொழி, தொடர்மொழி எனச் சொல் இருவகைப்படும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் (pre-historic period) சொற்கள் பலவும் தனிமொழியாகவே வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும். சிந்தனை வளர்ச்சியும் பண்பாட்டு முதிர்ச்சியும் நாகரிகமேம்பாடும் சிறந்த காலத்தில் மக்கள் தனிமொழிகளினால் தொடர் மொழிகளை அமைத்துக்கொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர்; பாடல்கள் புனைந்து கலை படைத்தனர். எனவே தான், சொல்லதிகாரத்தின் தொடக்கத்தில் தமிழ்மொழியின் தொடர் அமைப்பினைத் தொல்காப்பியர் விரிவாக ஆராய்ந்து விளக்க இலக்கணம் (Descriptive Grammar) தந்துள்ளார். கிளவியாக்கத்தில் அல்வழித் தொடர்களுக்கும், பின்வரும் இயல்களில் வேற்றுமைத் தொடர்களுக்கும் இலக்கணம் கூறி, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் ஆகிய பகுதிகளில் தனிச்சொற்களின் இலக்கணத்தை விரித்துரைத்து, விடுபட்ட இலக்கணக் கூறுகளை இறுதியில் எச்சவியலில் அமைத்து முழுமை செய்தார்.

## மொழியியலும் பாவியலும்

இன்றைய மொழியியலாரின் கருத்துப்படி எழுத்ததிகாரம் என்பது தமிழின் ஒலியனியல் (Phonology), பேச்சொலியியல் (Acoustic phonetics), உருபன் ஒலியனியல் (Morpho-phonemics) என்ற மொழியியற் கூறுகளை எடுத்துரைப்பது எனலாம். சொல்லதிகாரம் என்பதுதான் இலக்கணம் (Grammar) என்று விதந்து கூறப்பெறும் பகுதியாகும். வடமொழியாளர் கூறும் வியாகரணத்துடன் ஒருபுடை ஒப்புமை கூறத்தக்கது. மொழியியலார் கூறும் உருபனியல் (Morphology), தொடரியல் (Syntax) என்ற பகுதிகள் சொல்லதிகாரத்தில்

இடம் பெற்றுள்ளன. மேலும் சொற்பொருளியல் (Semantics) பற்றியும் தொல்காப்பியர் போதிய அளவில் புகன்றுள்ளார். இடையியல், உரியியல் காண்க. பொருளதிகாரத்தின் பொருளியல், மரபியலும் காணத்தக்கவை.

எழுத்தும் சொல்லும் இலக்கிய ஆக்கத்திற்கு அடிப்படை. இலக்கியம் மக்களைப் புறக்கணித்தோ, சமுதாயத்தை விட்டு விலகியோ செல்லின் யாருக்குப் பயன்படும்? ஆதலின், மக்கள் வாழ்வியலை மையமாகக் கொண்டு புனையப் பெறும் இலக்கிய அமைப்புக்குரிய பொருண்மை பொருளதிகாரத்தின் முற்பகுதியில் அகத்திணை, புறத்திணை, களவியல், கற்பியல், பொருளியல் என்ற ஐந்து இயல்களில் சுவைபடச் சொல்லப் பெற்றுள்ளது. திறனாய்வாளர்கள் இலக்கிய ஆக்கத்திற்கு உரிய முதல் உறுப்பாகச் சுட்டும் பொருண்மை அல்லது அடிக்கருத்து (subject matter, theme) இந்த ஐந்தியல்களில் முறைப்படத் தொல்காப்பியரால் வகையும் வரையறையும் செய்து விளக்கப் பெற்றிருத்தல் காணத்தக்கது. கருத்துக்களை வனப்புறப் புலப்படுத்தும் உணர்ச்சி (emotion), கற்பனை (imagination) என்ற உறுப்புக்கள் இலக்கிய ஆக்கத்திற்கு வேண்டப்படும் என்பர் இன்றைய திறனாய்வாளர். இவ்விரு உறுப்புக்களையும் முறையே மெய்ப்பாட்டியல், உவமவியல் ஆகிய இரண்டு பகுதிகளில் தொல்காப்பியர் சிறப்பாக வெளியிட்டுள்ளார். பொருண்மை, உணர்ச்சி, கற்பனை என்பனவற்றை வடிவம் (form) என்ற கட்டுக்கோப்பில் அழகுணர்ச்சி பொருந்தப் புலப்படுத்துதலின் தேவையினைத் திறனாய்வாளர் பெரிதும் வலியுறுத்துவர். தொல்காப்பியர் செய்யுளியல் என்ற பேரியலில் இலக்கிய வடிவங்களையும், வகைகளையும் விரிவாக ஆராய்ந்து இலக்கணம் கூறியுள்ளார். மரபியலில் எஞ்சிய பொருட் கூறுகளை எடுத்துரைத்தார்.[2]

எனவே, தொல்காப்பியம் ஒரு முழுமையான இலக்கணமாகவும் (Grammar), பாவியலாகவும் (Poetics and Prosody) அமைந்து தமிழர்தம் பண்பாட்டுச் சின்னமாக ஓங்கி ஒளிவீசுகிறது எனலாம்.

## தொல்காப்பியத்தின் தனித்தன்மை

சங்க இலக்கியங்களில் தொல்காப்பியம் விதித்துள்ள இலக்கண மரபுகள் மாற்றமும் புதுமையும் பெற்று விளங்குதல் காணலாம். ஆதலின் தொல்காப்பியரின் காலம் பாட்டும் தொகையும் ஆகிய சங்க இலக்கியங்களுக்கு (கி.மு. 400 - கி.பி. 300) முற்பட்டது என்பது அறிஞர் பலரின் துணிவு. பாணினி யவனானி என்ற சொல்லைக் கிரேக்கர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தியுள்ளார்.

சங்கப் பாக்களிலும் யவனர் என்ற சொல் மிகப்பல இடங்களில் பயிலப் பெற்றது. எனின், தொல்காப்பியர்,

ஆவோ(டு) அல்லது யகரம் முதலாது

என்று திட்டவட்டமாகக் குறித்துள்ளார்.[3] ஆதலின், மொழிக்கு முதலில் யகரமெய் 'ஆ' என்ற ஒரே உயிர் எழுத்துடன் மட்டுமே கூடி, யாண்டு, யாது, யானை, யாமை என மொழிக்கு முதலில் வருதலே அவர் காலத்து வழக்கு என்பதும், யவனர், யூபம், யூகம் என்பன அவருக்கு மிகவும் பிற்காலத்து வழக்கு என்பதும், இக்காரணத்தினாலும் தொல்காப்பியர் சங்க இலக்கியம், பாணினி எழுதிய அட்டாத்தியாயி (கி.மு. 400) ஆகிய பனுவல்களுக்கு முற்பட்டவர் (கி.மு. 500) என்பதும் தெளியலாம்.

தொல்காப்பியருக்கு வடமொழி, பாலி, பாகதம் முதலிய பலமொழிப் பயிற்சி உண்டு. எனவேதான், தம் பெருநூலில் ஒப்பியல் நோக்கில் சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார். மொழிபெயர்ப்பினைப் பற்றிக் கூடப் பேசியுள்ளார். ஓரிரு சான்றுகள் சுட்டுதல் சாலும். வடமொழிவாணர் மூலாதாரம், உந்தி, நெஞ்சு என்ற அக உறுப்புக்களில் (internal organs) எழுப்பப்படும் ஓசைக்குக் கூட அளவு (மாத்திரை) கூறினர். அவர் கருத்தினைத் தொல்காப்பியர் அறிந்தும்கூட அதனைப் பிறப்பியலில் கூறவில்லை. மாறாக, தமிழ் மரபினைப் பின்பற்றி உந்தியில் எழுப்பப்படும் காற்று தலை, மிடறு, நெஞ்சு என்ற இடங்களில் நிலைபெற்றுப் பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்ற உறுப்புக்களில் பொருந்திப் பலவகை இயக்கத்தினால் (articulation) வெளிப்படும் பொருள் பொதிந்த ஓசைக்குத்தான் மெய்தெரி வளியிசை (meaningful sound) அளவு கூறியுள்ளார். இவ்வுண்மையினை,

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே;
அஃ(து)இவண் நுவலா(து) எழுந்துபுறத்(து) இசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபு நுவன்றிசினே (நூ. 102)

எனவரும் நூற்பாவில் தெளிவுறுத்தியுள்ளார். இங்ஙனமே பொருளதிகாரத்தில் தமிழர்களின் வாழ்வியலாகிய அன்பொடு பொருந்திய அகன் ஐந்திணை ஒழுக்கத்திற்கு வடமொழி இலக்கியங்களில் காணப்பெறும் கந்தருவ நெறியை ஒருபுடையான் ஒப்புமை கூறியுள்ளார்.

ஒப்புமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளுதற்குரியதும் ஆராய்தற்குரியதும் ஆகிய இன்னோரன்ன கருத்துக்களைத் திரிபுவாதிகள் வடமொழி வழிப்பட்டதாகக் கருதி வழுக்கினர். இவர்களை வடமொழி வழித்தமிழாசிரியர் என்றே கி.பி. 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய யாப்பருங்கலவிருத்தியும், வீரசோழியமும் சுட்டிச் சென்றன. தென்மொழி வடமொழி ஆகிய இருமொழிகளிலும் புலமை முற்றிய மாதவச் சிவஞானமுனிவர் தமிழ் இலக்கணத்தின் தனித்தன்மையினை,[4]

> தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும் குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும் வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படாமையானும்....

என்று ஒப்பியல் ஆய்வாளராக நின்று அறுதியிட்டுக் கூறுதலை வடமொழிச் சார்பாகப் பேசும் இன்றைய அறிஞர் பெருமக்கள் கூர்ந்து நோக்குதல் வேண்டும். மேலும் தொல்காப்பியர் சர்வாதிகாரியாக நின்று தமிழுக்கு இலக்கணம் இயம்பிலர். மொழியின் வளர்ச்சியையும் மாற்றத்தையும் கருத்தில் கொண்டு, பழையன கழிதற்கும் புதியன அறிமுகம் ஆவதற்கும் உரிய முறையில் நூற்பாக்களில் மிகைச்சொல் (இலேசு), விதப்புக் கிளவி முதலியவற்றையும் புறநடை நூற்பாக்களையும் அமைத்துள்ளதன் வாயிலாக இலக்கண உலகில் ஒரு சனநாயகவாதியாகவே காட்சி தருகிறார்!

தமிழர்களுக்குக் கிடைத்த தனிப்பெரும் இலக்கணம் தொல்காப்பியம்; தனிப்பெரும் அறநூல் திருக்குறள்; தனிப்பெருங் காப்பியம் சிலப்பதிகாரம். ஏனையவும் ஆக்கம் தருவன உள.

தொல்காப்பியர் ஒவ்வோர் அதிகாரத்தின் இயல்களையும் அளவையியல் நோக்கில், காரண காரிய அடிப்படையில் அமைத்திருத்தல் அறியத்தக்கது; அழகுணர்ச்சி தோன்ற ஒவ்வோர் அதிகாரத்தையும் ஒன்பது ஒன்பது இயல்களாகப் பகுத்துக் கூறுதலும்

காணத்தக்கது. பாணினியின் இலக்கணம் அஷ்டாத்தியாயி எனில், தொல்காப்பியம் நவாத்தியாயி எனலாம்!

## தொல்காப்பிய உரைவளம்

தொல்காப்பியத்திற்குப் பலர் உரை கண்டனர். அவருள் இளம்பூரணர் நூல் முழுமைக்கும் தமிழ் மரபினைப் பேணும் நோக்கில் எளிய, இனிய உரை தந்த முதல்வர் ஆவர். தமக்கு முற்பட்ட உரையாசிரியர்களைக் குறிப்பினும், அவர்தம் உரைகள் கிடைத்தில. எழுத்ததிகாரத்திற்கு நச்சினார்க்கினியரும் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையரும் பொருளதிகாரத்திற்கு இளம்பூரணரும் எழுதிய உரைகள் சிறப்பாகப் பயிலப் பெறுவன. எனின், பொருளதிகாரத்திற்குப் பேராசிரியரின் உரை மிகுபயன் தருவது.

சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகிய நால்வர் உரையும் முழுமையாகக் கிடைத்துள்ளன. கல்லாடனாரின் உரை இடையியல் முதல் 10 நூற்பாக்கள் வரை மட்டுமே கிடைத்துள்ளது. பெயர் அறியப்படாத உரை 'பழைய உரை' என்ற பெயரில் கழக வெளியீடாக வந்துள்ளது. இவ்வுரை கிளவியாக்கம், வேற்றுமையியல் ஆகியவற்றுக்கும் வேற்றுமை மயங்கியல் இறுதி இரண்டு நூற்பாக்கள் தவிர எஞ்சிய பகுதி வரையுமே கிடைத்துள்ளது. விளிமரபு முதலியவற்றுக்குக் கிடைக்கவில்லை. இவ்வுரைகள் யாவும் உரையாசிரியர்கள் தமக்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டு எழுதப்பெற்ற மூல நூலினை எவ்வெவ்வாறு புரிந்து கொண்டனர் என்பதையே புலப்படுத்தும். அவர்தம் கருத்துக்களில் ஏற்பனவும் ஏலாதனவும் ஆக உள்ளனவற்றை இக்காலத்து அறிஞர் பெருமக்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். புதிய விளக்கங்களும் கண்டுள்ளனர். இக்கட்டுரையில் தெய்வச்சிலையார் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு வரைந்துள்ள உரைகளில் காணப்படும் சுட்டத்தக்க கருத்துக்கள் சிலவற்றை நுணுகிநோக்கும் முயற்சி மேற்கொள்ளப்பெறும்.

## தெய்வச்சிலையார்

**தெய்வச்சிலை** என்ற சொல் தெய்வமால்வரை எனச் சிலப்பதிகாரம் போற்றும் கயிலை மலையினைக் குறிக்கும் என்றும், எனவே தெய்வச்சிலையார் என்ற சொல் கயிலை நாதன் ஆகிய சிவனைச் சுட்டும் என்றும் கூறுவர். எனின், சிலை என்ற சொல்

மலையினை மட்டும் குறிப்பதன்று; வில்லையும் குறித்தலின் தெய்வச்சிலையார் என்ற பெயர் தெய்வத்தன்மையுடைய வில்லினை ஏந்திய இராமபிரானையும் குறித்தல் கூடும். கி.பி. 8ஆம் நூற்றாண்டினராகிய திருமங்கை மன்னன் திருப்புல்லாணி என்னும் திவ்விய தேசத்தில் கோயில் கொண்ட பெருமாளை,

> **வவ்வித் துழாயதன்மேற் சென்ற தனிநெஞ்சம்**
> **செவ்வி அறியாது நிற்கும்கொல்? நித்திலங்கள்**
> **பவ்வத் திரையுலவு புல்லாணி கைதொழுவேன்**
> **தெய்வச் சிலையார்க்(கு) என் சிந்தைநோய் செப்புமினே**

என்று மங்களாசாசனம் செய்துள்ளார். **திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம்பெற்றுள்ள அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் போன்ற ஈசன் திருப்பெயர்களைப் பின்னோர் தம் மக்கட்குச் சூட்டியிருத்தல் போல், திருமங்கை மன்னனின் பாடலில் காணப்பெறும் தெய்வச் சிலையார் என்ற திருமால் பெயரினையும் சூட்டியிருத்தல் கல்வெட்டுக்களினால் தெரியவரும் உண்மையாகும். கல்வெட்டுச்** சான்றுகளின் அடிப்படையில் தெய்வச்சிலையாரின் வரலாற்றினை முதன்முதல் ஆராய்ந்த பேரறிஞர் மு. இராகவையங்கார் தம் சாசனத் **தமிழ்க் கவி சரிதம்** என்னும் நூலில், இவர் காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு எனத் தெளிவுறுத்தியுள்ளார். திருமால் பெயரினரேனும் இவர் சைவசித்தாந்தத்தில் ஈடுபாடுடையவர் என்பது கிளவியாக்கத்தில், **மன்னாப் பொருளும் அன்ன இயற்றே** என்ற நூற்பாவிற்கு வரைந்துள்ள உரையில் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளும் ஒருவரால் படைக்கப் பெறாமல் என்றும் விளங்குதலின் அனாதி எனக் குறித்திருத்தலால் புலனாகும். இவர் நெசவுத் தொழில் புரிந்தவர் என்பது, **'வினையே செய்வது செயப்படு பொருளே'** (நூ.109) என்ற நூற்பாவின் இனிய உரைவிளக்கத்தால் உய்த்துணரப்படும். இவர் முருகப்பெருமானிடம் நிறைந்த பற்றுடையவர் என்பது எச்சவியலில் **'உலகம் உவப்ப'** (நூ.408) எனத் தொடங்கும் திருமுருகாற்றுப்படைக்கு வரைந்துள்ள விரிவுரையால் அறியப்படும்.

தெய்வச்சிலையார் சங்க இலக்கியங்களையும் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம் போன்ற அற இலக்கியங்களையும் காப்பியங்களையும் ஆழமாகக் கற்றவர் என்பது அவர்தம் உரையில் அவற்றிலிருந்து மேற்கோள் காட்டியிருத்தலால் புலப்படும். அன்றியும் வடநூல் இலக்கணமும் பயின்றுள்ளார். தொல்காப்பிய உரையாசிரியர்களில் இவர் ஒருவரே இரண்டிடங்களில்

பாணினியைப் பெயர் சுட்டித் தம் உரையில் குறித்துள்ளார். அன்றியும் தமக்கு முற்பட்ட இளம்பூரணர், சேனாவரையர் ஆகியோரின் உரைகளையும் நன்கு ஆராய்ந்து ஏற்பன கொண்டு ஏலாதனவற்றை மறுத்துச் சென்றுள்ளார். இவர் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியிருப்பினும் எழுத்ததிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் நுணுகிக் கற்றவர் என்பது இவர் எடுத்துக்காட்டும் மேற்கோள் நூற்பாக்களினால் இனிது விளங்கும். மொழியியல் உணர்வுடன் பல இடங்களில் இவர்தரும் விளக்கம் அமைந்துள்ளது. தம் கருத்துக்களை விளக்குதற்குப் பல்வகை உத்திகளையும் பயின்றுள்ளார். ஏனையோர் கொள்ளாத பல பாட வேறுபாடுகளை இவர் கொண்டுள்ளார். பிறர் குறிக்காத புதுக் கருத்துக்கள் பலவற்றைத் தம் உரையில் குறித்தனர். முதற்கண் இவர் சுட்டும் இலக்கண ஆசிரியர்களைப் பற்றிச் சற்று உற்று நோக்குவோம்.

## தெய்வச்சிலையார் சுட்டும் இலக்கணிகள்

### அகத்தியனார்

தொல்காப்பியர்க்கு ஆசிரியர் அகத்தியனார் என்பது ஒரு பொதுக் கருத்து. எனின், இப்போது அகத்தியம் என்ற பெயரில் காணப்படும் இலக்கண நூலைச் செய்தவர் தொல்காப்பியர்க்குப் பிற்பட்டவர் என்றே தெரிகிறது. தொல்காப்பியர் செய்யுள் ஈட்டச் சொல்வகை நான்கனுள் திசைச் சொல்லையும் குறித்துள்ளார். எச்சவியலில்,

**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**
**தம்குறிப் பினவே திசைச்சொற் கிளவி** (4)

எனவரும் நூற்பாவில் சுட்டப்பெறும் திசைச்சொல் பற்றி உரையாசிரியர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர். செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரு நிலங்கள்: பொதுங்கர் நாடு, தென்பாண்டி நாடு, ஒளி நாடு, குட்டநாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு, பூழிநாடு, மலைநாடு, அருவா நாடு, அருவாவடதலைநாடு, குடநாடு என்பனவாகும் என்பர் இளம்பூரணர். சேனாவரையர் பொதுங்கர் நாட்டிற்கு மாறாகப் பொங்கர் நாட்டினைக் குறித்தனர். செந்தமிழ் நாட்டில் வழங்குவன இயற் சொற்கள் என்பதும், அதனைச் சார்ந்த பன்னிரு நிலத்தும் வழங்குவன திசைச் சொற்கள் என்பதும் தொல்காப்பியரின் கருத்தாகும். பன்னிரு நிலம் என்பது செந்தமிழ்

வழங்கும் நாட்டினைச் சார்ந்த (பக்கத்து) நிலப்பகுதிகள் என்பதும்; அங்குப் பேசப் பெற்றுத் தமிழில் இடம் பெறுவன திசைச் சொற்கள் என்பதும் புலனாகும் எனினும், தெய்வச்சிலையார் வேறுவகையான ஒரு விளக்கத்தையும் தந்துள்ளார். மேற்சுட்டிய பன்னிரு நிலங்களும் செந்தமிழ் நாட்டின் வேறுவேறு பகுதிகள் ஆகும். இவை செந்தமிழ் நாட்டகத்த என்று குறித்தனர். எனினும், நூற்பாவில் செந்தமிழ் சேர்ந்த நாடு என்று கூறப் பெற்றதால், பன்னிரு இடங்களும் பிறநாடாகல் வேண்டும் என்று அவர்காலத்து அறிஞர் சிலர் கூறிவந்த கருத்தினையும் சுட்டியுள்ளார். குமரியின் தென்கரைக்கு அப்பால் கடலில் விளங்கிய பழந்தீபம், கொல்லம், கூபகம், சிங்களம், கன்னடம், வடுகம், கலிங்கம், தெலிங்கம், கொங்கணம், துளுவம், குடகம், குன்றகம் என்ற பன்னிரு தேயங்களில் பேசப் பெற்று மக்கள் கூட்டுறவினால் தமிழில் வந்து வழங்கும் சொற்களே திசைச் சொற்கள் எனப்படும் என்றார். முதலில் பார்த்த கருத்தின்படி, செந்தமிழ் நாடு என்பது செவ்விய தமிழ் வழங்கும் பகுதி. இது பெரும்பாலும் சங்கம் வைத்துத் தமிழ் ஆராய்ந்த மதுரைப் பகுதியைக் குறிக்கும். ஆதலின், பாண்டிநாட்டார் பேசும் தமிழே செந்தமிழ் (Standard language); ஏனைய பன்னிரு நிலங்களும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகள்; அங்குப் பேசப் பெறுவன தமிழே எனினும், அவை செந்தமிழ் ஆகா; கொடுந்தமிழ் அல்லது வட்டார வழக்கு (Dialects) எனப்படும். இதனையே திசைச்சொல் என்றார் தொல்காப்பியர் என்பது ஒரு கருத்து. எனின், தமிழகம் என்பது பாண்டிய நாடு மட்டும் அன்று. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம் என வரும் பாயிரப் பகுதியைத் தெய்வச்சிலையார் எடுத்துக்காட்டி அதுவே செந்தமிழ் நிலம் என்றும், அதற்குப் புறத்தே பழந்தீபம் முதலாகச் சொல்லப் பெற்ற நாற்றிசை நாடுகளிலிருந்து வாணிபத்தின் பொருட்டு மக்கள் கூட்டுறவினால் தமிழில் வந்து பயிலும் சொற்களே திசைக் கிளவி என்றும் எண்ணினார். நச்சினார்க்கினியர் இவ்விருவகைக் கருத்துக்களையுமே ஏற்று விளக்கம் தந்தார். தெய்வச்சிலையார், திசைச்சொற்கள் பற்றிய மற்றொரு பட்டியலையும் தந்துள்ளார்:

> ........... குடபால் இருபுறச் சையத்து
> உடனுறைபு கூறும் தமிழ்திரி நிலங்களும்
> முடியுடை மூவர் இருநில ஆட்சியின்
> அரசு மேம்பட்ட குறுநிலக் குடுமிகள்
> பதின்மரும் உடனிருப்பு இருவரும் படைத்த
> பன்னிரு திசையில் சொன்னயம் உடையவும்

என்பது **அகத்தியர் சூத்திரம்** என்று காட்டியுள்ளார். சையம் என்பது மேற்கு மலையினைக் குறித்தற்குப் பரிபாடலில் வழங்கப்பெறும் சொல்லாகும் (11.14; 12.2). தமிழ் திரிபுற்றுப் பேசப்படும் நிலங்களிலும் மூவேந்தருக்கு அடங்கிய மேம்பட்ட குறுநில அரசர் பன்னிருவரின் நிலங்களிலும் வழங்கப்பெறுவன திசைச் சொற்கள் என்ற அகத்தியச் சூத்திரக் கருத்தினைத் தெய்வச்சிலையார் சுட்டியிருத்தலின், இவர் காலத்தில் அகத்தியம் என்ற இலக்கண நூல் வழங்கியது எனலாம். எனினும், இந்நூற்பாவின் ஆசிரியராகிய அகத்தியர் தொல்காப்பியருக்குப் பிற்பட்டவர் என்பதில் ஐயமில்லை. மேற்காட்டிய நூற்பாவில் இடம்பெறும் **சையம்** என்ற சொல் வழக்கு, தொல்காப்பிய விதிக்குப் புறம்பாகவும் பிற்பட்டதாகவும் இருத்தலே போதிய சான்றாகும்.

தொல்காப்பியர் 'பன்னிரு நிலம்' என்பதற்கு என்ன கருத்துடையார் என்பதைப் புரிந்துகொள்ளும்படி தெய்வச்சிலையாரை உள்ளிட்டோர் கூறும் கருத்துக்களை நாம் கவனத்துடன் ஏற்றுக் கொள்ளுதல் கூடும். எனின், மணிமேகலையிலும் திருமந்திரத்திலும் பதினெட்டு மொழிகள் குறிக்கப்பெற்றுள்ளன. நன்னூலார் செந்தமிழ் சேர்ந்த பன்னிரு வட்டாரங்களில் வழங்கி வருவனவும், தமிழகம் நீங்கிய அயல்நிலங்களிலிருந்து வழங்கிவரும் பதினெண்மொழிகளும் திசைமொழிகள் எனப்படும் என்றார் (சொல். 273). காலந்தோறும் தமிழ் மக்கள் உலகின் பல பகுதிகளுடனும் உறவாடியதன் விளைவாகத் திசைச் சொற்கள் மிகுதியாகத் தமிழில் பயின்றன எனலாம்.

தமிழில் அகத்தியர்க்கு ஒப்பாக வடமொழியில் பாணினியைக் கூறுதல் ஒருமரபு. இரண்டிடங்களில் தெய்வச்சிலையார் பாணினியாரைக் குறித்துள்ளார். அவ்விடங்களை இவண் காண்போம்.

### பாணினியார்

மூன்றாம் வேற்றுமைப் பொருண்மையினை விளக்கும் தொல்காப்பியர் ஒருவினை ஒடுச்சொல் உயர்பொருளை உணர்த்தும் பொருள் வழித்தோன்றும் என்று சிறப்புவிதி கூறினார்:

**ஒருவினை ஓடுச்சொல் உயர்பின் வழித்தே** (நூ.88).

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகிய நால்வரும் ஒரே வகையாக உரை கண்டனர். **அரசனொடு சேவகர் வந்தார், ஆசிரியனொடு மாணாக்கர் வந்தார்** என்று எடுத்துக்காட்டுக்கள் தந்தனர். இத்தொடரில்

வருதல் என்ற ஒருவினையைச் செய்பவர் அரசரும் சேவகரும், ஆசிரியரும் மாணாக்கரும் ஆவர். அரசர் சேவகர், ஆசிரியர் மாணாக்கர் என்ற இரு சொற்களில், ஒடு உருபினை எச்சொல்லுடன் சார்த்தி வழங்குதல் வேண்டும் என்பதை நூற்பா சுட்டுகிறது. உயர்பின் வழித்தே என்ற பகுதியில், உயர்பு என்பது உயர்பொருளை உணர்த்தும் பெயர்ச் சொல்லினைக் குறிக்கும். அரசர் சேவகர், ஆசிரியர் மாணாக்கர் என்ற இணைகளில் உயர்புடையவர் அரசரும், ஆசிரியரும் என்பதால், அச்சொற்களுடன் ஒடு உருபு கொடுத்து வினை முடிபு செய்தல் வேண்டும் என்பது உரையாசிரியர்கள் நால்வரின் உள்ளம் ஆகும்.

எனின் உலக வழக்கில், நாயொடு நம்பி வந்தான் என்ற தொடர் காணப்படுகிறது. நாய், நம்பி இருவரும் வருதல் என்ற ஒருவினை புரியினும், ஒடு உருபினை நம்பிக்குச் சேர்க்காமல், நாய்க்குத் தந்து தொடர் அமைத்தல் வழுவன்றோ என்ற வினாவினை இளம்பூரணர் முதலில் எழுப்பினார். மற்றையோரும் அதே எடுத்துக்காட்டினையே கூறி அவர் வழி விளக்கம் காண முற்பட்டனர். இளம்பூரணர் உயர்வு பலவகைப்படும் என்றும், குலம், தவம், நிலை, உபகாரம் என்பனவற்றில் ஒன்றானும் பலவானும் உயர்வு தோன்றும் என்றும் கருதினார். இவற்றுடன் கல்வி, வினை என்பனவற்றையும் சேர்த்துக் கூறினார் நச்சினார்க்கினியர். ஆதலின், நாயொடு என்று இழிந்த பொருட்கு ஒடு கொடுத்துச் சொல்லியது அந்நிலைக்கண் அது சிறப்புடைத்தாகலின் என்று நாயின் உயர்வினைக் குறித்தனர். சேனாவரையர், யாதானும் ஓராற்றான் அதற்கு உயர்வு உண்டாயின் அல்லது அவ்வாறு கூறார் என்று ஒருவாறு நாயும் உயர்வுடையது என்ற கருத்தில் எழுதினார். நாயினை இழிபிறப்பாக இகழினும், நன்றியுணர்வும் தலைவன்பால் காட்டும் பேரன்பும் காரணமாக மிகப்பெரிய யானையினும் உயர்புடையதாகவே நாலடியார் போற்றுகிறது:

> யானை அனையவர் நண்(பு)ஒரீஇ நாய்அனையார்
> கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் - யானை
> அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல்
> மெய்யதா வால்குழைக்கும் நாய் (213)

எனவே, நாய் ஓராற்றான் உயர்புடையதாகவே எண்ணப் பெறுதலின், நாயொடு நம்பி வந்தான் என்ற தொடர் வழுவற்றதாகவே கொள்ளப்பெறுதல் வேண்டும் என்பது உரையாசிரியர் நால்வரின் உள்ளம் ஆகும்.

நாயொடு நம்பி வந்தான் என்ற தொடர் உரையாசிரியர்களின் காலத்தில் மாபாரதத்தில் நம்பியாகிய தருமன் நாயுடன் (தருமதேவதை) வானகம் சென்ற கதைக் குறிப்பினைக் கொண்டு கூறப்பட்டதாகவும் தோன்றுகின்றது. வினோபாபாவே கீதைப் பேருரையில் குறித்துள்ள ஒரு பகுதியை இங்குச் சுட்டுதல் தகும்.[5]

When Dharmaraj reached at last the gates of heaven, there was only a dog with him. Bhima, Arjuna and the others had fallen by the way side. He was told, **"You can come in, but the dog is not allowed to enter"**. Dharmaraj answered: **"If my dog cannot enter, neither will I". One who performs devoted service, even if it is only a dog, is superior to those who only always thinking of themselves. The dog proved its superiority even to Bhima and Arjuna.**

இப்பகுதியை ஊன்றி நோக்கின் வீமன், அருச்சுனனையும் விட நாய் ஓராற்றான் உயர்வுடைமை புலனாகும். எனவே, ஒடு உருபு உயர்புடைய பெயர்ச் சொல்லுடன் சார்த்தி ஒருவினை உணர்த்தும் தொடரில் வழங்கப் பெறும் என்பதுவே தொல்காப்பியரின் கருத்து என்பதை உரையாசிரியர் நால்வரும் புரிந்து கொண்டனர். எனின், தெய்வச்சிலையார் **உயர்பின் வழி** என்பது **'சிறவாத பொருள்'** என விளக்கம் கண்டார். எ.டு. **அமைச்சரொடு இருந்தான் அரசன்.**

இத்தொடரில் இருத்தல் என்ற ஒருவினைக்கு உரிய அரசர், அமைச்சர் ஆகிய இருவரைக் குறிக்கும் பெயர்களில் சிறவாத அமைச்சருடன் ஒடு கொடுத்துச் சொல்லப் பெற்றது என்றார். இங்ஙனம் கூறுதற்கு மேற்கோளாக, **இப்பொருள் பாணினியார்க்கும் ஒக்கும்** என்றார் (ப. 59). பாணினி முனிவரின் அட்டாத்தியாயி (II.3.19),

**sahayukte apradhāne**

என்று விதிப்பதையே தெய்வச்சிலையார் சுட்டியுள்ளார். அப்பிரதானச் சொல்லுடன் (-பிரதானம் என்பது சிறப்பு; அப்பிரதானம் - சிறப்பில்லாதது) மூன்றன் உருபு (sahayukta) வரும் என்றார். இங்ஙனம் வருதற்கு எடுத்துக்காட்டாக, **புத்ரேண ஸஹ ஆகத: பிதா** என்ற தொடரினை மேற்கோள் காட்டுவர். இதன்பொருள் **மகனொடு தந்தை வந்தார்** என்பதாம்.[6] தொல்காப்பியர் கூறும் வேற்றுமை இலக்கணத்தையும் பாணினி கூறுவதையும் ஒப்பிட்டுப் பயின்ற தெய்வச்சிலையார் இருவரும் ஒரே விதமாகவே ஒருவினை ஒடுவிற்கு

இலக்கணம் கூறினர் என்று நிறுவும் முயற்சியில் ஈடுபட்டார். என்றாலும், **சிறப்புடைய பொருள்மேல் ஓடுவரும் எனப் பொருள் உரைத்தார் உளர் ஆயினும்** என்று தமக்கு முற்பட்ட உரையாசிரியர்களைக் குறித்தனர். ஒப்பியல் நோக்கில் கற்க வேண்டும் என்ற எழுச்சியால் தெய்வச்சிலையார் எழுதியிருப்பினும், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோரின் விளக்கமே தமிழ் மரபு காப்பதாக அமைந்துள்ளமை போதரும்.

வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பனவற்றையும் அவை போன்ற பிற பண்புகளையும் உணர்த்துவனவாய் ஒரு பொருளின் இயல்பினை விசேடித்து இருசொல்லும் ஒரு பொருள் மேல் வரும் தன்மையினையுடைய தொகைச் சொல் பண்புத்தொகை எனப்படும். இத்திறனை,

> **வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின் (என்று)**
> **அன்ன பிறவும் அதன்குணம் நுதலி**
> **இன்னது இதுவென வரூஉம் இயற்கை**
> **என்ன கிளவியும் பண்பின் தொகையே** (நூ. 411)

எனவரும் நூற்பாவினால் அறியலாம். எ.டு. கருங்குதிரை, வட்டப்பலகை, நெடுங்கோல், தீங்கரும்பு. இப்பண்புத் தொகைச் சொற்களின் முதற்கூறு ஆகிய கருமை, வட்டம், நெடுமை, தீ(ம்) என்பன முறையே குதிரை, பலகை, கோல், கரும்பு என்ற பொருள்களின் இயல்பினைச் சிறப்பித்து வந்தன. இவை முறையே வண்ணம், வடிவம், அளவு, சுவை என்ற பண்புகளைக் குறித்தன. இவற்றை Attributive Construction என்பர் மொழியியலார். எனினும், கருங்குதிரை என்ற பண்புத் தொகையினைக் கருமையை உடைய குதிரை என்று வேற்றுமைத் தொகையாகவும் எண்ணுதற்கு இடம் உண்டு. என்றாலும், வேற்றுமைத் தொகை இன்ன பொருள் இன்ன இயல்புடையது என்று விசேடித்து வருதல் இல்லை. எனவே, அங்ஙனம் விசேடித்து வருவது பண்புத் தொகைக்கு மட்டுமே பொருந்துதலின், கருங்குதிரை முதலியவற்றை வேற்றுமைத் தொகையாகக் கொள்ளாது பண்புத் தொகையாகவே கொள்ளுதல் வேண்டும் என்பது தெய்வச்சிலையாரின் கருத்தாகும். மேலும் 'வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை என்பன தம்முள் ஒருபுடை ஒப்புமை யுடையவாதலின் **பாணினியார் தற்புருடசமாசம் என்று குறியிட்டார்'** என்று ஒப்பியல் நோக்கில் ஒரு கருத்தினையும் உரைத்தனர். தம் உரையில் தெய்வச்சிலையார் பாணினியைச் சுட்டிய இரண்டாவது இடம் இப்பகுதியாகும்.

எனினும், தமிழ் இலக்கண நூலார் வகுத்துக்கொண்டுள்ள தொகைக் கோட்பாடும் வடமொழியார் கொண்ட தொகைக் கோட்பாடும் வேறுவேறு ஆதலின், மேற்சுட்டிய நால்வகைத் தொகைகளும் பாணினி குறித்த தற்புருட சமாசத்துடன் ஒருவாறு தான் ஒப்புமையுடையன என்றார்; ஆதலின், ஒவ்வாமையும் உடையன என்பது புலனாகும். வீரசோழியம் தொகைப்படலத்திலும், பிரயோக விவேகம் சமாசப் படலத்திலும் வடமொழியில் கூறப்படும் தொகைக் கோட்பாடு விரிவாகக் கூறப்பெற்றன.[7] வீரசோழியத்தில் தற்புருடன் வெகுவிரீகி (-பலநெல்), கன்மதாரயம் (-கருமதாரயன்), துவிகு, துவந்துவம், அவ்வியபாவம் (-அவ்வியயீபாவம்) என்று அறுவகைத் தொகைகள் கூறப்பெற்றன. பிரயோக விவேகத்திலும் இவை இடம் பெறினும் சில முன்பின்னாக மொழியப்பெற்றுள்ளன.[8] தொல்காப்பியர் வேற்றுமைத் தொகை, உவமத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை என்று தமிழிலக்கண மரபுக்கு ஏற்ற அறுவகைத் தொகைகளுக்கும் விதிகள் அமைத்துள்ளார். வடமொழிவாணர் கூறியவற்றுள் தற்புருடன் வேற்றுமைத் தொகையினையும், கருமதாரயன் பண்புத் தொகையினையும், துவிகு எண் தொகையினையும், துவந்துவன் உம்மைத் தொகையினையும், அவ்வியயீபாவம் முன்பின் மொழி அடுத்துவரும் இடைச்சொல் தொகையினையும், வெகுவிரீகி அன்மொழித் தொகையினையும் ஒருவாறு சுட்டுவனவாம். **தொல்காப்பியர் கூறிய வினைத் தொகை, உவமத் தொகைகளை வடமொழி இலக்கணம் சுட்டவில்லை என்பது காணத்தக்கது.** ஆதலின் தொகைக் கோட்பாடு தமிழ் மரபினை ஒட்டியே தொல்காப்பியத்தில் கூறப் பெற்றுள்ளது என்பது புலனாகும்.

இனி, தெய்வச்சிலையார் தம் உரையில் உணர்த்தும் பிற்காலத்து இலக்கண ஆசிரியர், உரையாசிரியர்களில் ஒரு சிலரைப் பற்றிக் காண்போம்.

## பவணந்தி முனிவர்

பவணந்தி முனிவர் சமணச் சான்றோர். கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆணைக்கு உட்பட்டு அரசு புரிந்த சீயகங்கன் என்னும் குறுநிலத் தலைவனால் பேணப் பெற்றவர். விரிவுடைய தொல்காப்பியத்தைச் செறிவுடையதாக அமைத்த சிறப்புக்கு உரியவர். இவர்,

**மக்கள் தேவர் நரகர் உயர்திணை**
**மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை**

(சொல். நூ. 2)

என்று சொற்பாகுபாடு செய்தனர். தொல்காப்பியத்தில் நரகரைப் பற்றிக் கூறப்படவில்லை. தொன்னூலையும் நன்னூலையும் ஒப்பியல் நோக்கில் பயின்றவராகிய தெய்வச்சிலையார்,

**தேவரும் மக்களும் விலங்கும் ஆகிய கதிப்பொருண்மை கூறி நரககதிப் பொருண்மை கூறாதது என்னை எனின், அக்கதிமேல் நிகழ்வதோர் வழக்கு இன்மையிற் கூறாராயினார்**

என்று இயம்பினார்.[9] தொல்காப்பியரின் பாகுபாடு மிகவும் எளியது, உலகியல் உண்மையுடன் ஒத்தது. எனவேதான்,

**உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே**
**ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே** (நூ. 1)

என்று சொல்லதிகாரத்தின் தொடக்கத்தில் தெளிவுறுத்தினார். தொல்காப்பியர் காலத்தில் மக்கட் பிறப்பேயன்றித் தெய்வம் சுட்டிய பெயர்களையும் உயர்திணையாகக் கூறும் வழக்கு நிலவியது. எனினும், நரகர் பற்றிய குறிப்பே இடம் பெறவில்லை. எனவேதான் பின்னூலார் மக்கள் கதி, தேவர் கதி, நரகர் கதி, விலங்கு கதி என்ற சமணப் பாகுபாட்டினை இலக்கணத்தில் புகுத்தியுள்ளார் என்பதைச் சொல்லாமற் சொல்லியுள்ளார் தெய்வச்சிலையார்.

செய்யுள் தொடர்களில் செவ்விய பொருளைப் புரிந்து கொள்ளுதற்குப் பயன்படும் பொருள் கொள்ளும் முறையினை, நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழி மாற்று என்று நான்காக எண்ணினர் தொல்காப்பியர் (சொல்.நூ.400). அவர் காலத்திற்குப்பின் எட்டு, ஒன்பது என்ற அளவில் பொருள்கோள் முறை வளர்ச்சி பெற்றது. பவணந்தி முனிவர்,

**யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்**
**தாப்பிசை அளைமறி பாப்பு, கொண்டு கூட்[டு]**
**அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே** (சொல்.நூ.411)

என்று எண்வகைப் பொருள்கோள்களை எண்ணினார்.

எனின், யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியர் குணசாகரர் நிரனிறை மொழிமாற்று, சுண்ணமொழிமாற்று, அடிமறி மொழி மாற்று, அடிமொழி மாற்று, பூட்டுவிற் பொருள்கோள், புனல்யாற்றுப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்று ஒன்பது வகையாகக் கொண்டனர்.[10] தொல்காப்பியர் சுட்டியதற்குமேல் கூடுதலாகக் காணப் பெறுவன ஐந்தாகும். இவற்றைத் தெய்வச்சிலையார்,

> **அஃதேல் பூட்டுவிற் பொருள்கோள், புனல்யாற்றுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறி பாப்புப் பொருள்கோள், கொண்டு கூட்டுப் பொருள்கோள் எனவும் ஒருசாராசிரியர் உரைப்பவால் எனின்: அவற்றுள் யாற்றொழுக்கும் அளைமறிபாப்புப் பொருள்கோளும் திரிவின்றிப் பொருள்படுதலின் இயல்பாம். கொண்டுகூட்டு சுண்ணமொழி மாற்றுள் அடங்கும். பூட்டுவிற் பொருள்கோள் மொழிமாற்றுள் அடங்கும். தாப்பிசைப் பொருள்கோட் கண் முன்னொரு சொல் வருவிக்கவேண்டுதலின், இது "பிரிநிலைவினை" என்னும் சூத்திரத்தினுள் (நூ. 423) அடங்கும்**

என்று விளக்கினர்"[11]. ஒரு சார் ஆசிரியர் எனக் குறிக்கப் பெற்றவர்கள் பிற்காலத்தவராகிய குணசாகரரும் பவணந்தியாரும் ஆவர். இவர்கள் மிகுத்துக்கூறிய பொருள்கோள்களைத் தொல்காப்பிய இலக்கணத்தில் அடக்கிக் காட்டினார் தெய்வச்சிலையார். இதனால், பிற்காலத்தின் கோட்பாட்டினை இவர் உடன்படவில்லை என்பது புலனாகும்.

## இளம்பூரணர்

சொல்லதிகாரத்தின் முதல் நூற்பாவில், 'என்மனார்' எனவரும் வினைமுற்றுச் சொல்லினை இளம்பூரணர் 'என்ப' என்ற சொல்லின் திரிபாகக் கருதினார். குறைக்கும் வழிக் குறைத்தல் என்னும் செய்யுள் விகாரத்தினால் என்ப என்ற சொல்லில் இறுதியில் உள்ள பகரத்தைக் குறைத்து, விரிக்கும்வழி விரித்தல் என்பதனால் மன்னும் ஆரும் என்று இரண்டு இடைச் சொற்களைப் பெய்து என்மனார் என்று பயின்றுள்ளார் தொல்காப்பியர் என்பது இளம்பூரணரின் எண்ணம். இக்கருத்தினைத் தெய்வச்சிலையார் ஏற்கவில்லை:

> **பகரம் குறைக்கின்றது செய்யுள் இன்பம் வேண்டியன்றே. ஆண்டுக் குறைத்தவழிப் பின்னும் இரண்டெழுத்து விரிக்கல் வேண்டுமாயின், குறைத்ததனான் பயன் இன்மையின், இவ்வாறு எழுதும் உரை குற்றம் என்க**[12]

என்று கடுமையாக மறுத்தனர். இம்மறுப்பு இளம்பூரணரை நோக்கியது என்பது இவ்விருவர் உரைப் பகுதிகளையும் ஒப்பிட்டுப் பயில்வார்க்குப் புலனாகும். மேலும், இறையனார் களவியலுரையாசிரியரும் இளம்பூரணர்க்கு முன்னமே என்ப என்ற முற்றுச் சொல்தான் செய்யுள் விகாரத்தால் என்மனார் என்று ஆயிற்று என்று குறித்துள்ளார்.[13] ஆதலின், இருவரையுமே கருத்திற்கொண்டு தெய்வச்சிலையார் மறுத்துள்ளார் எனலாம்.

இனி, தெய்வச்சிலையார் உரையில் காணப்பெறும் சில சிறப்புக் கூறுகளைச் சற்று உற்று நோக்குவோம்.

## சிறப்புக் கூறுகள் சில

சொல்லதிகாரத்தின் தோற்றுவாயில் கிளவியாக்கம் என்ற குறியீட்டிற்குப் பொருள் விளக்கம் தரும் வகையில் தெய்வச்சிலையார் மற்றைய உரையாசிரியர்களினின்றும் வேறுபடுகின்றார். இளம்பூரணர்,[14] **கிளவிகள் பொருள்மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்து** என்று பொருள்கண்டார். சேனாவரையர்,[15] **வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான், இவ்வோத்துக் கிளவியாக்கம் ஆயிற்று** என்று காரணம் கற்பித்தார். நச்சினார்க்கினியர்[16] சேனாவரையரையும் கல்லாடனார்[17] இளம்பூரணரையும் வழிமொழிந்தனர். எனின், தெய்வச்சிலையார் ஒருவர்தான்,

> **அது கிளவியது ஆக்கம் என விரியும். அதற்குப் பொருள் சொல்லினது தொடர்ச்சி என்றவாறு. சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருள்மேல் ஆகும் நிலைமையைக் கிளவியாக்கம் என்றார்**

என்று புதிய விளக்கம் தந்தனர். கிளவியாக்கம் தனிமொழி இலக்கணம் அன்று; தனிமொழிகள் ஒன்றொடு ஒன்று பொருத்தமுறத் தொடர்ந்து பொருள் புலப்படுத்தலைப் பற்றிக் கூறுதலின், தொடர்மொழி இலக்கணம் (Grammar on Syntax) என்ற அரிய கருத்தினை இவர்

உரையில் காண்கிறோம். இன்றைய மொழியியல் அறிஞர்கள் இவர் கருத்தின் அருமையினை வியந்து பாராட்டுகின்றனர்.

பெயரியலில், எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்ற முதல் நூற்பாவிற்கு விளக்கம்தரும் தெய்வச்சிலையார்,

> உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் பாடைதோறும் தாம் அறிகுறியிட்டு ஆண்ட துணையல்லது, இவ்வெழுத்தினான் இயன்றசொல் இப்பொருண்மை உணர்த்தும் என எல்லாப் பாடைக்கும் ஒப்ப முடிந்ததோர் இலக்கணம் இன்மையான் என்க. எனவே பொருள்பற்றி வரும் பெயரெல்லாம் இடுகுறி என்பது பெறப்படும்

என்று வரைந்துள்ள விளக்கம் காணத்தக்கது. இவ்வுரையில், எல்லாப் பாடைக்கும் ஒப்ப முடிந்ததோர் இலக்கணம் என்ற பகுதி கூர்ந்து நோக்கத்தக்கது. தெய்வச்சிலையார் உலகமொழிகளுக்கு எல்லாம் பொருந்திய ஒரு பொது இலக்கணத்தை எண்ணியுள்ளார் என்பது மொழியியலார்க்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் தரும் செய்தியாகும். நோம் சாம்சுகி (Noam Chomsky) என்ற பேர்பெற்ற மொழியியல் மேதை, **Reflections on Language** என்ற தம் நூலில் **Common grammar** (பொதுவிலக்கணம்) பற்றி விரிவாகச் சிந்தித்துள்ளார். பொது இலக்கியம் என்ற கோட்பாட்டினை இலக்கியவியலார் எண்ணுவதுபோல, பொது இலக்கணம் பற்றிய கோட்பாட்டினை மொழியியலாளர் எண்ணுகின்றனர். இன்றைக்கு இவர்கள் இங்ஙனம் எண்ணுதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே இக்கருத்து தெய்வச்சிலையார் மனத்திரையில் மின்னல் கீற்றெனத் தோன்றியிருத்தல் வியப்பினைத் தருகிறது.[18]

எவ்வகைச் சொல்லும் பொருண்மை தெரிதல், சொன்மை தெரிதல் என்ற இருநிலையின என்பர் தொல்காப்பியர். இவற்றுள் பொருண்மைநிலையினைப் பற்றிய விளக்கம் கூர்ந்து நோக்கத்தக்கது. தெய்வச்சிலையார்,

> பொருண்மை நிலை வழக்கினும் சான்றோர் செய்யுளகத்தும் பயின்று வருதலானும், இவ்வழக்குத் தமிழ்நாட்டுப் பிறந்து தமிழ் அறிவாரை நோக்குதலினானும், இலக்கணம் இன்றியும் பாகம் உணர்வார் ஆகலானும் எடுத்து ஓதாராயினார்....

என்று எழுதியுள்ள உரைப்பகுதி காணத்தக்கது. தொல்காப்பியர் சொன்மை தெரிதலுக்குத்தான் கூடுதலான இலக்கணம் கூறியுள்ளார். பொருண்மை நிலையினை இலக்கண அறிவின்றியும் கூட, தமிழ்நாட்டிற் பிறந்து வளர்ந்துவரும் பெருமக்கள் ஒரு பாகமாவது புரிந்து கொள்ளுவர் என்று எண்ணினார். தமிழ்மொழியின் நீண்ட நெடும் பயணத்தில் பெரிய பாதிப்பு ஒன்றும் விளைந்து விடவில்லை என்பது அவர் கருத்து. சங்க காலம் முதலே தமிழகத்தில் பலமொழி பேசுவோர் வாணிகத்தின் பொருட்டும் அரசியல், கலை, சமயம் காரணமாகவும் வந்துள்ளனர். தமிழர்களும் அயல்நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இத்தகைய கூட்டுறவினால் தமிழ்மொழியில் புதுச்சொற்களும் புதுப்பொருள்களும் அறிமுகம் ஆகின. எனினும், அவை பொருண்மை தெரிதலைப் பெரும் அளவிற்குப் பாதித்துவிடவில்லை. இவ்வுரைக் குறிப்பினால், ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் விளைந்துள்ள மாற்றங்களின் அளவிற்குத் தமிழில் பெரிதாக மாற்றம் நிகழ்ந்துவிடவில்லை என்பது உணரப்படும். ஆக்கெட் (Hocket) என்னும் மொழியியல் அறிஞர்,

> If a tenth century English man and a twentieth century English man could meet face to face they would not understand each other
>
> (vide, **A Course in Modern Linguistics** - The chapter on Philogenetic changes)

என்று குறிப்பிடுதல் இங்கு எண்ணத்தக்கது.[19] பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலேயன் ஒருவன் இந்த நூற்றாண்டில் வாழும் ஆங்கிலேயன் ஒருவனைச் சந்திக்கக் கூடுமாயின், ஒருவர் பேச்சினை மற்றொருவர் புரிந்துகொள்ள முடியாத அளவிற்குப் பெரு மாற்றங்கள் அவர்தம் மொழியில் ஏற்பட்டுள்ளன. எனின், தொல்காப்பியர் காலத்து அல்லது இராசராசன் காலத்துத் தமிழ் மகன் ஒருவன் இக்காலத்துத் தமிழ் மகன் ஒருவனைக் காண்பதாக வைத்துக்கொண்டால், ஒருவர் ஒருவரைச் செம்பாதி அளவிலேனும் புரிந்து கொள்ளுவர் என்பது தான் தெய்வச்சிலையாரின் கருத்து. அயல்நாட்டவர் படை எடுப்பினாலும், கலப்பினாலும், அரசியல், சமயம், கல்வி காரணமாகவும் தமிழர்கள் தங்கள் தனித்தன்மையினை இழக்காமைக்குரிய முதற்காரணம் அவர்கள் பழமை விரும்பிகளாக விளங்கியமையே எனலாம்.

தொல்காப்பியர் வினாவும் விடையும் பற்றிய தொடர் அமைப்புக்களைச் சிறப்பாகக் குறித்துள்ளார். நடைமுறை

வாழ்க்கையிலும் கல்வி நிலையிலும் மாந்தர் எவ்வாறு வினாவுதல் வேண்டும், விடை பகர்தல் வேண்டும் என்ற பொருண்மையில்,

**செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்** (சொல். நூ.13)

என்ற ஆணைச் சூத்திரம் அமைந்துள்ளது. தெய்வச்சிலையார்,

> **உலகத்துப் பொருள் உணர்த்தும் சொல்லெல்லாம்**
> **வினாவும் செப்பும் ஆகிய பொருள்மேல் நிகழ்தலின்,**
> **அவை வழுவாமல் கூறவேண்டும்**

என்று வழுநீக்கி உரையாட வேண்டியதன் முதன்மையினைச் சுட்டினார்.[20] இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் எழுதியுள்ள உரையில், வினா எதிர்வினாதல், ஏவுதல், மறுத்தல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், உடம்படுதல் எனச் செப்பு அறுவகைப்படும் என்றும்; அறியான் வினாதல், அறிவொப்புக் காண்டல், ஐயமறுத்தல், அவனறிவு தான் கோடல், மெய்யவற்குக் காட்டல் என வினா ஐந்து வகைப்படும் என்றும் விளக்கம் கண்டார். சேனாவரையரும் பிறரும் வேறுவேறு விளக்கம் கூறினர். எனின், **தெய்வச்சிலையார் ஒருவர்தான் செப்பு நான்கு வகைப்படும் என்றும்; அவை: துணிந்து கூறல், கூறிட்டு மொழிதல், வினாவி விடுத்தல், வாய் வாளாதிருத்தல் என்றும் எடுத்துக் கூறினார்.** 'துணிந்து கூறலாவது: தோன்றியது கெடுமோ என்றவழி கெடும் என்றும், கூறிட்டு மொழிதலாவது: செத்தவன் பிறப்பானோ என்றவழி பற்றறத்துறந்தானோ, பிறனோ என்றல். வினாவி விடுத்தல் என்பது: முட்டை மூத்ததோ பனை மூத்ததோ என்றவழி எம்முட்டைக்கு எப்பனை என்றல். வாய் வாளாமையாவது: ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றார்க்கு உரையாடாமை' எனவரும் அவர்தம் உரைப்பகுதி, தமிழில் எழுந்த ஒப்பற்ற பௌத்தக் காப்பியம் ஆகிய மணிமேகலையில், காஞ்சி மாநகரில் அறவண அடிகள் மணிமேகலைக்குப் பௌத்தத் தத்துவத்தின் அடிப்படைக் கருத்துக்களைப் புகட்டும் பகுதியிலிருந்து எடுத்துக் கொள்ளப் பெற்றது என்பது சுட்டத்தக்கது. எல்லாக் கேள்விகளுக்கும் ஒருவன் விடை சொல்ல வேண்டிய தேவை இல்லை. பொருத்தமில்லாத வினாக்களுக்கும் தேவையற்ற கேள்விகளுக்கும் வாய் வாளாதிருத்தலே மேல் என்பது புத்தர்பிரானின் திருவுள்ளம். கி.மு. முதல் நூற்றாண்டில் பாக்டிரியாவை ஆண்ட மெனேண்டர் என்ற கிரேக்கமன்னனைப் பௌத்த நெறிக்கு மாற்றிய போதிசத்துவர் நாகசேனர், **மிளிந்த பஞ்ஞா** என்ற மகாயானப்பாலி நூலில் **ஏகாம்ச வியாகரணியம், விபஜ்ஜிய**

வியாகரணியம், பிரதிபிருச்ச வியாகரணியம், ஸ்தாபனியம் என்று நால்வகை விடைகளை விளக்கிக் கூறியுள்ளார். அவரைப் பின்பற்றிக் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த வசுபந்து என்ற பௌத்தப் பெரியார், அபிதருமகோசம் என்ற தம் பெருநூலில் இந்நால்வகை வினாவிடைகளையும் எடுத்துக் கூறியுள்ளார். இவ்விருவரையும் பின்பற்றித் தமிழ்ப் பௌத்த ஞானியாகிய சாத்தனார் தம் காப்பியத்தில் எடுத்துரைத்தனர். தெய்வச்சிலையார் சாத்தனார் நெறியில், செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் என்ற நூற்பாவிற்கு விளக்கம் கண்டனர் என்பது புலனாகும்.[21] எனின், தொல்காப்பியர் கருதிய செப்பும் வினாவும் தெய்வச்சிலையார் கூறியவையா என்பது மேலும் ஆராய்தற்கு உரியது. இவ்விடத்தில், இளம்பூரணர் உரைதான் தொல்காப்பியரின் கருத்தினை நெருக்கமாக உணர்த்துவது என்று கருதுதல் தகும்.

## முடிவுரை

இதுகாறும் எழுதியவாற்றான் தொல்காப்பியத்தின் தனிச்சிறப்புக்களும், இப்பெரு நூலினைப் புரிந்து கொள்ளுவதற்குத் தோன்றிய உரைகளின் திறமும் ஓரளவு புலனாகும். பழுத்த புலமை படைத்த தெய்வச்சிலையார் தம் உரையில் சுட்டியுள்ள முந்தைய இலக்கண ஆசிரியர்கள், உரையாசிரியர்கள் பற்றிய திறமும், அவர் உரையில் சுட்டத்தகும் சிறப்புக் கூறுகள் சிலவும் இவ் ஆய்வுரையில் விளக்கப் பெற்றன. தெய்வச்சிலையாரின் நுண்மாண் நுழைபுலமும் மொழியியல் உணர்வும், புதுப்பாதையில் சென்று புதுவிளக்கம் தரும் முயற்சியும் பிறவும் வெளிப்படுதல் நோக்கத்தக்கது. எந்த அளவில் இவரை உள்ளிட்ட உரையாசிரியர்கள் பலரும் மூலநூலைப் புரிந்து கொண்டனர் என்பது தனி ஆய்வுக்கு உரியது. தனியே ஒரு நூல் எழுத முடியாத நிலையில், தம் கல்விப் பெருக்கினையும் சொந்தக் கருத்துக்களையும் மூல நூலில் வைத்து இவர்கள் காட்டுதற்கு முயன்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குறிப்புகள்

1. சோ.ந. கந்தசாமி, தொல்காப்பியத் தெளிவு, அபிராமி பதிப்பகம், அண்ணாமலைநகர், 1977, ப. 7-14, 46.

2. சோ.ந. கந்தசாமி, **புரட்சிக்காப்பியம்**, அபிராமி பதிப்பகம், அண்ணாமலைநகர், 1972, ப. 119.

3. **தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியம்**, கழக வெளியீடு, சென்னை, 1965, ப. 52.

4. **தொல்காப்பியச் சூத்திர விருத்தி**, திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1968, ப. 9-10.

5. Vinoba Bhave, **Talks on the Gita**, p. 99.

6. சோ.ந. கந்தசாமி, **தெய்வச்சிலையார் உரைத்திறம்**, அபிராமி பதிப்பகம், அண்ணாமலைநகர், 1981, ப. 26-27.

7. **வீரசோழியம்**, கழகவெளியீடு, சென்னை, 1970, ப. 49.

8. **பிரயோகவிவேகம்**, சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சாவூர், 1973, ப. 129-130.

9. **தொல்காப்பியம், சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை**, கழக வெளியீடு, சென்னை, 1963, ப. 6.

10. **யாப்பருங்கலக் காரிகை, குணசாகரர் உரை**, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1973, ப. 208.

11. **தொல்காப்பியம் தெய்வச்சிலையார் உரை**, ப. 196.

12. மேலது, ப.3.

13. **இறையனார் களவியல் உரை**, கழக வெளியீடு, சென்னை, 1976, ப. 28.

14. **தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம்**, கழக வெளியீடு, சென்னை, 1973, ப. 2.

15. **தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர்**, கழக வெளியீடு, சென்னை, 1952, ப. 3.

16. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியம், கழக வெளியீடு, சென்னை, 1962, ப. 3.

17. தொல்காப்பியம், சொல்லதிகாரம், கல்லாடனார் உரை, கழக வெளியீடு, சென்னை, 1964, ப. 3.

18. தெய்வச்சிலையார் உரைத்திறம், ப. 19-20.

19. மேலது, ப. 18-19.

20. தொல்காப்பியம், தெய்வச்சிலையார் உரை, ப. 10.

21. S.N. Kandaswamy,
    i. **Buddhism as Expounded in Manimekalai,** Annamalai University, Publication, 1978. pp. 363-367.
    ii. **Indian Epistemology as expounded in the Tamil Classics,** International Institute of Tamil Studies, Chennai, 2000, pp. 50-53.

# தொல்காப்பியமும் நச்சினார்க்கினியமும் எழுத்துப்படலம்

தி.வே.கோபாலையர்

இன்று தமிழில் வழங்கும் இலக்கண நூல்களில் தொல்காப்பியமே பழமையானது. அதற்கும் முற்பட்ட காலத்தனவாகக் கருதப்படும் எட்டுத்தொகைப்பாடல்கள் மிகச்சிலவே இருக்கலாம். பொதுவாகப் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் தொல்காப்பியம் தோன்றிய பின்னரே இயற்றப்பட்டன எனலாம்.

எழுத்து, சொல், பொருள் என்ற முப்படலங்களையும் ஏறத்தாழ 1600 நூற்பாக்களையும் கொண்ட தொல்காப்பியம் ஒரு சுருக்கநூலே. 'புலம்தொகுத்தோனே' என்ற சிறப்புப்பாயிரம் இதனை வலியுறுத்தும். தொல்காப்பியத்தின் சிறப்பு, செய்திகளை வரிசைப்படுத்திக்கூறுதலே. இதனை 'மயங்கா மரபின் எழுத்து முறைகாட்டி' என்ற சிறப்புப்பாயிரத்தொடர் எடுத்து இயம்புகிறது. ஒவ்வொரு படலமும் ஒன்பது ஒன்பது இயல்களைக் கொண்டு அமைந்து இன்றியமையாத செய்திகளைச் சுருக்கமாகவும் வரிசைப்படவும் குறிப்பிடும். தொல்காப்பியச் செய்திகளை விரிவாகத் தெரிந்து கொள்ள விழைந்தவர்களுக்குத் தம் காலத்திலேயே விரிவான இலக்கண நூல்கள் இருந்த செய்தியைத் தொல்காப்பியனாரே சொற்படல இறுதி நூற்பாவில்,

செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்

பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல்

(சொல். 463)

எனறு குறிப்பிடுவதால் அறியலாம்.

இஃது ஒரு சுருக்க நூல்; ஆகவே, இதன்கண் பல செய்திகள் குறிப்பிடப்படாமலே போதகாசிரியர் மாணாக்கருக்கு உணர்த்தும் வகையில் விடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக எழுத்து, சொல், பொருள், மெய்ப்பாடு, உவமம், செய்யுள் இவற்றின் இலக்கணம் வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை. தொல்காப்பியனார் தாம் வழிநூல் ஆசிரியர் என்பதும், தம் நூலுக்கு முன்னரே தமிழில் இலக்கண நூல்கள் பல இருந்தன என்பதும், அவற்றைப் பயிற்றிய போதகாசிரியர் பலர் இருந்தனர் என்பதும் புலப்படத் தம் நூற்பாக்களில் நூற்றுக்குமேற்பட்ட இடங்களில் 'என்ப' என்ற சொல்லையும், 65க்கு மேற்பட்ட இடங்களில் 'என்மனார் புலவர்', 'என்மனார்' என்பனவற்றையும் 10க்கு மேற்பட்ட இடங்களில் 'வரையார்' என்ற சொல்லையும் ஆண்டுள்ளார். மேலும் அறிந்திசினோர், உணர்ந்திசினோர், உயர்மொழிப்புலவர், குறி அறிந்தோர், கற்றறிந்தோர், சொல்லியற்புலவர், சிறந்திசினோர், தெரியுமோர், தெளியுமோர், தொன்மொழிப்புலவர், தோன்றுமொழிப்புலவர், நுண்ணிதின் உணர்ந்தோர், நுணங்கு மொழிப்புலவர், நல்லிசைப்புலவர், நுனித்தகு புலவர், நூல்நவில் புலவர், நேரிதின் உணர்ந்தோர், பாங்குற உணர்ந்தோர், புலன் உணர்ந்தோர், யாப்பறி புலவர், வாய்மொழிப் புலவர் முதலிய சொற்றொடர்களால் தமக்கு முன்னர் வாழ்ந்தவரும் தம் சமகாலத்தில் வாழ்ந்தவருமான புலவர் பெருமக்களைத் தம் நூற்பாக்களில் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியத்தில் இருசீர்கொண்ட ஓரடி முதலாக 59 அடி உயர் எல்லையாக நூற்பாக்கள் அமைந்துள்ளன. எழுத்துப் படல நூற்பாவின் உயர் எல்லை 13 அடி சொற்படல நூற்பாவின் உயர் எல்லை 11 அடி. பொருட்படல நூற்பாவின் உயர் எல்லை 59 அடி.

எழுத்துப்படல நூன்மரபில் தனி எழுத்துக்கள், அவற்றுள் நட்பெழுத்து பகை எழுத்துக்கள் என்பனவும், மொழி மரபில் மொழியிடைப்படுத்து உணரப்படும் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பனவும், மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள், மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள், போலி எழுத்துக்கள் என்பனவும், பிறப்பியலில் மற்றவர் செவிக்குப்புலனாம் வகையில்

வாயிலிருந்து வெளிப்படும் எழுத்துக்களின் பிறப்பிடமும் முயற்சியும், புணரியலில் மெய் உயிர் முதல் ஈறு ஆம் இரு சொற்களும் தம்மொடும் பிறவொடும் அல்வழிப்பொருளிலும் வேற்றுமைப் பொருளிலும் புணரும் வழி நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் மெய்பிறிதாதல் மிகுதல் குன்றல் என்ற மூவகைத்திரிபு பெறுமாறும், இயல்பாகப்புணருமாறும், அவற்றிடையே சாரியை வருமாறும், அச்சாரியைகள் பெறும் பொதுவான திரிபுகளும், எழுத்துச்சாரியைகளும், நிலைமொழி இறுதிமெய் வருமொழி முதல் உயிரோடு இணைந்து உயிர்மெய் ஆகுமாறும், உடம்படுமெய் பற்றிய செய்தியும், தொகைமரபில், பின்னர் ஈறு தோறும் விரித்து முடிப்பனவற்றைத் தொகுத்துப்புணர்த்தலும், உயர்திணைப்பெயர், விரவுப்பெயர்ப் புணர்ச்சி, மூன்றாம் வேற்றுமை இரண்டாம் வேற்றுமை விதி விலக்குச்செய்திகள், அளவு நிறை எண்ணுப் பெயர்கள் பெறும் சாரியைகள், சில இடைச்சொற்புணர்ச்சி, அளவிற்கும் நிறையிற்கும் மொழி முதலாகும் ஒன்பது எழுத்துக்கள் போல்வனவும், உருபியலின் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது உயிரீற்றுச்சொற்களும் மெய்யீற்றுச் சொற்களும் திரியுமாறும் சாரியை ஏற்குமாறும் போல்வனவும் கூறப்படுகின்றன.

உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப்புணரியல் என்ற மூன்று இயல்களும் முறையே உயிர்ஈறுகளும் மெய்ஈறுகளும், குற்றியலுகரங்களும் அல்வழிப்பொருளிலும் வேற்றுமைப் பொருளிலும் வன்கணம் மென்கணம் இடைக்கணம் உயிர்க்கணம் என்ற நாற்கணங்களோடு புணருமாறு விரித்து உரைக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியனார் காலத்தில் தமிழ் மொழி வல்லாரிடையே வடமொழி வல்லாரும் இருந்தமையின் வடசொற்களை அச்சான்றோர் தமிழ்ச் சொற்களோடு கலந்து பேசவும் எழுதவும் வாய்ப்பு இருந்தது. வடமொழிச்சொற்களைத் தமிழின் தனித்தன்மைக்கு இழுக்கு ஏதும் வாராத வகையில் திரித்தே கொள்ளல்வேண்டும் என்பதன்கண் தொல்காப்பியனார் உறுதிப்பாட்டோடு இருப்பவர் ஆதலின் அவர் நூல்மரபிலேயே இன்னமெய்க்கு இன்ன மெய் நட்பெழுத்து, இன்ன மெய் பகை எழுத்து என்பனவற்றை விரித்து உரைத்துள்ளார். இம்மெய் மயக்கம் பற்றிய நூற்பாக்களில் 'என்ப' 'மொழிப' முதலிய சொற்களை அறவே விடுத்துத் தம் கருத்தாகவே இவர் குறிப்பிட்டுள்ள நூற்பாக்களை நோக்க மொழித்தூய்மையின் தேவை கருதி மொழி அமைப்பை உளங்கொண்டு இச்செய்திகளை இவரே வரையறுத்து மொழிந்துள்ளார் எனக் கருதலாம். மகரத்தோடு மயங்காத னகராற்றுத்

தொடர் மொழிகள் ஒன்பது, உச்சகாரம் இரண்டு, ஞகர ஒற்றீறு ஒன்றே, நகர ஒற்றீறு இரண்டே, உப்பகரம் ஒன்றே, வகர ஒற்று நான்மொழி ஈற்றது போன்ற வரையறைகளும் தமிழ் மொழியின் தூய்மையைக் காக்க வரையறுத்துக் கூறியனவேயாம்.

தொல்காப்பியனார் பெயரும் வினையும் புணரும் புணர்ச்சிகளையே பெரும்பாலும் கூறுவார். இடைச்சொல் உரிச்சொல் புணர்ச்சிகளை அருகியே குறிப்பிட்டுள்ளார். அல்வழி என்று குறிப்பிட்டாரே ஒழிய அதன்வகைகளைக் குறிப்பிடவில்லை.

1. வருமொழி முதலில் வல்லினம் வரும் வழியே பெரும்பான்மையும் திரிபுகள் ஏற்படும். ஏனைய மெல்லினம் இடையினம் உயிர்கள் வரும்வழி, பெரும்பாலும் திரிபுகள் இரா; ஆதலின் இம்மூன்றும் இயல்புகணம் எனப்படும். இவை பெரும்பாலும் இயல்பாகவே புணரும் என்பதனை 'ஞநமயவ' (144) என்னும் ஒரே நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். திரிபு நிகழின் பின்னர் அகத்தோத்துக்களுள் விதந்து கூறுவார்.

2. உயர்திணைப்பெயர்ப்புணர்ச்சியை 'உயிரீறாகிய', 'அவற்றுள் இகர இறுபெயர்' (153, 154) என்ற நூற்பாக்களிலும், விரவுப்பெயர்ப் புணர்ச்சியை 'அஃறிணை விரவுப்பெயர்' (155) என்ற நூற்பாவிலும், புள்ளி மயங்கியலில் இயற்பெயர் பற்றிய நூற்பாக்களிலும் (347-352) எல்லாம் என்பது பற்றிய நூற்பாக்களிலும் (322-324) விதந்து ஓதியே முடிப்பார்.

3. அளவுப்பெயர், நிறைப்பெயர், எண்ணுப்பெயர்ப் புணர்ச்சிகளை விதந்து ஓதியே முடிப்பதனை 'உயிரும் புள்ளியும் இறுதியாகி' 164-9, 194, 198, 199, 239, 240, 317-19, 338-394, 433-480 என்ற நூற்பாக்களில் காணலாம்.

4. நாட்பெயர் திங்கட்பெயர்களை ஆசிரியர் விதந்து ஓதியே முடிப்பதனை 'நாள்முன்தோன்றும்' (247) 'திங்கள்முன்வரின்' (248) 'திங்களும் நாளும்' (286) 'நாட்பெயர்க்கிளவி' (331) என்ற நூற்பாக்களில் காணலாம்.

5. கிளைப்பெயர்களையும் ஆசிரியர் விதந்து ஓதியே முடிப்பார் என்பதனை, 'கிளைப்பெயர் எல்லாம் கொளத்திரிபிலவே' (307) 'கிளைப்பெயர் எல்லாம்' (338) 'ஒற்றுநிலை திரியாது' (418) என்ற நூற்பாக்களில் காணலாம்.

6. ஆசிரியர் அல்வழித்தொடருக்கு எழுவாய்த்தொடர் ஒன்றனையே மனத்துக்கொண்டுபுணர்ச்சி விதி கூறுவார். ஏனைய அல்வழித் தொடர்களைக் குறிப்பிடுமிடத்து அத்தொடர்களின் பெயரினை விதந்து ஓதியே முடிப்பார். 204-8, 209, 10, 12, 22- 24 முதலியன காண்க.

7. பெயரோடு உருபு புணரும்போது ஏற்படும் திரிபுகளைத் தனி இயலிலும் உருபு தொக உருபின் பொருள்பட வரும் பொருட்புணர்ச்சியை இறுதி மூன்று இயல்களிலும் குறிப்பிடும் போது மேல் குறிப்பிடப்பட்ட உயர்திணைப்பெயர், விரவுப்பெயர், எண் நிறை அளவுப்பெயர், நாட்பெயர், திங்கட்பெயர், கிளைப்பெயர் அல்லாத அஃறிணைப் பெயர்களுக்கே அவ்விதிகளைக் கொள்ள வேண்டும் என்பதனைக் குறிப்பாகத் தெரிவித்துள்ளார்.

8. கற்றோர்களுக்குப் பொருளில் மயக்கம் ஏற்படாத வகையில் பலபொருள் ஒரு சொற்களை 'ஆண்மரக்கிளவி' (304) என்றாற் போல விதந்து ஓதியே முடிப்பார். மாணாக்கருக்கு நினைவு ஆற்றலை மிகுக்கவும் நூற்பாக்களிடையே துளக்கலாகாத் துணைமை நிலவவும் பல செய்திகளை எளிமையாகக் கூறுதலை விடுத்துச் சுற்றி வளைத்து மாட்டேறாகக் கூறுவார்.

இல்ல மரப்பெயர் (313) ஈறுகெட்டு மெல்லெழுத்துப் பெறுதலை 282, 278, 262, 243 ஆம் நூற்பாக்களோடு முறையே மாட்டெறிந்து தெரிவிப்பார்.

இருள்என்கிளவி (402) அத்துச்சாரியையும் இன் சாரியையும் பெறுதலை 377, 287, 242, 241 ஆம் நூற்பாக்களோடு முறையே மாட்டெறிந்து விளக்குவார்.

| | |
|---|---|
| ஆகார இறுதி அகர இயற்றே | - 221 |
| ஈகார இறுதி ஆகார இயற்றே | - 249 |
| உகர இறுதி அகர இயற்றே | - 254 |
| ஊகார இறுதி ஆகார இயற்றே | - 264 |
| ஏகார இறுதி ஊகார இயற்றே | - 274 |
| ஓகார இறுதி ஏகார இயற்றே | - 289 |
| வேற்றுமைக்கண்ணும் அதனோரற்றே | - 216, 225, 257, 266, 276 |

முதலிய நூற்பாக்களையும் காண்க.

இங்ஙனம் மாட்டேற்றைப் பெரிதும் பயன்படுத்தல் தொல்காப்பியத்தின் தனிச்சிறப்பு ஆகும். உருபு புணர்ச்சிக்குக் கூறப்பட்டன பொருட்புணர்ச்சிக்கும் ஒக்கும் இடங்கள் எல்லாம் 'உருபியல்நிலையும்' என்றே மாட்டெறியப்பட்டுள்ளன - 250, 81, 94, 320, 22, 24, 78, 88, 419, 22 முதலியன.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் தோன்றிய தொல்காப்பியம் மாணாக்கர்களுக்குப் போதகாசிரியர்களால் தாம் தாம் தத்தம் ஆசிரியன்மாரிடம் கற்றவகையைத்துணைக்கொண்டு கற்பிக்கப்பட்டுவந்தது. மாணாக்கர்கள் தமக்குத் தேவைப்பட்ட வற்றை ஏடுகளில் குறித்துவைத்திருக்கலாம். 'உரையின்றிச் சூத்திரம் தாமே பொருள்புலப்பட்ட காலமும் உண்டு. அஃது இன்றியமையாது இக்காலத்தாருக்கு என்பது' என்பது பேராசிரியர் உரைச்செய்தி (பொ. 653 பேரா.). தொல்காப்பியம் சுருக்கநூலாயினும் பாணினீயத்தைப்போலச் சொற்சுருக்கம் நாடாமல் தெளிவு கருதி எதனையும் சற்று விளக்கமாகவே கூறுவதால் தொல்காப்பியம் தோன்றிய பின்னர் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகள் ஆகியும் எழுத்து வடிவில் தொல்காப்பியத்துக்கு உரைவரையப்பட்டிலது. இடையே எட்டாம் பத்தாம் நூற்றாண்டுகளில் தோன்றியவை எனப்படும் இறையனார் அகப்பொருள், யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் என்ற நூல்கள் உரைகளால் பொலிவுபெற்றன. இத்தகைய உரை, முழு இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கும் அமையவேண்டும் என்று கருதி உரையாசிரியர் என்று போற்றப்படும் இளம்பூரணர் தொல்காப்பியம் முழுமைக்கும் பதினொன்றாம் நூற்றாண்டில் சுருக்கமாக உரை வரைந்தார். அவர் வரைந்த உரையே இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் சான்றோரிடையே பெரிதும் போற்றப்பட்டு வந்தது. போதகாசிரியர் பலரும் அவ்வுரையையே மாணாக்கருக்குப் பயிற்றிவந்தனர். மதுரை ஆசிரியர் நச்சினார்க்கினியரும் தாம் தொடக்கத்தில் பயின்றதும் பின் தொடக்கத்தில் தம் மாணாக்கருக்குப் பயிற்றியதும் இளம்பூரணர் வரைந்த தொல்காப்பிய எழுத்துப்படல உரையேயாம்.

இளம்பூரணர் இன்றியமையாத செய்திகளை எடுத்துரைப்பினும், மாணாக்கருக்கு உய்த்துணர்வு பெருகல் வேண்டி, சிலசெய்திகளைக் குறிப்பாகவே தெரிவித்தல் அவர்க்கு இயல்பாகும் என்பதனைச் சேனாவரையரும் குறிப்பிட்டுள்ளார். போதகாசிரியராய்த் திகழ்ந்த நச்சினார்க்கினியர் மாணாக்கர் இயல்பினை நன்கு அறிந்தவர். தம் தொல்காப்பியச்சொற்படல உரையில் 'பின்னுள்ளோர் கூறினார் என்பது பற்றியும் மாணாக்கர்க்கு உய்த்து உணரும் உணர்வு இன்று என்பது

பற்றியும் யாமும் அவ்வெழுத்துக்களைப் பிரித்துக்காட்டுதும்' (சொல்.203. நச்) என்று குறிப்பிடுகிறார். சீவகசிந்தாமணிக்கு நுட்பமான உரை எழுதி அதனைப் பாடம் சொல்லிய காலத்திலேயே மாணாக்கர்க்குச் சொல்லுக்குச் சொல் பொருள் கூறினாலன்றி அவர்கள் தெளிவாக உணரார் என்பதனைத் தம் பட்டறிவால் கண்டவர் ஆதலின் மாணாக்கருக்குச் செய்திகளைத் தெளிவாகக் கற்பிக்கும் போதகாசிரியர் நிலையிலிருந்து, அவர்கள் ஐயுறும் இடங்களை மனத்துக்கொண்டு தொல்காப்பிய எழுத்துப் படலத்துக்குப் பதவுரையாகவே சொற்பொருள் நன்கு புலப்படும் வகையில் உரை எழுதியுள்ளார். நூற்பாக்கள் சிலவற்றில் சொற்களை இடம் மாற்றிப் பொருள் செய்து அதன்கண் நயம் கண்ட இவர் பதவுரையாக எழுதி விளக்கம் வரைந்த உரையே இன்று நமக்குத் தொல்காப்பியச் சொற்றொடர்களின் பொருளை அறிவதற்குப் பெரிதும் உதவுகின்றது.

சில நுட்பமான இடங்கள் தவிர ஏனைய இடங்களிலெல்லாம் இளம்பூரணர் கூறியனவற்றையே தாமும் கொண்டு உரைவரையும் நச்சினார்க்கினியர் ஒரு சில இடங்களில் மாத்திரம் மிகுதியான எடுத்துக்காட்டுக்கள் தந்துள்ளார்.

தொல்காப்பியனார் தம் காலத்தில் வழங்கிய சொற்களுக்கே புணர்ச்சிவிதி கூறியுள்ளார். தாம் கொண்ட கோட்பாட்டிற்கு அல்வழியில் எழுவாய்த் தொடரையே பெரும்பாலும் குறித்துச் செல்வதால் அல்வழியின் ஏனைப் பிரிவுகளுக்கெல்லாம் முழுமையாகப் புணர்ச்சி விதி கூறவில்லை.

இதனை,

**உணரக் கூறிய புணரியல் மருங்கின்**
**கண்டுசெயற்கு உரியவை கண்ணினர் கொளலே**

(எழுத்து. 405)

என்ற புள்ளிமயங்கியல் புறனடை நூற்பாவில் சுட்டிச்செல்கிறார்.

'விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும்' என்ற கருத்தால் நூற்பாவில் சில சொற்களை மிகையாகக் கொண்டு, அவை நூற்பாவில் இடம் பெற்ற காரணத்தான் உரையாசிரியர்கள் நூற்பாவில் கூறப்பட்டன அல்லாத பல செய்திகளையும் நூற்பாவுரையுள் குறித்துச்செல்லும் மரபு யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் இவற்றின் உரையான் அறியப்படுகிறது. இம் முறையை உரையாசிரியர் பின்பற்றி நூற்பாவான்

நுவலப்படாத பல சொற்களுக்கும் புணர்ச்சிவிதி கூறினார். நச்சினார்க்கினியர் அவற்றோடு வேறு சில சொற்களையும் சேர்த்தார். பெரும்பாலான சொற்களுக்குத் தொல்காப்பியத்தில் புணர்ச்சி விதி உண்டு என்பதனைக் காட்டுதலே இவர்கள் நோக்கம். பிற்கால இலக்கியங்களில் உள்ள வேறுபாடுகளுக்கும் தொல்காப்பியத்தில் இடம் நாடி அமைத்த இவர்கள் செயலைக் குறை கூறுவதும் உண்டு.

நமக்கு முற்பட்ட சான்றோர் வழங்கிய கற்பனைகளை உண்மைச்செய்தியாகக் கொள்ளும் மரபு இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை தமிழ்ச் சான்றோரிடம் இருந்தது. இறையனார் அகப்பொருள் சிவபெருமான் அருளிய நூல் என்பதும் அதற்கு நக்கீரனாரால் உரைவரையப்பட்டது என்பதும் அது தொடர்பாகக் கூறப்பட்ட பல செய்திகளும் நம்முன்னோருக்கு வரலாறாகவே தோற்றம் அளித்ததனைக் காண்கிறோம். நச்சினார்க்கினியரும் அம்மரபிற்கு விலக்கானவர் அல்லர். ஆதலின் பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரம் ஆண்டு வீற்றிருந்தான் என்றும், யமதக்கினியார் மகனார் திரண தூமாக்கினியாரே தொல்காப்பியர் என்றும் அகத்தியனார் தொல்காப்பியனாரையும், தொல்காப்பியனார் அகத்தியனாரையும் சபித்தனர் என்றும், வியாசர் வேதங்களைப் பகுப்பதன்முன் அவை தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், சாமவேதம் என்னும் பெயரில் வழங்கின என்றும், தொல்காப்பியனார் வியாசருக்கு முற்பட்டவர் என்றும், தொல்காப்பியம் ஆதி ஊழியின் அந்தத்தே செய்யப்பட்டது என்றும் வந்த மரபு வழிச்செய்திகளைத் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார். இங்ஙனம் கூறுவதால் தொல்காப்பியத்துக்கு ஏற்றம் மிகும் என்ற கருத்தினர் இவர்.

எழுத்தினை எட்டுவகையானும் எட்டிறந்த பலவகையானும் தொல்காப்பியனார் உணர்த்தினார் என்று அந்த எட்டு வகைகளையும் எட்டிறந்த பலவகைகளையும் இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார். போதகாசிரியராகிய நச்சினார்க்கினியர் தாம் தம் மாணாக்கர்களுக்கு அவற்றை எடுத்துக்காட்டுக்கள் கொண்டு விளக்கியிருப்பார். அந்த விளக்கங்களையே தம் எழுத்துப் படல உரையிலும் குறிப்பிட்டு எட்டுவகைகளையும் எட்டிறந்த பல வகைகளையும் நன்கு உணர வழிவகுத்துள்ளார்.

இவ்வெழுத்து எனப்பட்ட ஓசையை அரு என்பார் அறியாதார். அதனை உரு என்றே கோடும்; அது செறிப்பச் சேறலானும் செறிப்ப வருதலானும் இடையெறியப்படுதலானும், செவிக்கண் சென்று உறுதலானும், இன்பதுன்பத்தை ஆக்குதலானும், உருவும் உருவும்

கூடிப் பிறத்தலானும் தலையும் மிடறும் நெஞ்சும் என்னும் மூன்றிடத்தும் நிலைபெற்றுப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உறப்பிறக்கும் என்றமையானும் வன்மை மென்மை இடைமை என்று ஓதினமையானும் உருவேயாம் - என்ற விளக்கம் இனிது.

தொல்காப்பியம் என்னும் நூற்கு மரபாம் துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்து உணர்த்தலின் இவ்வோத்து நூன் மரபு என்னும் பெயர்த்து ஆயிற்று என்று கூறி அதற்கு விளக்கமாக 'எழுத்துக்களது பெயரும் முறையும் இவ்வதிகாரத்துக்கும் செய்யுளியற்கும் ஒப்பக்கூறியது. ஈண்டுக்கூறிய முப்பத்து மூன்றனைப் பதினைந்தாக்கி ஆண்டுத் தொகை கோடலின் தொகைவேறாம். அளவு செய்யுளியற்கும் இவ்வதிகாரத்துக்கும் ஒத்த அளவும் ஒவ்வா அளவும் உளவாகக் கூறியது' என்றாற்போல நூன்மரபினைச் செய்யுளியலோடு இணைத்துக் காண்டலின், அதற்கு உதவும் வகையில் சில நூற்பாக்களுக்குப் புதுமையாக உரை காணும் தேவை இவருக்கு ஏற்பட்டு விட்டது. அதனால் 'ஓரெழுத்தொரு மொழி' என்ற நூற்பா உரையில் மெய் எழுத்துக்களை விடுத்துச் சொற்களின் எழுத்துக்களைக் கணக்கிடுதலும் அவ்வாறு கணக்கிட்டமைக்கு விளக்கம் கூறலும் என்ற இடர்ப்பாடுகள் தோன்றியுள்ளன.

மாணாக்கர் ஐயுறக்கூடும் என்ற இடங்களிலெல்லாம் செய்திகளைத் தெளிவாக விளக்கிக் கூறுதல் இவர் இயல்பு.

75. உசு-உளு.முசு-குரங்கின் ஒரு சாதி

151. **உயிர் ஈறாகிய முன்னிலைக் கிளவியும்**
**புள்ளி இறுதி முன்னிலைக் கிளவியும்** (எழுத்து. 151)

ஈறு என்று ஓதினமையின் முன்னிலைவினைச்சொல்லே கொள்க. இவை முன் நின்றான் தொழில் உணர்த்துவனவும் அவனைத் தொழிற்படுத்துவனவும் என இருவகைய. இ, ஐ, ஆய் முதலியன தொழில் உணர்த்துவன. நட வாழ் முதலிய உயிரீறும் புள்ளியீறும் தொழிற்படுத்துவன.

154. எட்டிப்பூ - இவ்வுயர்திணைப்பெயர் வேற்றுமைக்கண் மிக்கு முடிந்தது.

எட்டி, காவிதி என்பன தேய வழக்காகிய சிறப்புப்பெயர். எட்டிமரம் அன்று. அஃது 'எட்டிக்குமரன் இருந்தோன் தன்னை' (மணி-4-58) என்பதனால் உணர்க.

166. உரிக்குறை - உரியநெல்லும் குறை நெல்லும்

167. கலத்துக்குறை - கலமும் குறையும்

169. பனையின் குறை - பனை அளவும் குறைந்ததும்காவின் குறை - கா என்னும் நிறையும் குறைந்ததும்

210 செய்ம்மன - செய்யும் என்னும் பெயரெச்சப்பொருட்டு. செய்யும் என்பதன் பொருட்டாகிய மன என் இறுதிச்சொல் அக்காலம் வழங்கியதாகலின் ஆசிரியர் அதனையும் வேறாக எடுத்தோதினார்.

211 வாழிய - வாழிய யான், நீ, அவன், அவள், அவர், அது, அவை - என இது மூன்று இடத்தும் சேறலின் முன்னிலையில் அடங்காத குறிப்பு வியங்கோள்.

216 இருவிளக்கொற்றன் - இருவிள என்பது ஓலை. வேணாட்டகத்து ஓர் ஊர். கருவூரினகத்து ஒரு சேரியும் என்ப. இருவிளவிற் கொற்றன் எனவிரியும்.

223 இறாஅவழுதுணங்காய் - இஃது உம்மைத்தொகை அராஅக்குட்டி - பண்புத்தொகையும் வேற்றுமைத் தொகையுமாம்; உவாப்பட்டினி என்பது வேற்றுமைத் தொகை

224 உண்கா - உண்கா என்பது யான் உண்பேனோ என்னும் பொருட்டு

236 இனிக்கொண்டான், அணிக்கொண்டான், இக்கொற்றன்- இவ்விடைச்சொல் மூன்றும் இப்பொழுது கொண்டான், அணிய இடத்தே கொண்டான், இவ்விடத்துக்கொற்றன் என உருபின் பொருள்படவந்த வேற்றுமையாகலின் வேறோதி முடித்தார்.

239 தூணிப்பதக்கு - உம்மைத்தொகை, வேற்றுமை இயற்று எனவே இது வேற்றுமைப் பொருட் புணர்ச்சியன்று.

272 ஏஎ - எனக்கு ஒரு கருமம்பணி; ஓஒ - இங்ஙனம் செய்கின்றதனை ஒழி - என முன்னிலை ஏவற்பொருளவாய் வந்தன.

276 வேக்குடம் - வேதலைஉடையகுடம் என விரியும்

288 வேட்கை + அவா - வேணவா.

வேட்கையாவது பொருள்கள்மேல் தோன்றும் பற்றுள்ளம். அவாவாவது அப்பொருள்களைப் பெறவேண்டும் என்று மேன்மேல் நிகழும் ஆசை. எனவே வேட்கையால் உண்டாகின்ற அவா என மூன்றன் உருபு விரிந்தது. இ த னை வேட்கையும் அவாவும் என அல்வழி என்பாரும் உளர்.

316 இலம்படுபுலவர் - இல்லாமை உண்டாகின்றபுலவர். இலத்தால் பற்றப்பட்டபுலவர் என வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாகக் கோடல்பொருந்தாது, இஃது அல்வழி அதிகாரம் ஆகலானும், படு என்ற சொல்லேயன்றிப் பற்று என்ற சொல் புணராமையானும் என்க.

328 ஈம் - சுடுகாடு, கம் - தொழில்

335 குயின் - குயின் என்பது மேகம் அஃது அஃறிணைப்பெயர். குயின் வினையுமாகும்.

345 மின் - மின் என்பது மின்னுதல் தொழிலும் மின் என்பதொரு பொருளும் உணர்த்தும்.

346 கன்னம் - மகர ஈற்றுப் பொருட்பெயர்

351 பேன், கோன் என்பன முற்கால வழக்கு

354 அழக்குடம் என்பது பிணக்குடத்தை

359 மகன் தாய்க்கலாம் - மகன் தாயோடு கலாய்த்தகலாம் என விரியும்; வினை ஈண்டு பகைமேற்று.

363 பீர் ஒரு கொடி
பீர் மரம் என்பார் பீர்ங்கோடு என்பர்.

364 சார்க்காழ் - சாரினது வித்து என்பதேபொருள். காழ் என்பது வயிரமெனின் கிளந்து ஓதுவர் என உணர்க.

382 உரையிற்கோடலான் தெம்முனை என வகர ஒற்று மகர ஒற்றாகத்திரிதல் கொள்க.

384 தாழக்கோல் - தாழைத்திறக்கும்கோல் என விரியும்.

387 பாழ்க்கிணறு - இது பாழுட் கிணறு என விரியும், பாழ்த்த கிணறு என வினைத்தொகை முடியாமையின்.

400 உதள் ஒரு மரத்தையும் ஆண் ஆட்டினையும் உணர்த்தும்.

401 வாள்கடிது - வாள் - கொல்லுதல்

418 பார்ப்பனக்குழவி - பார்ப்பானுடைய குழவி, பார்ப்பினுட் குழவி என விரிக்க. பார்ப்பானாகிய குழவி என்பது அல்வழியாதலின் 425 ஆம் சூத்திரத்தான் முடியும்.

427 யாங்குக்கொண்டான் - எவ்விடத்துக்கொண்டான் என்னும் பொருட்டு.

428 யாங்குகொண்டான் - இஃது எப்படி என்னும் வினாப் பொருளை உணர்த்திற்று

431 தெற்கேவடக்கு - இஃது உம்மைத்தொகை

443 ஏழ் குற்றுகர ஈறன்மை உருபியலுள் காண்க (194).

449 ஏழ் குற்றுகர ஈறு அன்மையின் மாட்டேறு ஏலாதாயிற்று

480 ஏழ்மா என முடிதல் வழக்கின்று. ஏழுமா என முடிக்க.

481 வானவரிவில்லும் திங்களும் போலும் - வானவரிவில்லிடைத் திங்கள்போலும்

கல்கெழு கானவர் - கல்லைக்கெழீயினகானவர்

மாநிதிக்கிழவனும் போன்ம்-மாநிதிக்கிழவனைப்போலும்

293 கோ+இல் - கோயில்

கோ என்பது உயர்திணைப் பெயரன்றோ எனின், கோ வந்தது என அஃறிணையாய் முடிதலின் அஃறிணைப் பாற்பட்டது என்க.

337 எயின் என்ற உயர்திணைக்கிளைப்பெயர் எயின் வந்தது என அஃறிணைக்கும் வருதலின், தொகைமரபினுள் முடியாதாயிற்று, ஆண்டு உயர்திணைக்கே கூறுதலின்.

367 இச்சூத்திரம் வேற்றுமை இறுதிக்கண் அல்வழி எடுத்துக் கோடற்கண் சிங்க நோக்காக வைக்கப்பட்டது.

397 இதுவும் சிங்க நோக்கு ஆதலின் அல்வழி வேற்றுமை இரண்டற்கும் கொள்க.

415 மாறுகொளக்கூறல் எனத் தழீஇக்கொண்ட சிதைவு இச்சூத்திரம்

450 இது வேண்டாதது கூறி வேண்டியது முடிக்கின்றது, 'ஞநமயவ' (144) முதலிய சூத்திரத்துள் கூறியவற்றைக் கூறலின். இவ்வேண்டாதது கூறலான் எட்டு+அகல்- எண்ணகல் எனக்குற்றுகராறாய்க்கேடும் திரிபும் பெற்று உயிர்வருமொழியான தொடர்மொழிக்கண் ஒற்று இரட்டுதல் கொள்க.

469 ஆறு+ஆயிரம் - அறு + ஆயிரம் - அறாயிரம் முன்னர் 'நெடுமுதல் குறுகும்' (440) என்றவழி அறு என நின்ற முற்றுகரத்துக்கே ஈண்டுக் கேடு கூறினார் என்று உணர்க; என்னை? குற்றுகரமாயின் ஏறிமுடிதலின். இது குற்றுகரம் திரிந்து முற்றுகரமாய் நிற்றலின் ஈண்டு முடிபு கூறினார்.

479 **அதனிலை உயிர்க்கும் யாவரு காலை**
**முதனிலை ஒகரம் ஓஆ கும்மே**
**அதனிலை உயிரும் யாவும் வருகாலை**
**முதனிலைக்கு ஒகரம் ஓஆ கும்மே**
என உருபைப்பிரித்துக்கூட்டுக என்றார்.

241 பனி எனவரூஉம் கால வேற்றுமை - பனி என்று சொல்லவருகின்ற நோய் அன்றிக் காலத்தை உணரநின்ற வேற்றுமை முடிபுடையபெயர்

242 வளி என வரூஉம் பூதக்கிளவி - வளி என்று சொல்ல வருகின்ற இடக்கர் அல்லாத ஐம்பெரும் பூதங்களில் ஒன்றை உணர நின்ற சொல்

243 உதிமரக்கிளவி - உதித்தல் என்னும் தொழிலன்றி உதி என்ற மரத்தினை உணர நின்ற சொல்

244 புளி மரக்கிளவி - சுவை அன்றிப் புளி என்ற மரத்தினை உணர நின்ற சொல்

262 ஓடு மரக்கிளவி - மரம் என்றார் ஓடு என்ற நோயை நீக்குதற்கு

268 பூ என் ஒரு பெயர் - பூ என்பது பொலிவு என்னும் வினைக்குறிப்பை உணர்த்தாது நிற்றற்கு ஒரு பெயர் என்றார்.

278 சே என் மரப்பெயர் - பெற்றம் அன்றிச் சே என்னும் மரத்தினை உணர நின்ற பெயர்

282 விசைமரக்கிளவி - விசைத்தல் தொழில் அன்றி விசை என்னும் மரத்தினை உணர நின்ற பெயர்

304 ஆண்மரக்கிளவி - ஆண்பாலை உணர்த்தாது ஆண் என்னும் மரத்தினை உணர நின்ற சொல்

305 விண்ஏனவரூஉம் காயப் பெயர் - விண் என்னும் குறிப்பினை நீக்குதற்குக் காயம் என்றார்.

308 எண் என் உணவுப்பெயர் - வரையறையை உணர்த்தாது எண் என்று சொல்லப்படும் உணவினை உணர்த்தும் பெயர்

313 இல்லமரப்பெயர் - புக்கு உறையும் இல் அன்றி இல்லம் என்னும் மரத்தினை உணர நின்றபெயர்

336 எகின்மரமாயின் - எகின் என்பது புள் அன்றி மரமாயின்

372 இல்என்கிளவி இன்மைசெப்பின் - இல் என்னும் சொல் இருப்பிடமாகிய இல்லை உணர்த்தாது ஒரு பொருளினது இல்லாமையை உணர்த்துமிடத்து

381 ஏனவை புணரின் இயல்பு என மொழிப.

சுட்டு முதல் வகர ஈற்றோடு இடைக்கணமும் உயிர்க்கணமும் வந்து புணருமாயின் அவ்வகரம் திரியாது இயல்பாகப்புணரும் - அவ்யாழ், இவ்யாழ், உவ்யாழ், அவ்வட்டு, அடை ஆடை; ஈண்டுக் கூறியது நிலை மொழிக்கு என்றும் 'நின்ற சொல்முன்

இயல்பாகும்மே' (144) என ஆண்டுக் கூறியது வருமொழிக் கென்றும் உணர்க.

430 உண்டு என் கிளவி உண்மை செப்பின் - உண்டு என்னும் சொல் வினைக்குறிப்பை உணர்த்தாது ஒரு பொருள் தோன்றுங்கால் தோன்றி அது கெடுந்துணையும் உண்டாய் நிற்கின்ற பண்பை உணர்த்தி நிற்குமாயின்

உள்பொருள் - இது பொருள் சுட்டாது உண்மைத் தன்மைப் பண்பை ஈண்டு உணர்த்திற்று.

இதுகாறும் மாணாக்கருக்குத் தெளிவு கருதி நச்சினார்க் கினியர் எழுத்துப் படலத்தில் விளக்கிக்கூறிய செய்திகளை நோக்கினோம். இனி, இவர் இளம்பூரணர் கருத்தை விடுத்துத் தாமே புதியதாக உரை வரைந்துள்ள நூற்பாக்களை நோக்குவோம்.

22 'அம்மூவாறும்'

மெய்முன்மெய், மெய்முன் உயிர், மெய்முன் உயிர்மெய், உயிர்மெய்முன்னர் உயிர்மெய், உயிர்மெய் முன்னர்த் தனிமெய், உயிர்முன்னர் உயிர்மெய், உயிர்முன்னர்த் தனிமெய் என்ற பலவகை மயக்கங்களையும் இந்நூற்பாவில் காண முயல்கின்றார்.

40 'உருவினும் இசையினும்'

குறிப்பு மொழியும் எல்லா மொழியும் எனப்பிரித்து

எஃஃகிலங்கிய கையராய் இன்னுயிர்

வெஃகுவார்க் கில்லை வீடு

முதலிய இலக்கியங்களுக்கு இலக்கணம் காண்கிறார்.

47 'தம்மியல் கிளப்பின்'

வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடைஎழுத்து என உயிர் மெய்க்கும் பெயரிட்டாளுதற்கு இலக்கணம் காண்கிறார்.

50 'குறுமையும் நெடுமையும்'

உயிரும் உயிர் மெய்யும் அளபெடுக்குங்கால், நெடிலும் ஒத்த குறிலும் இணைய அவை தனித்தனி ஒலிக்காது குறிலின் ஒலி நெடிலோடு இணைய நெடிலே நீண்டு ஒலிக்கும் என்று மாணாக்கரின் ஐயத்தை நீக்குகிறார்.

51 'மொழிப்படுத்து இசைப்பினும்'
ஒற்றும் குற்றுகரமும் எழுத்துப்படலத்தில் எழுத்துக்களோடு கூட்டி எண்ணப்பட்டு நிற்கும் ஆனால் செய்யுளியலில் எண்ணப்படாது நிற்கும் எனினும் அவை எழுத்தாந் தன்மை திரியா என ஐயம் அகற்றுகிறார்.

33 'அளபிறந்துயிர்த்தலும்' - இசைநூற்செய்தியை இயற்றமிழ்ச் செய்யுளுக்கும் கொண்டுள்ளார்.

101 'சார்ந்துவரின் அல்லது'
ஆய்தம் ஒத்த காட்சியின் பிறக்கும் - ஆய்தம் தனக்குப் பொருந்திய நெஞ்சுவளியால் பிறக்கும். காட்சி என்றது நெஞ்சினை.

105 'குற்றியலுகரமும்'
குற்றியலுகரமும் புள்ளியீறுபோல உயிர் ஏற இடம் கொடுக்கும். இம்மாட்டேறு ஒரு புடைச் சேறல் புள்ளி பெறாமையின்; முப்பாற்புள்ளியும்(2) என்பதனை ஆய்தத்தின் வரிவடிவாகக் கொண்டமையின், குற்றியலுகரம், குற்றியலிகரம் என்பன புள்ளிபெறா என்பதனைக் கொள்ளவேண்டி நேர்ந்தது.

111. 'மருவின்தொகுதி மயங்கியல் மொழியும்'
'மருமொழியும் - இருவகையாகி மருவிய சொற்களும் இன்தொகுதி மயங்கியல் மொழியும் - செவிக்கினிதாகச் சொற்றிரளிடத்து நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியு மாய் ஒட்டி நின்றாற்போல நின்று பொருளுணர்த்தாது பின் பிரிந்து சென்று ஒட்டிப் பொருளுணர்த்த மயங்குதல் இயன்ற சொற்களும்' என்று உரைகூறி,

**இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்**
**பரல்அவல் அடைய இரலை தெறிப்ப** (அகம். 4)
**கருங்கால் ஓமைக் காண்பின் பெருஞ்சினை** (அகம். 3)
**தெய்வ மால்வரைத் திருமுனி அருளால்** (சிலப். 3)

போன்ற இலக்கியங்களை அமைக்கின்றார்.

131 'இன்னென......இன்மை வேண்டும்'
இன்மையும் வேண்டும் என்னும் உம்மை தொக்கு நின்றதாக்கி,

**கற்பினின் வழாஅ நற்பல உதவி** (அகம். 86)

**அகடுசேர்பு பொருந்தி அளவினிற் றிரியாது** (மலைபடு.33)

முதலியவற்றை அமைக்கின்றார்.

156 'புள்ளி இறுதியும் ------- வேண்டும்'
அகத்தோத்தினுள் வல்லெழுத்துமிகும் என்று கூறப்பட்ட உயிரீறு புள்ளியீறுகள் புலிகோட்பட்டான் - புலிக்கோட் பட்டான்; நாய்கோட்பட்டான்-நாய்க்கோட்பட்டான் என மூன்றன் தொகைக்கண் உறழ்ந்து முடியும் என்ற செய்தியைத் தெளிவாக விளக்குதற்கு 'வேண்டும் வல்லெழுத்துமிகுதி போற்றல்' என மொழி மாற்றிப் பொருள் செய்துள்ளார்.

157 'சாரியை உள்வழித் தன்உருபு நிலையலும்'
என்ற விதிக்குமாறாக இலக்கிய இலக்கணங்களுள் வருவனவற்றை 'மெய்பெற' என்ற இலேசினாற் கொண்டு

**மறங்கடந்த அருங்கற்பின்**
**சில சொல்லின் பல்கூந்தல் நின்**
**நிலைக்குஒத்த துணைத்துணைவியர்** (புறம். 166)

**ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே** (சொல். 1)

**சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே** (எழுத்து. 1)

என்ற எடுத்துக்காட்டுக்களைத் தருகிறார்.

உயர்திணைப் பெயர்க்கு ஒழியாது வருதலும்
'ஒழியாது' என்ற மிகையான் ஒழிந்து வருதலும் கொண்டு,

**ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்** (சொல். 2)

**உருவக் குதிரை மழவர் ஓட்டிய** (அகம். 1)

**அவற்கண்டு எம்முள்.....ஒடுங்கி** (அகம். 48)

என்ற எடுத்துக்காட்டுக்களைத் தருகிறார்.

222. 'செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்'
உம்மையால் பெயரெச்சமறையாகிய சொல்லும் என்று கொண்டு ஆகாரஈற்றுப் பெயரெச்சமறைச் சொற்களுக்கும் புணர்ச்சி விதி காண்கிறார்.

227 இராஅக்காக்கை எனப்பெயரெச்ச எதிர்மறை அகரம் மிகும். இராக்காக்கை - இராவிடத்துக் காக்கை என்ற பொருளில் அகரம் மிகாது என்பதனை விளக்குகிறார்.

231 **மாமரக்கிளவியும் ஆவும் மாவும்**
**கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்** (குறுந்.8)

**மாஅந் தளிர்கொண்ட போழ்தினான்** (கலித்.143)

முதலிய இலக்கியங்களைக் கருத்தில் கொண்டு ஆவும் மாவும் அகரம் அவண் நிலையா, னகரம் ஒற்றும், அவை வல்லெழுத்து அவண் நிலையா எனக் கண்ணழித்து மாமரக்கிளவி அகரம் பெறுமாற்றைத் தெரிவித்துள்ளார்.

407 'ஈரெற்றுத்தொடர் மொழி இடைத்தொடராகா'
இரண்டு ஒற்று இடைக்கண் தொடர்ந்து நிற்கும் சொற்கு இடையின ஒற்று முதல் நின்றால் மேல் இடையினம் தொடர்ந்து நில்லா. வல்லினமும் மெல்லினமும் தொடர்ந்து நிற்கும் ஆதலால் அவற்றைக் கொண்டே பெயரிடுக. எ.டு. ஆர்க்கு, மொய்ம்பு.

408 'அல்லதுகிளப்பினும்.........நிலையும்'
உகரம் தன் அரைமாத்திரையாய் நிலைபெற்றுநிற்கும் என்று கூறி இருமொழிப்புணர்ச்சிக்கண் ஒரு மாத்திரை கொள்ளும் என்று குறிப்பிடும் 'நிறையும்' என்ற பாடத்தை மறுக்கிறார்.

**நச்சினார்க்கினியர் குறிப்பிடும் சில நுட்பமான செய்திகள்**

68 'முற்றியலுகரமொடு'
காது, கட்டு, சுத்து, முருக்கு, தெருட்டு என்பன முற்று - கரமும் குற்றுகரமுமாகப் பொருள்வேறுபடும்.

115 'ஆறன்உருபின் அகரக்கிளவி'
தமது எமது போல்வன. இது நிலைமொழிக்கு ஒரு அகரம் பெறும் என விதியாது உருபு அகரம் ஏறி முடியும் என விதித்தால் வரும் குற்றம் உண்டோ எனின் 'நினவ கூறுவல் எனவ கேண்மதி' (புறம்.35) என்றாற்போல ஆறாவதற்குரிய அகர உருபின் முன்னரும் ஓர் அகர எழுத்துப் பேறு நிலைமொழிக்கண்வருதல் உண்மையின், உருபு அகரம் ஏறி முடியும் என்பதன்கண் குற்றம் உண்டு.

74 நை, நொ, நோ, உவ, வே என்பன வியங்கோள்.

224 ஏவல் குறித்த உரையசை மியா - முன்னிலை ஏவல் வினையைக் கருதி வரும் எதிர்முகம் ஆக்கும்

சொல்லினைச் சேர்ந்து வந்த மியா என்னும் ஆகாரஈற்று இடைச்சொல்- கேண்மியா கொற்றா.

34 உரையசைக்கிளவி - தான் கூறும் பொருளைக் கோடற்கு ஒருவனை எதிர்முகம் ஆக்கும் சொல். கேண்மியா; கேள் என்பது உரையசைச்சொல்.

226 'ஆன்முன்வரூஉம்.....தோன்றி'

தோன்றி - ணகரத்துக்குக் கேடு தோன்றி

269 ஊ என் ஒருபெயர் ஊ

என்பது தசையை உணர்த்திநின்றவழக்கு, ஆசிரியர் நூல்செய்த காலத்து வழக்கு. அன்றித் தேயவழக்கேனும் உணர்க.

285 பனைக்கொடி - இதற்கு இரண்டாவதும் மூன்றாவதும் விரிக்க

299 பொருநக்கடுமை

பொருந் என்பது ஒரு சாதிப்பெயரும் பொருநுதல் என்னும் வினைப்பெயருமாம்

311 கோணா கோணம் - கோணத்துள்கோணம்

கோணாவட்டம் - கோணத்துள்வட்டம்

இவற்றிற்கு உள் என்னும் உருபு விரிக்க.

315 அகங்கை - அங்கை - அதிகாரத்தானும் பொருள் நோக்கத்தானும் வேற்றுமைத் தொகை அன்மைஅறிக

329 ஈம்+கடுமை - ஈமுக்கடுமை - குணவேற்றுமைப்புணர்ச்சி

ஈம்+குடம் - ஈமக்குடம் - பொருட்புணர்ச்சி

333 'மன்னும் சின்னும்' -ஊன் என்னும் சுட்டு ஊன்கொண்டான் என இயல்பாய் முடியும்

355 'முன்என்கிளவி'

முன் என்பதற்கு ஒற்று இரட்டுதல் இலக்கணமேனும் அதுவன்றித் தனக்கு இனமாயதொரு றகர ஒற்றுப் பெறுதலின் வேறுமுடிபாயிற்று.

422 'யாதன் இறுதியும்'

அஃது+அன்+கோடு. ஆய்தம் கெடாமுன் அன்னின் அகரத்தைக் குற்றுகரத்தின்மேல் ஏற்றுக, ஆய்தம் கெட்டால் அது முற்றுகரமாய் நிற்றலின்.

113 'ஐ ஒடு கு இன் அது கண்'
சொல்லுள் எழுவாயையும் விளியையும் கூட்டி வேற்றுமை எட்டு என்பாரால் எனின் ஐ முதலிய வேற்றுமை ஆறும் தொக்கும் விரிந்தும் பெரும்பான்மையும் புலப்பட்டு நின்று பெயர்ப்பொருளைச் செயப்படுபொருள் முதலியவாக வேறுபாடு செய்து புணர்ச்சி எய்துவிக்கும் என்றற்கு ஈண்டு ஆறு என்றார். ஆண்டு எழுவாயும் விளியும் செயப்படுபொருள் முதலியவற்றினின்று தம்மை வேறுபடுத்துப்பொருள்மாத்திரம் உணர்த்தி நின்றும் எதிர் முகமாக்கி நின்றும் இங்ஙனம் சிறுபான்மையாய்ப் புலப்படநில்லா வேறுபாடு உடைய வேனும், அவையும் ஒருவாற்றான் வேற்றுமையாயின என்றற்கு ஆண்டு எட்டு என்றார் என உணர்க.

155 'அஃறிணை விரவுப் பெயர்'
உயர்திணையோடு அஃறிணை விரவியது விரவுப்பெயர் என்று விரவுப்பெயரின் உண்மைத் தன்மைத் தோற்றம் கூறியுள்ளார். அஃறிணை விரவுப்பெயர் என்று மூன்றிடத்துக்கூறிய ஆசிரியர் ஓரிடத்தும் உயர்திணை விரவுப் பெயர் என்று சுட்டாமையை உளங்கொள வேண்டும். சாத்தன், சாத்தி, முடவன், முடத்தி எனவரும் விரவுப் பெயர்க்கண் உயர்திணைக்கு உரியனவாக ஓதிய ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தி நின்ற ஈற்றெழுத்துக்களே அஃறிணை ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தின எனல்வேண்டும்; என்னை? அஃறிணைக்கு ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் உணர்த்தும் ஈறன்றி ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தும் ஈறுகள் உளவாக ஆசிரியர் ஓதாமையின்; அங்ஙனம் உயர்திணை இருபாலும் உணர்த்தும் ஈறுகள் நின்றே அஃறிணை ஆண்பாலையும் பெண்பாலையும் உணர்த்துதலின், அஃறிணை உயர்திணையோடு சென்று விரவிற்று என்று அவற்றின் உண்மைத் தன்மைத் தோற்றம் கூறுவான் ஈண்டுக் கூறினார்.

482 'உயிரும்புள்ளியும் இறுதியாகி'
கடல் ஒல் ஒலித்தது, கடல் ஒல்ல ஒலித்தது - இவை உயிரீறாயும் புள்ளியீறாயும் நிற்றலின் ஒன்றன்கண் அடக்கலாகாமையின் இவற்றை நெறிப்படவாரா என்றார். இத்தன்மைகுறைந்த சொற்கள் பிரித்துப் புணர்க்கப்படா.

கரும்பார்ப்பான், கரும்பார்ப்பனி, கரும்பார்ப்பர், கருங்குதிரை, கருங்குதிரைகள் என்பவற்றுள் கரியனாகிய பார்ப்பான், கரியளாகிய பார்ப்பனி, கரியராகிய பார்ப்பார், கரிதாகிய குதிரை, கரியனவாகிய குதிரைகள் என ஐம்பாலினையும் உணர்த்தும் பண்புகொள் பெயர் தொக்கவாறு காண்க. இங்ஙனம் ஐம்பாலும் தொகுத்தற்குரிய முதனிலையாதலின் பிரித்துப் புணர்த்தலாகாமை கூறினார்.

ஆடரங்கு செய்குன்று முதலாகிய பெயரெச்சம் தொக்க வினைத்தொகைகளை விரிக்குங்கால், ஆடின அரங்கு எனச் செய்து என்னும் பெயரெச்சத்து ஈறு விரிந்த அகர ஈறு இறப்பு உணர்த்தியும், ஆடாநின்ற அரங்கு, ஆடும் அரங்கு எனச்செய்யும் என்னும் பெயரெச்சத்து ஈறு விரிந்த உம் ஈறு நிகழ்வும் எதிர்வும் உணர்த்தியும் அவற்றானாய புடைபெயர்ச்சியைத் தோற்றுவித்து இரண்டு பெயரெச்சமும் ஒரு சொற்கண் ஒருங்கு தொக்கு நிற்றலின் அதனை ஒரு பெயரெச்சத்தின் கண் அடக்கிப் புணர்க்கலாகாமையின் புணர்க்கலாகாது என்றார்.

இவ்வாறு, முன்னரே இளம்பூரணர் எழுத்துப்படலத்துக்கு வரைந்த உரை இருக்கவும் நச்சினார்க்கினியர் மாணாக்கர் களிடம் உய்த்துணர்வினை எதிர்பார்த்தல் இயலாது என்ற தம் பட்டறிவினால் உரையாசிரியர் உய்த்துணர வைத்த பல செய்திகளையும் மாணாக்கருக்கு ஐயுறவு நிகழாத வகையில் விளக்கியும், பல இலக்கியங்களுக்குத் தொல்காப்பிய நூற்பாக்களிலேயே இலக்கணம் கண்டும், நூற்பாக்களிலுள்ள மிகைச் சொற்களைக் கொண்டு தம் காலத்தில் வழங்கிய பல தொடர்களுக்குப் புணர்ச்சி விதி குறிப்பிட்டும் நூற்பாக்களில் பல மாட்டேறுகளை நிகழ்த்திப் பல புதிய செய்திகளைக்கண்டும், தேவைப்பட்ட இடங்களிலெல்லாம் விரிவான விளக்கங்களை வரைந்தும் தாமும் மாணாக்கர் முழுப்பயன் அடைதல் வேண்டும் என்ற அருள் உள்ளத்தால் எழுத்துப் படலத்துக்கு உரை வரைந்துள்ளார்.

மெய்ம்மயக்கத்தை ஒரு மொழிக்கண்ணேயே கோடல், சொற்களில் உள்ள எழுத்துக்களை எண்ணுங்கால் ஒற்றுகளை விடுத்தே எண்ணுதல், கேள் என்பதே உரைஅசைச்சொல் என்று கோடல், நூன்மரபு முதலியவற்றின் செய்திகளோடு

செய்யுளியற் செய்திகளை ஒப்பிடுதல், போலி எழுத்துக்களைக் கொள்ளற்க என்றல் போல்வன இவருடைய மதம் என்று கருதற்பாலாம். இவர்பல புராணச்செய்திகளை எடுத்தியம்பியசெயல் அக்கால மக்கள் மனப்பான்மை பற்றி அமைந்ததாம்.

நச்சினார்க்கினியன் எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்.

# இலக்கிய உருவாக்கத்தில் மொழியமைப்பின் (எழுத்து-சொல்) பங்கு - தொல்காப்பியரின் கோட்பாடு

இரா. சாரங்கபாணி

---

இலக்கியத்தின் தலையாய நோக்கம் விழுமிய செய்திகளைக் கற்போர் மனத்தில் பதியுமாறு நயம்படக் கூறுவதாகும். ஆகவே, செய்திகளைச் சொல்நயம், அணிநயங்கள் புணர்த்து வெளிப்படையாகக் கூறுவதும் ஒலி விகற்பத்தானும் அடைமொழி சேர்த்தலானும் குறிப்பாகப் புலப்படுத்துவதும் இலக்கிய நெறியாகும். பாடலில் நயம் சிறப்பது சொற்களைப் பயன்படுத்தும் பாங்கினால்தான். ஆகவே, தொடர்களில் அமைந்த எழுத்து, சொல் ஆகியவற்றின் அமைப்பு முறையே நடைச் சிறப்புக்குக் காரணமாகும். நடையழகு இல்லா இலக்கியம் நிற வண்ணம் இல்லாச் சோலையையும் மெய்ப்பாடில்லா நடிகனையும் வெள்ளாடை உடுத்திய பெண்ணையும் ஒக்கும் என்று கூறுமுகத்தான் நடையழகின் இன்றியமையாமையைக் காட்டுவர் வ.சுப.மா.[1]

## நோக்கு

இலக்கியப் புலவன் எழுத்தில் சொல்லில் வெளிப்படுத்தும் அழகுகளை, நயங்களை, மேலோட்டமாக ஒருமுறை கற்றால் உணர இயலாது, அவற்றைப் பன்முறை ஓதி உணர்தல் வேண்டும். நோக்கு என்பது காண்டல், பார்த்தல் என்பவற்றினும் வேறுபட்டது. வைத்த கண் வாங்காமல் உற்றுப் பார்ப்பதே நோக்குதல் ஆகும். புலவர்

அச்சொல்லைக் காதற் காட்சியில் பயன்படுத்தி அதன் ஆழ அகலங்களைப் புலப்படுத்தியுள்ளனர்.

யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும் (1094)

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில (1100)

என்னும் குறள்களால் திருவள்ளுவரும்,

**அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்** என்னும் அடியால் கம்பரும், நோக்கின் பொருளாழத்தைக் காட்டுவர். அத்தகு ஆழ்ந்த நோக்கம் இலக்கியத்திற்கும் வேண்டும். அப்பொழுதுதான் புலவன் காட்டும் நுட்பங்களை, நலங்களை எல்லாம் நாம் கண்டு துய்க்க முடியும். **தோள் கண்டார், தோளே கண்டார்** என்றாங்குச் சொற்களில் தோய்ந்து ஆழங்காற்பட வேண்டும். அங்ஙனம் பட்டால்தான் நூனயம் உணரலாம்.

மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே (1361)

எனத் தொல்காப்பியர் நோக்கின் இலக்கணம் கூறுவர். இதற்கு விளக்கம் கூறும் க. வெள்ளை வாரணனார் 'ஒரு செய்யுளைக் கேட்டோர் அதன்கண் மாத்திரை முதலாக அடி நிரம்புந் துணையும் பாடற்பகுதியினை மீண்டும் மீண்டும் கூர்ந்து நோக்கி, அப்பாடலின்கண் அமைந்த பொருள் நலங்களை உய்த்துணர்தற்குக் கருவியாயதோர் உறுப்பு நோக்கு எனப்படும் என்பர்.[2] அடிநிலை காறும் எனக் கொண்ட இளம்பூரணர் பாடத்தை விடுத்து அடி நிறை காறும் எனக் கொண்ட பேராசிரியர் பாடத்தைத் தழுவிக் க.வெ. விளக்கம் தந்துள்ளார். ஆகவே, பாடலின் ஒலிநிலை, யாப்பமைப்பு, அணிநலம், குறிப்பு நுட்பம் முதலியன அமைந்த சொல்லாட்சிகள் ஆகியவற்றை நவில்தொறும் நூல்நயம் என்னுமாப் போலே பாடல்களை ஆழ்ந்து நோக்க வேண்டும்.

## அளபெடை

நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய
கூட்டி எழுஉதல் என்மனார் புலவர் (தொல். 6)

நீண்ட மாத்திரையையுடைய அளபெடை .எழுத்துப் பெற வேண்டின், மேற்கூறிய இரண்டு அளபுடைய நெடிலையும் ஓரளபுடைக் குறிலையும் கூட்டி எழுப்புக என்று சொல்லுவர் புலவர் என்பது இளம்பூரணர் உரை.[3] மாத்திரையைக் கூட்டி ஒலிக்கலாம் என்று கூறும் நூற்பாவில் ஆசிரியர் தொல்காப்பியனார் 'எழூஉக' எனக் கூட்டி உரைத்தது நயமுடைத்து. யாப்பில் தளைதட்டுமிடங்களில் மட்டுமன்றிப் பொருட் சிறப்புக் கருதியும் நூலறிபுலவர்கள் எழுத்தொலிகளை நீட்டி உரைப்பதுண்டு.

தெளிவுப் பொருள் காட்டும் ஏகார இடைச் சொல்லும் சிறப்புப் பொருள் காட்டும் ஓகார இடைச் சொல்லும் அளபெடுத்து நீட்டி ஒலிக்கும் என்பர் தொல்காப்பியர்.

**தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்**
**அளபின் எடுத்த இசைய என்ப** (746)

இம்முறைப்படி ஓகார இடைச்சொல் அளபெடுத்துப் பாடலுக்கு நயம் சேர்ப்பதைக் காண்போம். மறம் செறிந்த பகைவரும் போர்க்களத்தே அஞ்சுவதற்கு ஏதுவாகிய மனத்திண்மையும் உடல் வன்மையும் இத்தலைவியின் ஒளிமிகு சிறு நுதலுக்கே அழிந்துவிட்டனவே எனப் பெருவீரனாகிய தலைவன் கவலையில் ஆழ்கிறான்.

**ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்குமென் பீடு** (1088)

இதில் 'ஓ' என்னும் இடைச்சொல் அளபெடுத்து வந்து உயர்வு சிறப்பாகத் தலைவனின் ஆற்றல்களையும் இழிவு சிறப்பாகத் தலைவியின் நுதலது சிறுமையையும் காட்டுகிறது என்பர் பரிமேலழகர். 'ஓ' என்னும் வியப்பின்கட் குறிப்பு அவ்வலிகளது பெருமையும் நுதலது சிறுமையும் தோன்ற நின்றது என்பது அவரின் சிறப்புரை. தொல்காப்பியர் ஓகாரத்திற்கு வியப்புப் பொருள் கூறவில்லை. அதனை அவர் கூறும் சிறப்புப் பொருளில் அடக்க வேண்டும். ஓகாரத்திற்கு இருபொருள் காட்டுமாப் போலவே, பரிமேலழகர் உம்மைக்கும் இருபொருள் காட்டுவர்.

**பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்** (475)

இக்குறளில் சாகாடும் என்ற உம்மைக்குச் சாகாட்டது வலிச்சிறப்பே யன்றிப் பீலியது நொய்ம்மைச் சிறப்பும் தோன்ற நின்றது என

இருபொருள் சுட்டுவர். இங்ஙனம் ஓர் இடைச்சொல் இருவேறு குறிப்புப் பொருள் தருங்கொல் என ஐயுற்ற ச. தண்டபாணி தேசிகர், அதற்கு அமைதி காண்பர். 'சாகாடும் அச்சிறும்' என்பதிலுள்ள உம்மை வண்டியின் உறுதியை நினைக்கும்போது உயர்வு சிறப்பாயும் அச்சு இறுதலாகிய பயனிலிருந்து ஏற்றப்பட்ட பீலியின் நொய்ம்மையை நினைக்கும்போது இழிவு சிறப்பாயும் கருதப்படுதலைப் பரிமேலழகர் விளக்குகிறார். ஆயின், கண்ணிரண்டும் ஒருகாலத்து ஒன்றையே நோக்குதல் போல உம்மையும் இரண்டையும் ஒரு சேர உணர்த்தாது ஒன்றொன்றாகவே உணர்த்தும் என்ற குறிப்பும் தோன்ற உரைத்ததாம் என அவர் எழுதியுள்ளார். ஆகவே, ஓகார இடைச்சொல் தனித்தனியே வந்து பெருமையையும் சிறுமையையும் உணர்த்தியதாகக் கொள்ள வேண்டும். சிறப்பும்மையை உயர்பு சிறப்பும்மை, இழிவு சிறப்பும்மை என்னும் இரண்டற்கும் பொதுவாகக் கொள்ளுதல் போலச் சிறப்பின் 'ஓ'வும் பெருமை சிறுமை என்னும் இரண்டற்கும் பொதுவாக வந்துள்ளது எனக் கொள்ளலாம்.

ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இடர்ப்பட் டது (1176)

இக்குறளில் வரும் ஓ என்பது மிகுதிப் பொருட்கண் வந்த குறிப்புச் சொல் என்பர் பரிமேலழகர். ஓஒ இனிது - மிக இனியது என்பது பொருள். 'இது ஒரு வியப்பிடைச் சொல் என்றே கருதத்தகுந்தது; ஓஒ என்பது உண்மையில் தனிக் கிளவியாகவே அமைந்து இன்னொரு சொல்லைத் தழுவாமல் வந்துள்ளது. இதுபோல் வருவதை ஒருவகை இடைச் சொல்லாகக் கருதலாம்' என்பர் செ.வை. சண்முகம்.[4]

போர்க்கள நிகழ்ச்சிகளைப் புனைந்து களவழி நாற்பது பாடியவர் பொய்கையார். அவர் ஒரு பாடலில் போர்க்களத்தே குதிரைப்படை, பகை மன்னரின் வெண்கொற்றக் குடைகளைச் சிதைத் தொழித்ததைப் புனைகிறார். அதற்கு உவமையாக ஆனிரை காளான் குடையைச் சிதைத்தொழித்ததைக் கூறுகிறார். அவ்வுவமை நல்ல பொருத்தமுடையது தான். அப்பொருத்தம் புலவருக்குப் பெருவியப்பை நல்குகிறது. அவ்வியப்பு மிகுதியைப் பாடலின் முதலடியிலேயே காட்டிவிடுகிறார்.

ஓஒ உவமன் உறழ்வின்றி ஒத்ததே
காவிரி நாடன் கழுமலம் கொண்டநாள்
மாஉதைப்ப மாற்றார் குடைஎலாம் கீழ்மேலா

**ஆஉதை காளாம்பி போன்ற புனல்நாடன்**
**தெவ்வரை அட்ட களத்து** (36)

இப்பாடலின் முதற்சீராக அமைந்துள்ள ஓஒ என்னும் இடைச்சொல் புலவரின் வியப்புணர்வைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றது. அச்சொல் இப்பாடலின் உயிர்ச்சொல்.

ஓ என்னும் இடைச்சொல் வியப்புப் பொருள் தருவதைக் கண்டோம். ஐ என்னும் உரிச்சொல் வியப்புப் பொருள் தருவதை, **ஐ வியப்பாகும்** (868) என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். **ஐ** என்னும் உரிச்சொல்லும் **ஓ** என்னும் இடைச்சொல்லும் மருட்பா போலச் சேர்ந்து **ஐயோ** என்றாகி, அஃது அளவிறந்த வியப்பினைப் புலப்படுத்துகிறது. இதனைக் கூர்ந்து நோக்கின் அச்சொல்லும் நமக்கு வியப்பளிக்கிறது.

திருப்பாணாழ்வார் நாலாயிரத்தில் **ஐயோ** என்னும் ஒருபொருட் பன்மொழியைப் பெருவியப்பு என்னும் பொருளில் ஆட்சி செய்துள்ளார். அவர்,

**ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலக னாய்**
**ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத் தரவின் அணையான்**
**கோல மாமணி ஆரமும் முத்துத் தாமமும் முடிவில்ல**
**தோர் எழில்**
**நீல மேனி ஐயோ! நிறைகொண்டது என் நெஞ்சினையே!**
(935)

திருமாலின் இயற்கையான நீலமேனி எழில் நலமும், மணி ஆரமும் முத்துமாலையும் அணிந்த செயற்கைக் கோலமும், கண்டு உள்ளத்தைப் பறிகொடுத்த பாங்கினை வியப்பு மீதூரப் பாடியுள்ளார். முடிவில்லதோர் எழிலில் திளைத்த களிப்பு மீதூர்ந்த பெருவியப்பை ஐயோ என்ற சொல் (ஒருபொருட் பன்மொழி) வெளிப்படுத்துகிறது.

கம்பர் ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்காற்பட்டவர். அப்பாசுரங்களைத் தழுவித் தம் கவிதைகளைச் சுவைமிக அமைத்தவர். அதற்குச் சான்றாக ஒரு பாடல் காண்போம்.

**மைவளர்க்கும் மணியுருவம் மரகதமோ,**
**மழைமுகிலோ, என்கின் றாளால்** (1648)

இப்பாடலடி திருக்கண்ணபுரத்தம்மானைத் திருமங்கை மன்னன் பாடிய பாடலில் உள்ளது. தலைவியின் செயல்களைத் தாய் பிறர்பால்

கூறும் அமைப்பில் பாடப்பெற்றது. திருமேனியழகில் ஈடுபட்டுப் பாடிய மங்கை மன்னன் பாடலடியையும் திருப்பாணாழ்வாரின் 'ஐயோ' என்ற சொல்லாட்சியையும் தழுவிப் பாடிய கம்பர் பாடல்

**வெய்யோன் ஒளி தன்மேனியின்**
**விரிசோதியின் மறைய,**
**பொய்யோ எனும் இடையா ளொடும்**
**இளையானொடும் போனான்;**
**மையோ! மரகதமோ! மறி**
**கடலோ! மழை முகிலோ!**
**ஐயோ! இவன் வடிவென்பது ஓர்**
**அழியா அழகு உடையான்** (754)

ஆழ்வார் பாடலில் உள்ள மை, மரகதம், மழைமுகில் எனும் சொற்களைத் திருமாலின் மேனிக்கு உவமையாக்கி மையோ, மரகதமோ, மறிகடலோ என ஐயப்பொருள் தரும் ஓகாரம் சேர்த்துப் பாடியிருத்தல் பாடலுக்குச் சுவையூட்டுகிறது. இராமனின் மேனியது அழியா அழகை வியந்து ஒருபொருட் பன்மொழியாகிய **ஐயோ** எனும் முன்னோர் சொல்லாட்சியைப் போற்றி ஏற்றுக் கொண்டு பாடியது கவிஞனின் உணர்வு மிகுதியைச் சுட்டுகிறது. இப்பாடலில் ஓகார இடைச் சொல்லும் ஐகார உரிச்சொல்லும் சேர்ந்து செங்கோல் ஓச்சுகின்றன.

## செய்யுள் விகாரம்

வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் என்னும் செய்யுள் விகாரங்கள் ஆறனைத் தொல்காப்பியம் குறிப்பிடும். அவை யாப்பு நிலை மட்டும் கருதி அமையாமல் பொருட் சிறப்புக் கருதியும் அமைவதுண்டு. மழை என்னும் வருவாய் தன் பயன் குறைந்தால் உழவர் தம் தொழிலாகிய உழு தொழிலை மறந்து விடுவர் என்று ஒரு குறள் கூறும்.

**ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்** (14)

மழையே தன் பயன் குறையும் போது அது குன்றுதலைக் குறிக்கும் சொல்லையும் தொகுக்கும் வழி தொகுத்தல் என்னும் முறைப்படி தொகுத்தால்தான் பொருள் நயம் சிறக்கும் எனக் கருதிக் குன்றிக்கால் எனக் கூறியுள்ளார். குன்றியக்கால் என வர வேண்டியது யகரம் கெட்டுக் குன்றிக்கால் என வந்திருத்தல் நோக்கத்தகும்.

தலைவனைப் பிரிந்து கவலும் தலைவி அவன் பிரிந்து சென்ற நாள்களைச் சுவரில் கோடிட்டு எத்தனை நாளாகின்றன என எண்ணிக் கணக்கிடுவது வழக்கம். அங்ஙனம் அத்தலைவி கைவிரலால் தொட்டுத் தொட்டு எண்ணியதால் அவளுடைய கைவிரல்கள் தேய்ந்து விட்டனவாம்.

**வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற**
**நாளொற்றித் தேய்ந்த விரல்** (1261)

இக்குறளில் விரல் தேய்ந்ததை உணர்த்த வந்த சொல்லும் தேய்ந்துவிட்டது. தேய்ந்தன என வரவேண்டியது 'அன்' சாரியை கெட்டுத் 'தேய்ந்த' என வந்துள்ளமை நயமுடைத்து.

மகர ஈற்றுச் சொல் வேற்றுமைப் பொருளில் வரும்போது அத்துச்சாரியை பெறுதல் பெருவழக்கு. முகத்தின் முதுக்குறைவு (707), அகத்துறுப்பு (79), நிலத்திற் கிடந்தமை (959) என்னும் குறள்களில் முகம், அகம், நிலம் என்னும் சொற்கள் எல்லாம் அத்துச்சாரியை பெற்று வந்துள்ளன. ஆனால், சில இடங்களில் அத்துச் சாரியை கெட்டு 'மாடக்குச் சித்திரமும்' என்ற விடத்துப் போல வந்துள்ளன.

**கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது**
**இல்லை நிலக்குப் பொறை** (570)

**கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்**
**உண்மை நிலக்குப் பொறை** (572)

**ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்**
**தோற்றம் நிலக்குப் பொறை** (1003)

இக்குறள்களில் நிலக்கு என அத்துச்சாரியை கெட்டு வந்துள்ளது. கடுங்கோல் மன்னர், கண்ணோட்டம் இல்லாதவர், ஈட்டம் இவறி இசை வேண்டாதவர் ஆகியவர்களே நிலத்துக்குப் பாரமாக இருக்கும்பொழுது நிலம் என்ற அச்சொல்லுக்கு அத்துச் சாரியையும் சேர்ந்து பாரமாக வேண்டா என்று எண்ணி அத்துச் சாரியை விகாரத்தால் இங்குத் தொகுக்கப் பெற்றது.

கம்பர் காப்பியத்திலும் செய்யுள் விகாரங்களைப் பயன்படுத்திக் கவிதைகளில் சுவையூட்டுவதைக் காணலாம். கைகேயி தயரதனிடம் தன் மகன் பரதன் நாடாளவும் சீதை கேள்வன் காடாளவும் வரம் வேண்டினள். அவளது சுடுசொல் கேட்ட மன்னன் சினந்து வெய்துயிர்த்து மயங்கி விழுகிறான், பின் எழுகிறான், தள்ளாடுகிறான்.

இவ்வவல நிலையைக் கம்பர் தம் சொல்லோவியத்தால் நயம்படப் புலப்படுத்துகிறார்.

**'ஆகொடி யாய்!' எனும்; ஆவி காலும் 'அந்தோ**
**ஓகொடி தேஅறம்' என்னும்; 'உண்மை ஒன்றும்**
**சாக' எனா எழும்; மெய் தளாடி - வீழும்**
**மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான்** (517)

இப்பாடலில் வரும் ஆ, ஓ என்னும் இடைச் சொற்கள் முறையே கைகேயியின் கொடுமையையும் வாய்மையறம் பேணியதால் தயரதனுக்கு அறத்தால் வந்த கொடுமையையும் சுட்டும். மெய் தடுமாறித் தள்ளாடித் தயரதன் வீழ்வதைக் கூறும்போது, ளகர மெய்யைத் தொகுத்துத் **தளாடி** என்று சொல்லாட்சி செய்துள்ளார். இங்குத் **தள்ளாடி** என்று கூறாமல் அச்சொல்லைத் தொகுத்துக் கூறிய முறையினால் தயரதனது தள்ளாட்டத்தை நன்கு காட்டிவிட்டார். இச்செய்யுள் விகாரம் கவிதைக்கு நல்ல ஆக்கமாய் அழகு சேர்க்கிறது.

பரதன் நாடாள்வதை உடன்பட்டு இராமன் காடாள்வதை உடன்படாத தயரதன்,

'மண்ணே கொள்நீ; **மற்றையது** ஒன்றும் மற' (523) என்று கூறுகிறான். நாட்டை ஆள்க எனக் கூறாது 'மண்ணே கொள்' என்றது இகழ்ச்சிக் குறிப்பு. சீதை கேள்வன் காடாள்வானாக என்பதனைத் தன்வாயாற் சொல்ல மனமின்றி இனம் சுட்டும் **மற்றையது** என்ற சொல்லால் கூறியது நயமுடையது. தயரதன் மயங்கி ஆவி சோர்ந்த நிலையில் உள்ளதனை **மூச்சற்றார் போல்** எனக் கூறாமல் உயிரைக் குறைத்து **முச்சற்றார் போல்** எனக் கூறியது, அவனை நடைப்பிணம் ஆக்கிவிட்டது.

**கடை**

கடை என்னும் சொல் வினை எச்ச விகுதியாகவும் பெயராகவும் வரும். பின், முன், கால், கடை, வழி, இடத்து முதலியவை வினை எச்ச விகுதியாயினும் இழிபு சுட்டுமிடத்தில் பிற விகுதிகளைப் பயன்படுத்தாது புலவர்கள் கடை என்பதைப் பயன்படுத்திச் சொற் குறிப்பானும் இழிவினைப் புலப்படுத்துவர்.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை** (53)

**அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போற் போற்றாக் கடை** (315)

**தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்**
**நிலையின் இழிந்தக் கடை** (964)

இக்குறள்களின் இறுதிச் சீராய **கடை** மனைமாட்சி இல்லாதாளின் இழிபையும், தந்நோய் போல் பிறிதின் நோய் போற்றாரின் இழிபையும், நிலையின் இழிந்தாரின் இழிபையும் சொற்குறிப்பான் புலப்படுத்தும்.

இடப்பொருள் உணர்த்தக் கண், கால், தலை, முதல், இடை, வயின் முதலிய பல சொற்கள் இருப்பினும் கடை என்பதனைத் தேர்ந்தெடுத்துக் குறள் குறிப்பினால் இழிபொருளைச் சுட்டுகிறது.

**அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை**
**நின்றாரிற் பேதையார் இல்** (142)

என்னும் குறளில் **பிறன்கடை** என்னும் சொல்லாட்சி காண்க. அது பிறர்மனை புகுவான் தலைவாயிலிற் செல்லாது கடை வாயிலிற் புகுவான் என்னும் குறிப்பையும் உணர்த்தும்.

### வழுவமைதி

திணை, பால் வழுவமைதிகளும் சொற்குறிப்பினால் பொருளுணர்த்துவதும் உண்டு. பல்வகை வளங்களும் நலங்களும் எய்தி எத்துணைச் சீரும் சிறப்புமாக வாழ்ந்தாலும், ஒருவர் பிறர்மனை விழையும் குற்றம் உடையவர் ஆனால் அவர்க்கு அவற்றால் பயனில்லை எனக் குறள் கூறும்.

**எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்**
**தேரான் பிறனில் புகல்** (144)

பிறர்பால் உள்ள சீரும் சிறப்பும் நினைந்து எனைத்துணையராயினும் எனப் பலர்பால் விகுதி கொடுத்துப் போற்றியவர், பிறர்மனை நயந்த பேதைமை கண்டதும் சினந்து 'தேரான்' எனப் பன்மை நீக்கி ஒருமைப்பாலால் எள்ளுதல் கருதத்தகும். இக்குறளில் **எனைத்துணையர் தேரான்** எனவரும் சொற்களைப் பால் மயக்கமாக மட்டும் கொள்ளாமல் ஆசிரியரின் சினக் குறிப்பை உணர்த்துவதாகவும் கொள்ள வேண்டும்.

பண்பற்ற கீழ்மக்களை உயர்திணை விகுதியாற் கூறாது இழிதிணையாய்க் கூறுவதையும் குறளிற் காணலாம்.

**சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்பு போல்**
**கொல்லப் பயன்படும் கீழ்** (1078)

இக்குறளில் நல்லவர்களைச் சான்றோர் என உயர்திணைச் சொல்லாலும் பொல்லாதவர்களைக் கீழ் என அஃறிணைச் சொல்லாலும் வேறுபடுத்திக் கூறியுள்ளார். மக்கட் சுட்டு இல்லாரை உயர்திணைப்படுத்தலாகாது என்னும் தொல்காப்பிய நெறியறிந்து கயவரைக் கீழ் என அஃறிணைப்படுத்திக் கூறியது நயமுடையது,.

## சொல்மாற்றம்

சில பெயர்ச்சொல் வினைச்சொற்களுக்கு உரிய, ஏற்புடைய சொற்களைப் பயன்படுத்தாமல் உரியவல்லாத பிற சொற்களைப் பயன்படுத்தல் சில இடங்களில் நூல்நயம் பயப்பதோடு கூறுகின்ற கருத்துக்கும் அழுத்தம் தருகின்றது. கசப்புச் சுவை வாய்க்கு உரியதேனும், அதனைச் செவிக்கேற்றிச் **செவி கைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்** (389) எனக் கூறுவதால் சொன்னயமும் பொருணயமும் தோன்றுகின்றன.

> **துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்**
> **இன்னாச்சொல் நோற்கிற் பவர்** (160)

இக்குறளில் துறவுக்குரிய **நோற்றல்** என்னும் சொல்லை **இன்னாச் சொல் நோற்பார்** என மாற்றி ஆட்சி செய்ததால் அச்சொல்லைப் பொறுத்தல் துறவியர் நோற்றலினும் அரிது என்பது பெறப்படும்.

இரை என்பது அஃறிணையில் பறவை இனத்துக்குரிய உணவைக் குறிப்பதாகும். அதனை மக்களின் உணவைக் குறிக்கப் பயன்படுத்திப் பேருண்டி கொள்வாரின் இழிபு சுட்டுகிறது குறள்.

> **இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**
> **கழிபேர் இரையான்கண் நோய்** (946)

இக்குறள் 'இரையான்' என்பதனோடு கழி, பேர் என்னும் மிகுதிப் பொருள் தரும் இரண்டு அடை புணர்த்துப் பெருந் தீனி தின்பானைக் குறிப்பால் அஃறிணையாக்குகிறது.

## அடைமொழி

சில பாக்களில் வரும் அடைமொழிகள் கூறும் கருத்துகளுக்கு ஏற்பச் சிறந்த செய்திகளைக் குறிப்பின் உணர்த்திப் பொருளுக்கு ஏற்றம் தரும். தலைவி தன்னைக் குறை கூறினாள் எனக் கேட்ட காதற் பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பக் கூறியதாக ஆலங்குடி வங்கனார் பாடிய குறுந்தொகைப் பாடல் அடைமொழிச் சிறப்பு வாய்ந்தது.

**கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்**
**பழன வாளை கதூஉம் ஊரன்**
**எம்மில் பெருமொழி கூறித் தம்மில்**
**கையுங் காலுந் தூக்கத் தூக்கும்**
**ஆடிப் பாவை போல,**
**மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே** (8)

இப்பாடலில் பரத்தை, இளமை நலமும் கவர்ச்சியுமுடைய தன்னிடம் தலைவன் தன் விருப்பப்படி நடந்து கொள்வது சரி; ஆனால், இளமை தீர்ந்த கவர்ச்சியற்ற தலைவிபால் அவள் விருப்பப்படி நடந்து கொள்வது தவறு என்று எண்ணுகிறாள். தலைவி தலைவனது வேட்கைக்கு உரியவள் அல்லள்; வயது முதிர்ந்தவள், இளமைக் கவினும் செவ்வியும் அற்றவள் என்பன எல்லாம் **புதல்வன் தாய்** என்த் தலைவியைக் குறிப்பிடுவதன் வாயிலாகப் புலப்படுத்தி விடுகின்றாள். **பேய் அனையம் சேய் பயந்தனமே** என்பது நினையத்தகும்.

**இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்**
**மரப்பாவை சென்றுவந் தற்று** (1058)

இக்குறளில் ஞாலம் என்பது ஈங்கண் மா என்னும் அடைபெற்றுள்ளது. அந்த அடை சிறப்பு வாய்ந்தது. உலகில் உள்ள இரவலரிடத்து ஈரநெஞ்சத்துடன் பழகவேண்டும். அஃதாவது அன்பு, இரக்கம் காட்டி இன்சொல் இயம்ப வேண்டும்; ஒல்லும் வகை உதவ வேண்டும் என்பனவற்றை எல்லாம் ஈரம் (ஈர்ம்) என்னும் அடை குறிப்பின் உணர்த்தும்.

**நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்**
**பிறர்க்குரியாள் தோள்தோயா தார்** (149)

இதன் பொருள் : அச்சந்தரும் கடலாற் சூழப்பட்ட உலகத்து எல்லா நன்மைகளும் எய்துவதற்கு உரியவர் யாவர் எனின் பிறனுக்கு உரியமனைவியின் தோளைச் சேராதவர் என்பது. உலகு எனப் பொருள்படும் வைப்புக்கு நாமநீர் என அடை கொடுத்தது ஏன்? பிறர்மனை நயத்தல் அச்சந்தரும் செயல் என்பதனை அறிவிக்கவே, நாமநீர் வைப்பு என ஏற்ற அடை தரப்பட்டது. நாமநீர் என்பதற்கு அச்சந்தரும்கடல் என்பது பொருள். பிறர்மனை நயத்தல் அச்சம் பயப்பது என்பதை நாலடியார் நன்கு அறிவிக்கும்.

**புக்க இடத்தச்சம் போதரும் போதச்சம்**
**துய்க்கும் இடத்தச்சம் தோன்றாமற் காப்பச்சம்**
**எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ**
**உட்கான் பிறனில் புகல்** (83)

நாமநீர் - இதிலுள்ள நாம என்பது நாம் என்னும் அச்சப் பொருள் தரும் உரிச்சொல் திரிந்து வந்ததாகும்.

நாம் அச்சப் பொருள் தருவதை,

**பேம்நாம் உரும்என வரூஉம் கிளவி**
**ஆமுறை மூன்றும் அச்சப் பொருள** (848)

என்னும் தொல்காப்பிய உரியியல் நூற்பாவால் அறியலாம்.

ஓரடியினால் ஒரோவழி ஓர் அடைமொழியினால் கூட கவிஞன் தன் கற்பனையை, உணர்ச்சியை, கற்போர் உள்ளத்தே நிலைபெறச் செய்து விடுவான் என்பர் வின்செசுடர்[5] நரசிங்காவதாரத்தில் இரணியன் நரசிங்க உருவில் வந்த திருமாலோடு போரிட வருகிறான். சினம் மிகுகிறது. சினத்தீயால் கண்ணில் தீப்பொறி பறக்கிறது. நெஞ்சு புகைகிறது. அவ்வெம்மை மிகுதியால் அவன் மேனியிற் பூசிய சந்தனம் உலர்ந்து உதிர்கிறது. இச்சீற்ற நிலையை,

**புகைந்த நெஞ்சின் புலர்ந்த சாந்தின்** (பரிபாடல் 4:11)

என்ற இரு பெயரெச்சத் தொடர்களால் கடுவனிள வெயினனார் என்னும் சங்கப்புலவர் காட்டிவிடுகிறார்.

## தொடரமைப்பில் அடை

புலவர்கள் அமைக்கும் சில தொடர் அமைப்புங் கூடக் கவிதையின் அழகைக் கூட்டுகின்றது. சான்றாகச் சில காண்பாம். பலபொருள் ஒரு சொல்லை ஒரு பொருட்கு உரித்தாக்கத் தேர்ந்தெடுத்துச் சில அடைமொழிகளைப் புணர்க்கின்றனர். பூவை என்னும் சொல் காயாமரத்திற்கும் நாகணவாய்ப் பறவைக்கும் பொதுவானது. காயாம் பூவைக் குறிக்கப் பறவாப் பூவை என அடைசேர்த்துக் கூறுகிறார். அந்த அடை நாகணவாய்ப் புள்ளை விலக்குகிறது. அதனால் அது காயாவை உணர்த்துகிறது என நாம் அறிகிறோம்., திருமாலின் நிறத்தைக் குறிக்கும் போது காயாம்பூ மேனியன் என்பதைப் பரிபாடலில் புலவர் 'பறவாப் பூவைப் பூவினோயே' (3:73) என்று பாடுகிறார். தோட்டி என்பது அங்குசத்தை விலக்கித் தோட்டி எனப்

பெயரிய மலையைக்குறிக்க வன்பரணர் 'இரும்பு புனைந்து இயற்றாப் பெரும் பெயர்த் தோட்டி' (புறம் 150:25) என அடைசேர்த்துக் கூறுவர்.

## சிறப்புத் தொடர்கள்

இரப்போரைப் புரக்கும் வள்ளற் பெருமானைப் **பாண் பசிப் பகைஞன்** (புறம் 180:7) என்றும் **பசிப்பிணி மருத்துவன்** (புறம் 173:11) என்றும் கூறுவன நல்ல தொடர் ஆக்கங்கள். பிணம் சுமக்கும் பாடையைக் **கால்கழி கட்டில்** (புறம் 286:4) என்றும் சொல்வன்மையினால் கேட்போரை ஈர்த்துப் பிணிக்கும் சொல்லின் செல்வனைச் சொல்வலை வேட்டுவன் (புறம் 252) என்றும் மன்பதைக்குப் பயன்படாது மாக்களென உயிர் வாழும் பயனில்லாதானை **மக்கட்பதடி** (குறள் 196) என்றும் போரில் முன்னின்று தன் படைவீரர்களுக்கு ஊறின்றிக் காக்கும் உரவோனைச் **சான்றோர் மெய்ம்மறை** (பதிற்றுப் பத்து, 14) என்றும் கூறுவன எல்லாம் அருமையான சொற்றொடர் ஆக்கங்கள். இத்தகைய ஆக்கத் தொடர்கள் பாநலம் பொலிய மெருகூட்டுவன எனலாம்.

## ஓசை நயம்

பாடுபொருட்கு ஏற்பப் பாடலில் வல்லோசை மெல்லோசை முதலிய புணர்த்து ஓசையின்பம் சேர்த்தல் யாப்பறி புலவர் தொழில். வல்வில் ஓரி தன் வில்லாற்றலால் ஒரே சமயத்தில் யானை, புலி, மான், பன்றி, உடும்பு என்னும் உயிரினங்களை ஊடுருவிச் செல்லுமாறு அம்பை விடுத்து மாய்த்தனன். இச்செய்தியைக் கூறவந்த வன்பரணர் வாழைப்பழத்தில் ஊசி செல்வது போல அம்பு சென்றதை ழகரஒலி பன்முறை வருமாறு சொல்லமைத்துப் பாடி நயம் சேர்த்துள்ளார் என்பார் கோ. சுப்பிரமணிய பிள்ளை.

**வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி**
**பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்**
**புழல்தலைப் புகர்க்கலை உருட்டி, உரல்தலைக்**
**கேழற் பன்றி வீழ, அயலது**
**ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும்**
**வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்**

(புறம். 152:1-6)

இப்பாடல்களில் ழகர ஒலி மிகுந்து பாநயம் மிகுத்தலை இசையுடன் பாடி உணரலாம்.

வையையின் புனலோட்டத்தைப் பாடவந்த பித்தாமத்தர், அதன் செழுமையும் இனிமையும் புலப்பட ஓசை ஓட்டத்துடன் பாடியுள்ளார்.

**பெயலான் பொலிந்து பெரும்புனல் பலநந்த**
**நலன் நந்த, நாடணி நந்த, புலன் நந்த**
**வந்தன்று வையைப் புனல்** (பரிபாடல் 7:8-10)

திருமால் அவுணர்களைக் கொன்றதைக் கீரந்தையார் பரிபாடலில் புனைந்து கூறுகிறார். கொடிய அவுணர்களைத் திருமாலின் ஆழி அழித்தது. அவர்தம் கொடிகள் அறுந்து வீழ்ந்தன. திருமாலின் சங்கு இடிபோல் முழங்கியது. அவுணரின் தலைகள் பனம்பழம் மரத்திலிருந்து வீழ்ந்து உருண்டோடியது போல ஓடிப் போர்க்களத்தைச் செந்நிறமாக்கின.

**ஓடியா உள்ளமொடு உருத்தொருங்கு உடனியைந்து**
**இடியெதிர் கழறும் கால்உறழ்பு எழுந்தவர்**
**கொடியறுபு இறுபு செவி செவிடு படுபு**
**முடிகள் அதிரப் படிநிலை தளர**
**நனிமுரல் வளை முடியழிபு இழிபு**
**தலை இறுபு தாரொடு புரள** (பரிபாடல் 2:36-41)

என்றாங்கு, பாடிச் செல்கிறார். கற்பனைத் திறனும் யாப்பு வன்மையும் வல்லோசை கூட்டிப் போர் நிகழ்ச்சி காட்டும் ஒலிநயமும், அறுபு, இறுபு, படுபு, அழிபு என்னும் செய்பு எனும் வாய்பாட்டு வினைஎச்ச அடுக்கும் பொருளுக்கேற்பப் பாடலின் உருவாக்கத்திற்கு உறுதுணையாகின்றன.

## விளித்தொடர்கள்

பாட்டுடைத் தலைவன் சிறப்புக்களைப் புலப்படுத்து-முகத்தான் விளித் தொடர்களை அமைத்து அடுக்கிக் கூறுதல் ஒரு கவிதை முறையாகும். அது கற்பார்க்கு இன்பத்தையும் உணர்வையும் பயக்கும் என்பர் ச. அகத்தியலிங்கனார்.[6] பத்திமை செறிந்த பாடல்களிலும் இறைவனைக் குறித்த விளிப்பெயர்கள் அடுக்கி வந்து இறையுணர்வையும் கவிதை இன்பத்தையும் நல்குதலைக் காணலாம்.

மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பின் பழையோள் குழவி!

**வானோர் வணங்குவில் தானைத் தலைவ!**
**மாலை மார்ப! நூலறி புலவ!**
**செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!**
**அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை!**
**மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!**

(முருகாற்றுப்படை 257-264)

நக்கீரர் அருளிய முருகாற்றுப்படையில் வரும் செவ்வேள் குறித்த செவ்விய விளிப்பெயர் அடுக்குகளைப் பன்முறை ஓதின் பத்திமையும் பாநலமும் பெறலாம். அதுபோலவே, கேசவனார் எனத் திருமால் பெயர் பெற்ற பரிபாடற் புலவர் பாடிய செவ்வேள் குறித்த பாடலும் விளிப்பெயர் அடுக்கிப் பாநலம் மிகுக்கும்.

**சூர்மருங் கறுத்த சுடர்ப்படை யோயே!**
**கறையில் கார்மழை பொங்கி யன்ன**
**நறையின் நறும்புகை நனியமர்ந் தோயே!**
**அறுமுகத்து ஆறிரு தோளால் வென்றி**
**நறுமலர் வள்ளிப் பூநயந் தோயே!**
**கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை**
**எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே!**
**பிறந்த ஞான்றே நின்னை உட்கிச்**
**சிறந்தோர் அஞ்சிய சீருடை யோயே!**

(பரிபாடல்)

இசையுடன் பாடி வழிபடுதற்கு ஏற்ற பரிபாடல்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டுக் கிடத்தல் இரங்கற் குரியதே.

## அந்தாதி முறை

தொடை வகையில் அந்தாதியை ஒன்றாகக் கருதுவர். அந்தத்தை ஆதியாகக் கொண்டு பாடும் இப்பாடல் வகையும் செய்யுள் இன்பம் பயப்பதேயாம். சங்கப் பாடல்களில் அந்தாதி முறையிற் பாடுவது காணப்படுகின்றது.

**நெய்கனிந்து இருளிய கதுப்பின்; கதுப்பென**
**மணிவயின் கலாபம் பரப்பிப் பலவுடன்**
**மயில், மயிற் குளிக்கும் சாயல்; சாஅய்**

(சிறுபாண். 14-16)

**குன்றகத் ததுவே கொழுமிளைச் சீறூர்**
**சீறூ ரோளே நாறுமயிர்க் கொடிச்சி**
**கொடிச்சி கையகத் ததுவே** (நற்றிணை. 95)

**பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளினை;**
**பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளின்**
**நிவந்தோங்கு உயர் கொடிச் சேவலோய்!**
(பரிபாடல் 3:16-18)

**மலைஆற்றுப் படுத்த மூவிரு கயந்தலை**
**மூவிரு கயந்தலை, முந்நான்கு முழவுத்தோள்**
(பரிபாடல் 5:10,11)

மேலே காட்டிய மேற்கோள்களில் சீர் அந்தாதியும் அடி அந்தாதியும் அமைந்து யாப்பின்பம் தருதல் காணலாம்.

## பின்வருநிலையணி

ஒருபாடலில் சொல்மட்டும் திரும்பத் திரும்ப வந்து பொருள் வேறுபடுமேல் அதனைச் சொற்பின்வருநிலையணி என்பர். சொல்லும் பொருளும் ஒன்றாகவே இருந்து அச்சொல் மீண்டும் மீண்டும் பாடலுட் பயின்று வந்தால் அதனைச் சொற்பொருட் பின்வருநிலை அணி என்பர். இவ்விரண்டையும் பொதுவாகப் பின்வருநிலை அணி என்பதும் உண்டு. இவ்வணிகள் பாக்களுக்குச் சொல்லின்பம் சேர்க்கும்.

**சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க**
**சொல்லின் பயனிலாச் சொல்** (200)
- சொற்பொருட் பின்வருநிலையணி

**குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுப**
**குன்றி யனைய செயின்** (965)
- சொற்பின் வருநிலையணி

**மதிமாலை மாலிருள் கால்சீப்பக் கூடல்**
**வதிமாலை, மாறும்தொழிலான், புதுமாலை**
**நாளணி நீக்கி, நகைமாலைப் பூவேய்ந்து**
- சொற்பின் வருநிலையணி (பரிபாடல் 10:112-114)

## இரட்டுற மொழிதல்

ஒரு சொல்லுக்கு இரண்டு பொருள் தோன்றுமாறு சொல்லமைத்தலை இரட்டுற மொழிதல் என்பர். இச்சொற்

சிலம்பத்தாலும் யாப்பினிமை விளைவதுண்டு. கிள்ளி வளவனிடம் பாணனை ஆற்றுப் படுத்தும்போது கோவூர்கிழார்,

> **இன்நகை விறலியொடு மென்மெல இயலிச்**
> **செல்வை ஆயின் - செல்வை ஆகுவை** (புறம் 70)

என்று கூறியுள்ளார். முதலிலுள்ள செல்வைக்குச் செல்வாய் என்றும் அடுத்துள்ள செல்வைக்குச் செல்வத்தை உடையை என்றும் பொருள். நீ உன் விறலியொடு வளவனிடம் மெதுவாக நடந்து செல்வாய் ஆனால் செல்வத்தை உடையை ஆவாய் என்பது முன்னுள்ள அடிகளின் திரண்ட பொருள்.

> **இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்**
> **துறந்தார் துறந்தார் துணை** (310)

இறந்தார் என்பது மிக்கார், செத்தார் என இரு பொருளிலும் துறந்தார் என்பது நீங்கினார், துறவியர் என இருபொருளிலும் பயன்படுத்தப்பட்டுள. இக்குறளுக்குச் சினமிக்கார் செத்தாரோடு ஒப்பர், சினத்தை விட்டார் துறவியரோடு ஒப்பர் என்பது கருத்து. இரட்டுற மொழிதல் என்னும் சொல்விளையாட்டு, புலமை நலம் கண்டு நூனயம் துய்க்க வாய்ப்பளிக்கும்.

**முரண்தொடை**

மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே என்பர் தொல்காப்பியர். சொல்லிலும் பொருளிலும் மாறுபாடு தோன்றுமாறு தொகுத்துப் பாடுவது முரண்தொடை எனப்படும். அங்ஙனம் தொடுப்பது பாடலுக்கு அழகூட்டும்.

> **மழையென் கிளவி வளி இயல் நிலையும்** (287)
> **வெயிலென் கிளவி மழைஇயல் நிலையும்** (377)
> **இருளென் கிளவி வெயிலியல் நிலையும்** (402)

எனப் பல இடங்களில் தொடையழகு கூட்டுறும் காட்சிகளை இலக்கணம் என்ற பெயருடைய தொல்காப்பியத்தில் நிரம்பக் காணலாம் என்பர் வ.சுப.மா.[7]

சங்க இலக்கியங்களில் புலவர் பலரும் தம் பாக்களில் முரண்படச் சொற்களை அமைத்து நயமுறப் பாடியுள்ளனர்.

> நிலவும் இருளும் போலப் புலவுத்திரைக்
> கடலும் கானலும் தோன்றும் (குறுந்தொகை 81)

கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குள மாயிற்றுஎன் இளமுலை நிறைந்தே

(குறுந்தொகை 325)

மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோன் அன்ன வயங்குவெள் ளருவி

(நற்றிணை 32)

இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
நீலத் தன்ன பாசிலை அகந்தொறும்
வெள்ளி யன்ன விளங்கிளர் நாப்பண்
பொன்னின் அன்ன நறுந்தாது உதிர

(நற்றிணை 249)

இங்ஙனம் சொல் முரண், அடி முரண் அமைத்துப் பாநலம் மிகுத்தலும் உண்டு.

## எண்ணுப்பெயர் ஆட்சி

ஒன்று முதலாக வரும் எண்ணுப் பெயர்களை மேல் கீழாகவும் கீழ்மேலாகவும் ஏறுவரிசையிலும் இறங்கு வரிசையிலும் அமைத்துப் பாடிப் பாட்டிற்குப் புதுநலம் சேர்த்தனர் கவிஞர்கள்.

மூவேந்தரும் ஒருங்கிருந்தபோது மகிழ்ந்து வாழ்த்திப் பாடிய ஔவையார்,

ஒன்றுபுரிந் தடங்கிய இருபிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்

(புறம் 367)

என முதற்கண் விளித்துள்ளார். இப்பாடலில் ஒன்று, இரண்டு, மூன்று என்னும் எண்கள் நிரல்படக் கூறப்பட்டுள.

திருமாலைப் பாடிய கடுவனிளவெயினனார் ஒன்று முதல் பத்துவரை நிரல்பட எண்களை நிறுத்திப் பாடியுள்ளார்.

நடுவுநிலை திறம்பிய நயமில் ஒருகை
இருகை மாஅல்!
முக்கை முனிவ! நாற்கை அண்ணல்!
ஐங்கைம் மைந்த! அறுகை நெடுவேள்!
எழுகையாள! எண்கை ஏந்தல்!

**ஒன்பதிற்றுத் தடக்கை மன் பேராளா!**
**பதிற்றுக்கை மதவலி!** (பரிபாடல் 3:34-40)

நல்லெழுநியார் திருமாலைப் பாடிய பாடலில் ஐந்திலிருந்து ஒன்று வரை இறங்கு வரிசையில் பாடியது நயஞ் சான்றதாக உள்ளது.

**கார், மலர்ப்பூவை, கடலை, இருள், மணி**
**அவை ஐந்தும் உறழும் அணிகிளர் மேனியை;**
**வலம்புரி, வாய்மொழி, அதிர்புவான் முழக்குச் செல்**
**அவை நான்கும் உறழும் அருள் செறல் வயின்மொழி;**
**முடிந்தும், முடிவதும், முகிழ்ப்பதும் அவை மூன்றும்**
**கடந்து, அவை அமைந்த கழலின் நிழலவை**
**இருமை வினையுமில, ஏத்துமவை**
**ஒருமை வினைமேவும் உள்ளத்தினை;**
(பரிபாடல் 13:42-49)

எண்ணுப்பெயர்கள் இப்பாடலில் பொருட் சிறப்புக்குத் துணை நிற்கின்றன.

இலக்கிய உருவாக்கத்தில் மொழியமைப்பில் அளபெடை, செய்யுள் விகாரங்கள், இடைச் சொற்கள், உரிச்சொற்கள், பெயர் வினைகள் முதலிய பெறும் இடங்கள் ஓரளவு விளக்கப்பெற்றன. சொல்மாற்றம், அடைமொழிகள், முரண்தொடை, இரட்டுற மொழிதல் முதலியவும் பா நலத்திற்குத் துணைபுரிகின்றன. வண்ணம் முதலியவும் துணைசெய்தல் நோக்கத்தகும்.

## குறிப்புகள்

1. வ.சுப. மாணிக்கம், **வள்ளுவம்,** ப.226.
2. க. வெள்ளைவாரணன், **தொல்காப்பியம், உரைவளம்,** செய்யுளியல்.
3. **தொல்காப்பியம், எழுத்ததிகாரம்,** இளம்பூரணம்.
4. செவை சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு 3– தொல்காப்பியம் **வினையியலும், இடையியலும்,** ப.242.
5. Winchester, **Some Principles of Literary Criticism,** p.135.
6. ச. அகத்தியலிங்கம், **கவிதை உருவாக்கம் I,** ப. 262.
7. வ.சுப. மாணிக்கம், **தொல்காப்பியக் கடல்,** ப.3.

# தொல்காப்பியம் எழுத்ததிகாரமும் வடமொழி இலக்கணங்களும்

கு. மீனாட்சி

---

பண்டைய இந்திய இலக்கண நூல்களில் விளக்கப்பட்ட ஒலியியல் கொள்கைகள் பற்றிப் பேசும் பெரும்பாலான நூல்கள் ஸம்ஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ள சிட்சை, பிராதி சாக்கியம் போன்ற நூல்களில் வர்ணிக்கப்பட்ட ஒலியியல், சந்தி போன்றவற்றை மட்டுந்தான் விளக்கமாகக் கூறுகின்றன. பி.சா. சுப்பிரமணிய சாத்திரியார் (1934) ஒருவரே தமிழ், ஸம்ஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் காணப்படும் எழுத்தியல் கோட்பாடு பற்றித்தன் நூலில் (ஆங்கிலத்தில்) விளக்கியுள்ளார். சாத்திரியார் அவர்கள் இவ்விரு மொழிகளிலுமே தேர்ச்சி பெற்றவர். தொல்காப்பியம் மிகப்பழமையான தமிழ் இலக்கண நூல். பலநூல்களும், கட்டுரைகளும் தொல்காப்பியம், அதற்குப்பின்னால் எழுந்த இலக்கண நூல்கள் ஆகியவற்றில் விளக்கப்பட்ட தமிழ் எழுத்தியல் பற்றித் தமிழில் வெளிவந்துள்ளன. இந்நூல்கள் தமிழ் அறியாத இலக்கண அறிஞர்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை.

தொல்காப்பியம் தமிழ் மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல். முதல் நூலும் ஆகும். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டது. தமிழ் இலக்கண நூல்கள் தொல்காப்பியர் காலத்திலிருந்தே பொருளையும்

உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றன. ஆனால் ஸம்ஸ்கிருத மொழி இலக்கண நூல்கள் எழுத்தையும், சொல்லையும் மாத்திரமே விவரிக்கின்றன. பொருளதிகாரத்தில் கூறப்பட்ட செய்திகள் ஸம்ஸ்கிருதத்தில் ஒரு தனிச்சாத்திரமாகக் கருதப்படும் அலங்காரச்சாத்திரத்தில் விவரிக்கப்படுகின்றன.

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் விவரிக்கப்பட்ட ஒலியன், ஒலிபிறப்பு, புணர்ச்சி விதிகள் யாவும் சிட்சை, பிராதிசாக்கியம் போன்ற ஸம்ஸ்கிருத மொழி நூல்களில் காணலாம்.

## நோக்கம்

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் கூறப்பட்ட விவரங்களை, சிட்சை, பிராதிசாக்கியம் போன்ற ஒலியியல் நூல்களோடு ஒப்பிட்டு ஆய்ந்து, இந்நூல்களில் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை எடுத்துக்காட்டுவதுதான் இக்கட்டுரையின் நோக்கம். இவைகளின் காலங்கள் இன்னும் உறுதியாகக்கூறஇயலாமல் சர்ச்சைக்குள்ளதாக இருப்பதால், இம் மொழிகளில் விவரிக்கப்பட்டுள்ள ஒலியியல் கோட்பாடுகளின் தொடர்பு பற்றிக் கூறஇயலாது.

## தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தின் அமைப்பு

எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களையும், 483 நூற்பாக்களையும் கொண்டது. இந்த அதிகாரத்தில் விளக்கப்படும் செய்திகள்: 1. நூல் மரபு 2. மொழி மரபு 3. பிறப்பியல் 4. புணரியல் 5. தொகை மரபு 6. உருபியல் 7. உயிர் மயங்கியல் 8. புள்ளி மயங்கியல் 9. குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஒன்பது இயல்களுள் அடக்கப்பட்டுள்ளன. தற்கால மொழியியல் அறிஞர்கள் இச்செய்திகளை மூன்றுபிரிவாகப்பகுக்கலாம் என்று கருதுகிறார்கள். அவைகள் வருமாறு. 1. ஒலியனியல் 2. ஒலியியல் 3. புணர்ச்சி. முதலிரண்டு இயல்களில் கூறப்பட்டவைகளை ஒலியனியலாகவும், மூன்றாவது இயலில் காணப்படும் செய்திகளை ஒலியியலாகவும் இறுதியாகக்கொடுக்கப்பட்ட ஆறு அதிகாரங்களையும் புணர்ச்சியாகவும் கொள்ளலாம்.

## தமிழ் எழுத்துக்களின் பாகுபாடு

தொல்காப்பியர் எழுத்ததிகார முதல் சூத்திரத்தில்

எழுத்தெனப்படுப<br>
அகரமுதல் னகார இறுவாய்<br>
முப்பஃதென்ப

என்று கூறுகிறார். அதாவது தமிழ் **அ** என்ற எழுத்தில் தொடங்கி **ன**வை இறுதி எழுத்தாகக் கொண்டு, முப்பது எழுத்துக்கள் கொண்டவை. அதைத்தொடர்ந்து குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்று சார்பு எழுத்துக்களையும் சேர்த்து முப்பத்துமூன்று எழுத்துக்கள் கொண்டது தமிழ் என்று கூறுகிறார். ஆகவே, தமிழ் எழுத்துகள் முதல் எழுத்துக்கள், சார்பு எழுத்துக்கள் என்று இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முன்னது **எழுத்துக்கள்** என்றும், பின்னது **எழுத்தோரன்ன** என்றும் ஆசிரியர் தெளிவாகக் கூறகிறார்.

அடுத்து வரும் சூத்திரங்களில் எழுத்துக்களின் அளவு முதலியவைகளைக் கூறுகிறார். **அ, இ, உ,** எ முதலிய நான்கும் ஒரு மாத்திரை ஒலிக்கும் குறில் எழுத்துக்கள். **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஔ** ஆகியவைகள் இரண்டு மாத்திரை ஒலிக்கும் நெட்டெழுத்துக்கள். எழுத்துக்கள் அனைத்தையும் 12 உயிர் எழுத்துக்களாகவும் 18 மெய்யெழுத்துக்களாகவும் வகுக்கிறார். மெய்யெழுத்துக்களின் அளவு அரை மாத்திரை. உயிர் மெய்யெழுத்து என்று ஒருவகை எழுத்தும் கூறியுள்ளார். அதாவது புள்ளி இல்லா மெய்யெழுத்து. மெய்யெழுத்துக்கள் 1. வல்லெழுத்து 2. மெல்லெழுத்து 3. இடையெழுத்து என மூன்று வகைப்படும். **க, ச, ட, த, ப, ற** என்பவை வல்லெழுத்துக்கள். **ங, ஞ, ண, ந, ம, ன** ஆகியவை மெல்லெழுத்துக்கள். **ய, ர, ல, வ, ழ, ள** என்ற ஆறும் இடையெழுத்துக்கள்.

## மொழி முதல் எழுத்துக்கள்

பன்னிரெண்டு உயிர்எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வரும். உயிர் மெய் அல்லாத தனி மெய்கள் மொழிக்கு முதலில் வரா. **க, த, ந, ப, ம** என்னும் ஐந்து மெய்களும் பன்னிரெண்டு உயிர் எழுத்துக்களுடன் மொழிக்கு முதலில் வரும். **ச** என்னும் மெய் **அ, ஐ, ஔ** இவைகளைத்தவிர ஏனைய ஒன்பது உயிர்களுடன் முதலில் வரும். **உ, ஊ, ஒ, ஓ** ஆகிய நான்கு உயிர்களைத் தவிர மற்ற எட்டு உயிர்களுடன் வ என்னும் மெய் மொழிக்கு முதலில் வரும். **ஞ** என்னும் மெய், **ஆ,** எ, **ஒ** என்னும் மூன்று உயிர்களுடன் மொழிக்கு முதலில் வரும். **ய** என்னும் மெய் **ஆ** காரத்துடன் மட்டும் மொழிக்கு முதலில் வரும்.

## மொழி இறுதி எழுத்துக்கள்

ஔ தவிர்த்த ஏனைய 11 உயிர்களும் மொழி இறுதியில் வரும். **க,** வ ஆகிய மெய்களுடன் ஔவும் இறுதியில் வரும். சில உயிர்கள் சில மெய்யெழுத்துக்களுடன் மட்டுந்தான் ஈறாகும். **எ** என்ற உயிர் தானே ஈறாவதன்றி மெய்களோடு இயைந்து ஈறாகாது

ஓ என்ற உயிர் நகர மெய்யுடன் மட்டும் இணைந்து ஈறாகும். ஞ கரம் ஏ, ஓ என்ற உயிர்களுடன் ஈறாகுவதில்லை. ந, வ என்னும் மெய்களுடன், **உ, ஊ** என்ற உயிர்கள் ஈற்றில் வருவதில்லை. ச என்ற மெய், உ என்ற உயிருடன் இணைந்து இரண்டு சொற்களில் இறுதியில் வரும். த என்ற மெய், உ கரத்துடன் இணைந்து ஒரு சொல்லில் வரும்.

**ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள** என்னும் மெய்யெழுத்துக்கள் பதினொன்றும் மொழிக்கு ஈறாகும். ந காரம் இரு சொல்லில் ஈறாகும். **ஞ** காரம் ஒரு சொல்லில் ஈறாகும். **வ** காரம் நான்கு சொற்களில் ஈறாகும்.

தொல்காப்பியர் பொதுவான ஒரு விதியமைத்து, அதைத் தொடர்ந்து மொழி முதல், மொழி ஈறு ஆகியவைகளுக்கு வரையறைகளையும் கூறியுள்ளார்.

## எழுத்துக்களின் பிறப்பாக்கம்

தொல்காப்பியம் பிறப்பியலில் எட்டுவகையான பேச்சு உறுப்புகளை முதலில் கூறி, அவைகளை இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம் என்று கூறுகிறது. அவைகள் வருமாறு: தலை, கழுத்து, நெஞ்சு ஆகியவைகளை 'இடம்' ஆகவும், பல், இதழ், நாக்கு, மூக்கு, அண்ணம் ஆகிய ஐந்தும் உறுப்புகள் என்றும் இருவகையாகக் கொள்ளலாம் என்று பொதுவாகக் கூறலாம்.

அடுத்து வரும் நூற்பாக்களில் ஒவ்வொரு எழுத்தும் பிறக்கும் வகையை விளக்குகிறார் ஆசிரியர். பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் கழுத்திலிருந்து பிறந்த ஓசைக்காற்றால் ஒலிக்கும். தொல்காப்பியர் உயிர்களை விளக்கும் முறையைக் கீழ்க்கண்டபடி விளக்கலாம்.



## மெய்யெழுத்துக்கள் பிறக்கும் வகை

க, ங முதல் நாவும் முதல் அண்ணமும் உறப்பிறக்கும். ச, ஞ, இடை நாவும் இடை அண்ணமும் உறப்பிறக்கும். ட, ண நுனி நாவும் நுனி அண்ணமும் உறப்பிறக்கும். த, ந, மேல் அண்ணத்தில் நெருங்கிய மேற்பல்லின் அடிப்பக்கத்தில் நாவினது நுனி பரந்து நன்றாக உறும்படிச் சேரப் பிறக்கும். ற, ன நாவினது நுனி அண்ணாந்து அண்ணத்தை ஒற்றப் பிறக்கும். நுனி நா அண்ணாந்து அண்ணத்தைத் தடவ ர, ழ இரண்டும் பிறக்கும். நாவினது விளிம்பு தடித்து மேற்பல்லின் அடியைப் பொருந்துங்கால், அவ்விடத்தே அண்ணத்தை ஒன்ற ல வும் வருட ள வும் பிறக்கும். மேலிதழும் கீழிதழும் தம்மிற் கூடப் ப வும் ம உம் பிறக்கும். மேற்பல்லும் கீழுதடும் கூட வ காரம் பிறக்கும் அண்ணத்தைச் சேர்ந்த கழுத்திலிருந்து வருகின்ற ஓசைக் காற்று அம்மேல்வாயை நன்கு அண்ணாந்து பொருந்த ய பிறக்கும். மெல்லெழுத்துக்கள் ஆறும் முன்பு கூறியபடி பிறந்தாலும், மூக்கின் வழி வெளிப்படும் காற்று இசையால் பொருந்திப்பிறக்கும்.

## புணர்ச்சி

புணர்ச்சியை அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி என இருவகையாக மரபிலக்கணத்தார் பிரிப்பார்கள். தொல்காப்பியர், பெரும்பாலும் புறப்புணர்ச்சி அதாவது இரு சொற்கள் இணையும் போது ஏற்படும் மாற்றத்தைப்பற்றி மட்டும் கூறுகிறார். ஆயினும் வேற்றுமை விகுதிகளை இணைக்கும்போது சொற்களில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிப் பேசும் ஒரே ஒரு இடத்தில் மட்டும் அகப்புணர்ச்சியையும் கூறியுள்ளார்.

புணர்ச்சியில், நிறுத்தசொல், குறித்துவரும் சொல் என்ற இருவகைச்சொற்கள் பங்கு பெறும். அத்தகைய புணர்ச்சியில் பங்குபெறும் சொற்கள் பெயர் + பெயர், பெயர் + வினை, வினை + பெயர், வினை + வினை ஆகும். அதேபோன்று, நிறுத்த சொல்லின் இறுதி எழுத்தும், குறித்து வரும் சொற்களின் முதல் எழுத்தும் புணர்ச்சியில் பங்கு பெறுகின்றன. அவ்வெழுத்துக்கள் உயிர்+உயிர், உயிர்+மெய், மெய்+உயிர், மெய்+மெய் என நான்கு வகைப்படும்.




தொல்காப்பியர் புணர்ச்சியை வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இருவகைப்படுத்துகிறார். ஆகவே, எவ்வகைப் புணர்ச்சி என்பதை முதலிலேயே கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

## வேற்றுமைப்புணர்ச்சி

வேற்றுமை உருபுகள், **ஐ, ஒடு, கு, இன், அது, கண்** என ஆறு உருபுகளையுடைத்து. சில இடங்களில் பெயர், வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது, சாரியைகளை இவ்விரண்டுக்குமிடையில் இணைக்க வேண்டும். சாரியைகளின் பட்டியலையும் தொல்காப்பியர் கொடுத்துள்ளார். அவையாவன: **இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன்** போன்றவைகள். சாரியைகளையும், சொல், எழுத்து என இருவகைகளாகப்பிரிக்கலாம். சாரியைகள் ஒரு சொல்லோடு இணையும்போதும் பலவகையில் புணர்ச்சி மாற்றங்கள் ஏற்படலாம். இவையாவையும் தனது புணர்ச்சி விதிகளில் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

தொல்காப்பியர், புறப்புணர்ச்சியைப் பற்றிப் பேசும்போது, முதலில் உயிரீறு, மெய்யீறு என்ற இருவகை ஈறுகளில் ஏற்படும் மாற்றங்களைப் பொதுவாகக் கூறிவிட்டு, உயிர், மெய் ஈறுகள் இணையும்போது ஏற்படும் புணர்ச்சி மாற்றங்களை உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்ற மூன்று இயல்களில் விரிவாகக் கூறுகிறார். ஆசிரியரின் இவ் அமைப்பு, அதிகமான சூத்திரங்களைக் கூற வேண்டிய கட்டாயமான தேவையை உண்டாக்கியுள்ளது.

## ஸம்ஸ்கிருத நூல்கள்

ஒலியியல் பற்றிப் பேசும் சிட்சை, பிராதிசாக்கியம் என்ற பெயரால் அழைக்கப்படும் நூல்கள் தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

செய்திகளோடு ஒத்துள்ளன. சிட்சை நூல்கள் வேதநூல்கள் சாராத, பொதுவாக ஒலியியல் பற்றிப் பேசுகின்றன. பிராதிசாக்கியங்கள் எனப்படும் நூல்கள் வேதநூல்களைச் சார்ந்தன. அதாவது அவைகளில் வர்ணிக்கப்பட்டிருக்கும் விதிகள், சந்திவிதிகள் ஒரு குறிப்பிட்ட வேதத்தைப்பற்றியவை. பிராதி சாக்கிய நூல்கள் சிட்சை எனப்படும் நூல்களுக்குக் காலத்தால் பிற்பட்டவை என்றும், சிட்சை நூல்களைப்பின்பற்றியவையாகவும் கருதப்படுகின்றன. ஆயினும் இவைகளின் காலம் இன்னும் சர்ச்சைக்குள்ளதாகவே இருக்கின்றன.

## சிட்சை

தொடக்க காலத்தில் எழுத்துக்களைச் சரியான முறையில் உச்சரிக்கவும் உயிர்களின் ஒலியழுத்தம் ஆகியவைகளைச் சரியாகப் பயன்படுத்தவும் ஏற்பட்டன சிட்சை நூல்கள் எனக் கருதப்படுகிறது. தைத்திரீய உபநிடதத்தில் (1-2) சிட்சை நூல்களின் வரைவிலக்கணம் காணப்படுகிறது. சிட்சை எனப்படும் நூல்கள், சுரம் (Accent), மாத்திரை (Maatra), பலம் (Strength), சாம (நடுத்தர நாதத்தில் உச்சரிக்கும் கூற்றுகள் - Utterance in medium tone), சந்தானம் / சம்ஹிதா (Euphonic combination) என்ற ஐந்து உறுப்புக்களைக் கொண்டதாக அமையவேண்டும்.

சிட்சையின் அட்டவணையில் இத்தகைய பல நூல்கள் காணப்படினும், பாணினி சிட்சை என்ற நூல் மிகவும் முக்கியமானதாகக்கருதப்படுகிறது. இது சிட்சைகளில் முழுமையானதாகவும் முதல் நூலாகவும் நம்பப்படுகிறது. ஆயினும், இந்நூலின் காலம் பற்றிய கருத்து வேறுபாடும் நிலவுகிறது. பல அறிஞர்கள் கருத்துப்படி, இந்நூல் பின்னால் எழுதப்பட்ட ஒரு சிட்சை நூல்.

பாணினி சிட்சை 'அனுஷ்டுப்' என்ற சந்தனில் (metre) எழுதப்பட்ட 18 ஈரடிச் செய்யுட்களைக் கொண்டது. முதலிரண்டு செய்யுட்களில் பேச்சு ஒலிகளைக் கூறுகிறது. பேச்சொலிகளின் பிறப்புப்பற்றி அடுத்த நான்கு செய்யுட்கள் கூறுகின்றன. அடுத்ததாக எழுத்துக்களை ஐவகையாகப் பிரிக்கின்றது. அவை, ஒலியழுத்தம் (accent), அளவு (quantity), இடம் (place of articulation), முயற்சி (brayatna), அனுப்பிரதானம் (Secondary effort) ஆகியவை. உதாத்தம், அனுதாத்தம், சுவரிதம் என மூன்றுவகைப்பட்டது சுரம். குறில், நெடில், புலுதம் என மூன்று வகையாகக் காலத்தைப்பகுக்கலாம். நெஞ்சு (உரஸ்), தொண்டை (கண்டம்), தலை (சிரசு), அடிநாக்கு

(ஜிஹ்வாமூலீயம்), பல் (தந்தம்), மூக்கு (நாசிகா), உதடு (ஓஷ்டம்), அண்ணம் (தாலு) என்று எட்டுவகையாக இடம் பாகுபடுத்தப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, ஒவ்வொரு ஒலியும் பிறக்கும் இடம் முதலியவைகளை விரிவாகக் கூறுகிறது. ஹ என்ற ஒலியுடன் மெல்லொலியோ அல்லது இடை ஒலியோ வரும்போது (முன்போ அல்லது பின்னாலோ) அதன் இடம் அடிநாக்கு. அப்படி அமையாவிட்டால் அவ்வொலி தொண்டையிலிருந்து கிளம்பும். மற்றொரு ஒலி அதாவது அ வும் தொண்டை ஒலி என்று அழைக்கப்படும்.

க வர்க்கம் அடிநா, அண்ணம்; இ ச வர்க்கம், ய, ஸ; மூர்த்தன்யம் ர் (ṛ), ட வர்க்கம், ர, ஷ; பல்: ள் (ḷ) த வர்க்கம், ல ஸ; உதடு, உ, ப வர்க்கம்; உதடும் பல்லும் : வ; தொண்டையும் அண்ணமும் : ஏ, ஐ; தொண்டையும் உதடும் : ஓ, ஔ.

ஜிஹ்வாமூலீயம், உபத்மானீயம் என்ற இரண்டு எழுத்துக்களும் சார்பெழுத்துக்களாகக் கருதப்படுகின்றன. அதாவது அவைகளை உச்சரிக்கும்போது, அவைகளின் இடம், அவைகளுக்குப் பின்னால் வரும் ஒலியைப் பின்பற்றும். ஆகவே, ஜிஹ்வாமூலீயத்தின் இடம் அடிநாக்கும், உபத்மானீயத்தின் இடம் உதடுமாகும். விசர்க்கமும் (ஃ), அனுஸ்வாரமும் (ம்) சார்பு எழுத்துக்களாகக் கருதப்படுகின்றன.

## ஆபிசலிசிட்சை

இந்தச் சிட்சை நூல், தொடக்க காலக் கல்வி பெறுபவர்களுக்குத் தகுந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிட்சையும், எந்த ஒரு வேத நூலையும் சார்ந்தது அல்ல. பொதுவாக ஒலியனியல் பற்றிப் பேசும் நூல். தொடர்ந்து பேசும்போது, ஒலிகளில் ஏற்படும் மாறுபாடுகளை அறவே ஒதுக்கிவிட்டுப் பேச்சொலிகள் எவ்வாறு ஒலிக்கப்படுகின்றன என்பதை மட்டும் மிக விளக்கமாகக் கூறுகிறது.

இந்நூல் 8 அத்தியாயங்களைக் கொண்டது. ஸ்வரம் (உயிர்), ஸ்பர்சம் (மெய்), அந்தஸ்தா (Semivowel), ஊஷ்மன், அனுஸ்வாரம், விசர்கம், அனுநாசிகா என்று பலவகை ஒலிகளைப்பற்றிப் பேசுகிறது. உயிர்கள் குறில், நெடில், புலுதம் என்று மூவகைப்படும். ஸம்ஸ்கிருதத்தில் 18 உயிர்கள் உள்ளன. அ, ஆ, ஆ3 = 3, இ, ஈ ஈ3 = 3, உ ஊ, உ3 = 3 = 9, ர் (குறில், நெடில்), ல், ஏ, ஐ, ஓ, ஔ = 7

| | | |
|---|---|---|
| ஸ்பர்ஸா | = | 25 (ஒவ்வொரு வர்க்கத்திலும் ஐந்து எழுத்துக்கள்) |
| அந்தஸ்தா | = | 4 |
| ஊஷ்மன் | = | 6 |
| விசர்கம் | = | 1 |
| அனுஸ்வாரம் | = | 1 |
| ள | = | 1 |

சந்தி ஆகமம், விகாரம், பிரகிருதி லோபம் என்ற வகைப்பட்டது. அதைத் தொடர்ந்து அவைகளின் ஸ்தானம் (இடம்), கரணம் பற்றி விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

**ஸ்தானத்தின் அடிப்படையில் ஒலிகள் இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன.**

தொண்டை : அ, ஹ, விசர்க்கம் (ஹ), கவர்க்கம்

நாக்கு : ஜிஹ்வாமூலீயம்

அண்ணம் : இ, ய, ஸ, சவர்க்கம்

மூர்த்தன்யம் : ர் (ṛ), ர, ஷ், டவர்க்கம்

பல் : ல் (ḷ), ல, ஸ தவர்க்கம்

உதடு : உ, உபத்மானீயம், பவர்க்கம்

மூக்கு : அனுஸ்வாரம் (ம்) யம.

**இரு இடம் உள்ளவை**

பல்லும் உதடும் : வ

தொண்டை, அண்ணம் : ஏ, ஐ

தொண்டை உதடு : ஓ, ஔ

மூக்கு : ஏனைய வாயறைகள் ங, ஞ, ண, ந, ம

**கரணங்கள்**

அடிநாக்கு : கவர்க்கம், ஜிஹ்வாமூலீயம்

நடுநாக்கு : பவர்க்கம்

நாக்கின் அடிப்பாகம் அல்லது நுனி }
நாக்கின் சமீபம் } : டவர்க்கம்

முயற்சி : (ப்ரயத்னம்), ஆப்யந்தர, பாஹ்யம் என்று இருவகையானது.

**ஆப்யந்தரம்** : தொடுதல் (ஸ்ம்ருஷ்ட) ; அடைப்பொலி சிறிது தொடுதல் - அரை உயிர்; சிறிது திறத்தல் உரசொலி; திறத்தல் - உயிர்

**பாஹ்யப்ரயத்னம் :** மெய்யெழுத்துக்களுக்கு மட்டுந்தான், குரல்வளை திறத்தல், உயிர்ப்பு (svāsa) வெளிப்படுத்துதல், (emission) குரலிலா ஒலி (voicelessness) ஆகியவை ஒரு வர்க்கத்தின் முதலிரண்டு மெய்யெழுத்துக்களுக்கும் உரித்தானவை. ஸ', ஷ, ஸ, ஹ, ஜிஹ்வாமூலீயம், உபத்மானீயம் முதலிரண்டு யம ஆகியவைகளும் அவ்வாறே உயிர்ப்பிலா ஒலி (alpaprāṇa). ஒரு வர்க்கத்தின் முதல் எழுத்துக்கள் முதலும் மூன்றுமான 'யம' அரை உயிர்கள் உயிர்ப்பு ஒலி (aspirated maha prāṇa) ஒரு வர்க்கத்தின் இரண்டாவது, நான்காவது ஒலிகள் 4ஆவது யம, உரசொலி (fricative).

மூக்கொலிகள் குரல்வளை மூடுதல், உயிர்ப்பு (tone), குரல் (உயிர்ப்பிலாதது) போன்றவைகளுடன் மூக்கிசையும் (nasality) சேர்ந்தது.

**பிராதிசாக்கியம்**

பிராதிசாக்கியங்களும், சிட்சைநூல்களைப்போன்று ஒலியியலை விளக்குகின்றன. இவைகள் ஒவ்வொரு வேதநூலையும் சார்ந்தவை. ஆகவே, இருக்கு, யஜூர், சாம, அதர்வ வேதங்கள் ஒன்றொன்றுக்கும் ஒரு பிராதிசாக்கிய நூல் காணப்படுகிறது. யஜூர் வேதத்தைக் கிருஷ்ண யஜூர் வேதம், ஸுக்ல யஜூர் வேதம் என்று இருவகையாகப் பாகுபடுத்துகிறார்கள். ஆகவே, இருக்கு வேத பிராதி சாக்கியம், இருக்கு தந்திரம் (sama), தைத்திரீயபிராதிசாக்கியம், வாஜஸனேயி பிராதிசாக்கியம் (யஜூர் வேதத்தைச் சேர்ந்தவை), ஸௌனகீய பிராதிசாக்கியம் அல்லது அதர்வ பிராதிசாக்கியம் என்ற ஐந்து பிராதிசாக்கிய நூல்கள் உள்ளன.

பிராதிசாக்கியங்கள், 'பார்ஷதம்' என்ற குறிப்பிடத்தக்க மற்றொரு பெயராலும் அழைக்கப் படுகின்றன. பார்ஷதம் என்ற சொல் 'பரிஷத்' என்ற சொல்லிலிருந்து பிறந்தது. இப்பெயர், ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தது என்ற பொருளைக் கொடுக்கும். ஆகவே, ஒரு குறிப்பிட்ட வேதத்தைச் சார்ந்த ஒலியனியலை வாய் வழியாகக் கற்பிக்கும் நூல் என்ற உள்ளார்ந்த பொருளைக் கொண்டது.

பிராதிசாக்கியங்கள், பொதுவாக வேதமொழியில் காணப்படும் ஒலிகள், அவைகள் என்னென்ன, எவ்வாறு பிறக்கின்றன, சம்ஹிதா அல்லது சந்தி விதிகள் ஆகியவைகளைக் கூறுகின்றன. ஒவ்வொரு வேதத்தையும் சார்ந்தவைகளாகப் பிராதி சாக்கியங்கள் இருப்பதாலும் வேதங்கள்தமக்குள் சிற்சில வேறுபாடுகள் காண்பதாலும், பிராதி சாக்கியங்களும் அந்தந்த வேதத்துக்கேற்ப சில வேறுபாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றன.

வேதமொழி பேச்சொலிகள் எழுத்துக்கள் வர்ணம் எனக் கூறப்படுகின்றன. அவைகள் உயிர் (ஸ்வர), மெய் (வ்யஞ்சனம்) என இருவகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. முதல் 9 உயிர்கள் தனிமெய்களாகும் (ஸமானாக்ஷர), ஒவ்வொரு உயிரும் குறில் நெடில் என இருவகைப்படும். இவ்விரண்டும் ஸவர்ணம் (homogeneous) எனப்படும். ஏனைய ஏழும் கூட்டு உயிர்கள் (ஸந்தியக்ஷரம்) எனப்படும். ஆக மொத்தம் உயிர்கள் 16. அதாவது **அ, ஆ,** அ3, இ, **ஈ,** இ3 **உ, ஊ,** உ3 = 9; ர் (ṛ) (குறில், நெடில்), ல், ஏ, ஐ, ஓ, ஔ = 7. ஏனைய எழுத்துகள் மெய்யெழுத்துக்கள். இவற்றுள் முதல் 25 எழுத்துக்கள் அடைப்பொலி (ஸ்பர்ஸ) (stops), அடுத்து வரும் நான்கு எழுத்துக்கள் அரை உயிர்கள் (அந்தஸ்த) அவைகளை அடுத்து வரும் எழுத்துக்கள் உரசொலிகள் (ஊஷ்மன்).

மெய்யெழுத்துக்களில், முதல் முதலாகக் கூறப்பட்ட அடைப்பொலிகள், ஐந்தைந்து எழுத்துக்களைக் கொண்ட வர்க்கங்களாகும் (கவர்க்கம், சவர்க்கம்). அதாவது அவைகள் முதல், இரண்டு, மூன்று, நான்கு, உத்தம எனப்படும். ஊஷ்மன், விசர்க்கம், முதல், இரண்டு அடைப்பொலிகள் அகோஷ எனப்படும் (குரலிலா ஒலி). மற்ற மெய்யெழுத்துக்கள் (கோஷவான்) குரல் ஒலிகள்.

இதில் உயிர் எழுத்துக்களை வர்ணம் (அவர்ணம், இவர்ணம்) என்றும் மெய் எழுத்துக்களை, வர்க்கம் அல்லது **அ** என்ற எழுத்து இணைத்தும் (கவர்க்கம் அல்லது க) கூறப்படும். ஒரு மெய்யின், முதல் எழுத்துடன், அடுத்துவரும் நான்கு எழுத்துக்களும் சேர்ந்துக்

கவர்க்கம், சவர்க்கம் என கூறப்படுகிறது. இவ் எழுத்துக்களைத்தவிர, விஸர் ஜனீயம், ஜிஹ்வா மூலீயம், உபத்மானீயம், அனுநாசிகம், யம, அனுஸ்வாரம் போன்ற எழுத்துக்களும் இம்மொழியில் உண்டு. இத்துடன் உயிர்கள் குறில், நெடில், புலுதம் என்ற மூன்று காலங்கள், உதாத்த, அனுதாத்தம், ஸ்வரிதம் என்ற மூன்று சுரங்களை உடையன. குறில் ஒரு மாத்திரை அளவும் நெடில் இரண்டு மாத்திரை அளவும் புலுதம் மூன்று மாத்திரை அளவும் மெய் அரை மாத்திரை அளவும் கொண்டவை.

பேச்சொலிகள் எவ்வாறு பிறக்கின்றன என்றும் பிராதி சாக்கியங்கள் வர்ணித்துள்ளன. பேச்சொலிகள், உடலிலிருக்கும் காற்று, தொண்டை, நெஞ்சு ஆகிய உறுப்புகளோடு தொடர்பு கொள்வதன் மூலம் பிறக்கின்றன. தொண்டை மூடிக்கொள்ளும் போது, நாதமும் (tone) தொண்டை திறந்து கொள்ளும்போது ஸ்வாஸமும் (breath) பிறக்கின்றன. தொண்டை நடுத்தர நிலையில் இருக்கும்போது ஹ என்ற ஒலி பிறக்கிறது.

பேச்சொலிகள் பிறக்கும் வகை முறைகளைச் சிட்சைகள் போன்று, பிராதிசாக்கியங்களும் கொடுத்துள்ளன.

இவைகளில் காணப்படும் ஒரே ஒரு வேறுபாட்டை முக்கியமானதாகக் குறிப்பிடலாம். அதாவது மூர்த்தன்யம் எனப்படும் வளை நாவொலி பிறக்கும் முறை. சிட்சை, இருக்குவேத பிராதிசாக்கியம், இருக்கு தந்திரம் ஆகியவைகள் இவ்வொலியை மூர்த்தன்யம் (வளைநாவொலி) என்று கூறுகின்றன. ஆயினும் இவ்வொலி பிறக்கும்போது நாக்கின் நிலையை இவைகள் தெளிவாக எடுத்துக் கூறவில்லை. யஜூர்வேத பிராதிசாக்கியங்களிலும் அதர்வ வேத பிராதி சாக்கியங்களிலும் நுனி நாவின் வளைந்த நிலை முதல் முதலாகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவைகள் எழுந்த காலத்தில்தான், மூர்த்தன்யம் வளைநாவொலியாக உறுதியான உச்சரிப்பு ஏற்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது. தொடக்ககாலத்தில், அதாவது இருக்குவேதம் எழுந்த காலத்தில் இவ்வொலிகள் ஓர் உறுதியற்ற நிலையில் இருந்ததோ (fluid stage) என்று ஓர் ஐயம் ஏற்படுகிறது.

இந்நூல்களும் சந்திவிதிகளை விளக்குகின்றன. சந்திகள் பெரும்பாலும் இருசொற்களின் இணைப்பினால் ஏற்படும் மாற்றங்களே. இதைத்தவிர, ஒலியழுத்தம் பற்றிய சந்தி விதிகளையும் இங்குக் காணலாம். சந்தி விதிகளின் நோக்கம் அவைகளைப் பயன்படுத்தி எவ்வாறு பதபாடங்களைச் சம்ஹிதா பாடமாக மாற்றுவது என்பது தான். இவைகளைத் தவிர, வேதம் படிக்க இருக்கும் மாணவர்களுக்குத் தேவையான தகுதிகளையும் சில பிராதி சாக்கிய நூல்கள் கூறுகின்றன.

## முடிவுரை

மேற்கூறிய விபரங்களில் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திலும், சிட்சை, பிராதி சாக்கியம் போன்ற நூல்களிலும் விளக்கப்பட்ட கூறுகளிலும் ஒற்றுமை, வேற்றுமை ஆகிய இரண்டையும் காண்கிறோம். இதற்கு முன்பு ஒப்பாய்வு செய்த சில அறிஞர்கள் ஒற்றுமைகளை மட்டும் எடுத்துக் கூறி, தமிழிலக்கணம் வடமொழி நூல்களிலிருந்து கடன்வாங்கியதாக முடிவு செய்துள்ளார்கள். வடமொழி நூல்கள், தமிழிலிருந்து கடன் வாங்கியதாகக் கருதுவோரும் சிலர் உண்டு. ஆனால், அவர்கள் இவ்விரு மொழிகளின் இலக்கண நூல்களில் காணப்படும் வேற்றுமைகளைப் பற்றி நினைத்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு எண்ணியிருந்தால், உண்மை தெரிய வந்திருக்கலாம். இவ்விரு மொழி இலக்கண நூல்களிலும் காணப்படும் ஒரு சில ஒற்றுமைகளுக்குப் பல காரணங்கள் இருக்கலாம். இவைகள் உலகப்பொதுமையாக இருக்கலாம். இம்மாதிரியான, ஒப்பாய்வுப்பணி செய்பவர்கள் ஒற்றுமைகள் வேற்றுமைகள் இரண்டையும் எண்ணிப்பார்க்கவேண்டும். இவ்விரு மொழிகளிலுமே தேர்ச்சி பெற்ற பி.சா. சுப்பிரமணிய சாத்திரியார் இத்தகைய ஒப்பாய்வு செய்து அருமையான ஒரு நூலை (Grammatical theories in Tamil in Relation to Sanskrit) வெளியிட்டுள்ளார். இதைத்தவிர, தொல்காப்பியத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அன்னாருடைய நூல்களைப் படிக்கும்போது அவர்களுடைய அணுகுமுறை ஸம்ஸ்கிருத மொழியில் அறிவு உள்ளவர்களுக்காகத் தான் இந்நூல்கள் எழுதப்பட்டனவோ என்ற ஓர் ஐயம் மனதில் எழுகிறது. இவ் ஒப்பாய்வு நூலில், தமிழ், இலக்கண நூல்களிலும், ஸம்ஸ்கிருத இலக்கண நூல்களிலும் காணப்படும் ஒற்றுமைகளை மட்டும் எடுத்துக் கூறிவிட்டு, இவைகளில் காணப்படும் வேற்றுமைகளை அறவே ஒதுக்கி விட்டார். அவர்கள் எடுத்துக்கொண்ட தலைப்புக்கு இவைகளைப் பற்றிக் குறிப்பிடவேண்டிய தேவையில்லையென்று அவர்கள் நினைத்திருக்கலாம். அவர்களுடையநோக்கம், முடிவுகள் ஆகியவைகளிலிருந்தும் ஸம்ஸ்கிருத மொழியின் தாக்கம் தொல்காப்பியத்தில் எத்துணை முக்கியமானது என்பதை எடுத்துக்காட்டுவதுதான் என்று தெளிவாகிறது. ஆயினும், அவர்களே, ஸம்ஸ்கிருத மொழித் தேர்வு ஆசிரியரை, அதாவது தொல்காப்பியரை, பாதிக்கவில்லையென்றும் தொல்காப்பியர் தமிழின் தனிச்சிறப்புத்தன்மையைப் பாதுகாத்து, ஓர் இலக்கணம் வரைந்துள்ளார் என்றும் கூறியிருப்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும்.

மேலே கூறியபடி இவ்விரு மொழி இலக்கண நூல்களிலும் பல ஒற்றுமை, வேற்றுமைகளைக் காண்கிறோம். முதலில் வேற்றுமைகளைப் பார்ப்போம்.

1. தமிழும், ஸம்ஸ்கிருதமும் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்தவை. ஆகவே, அவ்விரு மொழிகளிலும் ஒற்றுமை சில காணப்படினும், வேற்றுமைகள் பல இருக்கின்றன. தமிழ் எழுத்துக்கள் முப்பதும் சார்பு எழுத்துக்கள் மூன்றும் சேர்ந்து முப்பத்து மூன்று எழுத்துக்கள். இவற்றுள் 12 உயிர்கள் 18 மெய்கள் 3 சார்பு எழுத்துக்கள். ஸம்ஸ்கிருதத்தில் 9 தனி உயிர்கள், 4 கூட்டு உயிர்கள் 25 அடைப்பொலிகள் (stops) (ஐந்தைந்து எழுத்துக்களைக் கொண்ட ஐந்து வர்க்கங்கள்). 3 ஊஷ்மன் (Sibilants), 4. அந்தஸ்தா (Semivowels), ஒரு ஹ (aspiration), விசர்க்கம், அனுஸ்வாரம், உபத்மானீயம், ஜிஹ்வாமூலீயம் ஒன்றொன்று. ஸம்ஸ்கிருதத்தில் குறில் எ, ஒ இல்லை. தமிழில் ஐ யும் ஔ வும் உயிர்களாகக் கருதப்படும். ஆனால் ஸம்ஸ்கிருதமொழியில் ஐ யும் ஔ வும் கூட்டு உயிர்கள் (Diphthongs). வேத மொழியில் உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் என்ற உயிர்கள் உண்டு. தமிழில் சுரம் கிடையாது. இவ்வாறு இவ்விரு மொழிகளில் பலவேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே, இவ்விருமொழிகளின் இலக்கண ஆசிரியர்கள்தான் வர்ணிக்கும் மொழிக்கு ஏற்ப, தத்தம் விதிகளை அமைத்துள்ளார்கள்.

2. ஒலிகள் பிறக்கும் முறையை விளக்க முற்படும் தொல்காப்பியர் ட வர்க்கத்தைப் பற்றிப் பேசும்போது டகார ணகாரம் நுனி நா அண்ணம் (தொ. எழுத்து. 91) என்று வர்ணிக்கிறார். ட வும் ண வும் வளைநாவொலி என்று கருதப்படுகிறது. ஆனால் தொல்காப்பியர் கொடுத்திருக்கும் பிறப்பாக்கத்தின்படி, நுனிநா, நுனி அண்ணத்தைப் பொருந்த ட, ண பிறக்கிறது என்பதுதான். இவ்விளக்கத்தில், நா வளைவது பற்றி எவ்வகைக்குறிப்பும் இல்லை.

இருக்குவேத பிராதிசாக்கியமும், இருக்குதந்திரமும் ட வர்க்கத்தைப் பொதுவாக மூர்த்தன் என்று கூறுகிறது. இதில் நாக்கு எவ்வாறு இயங்குகிறது என்று தெளிவாகக் கூறவில்லை. ஆனால், யஜூர் வேத, அதர்வவேதபிராதி சாக்கியங்கள் நாக்கு வளைதல் (prativuṣṭya) பற்றித் தெளிவாகக் கூறுகின்றன.

தொல்காப்பியர் காலத்தில், இவ்வொலிகளை உச்சரிக்கும் விதம் தற்காலத்தில் உச்சரிக்கும் முறையிலிருந்து மாறுபட்டிருக்கிறது என்று தெரிகிறது. தற்காலத்தில், இவைகளின் உச்சரிப்பு, தெளிவாக வளைநாவொலி என்று புலனாகிறது. இருக்குவேத பிராதி சாக்கியம், இருக்குதந்திரம், பாணினி, ஆபிசலீ சிட்சை ஆகிய நூல்கள் ட வர்க்கம், ர், ர, ஷ முதலியவைகளை மூர்த்தன்யம் என்று வர்ணித்தாலும், யஜூர்வேத பிராதிசாக்கியம், அதர்வவேத பிராதி சாக்கியங்கள் தான் முதன்முதலாக இவ்வொலிகள் பிறக்கும் போது நாக்கு எந்நிலையில்

உள்ளது என்று தெளிவாகக் கூறுகின்றன. இவ்வொலிகளை வளைநாவொலியாக யஜுர்வேத காலத்திலிருந்துதான் உச்சரித்திருக்கலாம் என்று தெரிகிறது.

3. தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில், வேற்றுமை உருபுகள், சாரியைகள் அவைகள் பெயரோடு இணையும்போது ஏற்படும் மாறுபாடுகள் ஆகியவைகள் காணப்படுகின்றன. ஸம்ஸ்கிருத நூல்களில் இவைகள் பற்றிய விவரம் கிடையாது. ஸம்ஸ்கிருத மொழியில் சாரியைகள் இல்லை.

புணர்ச்சியை விளக்கும்போது, தொல்காப்பியர், வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி என்று இருவகையாகப் பகுத்திருக்கிறார். இவ்விதப் பாகுபாடு ஸம்ஸ்கிருத நூல்களில் இல்லை.

4. தொல்காப்பியமும், பிராதிசாக்கியம், சிட்சை போன்ற நூல்களும் தத்தம் காலத்து மொழியை வர்ணிக்கின்றன. தொல்காப்பியர் அவர் காலத்து வழக்கு, செய்யுள் ஆகிய இரண்டிலும் பயன்படுத்தியுள்ள தமிழ் மொழியை வர்ணித்துள்ளார் என்று அதன் சிறப்புப் பாயிரத்து ஆசிரியர் பனம்பாரனார் கூறுகிறார். அது மட்டுமல்ல, இம் மொழி பயன்படுத்தப்படும் தமிழகத்தின் எல்லையையும் கூறியுள்ளார். தொல்காப்பியரே தனது நூலில் வழக்கு செய்யுள் என்ற சொற்களைப்பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். அதுமட்டுமல்லாமல், தொல்காப்பியர் வழக்கு என்றால் என்ன என்பதையும் விளக்கியுள்ளார். **வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே நிகழ்ச்சி அவர் கட்டு ஆகலான** (தொல். 1592). இங்கு வழக்கு என்ற சொல் உயர்ந்தோர் அதாவது அறிவுடையோர் (elite) என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஓர் உலகியல் சார்ந்த சமயச் சார்பற்ற தமிழ் மொழியைத்தான் தொல்காப்பியர் தனது நூலில் வர்ணித்துள்ளார்.

ஆனால் சிட்சை, பிராதிசாக்கியம் போன்ற நூல்கள், ஒரு சமயஞ் சார்ந்த, வேள்விகளின் தொடர்புள்ள, வேத மொழியைத்தான் வர்ணிக்கின்றன, பிற்காலத்தில் எழுந்த இதிகாசம், புராணம், காவியம் ஆகியவைகளின் ஸம்ஸ்கிருத மொழியை அல்ல. தொடக்க காலத்தில் வேதங்கள் வாய்வழியாகத்தான் பரப்பப்பட்டன. எழுதப்பட்ட நூல்கள் அல்ல. வேத மந்திரங்கள் புனிதமானவை. அவைகளுக்கு ஒரு சக்தி (magical power) திறமை இருப்பதாக வேத கால இருடிகள் நம்பினார்கள். ஆகவே அவைகளைத் தவறாக உச்சரித்தால் அவைகளினால் தவறான விளைவுகள் தான் ஏற்படும் என்பதில் ஒரு திடமான நம்பிக்கை இருந்தது. வேதகாலத்திலேயே வேற்று மொழிகளும் அங்கு நிலவியது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஓர் உண்மையே. ஆகவே, வேத மந்திரங்களைத் தவறாக உச்சரிக்காமல் தடுக்கவும்

அவைகளில் இடைச்செருகல் எதுவுமில்லாமல் காப்பதும் அவர்கள் கடமையென உணர்ந்தார்கள். இந்தப் பாதுகாப்பு உணர்ச்சியால் உந்தப்பட்ட அவர்கள், வேதமந்திரங்களின் புனிதத்தன்மையை பாதுகாப்பதற்காகப் பலவித வழிவகைகளைக் கையாண்டார்கள். அதன் விளைவாகத்தான் பதபாடம், கிரம பாடம், ஜடாபாடம், கனபாடம், சிட்டை, பிராதிசாக்கியம் போன்றவைகள் உருவாக்கப்பட்டன. இவைகள் எல்லாமே வேதங்களின் தொடர்புள்ளவைகள்தான்.

வடமொழி ஆதிக்கத்திலிருந்து தமிழைக் காப்பதற்காகத்தான் தொல்காப்பியம் எழுந்தது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. வேதமொழியின் புனிதத் தன்மையைப் பாதுகாக்கவேண்டும் என்ற உந்துதல் வேத கால இருடிகளுக்கு இருந்தது என்பதைப் பலவகையான வேதம் தொடர்பான நூல்கள் பறைசாற்றுகின்றன. ஆனால் இத்தகைய பாதுகாப்பு உணர்ச்சியின் உந்துதலால்தான் தொல்காப்பியம் வரையப்பட்டது என்று கருதுவது பொருந்துமா? இதற்கு வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றனவா என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும் தமிழ் மொழி தொல்காப்பியம் காலத்திலிருந்தே, ஒரு சமய சார்பற்ற மொழியாக இருந்து வருகிறது. பதஞ்சலியின் காலத்தில் பிராகிருதமொழிகள் வலிமை வாய்ந்ததாகவும் அவைகள் அரசர்களின் ஆதரவுபெற்றிருந்ததாகவும் பல அந்தணர்கள் கூடத் தவறாக ஸம்ஸ்கிருதத்தைப் பயன்படுத்தியதாகவும், மகாபாடீயம் கூறுகிறது. அதனால் பதஞ்சலியே, வேள்வியின் போது ஸம்ஸ்கிருத மந்திரங்களைத் தவறில்லாமல் பயன்படுத்தவேண்டும் என்று வற்புறுத்துகிறார். அவருடைய இக்கூற்று மிகவும் முக்கியமானது. காலத்தால், மொழி வேறுபாடு தோன்றும் என்பதை அவர் நன்றாக உணர்ந்துள்ளார் என்பதை இவ்விதி காட்டுகிறது.

தொல்காப்பியர், தமிழ், ஸம்ஸ்கிருதம் ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்றவர் என்பதை அவருடைய நூல் எடுத்துக் காட்டுகிறது. அவர் ஒரு சமணர் என்ற கருத்துப் பலரிடையே நிலவுகிறது. அக்கருத்தை ஏற்றுக்கொண்டால், ஆசிரியரின் இரு மொழிப்புலமை ஒரு வியப்புக்குரிய செய்தியல்ல. அவருடைய இரு மொழிப்புலமையால் தான் தொல்காப்பியம், தமிழுக்கு ஏற்ப அமைந்த ஒரு இலக்கணம், நமக்குக் கிடைத்துள்ளது என்றால் மிகையல்ல.

முடிவாக இவ்விரண்டு மொழிகளிலும் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள் அவைகளின் வர்ணனைகள் எல்லாம் இவ்விரு இலக்கண மரபுகளும் ஒன்றையொன்று தழுவியது அல்ல; தனித்தனியானவை என்று தான் காட்டுகின்றன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113

அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| Indian Epistemology | 125.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-2 | 64.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-1 | 56.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| எட்டையபுரப் பள்ளு | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தொகுதி-2 | 65.00 |
| On Translation | 95.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| செந்தமிழ் அகராதி | 150.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| பொருள் புதிது | 35.00 |
| ஆளும் தமிழ் | 28.00 |
| தமிழர் கொடிகள் | 30.00 |
| தமிழர் சமூகவியல் | 35.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| தமிழ் கற்பித்தலில் உன்னதம் | 20.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |


Pub.No. 403 **தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்** **70.00**